# உன்னதமான வாழ்வைத் தேடுதல்

# உன்னதமான

# வாழ்வைத் தேடுதல்

1. சர்வ வல்ல தேவன் இருக்கின்றார்
2. வேதாகமம் தேவனுடைய வார்த்தை
3. பிதாவாகிய தேவன் என்பவர் யார்?
4. தேவனுடைய குமாரனாகிய இயேசு
5. பரிசுத்த ஆவி என்பவர் யார்?
6. தேவன் மனிதரானார்
7. இயேசுவை நாம் எவ்விதம் கண்ணோக்க வேண்டும்
8. இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?
9. சிலுவையும் சபையும்
10. "சபை" என்றால் என்ன?
11. இரண்டாவது மாபெரும் வரலாற்றுக் கதை
12. புதிய ஏற்பாட்டுச் சபை
13. தேவனுடைய மக்களுக்கு விசேஷ வார்த்தைகள்
14. சுபைக்கான தெய்வீக பெயர்கள்
15. கிறிஸ்து, சபையின தலைவர்
16. சபையில் பரவேசித்தல்
17. சபையின் ஒருமைப்பாடு
18. நித்திய வெகுமதியும் நித்திய தண்டனையும்
19. மனந்திரும்புதல்
20. இயேசுவைக் குறித்து உங்களுடைய தீர்மானம் என்ன?
21. புாட வினாக்களுக்கான விடைகள்
22. சத்திய வசனத்தைச் சரியாகக் கையாள சில உதவிகள்
23. புதிய ஏற்பாட்டில் "சபை" மற்றும் "சபைகள்" என்ற வார்த்தைகள்
24. புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" மற்றும் "இராஜ்யங்கள்" என்ற வார்த்தைகள்

# 1

# சர்வ வல்ல தேவன் இருக்கின்றாரா?

ஒரு வீடு அதன் அஸ்திபாரத்தை விட பலமானதாய் இருப்ப தில்லை. ஒரு வீட்டின் பல்வேறு பகுதிகளும் அவ்வீடு கட்டப்பட்டுள்ள அஸ்திபாரத்தினால் விளைவுகளைப் பெறுகின்றன.

ஒரு வீட்டிற்கு அஸ்திபாரம் எப்படியோ, அதுபோலவே வாழ்க் கைக்கு, "சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்வி முக்கியமானதாய் இருக்கிறது. தேவன்மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மைதான் வாழ்க்கையைப் பற்றிய நமது சிந்தனைகளுக்கு வண்ணங்களையும், விளக்கங்களையும் தருகின்றது.

ஆகவே, "தேவன் இருக்கின்றாரா?" என்பதே எவர் ஒருவரும் கேட்க முடிகின்ற மிகவும் ஆழ்ந்த அறிவுள்ள கேள்வியாய் உள்ளது. இக்கேள்விக்கு அளிக்கப்படும் பதிலானது, வாழ்க்கையைப் பற்றிய நமது மற்ற எல்லாக் கேள்விகளுக்கான பதில்களையும் பாதிப்பதால் இக்கேள்வி அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு மனிதர் இந்தக் கேள்விக்கு, "இல்லை, தேவன் இல்லவே இல்லை" என்று பதில் தருவதாக வைத்துக் கொள்ளுவோம். பிறகு அவர், "நான் இந்த உலகில் எவ்விதமான வாழ்க்கை நடத்துவேன்?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையில், "நான் தேர்ந்தெடுக்கும் எவ்வகையிலும் நான் வாழலாம். நான் படைக்கப்பட்டவனல்ல, நான் எந்த ஒரு மேலான வல்லமைக்கும்

*கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை. நியாயமான வழிகளில் சந்தோஷத்தையும், ஆக்க வளத்தையும் என் சக மனிதர்கள் பெறும்படி பார்ப்பதே எனக்குள்ள ஒரே கடமை ஆகும். இதற்கப்பால் எனது வாழ்க்கையில் நான் என்ன செய்கின்றேன் என்பது, என்னைப் பொறுத்ததேயாகும். மரணத்திற்குப் பிறகு நான் வாழப்போவதில்லை என்பதால், இவ்வாழ்க்கையில் என்னால் முடிந்த அளவு நான் இதன் இன்பங்களைப் பிழிந்து எடுக்க வேண்டும்" என முடிவு செய்வார்.*

*''தேவன் இருக்கின்றாரா?'' என்ற கேள்விக்கு ''ஆம், அவர் இருக்கின்றார்'' என்று ஒரு மனிதர் பதில் அளிப்பதாக வைத்துக் கொள்வோம். அவர் "நான் இந்த உலகில் எவ்விதமான வாழ்க்கை நடத்துவேன்?" என்ற கேள்விக்கு பின்வருமாறு முற்றிலும் மாறுபட்ட பதிலை அளிக்க வேண்டியிருக்கும்: "எல்லாம் வல்ல ஒருவரால் நான் படைக்கப்பட்டிருக்கிறேன். நான் இங்கு இருப்பதற்கு அவர் ஒரு தெளிவான நோக்கத்தைக் கொண்டுள்ளார், அந்த நோக்கத்தை நான் கண்டுபிடிக்க வேண்டும். அவருடைய சித்தத்தைக் கண்டறிந்து, அதன்படி வாழ்வதால் மட்டுமே, என்னைப் படைத்தவர் எனது வாழ்க்கையில் தர விரும்பும் சமாதானத்தையும், நோக்கத்தையும் நான் காண முடியும். ஒரு நாளில் அவர் என்னை அழைப்பார் என்பதையும், நான் இவ்வுலகில் வாழ்ந்திருந்த வழி பற்றி அவரிடம் நான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும் நான் அறிந்துள்ளேன்."*

*"சர்வ வல்லவரான தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்வியை நாம் மிகவும் வினயத்துடன் கவனித்துப் பார்ப்போம். தேவன் இருக்கின்றார் என்று நம்புவதற்கு அவசியமான காரணங்கள் எவையேனும் உள்ளனவா? தேவன் இருக்கின்றாரா என்பது பற்றிய விவாதத்துடன் வேதாகம நூல் தொடங்குவதில்லை. அது, உண்மையில், தேவன் இருக்கின்றார் என்ற உறுதிப்பாட்டுடன்தான் தொடங்குகின்றது: "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1). இருப்பினும் வேதாகமம் முழுவதிலும், தேவன் இருக்கின்றார் என்பதற்குப் பகுத்தறிவுள்ள ஆதாரங்கள் ஆங்காங்கு பரவலாக உள்ளன. அவைகளில் சில நேர்முகமாகவும், சில மறைமுகமாகவும் தரப்படுகின்றன. சில விஷயங்கள் வெளியரங்க மாகக் கூறப்பட்டுள்ளன, மற்றும் சில விஷயங்கள் உள்ளரங்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவைகளில் அநேக விஷயங்களை நாம், இரு கருத்துக்களாகச் சுருக்கமாய்க் கவனிப்போம். இவ்விரு காரணங் களைப் பற்றி நீங்கள் சற்று ஆழமாகச் சிந்தித்தால், தேவன்*

இருக்கின்றார் என்று ஊக்கமாய் நம்புவதற்கு இவைகள் உங்களை வழி நடத்தும்.

## உலகத்தின் ஆதாரம்

நம்மைச் சுற்றியும் நமக்கு மேலேயும் உள்ள இவ்வுலகமானது, தேவன் இருக்கின்றார் என்பதை நம்புவதற்கு நம்மை வற்புறுத்தக்கூடிய முதலாவது ஆதாரம் ஆகும். பூமியும், இந்த அண்டம் முழுவதும் தேவன் இருக்கின்றார் என்று சொல்லாற்றலோடு அறிவிக்கின்றன.

பூமி என்று நாம் அழைக்கின்ற ஒரு கிரகத்தில் நாம் வாழ்கின்றோம். சூரிய மண்டலத்தின் ஒரு பகுதியான இது, சூரியனைச் சுற்றி வருகிறது. இந்தச் சூரிய மண்டலம் கேள்விக்கு அப்பாற்பட்ட ஒழுங்கும் அமைப்பும் உள்ளதாய் இருக்கின்றது. எல்லா கிரகங்களும் தங்கள் தங்கள் வட்டப் பாதையிலேயே இருந்து, ஒன்றுடன் ஒன்று மோதாத வகையில் அமைந்துள்ளன. சரியான வேகத்தில், சரியான தூரத்தில் இவை யாவும் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனுடன் பூமிக்குள்ள தொடர்பானது பகலையும் இரவையும் மற்றும் பருவ காலங்களையும் உண்டாக்குகின்றது. இப்பூமி எப்போதுமே சூரியனில் இருந்து சரியான தூரத்தில் இருந்து வருகிறது. நாம் சூரியனை விட்டுச் சற்று விலகியிருந்தால் உறைந்து விடுவோம். சூரியனை இன்னும் சற்று நெருங்கியிருந்தால் நாம் கருகி விடுவோம்.

நம்முடையது தவிர இன்னும் பல சூரிய மண்டலங்கள் வானவெளியில் இருப்பதாக அறிவியல் அறிஞர்கள் நமக்குக் கூறுகின்றனர். இந்த அண்டத்தின் அளவை நாம் இன்னமும் உறுதியாக அறியவில்லை. நமது தொலை நோக்கிக் கருவிகள் இந்த அண்டத்தின் எல்லையை காண முடியாது; நமது சிந்தனை இதன் அகலத்தைப் பகுத்தறிய முடியாது. இந்த அண்டத்தைப் பற்றி நாம் அதிகமாக அறிந்திருக்காவிட்டாலும், இதைப் பற்றி ஒன்றை மட்டும் நாம் உறுதியாக அறிந்துள்ளோம்-ஒழுங்கு மற்றும் அமைப்பு என்பது இந்த அண்டத்தின் பண்பாக உள்ளது. இது தற்செயலாக உண்டான தாகவோ அல்லது அலங்கோலமானதாகவோ இருப்பதில்லை; இது ஒன்றிணைவும், ஒழுங்கமைவும் உள்ளதாகும்.

இந்த அண்டத்தின் இருப்புப் பற்றிய விஷயமானது, பின்வரும் இரண்டு முடிவுகளில் ஒன்றை நாம் ஏற்றுக் கொள்ளும்படி நம்மை வற்புறுத்துகின்றது: இது படைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது

தற்செயலாய் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த அண்டமானது தற்செயலாக ஏற்பட்டுள்ளது என்று ஒருவர் வாதிட்டால், அவர், இவ்வண்டம் ஒன்றுமில்லாமையிலிருந்து ஏற்பட்டது என்றோ, அல்லது ஏற்கனவே இருந்த பொருள் ஒன்று வானவெளியில் வெடித்துச் சிதறியதால் இது ஏற்பட்டது என்றோ அவர் முடிவு செய்ய வேண்டும். ஆனால் மேற் சொல்லப்பட்ட இரு பெரிய முடிவுகளில், இந்த அண்டம் படைக்கப்பட்டது என்ற முடிவே அறிவுக்கு ஏற்புடையதாகும். இந்த அண்டமானது, ஒன்றுமில்லாமையில் இருந்து தானாகவே ஏற்பட்டது என்று நேர்மையாக நாம் எவ்விதம் நம்ப முடியும்? பொருட்கள் எப்போதுமே இருந்து வருகின்றன, அவைகள் வானவெளியில் வெடித்துச் சிதறியதால்தான் இந்த அண்டம் ஏற்பட்டது என்பதைப் பகுத்தறிவுடன் நாம் எப்படி நம்ப முடியும்?

ஒருவேளை, ஒரு மனிதர் தமது கையில் ஒரு புத்தகத்துடன் என்னிடம் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து, அதைப் பார்க்கும்படி கூறுகிறார். அதை நான் பரிசோதித்துப் பார்க்கத் தொடங்குகிறேன். அந்தப் புத்தகத்தின் மேல் அட்டையில், “க்ரூடனின் முழுமையான ஒத்த வாக்கிய அகராதி” என்றுள்ளதை நான் கவனிக்கிறேன். பதிப்பகத் தாரின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில், “ஜோன்டர்வென்” என்று அச்சிடப்பட்டிருப்பதையும் நான் கவனிக்கிறேன். அதன் பக்கங் களைப் புரட்டுகையில், KJV ஆங்கில வேதாகமத்தில் உள்ள வேறு பட்ட பெயர்கள், இடங்கள் மற்றும் சொற்றொடர்கள் யாவும், அகர வரிசையில் அப்புத்தகத்தில் அடங்கியிருப்பதைக் காணுகின்றேன். அச்சொற்கள் எல்லாம், வேதாகமத்தில் உள்ளது பற்றிய பல வகைப்பட்ட குறிப்புகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அப்புத்தகத்தின் மேல் அட்டையில், 2,00,000க்கும் அதிகமான குறிப்புகள் அப்புத்தகத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நான் அதைப் பார்த்தவுடன், “இந்த புத்தகப் பதிப்பாளருடன் நான் தொடர்பு கொண்டு, இந்தப் புத்தகத்தின் பிரதியொன்றை நான் பெற முடியுமா என்று கேட்கவிருக்கிறேன்” என்று கூறலாம்.

அப்பொழுது அந்த மனிதர், “இப்புத்தகத்தின் பிரதியொன்றை நீங்கள் வாங்க முடியாது. இப்புத்தகம் அலெக்ஸாண்டர் க்ரூடனால் தொகுக்கப்படவும் இல்லை, ஜோன்டர்வென் பதிப்பகத்தாரால் வெளியிடப்படவும் இல்லை. இது தற்செயலாக ஏற்பட்டது, இதை

நாங்கள் முழுமையான நிலையில் கண்டோம். ஒன்றும் இல்லாமை யிலிருந்து இது தானாகவே ஏற்பட்டது" என்று கூறுகிறார். நான் அந்த மனிதரிடம், ''ஆங்கில வேதாகமத்தின் பெயர்கள், இடங்கள், சொற்றொடர்கள் அடங்கிய இந்த அட்டவணைகள் எல்லாம் யாராலும் தொகுக்கப்படவில்லை என்று என்னிடம் சொல்கிறீர்களா? 2,00,000க்கும் அதிகமான இந்தக் குறிப்புகள் எல்லாம் ஒன்றுமில்லா மையிலிருந்து வந்தது என்று சொல்லுகிறீர்களா? இந்தப் புத்தகம் அச்சுக் கோர்த்து, அச்சிட்டு, புத்தகக்கட்டாகச் செய்தல் ஆகிய இவ் வேலைகள் யாராலும் செய்யப்படவில்லை என்று சொல்லுகிறீர்களா?" என்று கேட்பேன்.

ஒருவேளை அந்த மனிதர், "ஆம், நான் அப்படித்தான் சொல்லு கின்றேன்'' என்பாரேயானால், நான் அவரிடம், "நீங்கள் கூறுவது தவறானது என்று நான் அறிவேன். நீங்கள் ஒரு மனிதர் என்பதற்காக, நான் மரியாதை செலுத்துகிறேன், ஆனால் இப்புத்தகம் உண்டான விதம் பற்றி நீங்கள் கூறுவது எனது பகுத்தறிவுக்கு ஏற்றதாக இல்லை. இந்தப் புத்தகம் தற்செயலாக ஏற்பட்டதில்லை என்று நான் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் தைரியமாகச் சொல்ல முடியும்'' என்று கூறுவேன். நான் இவரிடம் கூறும் எனது பதிலில் மிகவும் நம்பிக் கையுடன் இருப்பேன், ஏனெனில் எனது பகுத்தறிவானது வேறு எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ள எனக்கு இடம் தராது.

ஒருவேளை, வேறொரு மனிதர் வந்து ஒரு வானொலிப் பெட்டியை என்னிடம் தருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இம்மனிதர் என்னிடம், "இந்த வானொலிப் பெட்டியைப் பாருங்கள், இதன் கீழே ஒரு மின்சார வயரைச் செருகி, இதை இயங்கச் செய்து கேட்கலாம். இந்த வானொலிப் பெட்டியின் உள்ளே கீழ்ப்பக்கத்தில் ஒரு மின்கலம் உள்ளது. மின்சார வயரானது அதில் செருகப்பட்டால், அந்த மின்கலத்தில் மின்சாரம் சேகரித்து வைத்துக் கொள்ள முடியும். மின்சாரம் இல்லாத இடத்தில் இதன் மூலம் வானொலியை இயங்கச் செய்ய முடியும். எனவே இவ்வானொலிப் பெட்டியை உங்கள் வீட்டிலும், மற்றும் நீங்கள் பயணம் போகும் போதும் இயங்க வைக்க முடியும்" என்று கூறுகிறார். நான் அந்த மனிதரிடம், "இது எனக்கு மிகவும் பயன்படும். நான் அடிக்கடி பிரயாணம் செல்லுகின்றேன், எனவே இது போன்ற வானொலிப் பெட்டி எனக்கு மிகவும் பயன் படும். இது போன்ற வானொலிப் பெட்டியொன்று நான் வாங்க முடியுமா என்று பார்க்கப் போகிறேன்" என்று கூறுவேன்.

அதற்கு அம்மனிதர், “ஓஹோ! இல்லை, இது போன்ற வானொலிப் பெட்டியொன்றை நீங்கள் வாங்க முடியாது. இது உண்டாக்கப்பட வில்லை. இது தற்செயலாக ஏற்பட்டது. இங்கிருந்து சற்றுத் தொலைவில் ஒரு தொழிற்சாலை உள்ளது. அதில் பிளாஸ்டிக், உலோகம், மரம் முதலிய பொருட்கள் எல்லாம் உள்ளன. சில வாரங்களுக்கு முன் அத்தொழிற்சாலையில் ஒரு பெரிய வெடிப்பு நிகழ்ச்சி நடந்தது. இந்தப் பொருட்கள் எல்லாம் அப்போது காற்றில் தூக்கியெறியப்பட்டன. அப்போது காற்றில் பறந்த இப்பொருட்களில் சில ஒன்று சேர்ந்தன, ஏதோ ஒரு வழியில் அவை யாவும் ஒன்றி ணைந்தன, பின்பு அவை இந்த வானொலிப் பெட்டியாகத் தரையில் விழுந்தன. அழிந்து போன அந்தக் கட்டிடத்தின் குப்பை மற்றும் வீணான பொருட்களின் மத்தியில் நாங்கள் இந்த வானொலிப் பெட்டியைக் கண்டோம். இது வடிவமைக்கப்படவும் இல்லை, உண்டாக்கப்படவும் இல்லை. அந்த வெடி நிகழ்ச்சியால் இது விளைந்தது” என்று கூறுகிறார் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். உடனே நான் அம்மனிதரிடம், ‘‘இந்த வானொலிப் பெட்டி வடிவமைக்கப்படவில்லை என்று நான் நம்ப வேண்டும் என்கிறீர்களா? இது தொழில் நுட்பத்துடன், கவனமாக ஒன்று சேர்க்கப்பட வில்லையா? இந்த வானொலிப் பெட்டி அறிவினால் அல்ல மாறாக சந்தர்ப்பவசத்தால் நடந்த வெடி நிகழ்ச்சியால் உண்டாயிற்று என்று உறுதிப் படுத்துகிறீர்களா?” என்று கேட்பேன். அப்பொழுதும் அவர், அந்த வானொலிப் பெட்டி ஒரு வெடி நிகழ்ச்சியால் தற்செயலாக உண்டானது என்று வலியுறுத்தினால், நான் அவரிடம், “நீங்கள் இந்த வானொலிப் பெட்டியைப் பற்றித் தவறாகக் கூறுகிறீர்கள். சிந்திக்கக் கூடிய எவரும் இவ்வித முடிவெடுக்க மாட்டார்கள். இந்த முறையில் ஒரு வானொலிப் பெட்டி உண்டாக முடியும் என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது” என்று சொல்லுவேன். எனது பதிலில் நான் உறுதியாகவே இருப்பேன். பகுத்தறியும் எனது திறமை, வேறு எந்த முடிவுக்கும் இடம் தராது.

மேற்சொன்ன புத்தகம் மற்றும் வானொலிப் பெட்டி பற்றி நாம் உறுதியாக எடுத்த இதே போன்ற முடிவானது, இந்த அண்டத்தைப் பற்றியும் இன்னும் உறுதியாக நாம் மேற்கொள்ளும் முடிவாய் உள்ளது, எந்த ஒரு அறிவியல் வாதமும் அல்லது விளக்கமும், இந்த அண்டமானது ஒன்றுமில்லாமையில் இருந்தோ அல்லது ஒரு பெரிய வெடி நிகழ்ச்சியினால் தற்செயலாகவோ உண்டாயிற்று என்று நம்மை

நம்பச் செய்ய முடியாது. ஒருபுத்தகம் அல்லது வானொலிப் பெட்டியைக் காட்டிலும் அதிக நுட்பமாக இந்த அண்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு புத்தகம் தற்செயலாக உண்டாயிற்று அல்லது ஒரு வானொலிப் பெட்டியானது வெடி நிகழ்ச்சியால் ஏற்பட்டது என்பதையே நாம் நம்ப முடியாதென்றால், இந்த அண்டம் முழுவதும் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டானது அல்லது, இந்த அண்டம் சிந்தனையற்ற பொருட்களின் வெடிநிகழ்ச்சியால் ஏற்பட்டது என்பதை நாம் எப்படி நம்ப முடியும்? இந்த அண்டத்தைப் பற்றிப் படித்துள்ள யாவரும், இது அற்புதமான மற்றும் நுட்பமும் சிக்கலும் நிறைந்த வடிவமைப்பைப் பெற்றுள்ளது என்பதைத் தங்கள் பாடங்களில் இருந்து உணர்ந்துள்ளனர்.

நமது பகுத்தறிவினால் நாம் மேற்கொள்ளும் முடிவை வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது. சங். 19:1ல், ''வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது'' என்று கூறப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், தெளிவான ஒரு இரவில், வெட்டவெளியில் நாம் உட்கார்ந்து, நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தை நோக்கினால், நாம் ஒரு அற்புதமான ஆராதனை ஊழியத்தில் இருப்பதை நாமே பார்ப்போம். திரளான நட்சத்திரங்களைக் கொண்ட இருளான ஆகாயமே நமக்குப் பிரசங்கியாராக இருக்கும். நாம் சபையாராக இருப்போம். நாம் உட்கார்ந்திருக்கும் புல்வெளியே சபை கூடிவரும் இடமாக இருக்கும். அந்தப் பிரசங்கியார், நட்சத்திரங்கள் தாமாகவே ஏற்படவில்லை, ஆனால் உண்டாக்கப்பட்டன என்பதை அமைதியாக, ஆனால் சொல் திறமையுடன் அறிவிப்பார். நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயமானது தேவனுடைய மகிமையை அறிவிக்கும். ஆராதனை ஊழியத்தை முடித்து விட்டு வருகையில் நாம், "இந்தப் பிரசங்கியார் மூலம் நான் கேட்ட செய்தி சரியானதே. இதைத் தவிர வேறுவிதமான செய்தி எதையும் எனது பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளாது" என்று கூறுவோம்.

புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களில் ஒருவரான பவுல், "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை'' (ரோமர் 1:20) என்று எழுதினார். இந்த அண்டத்தில் உள்ள காணக்

கூடிய, தெளிவாய்த் தெரியக் கூடிய பொருட்கள் யாவும், காணக் கூடாத, பார்வைக்கு மறைவான தேவனுடைய கரம் இருப்பதை நிரூபிக்கின்றன. இவைகள், அவரது சர்வ வல்லமையையும், இயற்கைக்கு மேலான அவரது தன்மையையும் சொல்லுகின்றன. நம்மைச் சுற்றிலும், நமக்கு மேலாகவும் உள்ள இந்த உலகத்தின் பொதுவான வெளிப்பாடுகளின் மூலம், தேவன் இருக்கின்றார் என்பதை நாம் கற்றுக் கொள்ளுகிறோம். மேலும் பவுல், "அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும், சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" என்றும் கூறினார் (அப். 14:17). நாம் வாழும் கிரகமும், இந்த அண்டத்தின் ஒரு பகுதியும் ஆகிய இந்த உலகம், சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கின்றார் என்பதற்குச் சாட்சியாக உள்ளன.

குழந்தைகளுக்கான புகழ்பெற்ற ஒரு கதையில், ராபின்சன் குரூஸோ, கப்பற்சேதத்தில் தப்பி, ஒரு தனிமையான தீவில் ஒதுங் கினார். கப்பற்சேதத்திலிருந்து கரையேறியவுடன் வேறு யாரேனும் உயிர் பிழைத்தார்களா என்று சுற்றிலும் பார்த்தார். ஒருவரும் காணப்படவில்லை. அந்த தீவு முழுவதிலும் யாராவது மனிதர் இருப்பார்களா என்று தேடிப் பார்த்தார், ஆனால் ஒருவரும் அங்கில்லை. தாம் ஒருவர் மட்டுமே அந்தத் தீவில் இருப்பதாக அவர் முடிவுக்கு வந்தார். மரக்கிளைகள் மற்றும் கட்டைகளைக் கொண்டு அவர் தமக்கு ஒரு வீட்டைச் செய்து கொண்டார். அந்தத் தீவில் வளர்ந்த காட்டுப் பழங்களைச் சாப்பிட்டு அவர் உயிர் வாழ்ந்தார். தமது உணவு மற்றும் உடைகளுக்காக, காட்டு விலங்குகளைப் பிடித்துக் கொன்றார். ஒருநாள் அவர் கடற்கரை வழியே நடந்து செல்லுகையில், கடற்கரையின் மெல்லிய மணலில் இன்னொரு மனிதக் காலடித் தடம் இருப்பதைப் பார்த்தார். உடனே அவர், பின்வரும் மூன்று முடிவுகளில் ஏதாவது ஒன்று உண்மை என்று அறிந்தார்: யாரேனும் இந்தக் காலடித் தடங்களை ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கலாம். ஒருவேளை இந்தக் காலடித் தடங்களை ஏற்படுத்தியவர் இறந்திருக்கலாம், அந்தத் தீவில் அவரது உடலை குரூஸோ காணலாம். இந்தக் காலடித் தடங்களுக்கு உரியவர் ஒருவேளை இன்னும் அந்தத் தீவிலேயே உயிர் வாழ்ந்து கொண்டிருக் கலாம். அந்தத் தீவில் தன்னைத் தவிர வேறொருவர் இருக்கின்றார்

என்ற நினைவு, அவரை மகிழ்ச்சியுடன் குதிக்கச் செய்தது. அந்தக் காலடித் தடங்கள் அதை நிரூபித்தன. அதை அவர் உறுதியாய் நம்ப முடிந்தது. அவர் அந்தத் தீவு முழுவதும் தேடியலைந்து, ஒரு வெள்ளிக் கிழமையன்று, அந்தத் தீவுவாசியொருவர்தான் அந்தக் காலடித் தடங்களை ஏற்படுத்தியிருந்தார் என்பதைக் கண்டறிந்தார். அவனை அவர் கண்டறிந்த அந்த நாளின் நினைவாக அவனுக்கு வெள்ளிக் கிழமை என்று பெயரிட்டார்.

இந்தக் கதைப் புத்தகத்தின் பாத்திரப் படைப்பாகிய ராபின்சன் குரூஸோவைப் போன்றே நாமும் இருக்கிறோம். பூமி, நட்சத்திரங்கள், சூரியன் மற்றும் சந்திரன் முதலிய காலடித் தடங்கள் நமக்கு முன்பாக இருக்கின்றன. இந்தத் தடங்கள் யாவும் சர்வ வல்லமையுள்ள ஒருவரால் ஏற்படுத்தப் பட்டவையாகும். ராபின்சன் குரூஸோ அந்தக் காலடித் தடங்களைப் பார்த்தபோது, அவைகள் யாவும் ஒன்றுமில்லா மையில் இருந்து உண்டானவை என்று முடிவு செய்திருந்தால் அவர் மதியற்றவராய் இருந்திருப்பார். அதுபோலவே, இந்த பூமியும், அண்டம் முழுவதும் தாமாகவே ஏற்பட்டன, இவை யாவும் ஒன்றுமில்லாமையில் இருந்து வந்தன என்று முடிவு செய்தால், நாமும் பகுத்தறிவற்ற, ஞானமற்றவர்களாகவே இருப்போம்.

நம்மைச் சுற்றியுள்ள உலகமும், நமக்கு மேலே உள்ள உலகமும் ஒரே ஒரு முடிவையே சுட்டிக்காட்டுகின்றன: இந்த இயல்பான உலகத்திற்கும் இயல்பான அண்டத்திற்கும் இதற்கப்பாலும், ஒரு சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கின்றார். ஒரு புத்தகமானது தற்செயலாக ஏற்படாது என்பதையும், ஒரு மின்சார வானொலிப் பெட்டியானது வெடி நிகழ்ச்சியின் விளைவாக உண்டாகாது என்பதையும் நாம் எவ்வளவு உறுதியாக நம்புகிறோமோ, அந்த அளவு இதைப் பற்றியும் நாம் உறுதியாக நம்ப முடியும்.

## மனிதனின் ஆதாரம்

இரண்டாவதாக, மனிதன் இருக்கின்ற ஆதாரத்தின் மூலமாக, தேவன் உண்மையிலேயே இருக்கின்றார் என்று ஊக்கத்துடன் நாம் நம்ப முடியும். மனிதன் இருக்கின்ற செயலானது தேவன் இருக்கின்றார் என்பதை அறிவிக்கின்றது.

இயல்பான இந்த அண்டத்தைக் காட்டிலும் மாபெரும் அதிசயமாக மனிதன் விளங்குகின்றான். மனிதனின் அறிவுக்

*கூர்மையின் வல்லமைகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவனால், பகுத்தறியவும், நம்பிக்கை கொள்ளவும். அன்பு காட்டவும், கனவு காணவும், திட்டமிடவும் மற்றும் வடிவமைக்கவும் முடிகின்றது. நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைச் சரளமாகப் பேசக் கூடிய மக்கள் இருக்கின்றார்கள். இப்பொழுது நாம் செய்யக் கூடிய எந்த ஒரு கணணியைக் காட்டிலும் அதிக நுட்பமான அமைப்பு, ஒரு மனிதனின் மூளையில் உள்ள ஒரு செல்லில் உள்ளதாக அறிவியல் அறிஞர்கள் நமக்குக் கூறுகின்றனர்.*

*மனிதனுடைய ஆவிக்குரிய நிலையைச் சிந்தித்துப் பாருங்கள். மனிதன் எப்பொழுதுமே தொழுதுகொள்ளும் இயல்புள்ளவனாக இருக்கின்றான். மிகவும் முற்காலத்தில் இருந்த மக்கள் கூட மேலான சக்தி ஒன்று இருந்ததாக அதை வணங்கியுள்ளனர். இப்படியிருக்க வேண்டும் என்ற அறிவானது மனிதனுக்குள்ளாகவே இருக்கின்றது. சில சமயங்களில் இந்த உள்ளுணர்வானது பக்குவப்பட்ட நிலையில் இல்லை யென்றாலும், இந்த உள்ளுணர்வு இருந்து கொண்டுதான் உள்ளது.*

*மனிதனின் இயல்பான உடலைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். மனித உடலின் ஏதாவது ஒரு பாகத்தைப் பற்றி நீங்கள் உங்கள் வாழ்க்கை முழுவதும் படித்துக் கொண்டிருந்தாலும், அந்த ஆராய்ச்சி எப்பொழுதும் முடிக்கப்பட முடியாததாகவே இருக்கும்.*

*உயிர் வாழ்க்கையையே நீங்கள் சிந்தித்துப் பாருங்கள், நாம் அதை உண்டாக்க முடியாது, இறந்து போகையில் அதை மறுபடியும் உயிர்ப்பிக்கவும் நம்மால் முடியாது. நாம் இதை முழுமையாக விளக்கிக் கூற முடியாது, மற்றும் இதை நம்மால் முழுமையாகக் கட்டுப் படுத்தவும் முடியாது. மனிதனுடைய இந்த அதிசயமானது அவனை உண்டாக்கியவர் இருக்கிறார் என்பதை அறிவிக்கின்றது.*

*நாம் ஒரு வகுப்பறையில் அமர்ந்து, வாழ்க்கையின் தொடக்கம் பற்றி, தனிச் சிறப்புப் பெற்ற ஒரு பேராசிரியரின் விரிவுரையைக் கேட்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவர் பயன்படுத்தும் அறிவியல் கலைச் சொற்கள், விளக்கங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து விட்டு, அவர் கூறுவதன் சாரத்தை மட்டும் கவனிக்கிறோம்: "ஆதியிலே ஒரு வகையான சிறிய செல் ஒன்று இருந்தது. அது பெருகி, வளர்ந்து, பலுகியது. அதிலிருந்து கடல் வாழ் உயிரினம் ஒன்று தோன்றியது. அது பெருகி, வளர்ந்து, பலுகியது. அதிலிருந்து நிலம் வாழ் உயிரினம் ஒன்று தோன்றியது. அது பெருகி, வளர்ந்து, பலுகியது. இறுதியாக*

கோடிக்காணக்கான ஆண்டுகளுக்குப் பின்னால் மனித குலம் தோன்றியது.”

நாம் இந்தப் பேராசிரியர் கூறுவதைக் கவனிக்கையில், அவருடைய கோட்பாட்டினால் தீர்த்து வைக்க முடியாத மூன்று பிரச்சனைகளை எதிர் கொள்கிறோம். இந்தப் பிரச்சனைகள் தனிச் சிறப்புள்ளவைகள் அல்லவென்றும், குறிப்பிடத்தக்க மதிப்புள்ள வைகள் அல்லவென்றும் இவைகளை அவர் கடந்து செல்கின்றார். ஆனால் இப்பிரச்சனைகளை அவர் கண்டு கொள்ளாமல் இருக்கும் போது, அது அவரது கோட்பாடு அர்த்தமற்றது என்றும், ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் நம்மை நினைக்கச் செய்கிறது. வாழ்க்கையின் தொடக்கம் பற்றிய அவரது விளக்கமே முதலாவது பிரச்சனையாகும். உயிர் வாழ்க்கை, ஒன்றுமில்லாமையிலிருந்து வந்ததாக அவரது கோட்பாடு கருதுகின்றது. ஒரு புத்தகம், ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்பதையோ, ஒரு வானொலிப் பெட்டியானது வெடி நிகழ்ச்சியால் தானாகவே ஏற்பட்டது என்ப தையோ நம்புவது என்பது எவராலும் முடியாது, உயிர் வாழ்க்கை என்பது ஒரு புத்தகம் அல்லது வானொலிப் பெட்டியைக் காட்டிலும் அதிக நுட்பம் உடையதாகும். மனிதன், ஒரு புத்தகத்தையோ அல்லது ஒரு வானொலிப் பெட்டியையோ உண்டாக்கிவிட முடியும், ஆனால் அவனால் ஒரு உயிர் வாழ்க்கையை உண்டாக்க முடியாது. இருப் பினும் கூட, இந்தப் பேராசிரியர், ஒன்றுமில்லாமையிலிருந்து உயிர் வாழ்க்கை உண்டானது என்று நாம் நம்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்.

இயற்கையின் விதி இருப்பதைப் பற்றிய விளக்கமே இரண்டாவது பிரச்சனையாகும். இந்தப் பேராசிரியரின் கோட்பாடு, ஒன்றுமில்லா மையிலிருந்து இயற்கையின் விதி வந்ததாகக் கருதுகின்றது. நீங்கள் சாப்பிடவில்லையென்றாலோ, ஏதாவது ஒரு வழியில் உணவை உட்கொள்ளவில்லையென்றாலோ, இறந்து விடுவீர்கள். இந்த விதியை நீங்கள் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது, இதை நீங்கள் தவிர்க்கவும் முடியாது. ஒருவர்கூட இந்த விதியிலிருந்து விலக்குப் பெறவில்லை. நீங்கள் தூங்காமலிருந்தால், உங்கள் உடலானது சீர்கெட்டு, சக்தியை இழந்துவிடும். இயற்கையின் இந்த விதியை நீங்கள் மீறமுடியாது. இறப்பு என்ற இயற்கையின் விதியையும் நீங்கள் ஜெயிக்க முடியாது. மனித குலத்தின் இறப்பு விகிதம் என்பது 100 சதவீதமாய் இருக்கிறது. இதற்கு விதிவிலக்குகள் எதுவுமே இல்லை.

இந்தப் பேராசிரியர், இயற்கையின் விதி தற்செயலாக ஏற்பட்டதென்று மறைமுகமாய்க் கூறுகின்றார்.

குடும்பம் இருப்பதற்கான விளக்கமே மூன்றாவது பிரச்சனையாகும். மனித குலம் முழுவதுமே குடும்பங்களால் உண்டானதாகும். குடும்பம் இல்லாத ஒரு காலத்தை வரலாற்றுப் பதிவேடுகளில் நாம் காணவே முடியாது. இந்தப் பேராசிரியர், ஆணுக்கும், பெண்ணுக்கும் திடீரென்று ஒரே சமயத்தில் பக்குவத்தன்மை வந்ததென்று, நாம் நம்ப வேண்டும் என்கிறார். அவர்கள் ஒன்றாயிருப்பதில் உள்ள சந்தோஷத்தைத் தற்செயலாகவே கண்டறிந்தனர் என்றும், பதிவான வரலாறுகள் முழுவதிலும், ஆணும் பெண்ணும் இவ்விதமாகவே குடும்ப உறவுகளைக் கட்டி எழுப்பினார்கள் என்றும் அவர் கூறுகின்றார். ஆண் என்பவன் பெண்ணிலிருந்து மாறுபட்டவன், பெண் என்பவள் ஆணில் இருந்து மாறுபட்டவள்; இருந்தாலும், இணைவு மற்றும் தோழமையில் அவர்கள் ஒரே மாதிரியாகவே இருக்கிறார்கள். இந்தப் பேராசிரியர், இவர்கள் இருவரும் ஒரே வேளையில் பக்குவத்தன்மை அடைந்ததாகவும், அதன் விளைவாகக் குடும்பம் உண்டானது என்றும் கூறுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், குடும்பம் என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது-அது தற்செயலாகத்தான் நடந்தது என்று இவர் வாதிடுகின்றார்.

உயிர் வாழ்க்கை ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்றோ, இயற்கை விதியானது ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்றோ மற்றும் குடும்பமானது ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்றோ நமக்குள் கருத்து தோன்றுவதை நமது சிந்தனையானது அனுமதிக்காது. மனிதன் இருத்தலைக் குறித்து விளக்கக்கூடிய பகுத்தறிவுள்ள ஒரே வழி-சர்வ வல்லமையுள்ளவர் அவனைப் படைத்து, இந்தப் பூமியில் ஒரு விசேஷ நோக்கத்திற்காக அவனை வைத்தார் என்பதே ஆகும்.

நமது பகுத்தறிவின்படி நாம் முடிவு செய்ததை, வேதாகமம் தெளிவாக அறிவிக்கின்றது. வேதாகமத்தின் முதல் அதிகாரத்தில், "பின்பு தேவன்: நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக...என்றார்" (ஆதி. 1:26) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. வேதாகமத்தின்படி, தெய்வீக வாழ்விலிருந்து மனித வாழ்வு வந்தது. மேலும் நமக்கு, "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: 'நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக்

*கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்' என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி. 1:27, 28) என்றும் கூறப்பட்டுள்ளது. தேவன், தம்மைப் போன்ற ஒரு ஆவியின் இயல்பை மனிதனுக்குக் கொடுத்தார். அவர் ஆணையும், பெண்ணையும் படைத்து, குடும்பத்தை உண்டாக்கினார். பூமியில் உயிர் வாழ்வையெல்லாம் ஆண்டு கொள்ள இயற்கையின் விதிகளையும் அவர் படைத்தார்.*

*சர்வ வல்லமையுள்ள கரத்தினால் மனித வாழ்வானது ஒரு தெய்வீக நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டது என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றே பகுத்தறிவு நம்மை வேண்டிக் கேட்கின்றது. நாம் எவ்விதத் தயக்கமும் இல்லாமல், "நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்" (சங். 139:13, 14) என்று கூற முடியும்.*

*ஒரு சுவிசேஷ செய்தியாளர் ஒருமுறை இப்படிக் கூறினார்: "நான் உலகத்தின் பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன், ஒவ்வொரு நாட்டிலும் நான் ஒரே விதமான அநுபவத்தையே பெற்றேன். எடுத்துக்காட்டாக, குழந்தைகளுக்கு இரண்டும் இரண்டும் நான்கு என்று சொல்லிக் கொடுத்தால், அவர்கள் எப்பொழுதும் அதே மாதிரியாகவே பதில் சொல்லுவார்கள். அவர்கள் அதை நினைத்துப் பார்த்து, பிறகு இது சரிதான் என்று முடிவு செய்கின்றார்கள். அவர்களின் மனதில் இருந்து ஏதோ ஒன்று அந்தக் கருத்தைப் பெற்று அது உண்மை என்று ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. இது போலவே, இந்த வித்தியாசமான நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள மக்களுக்கு, இந்த பூமியையும், அண்டத்தையும், மனிதனையும் படைத்தவர் தேவன்தான் என்று போதிக்கும்போது, அவர்கள் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து, பிறகு இக்கருத்து சரியானதாய்த்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்கின்றார்கள். நான் சென்றுள்ள எல்லா தேசங்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றிலும் நான் இதே விதமான பதிலையே பெற்றிருக்கிறேன்."*

*மனிதன் இருப்பதைப்பற்றி-அவனது வாழ்க்கை, அவனது அறிவுக் கூர்மை, அவனது ஆவிக்குரிய இயல்பு, அவனது ஒழுக்க உணர்வு,*

*மற்றும் அவனது இயல்பான உடல் ஆகியவை பற்றி-நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்றால், அவன் தற்செயலாக ஏற்பட்டிருக்க முடியாது, ஆனால், சர்வ வல்லவராலேயே அவன் படைக்கப்பட்டான் என்றே நீங்கள் உறுதியாக முடிவு செய்வீர்கள், தேவன் இருக்கின்றார் என்பதை நீங்கள் உறுதியாக நம்ப முடியும். மனிதன் இருப்பதே அதை நிரூபிக்கின்றது.*

## முடிவுரை

*நாம் கவனித்த இரண்டு ஆதாரங்களை-உலகத்தின் ஆதாரம் மற்றும் மனிதனின் ஆதாரம் ஆகியவற்றை-ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். இவைகள் வேண்டிக் கேட்கின்ற முடிவு உறுதியான தாகவும், மறுக்க முடியாததாகவும் இருக்கின்றது, வேதாகமமும் கூட, “தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்” (சங். 14:1அ) என்று சொல்லுகிறது.*

*நம்மைப் படைத்த தேவன் ஒரு நாளில் நம்மை நியாயத்தீர்ப்புக்கு அழைத்து, நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்தினோம் என்று கணக்கு ஒப்புவிக்கும்படி கேட்பார் என்று நம்புவதும் கூட அறிவுக்கு ஏற்றதாகவே இருக்கிறது. இந்தக் காரணத்திற்காகவே தேவன், இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார், மற்றும் வேதாகமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் ஏன் இங்கு இருக்கிறோம்? நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுவது என்ன? என்பது பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். இயேசு, “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்” (யோவா. 12:48) என்று சொன்னார்.*

*தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள விரும்பு கிறார் என்பதே இயேசுவும், வேதாகமமும் வெளிப்படுத்தும் பெரும் வியப்பான சத்தியமாகும். சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங் களையும், பூமியையும், மற்றும் இந்த அண்டம் முழுவதையும் படைத்தவர், அவருடைய நித்திய குடும்பத்தில் எனது ஐக்கியத்தை விரும்பித் தேடுகிறார்! அவருடைய குமாரனின் சுவிசேஷத்தின் மூலம் அவர் தமது குடும்பத்திற்குள் என்னை அழைத்திருக்கிறார்! இயேசுவில் விசுவாசம் கொண்டு, பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுவை அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்று*

*அதனால் சுவிசேஷத்திற்கு நான் கீழ்ப்படிகையில், அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் நான் சுவிகார புத்திரனாக ஆகின்றேன் (எபே. 1:6; கலா. 4:6). வேதவசனங்களின்படி நீங்கள் தேவன் இருக்கின்றார் என்பதை அறிவது மட்டுமில்லாமல், உண்மையில் நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறீர்கள் என்பதையும் அறிகிறீர்கள்!*

## பாட வினாக்கள்

*(விடைகள் 303 ம் பக்கங்களில்)*

1. *எவர் ஒருவரும் கேட்கக் கூடிய ஆழ்ந்த அறிவுள்ள கேள்வி எது?*
2. *"தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்வி ஆழ்ந்த அறிவுள்ளதாய் இருப்பது ஏன்?*
3. *வேதாகமம் என்னவென்று தொடங்குகின்றது?*
4. *தேவனை நம்பும்படி நம்மை வற்புறுத்தும் முதலாவது ஆதாரம் என்ன?*
5. *மனிதன் இருக்கிறான் என்பதற்குரிய விளக்கத்தில் தேவனைச் சேர்க்காமல் விடும்போது எவர் ஒருவரும் எதிர் கொள்ளுகின்ற மூன்று பிரச்சனைகள் யாவை?*

# 2

# வேதாகமம், தேவனுடைய வார்த்தை

வேதாகமம் தேவனால் ஏவப்பட்டது என்று வலியுறுத்திக் கூறிக் கொள்ளுகிறது (2 தீமோ. 3:16, 17). "தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடரின் நேரடிப் பொருள், "தேவன் சுவாசித்தது" என்பதாகும். உலகப் பிரகாரமான எழுத்தாளர்கள் பலவகையான தூண்டுதல்களினால்- கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் உள்ளடங்கியவைகளினால்- "ஏவப்பட்டுள்ளனர்", ஆனால் வேதாகமத்திற்கு ஏவுதல் என்பதற்கு, தேவனே மூல காரணியாக இருக்கிறார் என்பதை வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது. அப்போஸ்தலரும், புதிய ஏற்பாட்டின் சில நூல்களை எழுதியவருமான பேதுரு, தீர்க்கதரிசனங்கள் "ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்'' (2 பேது. 1:21) என்று எழுதினார்.

ஏவப்பட்ட இந்தப் புத்தகத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதே இப்பாடத்தின் நோக்கமாகும். வேதாகமத்தின் தெய்வீக ஆரம்பம் பற்றிய சில ஆதாரங்கள் இங்கு தரப்படும், ஆனால் இந்த ஆச்சரியமான தொகுதியின்மேல் உங்களுக்கு ஒரு ஆர்வத்தை உண்டாக்குவது-அதன் மூலம் நீங்கள் இதை உங்களுக்காகவே படிக்கும்படி உற்சாகப்படுத்துவது - என்பதே இந்தப் பாடத்தின் அடிப்படை நோக்கமாகும். நீங்கள் வேதாகமத்தைப் படித்து, அதன்

நல்லொழுக்க விதிகளைப் (யாக். 1:21-25) பின்பற்றுகையில், இந்தத் தனிச் சிறப்புள்ள புத்தகமானது காலங்களினூடே மக்களின் மீது இப்படி ஒரு அழுத்தமான விளைவை ஏற்படுத்தியது ஏன் என்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்குவீர்கள்.

இந்தப் பாடமானது ஒரு எழுத்தாளர் கூறியபடி, "அதிசயமான வார்த்தையின் ஏழு அதிசயங்களை" தனிச் சிறப்புடன் காட்டுகின்றது: அவைகள் இதன் பழங்காலத் தன்மை, நவீனத் தன்மை, பல்வகைப் படுத்தும் தன்மை, ஒன்றாக்கும் தன்மை, மையக் கருத்து, செல்வாக்கு மற்றும் ஆறுதல் என்ற அதிசயங்களே. வரலாறு மற்றும் புவியியலில் இது மிகச் சரியாக இருத்தல் மற்றும் இதன் பாரபட்சம் இல்லாத தன்மை போன்ற வேதாகமத்தின் மற்ற அதிசயங்களையும் குறிப் பிடலாம், ஆனால் மேற்சொன்ன ஏழு அதிசயங்களே, சங்கீதங்களை எழுதியவர்களின் ஒரு எழுத்தாளரோடு நாமும் சேர்ந்து, "உம்முடைய சாட்சிகள் அதிசயமானவைகள்" (சங். 119:129அ) என்று நம்மை வியப்படையச் செய்வதற்குப் போதுமானவைகளாகும்.

## இதன் பழங்காலத் தன்மை

வேதாகமமானது உலக முழுவதிலும் உள்ள மிகவும் பழங்காலப் புத்தகங்களில் ஒன்றாக இருக்கிறது! புத்தகங்கள் பொதுவாக, பழைமையாவதற்கு வாய்ப்பில்லை. அவைகள் எளிதில் சிதையக் கூடியவையாய் இருக்கின்றன. அவைகளை நெருப்பு அழிக்கின்றது, தண்ணீர் அவைகளைக் கரைத்து விடுகின்றது. பூச்சிகள் அவற்றைத் தின்று விடுகின்றன, மற்றும் கவனமற்ற விரல்கள் அவற்றைக் கிழித்து விடுகின்றன.

வேதாகமமானது அதன் முழுமையடைந்த நிலையுடன் ஏறக் குறைய இரண்டாயிரம் வருடங்கள் பழமையானதாய் இருக்கிறது. அதன் சில பாகங்கள் இதைப் போல இரு மடங்கு பழமையான வையாகும். உலகத்தில் இருக்கிற வேறு எந்தப் புத்தகத்தையும் இதனோடு ஒப்பிட முடியாது! வேதாகமத்தின் இந்த பழமையான தன்மையே, அதன் நீடித்து நிற்கும் பண்பையும், அதனை அழிக்க முடியாத பண்பையும் வெளிப்படுத்துகின்றது.

மிகவும் பழங்காலத்தில் எழுதப்பட்டவைகள் பழைய ஏற் பாட்டில் இருக்கின்றன: ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம். இவைகள் மோசேயினால்

எழுதப்பட்டவைகள், இவைகளில் மனிதனின் ஆரம்பம் பற்றிய விபரங்களும், பதிவு செய்யப்பட்ட ஆரம்ப நாட்களைப் பற்றிய விபரமும் இருக்கின்றன. இன்றைய நாட்களில் மனிதன் வைத்திருக் கின்ற பழமையான, முழுமையான கையெழுத்துப் பிரதிகளில் இருந்து இவைகள் வந்துள்ளன என்று பாதுகாப்புடன் சொல்ல முடியும்!

வேதாகமத்தை அழிப்பதற்கு அடிக்கடியும், தொடர்ந்தும் மனிதன் மேற்கொண்ட கடினமான முயற்சிகளுக்கு அப்பால், வேதாகமம் இந்தப் பழமையான வயதை அடைந்திருக்கிறது! பூமியில் இருந்த மிகவும் வல்லமை வாய்ந்த அரசுகள், மறுபடியும் மறுபடியும் இந்தப் புத்தகத்தை வேருடன் அழிக்கத் தேடியதாக அறியப்பட்டுள்ளது. இதைப் படித்ததற்காக மனிதர்கள் தூக்கு மரத்தில் இறந்திருக்கின்றனர், இதை வைத்திருந்ததற்காக மனிதர்கள் கம்பத்தில் கட்டி வைக்கப் பட்டு எரிக்கப்பட்டிருக்கின்றனர். இதன் பக்கங்களைப் படித்ததற்காக விளக்கிக் கூற முடியாத மிகக் கொடூரமான உபத்திரவங்களை மனிதர்கள் பெற்றிருக்கின்றனர் - இருந்தாலும், பூமியில் இன்று எழுதப்பட்டுள்ள வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும், வேதா கமத்தின் பிரதிகளே அதிகமான அளவில் உள்ளன!

மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் ரோமாபுரி சக்கரவர்த்தியான டயோகிளேஷியன் என்பவன், வேதாகமத்தின் பிரதியொன்றை யாரேனும் சொந்தமாக வைத்திருந்தால், மரண தண்டனை தரப்படும் என்று கட்டளையிட்டான். மேலும் அவன் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருந்த சபை உறுப்பினர்களான (ஒரு கைதியின் வீட்டார்) எல்லாரையும் மரண தண்டனைக்குள்ளாக்கினான். இவ்விதமாக பலம் பொருந்திய அந்த ரோமன், தனது ஒழுக்கம் கெட்ட வாழ்க்கையையும், முரண்பாட்டையும் கண்டனம் செய்யும் எழுத் தாக்கங்கள் எல்லாவற்றையும் நீக்கிப் போடுவதற்குக் கொடூரமான வழிகளை மேற்கொண்டான். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு “கிறிஸ்தவ எழுத்துக்கள் எல்லாவற்றையும் இந்த உலகத்திலிருந்தே முழுவதுமாக அழித்து விட்டேன்'' என்று டயோகிளேஷியன் பெருமை பாராட்டிக் கொண்டான்.

இதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, கான்ஸ்டன்டைன் என்ற இன்னொரு ரோமச் சக்கரவர்த்தி, கிறிஸ்தவத்தின் மேல் ஈடுபாடு கொண்டு, தனது ஆளுகையின் கீழ் உள்ள பகுதிகளில் இருந்த சபைகள் எல்லாவற்றிற்கும் புதிய ஏற்பாட்டின் பிரதிகள் தயார் செய்து கொடுக்கும்படி விரும்பினான். தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய

இந்நூலைக் கண்டுபிடித்து, தனது அலுவலர்களிடம் கொடுப்பவர் களுக்கு பெருமதிப்புள்ள வெகுமதி வழங்கப்படும் என்று கூறினான். இருபத்து நான்கு மணி நேரத்திற்குள், - டயோகிளேஷியன் தான் எல்லாவற்றையும் அழித்து விட்டதாக எண்ணியதற்கு மாறாக-வேத வசனங்களின் ஐம்பது பிரதிகள் இந்தச் சக்கரவர்த்தியிடம் தரப்பட்டன.

அழியக் கூடிய பொருட்களின் மேல், அழிந்து விடக் கூடிய மையினால் எழுதப்பட்டிருந்தாலும் - காலம், இயற்கையின் சக்திகள், மனிதனின் அழிக்கும் சூழ்ச்சிகள் ஆகிய இந்த நாச சக்திகள் எல்லா வற்றையும் மீறி - நமது இந்த நூற்றாண்டிலும் வேதாகமம் நிலைத்து வாழ்கின்றது. இதன் நீண்ட மற்றும் பழமையான வரலாற்றுக்கு தேவனுடைய அருள் இரக்கமே காரணமாகும்.

## இதன் நவீனத் தன்மை

வேதாகமம் பழமையானதாய் இருப்பதைப் போலவே, அநேக விதங்களில் ஒரு நவீனமான புத்தகமாகவும் இருக்கிறது. பழைய புத்தகங்களின் உபதேசங்களில் இன்றைய காலத்திற்கேற்ற போக்கு இருப்பதை நாம் எதிர்பார்ப்பதில்லை. பத்து வருடங்கள் பழமையான ஒரு அறிவியல் புத்தகம் வழக்கற்றுப் போய் விடுகிறது. நூறு ஆண்டுகள் பழமையானது, அறிந்து கொள்ளும் ஆர்வமுடையதாகிவிடுகிறது. சல்மோனின் கருவியல் ஆய்வு என்ற 1700ம் வருடம் அச்சிடப்பட்ட புத்தகத்தில் உள்ள மருத்துவ விபரங்கள் நவீன மருத்துவரை பயங்கரமாய் சிரிக்கச் செய்யும். 1600ம் வருடத்துப் புத்தகமான லன்டென்சிஸ் மருந்து விபரங்கள் என்பதில் உள்ளவை இதைக் காட்டிலும் முட்டாள்தனமானதாகக் காணப்படுகின்றன; அந்தப் புகழ்பெற்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளபடி இன்று ஒரு மருத்துவர் நோயாளிகளுக்கு சிகிச்சை தருவாரேயானால், அந்த மருத்துவரை சிறைச் சாலையில் அடைத்து விடுவார்கள்!

சில ஆண்டுகள் கூட எவ்வளவு மாறுபாட்டை உண்டாக்க முடியும் என்பதை விளக்குவதற்கு, 150 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான தாவரவியல் பாடப் புத்தகத்தில் உள்ள ஒரு கூற்று இங்கு தரப்படுகிறது:

> இத்தாலியில் ஒரு மூலிகைச் செடி வளருகின்றது … அது வெள்ளை இதழ்களும் அரிய வாசனையும் கொண்ட பூக்களை உடையதாய் இருக்கிறது. இருப்பினும் அந்தத் தாவரம் பின்வரும் அதிசயமான குணமுள்ளதாகும்: அந்த பூக்களை ஈரமான கல்லுகளுக்கு அடியில் பத்து நாட்கள் வைத்திருந்தால், அவைகள் அந்தப் பத்து நாட்களில், கடித்தவுடன் மரணம் ஏற்படுத்தும் கொடிய விஷத் தேள்களாகி விடுகின்றன.

ஒருவேளை நீங்கள், "கொஞ்சம் நியாயமாய்ப் பேசுங்கள், போன ஒன்றரை நூற்றாண்டில் நாம் எவ்வளவோ விஷயங்களைக் கற்றுக் கொண்டு இருக்கிறோமே. பழைய புத்தகங்கள் இன்றைய காலத்திற்கு ஏற்றது போல் இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாதே!" என்று சொல்லலாம். கருத்து அதேதான்! உதாரணமாக, மோசே 3500 வருடங்களுக்கு முன்பாக எழுதியவைகள் கூட, தற்கால அறிவியல் மற்றும் அறிவு ஆகியவைகளுக்கு முரண்பாடாயிருப்பதாக நீங்கள் பார்ப்பது இல்லை. முழுவதும் "வேதாகம விஞ்ஞான முன்னறிவின்படி" எழுதப்பட்டுள்ள புத்தகங்களில், வானசாஸ்திரம் மற்றும் பிரபஞ்ச சாஸ்திரம் மற்றும் பிற விஞ்ஞானத் துறைகளின் தற்கால உண்மைகளை வேதாகம புத்தகத்தின் பக்கங்களில் காண முடியும் என்று வலியுறுத்தப்படுகின்றது. பின் காணும் உண்மைகள் முதலியவை அடங்கியுள்ளன:

> பூமி உருண்டையாக இருக்கிறது (ஏசா. 40:22; நீதி. 8:27).
> பூமி அந்தரத்தில் தொங்க வைக்கப்பட்டுள்ளது (யோபு 26:7).
> வானவெளியானது அளவிட முடியாத அளவு பெரியது, நட்சத்திரங்களை எண்ண முடியாது (ஆதி. 15:5; எரே. 33:22).
> பெரும் கடல்கள், அவைகளில் இயற்கையான வழிகளை கொண்டுள்ளன (இந்நாட்களில் கப்பல் பயணத்திற்கு அவ்வழிகள் பயன்படுகின்றன) (சங். 8:8; சங். 77:19).

வேதாகமம் என்பது ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிப் புத்தகம் என்று இந்தத் தொகுப்புகள் உறுதிப்படுத்துவதில்லை. மாறாக, வேதாகம எழுத்தாளர்கள் விஞ்ஞானத் தொடர்புடைய கொள்கைகளைத் தொடும் பொழுது, அவர்களின் நாட்களில் இருந்த மற்ற எழுத்தாளர்களைப் போல இல்லாமல், அவர்கள் விஞ்ஞான உண்மைகளுக்கு முரண்பட்டதே இல்லை.

*வேதாகமத்தின் காலத்தை வெல்லும் தன்மைக்கான வசீகரமான சில விளக்கங்கள் அதில் உள்ள சில மருத்துவத் துறைக்கான பகுதிகளில் இருக்கின்றன. நவீன சுகாதாரம் அல்லது நல்வாழ்விற்கான நடை முறைகள் எதுவும் அறியப்படாத காலத்தில் எழுதப்பட்ட மோசேயின் பிரமாணத்தில் சுத்தம், சுகாதாரம், நோயாளிகளை ஒதுக்கி வைத்தல், மற்றும் வியாதிகள் பரவாமல் தடை செய்யும் பிற முறைமைகள், வியாதி வராமலிருக்க எடுக்கும் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய அறிவுரைகளை மோசே பதிவு செய்துள்ளார்.*

*உதாரணமாக, அறுவைச் சிகிச்சை செய்பவர், தனது முகத்தில் ஒரு முகமூடியை அணிந்து கொள்வது நடைமுறையில் மாறாத ஒரு பழக்கமாய் இருக்கிறது. மேலும், சந்தேகத்திற்கிடமான நோய் உள்ள ஒருவர் இருக்கும் அறையில் நுழைபவர் ஒரு முகமூடியை அணிந்து செல்வது வழக்கம். ஏன்? ஏனென்றால் நோய்க் கிருமிகள் தனது உடலில் நுழைவதை அவர் விரும்புவதில்லை. அறிவியல் அறிஞர்கள் நோய்க் கிருமிகளைக் கண்டு பிடிப்பதற்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே, தேவன் மோசேயின் மூலம் பின்வரும் அறிவுரைகளைக் கொடுத்திருந்தார்: "அந்த வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி,... தன் தாடியை மூடிக் கொண்டு, 'தீட்டு, தீட்டு' என்று சத்தமிட வேண்டும்" (லேவி. 13:45).*

*இரத்த தானம் செய்தல் (இரத்தத்தை ஒரு உடலில் இருந்து இன்னொரு உடலுக்கு மாற்றிச் செலுத்துதல்) என்பது மருத்துவத் துறையில் இன்னொரு முன்னேற்றமாகும். அநேக வருடங்களுக்கு முன்னால் மக்களை "இரத்தம்" வெளியேற வைப்பது என்பது மிகச் சிறந்த மருத்துவ முறையாகக் கருதப்பட்டது; இதனால் அநேகர் இறந்துவிடும் வகையில் இரத்தம் சிந்தினர். ஆயினும், இன்றைய நாட்களில் இரத்தமே உடலின் உயிரோட்டமாக இருப்பது புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது, ஆதி. 9:4ல் மோசேயின் கூற்றுக்குத் திரும்புங்கள்: "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத் தோடே புசிக்க வேண்டாம்." வேறு வார்த்தைகளில் சொல்லுவ தென்றால், மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்றே மோசே சொல்லியிருக்கிறார் (லேவி. 17:11-14 லிலும் காணவும்).*

*வேதாகமத்தின் மிகச் சரியான மருத்துவ விபரங்களுக்கு, புத்தகங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இவைகளில் பரவலான அளவிற்கு மருத்துவ நடைமுறைகள் இருக்கின்றன. கீழே சில உதாரணங்கள் இருக்கின்றன:*

*ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு வகைப்பட்டவர்களும், உயிரின் "வித்து" உள்ளவர்களாய் இருக்கின்றனர் (ஆதி. 3:15; 22:18).*

*இறந்துபோன மனிதன் அல்லது மிருகத்தை நீங்கள் தொட்டிருந்தால், அதன் பிறகு நீங்கள் குளித்து, நீங்கள் அணிந்திருந்த உடைகளைத் துவைத்து அதன் மூலம் கிருமிகளைப் போக்குவது ஞானமுள்ள செயல் ஆகும் (எண். 19:5-22).*

*தானாகவே இறந்துபோன விலங்கை உண்ணுவது அபாயமானதாகும் (லேவி. 17:15).*

*இது பெரும் வியப்பாயிருக்கிறதல்லவா? நாம் வைத்துள்ளதிலேயே மிகவும் பழமையான புத்தகத் தொகுப்பில் இருபத்தியோராம் நூற்றாண்டின் மருத்துவக் கொள்கைகள் இருக்கின்றனவே!*

வேதாகமத்தின் நவீனத் தன்மையை, அதன் பல்வேறு பாடக் கருத்துக்களைக் கொண்டு விளக்கிக் கூற முடியும். இந்த புத்தகத்தின் ஒழுக்க நெறிகளுக்கு மேலாக இந்த உலகம் பக்குவப்பட்டு இருக்கிறது என்று நீங்கள் சொல்லிக் கொள்ள முடியுமா? இதனுடைய கொள்கைகளை விட மேம்பட்ட மேலான அறிவு எதையும் நாம் பார்த்திருக்கிறோமா? இல்லை! தற்கால மனிதன் வேதாகமத்தின் ஞானத்திற்கு அப்பால் கடந்து செல்லவில்லை; உலகமானது இன்னும் ஒரு ஆயிரம் வருடங்களுக்கு இருந்தாலும், இருபத்தியோராம் நூற்றாண்டில் இருப்பதைப் போலவே தேவனுடைய வசனமானது இருபத்தியிரண்டாம் நூற்றாண்டிலும் காலத்திற்கு ஏற்றதாகவே இருக்கும்!

## இதன் பல்வகைப்படுத்தும் தன்மை

இதுவரையில் நாம் சொல்லியவைகள் எல்லாம், வேதாகமம் ஒரே புத்தகமாக இருந்து, எவ்விதம் ஒரே கருத்தை கொண்டதாகவும் இருக்கிறது என்று நம்மை பிரமிக்கச் செய்யப் போதுமானவை களாகும். இருந்தாலும் இது மட்டுமே இதன் தன்மையாக இருப்பதில்லை.

வேதாகமம் என்பது இந்த உலகத்திலேயே மிகவும் பல் வகைப்பட்ட தன்மை கொண்ட புத்தகம் ஆகும். முதலாவதாக, இது உண்மையில்-பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் என்ற-ஒன்றில் இருந்து

ஒன்று நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகள் வேறுபாடு கொண்ட இரண்டு தொகுதிகளைக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, இந்தத் தொகுதிகள் ஒவ்வொன்றும் மேலும் பல எண்ணிக்கையுள்ள புத்தகங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது - பழைய ஏற்பாட்டில் முப்பத்தி ஒன்பதும், புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஏழும் ஆக மொத்தம் அறுபத்தி ஆறு புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவதாக, இந்த அறுபத்தி ஆறு புத்தகங்களும் நாற்பதுக்கும் மேற்பட்ட வித்தியாசமான எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. நான்காவது, இந்த நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு காலகட்டத்தில் வாழ்ந்தவர்களாய் இருந்தனர்! நிறைவாக, இவைகளை எழுதியவர்கள் இலக்கியம் அறிந்துள்ள ஒவ்வொரு பாடக் கருத்தைப் பற்றியும், கூடுதலாக ஒன்றையும் எழுதியிருக்கிறார்கள். இந்தக் கூடுதலாக ஒன்று என்பது உண்மையான தீர்க்கதரிசனம் ஆகும். இது தேவனுக்கு மட்டுமே உரியதான பகுதியாக இருக்கிறது! வேதாகமத்தில் இருக்கும் நூற்றுக் கணக்கான தீர்க்கதரிசனக் கூற்றுக் கள் முழுமையாகவும், மிகவும் சரியாகவும் நிறைவேறியிருக்கின்றன. இங்கு அவைகளில் சிலவற்றை மட்டுமே தருவதற்கு இடம் உள்ளது:

*நாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்: நாடுகளின் எழுச்சி, சரிவு மற்றும் வீழ்ச்சி ஆகியவைகளைப் பற்றி எண்ணிக்கையில் அதிகமான தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டன. உதாரண மாக, உபா. 28:47-68ல் இஸ்ரவேலரின் வரலாறு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப் பட்டது. அசீரியா (ஏசா. 10:12, 24, 25; 2 இரா. 17:24; 18:13 ஆகியவற்றைக் காணவும்) மற்றும் பாபிலோன் (ஏசா. 13; தானி. 5:28 ஆகியவைகளைக் காணவும்) உட்பட மற்றும் பல நாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும் கொடுக்கப்பட்டன.*

*மக்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்: யோசியா அரசனின் வேலைகள், அந்த அரசன் பிறப்பதற்கு சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டன (1 இரா. 13:2; 2 இரா. 23:15, 16), இதே போல், பெர்சியா நாட்டின் இராஜாவாகிய கோரேஸைப் பற்றியும் முன்னுரைக்கப்பட்டது (ஏசா. 44:28; 45:1ஐக் காணவும்). சனகெரிப் என்பவன் எருசலேமைக் கைப்பற்ற முடியாமல் போவது பற்றிய ஆச்சரியமான வரலாறு முன்னுரைக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும் (2 இரா. 19:32-35ஐக் காணவும்).*

*கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கசரிசனங்கள்: பழைய ஏற்பாட்டில் இருக்கும் சுமார் எண்ணூறு தீர்க்கதரிசனங்களில், முன்னூறுக் கும் மேற்பட்டவை இயேசு கிறிஸ்துவின் தன்மையை மையமாகக் கொண்டவையாகும். இப்புத்தகத்தின் 4வது பாடத்தில் இந்தத் தீர்க்கதரிசனங்களில் பலவும், அவை எவ்விதம் நிறைவேறின என்பதும் பட்டியலிடப்பட்டுள்ளன.*

வேதாகமத்தின் பல்வகைப்படுத்தும் தன்மையானது, இது தேவனிடத்தில் இருந்து வந்தது என்பதை நிரூபிக்கின்றது. இந்தப் பல்வகைப் படுத்தும் தன்மையிலும் ஒருமைப்பாடு இருப்பதால் இது விசேஷமான உண்மையாகின்றது. வேதாகமத்தில் உள்ள புத்தகங் களில் மனித வாழ்க்கையின் எந்த ஒரு பாகமும் அல்லது ஆவிக்குரிய நிலையும் கவனிக்கப்படாமல் விடப்படவில்லை. கொள்கையிலும், தெய்வீக வழி நடத்துதலிலும் இது மனித வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் தொட்டிருக்கின்றது.

## இதன் ஒன்றாக்கும் தன்மை

வேதாகமம் என்பது ஒரே எழுத்தாளரால் எழுதப்பட்ட ஒரே புத்தகமாக இருந்தால், அதன் பகுதிகள் எல்லாம் ஒத்திசைவு பெற்றி ருப்பதை நாம் இயல்பாகவே எதிர்பார்க்கலாம். நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் எழுதிய ஒரே பாடக் கருத்தைப் பற்றிய ஒரே புத்தகமாக இருந்தாலும், முழுமையான ஒத்திசைவுக்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவாகவே இருக்கும். ஆகவே, நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் பல்வேறுபட்ட பாடக் கருத்துக்களை அறுபத்தி ஆறு புத்தகங்களாக எழுதியிருந்தும், அவர்களின் வார்த்தைகளில் உள்ள ஒத்திசைவு நம்மைத் திகைக்க வைக்கிறது. "அவர்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து, இப்படிக் குறிப்பிடத்தக்க சிறப்புள்ள ஒரு வேலைக்காக நெருங்கியிருந்து மிகவும் கவனமாக இந்த வேலையைச் செய்திருக்கலாம்" என்று யாரேனும் ஒருவர் சொல்லலாம்! ஆனால் இப்படி நடந்திருக்கவில்லை என்று வரலாறு நிரூபிக்கின்றது. இந்த மனிதர்களில் பலர் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொண்டதே யில்லை. இவர்கள் பல நூற்றாண்டுக் காலங்கள் முன் பின்னாகப் பிரிந்திருந்தனர், எனவே ஒன்று கூடி தங்கள் எழுத்துக்களைத் திட்டமிடவோ அல்லது மறு கண்ணோட்டம் பார்க்கவோ இவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதன் ஒத்திசைவு என்பது

வேறு வழியில்தான் விளக்கப்பட வேண்டும்.

உண்மையானது மறுக்கப்பட முடியாததாக இருக்கிறது: வேதவசனங்களை எழுதியவர்களுக்கும், அவர்கள் எழுதிய எல்லா பாகங்களுக்கும் இடையில் ஒரு முழுமையான ஒருமைப்பாடு இருக்கின்றது. இந்த எழுத்துக்களில் ஏதேனும் ஒரு கருத்து வேறுபாடாவது இருக்காதா என்று பார்க்க மனிதர்கள் முயற்சி செய்து, அதில் தோல்வியையே பெற்றிருக்கின்றார்கள். வேதாகமம் என்பது ஒன்றிணைந்த முழுமையானதான ஒரு புத்தகமாக இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக இதன் முக்கியமான இரண்டு பகுதிகளாகிய பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றைக் கவனியுங்கள். அவை இரண்டும், இரண்டு தனித்தனிக் குழுவான மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இரண்டு தனித்தனியான உடன்படிக்கைகளாக (அல்லது ஒப்பந்தங்களாக) இருந்த போதிலும், அவை இரண்டும் அழகாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. "பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்துள்ளது, புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது" என்று யாரோ ஒருவர் சொன்னார். பழைய ஏற்பாடு வேர் என்றால், புதிய ஏற்பாடு கனி ஆகும்.

வேதாகமத்தின் முதல் புத்தகத்திற்கும், வேதாகமத்தின் கடைசிப் புத்தகத்திற்கும் இடையில் இருக்கின்ற சில வேறுபடும் ஒப்புவமைகளைக் குறிப்பிடுவோம்:

(1) வானமும் பூமியும் படைக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டு ஆதியாகமம் தொடங்குகின்றது; புதிய வானமும் புதிய பூமியும் படைக்கப்படும் என்று வெளிப்படுத்தின விசேஷம் முடிகின்றது.

(2) வெளிச்சம் வந்ததைப் பற்றியும், சூரியன் மற்றும் சந்திரன் ஆகியவை படைக்கப்பட்டதைப் பற்றியும் ஆதியாகமம் விவரிக்கின்றது; இவைகள் மனிதனுக்குச் செய்யும் வேலை முடிவடைதலை வெளிப்படுத்தின விசேஷம் சொல்லுகின்றது- ஏனெனில் புதிய நகரத்தில் (பரலோகத்தில்), தேவனும், ஆட்டுக்குட்டியானவருமே (இயேசு) வெளிச்சமாய் இருப்பார்கள்.

(3)ஆதியாகமத்தில், மனிதன் சாத்தானைச் சந்திக்கிறான், சாத்தானிடம் மனிதன் தோல்வியடைகின்றான். வெளிப்படுத்தின விசேஷத்தில், இன்னொரு யுத்தம் நடக்கின்றது; இதில், சாத்தான் தோல்வியடைகின்றான், இயேசுவின் மூலமாக மனிதன் வெற்றியடைகின்றான்.

(4) ஆதியாகமத்தில் முதல் ஆணும் பெண்ணும் வாழ்ந்திருந்த

இடமாகிய ஏதேன் தோட்டத்தில் இருந்து மனிதன் வெளியே துரத்தி விடப்படுகின்றான். வெளிப்படுத்தின விசேஷத்தில் மனிதன் தேவனுடன் மறுபடியும் இணைக்கப்படுகிறான்.

(5) நிறைவாக, ஆதியாகமத்தில், மனிதன் எப்படி ஜீவ மரத்தின் கனியை உண்ணும் பாக்கியத்தை இழந்து போனான் என்று சொல்லப்படுகின்றது அவன் அதையும் சாப்பிட்டிருந்தால் பாவம் என்பது என்றென்றும் அழிக்க முடியாததாக ஆகியிருந்திருக்கும். வெளிப்படுத்தின விசேஷத்தில், பாவம் அழிக்கப்பட்டு, மனிதன் என்றென்றும் வாழ்வதற்காக ஜீவ மரத்தின் கனியைச் சாப்பிடுவதற்கு அழைக்கப்படுகின்றான்!

ஆம், இந்தப் புத்தகத்தின் (வேதாகமத்தின்) ஒன்றாக்கும் தன்மை ஆச்சரியமாக இருக்கின்றது. இதன் ஒருமைப்பாட்டை நாம் பார்க்கும் போது, நாம் பிரமித்து நின்று தேவனே இதனை எழுதியவர் என்று முடிவு செய்கின்றோம்.

## இதன் மையக் கருத்து

வேதாகமத்தின் பொருளடக்கங்களைத் தொகுப்பதில், ஒரே சிந்தனையின் மேற்பார்வையிருந்திருந்தால் மட்டுமே இதன் ஒன்றாக்கும் தன்மை சாத்தியமாகும். இந்த இலக்கியச் செயல்பாடு நிகழ்ந்த கால இடைவெளியாகிய ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வருடங்களில் எந்த ஒரு மனித எழுத்தாளரும் இவ்வளவு அதிகமான ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்க முடியாது என்பதால், தேவனே இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் என்று அழைப்பதே சரியானதாகும். பேதுரு இதை மனதில் வைத்துக் கொண்டுதான், ‘‘தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்’’ (2 பேது. 1:21ஆ) என்று சொன்னார்.

மறுபடியுமாக, இந்த ஒன்றிணைக்கும் தன்மைக்கு ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல, ஒரே மையக் கருத்தும் கூட தேவையாய் இருக்கின்றது - இவை எல்லாவற்றையும் ஒன்று கூட்டுவதற்கு இது தேவையாயிருக்கின்றது. இந்தப் புத்தகத்தின் மையக் கருத்து என்ன? மனித குலமானது இந்த மையக் கருத்துக்கான காரணங்களைக் கொடுத்திருந்தாலும், ‘‘மனித குலத்தின் வரலாறு’’ என்பது இந்தப் புத்தகத்தின் மையக் கருத்தாக இருப்பதில்லை. இந்த மையக் கருத்துக்கான மிக முக்கியமான வேலைகளை யூதர்கள் நிறைவேற்றி

யிருந்தாலும், "யூதர்களின் வரலாறு" என்பது இதன் மையக் கருத்தாக இருப்பதில்லை. ஒரு மனிதராகிய - இயேசு கிறிஸ்து என்ற "ஒரு மனிதரின் வரலாறு" என்பதே இந்தப் புத்தகத்தின் மையக் கருத்து ஆகும்.

வரப்போகின்ற ஒருவரைச் சுற்றியே வேதாகமம் சுழன்றது என்பது ஒரு நல்ல கூற்று ஆகும். "அவர் வருகின்றார்" என்பதே பழைய ஏற்பாட்டின் செய்தியாகும். "அவர் இங்கு இருக்கின்றார்" என்பதே நற்செய்தி புத்தகங்களின் செய்தியாகும். "அவர் மறுபடியும் வருகின்றார்" என்பதே புதிய ஏற்பாட்டின் எஞ்சியுள்ள பகுதியின் மையக் கருத்தாகும்.

வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் இயேசுவை எவ்விதம் வெளிப்படுத்துகிறது என்ற நிலைப்பாட்டைப் பற்றிய படிப்பானது மிகுந்த ஆர்வமுடையதான ஒரு படிப்பாக இருக்கின்றது. "ஆதியாகமத்தில் இயேசு", "யாத்திராகமத்தில் இயேசு", "லேவியராகமத்தில் இயேசு" என்பது போன்ற புத்தகங்கள் எழுதப்பட முடியும். எடுத்துக் காட்டாக:

ஆதியாகமம் 1ல் இயேசு இருக்கின்றார், ஏனெனில் "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" (யோவா. 1:3அ).

ஆதியாகமம் 3ல் இயேசு இருக்கின்றார், ஏனெனில், அவரே பின்னாளில் சாத்தானுடைய தலையை நசுக்குகின்ற "ஸ்திரீயின் வித்தாக" ஆனார் (ஆதி. 3:15; கலா. 3:16).

ஆதி. 4ல் இயேசு இருக்கின்றார், ஏனெனில் ஆபேல் செலுத்திய ஆட்டுக்குட்டியின் பலியில் அவர் முன்நிழலிடப்படுகின்றார் (எபி. 12:24ஐக் காணவும்).

ஆதியாகமம் 6லும் இயேசு இருக்கின்றார், ஏனெனில் பேழைக்குள் உண்டான இரட்சிப்பு என்பது அவருக்குள், அவர் மூலமாகக் கிடைக்கும் இரட்சிப்பின் அடையாளமாக இருந்தது. இவ்வாறு நாம் மேன்மேலும் கூறிக் கொண்டே போக முடியும்.

எனவே இயேசு கிறிஸ்து என்ற மையக் கருத்துதான் தேவனுடைய வசனங்களுக்கு ஆச்சரியமான ஒருமைப்பாட்டைத் தருகின்றது. இயேசு-அவரே வரப்போகிற இரட்சகராய் இருந்தார்,அந்த இரட்சகர் வந்தார், அந்த அரசர் மறுபடியும் வருகிறவராய் இருக்கிறார்-இந்தக் கருத்துதான் அறுபத்தி ஆறு புத்தகங்களின் வசனங்களையும் ஒன்றிணைந்த ஒரே பதிவாக ஆக்குகின்றது.

## இதன் செல்வாக்கு

பூமியின் நூலகங்களில் உள்ள எழுதப்பட்ட எல்லா புத்தகங்களை விடவும், வேதாகமமானது மனித குலத்தின்மேல் மிகவும் வல்லமை யான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. இது வரலாற்றின் ஓட்டங் களை மாற்றியுள்ளது, சக்கரவர்த்திகளை ஏற்படுத்தியுள்ளது, வெற்றியாளர்களையும் அரசர்களையும் கீழே தள்ளியுள்ளது. இதன் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிபவர்களை ஆசீர்வாதங்களினாலும், வெற்றிகளினாலும் நிரப்பியுள்ளது, இதற்கு எதிராகப் போராடுபவர் களுக்கு மரணத்தையும் அழிவையும் கொண்டு வந்திருக்கிறது. வேதாகமத்தின் வல்லமைகள் அநேகமாயும், பலவகைப்பட்டதாயும் இருக்கின்றன, ஆனால் வாழ்க்கையை மாற்றி, மனிதர்களை உயர்த்தும் இதன் வல்லமையை மட்டும் நாம் கவனிப்போம்.

பல வருடங்களுக்கு முன் தீவுகளின் கூட்டம் ஒன்றில் காட்டு மிராண்டி இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு கூட்டமாக வாழ்ந்தனர். ஜூலியஸ் சீசரின் படைகளுடைய பதிவேட்டில், இந்தக் காட்டு மிராண்டிகள் ஒரு யுத்தத்திற்கு நிர்வாணமாகச் சென்றதைப் பற்றியும், அதில் பெற்ற வெற்றியைக் கொண்டாடும்போது அந்தக் காட்டு மிராண்டிகள், தாங்கள் கொலை செய்த பகைவரது உடலில் இருந்த இரத்தத்தை ஒரு காலியான மண்டை ஓட்டில் எடுத்துக் குடித்த தாகவும் வரைபடமாகத் தரப்பட்டுள்ளது. துரூயித்ஸ் என்ற மந்திரவாதியின் பலிபீடத்தின் மேல் மனிதர்களைப் பலியாகக் கொடுப்பது வழக்கமானதாயிருந்தது. பிறகு சில சம்பவித்தன. சுவிசேஷ செய்தியாளர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து இந்தக் காட்டு இனத்தவருக்கு தேவனுடைய வசனத்தை எடுத்துச் சென்றனர், அந்த நாட்டவர் அதை ஏற்றுக் கொண்டனர். சில காலங்களுக்குப் பிறகு, இந்த மக்கள் மகா அலெக்ஸாந்தரைக் காட்டிலும் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை ஆள்பவர்களாக வந்தனர்-இந்தத் தீவுகள் பிரிட்டிஷ் தீவுகள் ஆகும்!

வேதாகமம் எங்கெல்லாம் சென்றதோ, அங்கெல்லாம் மனிதகுலம் மேம்பாடு அடைந்திருக்கின்றது. வேதாகமத்திலேயே வாழ்க்கையின் மாற்றங்கள் பற்றிய அநேக வரலாறுகள் உள்ளன. நேர்மையற்ற ஒரு ஆயக்காரன், நேர்மையானவனாகவும், பெருந்தன்மை உடையவனா கவும் ஆனான் (லூக். 19:1-9). தேவதூஷணம் சொல்லிய ஒரு கொலைகாரன் மாபெரும் அப்போஸ்தலராக ஆனான் (அப். 7:58; 8:1,

3; 22:4-21). இன்னும் பல எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

வேதாகமத்தின் வல்லமையினால் தேவன் மற்றவர்களுக்கு என்ன செய்திருக்கிறாரோ, அதை அவர் உங்கள் வாழ்க்கையிலும் நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார். நீங்கள் அவரது வசனத்தைப் படித்து, அதன்படி வாழ்ந்தால், அவர் உங்களைத் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றுவார்.

## இதன் ஆறுதல்

மனிதனுக்குச் செய்கின்ற மற்ற எல்லாப் பணிகளையும் போலவே, ஆறுதல் தருவதிலும் வேதாகமம் தனிச் சிறப்புள்ளதாக, இதற்கு முன் எதுவும் அற்றதாக, இணையற்றதாக இருக்கின்றது! கல்லறைக்கு (மரணத்திற்கு)ப் பின்னால் உள்ளவைகளை மனிதன் பார்க்கச் செய்யக்கூடிய மிக நம்பிக்கையுடைய வெளிச்சமான ஒன்று இதற்கு முன்னால் இதைப் போல இருந்ததில்லை, இதற்குப் பின்னாலும் இதைப் போன்ற ஒன்று எப்பொழுதும் ஏற்படப் போவதும் இல்லை! வேதவசனங்களைப் படிப்பவர்களுக்கு அவர்கள் சென்றடையக் கூடிய நித்தியத்தின் உறுதியைப் பற்றிய நம்பிக்கையை அவைகள் தருகின்றன, மேலும் தங்களுக்கு அன்பானவர்கள் மரணத்தினால் எடுத்துக் கொள்ளப்படும்போது இவைகள் அவர்களுடைய இருதயங்களுக்கு ஆறுதலைத் தருகின்றன.

மரணம் என்பது ஒரு விரோதியாகவே இருக்கின்றது. இந்த இரக்க மற்ற, துன்பம் நிறைந்த உண்மையை மனிதனால் உண்டாக்கப்பட்ட கவிதைகள் மற்றும் தத்துவங்கள் எதுவும் எப்பொழுதும் மாற்ற முடியாது. கிறிஸ்தவர்களுக்கோ இந்த விரோதியின் தோல்வியானது முன் தீர்மானிக்கப்பட்டதாய் இருக்கின்றது. கிறிஸ்துவின் வல்லமை யினால், இந்த மரணமானது இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தருக்கு முன்பாகப் பிரசன்னமாவதற்கு அழைத்துச் செல்லும் பணியைச் செய்ய உந்தப்படுகின்றது. இருந்த போதிலும், அது ஒரு விரோதியாகவே இருக்கின்றது! இந்த விரோதி அரண்மனைகளிலும் குடிசைகளிலும் ஒரே மாதிரியாகவே நுழைகின்றது. இது ஒரு கணவரை அவரது மனைவியிடம் இருந்து பிரிக்கின்றது. இது ஒரு தாயின் கைகளில் இருந்து சிறு குழந்தையைப் பறிக்கின்றது. இது இனிமையான மகிழ்ச்சியை இருளான வருத்தமாக்குகின்றது.

அன்புக்குரியவர்கள் இறக்கும்போது, மக்கள், “எங்களை ஆறுதல்

படுத்தும் சில வார்த்தைகளைச் சொல்லுங்கள்" என்று வேண்டிக் கேட்கின்றார்கள். இந்த வார்த்தைகள் எங்கிருந்து வரும்? இலக்கியத்தில் இருந்தா? ஒரு கவிதையில் இருந்தா? ஒரு தத்துவ ஞானியிடம் இருந்தா? மரணம் உங்கள் வீட்டை அடித்து வீழ்த்தும்போது உங்களிடம் இருக்கின்ற மாபெரும் புத்தகங்களை நீங்கள் தேடிப்பார்த்தாலும், அழிந்து போகின்ற மனிதனால் எழுதப்பட்ட எந்த ஒரு வரியிலாவது, உங்களால் அழியாத ஆறுதலையும் நம்பிக்கையையும் கண்டடையவே முடியாது. பலமும் ஆறுதலும் தரும் வார்த்தைகளுக்கு ஒரே ஒரு பிறப்பிடம்தான் உள்ளது: வேதாகமம். தேவனுடைய புத்தகத்தில் மட்டுமே நீங்கள் பின்வருவது போன்ற வார்த்தைகளைப் படிக்க முடியும்:

> *நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் (சங். 23:4).*
>
> *கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந் தவர்களில் முதற்பலனானார் ... அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும் (1 கொரி. 15:20-54).*
>
> *பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தரு டனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரை யொருவர் தேற்றுங்கள் (1 தெச. 4:17, 18).*
>
> *அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமு மில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது (வெளி. 21:4).*

காலங்களினூடாக இந்த வார்த்தைகள்-மற்றும் வேதாகமத்தில் இதைப் போல இருக்கின்ற பிற வார்த்தைகள்-கண்ணீர்களைக் காய வைத்திருக்கின்றன, நம்பிக்கை கொடுத்திருக்கின்றன, மற்றும்

*இலட்சக்கணக்கானவர்களுக்கு ஆறுதலைக் கொண்டு வந்திருக்கின்றன. இது ஒரு அற்புதமான புத்தகமாகவே இருக்கின்றது!*

## முடிவுரை

*வேதாகமத்தின் ஏழு அதிசயங்களை நாம் கவனித்துப் பார்த்தோம்: அது பழையது, ஆனாலும் என்றும் புதியது! இது பல்வகைப்பட்டது, ஆனால் முழுமையான ஒருமைப்பாடுள்ளது-அந்த ஒருமைப்பாடு இயேசுவையே மையமாகக் கொண்டுள்ளது! இது தனது செல்வாக்கில் வல்லமையுள்ளது, ஆனால் ஆறுதல் தருவதில் மென்மையானது! வேதாகமம் என்பது தேவனால் ஏவப்பட்ட வார்த்தையாகும்; இதைவிடப் போதுமான விளக்கம் வேறு எதுவுமே இல்லை.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 304 ம் பக்கங்களில்)*

1. *"தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று 2 தீமோ. 3:16ல் கூறப்படுவதன் பொருள் என்ன?*
2. *ரோமச் சக்கரவர்த்தியாயிருந்த டயோக்கிளேஷியன் வேதாகமத்தையும் அதன் செய்தியையும் நீக்கிவிட முயற்சி செய்தான். அதில் அவன் வெற்றியடைந்தானா?*
3. *லேவி. 13:45ல் வேதாகமத்தின் சரியான பண்பு காண்பிக்கப்படுவது எப்படி?*
4. *வேதாகமத்திற்குள்ளாகவே உள்ள வித்தியாசங்கள் எவ்விதம் இது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை நிரூபிக்கின்றன?*
5. *வேதாகமத்தின் மையக்கருத்து என்ன?*
6. *பூமியின் நூலகங்களில் இருக்கின்ற எழுதப்பட்ட எல்லாப் புத்தகங்களிலும் எந்தப் புத்தகம் அதிகமான செல்வாக்குடையதாய் இருக்கின்றது?*
7. *வேதாகமத்தை வாசிப்பவருக்கு அது தருகின்ற ஆறுதல் என்ன?*
8. *வேதாகமம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்ட வார்த்தை என்பதை நிரூபிக்கும் அதன் ஏழு அதிசயங்களை குறிப்பிடுக.*

# 3

# பிதாவாகிய தேவன் யார்?

தேவன். இவரைக்காட்டிலும் உயர்வான நபரோ பொருளோ எதுவும் இல்லை. இவர் ஒருவரே முழுமையான அதிகாரம் உள்ளவராய் இருக்கின்றார். இவர் எல்லாவற்றுக்கும் மேலானவராக இருக்கின்றார்.

மனிதனால் செய்யப்பட்ட கல், மண் மற்றும் மரத்தால் ஆன உருவங்களை வணங்குவது என்ற தவறான பழக்கத்தை மனிதர்கள் பின்பற்றினாலும், "தேவன்" என்ற வார்த்தையானது ஒருவருக்கு மட்டுமே உரிமையுள்ளதாக இருக்கின்றது. ஒரே ஒருவர் மட்டுமே தேவனாக இருக்கின்றார்; அவர் ஒருவரே உண்மையான ஆராதனைக் குரியவர் ஆவார். கற்பனையான வேறொருவருக்கோ அல்லது உயிர் வாழ்பவருக்கோ செய்யப்படும் ஆராதனை எதுவும் தவறான ஆராதனையாகும்.

தேவனுக்குரிய கனத்தை சில வார்த்தைகளில் நாம் விளக்குவதற்கு விரும்பினால், 1 தீமோ. 1:17ஐக் காட்டிலும் மாபெரும் மற்றும் எளிமையான விளக்கத்தை நாம் காண முடியாது: "நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்." பழங்கால இஸ்ரவேல் மக்கள் திரும்பத் திரும்ப மனப்பாடமாய்க் கூறும் பின்வரும் கூற்றில், தேவனைப் பற்றிய உண்மை தொகுத்துக் கூறப்படுகின்றது: "... நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக" (உபா. 6:4, 5). தேவன் யார் என்பதன் விஷயத்தில், ஒவ்வொரு இருதயத்திலும் நாட்டப்பட வேண்டிய தீர்மானத்தை இயேசு அறிவித்தார்: "... உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு,

அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (மத். 4:10ஆ).

வேதவசனங்களில் உண்மையான தேவன் தமது இயல்பில் "மூவராக" இருப்பதாக விளக்கப்படுகின்றார். அதாவது, தேவன் ஒருவரே-ஆயினும் அவர் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், ஆவியானவராகிய தேவன் என்று மூன்று பேர்களாயிருக்கின்றார். தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களும் ஒருவருக்கொருவர் சமமானவர்களாகவும், நித்தியமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் ஒரு தனிச் சிறப்புள்ள நபர்த்துவமும், இயற்கைக்கு மேற்பட்ட ஞானமும், உணர்வும், சித்தமும் உள்ளவர்களாயிருக்கின்றனர்; ஆயினும் அடிப்படை, இயல்பு மற்றும் நோக்கம் ஆகியவற்றில் இவர்கள் ஒன்றாகவே இருக்கின்றனர்.

மூவராயிருந்தாலும் ஒன்றாக இருக்கும் தேவத்துவத்தின் இந்தக் கருத்தானது தேவத்துவம், தெய்வீக குடும்பம் அல்லது திரித்துவம் என்று அழைக்கப்படுகின்றது (அப். 17:29; ரோமர் 1:20; கொலோ. 2:9)[1]. இந்த மாபெரும் சத்தியமானது மனிதர்களாகிய நம்முடைய புரிந்துகொள்ளுதலில் இருந்து வெகு தொலைவில் உள்ளது-ஆனாலும் நமது விசுவாசத்திலிருந்து தொலைவில் இருப்பதில்லை, ஏனெனில் இது தேவனுடைய வசனத்தில் தெளிவாகப் போதிக்கப்படுகின்றது. நாம் இதை கற்பனை செய்துள்ளோம் என்பதாலோ, இது உண்மையாயிருக்க முடியும் என்று பகுத்தறிந்திருக்கிறோம் என்பதாலோ, நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி கற்றறிந்து அதன் மூலம் இந்த சத்தியத்தை கற்றுணர்ந்தோம் என்பதாலோ அல்ல மாறாக, விசுவாசத்தினாலே நாம் இதை ஏற்றுக் கொள்கின்றோம். வேதவசனங்களில் ஏவப்பட்ட எழுத்துக்களின் மூலமாக நமக்குத் தரப்பட்டுள்ளதாலேயே இந்த சத்தியத்தை நாம் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கின்றோம்.

தேவன் பிதாவாகவும், குமாரனாகவும், ஆவியானவராகவும் இருக்கின்றார் என்ற கருத்தானது வேதவசனங்களில் நேரடியாக விளக்கப்படவில்லை, ஆனால் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகின்றது. தேவத்துவத்தைப் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் பழைய ஏற்பாட்டின் எழுத்துக்களில் தேவனுடைய பெயராக எபிரெய மொழி வார்த்தையாகிய "ஏலோஹிம்" என்பதும் உள்ளடங்கியுள்ளது. இவ்வார்த்தை ஒரு பன்மைப் பெயர் வடிவம் ஆகும். பழைய ஏற்பாட்டின் மற்ற எழுத்துக்களிலும் தேவனைக் குறிப்பதற்குப் பன்மைப் பெயர்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது-எடுத்துக் காட்டாக, ஆதி. 1:26ல் "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும்

*மனுஷனை உண்டாக்குவோமாக ...''*[2] என்று கூறப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில், தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, பரிசுத்த ஆவியானவர் புறா வடிவத்தில் அவர் மீது வந்திறங்கினார், அதே சமயத்தில் வானத்திலிருந்து *''இவர் என்னுடைய நேசகுமாரன் ...'' (மத். 3:17)* என்று பிதாவானவர் அறிவித்தார். நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பு வதாக வாக்குத்தத்தம் செய்தபோது, ஆவியானவர்,தேவன் மற்றும் தம்மைப் பற்றியும் குறிப்பிட்டார்: *''பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்'' (யோவா. 15:26).*

மனிதனுடைய இரட்சிப்புக்கான ஊழியத்தில் தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களும் ஈடுபட வேண்டியதாய் இருக்கின்றது. பேதுரு, *''பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியான வரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்து வினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் ...'' (1 பேது. 1:2)* என்று எழுதினார். நாம் ஜெபத்தில் தேவனிடம் நெருங்கும்போதும் தேவத்துவத்தின் இந்தத் தன்மை காணப்படுகின்றது, ஏனென்றால், பவுல், *''ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை நாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பெற்றிருக்கிறதாக'' (எபே. 2:18)* சொன்னார்.

ஞானஸ்நானமானது திரித்துவத்தின் பெயரால் தரப்படுவதாக பிரதான கட்டளையில் சித்தரிக்கப்படுகின்றது: *''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத் தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்'' என்றார் (மத். 28:19, 20).*

வேதாகமம் முழுவதிலும், எப்பொழுதும், பிதாவாகிய தேவன் ஆண்பால் பெயர்ச் சொல்லினாலேயே (''அவர்'') குறிப்பிடப் படுகின்றார். அவர் பிதாவாகவும், படைத்தவராகவும், யேகோவா வாகவும் எல்லாம் வல்லவராகவும், கர்த்தராகிய தேவனாகவும் இருக் கின்றார். தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களில் எப்பொழுதும்

அவர் முதன்மையானவராகவே நிலை நிற்கின்றார். ஞானம், வல்லமை, அன்பு, கிருபை மற்றும் நீதி ஆகியவற்றில் இவரை எல்லாவற்றிற்கும் மேலானவராகவே வேதாகமம் காண்பிக்கின்றது. இந்த அண்டத்தைத் திட்டமிட்டு, வடிவமைத்து படைத்தவர் என்ற முறையில், அவர் எல்லா வல்லமைகள் மற்றும் அதிகாரங்களுக்கும் மேலான உயர்ந்த அதிகாரத்தையும், ஆட்சி உரிமையையும் கொண்ட அதிபதியாக விளங்குகின்றார். அவரை வணங்கி, கீழ்ப்படிகின்ற எல்லாருக்கும் அவர் தகப்பனாக இருக்கின்றார். மனிதகுலம் உட்பட, படைப்பு முழுவதும் அவருக்குள்ளாகவே பிழைக்கின்றது, அசைகின்றது, இருக்கின்றது (அப். 17:28).

தேவன், ஒரே உண்மையான தேவன் என்று எல்லா மக்களாலும், எல்லா நாட்டவராலும், எல்லா இனங்களாலும் ஆராதிக்கப் படத்தக்கவர் ஆவார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே அவரை அணுக முடியும். தூதர்கள், பரிசுத்தவான்கள் அல்லது உயிருள்ள, இறந்து போன மற்ற எந்த மனிதர்கள் மூலமாகவும்-இவர்கள் எவ்வளவு தான் நல்லவர்களாக இருந்திருப்பினும் அல்லது இருந்தாலும்-நாம் தேவனைச் சென்று அடைய முடியாது. தேவனுக்கும் மனிதனுக்கும் ஒரே மத்தியஸ்தராக இருப்பவர், தேவனுடைய குமாரனாகிய இயேசு மட்டுமே (1 தீமோ. 2:5). பிதாவினிடத்தில் சேரக் கூடுவதற்கு மனித னுக்குள்ள ஒரே வழி இயேசுவே. இயேசு, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதா வினிடத்தில் வரான்" என்று சொன்னார் (யோவா. 14:6).

தேவத்துவத்தின் இரண்டாம் உறுப்பினர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆவார். இவர் மூலமாகவே பிதாவாகிய தேவன் இந்த பூமியையும், மனிதனையும் படைத்தார் (கொலோ. 1:16). மனிதருடன் இவருக்குள்ள உறவின் நிமித்தம் இவர், "மனுஷகுமாரன்" என்று அழைக்கப்படுகின்றார்; தேவனுடன் இவருக்குள்ள உறவினிமித்தம் இவர், "தேவ குமாரன்" என்று அழைக்கப்படுகின்றார். தேவத்துவத்தில் உள்ளவர்களில் இவர் ஒருவரே மனித உருவெடுத்து, இந்த பூமியில் இயல்பான வாழ்க்கையை வாழ்ந்தவர் ஆவார். இவர் மனித குலத்தின் இரட்சகராகவும் மீட்பராகவும் இருக்கின்றார். இவர் எல்லா மக்களாலும் ஆராதிக்கப்படத் தக்கவராகவும், வழிபடத் தக்கவ ராகவும் இருக்கின்றார். இந்த உலகம் முழுவதும் ஆராதனையின் மூலம் பிதாவாகிய தேவனிடத்தில் வந்தடையத் தக்க ஒரு வழியை இவர் கொடுத்துள்ளார்.

*ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:9-11).*

தேவத்துவத்தின் மூன்றாம் உறுப்பினர் பரிசுத்த ஆவியானவர் ஆவார். இவரும் தேவனைப் போலவும், கிறிஸ்துவைப் போலவும் இயல்பும் அமைப்பும் உள்ளவராயிருக்கின்றார். இவரும், அவர்களைப் போலவே தனிப் பெயர்களால் அழைக்கப்படுகிறார், மற்றும் இவரும் எப்பொழுதும் ஆண்பால் விகுதிச் சொல்லினால் ("அவர்") குறிப்பிடப் படுகின்றார். தேவத்துவத்தின் மற்ற இரு உறுப்பினர்களுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகையில் இவர் எப்பொழுதுமே மூன்றாவதாகக் குறிப்பிடப்படுகின்றார். மனிதர்கள் வழி நடத்தப் படுவதற்கும், அறிவுறுத்தப் படுவதற்குமான வழியாக இவர் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றார். வேத வசனங்கள் மூலமாக இவர் நமது தேற்றரவாளனாக இருக்கின்றார். இவரே பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை எழுதுவதற்கு ஏவினவர் ஆவார்; ஆகவே வேதவசனங் கள் இவர் தமது வேலையைச் செய்யப் பயன்படுத்தும் கருவிகள் என்ற அர்த்தத்தில் "ஆவியின் பட்டயம்" (எபே. 6:17) என்று குறிப்பிடப் படுகின்றார். தேவனுடைய பிள்ளைகளாகின்றவர்களிடத்தில் இவர் வாசம் பண்ணுகின்றார் (தங்கி இருக்கின்றார்) (1 கொரி. 6:19, 20).

இவர்கள் மூவரும் நித்தியத்திற்கும் தேவத்துவம் உள்ளவர்களா யிருக்கின்றார்கள். இவர்களைப் பற்றி நாம் அதிமாய் அறியா விட்டாலும், இவர்கள் ஒவ்வொருவரும் இருக்கின்றனர் என்றும், இவர்கள் மூவரும் இணைந்துதான் எல்லா மகிமையும் பொருந்திய திரித்துவத்தை ஏற்படுத்துகின்றனர் என்றும் நாம் உறுதியாய்க் கூறலாம். அவர்கள் ஒன்றாக இணைந்துள்ளனர். அவர்கள் நித்தியமானவர்கள், படைக்கப்பட்ட எல்லாவற்றிலும் இருந்து வேறுபட்டும், தனிச் சிறப்புடனும் இருப்பவர்கள், அவர்கள் தங்கள் சித்தம் மற்றும் நோக்கத்தில் ஒன்றாகவே இருக்கின்றார்கள்.

மூன்று நபர்களாயிருக்கிற தேவனின் இந்த இயல்புக்கு அப்பால், பிதாவாகிய தேவனைப் பற்றி நாம் எதை அறிகின்றோம்? இவரைப் பற்றி வேதாகமத்தில் அடிப்படையான, பொதுவான சத்தியம் ஒன்று

போதிக்கப்படுகின்றது: இவர் ஒருவரே உண்மையான, உயிருள்ள தேவன், ஒவ்வொரு நபராலும் இவர் ஆராதிக்கப்பட வேண்டும். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் எந்த பகுதியையும், இந்த போதனையின் வலியுறுத்துதல் இல்லாததாக ஒருவர் பார்க்கவோ படிக்கவோ முடியாது.

"பிதாவாகிய தேவன் யார்?" என்ற கேள்வியை நாம் இன்னும் சற்று ஆழமாகப் பார்ப்போம்.

## நம்மைப் படைத்தவர்

தேவனே எல்லாவற்றையும் படைத்தார். அவரே எல்லாவற்றையும் உண்டாக்கினார், எல்லாவற்றிற்கும் உரிமையாளர் அவரே. அவர் படைக்காத அல்லது படைக்க அனுமதிக்காத எதுவும் இங்கு இல்லை, இருப்பது ஒவ்வொன்றும் அவருடையதே ஆகும்.

பூமியும், மனித குலமும் தற்செயலாக உண்டாகி விடவில்லை; அவை கிருபையுள்ள தேவனுடைய கரத்தினாலேயே படைக்கப் பட்டன. பூமியின் வயதைப்பற்றிய விஞ்ஞானக் கணக்கீட்டைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது என்பதற்குக் காரணம் இதுவே ஆகும். உலகம் ஒரு அற்புதமான தொடக்கத்தைக் கொண்டிருந்தது; இவ்விதமாக அது உண்மையில் இருப்பதைக் காட்டிலும் அதிக பழைமையானது போலக் காணப்படுகின்றது. தேவன், ஓரளவிற்குப் பக்குவமான பூமியையே படைத்தார். அவர் மனிதனை வஞ்சிக்க முயற்சி செய்யவில்லை, ஆனால் மனிதன் இங்கிருப்பதற்கு எல்லாவற்றையும் தரக்கூடிய முழு வளர்ச்சி பெற்ற பூமியை அவர் படைக்க வேண்டியதாயிற்று.

அவர் ஆதாமையும், ஏவாளையும் படைத்தார், முதலில் படைக்கப்பட்ட இந்த ஜோடி, குழந்தைகளா இல்லாமல், வயதடைந்த நிலையிலேயே இருந்தனர். அவர் அவர்களைப் படைத்த நாளில் நானும் நீங்களும் அங்கிருந்திருந்தால், அவர்கள் தங்கள் இருபது வயதுகளில் இருந்த ஜோடியாகவே நமக்குத் தோற்றமளித் திருப்பார்கள்; ஆனால் அப்போதுதான் உயிர் தரப்பட்டவர்களாய் அவர்கள் இருந்தனர். அதே போலவே, தேவனுடைய அற்புதமான படைப்பின் மூலம் படைக்கப்பட்ட பூமியானது முழுவதும் வளர்ந்த தாவரங்கள், தண்ணீர், காற்று, வாழ்வின் ஆதாரத்திற்கான மண் ஆகியவற்றைக் கொண்டதாகவே இருந்தது.

தேவனே எல்லாவற்றையும் படைத்தார் என்ற இந்த சத்தியத்திலிருந்து, தேவனைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டிய மற்ற சத்தியங்கள் வழிந்தோடி வருகின்றன. அவை யாவை?

## ***உண்மைத் தன்மைகள் எல்லாவற்றிற்கும் பின்பலமாய் இருப்பவர் அவரே.***

இருக்கின்றவைகள் எல்லாம் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட முடியும்: தேவனாயிருக்கிறவர் மற்றும் தேவ தன்மையற்றவர்கள். தேவனே முதலாவதும், முக்கியமான அடிப்படை உண்மைத் தன்மையாகவும் இருக்கின்றார். மற்ற ஒவ்வொன்றும் அவரால் படைக்கப்பட்டதாகவோ அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் உண்டாக்கப்பட அனுமதிக்கப்பட்ட தாகவோ இருக்கின்றன, ஆகவே அவைகள் தேவ தன்மையற்றவைகளாய் இருக்கின்றன.

### ***அவர் நித்தியமானவராய் இருக்கின்றார்.***

> *பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் (சங். 90:2).*

> *நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்து போவதில்லை (சங். 102:27).*

தேவன் துவக்கமற்றவராய் இருக்கின்றார், முடிவில்லாதவராகவும் இருப்பார். காலங்களுக்கு முன்பே இருந்த அவர், காலத்தை நித்தியத்தின் கூடுமிடம் ஒன்றில் படைத்திருக்கிறார். இறந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர் காலம் ஆகியவைகளை ஒரு கணப்பொழுதாகக் கொண்டுள்ள அவர் நித்தியத்திற்கும் இருக்கின்றவராக இருக்கின்றார். இப்பொழுது அவர் நித்தியத்திலேயே வாழ்கின்றார். அவர், இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், நிகழ் காலத்தைப் போலவே தெளிவாகக் காண்கின்றார். அவர் எப்பொழுதுமே இருந்திருக்கின்றார், இனி எப்பொழுதுமே இருப்பார்.

### ***அவர் எல்லாம் வல்லவராய் இருக்கின்றார்.***

> *ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (எரே. 32:17).*

*இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? (எரே. 32:27).*

அவருடைய இயல்புக்குட்பட்ட வகையில் அவரால் எதையும் செய்ய முடியும். ஆனாலும் கூட, அவரால் துன்மார்க்கத்தைக் கருணையுடன் பார்க்க முடியாது, தீமையினால் அவர் சோதிக்கப்பட முடியாது, ஏனென்றால் அவர் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனாய் இருக்கின்றார் (ஆப. 1:13). அவர் தமது சொந்த இயல்பை மறுக்க முடியாது, ஏனெனில் அவர் உண்மையுள்ளவராய் இருக்கின்றார் (2 தீமோ. 2:13). அவர் பொய்யுரையாதவராய் இருக்கின்றார் (தீத்து 1:3). இருப்பினும், அவரது இயல்புக்கு உட்பட்டு அவரால் எதையும் செய்ய முடியும். அவருக்கு எதுவுமே கடினமானது அல்ல.

### *அவர் எல்லாம் அறிந்தவராய் இருக்கின்றார்.*

*நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார். யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும், பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 23:23, 24).*

*கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது (நீதி. 15:3).*

அவர் ஒவ்வொரு விஷயத்தையும் உடனடியாகவும், மிகச் சரியாகவும், முழுமையாகவும் அறிகின்றார். அவர் எதையும் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அவருக்கு ஆலோசகரோ, போதகரோ தகவலோ எதுவுமே தேவையில்லை. அறியப்பட முடிந்த எல்லா வற்றையும் அவர் அறிந்திருக்கின்றார்.

### *அவர் எல்லா இடங்களிலும் இருக்கின்றார்.*

*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்*

> *காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந் தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப் படுத்தாது; இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி (சங். 139:7-12).*

> *... அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே, ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் ... (அப். 17:27, 28).*

*நாம் எங்கு சென்றாலும், தேவன் அங்கு இருக்கின்றார். நாம் அவருக்கு மறைவாக ஒளிந்து கொள்ளவோ அல்லது எல்லாவற்றையும் பார்க்கும் அவருடைய கண்களுக்கு எதையாவது மறைத்து வைக்கவோ முடியாது. தூரமோ அல்லது இருட்டோ எதுவுமே அவரது பிரசன்னத்திலிருந்து நம்மை நீக்கி வைக்க முடியாது.*

***அவர் ஒருவரே உண்மையுள்ள, உயிருள்ள தேவனாய் இருக்கின்றார்.***

*அவர் உயிருள்ளவராய் இருக்கின்றார் (மத். 16:16), மற்றும் உண்மையானவராய் இருக்கின்றார் (1 தெச. 1:9). ஒரு மகன் தனது தகப்பனைப் போலக் காணப்படுகின்றவாறே, மனித குலம் முழுமை யுமே சில வகைகளில் நம்மைப் படைத்த தேவனைப் போல் இருக்கின்றோம். மனிதனைப் போலவே, தேவனும் பார்க்கின்றார், கேட்கின்றார், பேசுகின்றார், உணருகின்றார், சித்தம் கொண்டு, செயல்படுகின்றார். இருப்பினும், தேவன் காணப்பட முடியாதவராக இருக்கின்றார். எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் இருக்கக் கூடிய ஆவியாக அவர் இருக்கின்றார் (யோவா. 4:24).*

*பிதாவாகிய தேவன் யார்? அவர் நித்திய வாசியும், ஒவ்வொன் றையும் படைத்தவரும், இயல்பில் மூன்று பேரும், சகல ஞானமுள்ள வரும், எல்லாம் வல்லவரும், எங்கும் நிறைந்திருப்பவருமாக உள்ளார்.*

*எல்லாவற்றையும் தேவன் படைத்திருப்பதால், ஒவ்வொன்றும் அவருக்குரியதே, அவரே நாம் ஆராதிக்க உகந்தவராகவும் இருக் கின்றார். உலகத்தில் உள்ள பொருட்கள் எல்லாம் அவருக்குச் சொந்தமானவைகளே, பூமியில் படைக்கப்பட்ட எல்லா உயிர்களும் அவருடையவைகளே, பூமியில் உள்ள எல்லா மக்களும் அவருடை*

யவர்களே, நாம் அவரை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்வது சரியானதே. வேறு எந்த வகையான கடவுளையாவது நாம் விசேஷமாக கனப்படுத்தி, ஆராதனை செய்தால், நாம் ஒரு பொய்யை ஆராதித்து, அதற்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆகின்றோம்.

## நமக்கு எல்லாம் கிடைக்கும்படி செய்பவர்

தேவன் இந்த அண்டம் முழுவதையும் படைத்ததோடல்லாமல், இன்றைய நாட்களிலும் கூட இதைப்பற்றி கவனம் செலுத்துகின்றார். இது விழுந்து விடாதபடிக்குப் பாதுகாக்கின்றார், இது உடைந்து விடாதபடிக்கும், தாம் விரும்புகின்றபடி இது வேலை செய்வதிலிருந்து தவறாதபடிக்கும் கூட பாதுகாக்கின்றார் (கொலோ. 1:16, 17).

இந்த உண்மையானது, அறிவு வாதத்தினாலும், வெளிப் படுத்துதலினாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தேவன் இந்த பூமியைப் படைத்து, இதை தொடர்ந்து நடத்தி வருகின்றார் என்பதை தர்க்கரீதியான சிந்தனையானது நமக்குக் கூறுகின்றது. இந்த பூமியைச் சார்ந்த எதுவும் தானாகவே தன்னை நடத்திச் செல்லுவதில்லை. எல்லா வல்லமையும் உள்ள ஏதோ ஒரு கரமானது இவைகளை இணைத்துப் பிடித்துள்ளது தெளிவாகின்றது. மனிதன் தன்னையே தான் கவனித்துக் கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கின்றான். தான் சுவாசிக்கும் காற்றையோ, தான் குடிக்கும் தண்ணீரையோ, அல்லது தனக்குத் தேவையான சூரிய வெளிச்சத்தையோ அவனால் உண்டாக்க முடியாது. பூமியின் சுழற்சி மீதே அவன் முற்றிலும் சார்ந்திருக் கின்றான்.

தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாடாகிய சாட்சியானது, தேவன் இந்த உலகத்தை ஒன்றிணைத்துப் பற்றியுள்ளார் என்கின்றது. வானத்தையும், பூமியையும் படைக்கையில் அவர் தமது உலகமானது தொடர்ந்து இருப்பதற்காக இயற்கையின் விதிகளை இயங்கச் செய்தார்.

> பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற் காகவும் இருக்கக்கடவது என்றார் (ஆதி. 1:14).
> பின்னும் தேவன்: இதோ, பூமியின் மேல் எங்கும் விதை தரும்

*சகலவிதப் பூண்டுகளையும், விதை தரும் கனி மரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது; பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார்; அது அப்படியே ஆயிற்று (ஆதி. 1:29, 30).*

இயற்கை விதிகளைச் செயலாற்றச் செய்ததோடு, இந்த அண்டம் முழுவதையும், இதனுடன் தொடர்புடைய சக்திகள் யாவற்றையும் தமது தெய்வீகப் பராமரிப்புக்குள் அவர் நிலை நிறுத்துகின்றார்.

*நீர் ஒருவரே கர்த்தர்; நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வான சேனைகள் உம்மைப் பணிந்து கொள்ளுகிறது (நெகே. 9:6).*

விசேஷமாக, அவர் மனிதனையும் விலங்கு இனங்களையும் பாதுகாக்கின்றார்: *"... கர்த்தாவே, மனுஷரையும், மிருகங்களையும் காப்பாற்றுகிறீர் (சங். 36:6).* பூமியின் உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் அவர் உணவூட்டுகின்றார்: *"அவர் மிருக ஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங் கொடுக்கிறார்" (சங். 147:9).* அவர் வானத்துப் பறவைகளை அக்கறையுடன் கண்காணிக்கின்றார்: *"ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" (மத். 6:26); "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது" (மத். 10:29).* அவர் உலக நாடுகளின் மக்கள் எல்லார் மேலும் ஆளுகை செலுத்துகின்றார்: *"அவர் ஜாதிகளைப் பெருகவும் அழியவும் பண்ணுகிறார்; அவர் ஜாதிகளைப் பரவவும் குறுகவும் பண்ணுகிறார்" (யோபு 12:23).* அவர் நீதிமான்களைப் பாதுகாத்து ஆசீர்வதிக்கின்றார்: *"அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்; அறுப்புண்டு*

*போவதே துன்மார்க்கரின் முடிவு. நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக் காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்" (சங். 37:38, 39). "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது'' (மத். 10:30). அவரிடத்திற்கு வந்து, அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு அவர் நித்திய ஜீவனைத் தருகிறார்: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை" (யோவா. 10:27, 28).*

*உலகத்தில் உள்ள அநேக நகரங்களில் மக்களின் போக்கு வரத்திற்கான பலவகைப்பட்ட முறைகள் இருக்கின்றன. இந்தப் போக்குவரத்தில் பயன்படும் வாகனங்கள் பராமரிக்கப் பட வேண்டும் என்பது தெளிவு. எண்ணெய் மாற்றுதல், உடைந்த பாகங்களை மாற்றுதல், பழுதான பாகங்களை மாற்றுதல் முதலியவைகளைச் செய்து அவைகளை ஓடக் கூடிய நிலையில் வைத்துக் கொள்ளவில்லை யென்றால், அவைகளைத் தெருவோரங்களில் விரைவிலேயே விட்டுவிட வேண்டியதாகும். எல்லா இயந்திரங்களும் பராமரிக்கப்பட வேண்டும். பராமரிப்பு தேவையற்ற இயந்திரம் என்று எதுவும் இந்தப் பூமியில் கிடையாது. இந்த பூமியானது ஒரு மாபெரும் இயந்திரத்தைப் போன்றதாகும். இது பராமரிப்பு செய்யப்படுவதுடன், இதற்குத் தேவையான யாவையும் தரப்படவும் வேண்டும். இது பரலோகத்தின் தேவனால் தாங்கப்படுவதாக வேதாகமம் சொல்லுகின்றது (எபி. 1:3).*

*நம்மைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டு, நமக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுத்துக்கொண்டு இருக்கும் தேவனுக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்! தேவனுடைய அருள் இரக்கம் யாவும் மனிதருடைய நன்மைக்காகத்தான் என்பதில் எவருமே சந்தேகம் கொள்ளக் கூடாது (அப். 14:17), ஏனென்றால் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணு கிறார் (மத். 5:45). அவருக்கு ஊழியம் செய்கின்ற எவரும், விசுவாசத்துடன் வழி நடக்கின்றவர்களுக்கு அவர் தரும் எந்த நன்மையிலும் குறைவு படுவதில்லை (சங். 84:11; ரோமர் 8:28).*

# நமது மீட்பர்

தேவன் நமது மீட்பரும், நமது இரட்சகருமாயிருக்கின்றார். அவர் நம்மை நேசிக்கின்றார், பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்க விரும்பு கின்றார். நமது நித்தியத்திற்கான ஒரே நம்பிக்கை அவருக்குள்தான் இருக்கின்றது.

நம்மேல் அவர் கொண்டுள்ள அன்பு விளக்கிக் கூறக் கடின மானதாகும். நாம் அறியும் எந்த மனிதரின் அன்பை விடவும் அது மேலானதாகும். எல்லா மனிதருமே பாவம் செய்து, அவரை விட்டுப் பிரிந்து செல்வதைத் தேர்ந்து கொண்டிருந்தாலும், அவர் அவர்களை இரட்சிக்கும்படியாகத் தேடுகின்றார். அவர் கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி, அவரது பலியின் மூலமாக நமக்கு இரட்சிப்பை உண்டாக்கினார்.

முழுமையான நீதியுள்ளவராகிய தேவன் பாவத்தைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட முடியாது. நித்திய மரணத்தை அனுபவிக் காமல் நமது பாவத்திற்கான தண்டத்தை நாம் செலுத்தித் தீர்க்க முடியாது. நமது பாவத்திற்கான தண்டனையைப் பெறுவதற்காக இயேசுவை சிலுவையில் மரிக்கும்படியாக தேவன் அனுப்பி வைத்தார். அவரை ஏற்றுக் கொண்டு, அவருடைய இரட்சிப்பின் செய்திக்குக் கீழ்ப்படிகிறதின் மூலம் அவரிடத்தில் வருகிற ஒவ்வொருவரும் இயேசுவின் மரணத்தின் நன்மையைப் பெற்றுக் கொள்வார்கள். இவ்விதமாக, இயேசுவை நமது இரட்சகராக விளக்கப்படுத்துவது போலவே (தீத்து 2:13), வேதாகமம் தேவனையும் நமது இரட்சகராக விளக்கப்படுத்துகின்றது (தீத்து 1:4). தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே நமது இரட்சிப்பைத் திட்டமிட்டார் (1 பேது. 1:20). இப்பொழுது அவர், எல்லா மக்களும் மனந்திரும்பி (தங்கள் மனநிலை மற்றும் வாழ்க்கையை மாற்றுதல்) அவருடைய இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆவலுடன் காத்திருக்கின்றார் (2 பேது. 3:9).

எப்பொழுதுமே பழி தூற்றுகின்ற தகப்பன் ஒருவருடைய மகனைக் கற்பனை செய்து பாருங்கள். அந்தத் தகப்பன் அந்தப் பையனிடம் பேசுகிறார் என்றால் அது திட்டுவதற்காகவே இருக்கும். அந்தப் பையன் தவறு செய்யும் போதெல்லாம் அவர் அவனை அடிக்கின்றார். தனது தகப்பனுடன் இவ்வித உறவு நிலையில் அநேக ஆண்டுகள் வாழ்ந்த அந்தப் பையன், தனது தகப்பன் ஒரு கடுமையான நீதிபதிதானே தவிர, அன்பு காட்டும் ஒரு தகப்பன் அல்ல என்று

எண்ணமிடுகின்றான். அவன் தனது தகப்பனுக்குப் பயப்படுகின்றான். ஆனால் அவன் அவரை நேசிப்பதில்லை. அவருடன் இருப்பதை அவன் ஒரு மகிழ்ச்சியான அனுபவமாகவும் கருதவில்லை. "அப்பா" என்ற வார்த்தையைக் கேட்கும் போதெல்லாம் அடியும் உதையும்தான் அவனுக்கு நினைவில் வருகின்றது. துரதிருஷ்டமான இந்தப் பையன் "அப்பா" என்ற வார்த்தையில் வழங்கப்படும் அன்பான அர்த்தத்தைக் காண்பது மிகவும் கடினமாகின்றது.

சில மக்கள் "தேவன்" என்ற வார்த்தையைப் பற்றி இதே விதமான உணர்வையே பெற்றிருக்கின்றனர். அவர்கள் ஒரு தவறு செய்வதற் காகத் தேவன் காத்திருக்கிறார் என்றும், அப்படித் தவறு செய்யும் போது அவர் அவர்களை நரகத்தில் தள்ளித் தண்டிக்க முடியும், அப்படிப்பட்ட ஒரு நியாயாதிபதியாகவே தேவன் இருக்கிறார் என்றும் அவர்கள் வாழ்க்கை முழுவதுமே போதிக்கப்பட்டிருக் கின்றனர். தேவனை நமது தகப்பனாகப் பார்க்கும்படி இயேசு போதித்தார். நாம் ஜெபிக்கும்போது தேவனை "பிதாவே" என்று அழைக்க வேண்டும் என்று அவர் கூறினார் (மத். 6:9). தேவன் நம்மை தியாக உணர்வான அன்போடு நேசிக்கிறார் என்று அவர் கூறினார் (யோவா. 3:16). அவர் நம் மீது கொண்டுள்ள அன்பை விடப் பெரிய அன்பு வேறொன்றைக் கற்பனை செய்து பார்க்கக் கூட முடியாது. அவர் நம்மோடு ஐக்கியமாயிருக்க விரும்புகிறார், நாம் அவருக்குக் கீழ்ப்படியும்போது அவர் நமக்குள் வாசம் பண்ணுகின்றார் (யோவா. 14:23). அவரை விட்டு நாம் விலகிப் போனால், மனந்திரும்பி மறுபடியும் அவரிடத்தில் சேரும்போது அன்புடன் அவர் நம்மை மன்னித்து மறுபடியும் ஏற்றுக் கொள்ளுகிறார் (லூக். 15:19-32).

மற்ற எந்த மனிதரும் நமக்குச் செய்யக் கூடிய எந்தச் செயலுக்கும் மேலான செயலை தேவன் நம் ஒவ்வொருவருக்கும் செய்திருக் கின்றார். அவரது மாபெரும் அன்பிற்கு நாம் எப்படி பதில் செலுத்த வேண்டும்? நாம் திரும்பவும் அவர்மேல் அன்பு செலுத்த வேண்டும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் ஒருவரே தேவன் என்று ஆராதிப்பதன் மூலம் நமது அன்பை வெளிப்படுத்த வேண்டும். அவருக்கு முன்பாக நாம் பயபக்தியுடனும், கண்ணியத்துடனும் நடக்க வேண்டும்.

## நமது நியாயாதிபதி

தேவன் ஒரு அன்பான, கிருபையுள்ள தகப்பனாக இருக்கும் அதே

வேளையில், அவர் நம்மை நியாயம்தீர்க்கப் போகிறவராகவும் இருக்கின்றார். காலங்களின் முடிவில் அவர் ஒருவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

நம்மைப் படைத்தவருக்கு நாம் ஒவ்வொருவரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று நம்புவது அறிவுக்கு ஏற்றதாகவே இருக்கிறது-அறிவுடமை நமக்கு கட்டளையிடுவதையே, வேதாகமமும் உண்மையென்று அறிவிக்கின்றது (வெளி. 20:12). தேவன் நம்மை எவ்விதத்தில் நியாயந்தீர்ப்பார்? நாம் ஒவ்வொருவரும் கணக்கொப்புவிப்பதற்கேற்ற விதத்தில், அந்த நியாயத்தீர்ப்பும் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டதாகவே இருக்கும் (ரோமர் 14:12). நாம் ஒவ்வொருவரும் பேசிய பேச்சுக்களுக்கு ஏற்ற விதத்தில் அவரது நியாயத்தீர்ப்பு குறிப்பிடத்தக்கதாய் இருக்கும் (மத். 12:36, 37) மற்றும் நமது செய்கைகளுக்கு ஏற்ற விதத்திலும் அது குறிப்பிடத்தக்கதாய் இருக்கும் (2 கொரி. 5:10). எல்லா நாட்டு மக்களும் அவருக்கு முன்னதாகக் கூட்டிச் சேர்க்கப்பட்ட நிலையில் அவரது நியாயத்தீர்ப்பு உலகளாவியதாக இருக்கும் (மத். 25:32).

தேவன் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே நியாயந் தீர்ப்பார். அவருடைய நீதி என்ற அளவையின்படி (அப். 17:30, 31), அவரது நியாயத்தீர்ப்பு இறுதியானதாகவும், நித்தியமானதாகவும் இருக்கும் (மத். 25:46). அவருடைய தீர்ப்பு கொடுக்கப்பட்ட பிறகு, மேல் முறையீடுகள் எதுவும் மேற்கொள்ளப் படாது.

இரண்டு வாகனங்கள் மோதியபோது, தள்ளப்பட்டு உணர்வற்ற நிலையடைந்த இளைஞன் ஒருவனைப் பற்றிய கதையொன்று கூறப்படுகிறது. அந்த விபத்தை நேரில் பார்த்த ஒருவர் அந்த வாகனங்கள் தீப்பற்றி வெடிக்கும் முன்பாக அந்த இளைஞனை வெளியே இழுத்து விட்டார். இல்லையென்றால் அந்த இளைஞன் தீப்பிடித்து இறந்திருக்கக் கூடும்.

மீட்கப்பட்ட பிறகு, அந்த இளைஞன் மெல்லக் கண் விழித்து, தனது உயிரைக் காப்பாற்றிய மனிதரின் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தை அவனால் ஒருபோதும் மறக்க முடியாதிருந்தது. அந்த இளைஞன் அவ்விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டு அநேக ஆண்டுகள் கடந்து சென்றன. அவன் முதிர்ந்த வயதை அடைந்தபோது, அவன் மிக மோசமான ஆபத்தில் சிக்கிக் கொண்டான். அவன் சட்டத்தை மீறிய குற்றம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டான். குற்றம் பற்றி

விசாரிக்க அவனை ஒரு நீதிபதியின் முன்னால் நிறுத்தியபோது அவன் திகைப்படைந்தான்; ஏனென்றால் அநேக ஆண்டுகளுக்கு முன் அவனை விபத்திலிருந்து காப்பற்றியவரே அந்த நீதிபதி என்று அடையாளம் கண்டு கொண்டான். உடனே அவன் சற்றும் தயக்க மில்லாமல், ‘‘மேன்மை தாங்கிய நீதிபதியவர்களே, என்னை உங்களுக்கு நினைவிருக்கின்றதா? அநேக வருடங்களுக்கு முன்பு இரண்டு வாகனங்கள் மோதிக் கொள்ளுகையில் அவைகளிலிருந்து என்னை இழுத்துப் போட்டு நீங்கள் எனது உயிரைக் காப்பாற்றி னீர்களே” என்று கதறினான். அந்த நீதிபதி சற்றுச் சிந்தித்து விட்டு, பிறகு, “ஆம், எனக்கு நினைவிருக்கின்றது. நான் மீட்ட அந்த மனித னுக்குச் சிறந்ததைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்பினேன். நீ உன் வாழ்க்கையைத் தொடர்ந்து வாழும்படி உன்னை அன்று காப்பாற்றியதற்காக மகிழ்ச்சியடைந்தேன். ஆனாலும் நீ பின்வரும் உண்மையை உணர வேண்டும்: அநேக ஆண்டுகளுக்கு முன்பு உன்னை வாகனத்திலிருந்து இழுத்துவிட்ட போது உனக்கு நான் ‘‘இரட்சகனாய்’’ இருந்தேன்; ஆனால் இன்று நான் உனக்கு “நீதிபதியாக” இருக்கின்றேன்” என்று சொன்னார்.

வேதாகமத்தில், தேவன் நமது இரட்சகராகவும், நமது நியாயாதி பதியாகவும் சித்தரிக்கப்படுகின்றார். அவர் நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்குவதற்காகத் தமது குமாரனை அனுப்பினார். அவர் நம்மை இரட்சிப்பதற்காக விலையேறப் பெற்ற பலியைச் செலுத்தி னார். நாம் அதைக் கவனிக்காமல், அவரது இரட்சிப்பைப் புறக்கணித் தால் என்ன நேரிடும்? அவர் நமது நித்திய நியாயாதிபதியாக இருந்து நம்மைத் தண்டிப்பார்.

நமது வாழ்க்கையில் நமக்கு ஒரு பெரிய கடமை இருக்கின்றது. தேவன் யாரென்று நோக்கி, கீழ்ப்படிதலுடன் அவரை வணங்கி, அவரது சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். அவரே உயிருள்ள உண்மையான தேவன் என்று நாம் அவரை ஆராதிக்க வேண்டும். இப்படிப்பட்ட பதில்செயல் செய்வதற்கு, அவரது வசனத்தைத் திறந்து அதைக் கவனமாகப் படிப்பது அவசியமாகும். அவர் நமது நித்திய நியாயாதிபதியாக மட்டுமல்லாது, நமது அன்பான இரட்சகராகவும் இருக்க விரும்புகின்றார்.

## முடிவுரை

தேவனைப் பற்றிய இந்த உண்மைகளின் வெளிச்சத்தில், நாம்

*அவரைப் பற்றிய கருத்து எதுவும் இல்லாமல் இருக்க முடியாது. அவரைப் பற்றி நாம் ஒரு தீர்மானம் செய்தாக வேண்டும். அவரே உண்மையான உயிருள்ள தேவன் என்று ஒப்புக்கொண்டு, அவருக்கு விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் ஊழியம் செய்வதாக மேற்கொள்ளும் பதில்செயலே அறிவுக்கு ஏற்புடையதாக இருக்கும்.*

*பள்ளி ஆசிரியை ஒருவர் தமது வகுப்பில் ஒருமுறை, "ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த காரல் ஷீலே மற்றும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜோசப் பிரீஸ்ட்லீ ஆகிய இரண்டு இரசாயன அறிஞர்களும் 1775 ஆம் ஆண்டு வாக்கில் ஆக்ஸிஜனைக் கண்டு பிடித்தார்கள்" என்று சொன்னார்கள். உடனே வகுப்பில் இருந்த சிறுமி ஒருத்தி கையை உயர்த்தி, "அவர்கள் ஆக்ஸிஜனைக் கண்டுபிடிக்கும் முன்பு நாம் எதை சுவாசித்தோம்?" என்று கேட்டாள். பின்பு அந்த ஆசிரியை, ஆக்ஸிஜன் என்ற வாயு நமது காற்று மண்டலத்தில் எப்போதுமே இருந்துள்ளது. ஆனால் இந்த இரசாயன அறிஞர்கள் அதைக் கண்டுபிடிக்கும் வரையிலும் நாம் தான் அதை அறியாமலும், அதைப் பெயரிட்டு அழைக்காமலும் இருந்தோம் என்று விளக்க வேண்டியிருந்தது.*

*நமது உலகமானது இரண்டு விதமான உண்மைகளால் ஏற்படுத்தப் பட்டதாய் இருக்கின்றது: அவைகள், நமது கண்களால் காண முடிகின்ற அல்லது நமது இயல்பான கைகள் மூலம் தொட்டு அறியக் கூடிய உண்மைகளும் மற்றும் நம்மால் காண முடியாத அல்லது தொட்டுணர முடியாத சத்தியங்களும் ஆகும். இந்த இரண்டாம் வகை உண்மைகள் நமக்குத் தெளிவாய் இருப்பதில்லை. இவைகளைப் பற்றி நாம் குறைவான அறிவுடையவர்களாகவே இருக்கின்றோம். இவைகள் இங்கிருக்கின்றன என்று நாம் அறிகின்றோம், ஆனால் சில சமயங்களில் இவை நமது எண்ணங்களின் பின்னணியில் இருக்கின்றன. காற்று மண்டலத்தில் ஐந்தில் ஒரு பகுதி ஆக்ஸிஜனாக இருக்கிறது என்றும் அதை சுவாசிக்காமல் நாம் உயிர் வாழ முடியாது என்றும் நமது எண்ணங்களில் நினைவு இருக்கலாம்-ஆனால் இதைப்பற்றி நினைக்காமலேயே நாம் சாதாரணமாக அதை சுவாசிக்கின்றோம். ஒரு பென்சிலைப் பற்றிய அதிகமான விழிப்புணர்வு நமக்கு உண்டு-ஏனெனில் நாம் அதைக் காண முடிகிறது, அதைக் கையில் எடுத்து எழுத முடிகிறது-காற்றைப் பற்றியோ, காணப்படாத மற்ற உண்மைகளைப் பற்றியோ இந்த அளவுக்கு நமக்கு விழிப்புணர்வு இருப்பதில்லை.*

*கருத்து இதுதான்: நாம் காணக் கூடாதவைகளாக சில*

உண்மைகள் இருப்பதால், அவை உண்மையல்ல என்று அர்த்தமாகாது. நாம் காண அல்லது தொட முடியாவிட்டாலும், அவைகளும் நாம் காணுகின்றவைகள் போன்று உண்மையானவைகளே. நாம் காண முடியாத மாபெரும் உண்மையாக தேவன் இருக்கின்றார். அவரை நமது இயல்பான கைகளால் தொட முடியாது, அவரை ஒரு சோதனைக் குழாயில் போட்டு பரிசோதனை செய்ய முடியாது, அல்லது நமது இயல்பான கண்களால் அவரை நாம் காண முடியாது; இருந்தாலும் அவரே மிகவும் மேன்மையான உண்மைப் பொருளா யிருக்கின்றார். காணப்படுகின்ற அல்லது காணப்படாத மற்ற எல்லா உண்மைகளுக்கும் அவரே அடிப்படை ஆதாரமாக இருக்கின்றார்.

ஒரு சுவிசேஷ ஊழியக்காரர், சில மக்களிடத்தில் உண்மையான தேவனைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர், தேவனுடைய மகா பெரிய வல்லமையையும், அவரது அன்பையும் மற்றும் அவரது ஞானத்தையும் பற்றி விளக்கம் கொடுத்தார். வயது முதிர்ந்த மனிதர் ஒருவர் அதை  ஆவலுடனும், உற்சாகத்துடனும் கவனித்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த மனிதர் எழுந்து நின்று, “இந்த தேவன் இருக்கிறார் என்று நான் அறிந்தேன், ஆனால் இதுவரைக்கும் அவரது பெயர் என்னவென்று எனக்குத் தெரியவில்லையே!’’ என்று ஆச்சரியப்பட்டார்.

தேவன் நம்மைப் படைத்தவர், நமக்கு எல்லாம் தருபவர், நமது மீட்பர் மற்றும் நமது நியாயாதிபதி ஆவார். தேவன் இருக்கின்றார் என்பதை மறுப்பவர்களும், தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் ஊழியம் செய்யத் தவறுகின்றவர்களும் மிகப் பெரிய தவறு செய்கின்றவர்கள் ஆவார்கள். அவர்கள் தங்களைப் படைத்தவரைப் புறக்கணிக் கின்றார்கள், மனிதனும் இந்த அண்டமும் இருப்பதற்குப் பின்னணி யில் உள்ள மாபெரும் சத்தியத்தை மறுக்கின்றார்கள். நீங்கள் இந்தத் தவறைச் செய்யாதீர்கள்! தேவனை உண்மையான உயிருள்ள தேவன் என்று ஆராதியுங்கள்; தாழ்மையான கீழ்ப்படிதலுடன் அவருக்கு முன்பாக வணங்குங்கள்.

தேவன் உங்களில் அன்பு கூருகின்றார், தமது குடும்பத்திற்குள் நீங்கள் வருமாறு உங்களை அவர் அன்புடன் அழைக்கின்றார். இந்த வாழ்க்கையில் நீங்கள் ஒவ்வொரு நாளும் அவருடன் ஐக்கியமாகி நடக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நித்தியத்திற்கும் நீங்கள் அவருடன் வாழ வேண்டும் என்று அவர் விரும்புகின்றார், இந்த நித்திய நகரமே பரலோகம் என்று அழைக்கப்படுகின்றது.

## பாட வினாக்கள்

*(விடைகள் 305 ம் பக்கங்களில்)*

1. "தேவன்" என்ற வார்த்தை ஒருவருக்கு மட்டுமே உரிமையானதாகும். ஏன்?
2. தேவத்துவம் என்ற கருத்தைத் தரும் பழைய ஏற்பாட்டுப் பகுதிகளைப் பட்டியலிடுக?
3. இயேசுவின் ஞானஸ்நானம், மனிதரின் இரட்சிப்புக்கான ஊழியம், ஜெபம் மற்றும் எல்லாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கும்படியான பிரதான கட்டளை ஆகிய இவைகள் யாவும் தேவன் ஒருவரே ஆயினும் (தேவத்துவத்தில்) மூவர் இருக்கின்றனர் என்ற கருத்தை எவ்விதம் தாங்குகின்றன?
4. மனிதர் தேவனிடத்திற்கு வருவதற்கான ஒரே வழி என்ன?
5. தூதர்கள், பரிசுத்தவான்கள் அல்லது உயிருள்ள அல்லது மரித்த மற்ற மக்கள் மூலமாக தேவனை அணுக முடியாது என்று போதிக்கும் வேத வசனங்கள் யாவை?
6. கர்த்தராகிய இயேசு "மனுஷ குமாரனாகவும்" "தேவ குமாரனாகவும்" இருக்க முடிகிறது எப்படி?
7. தேவத்துவத்தின் உறுப்பினர்களைப் பற்றி நாம் அதிகமாய் அறியாத நிலையில் இருக்கும்போதே, நாம் அதிகமாய் சிலவற்றை அறிய முடியும். வேதாகமத்தில் இதைப் பற்றிப் போதிக்கப்பட்டுள்ள சில உண்மைகள் யாவை?
8. தேவன் எல்லாவற்றையும் படைத்தார் என்ற சத்தியத்திலிருந்து வழிந்தோடி வரும் சத்தியங்கள் யாவை?
9. தேவன் தமது உலகத்தில் தொடர்ந்து செயலாற்றுகின்றார் என்பதற்கு நாம் பெற்றுள்ள ஆதாரம் என்ன?
10. தேவன் நம்மை எவ்விதம் நியாயந்தீர்ப்பார்?

## வார்த்தை உதவிகள்

***அப்போஸ்தலர்கள்*** - இயேசுவின் விசேஷித்த செய்தியாளர்களாக அவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட பன்னிரெண்டு மனிதர்கள் *(மத். 10:2-4).* யூதாஸின் மரணத்திற்குப் பிறகு மத்தியா ஒரு அப்போஸ் தலரென்று பெயரிடப்பட்டார் *(அப். 1:23, 26).* பின்னாளில் பவுலும் இந்த எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் *(அப். 9:15, 16; 1 தீமோ. 2:7).* இயேசு, தமது அப்போஸ்தலர்களின் ஏவப்பட்ட போதனை மற்றும் பிரசங்கங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று போதித்தார் *(மத். 16:19).*

**ஞானஸ்நானம்** - *"தண்ணீரில் முழுக்காட்டுதல்"* என்ற அர்த்த முள்ள ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து வந்ததாகும். பாவங்களின் மன்னிப்பிற்கான ஞானஸ்நானத்தை தேவன் அங்கீகரித்துள்ளார் *(மத். 28:19, 20; ரோமர் 6:1-4; அப். 2:38; 8:36).*

**கிறிஸ்தவர்** - கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறவர்.

***அறிக்கையிடுதல்*** - ஒருவர், இயேசுவே தேவனுடைய குமாரன் என்று தாம் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படையாகக் கூறுதல் மற்றும் அவரைக் கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளுதல். *(அப். 8:37; ரோமர் 10:10; 1 தீமோ. 6:12ஐக் காணவும்).*

***சீஷன்*** - கற்றுக் கொள்பவர் அல்லது பின்பற்றுபவர். அப். 11:26ல் இயேசுவின் சீஷர்கள் முதன்முதலாகக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

***நற்செய்தி நூல்கள்*** - இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கூறும் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான்).

***பிரதான கட்டளை*** - இயேசுவின் சீஷர்கள் சுவிசேஷத்தை ஒவ்வொரு நபருக்கும் பிரசங்கிக்க வேண்டும் என்ற அவரது கட்டளை *(மத். 28:18-20; மாற். 16:15, 16).*

***மத்தியஸ்தர்*** - ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதற்காக நடுநிலைமை வகிப்பவர்.தேவனுடைய குமாரனாகிய இயேசு, தேவனுக்கும் மனிதருக்கும் நடுவில் மத்தியஸ்தராக இருக்கின்றார். அவர் பாவம் என்கின்ற பிரச்சனையைத் தீர்த்து வைக்கின்றார்.

***அருள் இரக்கம்*** - மனிதருக்கு எல்லாம் கொடுக்க வேண்டும் என்பதில் தேவனுடைய கவனம். (புதிய ஏற்பாட்டில் "அருள் இரக்கம்" என்ற வார்த்தை இவ்வகையில் பயன்படுத்தப்படாதிருக்கையில்,

*ரோமர் 8:28ல் காணப்படுகிறபடியான வேதாகம உபதேசமாக இது இருக்கின்றது.)*

***மீட்பர்*** - *''திரும்ப வாங்கும்'' ஒருவர். இயேசு தமது மரணத்தினால், மக்களின் இழந்து போன ஆத்துமாக்களைத் திரும்பவும் வாங்கினார் அல்லது அந்த ஆத்துமாக்களுக்கு தமது ஜீவனை மீட்புக் கிரயமாகத் தந்தார்.*

***மீட்பு*** - *தேவனை விட்டு விலகியிருந்த நிலையில் இருந்து "திரும்பக் கொண்டு வரப்படுதல்." கிறிஸ்தவர்கள் "மீட்கப்பட்டவர்கள்" என்று அடிக்கடி குறிப்பிடப்படுகின்றார்கள்.*

***மனந்திரும்புதல்*** - *ஒருவரது சிந்தனையின் வழியை மாற்றி அதன் மூலம் அவரது வாழ்க்கையின் வழியை மாற்றிக் கொள்ளும் செயல்.*

***பரிசுத்தவான்*** - *புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்.*

***இரட்சிப்பு*** - *பாவத்திலிருந்து விடுவிக்கப்படுதல்; இயேசுவின் மூலமாக மட்டுமே இரட்சிப்பு அருளப்பட முடியும்.*

***இரட்சகர்*** - *அபாயம் அல்லது மரணத்திலிருந்து ஒருவரைக் காப்பாற்றும் மற்றொருவர். நமது இரட்சகராகிய இயேசு நம்மைப் பாவத்தில் இருந்தும் நித்திய மரணத்தில் இருந்தும் காக்கின்றார்.*

---

*[1]''தேவத்துவம்'' என்று மொழிபெயர்க்கக் கூடிய மூன்று கிரேக்க வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தடவையாக (அப். 17:29; ரோமர் 1:20; கொலோ. 2:9) ஆக மூன்று தடவைகள் மட்டுமே வேதவசனங்களில் காணப்படுகின்றது. ''தெய்வீக குடும்பம்'' மற்றும் ''திரித்துவம்'' என்ற சொற்றொடர்கள் வேதவசனங்களில் காணப்படுவதில்லை, இப்பாடத்தில் இச்சொற்றொடர்களை நாம் விளக்கங்களாக மட்டுமே பயன்படுத்து கின்றோம். [2]மற்ற மூன்று எடுத்துக்காட்டுகள் ஆதி. 3:22; 11:7; ஏசா. 6:8 ஆகியவற்றில் காணப்படுகின்றன.*

# 4

# இயேசு, தேவனுடைய குமாரன்

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்ற சத்தியமே கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியாக நிலவுகின்றது. கிறிஸ்துவே நமது மார்க்கத்தின் மையமாக இருக்கின்றார். அவரே நமது விசுவாசத்தின் அஸ்திபாரமாக இருக்கின்றார் (1 கொரி. 3:11), நமது பிரசங்கத்தின் மையக் கருத்தாகவும் இருக்கின்றார் (அப். 8:35; 1 கொரி. 1:23), நமது அறிக்கையின் இலக்காகவும் இருக்கின்றார் (மத். 10:32), மற்றும் நமது நம்பிக்கையின் அடித்தளமும் அவரே (1 தீமோ. 1:1). ஆகையால், அவர் மீது ஒரு பலமான விசுவாசம் மிகவும் முக்கியமாகின்றது (யோவா. 8:24). கிறிஸ்துவின் தெய்வீகத்தை நம்புவதற்கு நமக்கு ஏராளமான நல்ல காரணங்கள் இருக்கின்றன. நம்புவதற்கு ஏராளமான ஆதாரங்கள் இல்லாத எதையும் நாம் நம்பும்படி தேவன் நம்மைக் கேட்பதில்லை (யோவா. 20:31). இந்த ஆதாரம் மிகவும் பலமானது, அநேக நூற்றாண்டுகளில் இது ஆயிரக்கணக்கானவர்களை நம்பும்படியாகச் செய்துள்ளது. இயேசு, தேவனுடைய குமாரன் என்று நம்புவதற்குச் சில காரணங்களை இந்தப்பாடம் உங்களுக்கு முன் வைக்கின்றது. இவைகளைக் கவனமாகப் பரிசோதியுங்கள். நீங்கள் ஏற்கனவே பலமான விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், அவரது சீஷர்களைப் போலவே, “கர்த்தரே, எனது விசுவாசத்தைப் பெருகப் பண்ணும்” என்று அமைதியாக ஜெபியுங்கள். நீங்கள் சந்தேகங்களினால்

*பாரப்பட்டிருந்தால், மாற். 9:24அ வில், ஊமையான ஒரு ஆவி பிடித்த மகனுடைய தகப்பனைப் போல, "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று ஜெபியுங்கள்.*

## ஏனென்றால் அவர் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகின்றார்

*இயேசுவின் பிறப்புக்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னதாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களைக் கவனியுங்கள். அவருடைய பிறப்பு தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டது. ஆபிரகாம், யூதா மற்றும் தாவீது ஆகியோரது வம்சாவழியில் அவர் பிறந்தார் (ஆதி. 12:3/மத். 1:2; ஆதி. 49:10/மத். 1:2, 6). ஆபிரகாமுக்கு அநேக சந்ததி யார்கள் இருந்தனர், ஆயினும் குடும்பத்தின் பெயர் கூட தீர்க்க தரிசனத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது (எரே. 23:5; ஏசா. 11:1/ மத். 1:6). அவர் கன்னிகையிடத்தில் பிறப்பார் என்பது ஏசா. 7:14ல் முன்னுரைக்கப்பட்டு, மத். 1:18-25ல் நிறைவேறியது. பெத்லகேம் என்ற ஊர் அவர் பிறக்கும் இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது (மீகா 5:2). அவரது பிறப்பின்போது அநேக பிள்ளைகள் கொல்லப் படுவார்கள் என்பதும் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டது (எரே. 31:15/மத். 2:16-18).*

*அவர் எகிப்துக்குக் கொண்டு செல்லப்படுவது பற்றி தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர் (ஓசி. 11:1/மத். 2:13-15), கலிலேயாவில் அவரது வாழ்வு (ஏசா. 9:1, 2/மத். 4:12-16), மற்றும் எருசலேமில் அவர் ஜெயமுள்ளவராகப் பிரவேசித்தல் (சகரி. 9:9/மத். 21:1-11) ஆகிய வையும் முன்னுரைக்கப்பட்டன. அவரது ஊழியமும் முன்னுரைக்கப் பட்டது, அவருக்கு முன்னோடினவராக ஒருவர் போவார் என்றும் தீர்க்கதரிசிகள் சொன்னார்கள் (மல்கி. 3:1; ஏசா. 40:3/மத். 3:1-3). அவரது குணமாக்கும் ஊழியத்தைப் பற்றியும் (ஏசா. 53:4/மத். 8:16, 17), அவர் உவமைகளினால் போதிப்பதைப் பற்றியும் (ஏசா. 6:9, 10/ மத். 13:10-17), புறஜாதியாரின் மத்தியில் அவருடைய ஊழியத்தைப் பற்றியும் (ஏசா. 42:1-4/மத். 12:15-21), அதிகாரிகளால் அவர் புறக்கணிக்கப்படுவது பற்றியும் (சங். 118:22/யோவா. 1:11) அவர்கள் பேசினார்கள்.*

*இயேசுவின் மரணமானது தீர்க்கதரிசனத்தில் மிகவும் விளக்கமாகச் சித்தரிக்கப்பட்டது. அவர் தமது நண்பனால் (சங். 41:9/மத். 26:47-50)*

முப்பது வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுக்கப்படுவது (சகரி. 11:12/மத். 26:14-16) பழைய ஏற்பாட்டில் படம் பிடித்துக் காட்டப் பட்டது. பழங்கால வேதவசனங்களில் அவர் தமது விரோதிகளுக்கு முன்பாக எப்படி நடந்து கொள்ளுவார் என்பதும் (ஏசா. 53:7/மத். 27:12, 14), அவர் எப்படி மரணமடைவார் என்பதும் (சங். 22:16/மத். 27:35அ) மற்றும் அவரது உடையின் பேரில் சீட்டுப் போட்டு பங்கிடப்படும் என்பதும் (சங். 22:18/மத். 27:35ஆ, இ) முன்னுரைக் கப்பட்டது. அவர் மரணமடையும் போது கூறிய வார்த்தைகளும் (சங். 22:1/மத். 27:46), அவரது எலும்புகள் முறிக்கப்படாது என்பதும் (சங். 34:20/யோவா. 19:33), அவருடைய விலா உருவப்படும் என்பதும் (சகரி. 12:10/யோவா. 19:34, 37), அவரது அடக்கமும் (ஏசா. 53:9/மத். 27:57-60), அவரது உயிர்த்தெழுதலும் (சங். 16:10/லூக். 24:1-9; அப். 2:25-32), மற்றும் அவர் பரத்துக்கேறுதலும்கூட (சங். 68:18/லூக். 24:50-53) முன்னுரைக்கப்பட்டது.

ஒரு மீட்பர் அல்லது இரட்சகர் வருவார் என்று கூறுவது தீர்க்கதரிசிகளுக்கு ஒப்பீட்டளவில் மிகவும் சுலபமாய் இருந் திருக்கலாம். ஆயினும், அவர்கள் முன்னூறுக்கும் மேற்பட்ட குறிப் பிட்ட விபரங்களை சேர்த்துக் கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது, இது மறுக்க முடியாத ஒரு வடிவமைப்பாகக் கட்டப்பட்டிருப்பது உறுதியாகின்றது.

இந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறின என்பது எதை அர்த்தப்படுத்துகிறதென்று யோசித்துப் பாருங்கள், மனிதனுடைய முன்னறிவும் ஞானமும் அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் நடக்கப் போவதைப் பற்றிக் கூட முழு நிச்சயத்துடன் ஆழ்ந்தறிந்து கூற முடியாததாய் இருக்கின்றது. அரசியல் தலைவர்கள், நாடு முழுவதும் பரவியுள்ள தங்கள் முகவர்களைப் பயன்படுத்தி, சில சமயங்களில் தேர்தல் முடிவுகளை முன்னதாகவே கணிக்க முடிகின்றது! இயேசுவைப் பற்றிய இந்த தீர்க்கதரிசனங்களோ, இன்றிலிருந்து நானூறு வருடங்களுக்குப் பிறகு தலைவராகப் போகின்ற ஒருவருடைய பிறப்பிடம், அவரது வம்சாவழி, அவரது பள்ளிப் பருவம், அவரது ஆட்சிக் கால அளவு, மற்றும் அவர் இறக்கப் போகும் இடம் மற்றும் விதம் ஆகியவை பற்றி முன்னுரைத்தல் போன்றதாக இருக்கின்றது.

உண்மையான தீர்க்கதரிசனத்தைச் சோதித்துப் பார்க்க முடியும், ஏனென்றால் அது எதிர்கால நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துகின்றது. அது

தற்செயலாக நடக்க முடியாத நிகழ்ச்சிகளைக் கொண்டதாயிருக் கின்றது. ஒரு தீர்க்கதரிசனமானது, வரலாற்றுப் பூர்வமாக நிறைவேறும் பொழுதுதான் அதன் சரியான தன்மை காணப்படுகின்றது. ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறுதலைத் தவிர, எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட வேறு எந்த ஆதாரமும் இந்த விவாதத்தை உறுதிப்படுத்த முடியாது. இயேசு தெய்வீகமானவர் என்பதை இது ஒருபுறம் நிரூபிக்கின்றது, மறுபுறத்தில் இந்த தீர்க்கதரிசனங்களை எழுதிய மனிதர்கள் எல்லாரும் ஏவப்பட்டே எழுதினர் என்பதையும் இது நிரூபிக்கின்றது.

## ஏனென்றால் அவரது தெய்வீகத்தின் உரிமைகோருதல், அவரது ஊழியங்களுடன் ஒத்திசைந்துள்ளது

இயேசு தம்மைப் பற்றி தைரியமாகவே உரிமை கோரினார். ஆபிரகாமுக்கு முன்பே தாம் இருப்பதாக அவர் கூறினார் (யோவா. 8:58), உலகம் உண்டாவதற்கு முன்பே தாம் தேவனோடு இருந்ததாக அவர் கூறினார் (யோவா. 17:5, 24), தாம் வானத்திலிருந்து இறங்கி வந்ததாகவும் அவர் கூறினார் (யோவா. 6:38, 62), வானத்திலும் பூமியிலும் தாம் சகல அதிகாரமும் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார் (மத். 28:18). அவர், முன்பிருந்த ஒரு மனிதரின் மறுபிறவியல்ல; மாறாக, அவர் மனித உருவில் பூமிக்கு வந்த தேவன் ஆவார் (யோவா. 1:1-18). அவரது தெய்வீகத்தை மறுப்பவர்கள் பலரும் அவரை வெறுமனே ஒரு “நல்ல” மனிதர் மட்டுமே என்று சொல்லுகின்றனர். ஆயினும் அவர் தாம் உரிமை கோரியதன்படியானவர் இல்லை யென்றால் அவர் ஒரு பொய்யராகவும், எத்தராகவும் அல்லவா இருப்பார்-நிச்சயமாகவே அவர் “நல்ல” மனிதராகக் கூட இருக்க முடியாதே!

அவருடைய உரிமைகோரல்கள் உண்மை என்பதை அவரது ஊழியங்கள் காண்பிக்கின்றன. இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். வேதாகம வரலாற்று ஆசிரியர்கள் அவரது அற்புத ஊழியங் களுக்குச் சாட்சி கொடுத்திருக்கின்றார்கள் (மத். 11:4, 5; யோவா. 20:30, 31). உலக வரலாற்று ஆசிரியர்கள் கூட அவர் அற்புதங்களைச் செய்தார் என்று சாட்சி கொடுத்திருக்கின்றார்கள்.

அவரது ஊழியங்களும் அவரது வார்த்தைகளும் ஒன்றாயிருந்தன.

*"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவா. 8:12அ) என்று அவர் கூறினார்; பிறகு அவர் ஒரு பார்வையற்றவரை வெளிச்சத்தைக் காணும்படி செய்தார் (யோவா. 9:6, 7). "ஜீவ அப்பம் நானே" என்று அவர் கூறினார் (யோவா. 6:35அ), ஐந்து அப்பங்கள் இரண்டு மீன் களைக் கொண்டு ஐயாயிரம் மனிதர்களுக்கு அவர் உணவு கொடுத்தார் (யோவா. 6:10, 11). "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று அவர் கூறினார் (யோவா. 11:25அ); பிறகு அவர் மரித்தோரி லிருந்து லாசருவை உயிரோடு எழுப்பினார் (யோவா. 11:43, 44).*

## ஏனென்றால் அவர் பாவமில்லாத வாழ்க்கை நடத்தினார்

*இயேசுவை அறிந்தவர்கள், அவர் பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்ததாகச் சொல்லுகின்றனர். இந்த மனிதர்கள் தேவனால் ஏவப் பட்டவர்களாயிருந்தனர்!*

> *நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் (எபி. 4:15).*
>
> *அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1 பேதுரு 2:22).*

*அவருடைய வாழ்க்கையைக் கற்றறிந்தவர்கள் அவரை நல்லவர் என்று கருதியிருக்கின்றார்கள் (லூக். 18:18). அவரிடத்தில் குற்றம் கண்டு பிடிக்கத் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்த அவருடைய விரோதிகளும் கூட அவரது நற்பண்பை அறிந்திருந்தார்கள். அவர் அசாதாரணமான ஒரு செயலைச் செய்தார் - அவரைப் பரிசோதித்துப் பார்த்து அவரிடத்தில் பாவம் எதையாவது கண்டு பிடிக்க முடியுமா என்று அவரே அறைகூவல் விடுத்தார் (யோவா. 8:46அ).*

*அவருடைய மரணத்தின் போது கூட அவரது நற்பண்புகள் ஒப்புக் கொள்ளப்பட்டது. பிலாத்துவின் மனைவியுடைய மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:19), பிலாத்துவின் மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:23), ஏரோதின் மதிப்புரையை கவனியுங்கள் (லூக். 23:14), சிலுவையிலறையப்பட்ட கள்ளனின் மதிப்புரையை கவனியுங்கள்*

*(லூக். 23:41), நூற்றுக்கு அதிபதியின் மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:54) மற்றும் யூதாஸின் மதிப்புரையையும் கூட கவனியுங்கள் (மத். 27:4).*

## ஏனென்றால் உலகின் மேல் அவரது வாழ்வு தொடர்ந்து விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

*அநேக நினைவுச் சின்னங்கள் அவரது வாழ்வைக் கனப்படுத்து கின்றன: கர்த்தருடைய நாள் (வெளி. 1:10), கர்த்தருடைய பந்தி (1 கொரி. 11:20-29; மத். 26:26-28), ஞானஸ்நானம் (ரோமர் 6:3-5), மற்றும் நமது நாட்காட்டிகளில் தேதியைக் கணக்கிடும் முறையும் கூட (கி.மு. மற்றும் கி.பி.) எந்த வித கேள்விக்கும் இடமில்லாத வகையில் அவர் உலகத்தின் மாபெரும் மனிதராவார்-மாபெரும் தன்மை என்று மனிதர் குறிப்பிடும் எல்லா தன்மைகளும் கொண்டவராயிருக்கின்றார். அவருக்கு பெரிய பாரம்பரியமோ, முறையான கல்வியோ (யோவா. 7:15), சொத்துக்களோ, அரசியல் அல்லது இராணுவ பலமோ மற்றும் விளையாட்டுத் திறமையோ இவை எதுவும் இருந்ததில்லை; ஆனாலும் கூட, கடந்த இருபது நூற்றாண்டுகளாக மனித குலத்தில் அவர் பெற்றிருக்கின்ற செல்வாக்கைப்பற்றி யார் ஒருவரும் கேள்வியெழுப்ப மாட்டார்கள். அவர் வெறும் மனிதராக மட்டும் இருந்தால், இவ்வுலகமானது அவரை விடப் பெரியவர் ஒருவரை இன்று உருவாக்கியிருக்க முடியாதா? அப்படிச் செய்வதற்கு உதவியாக இரண்டாயிரம் வருடங்களின் முன்னேற்றங்கள் இவ்வுலகில் இருக்கின்றனவே! கற்றலில் உள்ள நமது முன்னேற்றங்களுக்கு மத்தியில், இந்த உலகமானது உண்மையான தலைமைத்துவத்தை எதிர்பார்த்து தவிக்கின்றது. ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவை நோக்க முடியும்; அவரே வழியாக இருக்கின்றார். எல்லா மனிதருக்கும் அவர் எல்லாமுமாக இருந்திருக்கின்றார், இருக்கின்றார். "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்" (ஏசா. 9:6ஆ).*

## முடிவுரை

*உறுதியாகவே, இயேசு, தேவனுடைய குமாரனாக இருக்கின்றார். அவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நம்புவதற்கு, இந்தக் காரணங்களை மறுபடியும் பரிசோதித்துப் பாருங்கள். அவர்*

*இருக்கின்றார் என்று நம்புங்கள், அவர் மூலமாக உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 306 ம் பக்கங்களில்)*

1. *கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியில் இருக்கின்ற சத்தியம் என்ன?*
2. *இயேசுவின் பிறப்பு, வாழ்வு மற்றும் மரணம் ஆகியவை மாபெரும் விபரங்களுடன் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டன. ஒரு சில எடுத்துக்காட்டுகளைக் கொடுக்கவும்.*
3. *இயேசுவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் எதை நிரூபிக்கின்றது?*
4. *இயேசு தம்மைப் பற்றி தைரியமாக, மிகச் சிறந்த வகையில் பல உரிமை கோரல்களைக் கூறினார். அவைகளில் சில யாவை?*
5. *இயேசுவின் ஊழியங்கள் எவ்விதத்தில் அவரது வார்த்தைகளுடன் ஒத்திசைந்திருந்தன?*
6. *இயேசுவின் நற்பண்பு எப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.*
7. *இயேசுவின் வாழ்க்கை எவ்விதத்தில் நமது உலகத்தில் தொடர்ந்து விளைவு ஏற்படுத்துகின்றது?*

## வார்த்தை உதவிகள்

***பரத்துக்கேறுதல்*** - மேலே செல்லுதல், மேலே தூக்கப்படுதல், கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு, மறுபடியும் தேவனோடிருக்கும்படியாக மேலே எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சியே பரத்துக்கேறுதல் ஆகும்.

***தேவப்பண்பு*** - தேவன்; தேவனுடைய இயல்பு; தேவனாக இருத்தல்.

***வம்சாவழி*** - முன்னோர்களின் பட்டியல். இயேசுவின் வம்சா வழியானது (மத். 1:1-16) அவர் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரைப் பற்றிய தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தார் என்பதைக் காண்பித்தது.

***கர்த்தருடைய நாள்*** - புதிய ஏற்பாட்டின் சபையாரால் வாரத்தின்

*முதல் நாள் (ஞாயிற்றுக் கிழமை) என்பது ஆராதனைக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டது (அப். 20:7).*

***கர்த்தருடைய பந்தி*** *- புளிப்பில்லாத அப்பத்தை உண்டு திராட்ச இரசத்தைக் குடிக்கும்படி இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட நினைவுச் சின்னமாகும் (1 கொரி. 11:20, 23-26ஐக் காணவும்). புதிய ஏற்பாட்டின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் இதைக் கடைப்பிடிக்கின்றார்கள்.*

***உயிர்த்தெழுதல்*** *- இறந்து போன நபர் மறுபடியும் உயிர் வாழ்க்கைக்குத் திரும்ப எழுதல், (இயேசுவின்) உயிர்த்தெழுதலானது மரணத்தின்மேல் இயேசு அதிகாரம் உடையவராயிருப்பதற்கு நிரூபணமாகும், மற்றும் அவரின் மேல் விசுவாசம் கொண்டு, அவரைப் பின்பற்றும் யாவரும் இந்த பூமியில் அவர்களின் வாழ்க்கை முடிந்த பிறகு, பரலோகத்தில் அவரோடே கூட என்றென்றும் வாழ முடியும்.*

5

# பரிசுத்த ஆவியானவர் யார்?

"பரிசுத்த ஆவியென்றால் என்ன?" என்பது கேள்வியல்ல, மாறாக, "பரிசுத்த ஆவியானவர் யார்?" என்பதே கேள்வியாகும். இதுவே கேள்வியாக இருக்கின்றது, ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக, ஆளுமைப் பண்புள்ள ஒரு தனி நபராக, தேவத்துவத்தில் மூன்றாம் உறுப்பினராக இருக்கின்றார். அவர் ஒரு சக்தி அல்லது வல்லமை என்பதைக் காட்டிலும் மேலானவராக இருக்கின்றார்; இவர் பரலோகத்தின் ஜீவனுள்ள ஒரு நபராக இருக்கின்றார்.

## இவர் ஒரு நபர்

வேதாகமத்தில் இவரைப் பற்றி நமக்குக் கிடைக்கக் கூடிய தகவல்கள் எல்லாம் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமானவர் என்ற உண்மையையே சுட்டிக் காட்டுகின்றன. பிதாவுக்கும் குமாரனுக்கும் இருக்கின்ற ஆளுமைப் பண்புகள் எல்லாவற்றையும் பெற்றவராகவே இவரும் காணப்படுகின்றார்.

### இவர் ஒரு நபர் என்பதற்குரிய பண்புகளைப் பெற்றிருக்கின்றார்

பரிசுத்த ஆவியானவரின் பண்புகள், இவர் ஒரு சக்தியாக மட்டும் இருப்பதில்லை மாறாக, உயிருள்ள ஒரு நபராகவும், ஒரு தனி நபராக

வும் இருக்கின்றார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன:

*1. இவர் கருத்துக்களை மதிப்பிடும் பண்புகள் கொண்டுள்ளார்:* "... பரிசுத்த ஆவிக்கும் ... நலமாகக் கண்டது" (அப். 15:29அ).

*2. இவர் சிந்தையுள்ளவராயிருக்கின்றார்:* "... இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" (ரோமர் 8:27ஆ).

*3. இவர் சித்தமுள்ளவராய் இருக்கின்றார்:* "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1 கொரி. 12:11).

*4. இவர் அறிவுள்ளவராய் இருக்கின்றார்:* "... அப்படிப் போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான்" (1 கொரி. 2:11ஆ).

*5. இவர் உணர்வுகள் (அன்பு, துக்கம், சந்தோஷம்) உள்ளவராய் இருக்கின்றார்:* "... நீங்களும் என்னோடு கூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" (ரோமர் 15:32ஆ); "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4:30); "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக் கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி" (1 தெச. 1:6).

பரிசுத்த ஆவியானவர் இந்தப் பண்புகளைப் பெற்றிருக்கின்றார் என்ற உண்மையானது, இவர் ஒரு நபராக இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றது.

## இவர் ஒரு நபருக்குரிய செயல்பாடுகளை நிறைவேற்றுகின்றார்

பரிசுத்த ஆவியானவர் வெறுமனே ஒரு சக்தியாக மட்டுமல்லாது, ஒரு நபராகவும் செயல்படுகின்றார்.

இவரால் பின்வரும் செயல்களைச் செய்ய முடியும்:

*1. இவரால் போதித்து நினைப்பூட்ட முடியும்:* "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான்

*உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப் பூட்டுவார்" (யோவா. 14:26).*

*2. இவரால் சாட்சி கொடுக்க முடியும்:* "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்" *(யோவா. 15:26).*

*3. இவர் சத்தியத்திற்குள் வழி நடத்துகின்றார்:* "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" *(யோவா. 16:13இ).*

*4. இவர் பேசுகின்றார்:* "அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல்" *(யோவா. 16:13ஆ; அப். 8:29; 11:12; 1 தீமோ. 4:1 ஆகியவற்றையும் காணவும்).*

*5. இவர் கேட்கின்றார்:* "தாம் கேள்விப்பட்ட யாவையுஞ் சொல்லி," *(யோவா. 16:13இ).*

*6. இவர் அறிவிக்கின்றார்:* "வரப் போகிற காரியங்களை உங் களுக்கு அறிவிப்பார்" *(யோவா. 16:13ஈ).*

*7. இவர் தடை பண்ணுகின்றார்:* "அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்து போனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லா தபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டு" *(அப். 16:6).*

*8. இவர் உயிர்ப்பிக்கின்றார்:* "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" *(ரோமர் 8:11ஆ).*

*9. இவர் வெளிப்படுத்துகின்றார்:* "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" *(1 கொரி. 2:10அ; எபே. 3:3-6ஐயும் காணவும்).*

*10. இவர் ஆராய்ந்தறிகின்றார்:* "அந்த ஆவியானவர் எல்லா வற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" *(1 கொரி. 2:10ஆ).*

*11. இவர் வாக்குத்தத்தம் பண்ணுகின்றார்:* "ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும் படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்ததை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று" *(கலா. 3:14; அப். 2:33ஐக் காணவும்).*

*12. இவர் ஐக்கியமாகின்றார்:* "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினு

டைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக" (2 கொரி. 13:14; பிலி. 2:1ஐயும் காணவும்).

*13. இவர் வேண்டுதல் செய்கின்றார்:* "... ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்; ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்த வான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் ..." (ரோமர் 8:26, 27).

*14. இவர் குறித்துக் காட்டுகின்றார் மற்றும் முன்னறிவிக் கின்றார்:* "தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளை யும் முன்னறிவித்தபோது இன்ன காலத்தைக் குறித்தாரென்பதை யும்..." (1 பேது. 1:11).

*15. இவர் அழைக்கின்றார்:* "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்" (வெளி. 22:17அ).

*16. இவர் நடத்துகின்றார்:* "இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு" (லூக். 4:1); "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14).

மேற் சொல்லப்பட்ட ஒவ்வொரு செயலையும் ஒரு நபரால் செய்ய முடியும், ஆனால் ஒரு சக்தியால் இவற்றைச் செய்ய முடியாது. இவ்விதமாக, பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராகவே காணப்பட வேண்டும்.

## இவர் தவறாக நடத்தப்படக் கூடும்

பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறப்படும் மரியாதைக் குறைவான வார்த்தைகள் அல்லது புண்படுத்தும் வார்த்தைகள் எல்லாம், ஒரு நபரைத் தவறாக நடத்துதலாகவே சொல்லப்படுகின் றன, அவை உயிரற்ற ஒரு வல்லமை அல்லது சக்திக்கு விரோதமான வையாகச் சொல்லப்படுவதில்லை. பின்வரும் வழிகளில் இவர் தவறாக நடத்தப்படக் கூடும்:

*1. இவரைத் தூஷணப்படுத்தக் கூடும்:* "... ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை ... எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது

இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத். 12:31, 32).

2. இவரிடத்தில் பொய் சொல்லக் கூடும்: பேதுரு அவனை நோக்கி: "அனனியாவே, ... பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" (அப். 5:3அ).

3. இவரை எதிர்த்து நிற்கக் கூடும்: "வணங்காக் கழுத்துள்ள வர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர் களே, உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" (அப். 7:51).

4. இவரைத் துக்கப்படுத்தக் கூடும்: "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4:30).

5. இவரை அவமானப்படுத்தவோ அல்லது நிந்திக்கவோ கூடும்: "... கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் ..." (எபி. 10:29).

6. இவரை அவித்துப் போடக் கூடும்: "ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" (1 தெச. 5:19).

பரிசுத்த ஆவியானவர் எப்படியெல்லாம் தவறாக நடத்தப்படக் கூடும் என்பதற்கான கூற்றுக்கள் இவர் ஒரு நபர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. ஒரு வல்லமை அல்லது சக்தியைத் தவறாக நடத்துதல் என்ற செயலானது கவிதை நடை அல்லது உருவக நடை தவிர வழக்கமான முறையில், மேற்கண்ட வகையில் விளக்கப்படுத்துவ தில்லை.மேற்சொன்ன வசனங்களுக்கான சந்தர்ப்பங்கள் உருவக நடை யில் மொழி வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

## இவர் தனிப்பட்டவராய் இருக்கின்றார்

பிதாவோடும் குமாரனோடும் அவர்களது இயல்பு மற்றும் பண்புகளைப் பெற்றவராகப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்டுக் காட்டப்படுவதுடன் இவர் தமக்கே உரிய தனிச் சிறப்பான, தனித் தன்மையுள்ள இருப்பைப் பெற்றிருக்கிறார் என்பது இன்னொரு சுட்டிக் காட்டுதலாயிருக்கின்றது.

இயேசு ஞானஸ்நானம் பெறும்போது அவர் மேல் இவர் இறங்கி வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றார் (யோவா. 1:33). குமாரனானவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறுகையில், ஆவியானவர் அவர் மீது இறங்கினார், மற்றும் பிதாவானவர் பரலோகத்திலிருந்து பேசினார் (மத். 3:16, 17; லூக். 3:21, 22). பிதாவானவர் பரலோகத்தில்

*இருந்தார், குமாரனானவர் பூமியில் இருந்தார், ஆவியானவர் இயேசு வுடன் தங்கியிருக்கும்படி வந்தார்.*

*இயேசுவுக்கு எதிராகப் பேசும்போது ஒருவருக்கு அது மன்னிக்கப்பட முடியும்-ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு விரோத மாகப் பேசும் ஒருவர் மன்னிக்கப்படவே முடியாது (மத். 12:32). இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் ஒரே நபராக இருந்தால், எப்படி ஒருவர் இயேசுவுக்கு எதிராகப் பேசினாலும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பேசாமல் இருக்க முடியும்? இந்த போதனையைக் கொடுப்பதில் இயேசு தங்களுடைய தனித்தன்மையை உணர்ந்திருக்க வேண்டும்.*

*லூக்கா 4:1ல் இயேசு பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டார் என்று கூறப்படுகின்றது, மற்றவர்களும் இதே போல பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது (அப். 6:3, 5; 7:55; 11:24). நடபடிகளில் பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்ட இவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியானவர் என்ற அதே நபராக இருக்கவில்லை என்று நிச்சயமாக நாம் அனைவரும் ஒப்புக் கொள்வோம். இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரும் கூட தனித் தனியானவர்கள் என்பது அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும்.*

*இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவா. 7:39ஆ) என்று யோவான் எழுதினார். இது இயேசு இந்த பூமியில் ஏற்கனவே அப்போஸ்தலர் களுடன் இருக்கும்போது கூறப்பட்டதாகும். பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை என்றால், அவர் இயேசுவைத் தவிர, இன்னொரு வராய்த்தான் இருக்க வேண்டும்.*

*யோவா. 14:26ல் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு "இன்னொரு தேற்றரவாளனை" அனுப்பப்போவதாக சொன்னார். (யோவா. 14:16ன்படி) இவரே பரிசுத்த ஆவியானவர் ஆவார். இயேசுவே அந்தத் தேற்றரவாளனாக இருந்தால் அவர் எப்படி "இன்னொரு" தேற்றரவாளனை அனுப்பியிருக்க முடியும்? அதே போல இயேசுவும் இந்தத் தேற்றரவாளனும் ஒருவரே என்றால் அவர் எப்படி "இன்னொரு" தேற்றரவாளனாக இருக்க முடியும்?*

*இயேசு தாம் போகின்ற வரையில், ஆவியானவரை அனுப்பப் போகிறதில்லை என்று கூறினார் (யோவா. 16:7). மேலும் இயேசு, பரிசுத்த ஆவியானவர் சுயமாய் ஒன்றும் பேச மாட்டார் என்றும், இயேசுவினிடத்தில் கேள்விப்பட்டதையே அவர் பேசுவார் என்றும்*

*கூறினார் (யோவா. 16:13). இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், அவர்கள் இருவரும் இரண்டு தனித் தனி நபர்களாக, பரலோகத்தில் இருக்கின்றவர்கள் என்று சுட்டிக் காட்டுகின்றது.*

## இவர் தெய்வீகமானவர்

*பிதாவோடும் குமாரனோடும் சமமானவராயிருப்பதாகவும், ஒரே நிலையைக் கொண்டிருப்பதாகவும் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்படுகின்றார். மக்கள், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டியிருக்கின்றது (மத். 28:19). இந்த மூன்று பேரும் ஒரே அந்தஸ்து உள்ளவர்களாய் இருக்கின்றார்கள் என்று பவுலும், 2 கொரி. 13:14ல் குறிப்பிட்டார்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக." ஆவியானவர், தேவன் ("பிதா"; 1 கொரி. 8:6), மற்றும் கர்த்தர் ("இயேசு"; 1 கொரி. 8:6) ஆகியோர் ஆவிக்குரிய வரங்களை நடப்பிக்கிறதில் ஒன்றாகவே இருக்கின்றார்கள் (1 கொரி. 12:4-6). இவைகளை ஆவியானவரே நடப்பித்து, தமது சித்தத்தின்படி பகிர்ந்து கொடுக்கிறார் என்று கூறப்படுகின்றது (1 கொரி. 12:11).[1]*

*பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் தனித் தனியானவர்கள், ஒரே இயல்பு கொண்டு, பரலோகத்தில் இருக்கின்ற தனித் தனி நபர்கள் என்பதைப் புதிய ஏற்பாட்டின் ஆதாரமானது தெளிவாகவும் வல்லமையாகவும் காண்பிக்கின்றது. அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவிலும், மனித குலத்திற்கான தங்கள் ஊழியத்திலும் ஒன்றாக இணைந்துள்ளனர்.*

*தேவனுக்கு மட்டுமே உரிய பண்புகள் பரிசுத்த ஆவியானவருக்கும் இருப்பதாகக் காட்டப்படுகின்றன. இவர் பிதாவோடும் குமாரனோடும் பகிர்ந்து கொள்ளுகின்ற ஐந்து பண்புகளைக் கவனியுங்கள்:*

*1. இவர் நித்தியமானவராய் இருக்கின்றார்: நித்திய இயல்பைப் பற்றிக் கூறக்கூடிய வேதவசனங்கள், பின்வருமாறு: (1) பரிசுத்த ஆவியானவர் - "நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச் சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!"*

(எபி. 9:14); (2) பிதாவானவர் - "உமது சிங்காசனம் பூர்வ முதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர்'' (சங். 93:2); மற்றும் (3) இயேசுவானவர் - "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' (எபி. 13:8); "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேது. 1:11).

2. *இவர் எல்லாம் அறிந்தவராய் இருக்கின்றார்:* வேதாகமத்தின் பத்திகளில் இந்த அறிவைப் பற்றிப் பேசப்படுகின்றது: (1) பரிசுத்த ஆவியானவர் - "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்'' (1 கொரி. 2:10); (2) பிதாவானவர் - "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது" (எபி. 4:13); மற்றும் (3) இயேசுவானவர் - ''அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை" (யோவா. 2:24, 25).

3. *இவர் எல்லா வல்லமையும் நிறைந்திருக்கிறார்:* அநேக வேத வசனப்பகுதிகளில், ஒவ்வொன்றின் மேலும் இம்மூவருக்கும் உள்ள வல்லமை குறிப்பிடப்படுகின்றது: (1) பரிசுத்த ஆவியானவர்-"பரிசுத்த ஆவி உன் மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும்'' (லூக். 1:35அ); ''பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்" (லூக். 4:14அ); "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து" (அப். 1:8அ); (2) தேவன்-"தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக். 1:37); மற்றும் (3) இயேசு - "... வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28:18).

4. *இவர் எங்கும் நிறைந்திருக்கிறார்:* எங்கும் நிறைந்திருக்கும் வல்லமை இம்மூவருக்கும் இருக்கின்றது: (1) பரிசுத்த ஆவியானவர் - "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்?" (சங். 139:7அ); (2) பிதாவானவர் - ''தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே" (1 இரா. 8:27அ); "யாவனாகிலும் தன்னை

நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 23:24); மற்றும் (3) இயேசு-"உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:20ஆ).

5. *இவர் படைக்கும் வல்லமை உடையவராயிருக்கிறார்:* வேதாகமத்தின் பத்திகள் தேவத்துவத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் படைப்பவராகச் சித்தரிக்கின்றன: (1) பரிசுத்த ஆவியானவர் - "தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்" (ஆதி. 1:2); (2) பிதாவானவர் - "அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்" (எரே. 51:15); மற்றும் (3) குமாரனானவர் - "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப் பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப் படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ. 1:16).

## முடிவுரை

பரிசுத்த ஆவியானவர், தேவனுக்கு மட்டுமே பயன்படுத்தக் கூடிய சொற்றொடர்களில் விவரிக்கப்படுகின்றார். இந்தச் சொற்றொடர்களிலிருந்து பரிசுத்த ஆவியானவர், பிதாவோடும் குமாரனோடும் தெய்வீக இயல்பைப் பகிர்ந்து கொண்டு, பிதாவோடும் குமாரனோடும் ஒன்றாக இருப்பதை நாம் முடிவு செய்ய இயலும், ஆனாலும் இவர் ஒரு தனிப்பட்ட ஆளுமைத் தன்மை உடையவராய் இருக்கின்றார். வேதாகமத்தின் முக்கியமான மையமான நபராக இவர் விளங்குகின்றார்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 308 ம் பக்கங்களில்)*

1. *"பரிசுத்த ஆவியென்றால் என்ன?" என்பதல்ல மாறாக "பரிசுத்த ஆவியானவர் யார்?" என்பதே கேள்வியாக இருக்க வேண்டியது ஏன் என்பதை விளக்கவும்.*
2. *பரிசுத்த ஆவியானவர் வாழுகின்ற ஒரு "நபராக" இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டும் ஐந்து பண்புடைமைகள் யாவை?*
3. *பரிசுத்த ஆவியானவர் தவறாக நடத்தப்படக் கூடும் என்ற உண்மையான அவரை ஒரு நபர் என்று சுட்டிக் காட்டுவது எப்படி?*
4. *பிதாவோடும் குமாரனோடும் பரிசுத்த ஆவியானவர் பகிர்ந்து கொள்ளும் பண்புகள் யாவை?*

## வார்த்தை உதவிகள்

***பண்புடைமைகள்*** *- தன்மைகள் அல்லது குணநலன்கள். ரோமர் 1:20, "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" என்று கூறுகின்றது.*

***அற்புத வரங்கள்*** *- தேவனால் கொடுக்கப்பட்ட விசேஷ வல்லமைகள்-பாஷைகளில் பேசுதல், குணப்படுத்துதல் மற்றும் தீர்க்கதரிசனம் சொல்லுதல் முதலியன-புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்படுவதற்கு முன்னர் இவைகள் ஆதி சபையாருக்குக் கொடுக்கப்பட்டன. இந்த வரங்கள் இப்போது தேவையில்லை அல்லது இருப்பதில்லை (எபே. 4:5; மத். 28:18-20ஐக் காணவும்).*

## இன்றைய கிறிஸ்தவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை

1. *இவர் பாவம் மற்றும் மரணத்தின் பிரமாணத்திலிருந்து நம்மை விடுவிக்கின்றார் (ரோமர் 8:2-8).*
2. *இவர் நமது உயிர்த்தெழுதலைக் கொண்டுவருவார் (ரோமர் 8:11).*
3. *இவர் நமது ஜெபங்களில் உதவி செய்கிறார் (ரோமர் 8:26; எபே. 6:18).*
4. *இவர் நமக்காக வேண்டுதல் செய்கின்றார் (ரோமர் 8:26, 27).*

5. இவர் நம்மை நடத்துகின்றார் (ரோமர் 8:14).
6. இவர்  மீட்கப்படும் நாளுக்கென்று நம்மை முத்தரிக்கின்றார் (2 கொரி. 1:22; எபே. 1:13, 14; 4:30).
7. இவர் நம்மோடு ஐக்கியமாய் இருக்கின்றார் (2 கொரி. 13:14).
8. இவர் நாம் பிதாவினிடத்தில் சேருவதற்கு வழியாய் இருக்கின்றார் (எபே. 2:18).
9. இவர் உள்ளான மனுஷனைப் பலப்படுத்துகின்றார் (எபே. 3:16).
10. இவர் ஒருமையைக் கொண்டு வருகின்றார் (எபே. 4:3).
11. இவர் நம்மை பரிசுத்தமாக்குகின்றார் (2 தெச. 2:13).

*[1]அற்புத வரங்கள் ஒழிந்து போய் விட்டன. 1 கொரி. 13:8-13ல் கூறப்பட்டுள்ளவைகளைக் கொண்டு நாம் இதைத் தைரியமாய்க் கூற முடியும். 1 கொரிந்தியர் நிருபத்தில் அற்புத வரங்களைப் பற்றிய பவுலின் விவாதத்தை நாம் மூன்று அதிகாரங்களில் பார்க்கின்றோம் (12-14). இந்த விவாதத்தின் நடுவில் அவர், எந்த அற்புத வரத்தைக் காட்டிலும் அன்பு அதிகமான முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிவித்தார் (13:1-13), மாபெரும் வரமாகிய அன்பானது, ஆவிக்குரிய வரங்களை ஒழியச் செய்யும் என்கின்றார். பவுல், "தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், [அற்புத] அறிவானாலும் ஒழிந்துபோம்" என்று சொன்னார். இந்த வரங்களைப் பற்றிப் பவுல், "நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்" (1 கொரி. 13:9, 10) என்று கூறினார். "நிறை வானது வரும்போது" இந்த அற்புத வரங்கள் ஒழிய வேண்டியவைகளாய் இருந்தன.*

*''நிறைவானது'' என்ற வார்த்தை ''முழுமையானது'' என்ற அர்த்தம் தருவதால், இது "குறைவானதற்கு" முரண்பட்டதாக இருக்கின்றது. தேவனு டைய வசனத்தை வாய் மொழியாக வெளிப்படுத்திய அற்புத அறிவு, தீர்க்கதரிசனம் ஆகியவை "குறைவானவை" யாகும். புதிய ஏற்பாட்டில் எழுதிப் பதிவு செய்யப்பட்டவைகளே முழுமையான அல்லது "நிறைவான" வெளிப் பாடாக மனிதருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணருவது இயல்பானதாய் இருக்கின்றது. தேவனுடைய சித்தத்தின் இந்த முழுமையான வெளிப்பாடே "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசமாய்" (யூதா 3) இருக்கின்றது, இது முதல் நூற்றாண்டின் இறுதியில் பொதுவான உடமையாக்கப்பட்டது. ''நிறைவானது'' வந்தபோது,*

*“குறைவானது” ஒழிந்து போயிற்று. புதிய ஏற்பாடானது தேவனுடைய சித்தத்தை முழுவதும் பதிவு செய்து வைத்துள்ளபடியால் (2 தீமோ. 3:16, 17; 2 பேது. 1:3), மற்ற வெளிப்படுத்துதல்களுக்கென்று அற்புத வரங்கள் தொடர்ந்து தேவைப்படுவதில்லை. (பில் சான்டர்ஸ், “இன்றைய நாட்களில் யாரேனும் அற்புத வரங்கள் பெற்றிருக்கிறார்களா?” இன்றைக்கான சத்தியம்* [*ஏப்ரல், 1995*]*: 49.)*

# 6

# தேவன் மனிதரானார்

*புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்), கூறப்படுபவைகளிலேயே ஆச்சரியமான வரலாற்றை நமக்குக் கூறகின்றன. தேவன் எப்படி மனிதராக வந்தார் என்பதை அவை நமக்கு வெளிப்படுத்துகின்றன. அவைகள், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஒரு மனிதராக இந்தப் பூமிக்கு வந்து, நமது பாவங்களுக்காக மரித்து, இரட்சிப்பு அல்லது நமது பாவங்களுக்கு மன்னிப்பு, மற்றும் நித்திய வாழ்வு ஆகியவைகளை-யாரெல்லாம் பெற்றுக் கொள்கின்றார்களோ அவர்களுக்காக-கொண்டு வந்தார் என்று சொல்லுகின்றன.*

*புதிய ஏற்பாடானது இரட்சிப்பின் பாடமாகவே இருக்கின்றதே தவிர, அந்த அளவுக்கு அது ஒரு வரலாற்று புத்தகமாக இருப்பதில்லை,தேவனுடைய குமாரன் நம்மை இரட்சிப்பதற்காக எப்படி நம்மில் ஒருவராகவே வந்தார் என்பதே இதன் இருதயம் போன்ற மையப் பகுதியாக இருக்கின்றது. ஆகவே, மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியவை கர்த்தருடைய வாழ்க்கையைப் பற்றிய பாடங்களாக மட்டும் இல்லை. அவைகள் ஊழியச் செய்திகளை அதிகம் கொண்டுள்ளன. மனிதனுக்கு இரட்சிப்புக் கொண்டு வருதல் தொடர்பான திறவுகோல் நிகழ்ச்சிகளை மட்டும் “தேர்ந்தெடுத்த வரலாறாக” இவைகள் நமக்குத் தருகின்றன. இவ்விதமாக, யோவா. 21:25ல் “இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகள் ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்” என்று கூறப்படுகின்றது.*

*இயேசு நமக்கு இரட்சிப்பை அருளிச் செய்தது பற்றிப் புதிய ஏற்பாட்டில் கூறப்படும் இந்த முக்கிய நிகழ்ச்சிகள் என்ன? இயேசுவைப் பற்றிய சத்தியம் என்ன?*

# இயேசு தேவனாக இருந்தார்/இருக்கின்றார்

*இயேசு தேவனாக இருந்தார்/இருக்கின்றார் என்பதே அவரைப் பற்றி நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய முதலாவது சத்தியமாகும்.*

*இவரது பிறப்பு இவரது தொடக்கமாக இருந்ததா? இல்லை. பெத்லகேமில் நமது கர்த்தர் பிறந்தது இவர் இருக்கத் தொடங்கிய ஒரு நிகழ்ச்சியல்ல. ஒரு இயல்பான உடலை எடுத்து மனிதனாக ஆனதே இவரது பிறப்பாக இருந்தது.*

*"தேவன்" என்பது ஒரு குடும்பப் பெயரைப் போன்றதாகும். உங்கள் குடும்பப் பெயரானது உங்கள் குடும்பத்தின் மற்ற உறுப்பினர் களுடன் உங்களை அடையாளப்படுத்துகின்றது. தனித்தனியான குடும்ப உறுப்பினர்களை ஒரே குடும்ப அலகாக இணைக்கும் இணைப்பாக இது இருக்கின்றது. இதே போலவே, "தேவன்" என்பதும் ஒரு குடும்பப் பெயராக இருக்கின்றது. வேதவசனங்களில் நாம் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன் என்று காணுகின்றோம். இந்த தேவத்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசு நமக்காக மனிதன் ஆனார்.*

*இயேசு நித்திய தேவனாக இருக்கின்றார் என்பதைத் தெளிவாக அறிவிக்கும் ஒரு வேதவசனப் பகுதி யோவா. 1:1-5 ஆகும்.[1] இயேசு தேவனாக இருக்கின்றார் என்று யோவான் சொன்னார், இவர் எப்பொழுதுமே தேவனாகவே இருந்திருக்கின்றார்.*

> *ஆதியிலே வார்த்தை[2] இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியா யிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.*

*இந்த வசனப்பகுதியிலிருந்து வருகின்ற நான்கு மாபெரும் சத்தியங்களை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது தேவை:*

*(1) இயேசு படைக்கப்பட்டவரல்ல என்று நாம் காணுகின்றோம்: இயேசு முன்பே இருந்திருக்காவிட்டால் இவர் எப்படி ஒரு மனிதராக வந்திருக்க முடியும்? வேறு எந்த நபரிடத்திலும் இவரது பிறப்பு மற்றும்*

தொடக்கம் பற்றிய இந்த வித்தியாசத்தை நாம் காணவோ அல்லது அந்த நபர் கர்ப்பம் தரிக்கையில் அவரது வாழ்வு தொடங்கவில்லை என்று கூறவோ முடியாது, ஆனால் இயேசுவைப் பற்றி இவ்வாறு நாம் கூற முடியும். இவர் பிறக்கும் போதோ அல்லது மரித்தோரிலிருந்து உயிர்த்த போதுதானோ தேவனுடைய குமாரனாகவில்லை. இவர் தேவனாக, துவக்கம் என்ற ஒன்றில்லாத உயர்வானவராக இருக்கின்றார். இவர் எப்பொழுதுமே இருந்திருக்கின்றார், இனி எப்பொழுதுமே இருப்பார்.

இவர், உலகமுண்டாவதற்கு முன்பு பிதாவோடு தமக்கிருந்த மகிமையைப் பற்றிப் பேசினார் (யோவா. 17:5). இவர், "... நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று ... நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன் ..." (யோவா. 16:27, 28) என்று கூறினார். மேலும் இவர், "பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால் ..." (யோவா. 17:24அ) என்றும் கூறினார். மற்ற ஒவ்வொரு நபருமே, இயல்பான பிறப்பினால் வாழ்க்கையில் நுழைகின்றனர், ஆனால் இயேசுவோ நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் அறியாதவராய் இருக்கின்றார் (எபி. 7:3). இவர் முற்றிலும் நித்தியமானவர் மற்றும் முற்றிலும் தேவனானவர்.

நம்மைப் போலின்றி, இவர் தாம் பிறப்பதையும், வாழ்க்கை அனுபவத்தில் பிரவேசிப்பதையும் தாமே தேர்ந்து கொண்டார். இவர் பூமியில் தமது வாழ்வின் போது, தமது தெய்வீகத்தை ஒதுக்கி வைத்துவிடவில்லை, ஆனால் தேவன் என்ற தமது பண்பு நலன்களை சுயமாகப் பயன்படுத்துவதை மட்டுமே ஒதுக்கி வைத்தார். எந்த நேரத்திலும், இவர் தமது எந்த தெய்வீக வல்லமையையும் பெற்றிருக்கவும், தமக்கிருந்த தெய்வீகத் தேர்ந்து கொள்ளுதல்களைப் பயன்படுத்தவும் முடிந்திருந்தது (பிலி. 2:6).

(2) தேவன் இந்த உலகத்தை இயேசுவின் மூலமாகவே படைத்தார் என்று நாம் காணுகின்றோம். இவரே இந்த அண்டம் முழுவதற்கும் கர்த்தராக இருக்கின்றார். 1 கொரி. 8:6 இதைக் கூறுகின்றது: "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." கொலோ. 1:16ம் இதைக் கூறுகின்றது: "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும்

*காணப்படாதவைகளுமாகிய சகல வஸ்துக்களும், சிங்காசனங் களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக் கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது."*

*(3) இயேசு உயிருள்ளவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கிறார் என்றும், மரித்தவர்களை உயிர்ப்பிக்கவும் இவரால் முடியுமென்றும் நாம் காணுகின்றோம் (யோவா. 11:25ஐக் காணவும்). இவரே ஜீவனைப் படைப்பவராக இருக்கின்றார்.*

*(4) இவரே ஜீவனுக்கும் மரணத்திற்கும் கர்த்தராக இருக்கின்றார் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். இவர் எல்லாவற்றையும் படைத்து, எல்லாவற்றையும் பராமரித்து, ஜீவனைக் கொடுத்து, மரணத்தின் மேல் ஆளுகை செய்கின்றவராய் இருக்கின்றார்.*

*கர்த்தருடைய பூமிக்குரிய வாழ்க்கையைப் பற்றிய ஒவ்வொன் றையும் நாம் புரிந்து கொள்ள முடியுமா? ஐயத்திற்கிடமின்றி நம்மால் முடியாது. மனிதன் எப்படி தேவனை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்? ஒரு சத்தியத்தை விசுவாசிப்பதற்கு அதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டுவதில்லை. தேவன் இந்த உலகத்தை எப்படிப் படைத்தார் என்று நான் புரிந்து கொள்ளவில்லை, ஆனால் அவர் அதைப் படைத்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன். இயேசு மரித்தோரிலிருந்து எவ்விதம் எழுந்தார் என்று நான் புரிந்து கொள்ளுவதில்லை, ஆனால் இவர் அதைச் செய்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன். அதே போலவே, தேவனாகிய இயேசு கிறிஸ்து எப்படி மனிதனாக முடிந்தது என்று நான் புரிந்து கொள்ளவில்லை, ஆனால் இவர் அதைச் செய்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன்.*

## தேவனுடைய குமாரனாகிய இயேசு மனிதரானார்

*இயேசுவைப் பற்றி நாம் சிந்திக்கத் தேவையான அடுத்த சத்தியம், அவர் முழுமையாகவே மனிதராக வந்தார் என்பதாகும். இந்த சத்தியம் நமது சிந்தனையில் உட்புக அனுமதிப்போம்; தேவனுடைய குமாரனாகிய இயேசு மாம்சத்தில் வந்தார்! இயேசு, தேவனுடைய குமாரனாக இருந்தார், இருக்கின்றார், இனி எப்போதும் இருப்பார்; ஆனால் இவரது பிறப்பின்போது இவர் மனுஷ குமாரனானார்.*

*இயேசு பூமிக்கு வருவதற்காகப் பரலோகத்தை விட்டது எப்படி என்று பவுல் விளக்கப்படுத்தினார் (பிலி. 2:5-8). இயேசு நம்மைப் போல் ஒருவராவதற்கு பரலோகத்திலிருந்து எப்படிக் கீழே வந்தார்*

என்பதைக் கவனியுங்கள்.

முதலாவதாக, இவர் பரலோகத்தை விட்டார். இவர் தமது பிதாவின் பிரசன்னத்திலிருக்கும் நிறைவான அன்பை விட்டார். இவர் பகைமை நிலவாத ஒரு இடத்திலிருந்து வெளியேறி வந்தார்-விரோதம், பொறாமை மற்றும் சந்தேகம் ஆகியவை இல்லாத இடம் அது. இவர் பரலோகத்தின் அழகுமிக்க இணக்கத்தை விட்டு வந்தார்-அந்த இடம், கருத்து வேறுபாடு, முரண்பாடுகள் அல்லது விவாதங்கள் ஆகியவை இல்லாத ஒரு இடமாகும், தவறான புரிந்து கொள்ளுதலோ அல்லது குழப்பமோ இல்லாத ஒரு இடமாகும். இவர் பரலோகத்தின் ஏராளமான ஆசீர்வாதங்களை விட்டு வந்தார். நிதிப் பற்றாக் குறையோ, ஏழ்மையினால் ஒருவர் பாதிக்கப்படும் நிலைமையோ அல்லது ஒருவராவது பசி தாகத்துடன் இருக்கும் நிலைமையோ இவை எதுவும் இல்லாத ஓரிடத்தை விட்டு வர இவர் தேர்ந்து கொண்டார்.

இரண்டாவதாக, இவர் மனிதரானார். இவரது பிறப்பு இவரின் தோற்றத்தைக் குறிப்பதில்லை, ஆனால் காலத்தின் மேடையில் இவர் மனிதராகத் தோன்றியதையே குறிக்கின்றது. நித்தியமும், காலமும் சந்திக்கும் இடமாக தெய்வீகமும் மனுஷீகமும் இணைந்தவராக, பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இணைப்பாக இயேசு விளங்கு கின்றார். பிறப்பதற்கு மட்டுமின்றி, முழுமையான மனிதராயிருந்து மரணமடையவும் இவர் சம்மதித்தார். தேவனாகவே இவர் மனித ரானார். இவர் தேவனுடைய குமாரனாயிருந்தவர், ஆனால் மனுஷ குமாரனானார்.[3]

இது கிறிஸ்தவத்தின் மாபெரும் சத்தியமாய் இருக்கின்றது. இந்த சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்க முடியுமென்றால், கிறிஸ்தவத்தில் உள்ள மற்ற ஒவ்வொரு சத்தியத்தையும் நீங்கள் விசுவாசிக்க முடியும். ஆம், தேவனாக இருந்தவரே நாசரேத்தூர் இயேசு என்ற மனிதர் ஆனார் என்பதே கிறிஸ்தவத்தில் உள்ள இடறலடையக் கூடிய சத்தியமாகும்-இவர் தமது தெய்வீகத்தை இழந்து விடாமல் மனித உருவெடுத்தார், அதன் மூலம் இவர் உண்மையாகவும் முழுமை யாகவும் தேவனாக மற்றும் மனிதராக இருந்தார். கிறிஸ்தவத்தின் இந்தப் பகுதியை விசுவாசிக்கும் எவரும் இதன் மற்ற பகுதிகளை விசுவாசிப்பதில் எவ்வித இடறலும் அடைவதில்லை.

யோவான், “அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம் பண்ணினார்” (யோவா. 1:14அ) என்று எழுதினார். வேறு வார்த்தை களில் சொல்லுவதானால்,தேவன் மனிதரானார்; தெய்வீக மகன் ஒரு யூதரானார்; சர்வ வல்லமையுள்ளவர் இப்பூமியில் உதவியற்ற ஒரு

*குழந்தையாகி, தனது படுக்கையில் படுத்திருப்பதைத் தவிர எதுவும் செய்ய இயலாதவராகி, திறந்த விழிகளுடன் பார்த்து, வளைந்து நெளிந்து மற்றும் சத்தமிட்டுக் கொண்டிருந்தார். மற்ற குழந்தைகளைப் போலவே இவருக்கும் உணவு ஊட்டப்படவும், உடைகள் மாற்றப் படவும், பேசுவதற்குக் கற்றுக் கொடுக்கவும் தேவையாயிருந்தது. இது ஒரு மாயையோ அல்லது வஞ்சனையோ அல்ல; தேவகுமாரனுடைய குழந்தைப் பருவம் ஒரு உண்மை நிகழ்ச்சியாகும். இதைப் பற்றி நீங்கள் எவ்வளவு அதிகமாய்ச் சிந்திக்கின்றீர்களோ, அவ்வளவு அதிகமாய் இது ஆச்சரியப்படக் கூடியதாய் ஆகின்றது. இந்தத் திரு அவதாரத்தைப் பற்றி மக்கள் தங்கள் தவறான நம்பிக்கையாலும்-அல்லது குறைந்த பட்சம் போதிய நம்பிக்கை இல்லாமையாலும்-சுவிசேஷ வரலாற்றின் மற்ற சத்தியங்களை நம்புவதில் சிரமம் அடைகின்றார்கள். இந்தத் திரு அவதாரமானது உண்மை என்று புரிந்து கொள்ளப்பட்டு விட்டால், மற்ற சிரமங்கள் யாவும் நீங்கி விடுகின்றன.[4]*

*மூன்றாவதாக, இவர் மனிதர்களுக்கு ஊழியக்காரராக வந்தார். இவர் அரண்மனையில் ஒரு அரசராக வாழவில்லை, ஆனால் ஏழ்மை யில் ஒரு ஊழியக்காரராக வாழ்ந்தார். இவர் ஊழியம் பெறும்படிக்கு வராமல், ஊழியம் செய்வதற்கென்றே வந்தார். தேவன் எப்படி யிருக்கிறார் என்றும் உண்மையான மனிதத்துவம் எப்படி இருக்க வேண்டும் என்றும் காண்பிப்பதற்காகவே இவர் வந்தார் (மாற். 10:45).*

*நான்காவதாக, இவர் தம்மை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். இவர் மரணத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுக்காமல் முழுமையான மனிதராக முடியாதிருந்தது. மனிதரோடு தம்மை நிறைவாகவே அடையாளப்படுத்திக் கொண்டார். மிகவும் மோசமான மரணத்திற்கு, சிலுவையின் மீது அடையும் மரணத்திற்குக் கூட தம்மை இவர் ஒப்புக் கொடுத்தார். நான் என்னுடைய தூக்கத்திலேயே மரிக்க விரும்பு கின்றேன். உங்களைப் பற்றிய நிலை என்ன? இந்த வகையில் நாம் இயேசுவைப் போல் இருப்பதில்லை. சித்திரவதையும், வலியும் மிகுந்த ஒரு மரணத்திற்கு இவர்-விருப்பத்துடன், சுயமாக எவ்விதமான வற்புறுத்துதலுமின்றி-தம்மை ஒப்புக் கொடுத்தார்.*

## இவர் தேவ-மனிதராக நம் மத்தியில் வாழ்ந்தார்

*இயேசுவைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய இன்னொரு சத்தியம், இவர் தேவ-மனிதராக நம்மிடையே வாழ்ந்தார் என்பதேயாகும்.*

*தேவ-மனிதராக இப்பூமியில் வாழ்வது என்பது வழக்கத்திற்கு*

மாறானதாயிருக்கும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடும். தேவ-மனிதர் என்பவர் மற்ற எல்லா மக்களிலும் இருந்து மாறுபட்டவராய் இருக்கக் கூடும். இவ்வுலகில் வாழ்ந்த எந்த மனிதருக்கும் மேலானவராகவே இவரது வாழ்வு இருந்தது என்பதை மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய நற்செய்தி புத்தகங்களில் நாம் காணுவதில் வியப்படையக் கூடாது.

தேவன் மனிதரானார் என்றால் ஒரு விசேஷித்த பிறப்பு தேவையாய் இருந்திருக்கும். இவர் அப்படிப்பட்ட பிறப்பையே பெற்றிருந்தார்; மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோரின் நற்செய்திப் புத்தகங்களில் மரியாள் என்ற கன்னிப் பெண்ணிடத்தில் இவர் பிறந்ததாகக் கூறப்படுகின்றது. இவர் பூமிக்குரிய ஒரு தாயைப் பெற்றிருந்தார் ஆனால் இவருக்கு பூமிக்குரிய தகப்பன் யாரும் இல்லை, ஏனென்றால் இவர் பரிசுத்த ஆவியானவரால் கருத்தரிக்கப் பட்டார் (மத். 1:20).

இவரது வாழ்க்கையானது அழியக் கூடிய மனிதனிடத்திலிருந்து வந்திராத தெய்வீக உபதேசத்தினால் அடையாளப் படுத்தப்பட்டு, முழு நிறைவானதாயிருக்கும் என்றும் நாம் எதிர்பார்க்கக் கூடும். இவர் பேசியதைப் போல வேறு எவரும் பேசியதில்லை என்று நாம் படிப்பதில் (யோவா. 7:46) வியப்பேதும் இல்லை. இவரைச் சந்தித்த மற்றும் இவரது உபதேசத்தைக் கேட்ட மக்கள் அனைவரும் இவரது வாழ்வு மற்றும் செய்தியைக் குறித்து மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இவர் மாம்சத்தில் வந்த தேவனாயிருப்பாரென்றால், மனிதத் திறமைகளுக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் மற்றும் புதுமைகளினால் இவர் தமது வல்லமையை வெளிப்படுத்தியது பற்றி நாம் ஏன் ஆச்சரி யப்பட வேண்டும்? இவரது தெளிவான அற்புதங்கள், இவருடைய விரோதிகளாலேயே கூட, இயற்கையின் விதிகளுக்கு அப்பாற்பட்ட வையாக மதிக்கப்பட்டன என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. இவர் மரித்தவனை உயிரோடு எழுப்பினார் (யோவா. 11:43, 44). குருடனைக் குணமாக்கினார் (மாற். 8), அப்பத்தையும், மீனையும் பலுகச் செய்தார் (யோவா. 6). இப்படிப்பட்ட வல்லமையை இவர் பெற்றிருந்தது நமக்கு விநோதமாயிருக்கக் கூடாது. இவர் எல்லாவற்றையும் படைத்து அவைகளைப் பராமரிக்கின்றவர் அல்லவா?

உலக வரலாற்றில் இவரது மரணம் ஒரு வகையானது என்று நாம் எதிர்பார்ப்பதில்லையா? தேவன் ஒரு சிலுவையில் மரிப்பது என்பது எல்லாக் காலங்களிலும் ஆச்சரியமான ஒரு நிகழ்ச்சியல்லவா? நற்செய்திப் புத்தகங்கள் இப்படி நடந்ததாகவே காண்பிக்கின்றன.

*இயேசுவின் மரணத்தின் போது, வானம் கறுத்தது, பூமியதிர்ச்சி ஏற்பட்டது, தேவாலயத்தின் திரைச் சீலை கிழிந்தது, கல்லறைகள் திறந்தன, மரித்திருந்த அநேக பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்து இவர் உயிர்த்தெழுந்த பின்பும் கூட எருசலேமில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள் (மத். 27:50-53). தேவ-மனிதர் மரித்தபோது, ஒரு விசேஷ நிகழ்ச்சி-உலகம் உண்டான நாள் முதலாய் திட்டமிடப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சி-நடந்தேறியது.*

*தேவ-மனிதருக்கு மரணத்தின் மீதும் வல்லமை உண்டு என்று நாம் எதிர்பார்ப்பதில்லையா? இவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரே. இவரது வாழ்வைப் பற்றிக் கூறப்பட்டுள்ள தெளிவான சத்தியங்களில் இதுவும் ஒரு சத்தியமாகும். சுவிசேஷ எழுத்தாளர்கள் நான்கு பேருமே இவரது உயிர்த்தெழுதலை மாபெரும் விபரங்களுடன் விளக்கப்படுத்துகின்றார்கள். இவர் நமது பாவங்களுக்காகத் தம்மையே கொடுத்தார், ஆனால் இவர் உண்மையிலேயே தெய்வீகமானவர் என்பதை நாம் அறிந்து கொள்ளும்படியாக மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார்.*

## முடிவுரை

*இயேசுவைப் பற்றி நாம் மறக்க முடியாத மூன்று சத்தியங்கள் இங்கு இருக்கின்றன: இவர் தேவனாக இருந்தார், இருக்கின்றார், இவர் மனிதரானார், இவர் நம் மத்தியில் தேவ-மனிதராக வாழ்ந்தார்.*

*இயேசுவைப் பற்றிய இந்த மூன்று சத்தியங்கள் நம்மை இரண்டு வழிகளில் ஊக்கப்படுத்த முடியும். முதலாவது, இவைகள் நமது இரட்சகர், உதவியற்ற ஒரு மனிதரல்ல, ஆனால் தேவன்-எல்லாம் வல்லவர், நித்தியமானவர், படைத்து பராமரிக்கின்ற தேவன் என்பதை நமக்கு நினைப்பூட்டுகின்றன.*

*இரண்டாவது, இவருடைய முன்னிருந்த நிலையில், மனித குலத்திற்கான இவரது அன்பின் சத்தியத்தை நாம் காணுகின்றோம். இவர் பூமிக்கு வந்து நமது பாவங்களுக்காக மரித்தது நமது இரட்சிப்புக்கான ஒரே நம்பிக்கையைத் தருவதற்காகவே. இயேசு இங்கு வரவும், நமக்கு அந்த நம்பிக்கையைத் தரவும் சித்தமானார். நமது இரட்சிப்புக்காக இவர் தம்மையே தந்தார், ஆனால் பூமியில் உள்ள மக்கள் அந்த செய்தியை ஏற்று இரட்சிக்கப்படுவார்களா? ஒரு சிறிய பதில் செயலுக்காகவே இயேசு எல்லாவற்றையும் விட்டு விட்டாரா? இயேசு நமக்காகவே இந்த இடர்ப்பாட்டை*

ஏற்றுக்கொள்ளச் சித்தமானார். வேறு எவரும் நம்மை இரட்சிக்க முடியாது. இவர் வந்திருக்கவில்லையென்றால், நாம் நம்பிக்கையற்ற வர்களாகவே இருந்திருப்போம்.

ஒரு எறும்பாக நீங்கள் ஆவது பற்றிக் கற்பனை செய்ய உங்களால் முடியுமா? மனிதராக இருக்கும் நிலையில் உங்களுக்கிருக்கும் அநேக செல்வங்களான உங்கள் மனித உடல், உங்கள் பலம் மற்றும் உங்கள் திறமைகள் ஆகியவற்றை நீங்கள் விட்டுவிட வேண்டியிருக்கும். ஒரு எறும்புக்கு உள்ள வரையறைக்குள் நீங்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும். இயேசு ஒரு எறும்பாக ஆகவில்லை, ஆனால் பரலோகத்தில் இவருக்குள்ள மேன்மையான நிலையில் இருந்து இறங்கி, பலஸ்தீனத்தின் ஒரு மனிதராக இவர் ஆனதென்பது, ஒரு மனிதன் எறும்பாக ஆகும் செயலை விடவும் எவ்வளவோ மேலான தாழ்மையுடைய செயலாகும். ஆம், நாம் தேவனுடைய பிள்ளைகளா கும்படி இயேசு மனிதரானார்.[5]

இயேசு நமக்காகச் செய்த இந்தச் செயலுக்காக நாம் களிகூர்ந்து, இப்பொழுதே இவருக்குக் கீழ்ப்படியவும், இவரைப் பின்பற்றவும் தீர்மானம் செய்வோம்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 309 ம் பக்கங்களில்)*

1. புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் வெளிப்படுத்துவது என்ன?
2. இயேசுவின் பிறப்பு அவரது தொடக்கமாய் இருந்ததா?
3. யோவான் 1:1-5ல் இருந்து வருகின்ற நான்கு மாபெரும் சத்தியங்களைப் பட்டியலிடுக.
4. இயேசு நம்மைப்போல் ஒருவர் ஆனபோது இறங்கி வந்த நான்கு படிகள் யாவை?
5. கிறிஸ்தவத்தின் மையமாக இருக்கும் சத்தியத்தை நீங்கள் விசுவாசித்தால் மற்ற ஒவ்வொரு சத்தியத்தையும் உங்களால் விசுவாசிக்க முடியும். அந்த மையமான சத்தியம் எது?
6. இயேசுவின் பிறப்பு எவ்விதத்தில் ஒரு விசேஷித்த பிறப்பாய் இருந்தது?
7. இயேசுவைப் பற்றிய எந்த மூன்று சத்தியங்கள் எப்போதுமே மறக்கக் கூடாததாய் இருக்கின்றன?
8. ஒரு மனிதன் ஒரு எறும்பாவதைக் காட்டிலும் இயேசு

*மனிதரானது எவ்வளவு பெரிய அளவில் தாழ்மையுள்ளதாய் இருந்தது?*

## வார்த்தை உதவிகள்

***திரு அவதாரம்*** *- தேவகுமாரன் மனித உடலில் தோற்றம் அளித்த நிகழ்ச்சி; இயேசு ஒரு மனிதனாக பூமியில் வாழும்படி வந்த நிகழ்ச்சி.*

***வாசம் பண்ணுதல்*** *- பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்குள் வாசம் பண்ணுதல் அல்லது வாழுதல் போல உள்ளாக வாழுதல் (1 கொரி. 6:19, 20).*

***முன்பிருந்த நிலை*** *- உலகம் உண்டாவதற்கு முன்பே உயிர் வாழ்ந்திருத்தல், இது தேவத்துவத்திற்கு மட்டுமே உள்ள இயல்பாகும் (பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், மற்றும் ஆவியான வராகிய தேவன்). இயேசு மனிதராவதற்கு முன்பே இருந்திருக்கிறார். இவர் எப்போதுமே இருந்த, இருக்கின்ற இனி இருக்கப்போகின்ற நித்தியமானவர் ஆவார் (யோவா. 1:1-11ஐக் காணவும்).*

[1]வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து யோவான் தமது நற்செய்தியைத் தொடங்குகின்றார். இவர் நித்தியமான தேவனில் இருந்து தொடங்குகின்றார். [2]"Logos என்பது பற்றி அலெக்சான்டரியாவைச் சேர்ந்த பைலோ அதிகம் கூறியிருக்கின்றார், அவரது அமைப்பு முறையில் இது தேவனுக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட கொள்கையாக உள்ளது, ஆனால் இந்த Logos மாம்சமாகும் சாத்தியக் கூற்றை அவர் மறுத்தார். Logos மாம்சமாயிற்று என்று யோவான் கூறும்பொழுது, இவர் பைலோ கூறியதிலிருந்து ஒரு மாறுபட்ட Logosஐ முன் வைக்கிறார் என்பது தெளிவாகின்றது. தனது எல்லா மாபெரும் கல்வியறிவிலிருந்தும், <u>மனிதரிடை</u>யே வாசம் பண்ணும் Logos ஒன்றை மனிதரைச் செயல்படும்படி இயக்கி, மனிதர்கள் தேவனுடைய குமாரர்கள் ஆவதற்குரிய பலத்தைக் கொடுக்கும் வார்த்தை ஒன்றை முன்வைக்க முடியாத நிலையிலேயே பைலோ இருந்தார். தற்கால கிரேக்க உலகத்தில் இது ஒரு புதுப் பொருளாயிருந்தது" (Donald Guthrie, *A Shorter Life of Christ,* [Grand Rapids; Mich.: Zondervan, 1970], 73). [3]"தேவன் மனிதனுக்குள் வந்து வாசம்பண்ணும் நிகழ்ச்சியல்ல. அப்படிப்பட்டவைகள் நிறைய இருந்துள்ளன. மனிதன் தெய்வ நிலைக்கு உயர்ந்த நிகழ்ச்சியுமல்ல. தேவனை நம்பாத கூட்டத்தாரிடையே இப்படிப்பட்ட அநேக புராணக் கதைகள் உண்டு; ஆனால் தேவனும் மனித

*னும் இரு இயல்புகளையும் ஒரு நபருக்குள் இணைத்த இந்த நிகழ்ச்சியானது முற்றாகப் புரிந்து கொள்ள முடியாததாகவும், அற்புதமாகவும், விளக்கிக் கூறக்கூடிய சாத்தியக் கூறுகளைத் திகைப்படையச் செய்வதாகவும் இருக்கின்றது”* (G. Campell Morgan, *The Crises of the Christ* [Old Tappan, N.J.: Fleming H. Revell Co., 1936], 79). [4]J.I. Packer, *Knowing God* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1973), 46. [5]*“ஒவ்வொன்றையும் அறிந்தவரும், இந்த அண்டத்தையும் படைத்தவருமாகிய நித்தியமானவர், ஒரு மனிதராக ஆனதோடு மட்டுமின்றி (அதற்கு முன்) ஒரு குழந்தையாகவும், அதற்கு முன் ஒரு பெண்ணின் உடலுக்குள்ளும் (கருவிலும்) இருந்தார். இந்த இழிவை நீங்கள் உணர வேண்டுமென்றால், நீங்கள் ஒரு ஓடற்ற நத்தையாகவோ அல்லது நண்டாகவோ ஆனால் எப்படியிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்”* (C.S. Lewis, *Mere Christianity*, rev. ed. [New York: Macmillan Publishing Co., 1952], 155).

# 7

# இயேசுவை நாம் எவ்விதம் கண்ணோக்குகின்றோம்

பல்கலைக் கழக மாணவர்களுக்கு அடிக்கடி ஆராய்ச்சிப் பாடத்திட்டங்கள் மேற்கொள்ளும்படியாக அறிவுறுத்தப்படுகின்றது. இந்த ஆராய்ச்சியை எப்பொழுதும் அவர்கள் மகிழ்ச்சியுடன் செய்வதில்லை. ஒரு வேளை இந்த ஆராய்ச்சிப் படிப்பைக் குறித்த தான, அவர்களுடைய இந்த நடக்கைக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். முதலாவது, இந்த ஆராய்ச்சி வேலை பெரும்பாலும் கடினமானதாக இருக்கின்றது. யாரோ ஒருவர், “படிப்பதை நான் மகிழ்வுடன் அனுபவிப்பதில்லை, ஆனால் படித்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றேன்” என்று சொல்லியிருக்கின்றார். அநேக மாணவர்கள் ஆராய்ச்சியைச் செய்வதில் சந்தோஷம் அடைவதில்லை, ஆனால் ஆராய்ச்சியை செய்து முடித்திருப்பதில் அவர்கள் சந்தோஷம் அடைகின்றனர். இரண்டாவதாக, பெரும்பான்மையான ஆராய்ச்சிகள் திறந்த முடிவுள்ளவையாக இருக்கின்றன. ஆராய்ச்சிகள் யாவும், நாம் அறிந்துள்ளவற்றையும், நாம் அறியாதவற்றையும் வகைப்படுத்துகின்றன - சில சமயங்களில் நாம் அறியாதவைகள், நாம் அறிந்துள்ளவற்றை விட அதிகம் தெளிவாக உள்ளன. சில ஆராய்ச்சித் திட்டங்களை முடிக்கும்போது, ஒரு மாணவர், “இந்த ஆராய்ச்சித் திட்டத்தை தொடங்கு முன் இந்தப் பாடத்தைப் பற்றி நான் எதுவும் அறியாதிருந்தேன். இப்பொழுதோ இந்த ஆராய்ச்சித் திட்டத்தை முடித்திருக்கையில் இந்தப் பாடத்தைப் பற்றி ஒருவருமே ஒன்றும் அறியாதிருக்கிறார்கள் என்று அறிந்திருக்கின்றேன்'' என்று கூற

முடிகின்றது. இப்படிப்பட்ட ஒரு முடிவானது மிகவும் நம்பிக்கை யிழக்க வைக்கக் கூடியதாக இருக்கக் கூடும்.

சில திறவுகோல் பாடங்களைப் பற்றிய உண்மையை அறியவே நாம் எல்லாரும் விரும்புகின்றோம். அவைகளைப் பற்றிய திறந்த முடிவுகளையும், முடிவற்ற விவாதங்களையும் வைத்து அவைகளின் மூலம் நாம் திருப்தியடைவதில்லை. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பாடத்தில், இது விசேஷித்த வகையில் உண்மையாய் இருக்கின்றது, அவரைப் பற்றிய யாரோ ஒருவரது கருத்தையோ, அல்லது அவரைப் பற்றிய தெளிவற்ற பாடங்களின் விவாதத்தையோ நாம் கேட்க விரும்புவதில்லை; அவரைப் பற்றிய சத்தியத்தை அறிந்து கொள்ளவே நாம் விரும்புகின்றோம். அவரைப் பற்றிய நமது ஆழமான கேள்விகள் குறிப்பானவைகளாகவும், கருத்தை நோக்கியவைகளாகவும் இருக் கின்றன: இயேசு யார்? மெய்யாகவே அவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றாரா? வாழ்க்கை மற்றும் இரட்சிப்பைக் குறித்து அவர் என்ன கூறுகின்றார்?

இந்த உலகத்தில் வேதாகமம் ஒன்று மட்டுமே உண்மையில் மிகச் சரியான புத்தகமாய் இருக்கின்றது. தேவன் தமது உபதேசங்களைப் பற்றி நாம் நிச்சயப் படுத்திக் கொள்வதற்காகவே இந்தப் புத்தகத்தை நமக்குக் கொடுத்திருக்கின்றார் (2 பேது. 1:3). இயேசுவைப் பற்றி முடிவெடுக்காமல் நாம் வாழ்க்கை நடத்துவதை தேவன் விரும்புவ தில்லை. இயேசு யார் என்பதையும், அவர் என்ன செய்ய வந்தார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். அவரைப் பற்றிய முழுமையான உண்மையை நாம் அறிந்து, அதன் மூலம் நம்பிக்கை நிறைந்த வாழ்க்கையைக் கட்டி எழுப்பவும், சத்தியத்தின்மேல் உறுதிப்பாட்டைக் கொள்ளவுமே அவர் விரும்புகின்றார்.

இயேசுவைப் பற்றி நாம் பெற வேண்டிய அதிகாரப் பூர்வமான ஒரே சித்தரிப்பை வேதாகமம் நமக்குத் தருகின்றது. அவர் யார் என்பதை அது நமக்கு இரண்டு வழிகளில் கூறுகின்றது: முதலாவதாக, அவர் வேதாகமத்தில் எப்படி அழைக்கப்படுகின்றார் என்பதைக் கவனிக்கையில் அவர் யார் என்று நாம் காணுகின்றோம். இரண்டா வதாக அவருக்கு உரியதான குணாதிசயங்களை நாம் உற்று நோக்கு கையில் அவர் யார் என்று நாம் காணுகின்றோம்.

வேதாகமத்தில் அவர் எப்படி அழைக்கப்படுகின்றார் என்பதை ஜாக்கிரதையுடன் கவனிப்போம். நமக்கு மிகவும் நம்பிக்கையுள்ள ஒருவரால், இன்னொரு மனிதர், பிரசங்கியார் என்றும் போதகர்

*என்றும் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டால், அவர் எப்படிப்பட்டவர் என்றும், அடிப்படையில் அவர் எம்மாதிரியான நபர் என்றும் நாம் அறிவோம். "பிரசங்கியார்" மற்றும் "போதகர்" என்ற சொற்றொடர்கள் அவரைப் பற்றிய ஒரு சிறந்த சித்தரிப்பை நமக்குத் தருகின்றன.*

*இயேசுவை அடையாளப் படுத்துவதில் வேதாகமமானது நமக்கு எவ்வித சந்தேகத்தையும் விட்டு வைப்பதில்லை, தவறாகப் புரிந்து கொள்ளப்படாத சொற்றொடர்களில் அவர் குறிப்பாய்க் குறிப்பிடப் படுகின்றார். இயேசு வேதாகமத்தில் என்னவென்று அழைக்கப் படுகின்றார் என்பதை நாம் கவனமாய்ப் படிக்கையில் அவர் யார் என்பதை நாம் கற்றுக் கொள்கின்றோம்.*

## அவர் நமது இரட்சகர்

*முதலாவதாக, வேத வசனங்களில் இயேசு, "இரட்சகர்" என்று அழைக்கப்படுகின்றார். "இரட்சகர்" என்ற வார்த்தையானது மற்றவர் களை மிகவும் ஆபத்தான சூழ்நிலையிலிருந்து மீட்பவர் ஒருவரைக் குறிப்பிடுகின்றது.*

*இவரது பிறப்பைப் பற்றி மத்தேயு நற்செய்தி நூலில் கூறப்பட்டுள்ள விபரமானது, பூமிக்குரிய வகையில் இயேசுவின் தகப்பன் என்னப்படும் யோசேப்புவிடம் ஒரு தூதன் கனவில் தோன்றியதாகக் குறிப்பிடுகின்றது. அந்தத் தூதன்,*

> *... "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவி யாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியி னால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான் (மத். 1:20, 21).*

*நீங்கள் காண முடிகின்றபடி, இயேசு ஏதோ ஒரு வகையான இரட்சகரல்லர்; அவர் ஒரு தனிச் சிறப்புள்ள இரட்சகராக இருக்க வேண்டியதாயிற்று. ஒரு மனிதர், எரியும் கட்டிடத்திலிருந்து ஒரு குழந்தையைக் காப்பாற்றினால் அவரை ஒரு இரட்சகர் என்று நாம்*

அழைக்கின்றோம். பசியாயிருக்கும் மக்களுக்கு ஒரு மனிதர் உணவளித்தால் அவர் அந்த மக்களின் இரட்சகர் என்று அழைக்கப்படுகின்றார். வேதவசனங்களின்படியாக, இயேசுவானவர் நம்மை நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கின்றார். அவர் நமது ஆவிக்குரிய இரட்சகராய் இருக்கின்றார்.

பாவம் பற்றிய குற்ற உணர்வு என்பது பொறுப்புள்ள ஒவ்வொரு மனிதரும் எதிர்த்து நிற்க வேண்டிய முதல் இடறலாக இருக்கின்றது. நமது கழுத்தைச் சுற்றி ஒரு ஒலிப் பதிவுக் கருவியைக் கட்டிக் கொண்டு நாற்பத்தியெட்டு மணி நேரத்தில் நாம் நமது வாய்களில் இருந்து வெளிவரும் வார்த்தைகளைப் பதிவு செய்தால் நாம் அனைவரும் பாவிகளே என்பதை சுலபமாகக் காண முடியும் என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கின்றார். நாம் உட்கார்ந்து ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து, ஒவ்வொரு கூற்றுக்கும் பின்னால் உள்ள உள்நோக்கத்தை நினைத்துப் பார்த்து, நாம் பேசிய தொனியை ஆழ்ந்து சிந்தித்து நோக்கினால், நாம் எப்பொழுதுமே, சொல்ல வேண்டியவைகளை மட்டுமே சொல்லியிருக்கவில்லை என்று நிச்சயமாய் முடிவு செய்யக் கூடும். இதேபோல், ஒரு காட்சிப் படப் பதிவுக் கருவியைக் கூட நமது வாழ்க்கையின் நாற்பத்தெட்டு மணி நேரத்தைப் படம் பிடிக்கப் பயன்படுத்தலாம். நமது ஒவ்வொரு செயலையும் நாம் மறுபடியும் கண்ணோக்கும்போது, நாம் பாவிகள் என்பதை சுலபமாய்க் காண முடியும். நாம் செய்ய வேண்டியதைச் செய்யாமலிருந்தது மற்றும் செய்ய வேண்டாதவற்றை செய்தது என்ற உண்மையினால் தாக்கப்படுவோம். நாம் பாவிகள் என்று சொல்வதற்கு வேதாகமம் கூட தேவையில்லை. நமது வார்த்தைகளையும், செயல்களையும் நாம் நெருக்கமாகப் பார்க்கின்றபோது, நாம் பாவிகளே என்று நாம் அறிந்து கொள்ளுகின்றோம். ஆயினும் நம்மைப் பற்றிய இந்த உண்மையை எளிதில் அறியக் கூடிய மொழிநடையில் வேதாகமம் அறிவிக்கின்றது. பவுல், கிறிஸ்தவர்களுக்கு, "... நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10) என்று நினைப்பூட்டினார்.

பாவத்தைக் குறித்து என்ன செய்யப்பட முடியும்? நம்மை நாமே மன்னித்துக் கொள்ள முடியாது. நமது பாவம் என்பது மற்றவர்களுக்கெதிரானது மட்டுமல்ல, ஆனால் அது தேவனுக்கெதிரானதாகவும் இருக்கின்றது. நமது மிக அவசரமான தேவையில் நமக்கு யார் உதவி செய்ய முடியும்? உளவியல் நம்மை மன்னிக்க முடியாது. நேர் மறையான எண்ணங்களாலும் இது முடியாது. நாம் பாவிகளல்ல என்று பாசாங்கு காட்டிக் கொள்ளுதலும் நம்மை இரட்சிக்காது. என்ன

செய்யப்பட முடியும்? நமது இந்த மிகவும் மோசமான நிலைக்கு தேவனின் விடையாக இருப்பவர் இயேசுவே. இயேசு பூமியில் நிறைவேற்றும் ஊழியத்தின் பொருட்டு அவருக்கு அப்பெயர் பரலோகத்தில் தீர்மானம் செய்யப்பட்டதாக யோசேப்புக்குக் கூறப்பட்டது. அவரது பிறப்பின்போது பலஸ்தீன மலை ஒன்றின் மேல் மேய்ப்பர்களுக்கு தூதன், “இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்” (லூக். 2:11) என்று அறிவித்தான். இயேசு இந்த பூமிக்கு வந்ததின் முக்கியமான நோக்கம், நம்மை நமது பாவங்களிலிருந்து மீட்பதே ஆகும் (1 கொரி. 15:3).

நெப்போலியனின் படையில் இருந்த ஒரு வீரனைப் பற்றிய, இருதயத்தைத் தொடும் கதை ஒன்று கூறப்பட்டது. அவன் மிகுந்த தைரியமும், உண்மையுமுள்ள ஒரு வீரனாய் இருந்தான். யுத்தங்களின் இடையே, அவன் தனது கூடாரத்தில் இருந்து கொண்டு தனது கடமைகளையும், குடும்பக் கவலைகளையும் மறுகண்ணோட்டமிட்டுக் கொண்டிருந்தான். ஒரு காகிதத் தாளில் அவன் தனது கடன் தொகைகளையும், தனது குடும்பப் பராமரிப்புக்குத் தேவையான பணத்தையும் பட்டியலிட்டுக் கொண்டிருந்தான். தனது கடன்களை அடைக்கவும், குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவும் போதுமான பணம் தன்னிடத்தில் இல்லை என்று உணர்ந்தபோது அதைரியத்தின் அலையில் அவன் அடித்துச் செல்லப் பட்டான். தனது பொருளாதாரக் கடமைகளைப் பட்டியலிட்டிருந்த அந்தத் தாளின் கீழே அவன் மிகவும் ஆழமான வேதனையுடன், “இந்தக் கடன்களை யெல்லாம் அடைக்கக்கூடியவர் யார் இருக்கிறார்?” என்று எழுதினான். தோல்வி உணர்வுடன் அவன் தனது தலையைத் தனது கைகளில் சாய்த்து உறங்கிப் போனான். அந்த வீரன் அறியாதபடி, நெப்போலியன் தனது படை வீரர்களின் நிலைமையைப் பரிசோதிக்கவும், அவர்களின் பலத்தை மதிப்பிடவும் படை வீரர்களின் முகாமிற்குள் அப்பொழுது வந்தார். அந்த இளம் வீரனின் கூடாரத்தைக் கடந்து போனபோது, ஆய்வு செய்யும்படி அழைத்தார், ஆனால் கூடாரத்தின் உள்ளிருந்து பதில் எதுவும் வரவில்லை. அவர் நடந்து சென்று உள்ளே பார்த்தார். அவர் தூங்கிக் கொண்டிருந்த வீரனையும், அடியில் பரிதாபமான கேள்வி எழுதப்பட்டிருந்த தாளையும் பார்த்தார். உடனே நெப்போலியன் தனது பேனாவை எடுத்து அந்தக் கேள்வியின் அடியில், “நான் அடைப்பேன்” என்று எழுதி அதன் கீழே “நெப்போலியன்” என்று கையெழுத்திட்டார்.

நமது பாவக் கடனையும், இரட்சிப்பின் இக்கட்டான தேவை

யையும் பார்க்கும்போது, நாமும் கூட, "இந்தக் கடன்களையெல்லாம் அடைக்கக் கூடியவர் யார் இருக்கிறார்?" என்று கதறுகின்றோம். நெப்போலியனைக் காட்டிலும் மிகவும் பெரியவர் ஒருவர் "நான் அடைப்பேன்" என்று பதில் அளித்தார். இவ்வுலகத்தின் இரட்சகரான இயேசு என்பவர் தமது சிலுவை மரணத்தினால் நமக்கு முழுமையான இரட்சிப்பை கொண்டு வந்தார்.

இயேசு ஒருவரே நமது ஒரே இரட்சகராக இருக்கின்றார் என்பதை வேதாகமம் மிகவும் தெளிவாகக் கூறுகின்றது. பேதுரு, "அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12) என்று கூறினார். உங்கள் பாவங்களில் இருந்து நீங்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக ஏற்கப்படும் நிலையில் நிற்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் வர வேண்டும் (யோவா. 14:6; மாற். 16:16). வேதாகமத்தின்படி அவரே நமது இரட்சகராக இருக்கின்றார்.

## கிறிஸ்துவாக

இரண்டாவதாக, இயேசு, "கிறிஸ்து" என்று அழைக்கப்படுகின்றார். இதன் அர்த்தம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்பதாகும். கிரேக்க மொழியில் "கிறிஸ்து" என்பதும் எபிரெய மொழியில் "மேசியா" என்பதும் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகள் ஆகும். இயேசு புதிய ஏற்பாட்டில் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவராக, தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவராக அடையாளப் படுத்தப் படுகின்றார்.

தீர்க்கதரிசிகள், தேவனுடைய விசேஷித்த ஊழியர் வரப் போவதாக முன்னுரைத்திருந்தார்கள்:

> நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி,

அதை இதுமுதற் கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசா. 9:6, 7).

மீகா, "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது'' (மீகா 5:2) என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தார். தீர்க்கதரிசிகள் இவ்விதமாய் முன்னுரைத்தபடி வந்தவர் இயேசுவே என்று புதிய ஏற்பாடு நிரூபிக்கின்றது.

இயேசு பூமியில் அவரது ஊழியத்தின் முடிவு நெருங்கிய வேளையில் பிலிப்பிச் செசரியாவின் திசைகளில் தமது சீஷர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். அவ்வாறு அவர்கள் நடந்து செல்லுகையில், இயேசு தமது சீஷர்களிடம், "மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார். அதற்கு அவரது சீஷர்கள், "சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்'' என்றார்கள் (மத். 16:13, 14). அவர்கள் இவ்வாறு பதில் அளித்த பிறகு இயேசு, "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார், பேதுரு அவருக்குப் பதில் அளித்தார். அவர், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று சொன்னார் (மத். 16:15, 16). இயேசு பேதுருவின் பதிலுக்காக அவரைப் பாராட்டினார். அவர், ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்'' என்று கூறினார் (மத். 16:17). வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால், இயேசு, ''பேதுருவே, மனிதர்கள் கூறியதின் அடிப்படையில் நீ இந்த முடிவுக்கு வரவில்லை, பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திலிருந்தே நீ இந்த பதிலைப் பெற்றாய்" என்று கூறினார். இது மனிதரின் கண்டுபிடிப்பல்ல, ஆனால் தெய்வீக வெளிப்படுத்துதல் ஆகும்.

புதிய ஏற்பாடானது இயேசுவைப் பற்றி எவ்விதம் குறிப்பிடுகின்றது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அது அவரை "கிறிஸ்து"

என்று அழைக்கையில், அவர் தேவனால் விசேஷமாய்த் தேர்ந்து கொள்ளப்பட்டவர் என்பதை அடையாளப்படுத்துகின்றது. அவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவருக்கு முன்னோடியாயிராமல், அவரே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவராக இருக்கின்றார்; தேர்ந்து கொள்ளப்பட்டவரைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றின் நிறைவாக அவர் இருந்தார். அவர் தேர்ந்து கொள்ளப் பட்டவரோடு இணைந்தவராயிராமல், அவரே தேர்ந்து கொள்ளப் பட்டவராயிருந்தார்.

## தேவனுடைய குமாரனாக

மூன்றாவதாக, புதிய ஏற்பாட்டில் இயேசுவானவர், தேவனுடைய குமாரனாக, தேவத்துவத்தின் இரண்டாம் உறுப்பினராக அடையாளப் படுத்தப்படுகின்றார்.

இயேசுவின் பூமிக்குரிய வகையிலான ஊழியத்திற்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்காக யோவான்ஸ்நானன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார். மனந்திரும்புதலைப் பிரசங்கிப்பதினாலும், பாவங்களின் மன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ் நானத்தைக் கொடுப்பதினாலும் அவர் இந்த ஊழியத்தை நிறை வேற்றினார் (மாற். 1:4). யோவான் தமது பிரசங்கத்திற்கு பதில்செயல் செய்த மக்களுக்கு, வரப்போகும் மேசியாவைச் சுட்டிக் காட்டினார். மக்கள் தங்கள் மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தில், மேசியா வரும்போது அவரை ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தனர் (அப். 19:4).தேவன் கொடுத்திருந்த இந்த ஊழியத்தை யோவான் நிறை வேற்றுகையில், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவரிடத்தில் சென்று, ஞானஸ் நானம் பெற்றுக் கொண்டனர் (மத். 3:5). ஒரு நாள், யோவான் மக்களை ஆற்றில் ஞானஸ்நானப்படுத்திக் கொண்டிருக்கையில், இயேசு யோர்தான் நதிக்கரையில் தோன்றினார். இந்த சமயத்தில் யோவான், இயேசுவே மேசியா என்பதை மிகவும் நிச்சயமாக அறிந் திருக்கவில்லை (யோவா. 1:29-31)-ஆனால் தம்மை (யோவானைக்) காட்டிலும் இயேசு சிறந்தவர் என்பதை அவர் (யோவான்) அறிந் திருந்தார். அதனால்தான் இயேசு அவரிடத்தில் தமக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி வேண்டுகோள் விடுத்தபோது, யோவான், "நான் உம்மாலே ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டுமே, ஆனால் நீர் என்னாலே ஞானஸ்நானப்படுத்தப்படும்படி கேட்கின்றீரே?" என்று

*சொன்னார். அதற்கு இயேசு, "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்று கூறினார் (மத். 3:15). யோவான், தேவனுடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தார். அவர் தேவனால் அனுப்பப்பட்ட மனிதராக இருந்தார். இயேசு தாம் இந்த பூமியில் இருக்கையில் தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிபவராயிருக்க வேண்டும் என்றே விரும்பினார். இவ்விதமாய் அவர் கீழ்ப்படிதலுடன் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றார்-அவருக்குள் பாவங்கள் இருந்ததால் பாவமன்னிப்பும், மனந்திரும்புதலும் தேவை என்பதால் அல்ல, அல்லது வரப்போகிற மேசியாவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அல்ல. அவரே மேசியாவாக இருந்தார், ஆனால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காக அவர் யோவானின் ஞானஸ்நானத்திற்கு தம்மை ஒப்புக் கொடுத்தார்.*

*யோவான் இயேசுவை ஞானஸ்நானப்படுத்திய பிறகு, தண்ணீரிலிருந்து அவர்கள் கரையேறுகையில், தேவனுடைய ஆவியானவர் ஒரு புறாவின் வடிவத்தில் இயேசுவின் மேல் இறங்கி வந்தார். இந்த அற்புத நிகழ்ச்சியைப் பார்த்தபோது, யோவான், இயேசுவே மேசியா என்பதை அறிந்தார் (யோவா. 1:32-34). பிறகு வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்றுரைத்தது. இது தேவனுடைய குரலேயாகும்-(மத். 3:17). இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கான தேவனுடைய சாட்சியம் புதிய ஏற்பாட்டின், இந்த வசனங்களில் விளங்குகின்றது.*

*இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதற்கு, நமக்கு மூன்று சாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளதாக அப்போஸ்தலனாகிய யோவான் கூறினார். அவர், "... சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" (1 யோவா. 5:8) என்று கூறினார். இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு அவர் மீது ஒரு புறாவடிவில் இறங்கி வந்ததின் மூலம் பரிசுத்த ஆவியானவர், இயேசு தேவனுடைய குமாரன் என்று சாட்சியம் கொடுத்தார். பரிசுத்த ஆவியானவர் இந்த சாட்சியத்தை நற்செய்தி நூல்களின் மற்ற இடங்களிலும் கொடுத்துள்ளார். "ஜலம்" என்பது இயேசுவின் ஞானஸ்நானத்தைக் குறிப்பதாய் இருக்க வேண்டும், அப்போதுதான் பரலோகத்தில் இருக்கிற பிதாவானவர் இயேசுவைத் தமது குமாரன் என்று அறிவித்தார். "இரத்தம்" என்று யோவான் குறிப்பிட்டது இயேசுவின் மரணமாய்*

இருக்க வேண்டும். சிலுவை மரணத்தைச் சுற்றிலும் நடந்த அற்புத நிகழ்ச்சிகள் இயேசுவின் தெய்வீகத்திற்குச் சாட்சி கொடுக்கின்றன. யோவான், "நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக் கொண்டால், அதைப் பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன் தமது குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே" (1 யோவா. 5:9) என்று கூறினார். ஒரு உண்மையைப் பற்றி மூன்று நேர்மையான மனிதர்கள் ஒரே மாதிரியாகச் சாட்சி கொடுப்பார்களே யானால், அவர்களின் சாட்சியத்தை நாம் ஏற்றுக் கொள்ளுவோம்-பூமிக்குரிய சட்டத்துறையின் நீதிமன்றங்கள் எதிலும் இதே போலவே நடக்கின்றது. அப்படியென்றால் நாம் தேவனுடைய சாட்சியத்தை எவ்வளவு அதிகமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்! அவர் தமது குமாரனைப் பற்றிச் சாட்சியம் கொடுத்திருக்கின்றார்-ஆவியானவரின் சாட்சியம் (அவரது ஞானஸ்நானத்தின்போது புறா வடிவில் வந்திறங்கியது) ஒன்று, தண்ணீரின் சாட்சியம் (அவரது ஞானஸ்நானத்தின்போது பிதாவானவரின் குரல் கேட்கப்பட்டது) ஒன்று, மற்றும் இரத்தத்தின் சாட்சியம் (அவரது மரணத்தின் போது நடைபெற்ற அற்புதங்கள்) ஒன்று.

இயேசு யார்? வேதவசனங்கள் இந்த வினாவிற்கான விடையில் எவ்வித சந்தேகத்திற்கும் இடம் தருவதாக இல்லை, புதிய ஏற்பாடானது, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று தெளிவாகப் போதிக்கின்றது. இயேசுவைப் புறக்கணிக்க முடியாது, அவரைப் புறக்கணித்தால் அது தேவனையே புறக்கணித்ததாகும்.

## கர்த்தராக

நான்காவதாக, புதிய ஏற்பாட்டில் இயேசுவானவர் "கர்த்தர்" என்று அழைக்கப்படுகின்றார். அவர் தேவனிடமிருந்து சகல அதிகாரங்களையும் பெற்றுள்ள, நமது மேலான ஆட்சியாளராக இருக்கின்றார்.

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு, தமது சீஷர்களுக்குத் தோன்றி, தாம் உண்மையிலேயே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை விளக்கப்படுத்தினார். அப்போது இயேசு தமது சீஷர்களிடம் பின்வருமாறு கூறினார்:

> வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா

*குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களு டனேகூட இருக்கிறேன் என்றார் (மத். 28:18-20).*

*இயேசு, பிதாவினிடத்திற்கு எழுந்து சென்றபின் பத்து நாட்களுக்குப் பிறகு, அப்போஸ்தலர்களின்மேல் பரிசுத்த ஆவியான வர் ஊற்றப்பட்டார். பெந்தெகொஸ்தே என்ற அந்த நாளில் ஒன்று கூடியிருந்த திரளான கூட்டத்தாருக்குப் பேதுரு பிரசங்கித்தார். இயேசுவே கிறிஸ்துவாயிருக்கிறார் என்று நிரூபிக்க ஆதாரத்தை அவர் எடுத்துரைத்தார். அவர் தமது பிரசங்கத்தின் உச்சக் கட்டத்தை அடைந்த போது, தேவன், இயேசுவை "கர்த்தரும் கிறிஸ்துவுமாக் கினார்" (அப். 2:36) என்று தனது உரையைக் கேட்டுக் கொண்டிருந் தவர்கள் முடிவு செய்யும்படி கேட்டார். பின்னாளில் பவுல், இயேசு தாம் ஒரு மனிதனாகும்படி தம்மைத் தாழ்த்தியதையும், மரணமட்டும் கீழ்ப்படிந்திருந்ததையும் விளக்கப்படுத்துகையில்,*

*ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:9-11) என்று எழுதினார்.*

*பவுல், இயேசுவைப் பற்றி மேலும், "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22, 23) என்றும் எழுதினார்.*

*புதிய ஏற்பாட்டின்படி இயேசுவின் கர்த்தத்துவம் நமக்கு எதை அர்த்தப்படுத்துகின்றது? நடைமுறையில் நாம் அவருக்கு நம்மை*

ஒப்படைக்க வேண்டும் என்பதே அர்த்தமாகும். இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" (லூக். 6:46) என்றார். மேலும் அவர், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21) என்றும் கூறினார். கிறிஸ்துவின் உபதேசத்திற்கு உங்களை ஒப்புக் கொடுக்க நீங்கள் சித்தமாய் இருக்கின்றீர்களா? இரண்டாவதாக, நமது வாழ்வில் நாம் கிறிஸ்துவுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதே அர்த்தமாகும். நமது பற்றுருதியையும் அன்பையும் நாம் அவருக்குத் தர வேண்டும். பரலோகத்தினால் கனப்படுத்தப்பட்ட கர்த்தர் அவர் ஒருவரே, நமது இருதயங்களில் அரியாசனம் அமர்த்தப்பட்ட ஒரே கர்த்தராகவும் அவரே இருக்க வேண்டும்.

"ஒவ்வொரு இருதயத்திலும் ஒரு சிலுவையும் ஒரு சிம்மாசனமும் இருக்கின்றது. என்னை நான் சிம்மாசனத்தில் அமர்த்திக் கொண்டால், இயேசுவை நான் சிலுவையில் வைக்க வேண்டும். கிறிஸ்துவை நான் சிம்மாசனத்தில் அமர்த்தினால் என்னையே நான் சிலுவையில் வைக்க வேண்டும்" என்று யாரோ ஒருவர் சொன்னார். யார் ஒருவரும் இரண்டு கர்த்தர்களை பெற்றிருக்க முடியாது. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கு நீங்கள் "ஆம்" என்று கூறினால், உங்களை சுயசித்தம் மற்றும் விருப்பங்களுக்கு நீங்கள் "இல்லை" என்றே கூற வேண்டும். யார் ஒருவரும் இரண்டு எஜமானர்களைக் கொண்டிருக்க முடியாது; நீங்கள் ஒருவரை பகைத்து, மற்றவரைச் சிநேகிப்பீர்கள் (மத். 6:24).

இயேசுவே கர்த்தரென்று புதிய ஏற்பாடு கூறுகின்றது. தேவன் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளார். அவரே இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கின்றார்.

## முடிவுரை

ஆகவே, இயேசு யார்? இந்த உலகத்தில் முற்றிலும் மிகச் சரியாக உள்ள ஒரே புத்தகமானது அவரை நமது இரட்சகரென்றும், கிறிஸ்து என்றும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் என்றும், தேவனு டைய குமாரன் என்றும், நமது கர்த்தர் என்றும் கூறுகின்றது. இதுவே அவரைப் பற்றிய சத்தியம் ஆகும். அவர் யார் என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்வதற்கு இதைக் காட்டிலும் மற்ற ஆராய்ச்சிகள் எதுவும்

*செய்ய வேண்டும் என்று நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை. வேதாகமமானது அவரைப் பற்றிய முழுமையான சத்தியத்தை நமக்குக் கூறுகின்றது.*

*இயேசு இவ்வுலகத்திற்கு வருகை தந்த நிகழ்ச்சியானது, நாள்காட்டியை கி.மு. மற்றும் கி.பி. என்று பிரித்தது. மத். 25:31-46 வசனப்பகுதியானது, அவர் மனித குலத்தை, இரட்சிக்கப்பட்டவர்கள் மற்றும் இழந்துபோகப்பட்டவர்கள் என்று இரண்டாகப் பிரிப்பார் என்று கூறுகின்றது. இயேசு நியாயத்தீர்ப்படைவதற்காகத் தனக்கு முன் நின்றதாகப் பிலாத்து எண்ணினான், ஆனால் உண்மையில் பிலாத்துவே இயேசுவின் முன்பாக நின்றிருந்தான். உலகத்தின் கடைசி நாளில், இரட்சிக்கப்பட்டவர்கள், இயேசுவின் சிம்மாசனத்தில் வலது புறமும், இழந்துபோகப்பட்டவர்கள் அவருடைய சிம்மாசனத்தின் இடது புறமும் நிற்பார்கள். இயேசுவுக்கு உங்களின் பதில்செயலே நீங்கள் வலது புறம் அல்லது இடது புறம் இவற்றில் எங்கு நிற்கப் போகிறீர்கள் என்பதை நிர்ணயிக்கும். அவரது இரட்சிப்பின் மூலமாக மட்டுமே நீங்கள் அவருடைய வலது புறத்தில் நிற்க முடியும். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6) என்று அவர் கூறினார். நீங்கள் இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் வந்து சேருவீர்கள், அல்லது நித்திய அழிவை அடைவீர்கள். நாம் ஜீவனைப் பெறும்படியாகவே அவர் வந்தார் (யோவா. 10:10); அவரில்லையேல் நாம் நித்திய மரணத்தில் வாசம் பண்ணுவோம்.*

*இரட்சிப்புக்காகத் தம்மிடத்தில் வரும்படி இயேசு நம்மை அழைக்கின்றார். மற்ற மார்க்கத்தின் தலைவர்கள் தங்கள் அமைப்புக்கள் அல்லது தங்கள் உபதேசங்களிடத்திற்கு நீங்கள் வரும்படி உங்களை அழைக்கின்றார்கள். தேவனுடைய குமாரனாகிய இயேசு ஒருவர் மட்டுமே உங்களை, தம்மிடம் வரும்படி அழைக்க முடியும். "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11:28) என்று அவர் கூறினார்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 309 ம் பக்கங்களில்)*

1. *“இரட்சகர்” என்ற வார்த்தை எதைக் குறிக்கின்றது?*
2. *இயேசு ஒரு தனிச் சிறப்புள்ள இரட்சகராயிருப்பது எவ்விதம்?*
3. *“கிறிஸ்து” என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது?*
4. *இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று நாம் எவ்விதம் அறிகின்றோம்?*
5. *ஆவி, ஜலம் மற்றும் இரத்தம் என்று 1 யோவா. 5:7, 8ல் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவை?*
6. *அப். 2ல் பேதுரு தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந் தவர்கள் இயேசுவைப் பற்றி என்ன முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்?*
7. *நடைமுறையில் இயேசுவின் கர்த்தத்துவம் நமக்கு எதை அர்த்தப்படுத்துகின்றது?*

## வார்த்தை உதவிகள்

***தாவீதின் நகரம்*** - *பெத்லகேம்.*

***சிலுவையிலறைதல்*** - *சிலுவையில் தொங்கி மரணமடைதல்; மரண தண்டனையளிப்பதில் ரோமானியர் முறைகளில் ஒன்று. இயேசு குற்றமற்றவராயிருந்தாலும், நமது பாவங்களுக்காக அவர் சிலுவையி லறையப்பட்டார்.*

***இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா*** - *இயேசுவையும் அவரது மாபெரும் தன்மையையும் பற்றிய குறிப்புரை. அவர் எல்லாருக்கும் மேலானவர்.*

***பெந்தெகொஸ்தே (பெந்தெகொஸ்தே நாள்)*** - *யூதர்கள் கொண் டாடிய வாரங்களின் பண்டிகை, இது அறுப்பின் பண்டிகை என்றும் அறியப்பட்டது; இந்த நாளில்தான் சபை தொடங்கியது (அப். 2).*

***ஒப்புக் கொடுத்தல்*** - *தேவனுக்கும் அவரது வசனத்திற்கும் கீழ்ப்படிதல்.*

# 8

# இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?

*நீங்கள் உங்கள் நகரத்தின் சாலையில் நடந்து செல்லும்போது, செய்தி நிருபர் ஒருவர் உங்களிடத்தில் வந்து, "உலகத்தின் தொடக்கத்திலிருந்து நடந்துள்ளவற்றில் நீங்கள் மாபெரும் நிகழ்ச்சியாகக் கருதும் ஒரே சம்பவம் எது?" என்று கேட்டால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? அவருக்கு நீங்கள் எவ்விதம் பதில் அளிப்பீர்கள்? மனித வரலாற்றின் எந்த நிகழ்ச்சியானது மற்ற எல்லா நிகழ்ச்சிகளைக் காட்டிலும் பெரிதாய் இருக்கின்றது? கர்த்தராகிய இயேசு நமது இரட்சகராக இவ்வுலகத்திற்கு வந்த நிகழ்ச்சி என்பதே எனது பதிலாக இருக்கும்.*

*உலக வரலாற்றில் மிகவும் நாடி அடையக்கூடிய நிகழ்ச்சியாக இருப்பது தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் வாழ்க்கையே-அவரது திரு அவதாரம், அவர் மாம்சத்தில் வந்தது என்பவைகளே ஆகும். இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதை எப்படியும் விட்டுவிடாதிருக்க வேண்டும் என்று கருதவில்லை என்பதாகப் பவுல் எழுதினார். அவர், "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலி. 2:7). யோவானின் நற்செய்தியின்படி, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. 1:14).*

*கிறிஸ்துவானவர் தெய்வீகமேயில்லாதவர் போல அந்த அளவுக்கு மனித இயல்புடனிருந்தார்; மற்றும் அவர் மனித இயல்புக்கு அப்பாற்பட்டவர் போல அந்த அளவுக்கு தெய்வீகமானவராகவும் இருந்தார்* என்று நாம் சொல்லக் கூடும். இயேசு மனிதராக வந்தபோது *மற்ற எல்லா மனிதர்களும் பிறந்தது போலவே அவரும் பிறந்ததின் மூலம் மனித குலத்துடன் அவர் தம்மை முழுமையாக அடையாளப்* படுத்திக் கொண்டார் (லூக். 2:6), அவர் எல்லா மனிதர்களைப் போலவே வளர்ந்தார் (லூக். 2:40), மனித குலத்தின் எல்லா *சந்ததியார்களைப் போலவே அவரும் எல்லாப்பாடுகளையும் பட்டார் (எபி. 5:8, 9), மற்றும்*, வியாதி, *அழிவு மற்றும்* மரணம் இவற்றால் - *மனிதர்கள் சிலுவையிலே கொல்லக்கூடிய அளவுகூட* - பாதிக்கப்படும் *ஒரு சரீரத்திலே அவர் வாழ்ந்தார் (பிலி. 2:8, 9). அவர் முற்றிலும் ஒரு* மனிதராகவே இருந்தார், அதனால் மனுஷ குமாரனானார்; இருந்தாலும் அவர் முற்றிலும் தெய்வீகமானவராதலால் தேவ குமாரனாவும் இருந்தார் (எபி. 2:14, 17, 18). மனித இயல்பையும், தெய்வீக இயல்பையும் ஒரு நபர்த்துவத்துக்குள் இணைக்கும் முழுமையான இணைப்பாளராக அவர் இருந்தார். அவர் தமது தெய்வீக இயல்பை தியாகம் செய்யாமலே மனிதராக ஆனார்; அவர் நம்மைப் போலவே ஆன போதிலும் தெய்வீகமானவராகவே இருந்தார்.

இயேசு இந்த பூமிக்கு வந்த இவ்விதமான இயல்பானது வினயமான சில கேள்விகளை எழுப்பக்கூடியதாக இருக்கின்றது: இயேசு ஏன் இவ்விதமாக இந்த பூமிக்கு வந்தார்? மனித குலத்திற்குள் அவர் பிரவேசித்ததற்கான நோக்கம் என்ன? தேவனுடைய தெய்வீகமான மகன் எதற்காக முழுமையான மனிதனாகவே ஆகும்படித் தம்மைத் தாழ்த்தினார்? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் யாவும் ஒரே ஒரு வாக்கியத்தில் சுருக்கமாகத் தரப்பட முடியும்: *"தமது ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலம் தமது நாமத்திற்கென்று தமது சபையென்று அவர் அழைக்கும் மக்களை, அழைப்பதற்காகவே அவர் வந்தார்"* (மாற். 10:45; லூக். 19:10).

வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், சபை என்பதே அவர் இந்த பூமிக்கு விஜயம் செய்ததின் விளைவாக இருக்கின்றது. இயேசு ஒரு புத்தகத்தை எழுதவில்லை, ஒரு கல்லூரியை நிறுவவில்லை அல்லது சரீரப் பிரகாரமான ஒரு குடும்பத்தை நிர்மாணிக்கவில்லை.

*அவருடைய இப்பூமிக்குரிய ஊழியத்தில் உண்மையாக உண்டாக்கப் பட்டது சபை மட்டுமே. அவர் தாம் கட்டி எழுப்புவதாகக் கூறிய சரீரம் என்பது அவர் "என் சபை" (மத். 16:18) என்ற சொற்றொடர் களால் அழைத்த ஆவிக்குரிய ஒரே சரீரம் மட்டுமே. இயேசு தமது ஊழியத்தில் நிலைநிறுத்திய ஒரே அஸ்திபாரம் என்பது சபையின் அஸ்திபாரம் மட்டுமே. ஆகையால், கிறிஸ்துவின் பூமிக்குரிய வருகையில் ஒரே ஒரு படைப்பாக இருந்தது சபை மட்டுமே என்று சொல்ல முடியும்.*

## நற்செய்திப் புத்தகங்களால் உறுதிப் படுத்தப்பட்டது

*இந்த சத்தியமானது நற்செய்திப் புத்தகங்களால் வலிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்திப் புத்தகம் ஒவ்வொன்றும் இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் நிலை நாட்டவிருந்த பரலோக இராஜ்யமாகிய இந்த சபையையே சுட்டிக் காட்டி, அதை நோக்கியே வழி நடத்துகின்றதாய் உள்ளது.*

*கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி நற்செய்திப் புத்தகங்களில் படிக்கும் ஒருவர் அவரது ஊழியத்தைப் பற்றி எழும்பும் பின்வரும் மூன்று கருத்துக்களைக் கண்டுபிடிக்கின்றார்: (1) அவரது ஊழியம் ஒரு விஷயத்தை நிறைவேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டது, (2) அவர் ஊழியம் செய்த முறையானது, மேலான ஒன்றை ஆயத்தம் செய்வதற்காக இருந்தது, மற்றும் (3) அவரது ஊழிய முறைமையானது தொடர்ந்து செய்யப்பட வேண்டியதாய் இருந்தது.*

*முதலாவதாக, இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்தபோது அவர் உலக முழுவதற்கும் சுவிசேஷம் அறிவிக்கும் பணியை மேற்கொண் டிருக்கவில்லை என்பதை நற்செய்திப் புத்தகங்கள் சுட்டிக்காட்டு கின்றன. அவர் அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்ட பிறகு, அவர்கள் உலக முழுவதும் சென்று பிரசங்கிக்க வேண்டும் என்று கட்டளையிடவில்லை, மாறாக "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத். 10:5ஆ, 6) என்று கூறியதன் மூலம் அவர்களது ஆர்வத்தை அமைதிப்படுத்தினார். இயேசு தமது ஊழியத்தைப் பலஸ்தீனத்தில் மட்டுமே நிறைவேற்றினார் என்பது நம்மைத்*

*திகைப்படையச் செய்யக் கூடியதாய் இருக்கின்றது. ரோம உலகத்தின் புறம்பே இருந்த நாடுகளுக்கு அவர் சென்றதே இல்லை. உலகத்தின் ஒரு சிறு பகுதியில் பிரசங்கித்துப் போதித்தோடு அவரது ஊழியம் நிறைவேறியது. இயேசு தமது ஊழியத்தில் உலக முழுவதும் சென்றிருப்பாரேயானால், அவர் தமது ஊழியத்தை வித்தியாசமான முறையில் நிறைவேற்றியிருப்பார், வித்தியாசப்பட்ட விரிவான உபாயங்களையும், முறைகளையும் அவர் கையாண்டிருப்பார்.*

*இரண்டாவதாக, இயேசுவின் வாழ்வு, பணிகள் மற்றும் மரணம் ஆகியவை வரப்போகிற ஒன்றுக்கு ஆயத்தம் செய்பவைகளாகவே இருந்தன என்பதை நற்செய்திப் புத்தகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. "இயேசு, மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத். 4:17ஆ) என்று பிரசங்கித்தார். அவர் தமது சீஷர்களுக்கு, "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (மத். 6:10அ) என்று ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். அவருடைய அற்புதங்கள் மற்றும் பதில் செயல்களினால் கவரப்பட்டு வந்த கூட்டத்தார், அவரைத் தங்களின் பூமிக்குரிய அரசராக்கும் கருத்தில் அடித்துச் செல்லப்படாதபடிக்கு அவர் மிகுந்த எச்சரிக்கையுடன் தடை செய்தார். அவர் தமது கால அட்டவணையை மக்கள் கூட்டத்தார் தமக்கு ஆணையிட அனுமதிக்கவில்லை. அவர் ஒரு அற்புதம் செய்யும்போது, சில சமயங்களில் அந்த அற்புதத்தைப் பெற்றவரிடம், "ஒருவருக்கும் இதைச் சொல்ல வேண்டாம்" (மத். 8:4)[1] என்று கேட்டுக் கொண்டார். அவர் பன்னிரெண்டு அப்போஸ் தலர்களைத் தேர்ந்தெடுத்து, தனிப்பட்ட விதத்தில் அவர்களுக்குப் பயிற்சியளித்தார், ஆனால் அவர் அவர்களை விட்டுச் சென்ற பிறகு அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்கென்றே அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார் என்பது உறுதியானதாகும் (யோவா. 14:19).*

*மூன்றாவதாக, இயேசுவின் ஊழியமானது முழுமையடையாத உணர்வைப் பெற்றிருப்பதாகவே நற்செய்திப் புத்தகங்கள் சித்தரிக் கின்றன. பிதாவானவர் எதைச் செய்யும்படியாக இயேசுவை அனுப்பி னாரோ, அதையே அவர் செய்தார்; ஆனால் அவர் தமது பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவில், தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வரும் மற்ற நிகழ்ச்சிகள் மற்றும் வெளிப்படுத்துதல்கள் ஆகியவற்றை எதிர்நோக்கியிருப்பதற்குத் தமது அப்போஸ்தலர்களைத் தயார்ப் படுத்தினார். இயேசு, அப்போஸ்தலர்களிடம், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச்*

சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவா. 14:26) என்று கூறினார். மேலும் அவர் அவர்களிடம், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங் களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13) என்றும் கூறினார். உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இயேசு தாம் பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்று முன்னர், தமது அப்போஸ்தலர்களை, அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமை விட்டுப் போகாமல் இருக்கும்படிக் கட்டளையிட்டார். அந்தப் பெலனைப் பெற்றவுடன் அவர்கள் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்க வேண்டியதாயிருந்தது (லூக். 24:46-49).

நமது கர்த்தருடைய மரணத்திற்கு முன்னும், பின்னும் அவரது ஊழியத்தின் இந்தப் பண்புகள், அவரது சபையாகிய ராஜ்யத்தின் முக்கியக் கூறுகளை இணைத்து இப்பூமிக்கு கொண்டு வருவதற் காகவே அவை செய்யப்பட்டன என்பதைத் தெளிவாகக் காண் பிக்கின்றன. மத். 16:18ல் தமது பூமிக்குரிய ஊழியத்தின் பாரத்தை இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அறிவித்தார்: "நீ பேதுருவா யிருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." இவ்விதமாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வரவில்லை; பிரசங்கிக்கப் படும்படி ஒரு சுவிசேஷம் இருப்பதற்காகவே அவர் வந்தார்.

தெற்கு டகோட்டாவில் உள்ள குறிப்பிடத்தக்க ரஷ் மோர் மலையில் சிற்ப வேலைப்பாடு செய்த புகழ் பெற்ற சிற்பியாகிய கட்சன் போர்க்ளம் அவர்கள் தலைநகரான வாஷிங்டன் டி.சி.யிலும் ஆபிரகாம் லிங்கனின் தலைச் சிற்பம் ஒன்றை செதுக்கினார். அவர் தமது தொழிற் கூடத்தில் பெரிய சலவைக்கல் ஒன்றில் இருந்து அதைச் செதுக்கினார். ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தத் தொழிற் கூடத்தைக் கூட்டிச் சுத்தம் செய்யும் ஒரு பெண் முதன்முறையாக உயிருள்ள தலை போன்று தெரிந்த அந்த சிற்பத்தைப் பார்த்தபோது, ஒரு கணம் திகைத்துபோய் நின்று, "இந்தக் கல்லினுள் லிங்கன் பூட்டப்பட்டிருந்ததை அவர் எப்படி அறிந்தார்?" என்று கேட்டாள். மற்றவர்கள் காண முடியாததை போர்க்ளம் கண்டார் என்பதே அவளது கேள்விக்குப் பதில் ஆகும். அவர் ஒரு கலைஞரின் கண்கள்

உடையவராய், சிற்பியின் உள்ளுணர்வு கொண்டவராய் இருந்தார். அவரது திறமையுள்ள கைகளும், கற்பனைத் திறன் உள்ள மனமும் சேர்ந்து அந்த முகத்தை உருவாக்கும் முன்பே அவர் அதை அந்தக் கல்லில் கண்டார்.

நற்செய்திப் புத்தகங்களின் உதவியுடன் நாம், இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தில் பார்த்ததைக் காண முடியும். வரப்போகிற இராஜ்யத்தின் தரிசனமும் அதற்கான தயாரிப்புப் பணியும் அவரது ஊழியத்தில் பூட்டப்பட்டுக் கிடந்தன. அவர் அதைப் பற்றிப் பிரசங் கித்தார், அதற்காக ஆயத்தம் செய்தார், அதைத் தமது இரத்தத்தினால் விலைக்கு வாங்கினார்.

## நடபடிகளினால் நிச்சயப்படுத்தப்பட்டது

புதிய ஏற்பாட்டுப் புத்தகமாகிய நடபடிகள், இயேசுவின் ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளுக்குப் பின்னால் இராஜ்யமாகிய சபையை உண்டாக்குவதன் திட்டவட்ட மான நோக்கம் இருந்தது என்று நிச்சயப்படுத்துகிறது. நற்செய்தி புத்தகங்கள் சத்தியத்தை ஒளிவு மறைவின்றி அறிவிக்கின்றன. மற்றும் வாழுகின்ற வண்ணமிகும் விளக்கங்களினால் அப்போஸ்தலருடைய நடபடிகள் அதை நிச்சயப்படுத்துகின்றன.

நமது கர்த்தர் பரலோகத்துக்கு ஏறிச் சென்று பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே நாளன்று, அப்போஸ்தலர்களின்மேல் பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழியப்பட்டார் (அப். 2:1-4); இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற சுவிசேஷமானது முதன்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டது; மக்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, தங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்று இந்த சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி அழைக்கப் பட்டனர் (அப். 2:38; லூக். 24:46, 47); பிரசங்கிக்கப்பட்ட வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஏறக்குறைய மூவாயிரம் பேர் இந்த அழைப்பை ஏற்று, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் (அப். 2:41). ஆகவே, இரவைத் தொடர்ந்து பகல் வருவது போலவே, இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்து நமது கர்த்தருடைய சபை பிறந்தது.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் எஞ்சியுள்ள வரலாறு, சபையானது பரிசுத்த அன்பின் ஜுவாலையாக எருசலேமில் இருந்து யூதேயா, சமாரியா அதற்கு அப்பால் ரோமராஜ்யத்தின் மற்ற பாகங்கள்

ஆகியவற்றில் பரவத் தொடங்கியதன் வரலாறு ஆகும். நடபடிகளில், ஏவப்பட்ட பிரசங்கம் செய்யப்பட்ட போதெல்லாம், அதைக் கேட்டவர்கள் பிரசங்கிக்கப்பட்ட வசனத்துக்குக் கீழ்ப்படிந்து சபைக்குள் பிரவேசித்தனர். நற்செய்திப் பயணம் நடைபெற்ற போதெல்லாம், உலகத்தின் புதிய பகுதிகளைப் பற்றி சபைகள் விழிப்புணர்வு பெற்றன. பவுலின் நற்செய்திப் பயணங்கள் மூன்றிலும், எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் உலகெங்கிலும் புதிய சபைகள் நிலைநாட்டப்பட்டன (ரோமர் 15:19). கிறிஸ்துவின் வருகையினால் சபை வெளியாயிற்று என்ற மிகப் பெரிய முடிவை கவனிக்காமல் ஒருவர் நடபடிகள் புத்தகத்தைப் படிக்க முடியாது.

ஒருமுறை, பிரசங்கியார் ஒருவர், "உலகத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் நாம் இயேசு பின்பற்றின அதே நடைமுறை களைப் பின்பற்ற வேண்டும், பன்னிரெண்டு மனிதர்களை நாம் ஒன்று கூட்டி எதிர்கால ஊழியத்திற்கென்று நாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், இயேசு தாம் பயன்படுத்திய வழிமுறைகளில் நாம் எப்படி இவ்வுலகில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று காண்பித்திருக்கின்றார்" என்று சொன்னார். நிச்சயமாகவே, இயேசு தாம் செய்த ஒவ்வொன்றையும் முழு நிறைவானதாகவே செய்தார். என்றாலும், அவரது ஊழியத்தைப் பற்றிய முழுமையான ஒரு பாடமானது, அவர் உலகமுழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியத்தைச் செய்யவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. அவரது ஊழியமானது சபைக்கு ஒரு அஸ்திபாரத்தைப் போடுவ தாகவே இருந்தது; உலக முழுவதற்குமான சுவிசேஷ ஊழியத்திற்கு ஒரு முன்மாதிரி வரைபடத்தையே அந்த ஊழியம் விட்டுச் சென்றுள்ளது. அவரது ஊழியத்தில் அவர் கையாண்ட அணுகு முறைகள், அவருடைய தனிச் சிறப்புள்ள ஊழியத்திற்கு ஏற்ற வழிமுறைகளாகவே இருந்தன, தம்மைப் பின்பற்றுவோர்களுக்கு உலக முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கும்படியான ஊழியத்தை ஒப்படைத் திருந்தார்-இது அவரது ஊழியத்திலிருந்து மாறுபட்டதாகவே உள்ளது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அப்போஸ் தலர்களும், மற்ற ஏவப்பட்ட மனிதர்களும், நமது கர்த்தர் பயன் படுத்திய அணுகுமுறைகளையே பயன்படுத்துவதாக நாம் காண்ப தில்லை. அவர் உபதேசிக்கப் பின்பற்றிய அதே வழிமுறைகளை அவர்கள் பின்பற்றவில்லை, அதாவது அவர்கள் ஒவ்வொருவரும் பன்னிரெண்டு மனிதர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்குப்

பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அந்த ஏவப்பட்ட மனிதர்கள் தங்கள் பிரசங்கம் மற்றும் போதனை மூலம் சபைக்குள் மக்களைக் கொண்டு வந்தனர். இந்தப் புதிய கிறிஸ்தவர்கள் சபையின் ஒரு பாகமாக இருந்து, ஊழியம் மற்றும் சுவிசேஷ அறிவிப்புக்கென்று சபையாலேயே செறிவூட்டப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு, நம்பிக்கை யூட்டப்பட்டு, போதிக்கப்பட்டனர். இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் பலனாகவே சபையின் வாழ்வு இருப்பதாக நடபடிகளின் புத்தகத்தில் நமக்குக் காட்டப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் 48 சதவிகிதம் பகுதியில் கிறிஸ்துவின் வாழ்வு பற்றியும், மற்ற 52 சதவிகிதம் பகுதியில் அவருடைய வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் விளைவாக உண்டான சபையைப் பற்றியும் கூறப்படுகின்றது.

## நிருபங்களினால் மறுபடியும் உறுதிப்படுத்தப்பட்டது

சபையானது, கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணத்தின் இயல்பான கனியாகவே இருக்கின்றது, என்ற சத்தியத்தை நடை முறைப்படுத்துவதைப் புதிய ஏற்பாட்டின் நிருபங்கள் வலியுறுத்து கின்றன. இந்த சத்தியத்தை நற்செய்திப் புத்தகங்கள் உறுதிப்படுத்து கின்றன, நடபடிகள் புத்தகம் இதைப் பெருக்கமடையச் செய்கின்றது, மற்றும் நிருபங்கள் இதை நடைமுறைப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் இருப்பதன் மூலம் அவருடைய வாழ்வுக்கு நாம் பதில் கொடுப்பது எப்படி என்பதை நிருபங்கள் நமக்குக் காட்டுகின்றன.

விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் மூலம் கிறிஸ்துவுக்குள் வருவதைத் தேர்ந்து கொண்ட மக்களுக்கு இந்த நிருபங்கள் எழுதப் பட்டன. அவர்கள், கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த் தெழுதல் ஆகியவை புதியதாகக் கவனிக்கப்பட்ட காலத்தில் வாழ்ந் தவர்கள் ஆவார்கள். கிறிஸ்துவானவர் கர்த்தரென்று கனப்படுத்தப் படுகின்றார் என்பதும், நாம் அவரது சபையாராக இருக்கும் பொழுதுதான் அவரது மனித வாழ்க்கை நமக்குள் சரியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதுமே ஏவப்பட்ட மனிதர்களுடைய செய்தியின் உட்கருத்தாக இருக்கின்றது.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக வாழ்ந்து, அதற்கென்று ஊழியம் செய்யும்படியாகவே ஒவ்வொரு நிருபத்திலும் வற்புறுத்தப்படுகின்றனர். நிருபங்கள்

எல்லாம் ஒன்றுகூட்டப்பட்டுப் பார்க்கப்படுகையில், எல்லா சூழ்நிலைகள் மற்றும் வித்தியாசமான இடங்களிலும், கிறிஸ்துவின் சபையாராக இருப்பது மற்றும் வாழ்வது எப்படி என்பதைக் காட்டும் "வழிகாட்டிக் குறிப்பேடாக"வே அவை இருக்கின்றன. கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை நமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவது எப்படி என்று அவைகள் நமக்குப் போதிக்கின்றன.

கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் நாம் அவரது சரீரத்தில் பிரவேசிப்பதன் மூலம் இயேசுவை நாம் கர்த்தரென்று ஏற்று அவருக்கு நம்மை ஒப்புக் கொடுக்கின்றோம். இந்த விசுவாசப் பதில்செயலின் நிறைவுச் செயலை கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதலோடு பவுல் இணைத்தார் (கலா. 3:27). நிருபங்களின்படி பார்க்கையில் விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து, இரட்சிப்புக்கான ஞானஸ் நானத்தைப் பெறாத வரையிலும் எவருமே இயேசுவின் சரீரமாகிய அவரது சபைக்குள் பிரவேசிப்பதுமில்லை, அவருக்குத் தம்மை ஒப்புக் கொடுப்பதும் இல்லை.

தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் நாம் ஒன்றுகூடி வாழ்ந்து, தேவனை ஆராதிக்கும்போது மட்டுமே நாம் இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் கனப்படுத்துகின்றோம். பவுல் பின்வருமாறு கூறினார்:

> *யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா. 3:28).*
>
> *ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங் களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களா யிருக்கிறோம் (ரோமர் 12:4, 5).*
>
> *சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, ... ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்*

*களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப் பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.*

*நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1 கொரி. 12:25-27).*

*வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் ... பிரசங்கித்தான் (அப். 20:7).*

தேவனுடைய குடும்பமாக, கிறிஸ்துவின் சபையாக நாம் வாழ்ந்து மற்றும் தேவனை ஆராதிக்கத் தவறும்போது, கிறிஸ்து நிறைவேற்ற வந்ததை நாம் எடுத்துப் போட்டு விடுபவர்களாக, அவர் எதை நிலைநாட்ட மரித்தாரோ, அதை அழிப்பவர்களாக நாம் ஆகின்றோம்.

*இயேசு அவரது சரீரமாக, அவரது சபையாக இருக்கும்படிக்கு நம்மை அழைத்துள்ளார்.* அவருடைய மக்கள் கிறிஸ்துவின் சபை தவிர வேறு எந்த ஒரு சபை அல்லது சரீரமாக இருந்ததாக நிருபங்கள் விளக்கம் தருவதே இல்லை. நிருபங்களின்படி பார்த்தால், இயேசு அவரைப் பின்பற்றுவதற்கு ஒரே ஒரு வழியையும், அவருக்கு ஊழியம் செய்வதற்கு ஒரே ஒரு வழியையும், அவர் அளிக்கும் இரட்சிப்பையும் அவரது இரத்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கு ஒரே ஒரு வழியையும் மட்டுமே படைத்துள்ளார். அவரது ஆவிக்குரிய சரீரமாக இவ்வுல கத்தில் விசுவாசத்துடன் வாழ்வதே அந்த வழியாகும்.

ஒரு சிறு பெண் தனது வீட்டின் ஒரு மூலையில் வேதாகமம் ஒன்றைப் பார்த்தாள். அவள் அதை எடுத்து தனது தாயினிடத்தில் சென்று, ''அம்மா இது என்ன புத்தகம்?'' என்று கேட்டாள். அவளுடைய தாய் அதற்கு, "அது தேவனுடைய வேதாகமம் என்ற புத்தகம்'' என்றாள். குத்தப்பட்ட உள்ளுணர்வு கொண்ட அந்தச் சிறுபெண், "நாம் இதை என்றுமே பயன்படுத்தவில்லையே, எனவே இதை அவருக்கே திருப்பி அனுப்பி விட்டால் என்ன?'' என்று கூறினாள்.

உண்மை என்னவென்றால், நாம் அதை வாசித்தும் கூட இன்னும் பயன்படுத்தாமல் இருக்கக் கூடும். ஒவ்வொரு உரையாடலி லும் நாம் அதை மேற்கோள் காட்டியும், ஒவ்வொரு நாளும் அதை வாசித்தும் கூட இன்னும் அதை நாம் நடைமுறைப்படுத்தத் தவறியிருக்கக் கூடும். வேதாகமத்தை உண்மையில் நடைமுறைப்

படுத்துவது என்பதற்கு நாம் கிறிஸ்துவின் சபையை செயல்முறை வழியில் பின்பற்றுவது தேவையாய் இருக்கின்றது. வேதாகமத்தில் நாம் எப்படியிருக்க வேண்டும் என்று கூறப் படுகின்றபடி நாம் ஆகும்போது மட்டுமே நாம் அதைச் சரியான மற்றும் தகுதியான முறையில் பயன்படுத்துகின்றவர்கள் ஆகின்றோம்.

## முடிவுரை

கிறிஸ்து மனிதராக ஆனதின் முழு ஊழிய நோக்கம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை உண்டாக்குவதே என்பதுதான் புதிய ஏற்பாட்டின் ஒருங்கிணைந்த போதனையாக இருக்கின்றது. நற்செய்திப் புத்தகங்கள் இதனை வாக்குத்தத்தம் செய்வதன் மூலம் உறுதிப்படுத்துகின்றன, நடபடிகளின் புத்தகம் இதனைச் சித்தரிப் பதன் மூலம் நிச்சயப்படுத்துகின்றன, நிருபங்கள் இதனை வாழ்க்கை யின் நடைமுறையில் பயன்படுத்துவதன் மூலம் மறுபடியும் உறுதிப் படுத்துகின்றன.

நமது இரட்சிப்புக்காக வாழ்ந்து, மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவருக்கு பதில் அளிக்கும் வகையில் அவரது சபையில் நாம் பிரவேசித்து, விசுவாசமுள்ள வாழ்க்கை வாழ்வது என்பதுதான் நமக்குள்ள ஒரே வழி என்று புதிய ஏற்பாடு கூறுவதால், இதைத் தொடர்ந்து ஒரு கேள்வி வருகின்றது: "நீங்கள் அவரது சரீரத்தில் இருக்கின்றீர்களா?" வாழ்க்கையின் முடிவை நெருங்கும்போது, நீங்கள் வாழ்வின் உண்மையான நோக்கத்தை முற்றிலுமாய்த் தவற விட்டு விட்டீர்கள் என்று கண்டறிவது எவ்வளவு பெரிய தவறாகின்றது! ஒருவேளை, இதைக் காட்டிலும் மிகுந்த வருத்தத்திற்குரியது எது வென்றால்-தேவனுடைய குமாரனானவர் இந்த பூமிக்கு வந்ததின் நோக்கத்தை நாம் தவறவிடுவதேயாகும். தேவனுடைய தெய்வீக செய்தியான இரட்சிப்பை, புதிய ஏற்பாடு நமக்கு கொடுப்பது நிச்சயமாயிருப்பது போலவே, கிறிஸ்து இந்த பூமிக்கு மனித உருவில் வந்தது நிச்சயமாயிருப்பது போலவே, அவருடைய சரீரத்தில் பிரவேசிக்காத எவரும், தங்களின் வாழ்க்கைப் பயணத்தின் முடிவில் கிறிஸ்து இந்த பூமிக்கு வந்ததின் நோக்கத்தைத் தவறவிடுவார்கள் என்பதும் வெகு நிச்சயமாய் இருக்கின்றது. இதுவே புதிய ஏற்பாடு முழுவதிலும் உள்ள அடிப்படையான உபதேசங்களின் முடிவு ஆகும்!

கிறிஸ்து இங்கு வாழ்ந்த தமது சுருக்கமான வாழ்வின் முடிவை

நெருங்கும்போது, அவரால், "பிதாவே, நீர் என்னிடத்தில் செய்யும் படிக் கேட்டுக் கொண்டவைகளை நான் செய்திருக்கிறேன். எனக்காக நீர் ஒப்புவித்த ஊழியத்தை நிறைவேற்றியிருக்கிறேன்" என்று கூற முடிந்தது. அரண்மனையில் நீண்ட காலம் வாழ்ந்து, சுயநல நோக்கத் திற்காக அரசாட்சி செய்வதைக் காட்டிலும், சில வருடங்களே வாழ்ந் தாலும், தேவனுடைய சித்தம் என்ற வட்டத்திற்குள் வாழ்வது என்பது மிகவும் சிறந்ததாகும். ஏராளமான மக்கள், தங்கள் வாழ்வின் முடிவில், "தேவனே நீர் எனக்குக் கொடுத்த ஆயுசு நாட்களில் எல்லா வருடங் களிலும் பூமியில் நான் வாழ்ந்து முடித்தேன், நான் விரும்பியவைகளை மட்டுமே நான் செய்திருக்கிறேன், எனக்கென்று நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஊழியத்தையே நான் விடாது பற்றியிருந்தேன்" என்று மட்டுமே கூற முடிகின்றது.

நாம் நமது வாழ்க்கையின் முடிவை நெருங்கும்போது, நம்மால், "கர்த்தாவே, வேதவசனங்களின் மூலம் நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர் என்பதைக் கண்டறிந்துள்ளேன், அந்த ஊழியத் திற்கு என்னையே நான் ஒப்புக் கொடுத்திருக்கிறேன். உம்மை இந்த பூமியில் மகிமைப்படுத்த உண்மையுடன் நான் முயற்சி செய்திருக் கின்றேன், நீர் எனக்கு கொடுத்த திட்டத்தின்படி நான் வாழ முயற்சி செய்திருக்கின்றேன். நான் கிறிஸ்துவின் சபையாராக வாழ்ந்திருக் கிறேன்" என்று கூற முடியலாம்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 310 ம் பக்கங்களில்)*

1. உலக வரலாற்றில் நடந்த நிகழ்ச்சிகளிலேயே மாபெரும் நிகழ்ச்சி எது? உங்கள் பதிலுக்கான காரணம் ஒன்றைக் கொடுக்கவும்?
2. இயேசு முற்றிலுமாகவே மனிதராயிருந்தாரா அல்லது ஒரு பகுதி மட்டும் மனிதராயிருந்தாரா?
3. இயேசு முற்றிலுமாகவே தெய்வீகமானவரா அல்லது ஒரு பகுதி மட்டும் தெய்வீகமானவரா?
4. இயேசு எதற்காக இந்த பூமிக்கு வந்தார்? எந்த ஒரு நோக்கத்தை நிறைவேற்ற அவர் வந்தார்?
5. வரப்போகிற ஒன்றுக்கு ஆயத்தம் செய்வதாகவே இயேசுவின் ஊழியம் இருந்தது எவ்வாறு என்று காட்டவும்.

*6. புதிய ஏற்பாட்டு நிருபங்களின் பணி என்ன?*

*7. இயேசுவின் சபையாராயில்லாமல், நாம் அவரது வாழ்வுக்குப் பதில் அளிக்க முடியுமா?*

*8. இயேசுவின் சபையாராக நாம் வாழாமல் அவர் நமக்கென்று வைத்துள்ள ஊழியத்தை நம்மால் நிறைவேற்ற முடியுமா?*

## வார்த்தை உதவிகள்

***சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுதல்*** - *தேவனுக்குக் கீழ்ப்படியும் மக்களாக்கப்படுதல். இயேசுவின் பிரதான கட்டளையில் கூறப்பட்டுள்ளவைகளுக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் தேவனால் சேர்க்கப்படுதல் (அப். 2:41, 47).*

***கிறிஸ்துவின் சபை*** - *ஒரு கட்டிடம் அல்ல, ஆனால், சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படிந்த மற்றும் சபையில் சேர்க்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் ஆகும் (அப். 2:36-47ல் உள்ளதைப் போன்றது).*

***நிருபம்*** - *ஒரு கடிதம். புதிய ஏற்பாட்டின் அநேக புத்தகங்கள் (ரோமர் முதல் யூதா நிருபம் வரையில் உள்ளவை), கிறிஸ்தவர் களுக்குக் கடிதங்களாகவே எழுதப்பட்டன.*

***சுவிசேஷத்தை அறிவித்தல்*** - *சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறை. எடுத்துக்காட்டாக தீமோத்தேயு சுவிசேஷ கனுடைய வேலையைச் செய்யும்படியாக 2 தீமோ. 4:5ல் அவருக்குக் கூறப்பட்டது.*

***புறஜாதியார்*** - *யூதரல்லாத ஒரு நபர்.*

***யூத மார்க்கம்*** - *யூதர்களின் இனம், அல்லது இஸ்ரவேலர்கள்; ஆபிரகாம், யாக்கோபு மூலமாக வந்த வம்சா வழியினர்.*

***தேவனுடைய இராஜ்யம்*** - *மனிதர்களின் இருதயங்களிலும் வாழ்க்கையிலும் இயேசுவின் அரசாட்சி அல்லது அதிகாரம் செய்கை.*

***நீதி*** - *குற்றம் அல்லது பாவம் எதுவும் இல்லாத இயல்பு. மனிதன் தானாகவே இந்த இயல்புள்ளவனாய் இருப்பது முடியாத செயலாகும், "நீதியுள்ளவராயிருப்பது" என்றால், தேவனிடத்தில் மன்னிப்பைப் பெற்று, தேவனுக்கு முன்பாகப் பாவத்தில் இருந்து சுத்திகரிக்கப்படுதல் என்று அர்த்தமாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்தின்படியே*

அன்றாடம் வாழ்க்கை நடத்துவதன் மூலம் தேவனோடு இந்த சரியான உறவு முறையை வெளிக்காட்டுகின்றார்கள்.

[1]*மத். 9:30; 12:16; 17:9; மாற். 1:43; 3:12; 5:43; 7:36; 8:30; 9:9; லூக். 4:41; 8:56; 9:21 ஆகியவற்றையும் காணவும். "ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்" என்ற வினோதமான கட்டளை பற்றி* J.W. *மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு எழுதினார்: "இராணுவ அதிகாரிகளின் இடையீட்டினால் மக்களின் உணர்வு தேவையற்ற வகையில் தூண்டடப்படுவது போன்றதாகும் இது. இயேசுவின் போதனைகளைப் பற்றி அமைதியான முறையில் மக்களைச் சிந்திக்க விடாமல் இவை தடை பண்ணக்கூடும். (மாற். 1:45ஐயும் காணவும்). சில சமயங்களில், சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு, அவர் தமது கட்டளையை திருப்பிக் கொண்டு, அவர்களுக்குச் செய்தவற்றை மற்றவர்களுக்குக் கூறும்படியும் கட்டளை யிட்டுள்ளார்"* (J.W. McGarvey, *The New Testament Commentary: Matthew and Mark* [N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 75).

# 9

# சிலுவையும் சபையும்

"கிறிஸ்து இல்லாத சிலுவை பாவிகளை மீட்பதற்கு பெலனற்றிருப்பதைப் போலவே சிலுவையில்லாத கிறிஸ்துவும் பெலனற்றவராகக் கூடும்" என்பதை கிறிஸ்து நமது பாவங்களுக்குக் கிரயம் செலுத்தினார் என்ற புதிய ஏற்பாட்டுக் கொள்கையை அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடும். இருப்பினும், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய கிறிஸ்து தமது ஜீவனை நமது பாவங்களுக்காக சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் (1 கொரி. 15:3) என்பதே சுவிசேஷத்தின் நற்செய்தியாகும்.

தேவனுடைய குமாரன் மனிதர்களுக்காக சிலுவையில் செய்த தியாகமே வேதாகம வரலாற்றின் மையக் கருவாக உள்ளது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன பக்கங்களிலும், வரலாற்று உண்மையைக் கூறும் புதிய ஏற்பாட்டின் பக்கங்களிலும் இயேசுவின் இரத்தம் சிந்தப்படுகிறது. நான்கு சுவிசேஷங்களிலும், ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கில் இயேசுவின் வாழ்க்கையில் கடைசி மூன்று நாட்களில் நடந்தவை காணப்படுவதாக ஹென்றி சி. தீயீஸ்ஸென் என்பவர் கணக்கிட்டுள்ளார். இயேசுவின் மரணத்தை விளக்கியுள்ளது போலவே, அவருடைய மூன்றரை ஆண்டு கால ஊழிய வாழ்க்கையை விளக்கிக் கூறியிருந்தால், சுவிசேஷப் புத்தகங்கள் மட்டும் 8,400 பக்கங்கள் உடையதாயிருந்திருக்கும்.[1] புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு 53 வசனங்களிலும் 1 வசனம் கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிக் குறிப்பதாக ஆர். ஏ. டோரி மதிப்பிட்டுள்ளார்.[2] பாவங்களுக்கான ஒரு தெய்வீகப் பலியையும், மரித்தோரிலிருந்து அந்தப் பலியானவர் உயிர்த்தெழுந்ததையும் கொண்டுள்ள ஒரே மார்க்கம் இந்த உலகத்தில் கிறிஸ்தவ மார்க்கம் மட்டுமே.

பாவமும், பாவிகளும், குற்றவுணர்வும், தேவனற்ற நிலையும், பிரிவும், துன்பமும், உள்ள இந்த உலகத்தில் சிலுவையே, இரட்சிப்புக்கான தேவ பெலனாக உள்ளது. உலகத்தின் அடிப்படைப் பிரச்சனைகள் எல்லாவற்றிற்கும் சிலுவை ஒரு தெய்வீகத் தீர்வாக உள்ளது. அவரே நமது பாவங்களுக்கான கிருபாதார பலியாவார்-அதாவது நாம் செய்த தவறுகளுக்கு அவர் கிரயம் செலுத்தி நமக்கு எல்லாவற்றையும் சரி செய்தவராக இருக்கிறார். "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" (1 கொரி. 1:18) என்று எழுதப்பட்டுள்ளது. "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவா. 2:2).

தேவனிடத்திலிருந்து பிரிதல் மற்றும் தேவனுடைய ஐக்கியத்தை விட்டு விலகுதல் போன்ற நமது ஆவிக்குரிய முரண்பாடான நிலையில் சமாதானத்திற்கும், ஒப்புரவாகுதலுக்குமுரிய தேவனுடைய கருவியாக சிலுவை உள்ளது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் ..." (கொலோ. 1:20) என்று பவுல் எழுதினார். எபேசியருக்கு எழுதின நிருபத்தில் 2:14-16ல் "எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து ... பகையைச் சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" என்று கூறுகிறது.

ஆவிக்குரிய பசியும், ஏழ்மையும் எங்கு தீவிரமாயுள்ளதோ அங்கு தேவன் முழு இரட்சிப்பை அளிக்கின்றார். நீதியின் ஐசுவரியங்கள் சிலுவையின் அடிவாரத்தில் இலவசமாய் வழங்கப்படுகின்றன. பவுல், "நாங்களோ, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், ..." (1 கொரி. 1:23) என்றார். மேலும் அவர், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து, "தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்" (1 கொரி. 1:31) என்றும் கூறினார்.

வேதத்தின் மையச் செய்தியாக, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே மையப் பொருளாக பரிசுத்த ஆவியானவர் வெளிச்சம் போட்டுக் காட்டுவது கேள்விக்கப்பாற்பட்டதாயுள்ளது.

*ஏனென்றால், சிலுவையானது இரட்சிப்பின் எல்லா சத்தியங் களோடும் கலந்துள்ளது. எனவே ஊற்றிலிருந்து ஒரு நீரோடை கிளம்பிச் செல்வது போல், சூரியனிலிருந்து சுகமளிக்கும் கதிர்கள் கிளம்பிச் செல்வது போல் சபையானது சிலுவையிலிருந்து புறப்பட்டு வரக் கூடியதாயுள்ளதென்று ஒருவர் எதிர்பார்க்கலாம். புதிய ஏற் பாட்டைக் கவனித்துப் படித்தால் இது உண்மை என்பது உறுதியாகும். கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமோ, சபையில்லாத கிறிஸ்தவமோ இருக்க முடியாது: உடலில்லாத தலையோ, தலையில்லாத உடலோ உயிர் வாழ முடியாது என்பதை தர்க்கரீதியான சிந்தனை நமக்குக் கூறுகிறது. சிலுவையும், சபையும் ஒன்றாக இணைந்துள்ளன, ஒரு திட்டத்தில் இணைந்துள்ளன; இழந்து போன மனித குலத்திற்கு தேவனுடைய கிருபையின் ஈவாக இது உள்ளது என்ற செய்தியே புதிய ஏற்பாட்டின் முக்கியமான அம்சமாகும். உலகத்தில் உள்ள எல்லா நாடுகளில் இருந்தும், தேவன் சிலுவையின் மூலமாக ஒரு புதிய குடும்பமாவதற்கு- கிறிஸ்துவில் ஒரே உடலாவதற்கு - அவருடைய தெரிந்து கொண்ட ஜனங்களாயிருப்பதற்கு அழைப்பு விடுக்கிறார்.*

*இந்தச் சிந்தனையை இன்னும் ஆழமாய் சீர்தூக்கிப் பார்ப்போம். சபை எவ்விதம் சிலுவையுடன் இணைக்கப்படுகிறது? சிலுவையும் சபையும் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவு என்ன? சிலுவை யானது சபைக்கு என்ன செய்கிறது?*

## அதினால் உண்டாக்கப்பட்டது

*முதலாவது, சிலுவை சபையை உண்டாக்குகிறது. பாவிகளின் இரட்சிப்பு மூலமாகவே சபை வெளித்தோன்றுகிறது. சிலுவை யில்லையேல், சபை இருக்க முடியாது.*

*கிறிஸ்துவைத் தனது இரட்சகராகவும், தேவனுடைய குமாரனா கவும், ஒருவர் விசுவாசித்துக் கீழ்ப்படிகிறபோது, கிறிஸ்துவின் இரத்தத்தில் அவர் பாவங்களறக் கழுவப்படுகிறார் (அப். 22:16). இந்தக் கழுவுதலின் மூலம் அவர் இரட்சிக்கப்பட்ட கூட்டமாகிய, "சபை" என்று புதிய ஏற்பாடு அழைக்கின்ற இரட்சிக்கப்பட்ட சமுதாயத்தில் சேர்க்கப்படுகிறார். இந்தக் காரணத்தினாலேயே, இயேசு தமது இரத்தத்தை விலையாக கொடுத்து சபையை வாங்கினார் என்று பவுல் பேச முடிந்தது. எபேசுவின் மூப்பர்களுக்கு அவர், "உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக்*

கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப். 20:28) என்று கூறினார். சபைக்காகவே இயேசு, சிலுவையில் மரித்தார் என்பது தெளிவு. பவுல், "... அப்படியே, கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:25, 27) என்று சொன்னார். இயேசுவின் மரணத்தின் முக்கிய நோக்கமாவது: "வெளியே - அழைக்கப்பட்ட" ஜனக் கூட்டத்திற்கு இவ்வுலகத்திலேயே கிறிஸ்துவுடனான ஐக்கிய வாழ்வைக் கொடுப்பதற்கும், அவர்கள் தங்களையே அவருடைய ஆவிக்குரிய ஊழியத்திற்கு அர்ப்பணிப்பதற்குமேயாகும். பவுல், தீத்துவுக்கு, "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சுத்திகரிக்கும் படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்." (தீத்து 2:14) என்று கூறினார்.

தெற்கு அர்க்கான்சாஸ் பகுதியில் ஒரு இரவில் சுவிசேஷக் கூட்டம் ஒன்றில் நான் செய்தியளித்து முடித்தபோது, வித்தியாசப்பட்ட, மனதைத்தொடும் ஒரு கதையுடன் ஒரு பெண்மணி என்னிடம் வந்தார். டெக்ஸாஸில் உள்ள டல்லாஸ் என்ற இடத்தில் அவர்கள் நான்கு வயதான சிறுபிள்ளையாயிருந்தபோது நேர்ந்த விஷயத்தை அவர் என்னிடம் சொன்னார். அச்சமயம், அவர்கள் குடும்பம் போக்கு வரத்து நிறைந்திருந்த ஒரு சாலையினருகே வாழ்ந்தது. அவர்கள் வீட்டில் இருந்த திறந்த வெளியானது குழந்தைகள் வெளியே விளையாட ஒரு சிறு இடமளித்தது. ஒருநாள் மாலை, அப்பெண்ணும், அருகிலிருந்த அநேக குழந்தைகளும் திறந்த வெளியில் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அந்தப் பந்து குதித்து வெளியேறி சாலையில் சென்று விழுந்து விட்டதாக அப்பெண் கூறினார். சிறிதும் சிந்தியாமல், அப்பெண் அதைத் தொடர்ந்து ஓடியிருக்கிறாள். அதை அடைந்த போது, குனிந்து பந்தை எடுத்து நிமிர்ந்து பார்க்கிறாள் ... ஒரு பெரிய வாகனமானது அந்தச் சாலையில் வேகமாக வருவதைப் பார்த்துப் பயத்தில் உறைந்து போகிறாள். அச்சமயத்தில் அவளுடைய ஒன்பது வயதான அண்ணன் அவளைப் பார்த்துவிட்டு, சாலையில் ஓடி வருகிறான். அவனும் அந்த வாகனத்தைப் பார்த்து விட்டான். மின்னல் போல் அவன், அவள் பிறகே ஓடி, அவளைப் பத்திரமாய்க் கொண்டு வர நம்பிக்கையாயிருந்தான். அந்த வாகனத்தின் முன்பாக அவன் ஓடி,

*அவளை சாலையிலிருந்து புறம்பே தள்ளி விட்டான், தன்னுடைய உயிரைப் பணயமாக வைத்து அவளை மரணத்திலிருந்து காத்தான். அந்தச் சுருக்கமான நேரம், அவனுடைய தங்கையைப் பாதுகாக்கப் போதுமானதாயிருந்தது. ஆனால் அவன் தன்னுடைய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. அவ்வாகனமானது அவன்மேல் ஏறி நசுக்கி உடனே அவனைக் கொன்று விட்டது.*

*அந்தத் துன்பகரமான சம்பவத்தின் எல்லா விஷயங்களையும் தன்னால் நினைவு கூர முடியவில்லை என்றும், ஆனால், தன்னுடைய சகோதரனின் உயிரற்ற உடல் தெருவிலிருந்து எப்படி தூக்கப்பட்டு, அவர்கள் வீட்டின் முற்றத்தில் ஒரு மருத்துவ வண்டி வரும் வரையில் கிடத்தப்பட்டிருந்தது என்பதைத் தன்னால் மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வர முடிவதாக அந்தப் பெண் கூறினார். "எனது சகோதரன் எனக்காக மரித்தான்" என்று ஆழமான பொருளுடன், விசேஷித்த நன்றியுள்ள வார்த்தைகளை அப்பெண் கூறினார். அப்பெண்மணி ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவளாக ஆகி இருக்கிறார். ஆனால் சபையில் அவரது வாழ்வு, மற்றும் இன்றைய நாட்களில் அவரது ஊழியம் ஆகியவை, அநேக வருடங்களுக்கு முன் அவருடைய சகோதரனின் தியாகத்தின் மூலம் உண்டாக்கப்பட்டதாயிருக்கிறது.*

*இது போன்ற, இன்னும் சற்று ஆழமான விதத்திலே இயேசுவின் தியாகத்தினால் சபை உயிர் பெற்றுள்ளது. அவருடைய மரணமானது, நமக்கு ஜீவனுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை மட்டுமின்றி, தொடர்ந்து அதில் நிலைத்திருக்க ஆதாரமாகவும் உள்ளது. அவருடைய மரணமானது நமது கிருபாதார பலியானது, நமது கடந்த காலப் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கும் வழியானது. இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். தேவ மனிதராக நம்மிடையே நடந்தார். அவருடைய மரணத்தினால் நம்மை "அவருக்குச் சொந்தமான ஜனமாக" (1 பேது. 2:9) வாங்கினார். செங்கல் மற்றும் சிமெண்ட் கலவையால் சபை உண்டாக்கப்படவில்லை: அது இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்ட ஜனங்களால் ஆனது.*

*கிறிஸ்துவின் தியாகத்திற்கு நாம் மூன்று வழிகளில் பதிலளிக்கிறோம். முதலாவது, கிறிஸ்து நமக்காக செய்த கிரியையைப் பாராட்டுவதற்காக சிலுவையை அணைத்துக் கொள்கிறோம். இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் கிருபையின்மேல் நன்றியுள்ளவர்களாய், மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர்! கிறிஸ்து பரலோக ஐசுவரியம் நிறைந்தவராயிருந்தார்; இருப்பினும் நமக்காக அவர்*

ஏழையாகி, பரலோகத்தை விட்டு, மனிதனாக வந்தார். அவரது தரித்திரத்தின்மூலம் நாம் ஆவிக்குரிய ஐசுவரியவான்களாகும்படி அவர் அப்படியானார் (2 கொரி. 8:9). இரண்டாவது, அவருடைய மரணத்தின் பலன்களை ஏற்கின்ற பதில்செயலை நாம் செய்ய வேண்டும். உண்மையான பாராட்டுதல் என்பது சரியான முறையில் ஏற்றுக்கொள்ளும்படி நம்மை வழி நடத்துகிறது. கிறிஸ்துவின்மேல் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இவைகளினால், அவருடைய மரணத்தின் பலன்களை நமது வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளுகிறோம் (ரோமர் 6:1-4). அவர் எல்லாருக்காகவும் மரித்தார் (எபி. 2:9), ஆனால் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே, அவருடைய மரணத்தின் பலன்களைப் பெறுகின்றனர் (எபி. 5:8, 9). மூன்றாவது, அவருடைய தியாகத்திற்கு நாம், நமது *அளவில்லாத ஊழியத்தினால்* பதில் அளிக்க வேண்டும் (1 கொரி. 15:58). நமது நாவிலிருந்து, பாதம் வரை நாம் கிறிஸ்துவினுடையவர்கள்- சரீரம், ஆத்துமா மற்றும் ஆவி (1 கொரி. 6:19, 20) அனைத்தும் அவருடையது. எனவே இவ்வுலகத்தில் இப்பொழுது அவர் வடிவமைத்து, இயக்கி, மகிழும் வகையில் நமது ஊழியத்தை நாம் நிறைவேற்ற வேண்டும்.

## அதினால் சுத்திகரிக்கப்படுகின்றது

இரண்டாவது, சிலுவையானது சபையைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறதாயிருக்கிறது. தேவனுடைய ஜனங்களிடத்திற்கு, அவர்கள் மூலமாகவே அதனுடைய சுத்திகரிக்கும் வல்லமை தினமும் பாய்ந்தோடுகிறது. நமது உடலில் இரத்தம் தொடர்ந்து ஓடி, நம்மைத் தாங்கி, சுத்தப்படுத்துவது போலவே, இயேசுவின் விலை மதிப்பற்ற இரத்தம் அவருடைய ஜனங்களுக்குள்ளாக ஜீவனை நிலைநிறுத்தி பெலப்படுத்தும்படியாக பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது.

இரட்சிக்கப்பட்டால் மட்டும் போதாது. மாறாக இரட்சிக்கப்பட்ட நிலையைப் பாதுகாத்துக் கொண்டிருக்க வேண்டும். பாவியான ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய இரத்தத்தில் கழுவப்பட்டு, தேவ கிருபையினால் கிறிஸ்துவுக்குள்ளாகும் ஒவ்வொரு சமயமும், சபை உண்டாக்கப்படுகிறது. கிறிஸ்தவர் தினமும் வெளிச்சத்தில் நடக்கின்ற போது, தொடர்ந்து அந்த இரத்தத்தினாலே கழுவப்படுகிறார். யோவான், "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்

*பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்'' (1 யோவா. 1:7) என்று எழுதினார். யோவான் இங்கு பயன்படுத்தும் "சுத்திகரிக்கும்" என்ற நிகழ்கால செய்வினைச் சொல்லானது கிரேக்க மொழியில் நிலையாக, தொடர்ந்து, நிகழ்காலத்தில் நடக்கின்ற செயலைக் குறிப்பதாகும்.*

*பாவம் செய்வதைக் குறைக்கத் தேடி, ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்குள் வளருவதை நாடினாலும், ஒரு கிறிஸ்தவர் பூரணமான மனிதரல்ல. அவர் பிழையற்றவரென்பதல்ல. ஆனால், அவர் குற்றமற்றவராயிருக்க வேண்டும். பாவியினுடையை வாழ்க்கையில் உள்ள பாவம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் அவர் இரட்சிப்படைய வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில் உள்ள பாவம், அவர் அல்லது அவள் கிறிஸ்துவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து இருக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. இந்த உலகத்தில் பாவ மன்னிப்பிற்கான நமது தேவையை எப்பொழுதுமே நாம் முற்றிலும் ஒழித்து விட இயலாது.*

*நமது குழந்தைகள் சிறுவர்களாக இருக்கும்போது, அவர்கள் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதைக் கவனித்தல் நன்றாக இருக்கும். இந்தப் புதிய திறமையை பெறுவதில் அவர்கள் இரண்டு அடிப்படைப் பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர்: சைக்கிளை நேராகப் பிடித்து மற்றும் தொடர்ந்து அதை நேராக வைத்துக் கொள்வது. சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதில் உள்ளதைப் போன்றே இரட்சிப்பும் இரண்டு படிகளையுடையதாக நோக்கப்படலாம்: பாவியான ஒருவர் முதலாவது, தேவனுடன் நேராக வேண்டும்; பிறகு அவர் தேவனுடன் நேராக தொடர்ந்து இருக்க வேண்டும். நேராகுதல் என்பது அவசிய மானதே என்றாலும் அது வெறும் தொடக்கம்தான். தொடர்ந்து அவர் கழுவப்படவில்லையென்றால், முதலாவது அவரைத் தீர்ப்பிட்ட அவருடைய வாழ்வின் பாவக் கறைகள் கிறிஸ்தவரான பின்பும் அவரைத் தீர்ப்பிடக் கூடிய பிரச்சனை உண்டு (அப். 8:22). கிறிஸ்தவரா வதற்கு முன்பு ஒருவர் தமது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டிய தேவை இருந்ததென்றால், கிறிஸ்தவரான பின்பு ஏதேனும் பாவம் செய்தால், அதை நரகம் தனக்கேற்றதாய் ஆக்காமல் இருக்க, அப்பாவத்திலிருந்தும் அவர் இரட்சிக்கப்பட வேண்டியது அவசியமல்லவா?*

*கிறிஸ்தவர் "ஒளியில் நடக்கின்ற வரையிலும்" இரட்சிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார். அப்போஸ்தலராகிய யோவான் எழுதியபடி, ஒளியில் நடப்பது என்பது ஆவிக்குரிய இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளதாகும்: இரட்சிப்புக்கு இயேசுவில் நம்பிக்கை கொள்வதுடன் அது தொடங்குகின்றது: "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவா. 2:2). நாமே நமது இரட்சிப்பை சம்பாதித்துக் கொள்ள முடியாது என்பது தெளிவு (எபே. 2:8, 9). விசுவாசத்துடன் கூடிய கீழ்ப்படிதலினால் நாம் இயேசுவுக்கு பதில்செயல் செய்தால் அவர் நம்மை இரட்சிப்பதாகக் கூறுகின்றார். அவர் கூறியதை அவர் செய்வார் என்று அவரை நாம் நம்ப வேண்டும். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கின்றோம் (2 கொரி. 5:6).*

*ஒளியில் நடப்பது என்பதற்கு அவருடைய சித்தத்தை நேர்மையுடன் செய்வதும் தேவைப்படுகின்றது. யோவான், "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தின் அன்பு கூருவதாம் ..." (1 யோவா. 5:3) என்று எழுதினார்; "அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்" (1 யோவா. 2:4, 5அ). நமது பாவம் நிறைந்த நிலையை ஒப்புக் கொள்வது என்பதே ஒளியில் நடப்பதின் அர்த்தமாகும் (1 யோவா. 1:8, 10), நமது பாவங்களை தேவனிடத்தில் ஒப்புக் கொள்ள வேண்டும் (1 யோவா. 1:9), மற்றும் நமது திறமைக்கு ஒத்திசைவுள்ள வகையில் நமது பாவங்களை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் (1 யோவா. 2:29). அவர் நடந்தது போலவே நாமும் நடப்பது (1 யோவா. 2:6) மற்றும் தேவனிடத்திலிருந்து வந்த ஏவப்பட்ட வெளிப்பாடுகளான வேதவசனங்களைப் பின்பற்றுவது என்பதே இதன் அர்த்தமாகும் (2 தீமோ. 3:16).*

## அதினால் வற்புறுத்தப்படுகிறது

*மூன்றாவதாக, சிலுவையானது சபையை வற்புறுத்துகின்றது மற்றும் அதை செயல்படும்படி தூண்டுகின்றது. சபையாரின் இருதயங்களில் கிறிஸ்து விரும்புகிறபடி இருக்கும் எண்ணத்தையும்,*

*கிறிஸ்து செய்யும்படி கூறுகின்ற ஊழியத்தைச் செய்யும் எண்ணத்தையும் ஆவிக்குரிய உற்சாகத்தையும் அது விதைக்கின்றது.*

*தொடர்ந்து சுத்தப்படுத்தப்படுதலும், சொந்த வல்லமையும் கிறிஸ்தவர்களுக்குத் தேவை. கிறிஸ்தவமானது அநேக மாண்புமிக்க உத்வேகங்களைத் தருகின்றது; தேவனுடைய கிருபையானது மிக உயர்ந்ததாகவும், நிலையானதாகவும் இருக்கின்றது. சிலுவையானது கிறிஸ்தவர்களின் வாழ்வைக் கட்டுப்படுத்துகின்றது. இயேசு, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவா. 12:32) என்று கூறினார். பவுல், "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரி. 5:14, 15) என்று எழுதினார்.*

*கிறிஸ்தவர்கள் தேவன் மேலும், ஒருவர் மற்றொருவர் மீதும் மாபெரும் அன்பு கொள்ளும்படி சிலுவை அவர்களை நிரப்புகின்றது. யோவான், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவா. 4:19) என்று எழுதினார். அவரது மக்கள் மேல் அவர் செலுத்தும் அன்பை அன்றாடம் தியானிக்கும் கிறிஸ்தவர்கள் அவரில் இன்னும் ஆழமாய் அன்பு கொள்ளும்படி ஈர்க்கப்படுகின்றார்கள். மேலும் யோவான், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவா. 3:16) என்றும் எழுதினார். இயேசுவின் வாழ்வு பற்றிய எந்த ஒரு மறு கண்ணோட்டமும், அவருடைய அன்பின் ஆழம் மற்றும் உறுதித்தன்மை ஆகியவை பற்றிய புதிய மற்றும் ஊக்கமான சித்தரிப்புகளை உண்டாக்குகின்றது. இந்த சித்தரிப்புகளைப் பற்றி எண்ணும் கிறிஸ்தவர்கள், இயேசுவின் மேலும், ஒருவரொருவர் மேலும் அந்த அன்பைப் பெறுகின்றனர். "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து, மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18).*

*பாவத்தின்மேல் ஒரு ஆழ்ந்த வெறுப்பையும், புறக்கணிப்பையும்*

சிலுவையானது கிறிஸ்தவர்களிடத்தில் பதியச் செய்கின்றது. துன்மார்க்கம் மற்றும் பாவத்தினால் ஏற்படும் பேரழிவு ஆகியவற்றிற்கு கல்வாரிச் சிலுவையும், நித்திய அழிவின் அடிகாணாப் படுகுழியும் இரண்டு வல்லமையுள்ள சாட்சியங்களாக இருக்கின்றன. சிலுவை யின் காரணத்தையும், நரகத்தின் அவசியத்தையும் புரிந்து கொண்டவர் எவரும் பாவம் செய்வது தகுதியானது என்று வாதம் செய்ய முடியாது. தேவனுடைய பிள்ளையாயிருக்கிறவர் எவரும், எருசலேமுக்குப் புறம்பே ஒரு சிலுவையில் தேவனுடைய குமாரன் பெற்ற பாடுள்ள மரணத்தினாலே தனது மீட்பு விலை கொடுத்து வாங்கப்பட்டது என்பதை மறக்க முடியாது. தமது குமாரனைப் பலியாக ஒப்புக் கொடுத்ததின் மூலமாக மட்டுமே எல்லாம் வல்ல தேவன் பாவத்தை ஈடுசெய்ய (கிரயம் செலுத்த) முடிந்தது. இந்த மதிப்பு மிக்க நிகழ்ச் சியானது உணர்வுள்ள ஒவ்வொருவரையும் பாவத்தை அருவருத்துப் புறக்கணிக்கச் செய்ய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தங்களை முழுமையாக கிறிஸ்துவின் ஊழியத் திற்கு ஒப்புக்கொடுக்கும்படி சிலுவையானது அவர்களை பலவந்தம் பண்ணுகிறது. இது கிறிஸ்தவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்யவும், பிறஜனங்களுக்கு உதவி செய்யவும், ஒரு காரணத்தையும், பெலத்தை யும் அவர்களுக்குத் தருகிறது. பவுல், ‘‘கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியா யிருக்கின்றேன் (ரோமர் 1:14) என்று எழுதினார். மேலும் அவர், “ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது” (1 கொரி. 15:10) என்று கூறினார். சிலுவையில் தேவன் தனக்குச் செய்ததை நேர்மையாகப் புரிந்து, பாராட்டாதவரையில் கிறிஸ்தவர் எவரும் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்ய முழுவதும் உந்தப்படுவது இயலாது.

கிறிஸ்துவின் சபையானது தனது கர்த்தரின் கட்டளைகளைக் கருத்தாய்க் கைக்கொள்கிறது. அவருடைய விருப்பத்தையே செய்து, அவருடைய திட்டத்தையே நிறைவேற்றுகிறது. ஆனாலும் அவருடைய கிருபையினால் ஏற்படும் உள்ளான உற்சாகம் மற்றும் தொடர்ந்து அவர் காண்பிக்கும் பெலத்த அன்பு இவைகளினால், இந்த கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை ஒரு சுமையாகத் தெரிவதில்லை, “நாம்

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல'' (1 யோவா. 5:3).

கிறிஸ்து உங்களுக்கு செய்துள்ளதை மனதில் வையுங்கள், அவர் உங்களுக்காகச் செய்த தியாகத்தை தினந்தோறும் நினைத்துப் பாருங்கள். அவருடைய இரட்சிப்பின் ஈவை நீங்கள் ஜாக்கிரதையாய் நினைக்கும்போது, அது நாளுக்கு நாள் உங்களை அவருடைய சாயாலாக்கி, அவரது கிருபையின் இராஜ்யத்திற்குள் உங்களை ஊழியம் செய்யும்படித் தூண்டக் கூடும்.

## முடிவுரை

தேவனுடைய அமைப்பினால் சிலுவையும் சபையும் ஒன்றாகக் கட்டியணைக்கப்பட்டுள்ளன. சபையானது சிலுவையினால் உண்டாக்கப்பட்டு, கழுவப்பட்டு, வற்புறுத்தப்படுகின்றது.

இயேசு சிலுவையிலே பாடுகள்பட்ட வேளையில், அந்தச் சிலுவையின் கீழ் நின்றிருந்த நியாமற்ற கூட்டத்திடமிருந்து வந்த இரண்டு ஏளனமான கேள்விகள் அவரைச் சுற்றிச் சுழன்றன: "இவன் ஏன் தன்னை இரட்சித் துக் கொள்ள முடியவில்லை?" மற்றும், "தேவன் ஏன் இவனை இரட்சிக்கவில்லை?" (மத். 27:39-43ஐக் காணவும்). தேவனுடைய ஊழியத்தின் அஸ்திபாரத்தையே தாங்கள் தாக்குவதை அந்தக் கூட்டத்தார் சற்றும் உணரவில்லை. இயேசு தம்மையே இரட்சித்துக் கொண்டிருந்தாலோ அல்லது சிலுவை மரணத்திலிருந்து தேவன் அவரை விடுவித்திருந்தாலோ சபை பிழைத்திருப்பது என்பது முடியாததாகியிருக்கும்; ஏனென்றால் கடந்தகாலப் பாவங்கள் சிலுவையினாலே மன்னிக்கப்பட்டு, அன்றாடம் சிலுவையினாலே சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படுகின்ற மக்களாலேயே சபை ஏற்பட்டிருக்கின்றது. மேலும், சிலுவையில்லையென்றால், சபை தனது அன்றாட வாழ்விற்கான உந்து சக்தியைப் பெற்றிருக்க முடியாது, ஏனென்றால் தேவனுடைய மக்களாயிருந்து, தேவனுடைய ஊழியத்தைத் தேவனுடைய வழியிலேயே செய்கின்ற சபையானது சிலுவையினால்தான் வற்புறுத்தப்படுகின்றது.

நீங்கள் கிறிஸ்துவின் சபைக்குப் புறம்பே இருந்தால், அதற்குள் பிரவேசிக்க விரையுங்கள், ஏனென்றால் சபைக்குள் பிரவேசிக்கும்போது நீங்கள் சிலுவையின் எல்லாப் பயன்களையும் பெறுகின்

றீர்கள். சபை என்பது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக வாழும் மக்களடங்கிய சரீரமே தவிர வேறல்ல.

தேவனுடைய தாராளமான வரங்களால் சூழப்பட்டவராகவே இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு நபரும் இருக்கின்றார். அவர் நமக்கு சுவாசிக்கக் காற்றையும், குடிக்கத் தண்ணீரையும், வாழ்வதற்கு பூமியையும், மகிழ்ச்சியடைய குடும்ப உறவுகளையும் மற்றும் எண்ணற்ற நலன்களையும் கொடுத்துள்ளார். தேவனுடைய இந்த அன்பு முழுவதையும் எண்ணிப் பார்க்காத ஒருவர் நஷ்டமடைவார். கிறிஸ்துவின் மூலமாக அவர் நமக்குக் கொடுத்துள்ள இரட்சிப்புத்தான் அவரது கிருபையின் மேன்மையான வெளிப்பாடாக இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. அது தேவன் செலுத்திய மிகப்பெரிய விலைக் கிரயமாகும். அதைப் பெறும் பாவிகள் அதன் உயர்ந்த பலன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

அநேகர் தங்களின் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களில் தேவனுடைய கிருபையுள்ள கரத்தைப் பார்த்திருக்கின்றார்கள், ஆனால் அவரது இரட்சிப்பை அவர்கள் பெற்றிருப்பதில்லை. உங்களைப் பொறுத்தமட்டில் இது உண்மையா? கிறிஸ்துவின்மேல் விசுவாசத்தினாலும் (ரோமர் 10:10), பாவத்திலிருந்து மனந்திரும்புவதாலும் (அப். 11:18), கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதாலும் (ரோமர் 10:10), மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப் படுவதாலும் (கலா. 3:27) நீங்கள் கிருபையின் இடமாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் (1 கொரி. 12:13) பிரவேசித்து, அவருடைய நித்திய ஜீவனைப் பெறலாம். பவுல், “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?” (ரோமர் 6:3) என்று கூறினார்; “அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் ... எங்களிடத்தில் பெருகப் பண்ணினார்” (எபே. 1:7, 8அ).

இயேசு, தமது சபையாகிய சரீரத்தில் உண்டாக்கியுள்ள பாவமன்னிப்பு மற்றும் ஜீவனுக்கென்று சிலுவையின் மூலமாக உங்களை அழைக்கின்றார். அவரது அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

## பாட வினாக்கள்

*(விடைகள் 311 ம் பக்கங்களில்)*

1. *வேதாகம வரலாற்றின் இருதயம் போன்ற மையப்பகுதி எது?*
2. *மற்ற மார்க்கங்கள் பெற்றிராத ஆனால் கிறிஸ்தவம் தனது மையப்பகுதியாகப் பெற்றுள்ள விஷயம் எது?*
3. *சபையில்லாத கிறிஸ்தவம் இருக்க முடியாது என்பது ஏன் என்பதை விளக்குக.*
4. *சிலுவையானது சபைக்குச் செய்துள்ள மூன்று செயல்கள் என்னென்ன?*
5. *அநேகர் தங்களின் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களில் தேவனுடைய கிருபையுள்ள கரத்தைப் பார்த்திருக்கின்றனர், ஆனால் அவரது இரட்சிப்பை அவர்கள் பெற்றிருப்பதில்லை. நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தினுள் எப்படிப் பிரவேசிக்க முடியும்?*
6. *எந்த இரண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாக இயேசு தமது சிலுவையின் மூலம் உங்களை அழைக்கின்றார்?*
7. *மன்னிப்பையும் ஜீவனையும் பெறும்படியாக வந்த மக்களால் இயேசுவின் சரீரம் உண்டாக்கப்பட்டது. அந்த சரீரம் என்னவென்று அழைக்கப்படுகின்றது?*

## வார்த்தை உதவிகள்

***சபையின் தலை*** - இயேசு கிறிஸ்து (எபே. 1:22, 23).

**கிரயத்துக்குக் கொள்ளப்படுதல்** - வாங்கப்படுதல். கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக் கிறார்கள்" என்று நாம் கூறும் பொழுது, அது நமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரணமடைந்ததைக் குறிப்பிடுகின்றது.

**ஒப்புரவாகுதல்** - மறுபடியும் ஒன்றாகக் கூட்டுதல்; உடைந்த உறவுகளைச் சரி செய்தல், இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்படுகின்றோம்.

***பரிசுத்தப்படுத்துதல்*** - தேவனுடைய விசேஷ நோக்கத்திற்காகப் "பிரித்தெடுத்து வைக்கப்படுதல்"

***மறுரூபமடைதல்*** - மாற்றப்படுதல். இயேசுவின் உருவுக்கொப்பான புதிய பண்பைப் பெறுவதற்கு கிறிஸ்தவர்கள் மாற்றப்பட வேண்டிய தாக உள்ளது. ரோமர் 12:2ல் "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு

ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” என்று கூறப்படுகின்றது.

[1]Henry C. Thiessen, *Lectures in Systematic Theology* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1949), 313. [2]R.A. Torrey, *What the Bible Teaches* (New York: Fleming H. Revell Co., 1898), 144.

# 10

# "சபை" என்றால் என்ன?

இன்னொரு நாடு மற்றும் கலாச்சாரத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் அமெரிக்கா நாட்டில் நீண்ட நாள் சுற்றிப்பார்க்கும்படியாகப் பயணம் செய்வதற்கு விரும்பினார். ஆங்கிலம் கற்றுக் கொள்ளக் கடினமாக உழைத்த அவர் தமது பயணத்திற்குத் தாம் தயாராகி விட்டதாக நம்பினார். அவர் நீண்டநாள் ஆவலுடன் காத்திருந்த தம் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டு அவர் ஒரு சிறிய மளிகைக் கடைக்கு அநேக பொருட்களை வாங்கும்படி சென்றார். பணம் செலுத்துமிடத்தில் அவர் எவ்வளவு பணம் தர வேண்டும் என்று கூறப்பட்டது. அவர் தனது பைக்குள் கை விட்டு, பணத்தை எடுத்து, சரியான தொகையை எண்ணி, அதை குமாஸ்தாவிடம் கொடுத்தார். தாம் வாங்கிய பொருட்களைப் பையில் போட்டுக் கொண்டு புறப்படத் தயாரானார். அவர் கதவைக் கடந்து வெளியேறும்போது, குமாஸ்தா, "மறுபடியும் வாங்க!" என்றார். அந்தப் பார்வையாளர் நின்று, பின்திரும்பி, பணம் செலுத்துமிடத்திற்குத் திரும்பவும் வந்தார். அந்த குமாஸ்தா அவரிடம், "நான் உங்களுக்கு உதவலாமா?" என்றார். குழம்பிப்போன அந்த மனிதர், "நீங்கள் என்னை மறுபடியும் வரச் சொன்னீர்களே!" என்றார்.

"பொருட்களை நீங்கள் வாங்கியதற்கு நன்றி; நாங்கள் விரைவிலேயே மறுபடியும் உங்களுக்கு உதவுவதற்கு விரும்புகின்றோம்" என்ற பொருள்படும் வகையில் அக்கடையில் உள்ளவர் அவ்வாறு கூறினார். அவர் கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்டதால் அங்கு செய்தித் தொடர்பில் ஒரு தவறு ஏற்பட்டது.

நாம் எல்லோருமே இவ்வித அனுபவத்தைப் பெற்றிருக்கக் கூடும். நம்மிடத்தில் பேசப்பட்ட வார்த்தைகளை நாம் புரிந்து கொண்டிருக்கின்றோம், ஆனால் பேசியவர் எந்த அர்த்தத்தில் பேசினார் என்பதை

நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம். நாம் வார்த்தைகளைப் புரிந்து கொண்டிருந்தும், அவை உணர்த்தும் அர்த்தத்தை முற்றிலுமாகத் தவற விட்டு விடுகின்றோம்.

எந்த வகையில் பார்த்தாலும், செய்தித் தொடர்பு என்பது கடினமானதாக உள்ளது. செய்தித் தொடர்பு சரியான முறையில் நடப்பதற்குப் பேசுபவரும் கேட்பவரும் நிறையச் செய்ய வேண்டியது தேவைப்படுகின்றது.

இந்த செய்தித் தொடர்புச் செயல் முறையை, வேதாகமத்தைப் படிப்பதற்கு நாம் நடைமுறைப்படுத்துவோம். வேதாகமத்திற்கும் நமக்கும் இடையில் பயனுள்ள செய்தித் தொடர்பு நடக்க வேண்டுமென்றால், பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளை நாம் கவனித்தால் மட்டும் போதாது, ஆனால் ஏவப்பட்ட எழுத்தாளர்கள் அந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திய போது அவர்களின் சிந்தனையில் இருந்தது என்ன என்பதையும் நாம் தேடி அறிய வேண்டும். ஒரு வார்த்தை அல்லது வாக்கியம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி எடுக்க வேண்டும். தேவன் தமது செய்தியில் கூற வந்த பொருள் என்ன என்பதை நாம் நேர்மையான உணர்வுடன் தேடி அறிய வேண்டும்.

“சபை” என்ற வார்த்தை நம்மில் அநேகருக்கு மிகவும் பழக்கப் பட்டதாகும். இந்த வார்த்தையைப் பற்றி தேவன் வேதவசனங்களில் அதிகமாகவே பேசியிருக்கின்றார். இந்த வார்த்தையைப் பற்றி, தேவனுக்கும் நமக்கும் இடையில் சரியான முறையில் செய்தித் தொடர்பு நடக்க வேண்டுமென்றால், வேதாகம உலகத்தில் நாம் சென்று, இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தேவ ஆவியினால் ஏவப்பட்டு வேதாகம வார்த்தைகளை எழுதியவர்கள் ஆகியோர் கொடுத்துள்ள இந்த வார்த்தையின் அர்த்தம், விளக்கங்கள் மற்றும் அவர்களின் எண்ண உருவாக்கம் ஆகியவற்றை அறிவதற்கு விருப்ப முள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

“சபை” என்றால் என்ன? புதிய ஏற்பாட்டில் உள்ள இருபத்தியேழு புத்தகங்களில், பதினேழு புத்தகங்களில்[1] மட்டுமே வெவ்வேறு சந்தர்ப்பப் பொருளில் இவ்வார்த்தை 114 முறைகள்[2] பயன்படுத்தப் பட்டுள்ளதன் மூலம் நமக்கு அறிவிக்கப்படுவது என்ன? இயேசு தமது சபையை நிலை நாட்டியபோது, அவர் கட்டியது என்ன?

## ஆவிக்குரிய ஒரு சரீரம்

*சபை என்பது ஆவிக்குரிய ஒரு சரீரமாக, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகவே இருக்கின்றது என்பதை முதலாவதாக நாம் உணர வேண்டும்.*

*"சபை" என்ற வார்த்தைக்கு நமது சிந்தனையில் ஆராதனை நடக்கின்ற கட்டிடமே வழக்கமாய்த் தோன்றுவது இயல்பு. ஆயினும், இந்த அர்த்தத்தைக் கொடுக்கும் வகையில் புதிய ஏற்பாட்டின் எந்த இடத்திலும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படவில்லை.*

*வேதவசனங்களில் "சபை" என்ற வார்த்தையானது, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, உள்ளூர் அளவில் கூடும் மக்கள் கூட்டத்தை அல்லது இந்நிலையில் உலக முழுவதும் இருக்கின்ற மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடுவதாகவே இருக்கின்றது.*

*முதலாவதாக, இரட்சிக்கப்பட்டவர்களுடைய கூட்டம் தேவனை ஆராதிக்க ஒன்றுகூடி வருகையில் அவர்கள் "சபை" என்று அழைக்கப்படுகின்றனர். கொரிந்து பட்டணத்தில் இருந்த சபையார் ஒன்றுகூடுகையில் அவர்களிடம் ஒருமைப்பாடு குறைந்திருந்ததைக் கடிந்து கொள்ளுகையில் பவுல், கிறிஸ்தவர்களின் கூடுகையைக் குறிப்பிட "சபை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அவர், ".... நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன் ..." (1 கொரி. 11:18) என்று கூறினார்.*

*அடுத்ததாக, "சபை" என்ற வார்த்தை குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் கூடிவரும் இரட்சிக்கப்பட்டவர்களின் அமைப்பைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. கொரிந்து பட்டணத்தில் இருந்த இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம், "கொரிந்துவிலே, ... இருக்கிற தேவனுடைய சபை ..." (1 கொரி. 1:2) என்று அழைக்கப்படுகின்றது.*

*இதற்கும் மேலாக, "சபை" என்ற வார்த்தையானது உலக முழுவதிலும் இரட்சிக்கப்பட்டுள்ள மக்கள் அனைவரையும் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே. 5:23) என்று கூறும்போது பவுல், சபை என்பதை உலகளாவிய விதத்திலேயே குறிப்பிட்டார்.*

*"சபை" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தல*

ருடைய நடபடிகளில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப் படும் விதத்தை நாம் நடைமுறைப்படுத்திப் பார்ப்போம். பெந்தெ கொஸ்தே நாள் அன்று எருசலேமில் தங்கியிருந்த அநேகரும், அங்கு வந்திருந்தவர்களும் (அப். 2:1-4) பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப் பட்டதன் வெளிப்படையான அடையாளங்களைக் கேட்டு, என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைக் காண அப்போஸ்தலர்களைச் சுற்றிக் கூடினார்கள். கூடியிருந்தவர்களுக்குப் பிரசங்கிக்கையில், பேதுரு அவர்களை, இயேசுவே கர்த்தராகவும் இரட்சகராகவும் இருக்கிறார் என்பதை நம்பச் செய்தார் (அப். 2:36). அநேகர் தங்கள் ஆத்தும பாரத்தோடு, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினார்கள் (அப். 2:37ஆ). அவர்களின் விசுவாசமே அவர்களை இவ்வாறு கதறும்படி தூண்டியது, எனவே அவர்கள் விசுவாசிக்க வேண்டும் என்று பேதுரு கூறத் தேவையில்லாதிருந்தது, ஆனால் அவர், அவர்கள் செய்யாதிருந்ததை-மனந்திரும்பி அவர்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுதலை-அவர்களுக்குக் கூற வேண்டியிருந்தது (அப். 2:38). மூவாயிரம் பேர் இரட்சிப்பின் வழியைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு, மனந்திரும்பி, பாவங் களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானப் படுத்தப்பட்டனர் (அப். 2:38-41).

அந்த நாளில் என்ன நடந்தது என்று லூக்கா விளக்குவதைக் கவனியுங்கள். மனந்திரும்பியவர்கள் என்னவாக ஆனார்கள் என்பதை அவர், முதலாவதாக விளக்கினார் (அப். 2:41). கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்தவர்கள் கர்த்தருடைய சபைக்குள்ளாக்கப் பட்டார்கள். ஒரு குழுவின் ஒரே ஐக்கியத்தின் பாகமானார்கள். இரண்டாவதாக, அவர்களின் புதிய நடத்தையைப் பற்றி லூக்கா விளக்கினார். தேவனை நோக்கிய அவர்களின் நடத்தையில் அவர்கள் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றார்கள் (அப். 2:42). இரட்சிக்கப்பட்ட இந்த மக்கள் கூட்டத்தார் தேவனைத் தொழுதுகொண்டு, தெய்வீக அறிவுரைகளை அப்போஸ்தலர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார் கள். அவர்கள் ஒருவரொருவருடனான தங்கள் நடத்தையில் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றிருந்தார்கள் (அப். 2:44, 45). ஒருவரையொருவர் தாங்குதல், பகிர்ந்து கொள்ளுதல், அக்கறைப்படுதல் ஆகியவற்றின் மூலம் அவர்கள் ஒருவரையொருவர் கவனித்துக் கொண்டு-ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, தேவைகள் உள்ளவர்களுடன் பகிர்ந்து கொண்டு, ஒருவர்மேல் ஒருவர் அக்கறையுள்ளவர்களாய் இருந்தார்

கள். விசுவாசிகளின் கூட்டமாகிய இந்த சரீரம், நடபடிகளில் பின்னால், "சபை" என்று குறிப்பிடப்படுகின்றது (அப். 5:11).

எருசலேமில் இருந்த இந்த மீட்கப்பட்டவர்கள் தேவனை ஆராதிக்க ஒன்றுகூடுகையில், அவர்கள் "சபை"யாக (கூட்டமாகக் கூடிய வகையில்) இருந்தார்கள். எருசலேமிலிருந்த இரட்சிக்கப் பட்டவர்கள் அனைவரையும் "எருசலேமின் சபையார்" (உள்ளூர் என்ற வகையில்) என்று குறிப்பிடப்பட முடிந்தது. சபையானது வளர்ந்து பரவியபோது, உலகம் முழுவதிலும் அந்த சமயத்தில் இருந்த இரட்சிக்கப்பட்ட மக்களின் கூட்டத்தை "இயேசு மறுபடியும் வருகையில், தமது சபையை (உலகளாவிய வகையில்) ஏற்று அதைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்லப் போகின்றார்" என்று கூறும் போது, குறிப்பிடப் பட முடிந்தது.

## வாழுகின்ற ஒரு உயிர்ப்பொருள்

இரண்டாவதாக, சபையை நாம் ஒரு உயிர்ப்பொருளாக-வாழுகின்ற ஒன்றாகக் கண்ணோக்க வேண்டியிருக்கின்றது.

இரட்சிக்கப்பட்ட மக்கள் அடங்கிய, "சபை" என்று அழைக்கப் படுகின்ற குழுவைச் சிலர் ஒரு நிறுவனமாக, மனிதரால் ஏற்படுத்தப் பட்ட ஒரு வகைச் சங்கமாக எண்ணுகின்றார்கள். ஒருவர் அதில் சேருகின்றார் அல்லது தனக்கென்று உறுதியெடுத்துக் கொள்ளுகின்றார் என்பதற்கு மேலாக அதை அவர்கள் கண்ணோக்குவதில்லை.

இரட்சிக்கப்பட்ட மக்களின் அமைப்பு என்ற வகையில், சபையானது உயிருள்ள ஒரு பொருளாயிருக்கின்றது, இது ஒரு மனித நிறுவனம் அல்ல. கிறிஸ்து நிலைநாட்டிய சபையானது தேவனுடைய ஜீவன் மற்றும் ஆசீர்வாதங்களுடன் உயிர் வாழ்ந்து, உயிர்த்துடிப்புள்ள தாக இருக்கின்றது; மனித ஞானம், வடிவமைப்பு மற்றும் செயல்பாடு களால் மட்டுமே முழுமையாக சக்தியூட்டப்பட்ட, மனிதரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழுவாக இது இருப்பதில்லை.

கொரிந்துவில் இருந்த சபையைப் பவுல், ஆலயம், பரிசுத்த இடம் அல்லது தேவன் வாழும் இடம் என்று விளக்கப் படுத்தினார். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்க ளென்றும், தேவனுடைய ஆவி உங்களின் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" என்று அவர் 1 கொரி. 3:16ல் கூறினார்.[3] பின்னால், 1 கொரி. 6:19, 20ல் வேசித்தனம் என்பது தனியொரு கிறிஸ்தவர் தனது சரீரத்துக்கு

எதிராகச் செய்யும் பாவம் என்று அவர் கண்டனம் செய்கையில், கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் தேவனுடைய ஆலயமாயிருக்கின்றார் என்று பவுல் சித்தரிக்கின்றார். 1 கொரி. 3:16 ஆனது சபையைக் குறிப் பிடுவதாகும், அது தனியொரு கிறிஸ்தவரைக் குறிப்பிடுவதில்லை.[4] தேவன் தமது மக்களில் வாசம் பண்ணுவதைப் பவுல் உறுதிப் படுத்தினார். அவர் தனிப்பட்ட முறையிலும் (1 கொரி. 6:19, 20) மற்றும் கூட்டமைப்பு முறையிலும் (1 கொரி. 3:16) தமது மக்களில் வாசம் பண்ணுகின்றார். பழைய ஏற்பாட்டின் காலங்களில், வனாந்தரத்தில் ஆசரிப்புக் கூடாரமும், பின்னாளில் எருசலேமின் ஆலயமும் தேவன் வாசம் பண்ணும் இடமாக இருந்தது; ஆனால் கிறிஸ்துவின் யுகத்தில், பவுலின் கூற்றுப்படி, தேவன் தமது சபையில், தமது மக்களில் வாசம் பண்ணுகின்றார்.

சபை என்பது உயிருள்ள ஒரு கட்டிடத்துடன் தொடர்பு படுத்தப் பட முடியும். எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்கள் என்னவாக ஆனார்கள் என்பதை விளக்கப்படுத்துகையில் பவுல், அவர்களை கிறிஸ்தவர் களால் அமைந்த ஒரு கட்டிடத்தில் இணைக்கப்பட்டு, தொடர்ந்து வளர்ச்சி நிலைகளை அடைபவர்களாயிருப்பதாகக் கூறினார். பவுல், "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே. 2:21, 22) என்று கூறினார். அவர் விளக்கிக் கூறிய அந்தக் கட்டிடம் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்ற அஸ்தி பாரத்தின்மேல் கிறிஸ்துவானவரையே பிரதான மூலைக் கல்லாகக் கொண்டு நிலைநிற்பதாக இருக்கின்றது. கட்டிடத்தின் மேல் கட்டுமானப் பகுதி கிறிஸ்தவர்களால் ஆனதாகும். இக்கட்டிடத்திற்கு மேல் பகுதி அல்லது கூரை என்பது இல்லை; சுவிசேஷத்திற்கு மக்கள் கீழ்ப்படிந்து இதனுடன் சேர்க்கப்படும்போது இது தொடர்ந்து மேல் நோக்கிக் கட்டப்படுகின்றது.

ஆகவே, சபை என்பது ஒரு நிறுவன அமைப்பல்ல-இது தேவனு டைய ஆவியானவர் வாசம் பண்ணுகின்ற ஒரு உயிருள்ள பொரு ளாகும். தேவனுடைய ஜீவனுடன் வாழுகின்ற, தேவனுடைய ஆவியா னவர் வாசம் பண்ணும் இடமாய் இருக்கின்ற கிறிஸ்தவர்களால் ஆன ஒரு சரீரமாகவே இந்த சபை இருக்கின்றது. சபை என்பதை தேவனு டைய பூமிக்குரிய வாசஸ்தலம் என்று நீங்கள் கூற முடியும்.

## உள்ளார்ந்த ஒரு உறவு

மூன்றாவதாக, சபை என்பது கிறிஸ்துவுடன் உள்ளார்ந்த ஒரு உறவு கொண்டுள்ளதாக எண்ணப்படுதல் வேண்டும்.

பூமிக்குரிய கண்ணோட்டத்தில், சபையில் உறுப்பினராவது என்பதை, சபையாராக உள்ள மக்கள் குழுவுடன் ஒரு விசேஷித்த உறவு கொள்ளும்படிப் பிரவேசித்தல் என்று சிந்தித்துப் பார்ப்பது மிகவும் எளிதாயிருக்கும். ஆயினும் சபையைப் பற்றிய இந்தக் கண்ணோட்டமானது முக்கியமான ஒரு சத்தியத்தைத் தவற விடுகின்றது. சபை என்பது ஒரு இன்றியமையாத, உள்ளார்ந்த, தொடர்ந்து இருக்கின்ற உறவில் ஈடுபடுகின்றது; அந்த உறவானது இயேசுவுடனான ஒரு உள்ளார்ந்த உறவை மையமாகக் கொண்டுள்ளது.

சபையானது இயேசுவுடன் கொண்டுள்ள இந்தத் தொடர்ந்த உறவானது சரீரம்/தலை இவற்றின் உறவு என்று விளக்கப்படுமளவுக்கு மிகவும் நெருங்கியதாகும். கிறிஸ்தவர்கள் சரீரமாக இருக்கின்றனர், இயேசு தலையாக இருக்கின்றார். தேவன், சபையை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக, இன்று பூமியில் காணக்கூடாத கிறிஸ்துவின், காணக்கூடிய பாகமாக ஏற்படுத்தியுள்ளார். கர்த்தர் இந்த பூமியில் இருந்தபோது இரட்சிப்பிற்கான ஊழியத்தை நிறைவேற்ற அவருக்கு ஒரு சரீரம் தேவையாய் இருந்தது எவ்வளவு நிச்சயமோ, அந்த அளவுக்கு இப்பொழுது இரட்சிப்பிற்கான அவரது ஊழியத்தின் கனிகளை எங்கும் உள்ள, எல்லாருக்கும் கிடைக்கும்படி செய்வதற்கு அவருக்கு ஆவிக்குரிய சரீரம் ஒன்று தேவைப்படுவதும் நிச்சயமாகும். ஆகவே, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த ஐம்பதாம் நாளில், பெந்தெகொஸ்தே நாளாகிய அன்று, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை ஏற்படுத்துவதற்காகப் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார். அந்த நாள் தொடங்கி, இன்று வரையிலும் இரட்சிக்கப்படுகின்ற ஒவ்வொருவரும், அவர் இரட்சிக்கப்படும் வேளையில், தேவனுடைய அற்புதமான கிருபையினால் அந்த சரீரத்திற்குள்ளாக்கப்படுகின்றார்.

இவ்விதமாகவே புதிய ஏற்பாட்டில் உள்ள சபையானது, ஏவப் பட்ட எழுத்தாளர்களால், கிறிஸ்துவின் "சரீரம்" என்று அழைக்கப் படுகின்றது (எபே. 1:21-23; 5:23). கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகின்றவர்கள் யாவரும் பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய

சரீரமாக ஆகி, கிறிஸ்து என்ற தலையினாலேயே வழி நடத்தப்படுகின்றார்கள். எனவே ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது, அவர் ''கிறிஸ்துவுக்குள்'' (ரோமர் 6:3; கலா. 3:27), அல்லது ''ஒரே சரீரத்துக்குள்" (1 கொரி. 12:13) ஞானஸ்நானப் படுத்தப்படுகின்றார் என்று புதிய ஏற்பாடு குறிப்பாகக் கூறுவது உண்மையாகும்.

இந்த பூமியிலிருக்கும்போது ஒருவர் பிரவேசிக்க முடிகின்றதான சபையானது இயேசுவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. சபை என்பதே கிறிஸ்துவின் நிறைவாய் இருக்கின்றது, ஏனெனில் அவருடைய சரீரமே எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாக இருக்கின்றது (எபே. 1:23). கிறிஸ்துவே சபையின் நிறைவாக இருக்கின்றார், ஏனெனில் அவருடைய மக்கள் அவரில்தான் முழுமை அடைகின்றார்கள் (கொலோ. 2:10). சபையாகிய அவருடைய சரீரமானது கிறிஸ்து என்ற தலையில்லாமல் இருந்தால் முழுமையடையாததாக இருக்கின்றது (எபே. 1:23). இது போலவே, தலையாகிய கிறிஸ்துவும் அவரது சரீரமாகிய சபை இல்லாதிருந்தால் முழுமையடையாதவராகவே இருப்பார் (கொலோ. 1:18). சபையின் எல்லாமுமாக உள்ள தலையானது சபைக்கே உரியதாய் இருக்கின்றது, மற்றும் சபையின் எல்லாமும் அதன் தலையாகிய கிறிஸ்துவுக்கே உரியதாய் இருக்க வேண்டும். ஆகையால், அவருடைய சபை என்ற வகையில் கிறிஸ்தவர்கள் இயேசுவுடன் அன்றாடம் தொடருகின்ற ஒரு இணைவு நிலையை அனுபவிக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் கிறிஸ்தவத்தின் பேராசிரியர்களாக மட்டுமின்றி, கிறிஸ்துவைத் தங்கள் உடமையாகப் பெற்றிருப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். அவரது சரீரத்திற்குள்ளாக இருப்பவர்களுக்கு கிறிஸ்துவின் நிறைவாகிய ஊற்று திறக்கப்பட்டுள்ளது.

எபேசியர் 5ல் பவுல், சபையைக் குறித்து விவாதிக்கையில், கிறிஸ்துவுடன் சபைக்குள்ள உறவை, அவர் கணவன்/மனைவி உறவை உருவகம் செய்து ஒப்பிடுகின்றார். இதில் அவர் கணவராகக் கிறிஸ்துவையும், மனைவியாக அவரது சபையையும் விளக்கிக் கூறுகின்றார். இந்த உறவை முதலாவதாக அவர் *கொள்கை அடிப்படையில்* குறிப்பிட்டார். கணவன், மனைவிக்குத் தலையாயிருக்கிறது போலவே, கிறிஸ்துவும் சபைக்குத் தலையாயிருக்கின்றார் (எபே. 5:23). இந்த உறவை இரண்டாவதாக அவர் *நடைமுறை அல்லது செயல்பாட்டின் அடிப்படையில்* பேசினார். மனைவி தன் கணவருக்கு எல்லா விஷயங்களிலும் கீழ்ப்படிவது போல, சபையானது எல்லா

விஷயங்களிலும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். சபையானது கிறிஸ்துவைத் தனது தலையாக, முன்னோடியாக, மற்றும் வழிகாட்டி யாக நோக்க வேண்டும் (எபே. 5:24). நிறைவாக பவுல் இந்த உறவை நோக்கத்தின் அடிப்படையில் விவாதித்தார். கணவர் தம் மனைவி யிடம் அன்பு கூருகிறது போலவே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, விசுவாசிகள் அடங்கிய இந்த சரீரமானது அவருடைய நித்தியத்திற்கும் வாழ்வதற்கு அதை ஆயத்தப்படுத்துகின்றார் (எபே. 5:25-27).

புதிய ஏற்பாட்டின் சபையானது கிறிஸ்துவுடனான உறவு ஒன்றைத் தனது இருதயம் போன்ற மையப்பகுதியாகக் கொண் டுள்ளது. இது மனிதர்களுடன் உள்ள உறவை தொடக்க நிலையில் கொண்டிராவிட்டாலும், சபையின் மற்ற உறுப்பினர்களுடன் ஒரே தகப்பனுடைய பிள்ளைகள் என்ற வகையில் உள்ள மற்ற கிறிஸ்தவர் களுடன் உறவு கொள்வதற்கு உடனடி விளைவை ஏற்படுத்துகின்றது. கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மற்றவருக்கு உறுப்பினராக இருக்கின்றனர், ஆனால் முதலாவதும், முதன்மையானதும் என்னவென்றால், சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது என்பதே ஆகும். கிறிஸ்துவின் சபையில் உறுப்பின ராயிருக்க வேண்டுமென்றால், சரீரமானது எப்படி தலைக்குச் சொந்த மானதாக இருக்கின்றதோ அது போன்ற நெருங்கிய மற்றும் விசேஷித்த உறவில் நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க வேண்டும்.

## முடிவுரை

“சபை” என்ற வார்த்தையின் சரியான அர்த்தத்தைப் பொறுத்த மட்டில் அநேகர் குழப்பமடைந்த நிலையில் இருக்கின்றார்கள். வேதாகமம் இதன் அர்த்தத்தைத் தெளிவாகக் கொண்டுள்ளதால் அப்படிப்பட்ட குழப்பம் எதுவும் இருக்கத் தேவையில்லை.

‘‘சபை’’ என்றால் என்ன? கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய மக்களாகி, சமுதாயத்தில் அவரது மக்களாக அவரை ஆராதித்து, அவருக்கென்று ஊழியம் செய்யும் மக்களைக் கொண்ட ஆவிக்குரிய சரீரமே சபை என்னப்படுகின்றது. அவர்கள் அவரது பெயரைத் தரித்துக் கொண்டு, இந்த பூமியில் அவருடைய ஆவிக்குரிய சரீரமாய் இருக்கின்றனர். அவர்கள் எல்லா விஷயங் களிலும் கிறிஸ்துவைக் கனப்படுத்துகின்றனர். இந்த ஆவிக்குரிய சரீரமானது ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் வாசம் பண்ணும்

*ஒரு உயிர்ப்பொருளாக இருக்கின்றது. இந்த சபையின் அங்கமாக இருப்பது என்றால், மனித நிறுவனம் ஒன்றில் பங்கேற்பது என்றோ அல்லது ஒரு குழுவில் உறுப்பினராவது என்றோ அர்த்தமல்ல. கிறிஸ்துவோடு நெருங்கிய மற்றும் என்றும் தொடர்கின்ற உறவைப் பெற்றுக் கொள்வது என்பதே இதன் அர்த்தமாகும்.*

*கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் விசுவாசத்தினாலேயே பிரவேசிக்க முடியும். இந்த விசுவாச பதில்செய்கையானது மனந்திரும்புதலை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் (அப். 17:30, 31), மற்றும் அது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தல் (ரோமர் 10:10), மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் (ரோமர் 6:3; கலா. 3:27) ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஞானஸ்நானத்தின்போது ஒருவருடைய பாவங்கள் கழுவப்படுகின்றன, அவர் புதுப்பிறப்பெடுத்து முடியும் போது அவர் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாகின்றார் (அப். 2:38, 41, 47; 22:16; 1 கொரி. 12:13).*

*புதிய ஏற்பாட்டின் சபை என்பது ஒரு நாமகரணக் கூட்டம் அல்ல. நாமகரணக் கூட்டங்கள் என்பவை மனிதரால் உண்டாக்கப்பட்டவை களாகும்; புதிய ஏற்பாட்டின் சபை என்பது கர்த்தரால் வடிவமைக்கப் பட்டு, படைக்கப்பட்டு, அவர் வாசம்பண்ணி நிலைநிறுத்துகின்ற ஒன்றாக இருக்கின்றது. நாமகரணக் கூட்டங்கள் என்பவை பூமியில், மனிதர்களிடத்திலிருந்து உண்டாகின்றன; புதிய ஏற்பாட்டின் சபையோ பரலோகத்தில் தேவனிடமிருந்து உண்டானதாக இருக்கின்றது. சபை கிறிஸ்துவுக்கே உரியது-அது அவரது பெயரைத் தரித்துக் கொள்ளுகின்றது, அவரது ஆராதனைக்கென்று ஒன்று கூடுகின்றது, உலகத்தில் அவரது ஊழியத்தைச் செய்கின்றது, மற்றும் அவரது ஆவி அதற்குள் வாசமாயிருக்கிறது. ("புதிய ஏற்பாட்டின் சபை" என்ற தலைப்பிடப்பட்ட வரைபடத்தைக் காணவும்.)*

*எல்லா மக்களும் கிறிஸ்துவின் இரட்சிப்புக்குரிய நிபந்தனை களுக்குட்பட்டு அவரது சபைக்குள் பிரவேசிக்கும்படியும், உலகத்தில் அவரது சபையாக வாழும்படியும் கிறிஸ்துவால் அழைப்பு விடுவிக்கப் படுகின்றது (வெளி. 22:17).*

## பாட வினாக்கள்

*(விடைகள் 312 ம் பக்கங்களில்)*

1. *பரிசுத்த ஆவியானவர் ஒரு வார்த்தையை, அதிலும் "சபை" என்ற வார்த்தையை வேதவசனங்களில் எவ்விதம் பயன்படுத்துகின்றார் என்பதைப் புரிந்து கொள்வது எவ்வளவு அவசியமானதாய் இருக்கின்றது?*
2. *புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ள வித்தியாசமான வழிமுறைகளைப் பற்றி விவாதித்து அறியவும்.*
3. *சபை என்பது தேவனுடைய ஆலயமாயிருக்கின்றது. இது இன்றைய கிறிஸ்தவ வாழ்வில் எதை அர்த்தப்படுத்துகின்றது? சபைக்கான இந்தப் பெயர் இதன் உறுப்பினர்கள் எப்படி வாழ்ந்து, ஊழியம் செய்து மற்றும் ஆராதிக்க வேண்டும் என்பதை எடுத்துரைப்பதாய் இருக்கின்றதா?*
4. *சபை என்பது எந்த வகையில் "உயிருள்ள" ஒரு கட்டிடமாய் இருக்கின்றது?*
5. *இயேசுவுக்கும் சபைக்கும் உள்ள உறவை, கணவன்/மனைவி உறவானது என்னென்ன வழிமுறைகளில் விளக்கப் படுத்துகின்றது?*
6. *கிறிஸ்துவின் சபைக்குள் ஒருவர் பிரவேசிப்பது எப்படி என்பதைத் தெளிவாக விளக்கவும்.*
7. *சபையானது எவ்வகையில் கிறிஸ்துவுக்கு மட்டுமே தனிப்பட்ட விதத்தில் சொந்தமுள்ளதாய் இருக்கின்றது?*

# வார்த்தை உதவிகள்

*__நாமகரணக் கூட்டம்__ - சபைக்கென்று வேதாகமத்தில் காணப் படாத பெயரைத் தரித்துக் கொண்ட, ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை களின் அடிப்படையில் அமையப் பெற்ற, ஏதோ ஒருவகை ஆலோ சனைக் குழுவால் ஆட்சி செய்யப்படுகின்ற, மார்க்கரீதியில் தங்களை சபை என்று அழைத்துக் கொள்ளுகின்ற மக்களின் கூட்டம். நாமகரணக் கூட்டங்களின் பெயர் எதுவும் சபையின் பெயராகப் புதிய ஏற்பாட்டில் காணப்படாதபடியால் இது வேதாகமத்தின்படியான வார்த்தையல்ல.*

**ஐக்கியம்** - அக்கறைகள், கொள்கைகள் அல்லது அனு பவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்; ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அன்பினால் கிறிஸ்தவர்களின் இதயம் நிரப்பப்படுதல்.

**வேசித்தனம்** - பாலியல் ரீதியான பாவம்; திருமணமாகாமலேயே பாலியல் தொடர்பு கொள்ளுதல்.

---

[1]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (Grand Rapids, Mich.: Zondervan, 1975), 153. [2]Ibid. *"சபை" என்ற வார்த்தை மாற்கு, லூக்கா, யோவான், 2 தீமோத்தேயு, தீத்து, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான் மற்றும் யூதா நிருபம் ஆகிய புத்தகங்களில் இல்லை.* [3]*ஆலயம் என்பதற்குக் கிரேக்க மொழியில் இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன: naos மற்றும் hieron. இவ்வசனப்பகுதியில் "ஆலயம்" என்ற வார்த்தைக்குப் பவுல் naos என்ற வார்த்தையையே பயன்படுத்தினார், hieron என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. Hieron என்ற வார்த்தை ஆலய வளாக முழுவதையும் குறிப்பிடுகின்றது, ஆனால்* naos *என்ற வார்த்தையோ ஆலயத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தைக் குறிப்பிடுவதாய் உள்ளது. கிறிஸ்துவின் சரீரம் என்பது தேவன் வாசம் செய்யும் இடம் என்று பவுல் உறுதிப்படுத்தினார்.* [4]*இந்த வாக்கியத்தில் "நீங்கள்" என்ற வார்த்தை கிரேக்க வசனத்தில் முன்னிலைப் பன்மையில் உள்ளது, இது மக்கள் குழு ஒன்றைச் சுட்டிக் காட்டுவதாய் இருக்கின்றது, 1 கொரி. 6:19, 20ல் உள்ளது போல தனி நபரைச் சுட்டிக்காட்டுவதாக இது இருப்பதில்லை.*

# 11

# கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது

*1965ஆம் ஆண்டில் ஒரு திரைப்படக் கம்பெனியானது, கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறு என்று அழைக்கப் பட்ட இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் ஒன்றை வெளியிட்டது. அத்திரைப் படமானது, கிறிஸ்துவின் பிறப்பில் துவங்கி, அவரது பூமிக்குரிய ஊழியம், அவர் புறக்கணிக்கப்படுதல், சிலுவையில் அறையப்படுதல், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளைச் சித்தரித்துக் காட்டியது. அந்தத் திரைப் படத் தயாரிப்பானது இயேசுவைச் சித்தரிப்பதில் வேதாகமத்தின் தெய்வீகப் பதிவுகளுக்கு உண்மையாகக் காணப்படவில்லையென்றாலும், கிறிஸ்துவின் உண்மையான வாழ்க்கையானது கூறப்பட்டவை களிலேயே மாபெரும் வரலாறு என்பதை அதன் தலைப்பு நினை வூட்டக் கூடியதாக இருக்கின்றது.*

*இயேசுவின் பிறப்பு, வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை, கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறாக இருந்தால், கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்னவாக இருக்க முடியும்? புதிய ஏற்பாட்டில் உள்ள நடபடிகளின் புத்தகத்தை ஒருவர் படிக்கும்போது, இதன் விடை தெளிவாக இருக்கின்றது: கூறப்பட்டவைகளிலேயே இரண்டாவது*

*மாபெரும் வரலாறாக இருப்பது, நமது கர்த்தருடைய சபையானது நிலை நாட்டப்பட்டது தான்.*

*தேவனுடைய இராஜ்யமாகிய சபையைக் கொண்டு வருதலின் வரலாறு என்பது, யார் ஒருவரும் எதிர்பார்க்கின்றபடியே மேலான புதிய அனுபவம் மற்றும் பற்றுதலுள்ள உணர்வூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் நிறைந்துள்ளது. நாடகம் போன்ற இந்த நிகழ்ச்சியை நடபடிகள் புத்தகத்தின் ஒரு அதிகாரம்-அதிகாரம் 2-விரித்துரைக் கின்றது.*

*நடபடிகளின் புத்தகத்தில் உள்ள இந்த ஒரு அதிகாரத்தை, இதுதான் முழுப் புத்தகம் அல்லது முழுமையான ஒரு வரலாறு என்ற வகையில் நாம் மறுபரிசீலனை செய்வோம். இது இந்த வரலாற்றை, இதன் அவசியமான மற்றும் ஏவப்படுகின்ற பாகங்களாகப் பிரிப்பதற்கு நம்மை அனுமதிக்கும். கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்த இந்த வரலாறானது சபை நிலை நாட்டப்பட்டது பற்றிய உணர்வுப் பூர்வமான நிலைகளை நமக்கு முன் வைக்கும்.*

## அத்தியாயம் ஒன்று: "தெய்வீகப் பொழிந்தருளல்"

*இந்தப் புத்தகத்தைத் தொடங்குகையில், நாம் "தெய்வீகப் பொழிந்தருளல்" என்று தலைப்பிடப்பட்ட இதன் முதல் அத்தியா யத்தைத் துவக்கத்தில் பார்க்கின்றோம்.*

*நடபடிகளின் புத்தகத்தின் எழுத்தாளரான லூக்கா, "பெந்தெ கொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள்" (2:1) என்று கூறினார். ஆகையால் இவ்வரலாற்றின் காட்சியமைப்பானது வரலாற்று நகரமாகிய எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளன்று நடந்ததாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஏசாயாவும் (ஏசா. 2:2-4), மீகாவும் (மீகா 4:1-3) "கடைசி நாட்களில்" கர்த்தருடைய பிரமாணமானது எருசலேம் என்ற இடத்திலிருந்து புறப்படும் என்று தீர்க்கதரிசனத்தில் அடையாளப்படுத்தியிருந்தார்கள். பெந்தெகொஸ்தே என்னும் பண்டிகையானது அறுப்பின் பண்டிகையாக (யாத். 23:16) பழைய ஏற்பாட்டில் கொண்டாடப்பட்டது. ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் இருந்து இந்த முக்கியமான பழைய ஏற்பாட்டு பண்டிகையை ஆசரிப்பதற்காக யூதர்கள் தங்கள் குடும்பத்தாருடன் எருசலேமுக்கு வந்திருந்தார்கள்.*

*பெந்தெகொஸ்தே நாள் பண்டிகையானது முழு வீச்சில் நடந்து கொண்டிருந்தபோது, வழக்கத்திற்கு மாறான ஒன்று அங்கே நடந்தேறியது:*

> *அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந் திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல் லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியான வர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (அப். 2:2-4).*

*அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் பொழிந் தருளலைப் பெற்றுக் கொண்டனர். அப். 2ம், அப். 2 வரை நடந்த சம்பவங்களின் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் இணைந்து அதை தெளிவாக் குகின்றன. முதலாவதாக, அப். 2:1ல் கூறப்பட்டுள்ள "அவர்கள்" என்பது, அப். 1:26ல் குறிப்பிட்ட "பதினொறு அப்போஸ்தலர் களையே" குறிக்கிறது. இந்த வரலாறு, தொடக்கத்தில் இதன் மையப் பொருளாக அப்போஸ்தலர்களையே கொண்டிருக்கிறது. இரண்டா வதாக, பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததாகக் கூறகின்ற இந்த வசனப்பகுதியில் (அப். 2:1-21) எந்த இடத்திலும், அப்போஸ் தலர்களைத் தவிர வேறு யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதாகச் சுட்டிக் காட்டப்படவில்லை. ஆவியான வரால் அந்நிய பாஷைகளில் அப்போஸ்தலர்கள் பேசியதைக் கண்ட கூட்டத்தாரும், அப்போஸ்தலர்கள் மட்டுமே அவ்வாறு பேசினார்கள் என்று அடையாளம் கண்டு கொண்டார்கள் (அப். 2:7).*

*பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முந்திய மூன்று வருட கால அளவில், அப்போஸ் தலர்கள் எவ்விதத்தில் கிறிஸ்துவால் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுவார்கள் என்பது பற்றிய வாக்குத்தத்தம், அப்போஸ்தலர்களுக்கு வித்தியாசப்பட்ட சூழ்நிலைகளில் தரப் பட்டிருந்தது. கிறிஸ்து தமது ஊழியத்தைத் தொடங்குகையில், யோவான்ஸ்நானன், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால்*

உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11) என்று கூறியிருந்தார். கிறிஸ்து தாம் பரத்துக் கேறுவதற்குச் சற்று முன்பு, அப்போஸ்தலர்களிடத்தில், "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப். 1:4) என்று கூறியிருந்தார். கிறிஸ்து பரத்துக்கேறும்போது கூறிய பிரிவு உபச்சார வார்த்தைகள், பிதாவானவரின் வாக்குத்தத்தத்தின்படி உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் (லூக். 24:46-49; அப். 1:5) அப்போஸ்தலர்களை எருசலேமிலேயே தங்கியிருக்கும்படி செய்தன. இப்பொழுது, பெந்தெகொஸ்தே நாளன்று காலையில் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகமாகப் பொழிந்தருளப்பட்டதில், அப்போஸ்தலர்கள்மேல் பரிசுத்த ஆவியானவர் வருவார் என்ற நமது கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறிற்று.

பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப் பட்டபோது, சத்தம் கேட்கப்பட்டது: "... பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, ..." (அப். 2:2). கண்களால் காணப்பட்டதும் நடந்தது. "அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர் களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது" (அப். 2:3). சில விஷயங்கள் உணரப்பட்டன; ஆவியா னவர் தந்தருளின வரத்தின்படி அப்போஸ்தலர்கள் வெவ்வேறு மொழிகளில் பேசியதைக் கேட்டதன் மூலமே அந்த மக்கள், அப்போஸ்தலர்கள்மேல் ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதைக் கண்டார்கள். காற்று அடிக்கிற முழக்கம்போல சத்தத்தைக் கேட்டு என்ன நடக்கிறதென்று பார்க்கக் கூடி வந்த மக்கள் பேசிய மொழிகளிலேயே அப்போஸ்தலர்கள் பேசினார்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. அப்போஸ்தலர்களிடமிருந்து எதைக் கேள்விப்பட்டோம் என்று பேசிய மக்கள், *dialektos* (ஜென்ம "பாஷை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; அப். 2:6, 8) மற்றும் glossais ("பாஷைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; அப். 2:11) என்ற கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள்.

*அப்போஸ்தலர்கள் மூன்று தெய்வீக நோக்கங்களுக்காகப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள். முதலாவது, அவர்கள் ஏவப்படுதல் என்ற நோக்கத்திற்காக ஞானஸ்நானப் படுத்தப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய வெளிப்படுத்துதலை உலகத்திற்குக் கொடுப்பதற்காக, பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஏவியிருந்தார். கிறிஸ்து, அப்போஸ்தலர்களுக்கு "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவா. 14:26) என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வந்ததின் மூலம், கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்திருந்த இந்த ஏவுதலின் வாக்குத்தத்தத்தை அவர்கள் உணர்ந்திருப்பார்கள்.*

*இரண்டாவதாக, அவர்கள் பிரசங்கித்த செய்தியானது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள். அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் பலத்த செயல்களைச் செய்து, அதன் மூலம் அவர்கள் பிரசங்கிக்கும் வசனத்தை உறுதிப்படுத்த அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்பட்டது. கிறிஸ்து, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" (மாற். 16:17, 18) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். அப்போஸ்தலர்கள், தாங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை உறுதி செய்வதற்கு அற்புதங்கள் செய்தபோது, பரிசுத்த ஆவியானவர் மூலம் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறிற்று. இது நிறைவேறியதற்கான ஒரு விளக்கம் அப். 14:3ல் காணப்படுகின்றது: "அவர்கள் அங்கே அநேக நாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம் பண்ணினார்கள்; அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார்."*

*மூன்றாவதாக, அப்போஸ்தலர்கள், மற்ற கிறிஸ்தவர்களின்மேல் கைகளை வைத்து அவர்களுக்கு அற்புத வரங்களைச் செய்யும்*

வல்லமையைத் தருவதற்காகப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானப்படுத்தப்பட்டனர். இவ்வாறு வல்லமை தந்ததற்கான ஒரு எடுத்துக்காட்டானது அப். 8:14-24ல் காணப்படுகின்றது: சமாரியாவில் பிலிப்புவின் பிரசங்கத்தினால் புதிதாய் மனமாறி கிறிஸ்துவினிடத்தில் வந்திருந்தவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களைக் கொடுப் பதற்காக, பேதுரு மற்றும் யோவான் என்ற இரண்டு அப்போஸ் தலர்கள் எருசலேமிலிருந்து சமாரியாவுக்கு அனுப்பப்பட்டார்கள்.

"கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்ததான" இதன் ஆரம்பமானது உங்களுக்கும் எனக்கும் என்ன அர்த்தம் தருகின்றது? புதிய ஏற்பாட்டில் காணப்படும் வெளிப்படுத்துதல், ஏவப்பட்ட மனிதர்களால் நமக்குக் கொடுக்கப்பட்டது என்பதே அர்த்தமாகும். புதிய ஏற்பாட்டின் செய்தியானது மிகவும் துல்லிய மானதென்றும், தவறுகளே இல்லாதது என்றும் நாம் நம்ப முடியும். தேவன் தமது அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தினால் பெலன் கொடுத்தார்; இதன் மறுசெயலாக அப்போஸ் தலர்கள், மற்ற கிறிஸ்தவர்களின்மேல் கைகளை வைத்து அவர்களுக் குப் பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களைக் கொடுத்தார்கள். இவ்விதமாக, புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அனைவரும் ஏவப்பட்ட, ஆவியானவரால் வழி நடத்தப்பட்ட மனிதர்களாய் இருந்தனர். புதிய ஏற்பாடானது மனிதனுக்கு தேவனுடைய வெளிப்பாடாக இருக்கிறது என்பதை நாம் தைரியமாய் நம்ப முடியும்.

## அத்தியாயம் இரண்டு:
## "வல்லமை நிறைந்த பிரசங்கம்"

*கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்த* இதன் இரண்டாவது அத்தியாயம், "வல்லமை நிறைந்த பிரசங்கம்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. சபை நிலை நாட்டப்பட்ட நாளானது, பிரசங்கிக்கும் நாளாக இருந்தது. முதலில் எல்லா அப்போஸ்தலர்களும் "தேவனுடைய மகத்துவங்களை" (அப். 2:11) அங்கு கூடியிருந்த பல்வேறு நாட்டினரின் மொழிகளில் அல்லது வட்டார வழக்கு மொழிகளில் பேசினார்கள் என்பது தெளிவாக அறியப்படுகிறது. பிறகு பேதுரு, பதினோரு அப்போஸ்தலர்களோடும் கூட எழுந்து நின்று, இயேசு, கர்த்தராகவும் கிறிஸ்துவாகவும் இருக்கின்றார் (அப். 2:14-36)

*என்பதைப் பற்றி ஒரு விரிவான பிரசங்கம் செய்தார். அவர் ஒரு வேளை, அந்நாட்களின் உலகளாவிய மொழியான கிரேக்க மொழியில் அதைப் பேசியிருக்கலாம்.*

*பலத்த காற்று அடிக்கிற முழக்கத்தைக் கேட்டு, அங்கு கூடியிருந்து இந்த முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்ட அந்த யூதர்கள் வழக்கத்திற்கு மாறான உள்ளார்ந்த ஆற்றல் உடையவர்களாய் இருந்தனர். அவர்கள் அறிவுக் கூர்மையில் உள்ளார்ந்த ஆற்றல் உடையவர்களாய் இருந்தனர். அவர்கள் தேவனை விசுவாசிப்பவர் களாகவும், பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை அறிந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் சுவிசேஷத்தின் செய்தியை ஏற்றுக் கொள்ளத் தயாரான ஒரு மனநிலையுடன் இருந்தனர். அவர்கள், கிறிஸ்துவைப் பல நாடுகளுக்கும் எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருந்த னர். அவர்கள், ரோம சாம்ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் அங்கு வந்திருந்தார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பும்போது நற்செய்தியுடனே செல்ல முடிந்தது. இது கிறிஸ்தவமானது உடனடியாகப் பரவுவதற் கான வாய்ப்பை அளிப்பதாக இருந்தது.*

*ஏவுதலின் மூலம், லூக்கா, பேதுருவின் பிரசங்கத்தினுடைய ஒரு சுருக்கத்தை நமக்குக் கொடுத்துள்ளார் (அப். 2:14-36). பேதுருவின் பிரசங்கத்தின்மேல், லூக்காவின் கண்ணோட்டமானது இரண்டு அல்லது மூன்று வித்தியாசப்பட்ட வழிமுறைகளில் புறக்குறிப்புகளா கச் செய்யப்பட முடியும்; ஆனால் ஒரு முன்மாதிரியான உரையின் முக்கியகூறுகளான முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரை என்ப வைகளின் அடிப்படையிலேயே நாம் இதனைப் புறக் குறிப்பிடுவோம்.*

*பேதுரு தமது உரையை கேட்டவர்கள் என்ன நிலையில் இருந் தார்கள் என்பதைக் கொண்டு துவங்கினார். “இவர்கள் மதுபானத் தினால் நிறைந்திருந்தார்கள்” (அப். 2:13) என்று சில மக்கள் ஏளனத் துடன் சொன்னார்கள். சுவிசேஷப் போதகர்கள் நற்பெயர் பெற்றி ருந்தால் மட்டுமே அவர்களின் பிரசங்கமானது எந்த சூழ்நிலையிலும் ஏற்புடையதாக இருக்கும். நம்பத் தகுதியான ஒழுக்கமோ அல்லது நம்புவதற்குரிய நற்பெயரோ இல்லாத போதகர் எவரும் அவர் பேசுதற்குத் தமது வாயைத் திறப்பதற்கு முன்னாலேயே தோல்வியில் வீழ்த்தப்படுகின்றார். சுவிசேஷத்தை அவர் எவ்வளவு வல்லமையாய் முன்வைத்தாலும் அவர் நம்பப்படவோ அல்லது மரியாதை செலுத்தப் படவோ மாட்டார்.*

*எனவே, அப்போஸ்தலர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு ஒரு பதில் கூறுவதுடன் பேதுரு தமது பிரசங்கத்தைத் தொடங்கியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. உண்மைகளை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருந்தமைக்கு, அவர் இரண்டு உண்மை களால் பதில் அளித்தார்: முதலாவதாக, அப்படி நடக்கவில்லை என்று அவர் கூறினார். அவர்களுடைய பொது அறிவுக்கு அவர் வேண்டு கோள் விடுத்தார், "நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்ட வர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே" (அப். 2:15). பேதுரு, "மதுபானம் பண்ணுதல் என்பது இதற்கு விளக்க மாக முடியாது, பெந்தெகோஸ்தே போன்ற முக்கியமான நாட்களில் சாதாரண யூதர் எவரும் இவ்வளவு காலை நேரத்தில் மதுபானம் பண்ண மாட்டார்கள். நாங்கள் மதுபானம் பண்ணியிருக்கவில்லை என்று பொது அறிவே உங்களுக்குச் சொல்லுமே" என்று சொன்னார். இரண்டாவதாக, பேதுரு அது என்ன என்பதை விளக்கப்படுத்தினார். அவர், "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (அப். 2:16) என்று கூறுகையில் வேதவசனத்தின் பால் வேண்டுகோள் விடுத்தார். பிறகு அவர் யோவேலின் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டத் தொடங்கினார். யோவேல் 2:28-32 (அப். 2:17-21)ஐ அவர் கூறத் தொடங்கினார். இவ்விதமாக, பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப் பட்ட நிகழ்ச்சியானது, "கடைசி நாட்களின்" தொடக்கமாகும் என்ற யோவேல் தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசன நிறைவேற்றத்தின் ஒரு பகுதியாகவாவது இருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது" என்று சொல்லப்பட்ட அவருடைய வார்த்தை களே இந்த வினாவிற்குரிய முழுமையான மற்றும் இறுதியான விடையாகக் கருதப்பட வேண்டும்.*

*பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட இந்த நிகழ்ச்சி யானது "கடைசி நாட்களின்" காலத்தை ஆரம்பித்தது. அப்போஸ்தலர் கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் வல்லமை பெறுகையில், சபையின் தொடக்கமாகிய அற்புதவரங்களின் காலம் ஆரம்பமாயிற்று. அப்போஸ்தலருடைய நடபடிகளில் பின்னால், இந்த அப்போஸ் தலர்கள் மற்ற கிறிஸ்தவர்களின்மேல் தங்கள் கரங்களை வைத்தனர், அவர்களின் குமாரர்களும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள், வாலிபர்கள் தரிசனம் கண்டார்கள், முதியவர்கள்*

சொப்பனம் கண்டார்கள், மற்றும் ஊழியக்காரர்களான ஆண்களும், பெண்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (அப். 6:6; 8:4-8, 14-24; 21:8, 9). அப்போஸ்தலர்களின்மேல் பொழிந்தருளப்பட்ட இந்த நிகழ்ச்சியானது ஒரு ஊற்றைப் போல் இருந்து கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில் அற்புதங்கள் என்ற நீரோடையைப் பிறப்பித்தது. அப்போஸ்தலர்களின் கரங்களால் தரப்பட்ட ஆவியானவரின் அற்புத வரங்களை, புதிதாய்ப் பிறந்த குழந்தையின் நிலையில் இருந்த சபையில், புதிய ஏற்பாடானது எழுத்து வடிவில் தோன்றும் வரையிலும் தேவன் பயன்படுத்திக் கொண்டார். புதிய ஏற்பாடானது எழுத்து வடிவில் எழுதி முடிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களும், அவர்களின் கரங்கள் வைக்கப்பட்டதினால் அற்புதவரங்களைப் பெற்றவர்களும் மரணமடைந்தபோது, சபையின் அற்புத விதமான தொடக்கம் முடிவடைந்து, எழுதப்பட்ட வசனங்களின் மூலம் ஆவியானவர், சபையை வழி நடத்தும் காலம் ஆரம்பமாயிற்று.

ஆகவே பேதுருவின் முன்னுரையானது அங்கு கூடியிருந்தவர்களுக்கு அந்த நிகழ்ச்சி என்ன, என்னவல்ல என்பதைச் சுட்டிக் காட்டுவதாய் இருந்தது. அவர் அவர்களுடைய பொது அறிவுக்கும், வேதவசனத்திற்கும் வேண்டுகோள் விடுத்தார். அவர் தமது உரையைக் கேட்பவர்களை, அவர்கள் இருந்த நிலைப்பாட்டில் இருந்து, இயேசுவே மேசியா என்பதற்கான ஆதாரத்தைக் கவனிக்கத் தயாராகும் நிலைப்பாட்டிற்கு அழைத்துச் சென்றார்.

பேதுருவின் பிரசங்கத்தில் உள்ள பொருளுரையானது, இயேசுவே கிறிஸ்து என்று நம்புவதற்கான வித்தியாசப்பட்ட ஆதார வரிசைகளை முன் வைத்தலைக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கொண்ட ஒரு பெரிய கூட்டத்தின் முன் உங்களை நிறுத்தி, இயேசுவே கிறிஸ்து என்று நம்புவதற்கான ஆதாரங்களை வரிசைப்படுத்திக் கூறும்படி உங்களைக் கேட்டுக் கொண்டால், நீங்கள் வரிசைப்படுத்திக் கூறக் கூடிய ஆதாரங்கள் எவைகளாக இருக்கும்? அவர் கொடுத்த ஆதாரங்களை நாம் கவனித்துப் பார்த்து, பிறகு அவற்றை நம்முடைய ஆதாரங்களுடன் பரிசீலனை செய்து பார்ப்போம்.

சொன்னதையே மறுபடியும் சொல்லுதல் என்பது நீக்கப்பட்ட போது, பேதுரு ஐந்து வரிசைகளான ஆதாரங்களைப் பட்டியலிட்டு, அவைகளை விளக்கப்படுத்தினார்: முதலாவதாக, அவர் கிறிஸ்துவினுடைய அற்புதங்களின் ஆதாரத்தைச் சுட்டிக்காட்டினார். அவர், "... நீங்கள் அறிந்திருக்கிறபடி, நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு

தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களை யும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்'' (அப். 2:22) என்று கூறினார். அற்புதங்களின் சாட்சியமே, இயேசு, தேவனிடத்திலிருந்து வந்தவர் என்று நிக்கொதேமுவை நம்பச் செய்திருந்தது. இராக்காலத்தில் கிறிஸ்துவினிடத்தில் வந்த நிக்கொதேமு, கிறிஸ்துவினிடம், "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்" (யோவா. 3:2) என்று கூறினார். இயேசு உண்மையான அற்புதங்களைச் செய்தார் என்பதை முற்றிலுமாக நம்பக்கூடிய ஆதார மூலமொன்று, மறுக்க முடியாத நம்பத் தகுந்த பதிவொன்று நமக்கு வெளிப்படுத்தினால், நிக்கொதேமுவைப் போலவே நாமும் கிறிஸ்துவின் அற்புதங்களுக்குப் பதில்செயல் செய்வதற்கு அந்த சாட்சியத்தினால் வற்புறுத்தப் படுவோம்-அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்று நாம் நம்பும்படிக் கட்டாயப்படுத்தப்படுவோம். தேவனுடைய வசன மாகிய வேதாகமமானது இந்த பூமியிலேயே மிகவும் அதிகமாய் நம்பக் கூடிய தகவல் மூலமாக இருக்கின்றது, அது கிறிஸ்து உண்மையான அற்புதங்கள் செய்தார் என்று சாட்சி கொடுக்கின்றது. இந்த ஆதார மானது, ஒரே ஒரு முடிவையே சுட்டிக்காட்ட முடியும் - அவர் தேவனால் "அங்கீகரிக்கப்பட்டவர்,'' அவர் செய்த அற்புதங்களினால் அவர் தேவனுடைய குமாரன் என்று உறுதி செய்யப்பட்டவர். கிறிஸ்து வின் அற்புதங்களைப் பேதுரு, தம் உரையைக் கேட்டவர்களுக்கு நினைவுபடுத்தி, அந்த ஆதாரம் உரிமையுடன் கேட்டுக் கொள்ளும் தர்க்கரீதியான முடிவை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இரண்டாவதாக, பேதுரு தமது உரையைக் கேட்பவர்களுக்கு முன்பாக, *உயிர்த்தெழுதலின் ஆதாரத்தை வைத்தார்.* அவர், இவ்வாறு கூறினார்,

> அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனை யின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவை யில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள். தேவன்

அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்படக் கூடாதிருந்தது (அப். 2:23, 24).

அப்போஸ்தலரின் பிரசங்கம் எல்லாவற்றிலும், உயிர்த்தெழுதல் என்பது குறிப்பிடத் தகுந்த ஒரு பாகமாக இருந்தது. இது யூதர்களால் பதில் பேச முடியாத ஒரு விவாதமாக இருந்தது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது கோழைகளை வீரமுள்ள மனிதர்களாகவும், வீரமுள்ள மனிதர்களைக் கோழைகளாகவும் ஆக்கியது. "அவரைச் சிலுவையில் அறைய வேண்டும்" (மத். 27:22) என்று பிலாத்துவின் முன்பாக தைரியமாகக் கத்திய யூதர்கள், வெறுமையான கல்லறை என்ற சத்தியத்தின் முன்பாகப் பயந்து போய்ப் பின் வாங்கினார்கள். கிறிஸ்துவை விசாரிக்கும் சமயத்தில், ''அந்த மனுஷனை நான் அறியேன்" (மத். 26:72) என்று பயத்துடன் கூறிய பேதுரு, வெறுமை யான கல்லறைக்குச் சற்று தூரத்தில் கூடியிருந்த மிகப் பெரிய கூட்டத்திற்கு முன்பாக அவருடைய உயிர்த்தெழுதலை மிகுந்த தைரியத்துடன் பிரசங்கித்தார்.

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதற்கு உயிர்த் தெழுதலானது முடிவான ஆதாரமளிக்கின்றது. அவர் மரித் தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை மறுப்பதே, எவரொரு வரும் அவருடைய தெய்வீகத்தை மறுக்கும் ஒரே ஒரு வழியாகும். உயிர்த்தெழுதலே கிறிஸ்தவத்தை அதன் வகையில் நிலைநிறுத்து கின்றது. உலக மார்க்கங்களில், கிறிஸ்துவத்தைத் தோற்றுவித்தவர் மட்டுமே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவராக உள்ள உன்னதமான மார்க்கமாக கிறிஸ்தவ மார்க்கம் உள்ளது. அவருடைய உரிமைகோருதல்களை இது உறுதிப் படுத்துகின்றது, அவருடைய வாக்குத்தத்தங்களை இது நம்பச் செய்கிறது, மற்றும் அவருடைய மார்க்கத்தை இது செல்லத்தக்கதாக்குகின்றது.

மூன்றாவதாக, பேதுரு, தீர்க்கதரிசனத்தின் ஆதாரத்திலிருந்து வாதிட்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னுரைத்திருந்த சங். 16:8-11ஐ அவர் மேற்கோள் காட்டினார்:

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார்; அதனாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என்

*மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்; ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத் திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் (அப். 2:25ஆ-28).*

*தாவீது தமது தீர்க்கதரிசனத்தில், தன்மைப் பெயரில் பேசியுள்ளார், மேம்போக்காகப் பார்க்கையில் இது அவர் தம்மைப் பற்றியே பேசிக் கொள்வது போலத் தோன்றலாம். தாவீது தம்மைப் பற்றியே இப்படிப் பேசி இருக்க முடியாது என்பதைப் பேதுரு, இரண்டு உண்மைகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார். முதலாவதாக அவர், தாவீதின் மரணத்தைக் குறிப்பிட்டார். இந்த தீர்க்கதரிசனத்தைச் சொன்ன தாவீது மரித்து, இன்னமும் தனது கல்லறையில் அடக்கம் செய்யப் பட்டவராகவே இருந்தார். தனது ஆதாரமாக, அவர் எருசலேமில் எல்லாரும் பார்க்கும்படியாக இருந்த தாவீதின் கல்லறையைச் சுட்டிக் காட்டினார் (அப். 2:29). இரண்டாவதாக அவர், தாவீதுக்குத் தேவன் அருளிய வாக்குத்தத்தத்தை, அவர்களுக்கு நினைவூட்டினார் (அப். 2:30). தாவீதின் சந்ததிகளில் ஒருவர் அவரது சிம்மாசனத்தில், என்றென்றும் வீற்றிருப்பார் (2 சாமு. 7:12) என்று தேவன் அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந் தெழுப்பி (அப். 2:31), தமது வலது புறத்தில் ஆவிக்குரிய அரியணையில் அமரச் செய்ததினால், இந்த வாக்குத்தத்தம் கிறிஸ்துவில் நிறைவேறி யிருக்கிறதாகப் பேதுரு கூறினார். இயேசு, தாவீதின் வம்சா வழியி லேயே இந்த உலகத்திற்கு வந்தார், இப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய வலது புறத்தில் ஆவிக்குரிய ஒரு அரியணையில் அவர் வீற்றிருந்து, பூமியில் இருக்கின்ற அவருடைய இராஜ்யமாகிய சபை யின் அரசராக அரசாண்டு கொண்டு இருக்கின்றார்.*

*பேதுரு தமது பிரசங்கத்தின் முடிவில் (அப். 2:34, 35), சங். 110:1லிருந்து தீர்க்கதரிசனத்திலிருந்து இதே விதமான ஒரு விவாதத்தைச் செய்தார். தீர்க்கதரிசனத்தைப் (சங். 16:8-11; 110:1) பற்றிய அவரது குறிப்புரையானது, தேவனிடத்திலிருந்து அனுப்பப் பட்டவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, தேவனுடைய வலது புறத்திற்கு உயர்த்தப்பட்டார் என்பதை நிரூபித்தது. தமது உயிர்த் தெழுதல் மற்றும் உயர்த்தப்படுதல் ஆகியவற்றின் மூலம் இயேசு*

*வானவர், பழைய ஏற்பாட்டின் இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களையும் தெளிவாக நிறைவேற்றியிருந்தார்.*

*நான்காவதாக பேதுரு, சாட்சியங்களின் ஆதாரத்தைப் பயன் படுத்தினார். அவர், "இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" (அப். 2:32) என்று கூறினார். பேதுரு குறிப்பிட்டிருந்த தீர்க்கதரிசனமானது ஒரு உயிர்த்தெழுதலை முன்னுரைத்தது என்பதை யூதர்கள் ஒப்புக் கொண்டிருந்திருக்க வேண்டும். பேதுரு, மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்திருந்ததின் மூலம் தீர்க்கதரிசனத்தின் இப்பகுதியை அவர் நிறைவேற்றியிருந்தார் என்பதை உறுதிப்படுத்தத் தேடினார். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்ததைக் கண்ணால் கண்ட சாட்சியங்களாக இருந்தவர்களை எதிர்கொள்ளும்படியாக அவர் தமது உரையைக் கேட்டவர்களை வற்புறுத்தினார். சாட்சியம் சொல்பவர் ஒருவர், உயர்தரமான ஆதாரமாயிருக்கின்றார். சட்ட ரீதியான அதிகாரம் பெற்ற எந்த ஒரு நீதிமன்றமும், ஒருவரது சாட்சியத்திற்கெதிரான முரண்பட்ட ஆதாரம் இல்லாத வரையில், அவரது சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளும். தேவன் தமது குமாரனின் உயிர்த்தெழுதலை வசனத்தின் மூலமாக உறுதிப்படுத்தியதோடு, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு அவரைக் கண்டு, தொட்டு, அவருடன் உணவுண்டு மற்றும் அவரைக் கற்றறிந்த சாட்சிகளை தமது வசனத்திற்குச் சாட்சியங்களாக வைத்தார். இப்படிப்பட்ட சாட்சியத்தை யாரால் மறுக்கக் கூடும்?*

*ஐந்தாவதாக, பேதுரு பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததின் ஆதாரத்தைச் சுட்டிக்காட்டினார். "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி, பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப். 2:33) என்று அவர் கூறினார். இயேசு பரலோகம் செல்வதற்குச் சற்று முன்னதாக, பிதாவினுடைய வாக்குத்தத்தத்தைத் தமது அப்போஸ்தலர்களுக்கு அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார் (லூக். 24:46-49). பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதன் விளைவைத் திரளான கூட்டத்தார் கண்டும் கேட்டுமிருந்தனர். இவ்விதமாக, இயேசு பிதாவின் வலது புறத்திற்கு ஏறிச் சென்று, ஆவியானவருடைய வாக்குத்தத்தத்தைப் பிதாவினிடத்திலிருந்து பெற்று, அப்போஸ்தலர் களின்மேல் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தருளினார் என்பதை*

அவர்கள் அற்புத விதமான உறுதிப்பாடு என்று பெற்றிருந்தார்கள்.

இந்த ஐந்து ஆதார வரிசைகளும் மறுக்க முடியாத ஒரு முடிவை நிலைநாட்டுகின்றன. "ஆகையினால்" என்ற வார்த்தையின் மூலம் பேதுரு இந்த முடிவின்மேல் அவர்களது கவனத்தைக் குவியச் செய்தார். "புதிய ஏற்பாட்டில் 'ஆகையினால்' என்ற வார்த்தையை நீங்கள் காணமிடங்களில் சற்று நிதானித்து, அந்த வார்த்தை ஏன் அங்குள்ளது என்பது பற்றி யோசிக்க வேண்டும், ஏனென்றால் இந்த வார்த்தைக்கு எப்பொழுதுமே காரணம் ஏதாவதொன்று இருக்கும்" என்று ஒருவர் சொன்னார். பேதுரு, "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்பதை இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" (அப். 2:36) என்று கூறினார். அவருடைய அற்புதங்கள், மரித்தோரிலிருந்து அவருடைய உயிர்த்தெழுதல், அவரால் தீர்க்கதரிசனம் நிறைவேற்றம், சாட்சியங்களின் ஆதாரம், மற்றும் ஆவியானவர் இறங்கி வந்தது இவையாவும் இயேசுவே தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்து வாகவும், கர்த்தராகவும் இருக்கின்றார் என்று நிரூபிக்கின்றன.

கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்ற பாடத்தின் இந்த அத்தியாயம் நமக்கு அர்த்தப்படுத்துவது என்ன? கிறிஸ்தவத்தின் மையமாக இருப்பவர் கிறிஸ்துவே என்று இது நம்மை நம்பச் செய்வதில்லையா? இயேசுவே கிறிஸ்து என்று நிரூபிக்கும் ஒருவர், கிறிஸ்தவத்தின் நம்பகத் தன்மையை நிரூபிக்கின்றார். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அவர் நமது பாவங்களுக்காக மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் பேதுருவால் நிரூபிக்க முடியாமல் மட்டும் போயிருந்தால், கிறிஸ்தவமானது தான் பிறந்த நாளிலேயே மரணமடைந்திருக்கும்!

## அத்தியாயம் மூன்று:
## "ஆழமாய் உணரப்பட்ட கதறுதல்"

கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்ததில், மூன்றாவது அத்தியாயம் "ஆழமாய் உணரப் பட்ட கதறுதல்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. பேதுருவின் உரையைக் கேட்டவர்களில் அநேகர் அவரது பிரசங்கத்தினால் ஆழமாக அசைக்கப்பட்டார்கள். இருதயத்தில் தாக்கப்பட்ட அவர்கள், பேதுருவையும், மற்றுமுள்ள

அப்போஸ்தலர்களையும் பார்த்துக் கதறினார்கள்.

லூக்கா, "இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்" (அப். 2:37) என்று எழுதினார். KJV வேதாகமத்தில், அவர்கள் "தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டார்கள்" என்றுள்ளது. இருதயத்தில் "குத்தப்படுதல்" என்பது ஒருவருடைய விரலில் ஊசியால் குத்தப் படுவது அல்லது ஒருவரின் கையில் முள்ளினால் குத்தப்படுவது போன்றதல்ல. இது இருதயம் உடைந்து போகுதல் அல்லது இருதயத்தில் அம்பு எய்யப்பட்டது போல உணருதல் என்பதை அர்த்தப் படுத்தும் ஒரு விளக்கக் கூற்றாகும். இதே சொற்றொடரானது அப். 7:54ல் மாறுபட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது: "இவைகளை அவர்கள் கேட்ட பொழுது, மூர்க்க மடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்." இந்த நிகழ்ச்சியில், யூதர்கள் ஸ்தேவானின் பிரசங்கத்திற்குக் கோபத்துடன் பதில்செயல் செய்தார்கள். அவர்களின் இருதயங்கள் கோபத்தால் கொந்தளித்தன; அவர்களின் இருதயங்கள் வெறுப்பினால் குத்தப் பட்டன. இருந்தாலும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட யூதர்கள், குற்ற உணர்வில் மூழ்கடிக்கப்பட்டனர்; குற்றத்தினால் அவர்கள் மிகவும் குழப்பப்பட்டிருந்தார்கள்.

கதறிய மக்கள் ஒருவேளை பேதுருவின் பிரசங்கத்தை இடைமறித் திருக்கலாம். இடை மறித்தல் என்பது எப்பொழுதுமே விரும்பத் தக்கதாக இருப்பதில்லை, ஆனால் இது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட இடைமறித்தலாகவே இருந்தது. ஒருமுறை ஒரு பிரசங்கியார் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், ஒரு மனிதர் "நான் இப்பொழுது ஞானஸ்நானம் பெற முடியுமா?" என்ற கேள்வியுடன் அவரது பிரசங்கத்தை இடைமறித்தார். அந்தப் பிரசங்கியார் பிரசங்கிப்பதை நிறுத்தி விட்டு, அவரை நேரடியாக உற்றுப் பார்த்து, "எனது பிரசங்க மானது சற்றுப் பொறுத்திருக்க முடியும், நாம் இப்பிரசங்கத்தை நிறுத்தி வைத்து விட்டு, உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப் படுத்து வோம். பின்பு வந்து நான் எனது பிரசங்கத்தை முடிப்பேன்" என்று சொன்னார். இவ்வகையான இடை மறித்தல் என்பது ஒரு தலையீடாக இல்லாமல், அகத் தூண்டுதல் தருவதாக இருக்கின்றது.

அவர்களின் கேள்வியில் உணர்வுக் கிளர்ச்சி நிறைந்திருந்தது. அவர்கள் அக்கறையற்ற விதத்தில் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

என்று கேட்கவில்லை. அவர்களின் கேள்வி, "நாங்கள் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும்? நாங்கள் இடர்ப்பாட்டில் இருக்கின்றோம். எங்களுக்கு நம்பிக்கை ஏதாவது உண்டா?" என்பது போல் இருந்தது. அவர்களின் கேள்வி மிகவும் வினயமாகக் கேட்கப்பட்டது.

இந்த கேள்வியை மிகவும் கவனமாகப் பாருங்கள்: "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" அவர்கள் இதைத் தங்கள் சக யூதர்களைப் பார்த்துக் கேட்டதால், "சகோதரரே" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். இது மார்க்கரீதியான உள்ளர்த்தமுடையதாயிராமல், நாட்டு ரீதியான உள்ளர்த்தம் உடையதாக இருக்கின்றது. அவர்கள் தேவனுக்கு முன்பாகத் தாங்கள் பரிதாபமான நிலையில் இருந்ததை உணர்ந்தனர். தேவன் இந்த உலகத்திற்கு அனுப்பியிருந்த மீட்பராகிய மேசியாவை சிலுவையில் அறைந்ததில் அவர்கள் பங்கேற்றிருந்தனர். பேதுருவின் பிரசங்கமானது அவரது உரையைக் கேட்டவர்கள் தங்கள் பாவத்தை பெரிய எழுத்துக்களில் எழுதியது போல், அவர்கள் சுலபமாகக் காணும்படியாக அவர்கள் முன் வைத்தது (அப். 2:23).

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் முக்கியமான கேள்விகள் பலவற்றைக் கேட்டு, அவைகளுக்குப் பதில் அளித்திருப்பீர்கள், ஆனால், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற புதிய ஏற்பாட்டின் கேள்வியைக் கேட்டு, அதன்படியே அதற்கு நீங்கள் பதில் கொடுத்திருக்கிறீர்களா? பெந்தெகொஸ்தே நாளன்று அங்கிருந்த மற்றவர்கள், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு, பெந்தெகொஸ்தே நாளின் அற்புதங்களைப் பார்த்திருக்க வேண்டும், ஆனாலும் அவர்கள் தங்கள் குற்றத்தைப் பாராமல், இந்தக் கேள்வியைக் கேட்காமல் திரும்பிச் சென்று விட்டார்கள். தனிநபருடைய வாழ்க்கையில் பாவம் என்பது மிகவும் துன்பகரமானது, கிறிஸ்துவே இந்த உலகத்திற்கு வந்து சிலுவையில் மரித்து ஒரு பரிகாரம் (கிரயம்) செலுத்துமளவுக்கு அது பெரியதாக இருக்கின்றது. இதைக் காட்டிலும் பெரிய துன்பம் ஒன்று இருக்கின்றது. தேவனுக்கு முன்பாக தமது குற்றத்தைப் பார்க்கவும், அந்தக் குற்றத்திற்கான தேவனுடைய தீர்வைத் தேடவும் மறுத்து ஒருவர் செல்கின்ற போது, அவர் எல்லாவற்றிலும் மாபெரும் துன்பத்தைச் சந்திக்கின்றார்.

## அதிகாரம் நான்கு: "ஏவப்பட்ட பதில்"

*கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்ற இப்புத்தகத்தின் நான்காவது அத்தியாயத்திற்கு "ஏவப்பட்ட பதில்'' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. பேதுரு பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு, குற்றவுணர்வு பெற்ற அக்கூட்டத்தாரின் கேள்விக்கு எளிதில் விளங்கக் கூடிய வகையில் ஒரு பதிலை அளித்தார்: ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38).*

*பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பு நமது கர்த்தர், பிரதான கட்டளையென்று நம்மால் பெரும்பாலும் அழைக்கப்படும் கட்டளை யைக் கொடுத்தார். இந்தக் கட்டளையைப்பற்றி புதிய ஏற்பாட்டில் விபரமான வகையில் மூன்று வசனக் குறிப்புகள் இருக்கின்றன: மத். 28:18-20; மாற். 16:15, 16 மற்றும் லூக். 24:46, 47 ஆகியவை. ஒவ்வொன்றும் ஒரு வித்தியாசமான விபரத்தை வலியுறுத்துகின்றது. மாற். 16:15, 16 விசுவாசத்தின் நிபந்தனையை வலியுறுத்துகிறது. லூக். 24:46, 47 மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அழுத்தமாகக் கூறுகின்றன. மத். 28:18-20ல் ஞானஸ்நானத்தைப்பற்றி முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனக் குறிப்புகள் மூன்றிலும், விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில்தான் தேவனுடைய கிருபையின் மூலம் இரட்சிப்பும், பாவ மன்னிப்பும் அளிக்கப்படும் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. பிரதான கட்டளையின் வார்த்தை அமைப்புகள் இதைப் புரிந்து கொள்வதில் எவ்வித சந்தேகமும் இல்லாத வகையிலுள்ளன.*

*பிரதான கட்டளையில் விளக்கமாகச் சொல்லப்பட்ட இம்மூன்று நிபந்தனைகளும் அவர்களின் கேள்விக்கான பேதுருவின் பதிலில் காணப்படுகின்றன. பேதுருவின் பிரசங்கத்தினால் அவர்களது இருதயத்தில் கிறிஸ்துவின்மேல் விசுவாசமானது தோற்றுவிக்கப் பட்டது, இந்த விசுவாசமே அவர்கள், அறிவுரைகளை வேண்டிக் கதறும்படி அவர்களைத் தூண்டியது. ஆகையால் யூதர்களின் கேள்விக்கான பேதுருவின் பதிலில் பிரதான கட்டளையில் குறிப்பிடப் பட்ட மற்ற இரண்டு நிபந்தனைகளான மனந்திரும்புதலும், ஞானஸ் நானமும் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டது. அவர், "நீங்கள் மனந்*

திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், ...” (அப். 2:38) என்று கூறினார். பாவமன்னிப்பு என்ற வார்த்தையைப் பேதுரு தனது பதிலில் எந்த இடத்தில் வைத்துள்ளார் என்பதைக் கவனியுங்கள். அவர் இரட்சிப்பு அல்லது பாவமன்னிப்பை ஞானஸ்நானத்திற்கு முன்பு வாக்களிக்கவில்லை. ஆனால் ஞானஸ்நானத்தின் பொழுது பாவமன்னிப்பு கிடைக்கும் என்று வாக்களித்தார். பேதுரு பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார், எனவே அவர் கொடுத்த பதில் அவருடையதாயிராமல், பரிசுத்த ஆவியானவருடைய பதிலாய் இருந்தது.

கதறியவர்களுக்குத் தரப்பட்ட இந்தப் பதிலானது மிகவும் தெளிவாக, ஆனால் தவறாகப் புரிந்து கொள்வதற்கும் மிகத் தெளிவானதாக இருக்கின்றது. இந்தப் பதிலின் வன்மையையும் வலியுறுத்தலையும் தட்டிக் கழிப்பதற்கு, சிலர் மார்க்கப் போதகர்கள் அப். 2:38ல் (ஆங்கில வேதாகமத்தில்) உள்ள “for” என்ற வார்த்தை (தமிழில் பாவமன்னிப்புக்‘‘கென்று’’) கிரேக்க மொழியில் “அதற்கென்று” என்று பொருள்படும் வார்த்தையிலிருந்தல்ல மாறாக “ஏனென்றால்” (அதாவது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதால்) என்று பொருள்படும் வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகக் கூறியுள்ளனர். வேதாகமத்தின் அநேக மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு நோக்கும்போது “eis” என்ற கிரேக்க வார்த்தையானது நம்பத் தகுந்த விதத்தில் ‘‘அதற்கென்று’’ அல்லது ‘‘அதற்காக’’ என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால், *eis* என்ற கிரேக்க வார்த்தையானது ‘‘அதற்கென்று’’, ‘‘அதற்காக’’ அல்லது இவைகளுக்குச் சமமான சொற்றொடர்களையே தருகின்றன. இவைகளில் எவையும் “ஏனென்றால்” என்ற அர்த்தமுள்ள வார்த்தையைத் தருவதில்லை. பேதுருவின் பதிலில் ஞானஸ்நானத்தின் பொழுதே பாவமன்னிப்பு கிடைக்கின்றது என்பது தெளிவாக வைக்கப்பட்டுள்ளது. தேவனே இந்த நிலைநிற்கும் கேள்விக்குப் பதில் அளிப்பாராக! மனிதர்கள் எவரையும் இதற்குப் புறம்பாக விளக்கம் தரும்படி அனுமதிக்க வேண்டாம்.

புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு வசனமும் அதற்கொப்பான இன்னொரு வசனத்தைக் கொண்டுள்ளது என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கின்றார். இது எப்பொழுதுமே உண்மையாயிருப்ப

தில்லை என்றாலும், இதில் சில சத்தியங்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டின் சிலவசனங்கள் அவைகளின் இணைகளைக் கொண்டுள்ளன, அந்த இணையை நாம் கண்ணோக்கும்போது, அதே சத்தியத்தை வேறு வழியில் அது கூறுவதை நாம் காணுகின்றோம். அப். 2:38ன் இணைவசனம் எது? அது அப். 22:16 ஆகும். “ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?” (அப். 22:10அ) என்ற கேள்விக்குப் பதிலைத் தேடி சவுல் தமஸ்குப் பட்டணத்திற்கு வந்திருந்தார். கர்த்தரைக் கண்டு, அவரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததால் அவர் விசுவாசிக்கிறவராய் இருந்தார். அவர் கர்த்தரிடத்தில் கேட்ட கேள்வியால் அவரது மனந்திரும்புதல் சுட்டிக் காட்டப்பட்டது. அவர் கர்த்தரை ஒப்புக் கொண்டதற்கு அவரது கேள்வியில் ஆதாரம் இருந்தது; ஆனால் அவர் தமஸ்குவுக்குச் செல்லும்படியும், அங்கு அவர் செய்ய வேண்டியதென்ன என்று கூறப்படும் என்றும் அவருக்குச் சொல்லப்பட்டது. தமஸ்குவில் அவர் மனந்திரும்பிய நிலையில் ஜெபித்துக் கொண்டு, மூன்று நாளளவும் தனது கேள்விக்கான பதிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அனனியா அந்தப் பதிலுடன் அவரிடத்திற்கு அனுப்பப்பட்டார். அனனியா அவரிடத்தில் என்ன கூறினார்? அனனியா கொடுத்த பதிலானது அப். 2:38ன் இணைவசனம் என்று நீங்கள் கூறலாம். அவர், “இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு” என்று கூறினார். பாவமன்னிப்புக்காகத்தான் ஞானஸ்நானம் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்குமென்றால், அப். 22:16 வசனமானது நிச்சயமாகவே இந்தக் கேள்வியை என்றென்றைக்கும் ஓயப்பண்ணுகின்றது.

மார்க்கரீதியான தனியார் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு இளைஞர், தனது வேதாகம விரிவுரையாளர் பாவமன்னிப்பிற்காகவே ஞானஸ்நானம் என்பதை நம்பவில்லையென்றும், அந்த உபதேசத்தையே அவரது வகுப்பில் போதித்துக் கொண்டிருந்தார் என்றும் ஒருமுறை கூறினார். அந்த இளைஞர் “இதைப் பற்றி என்ன செய்வது என்று எனது தாயாரை கேட்டேன். அதற்கு அவர்கள், வகுப்பு முடிந்த பிறகு அந்த விரிவுரையாளரிடம் சென்று அப். 2:38க்கு விளக்கம் தரும்படி நான் கேட்க வேண்டும் என்றார்கள். நான் அவ்வாறே செய்தேன். நான் எனது வேதாகமத்தைத் திறந்து, அப். 2:38 பகுதியை எடுத்துக் கொண்டு, வகுப்பு முடிந்த பிறகு அவரிடத்தில் சென்று அதை விளக்கும்படி மரியாதையுடன் கேட்டேன். அவர்,

அப். 2:38 ஆனது, பாவமன்னிப்புப் 'பெற்றதால்' என்றுதான் பொருள் படுகின்றது, அது பாவ மன்னிப்புக்'கென்று' எனப்பொருள் படுவதில்லை என்று கூறினார். நான் வீட்டிற்குச் சென்று அவர் என்னிடம் கூறியதை எனது தாயாரிடம் குறிப்பிட்டேன், அப்போது அவர்கள் என்னை அவரிடத்தில் மறுபடியும் சென்று அப். 22:16க்கு விளக்கம் தரும்படி கேட்கச் சொன்னார்கள். நான் அவ்வாறே செய்தேன். நான் எனது வேதாகமத்தைத் திறந்து, அப். 22:16 பகுதியை எடுத்துக் கொண்டு, வகுப்பு முடிந்த பிறகு அவரிடத்தில் சென்று அதை விளக்கும்படி மரியாதையுடன் கேட்டேன். அந்தப் பேராசிரியர் என்ன கூறினார் என்பதை நீங்கள் அறிவீர்களா? அந்த வசனத்தை விளக்க முயற்சி செய்யாமல் அவர் அடுத்த வசனத்திற்குத் தாவிச் சென்று அதை விளக்கப் போவதாகக் கூறினார்" என்றார். அப். 22:16ஐத் தவிர்த்து விளக்க முடியாது. அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் அல்லது மறுக்கப்பட வேண்டும்.

இந்தக் கேள்விக்குப் பேதுரு கொடுத்த பதிலானது மனித வரலாற்றின் நிறைவான காலமாகிய கிறிஸ்துவின் யுகத்திற்கு தேவனின் பதிலாகும் என்பதை பேதுரு சுட்டிக் காட்டினார். அவர், "வாக்குத் தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண் டாயிருக்கிறது" என்று கூறினார் (அப். 2:39). "உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்" என்ற விளக்கமானது, நற்செய்திக்குப் பதில் செயல் செய்த யூதர்களையும் ''தூரத்திலுள்ள யாவருக்கும்'' என்ற சொற்றொடரானது எதிர்காலத்தில் சுவிசேஷத்தை ஏற்று கிறிஸ்துவினிடத்தில் வரக் கூடிய புறஜாதிகள் அனைவரையும் உள்ளடக்கியதாய் இருக்கின்றது. "தூரத்திலுள்ள யாவருக்கும்" என்ற சொற்றொடரானது நிச்சயமாகவே புறஜாதிகளைக் குறிப்பதாகவே உள்ளது. பேதுரு, பெந்தெகொஸ்தே நாளுக்கான தேவனுடைய திட்டத்தை மட்டுமல்லாது, எதிர் வரவிருந்த கிறிஸ்துவின் யுகம் முழுவதற்குமான தேவனுடைய திட்டத்தை அறிவித்தார். "இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கான தேவனுடைய பதிலை அவர் கொடுத்தார்.

## அத்தியாயம் ஐந்து: ''ஆச்சரியமான பதில்செயல்''

கூறப்பட்டதிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது என்ற புத்தகத்தின் ஐந்தாவது அத்தியாயமானது, ''ஆச்சரியமான

*பதில்செயல்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இரட்சிப்பின் சுவிசேஷ நற்செய்தி முதன் முதலாகப் பிரசங்கிக்கப்பட்ட போது, ஆச்சரியமான வகையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதைப் பற்றி லூக்கா கூறினார். அவர், "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப். 2:41) என்று கூறினார்.*

*அந்தக் காலை வேளையில் பேதுருவும் மற்ற அப்போஸ் தலர்களும் எவ்வளவு நேரம் பிரசங்கம் செய்தார்கள் என்று நமக்குக் கூறப்படவில்லை. லூக்கா, "இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்" (அப். 2:40) என்று எழுதினார். பேதுரு, ஆதாரம் மற்றும் விவாதத்தினால் அவர்களை நம்ப வைத்ததோடு, சாட்சியம் மற்றும் புத்தி சொல்லுதலால் அவர்களை வற்புறுத்தினார்.*

*பேதுருவின் செய்தியைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்த வர்கள் அதற்கேற்பச் செயல்பட்டார்கள். லூக்கா, "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ் நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப். 2:41) என்று விபரமாக எடுத்துச் சொல்லுகின்றார். இந்த மக்கள் வசனத்தைக் கேட்கிறவர் களாய் மட்டும் இராமல், அதற்கேற்ற செயல்களைச் செய்கிறவர்களா யிருந்தார்கள் (யாக். 1:25). அவர்கள் அதைக் கவனிக்கிறவர்களாய் மட்டும் இராமல், அதன்படி வாழ்வதற்கு முடிவு செய்தார்கள். அநேக மக்கள் பிரசங்கத்தை வெறுமனே கேட்டு விட்டுப் போய்விடுவது எவ்வளவு பரிதாபமானது. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட திரளான கூட்டத்தாரில் குறைந்த பட்சம் சிலராவது, அவரது செய்தி யினால் தீர்மானத்திற்கு வந்ததோடில்லாமல், அந்த செய்தியின்படி வாழவும் தங்கள் இருதயங்களை ஒப்புக்கொடுத்தமையால், கிறிஸ்துவினிடத்தில் மனந்திரும்பினர்.*

*மூவாயிரம் பேர், வசனத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற்றனர். மனமாறுதல் ஏற்படுவதற்கு முன்னதாக, இரட்சிப்பின் வசனத்தை ஒருவர் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் அநேக மக்கள் இன்று மனம் மாறாததற்குக்*

*காரணம், அவர்கள் தங்கள் இருதயங்களில் வசனத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளாததுதான். வசனமானது சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளப்படும்போது, அது எப்பொழுதுமே தனது பணியைச் செய்யும்.*

## அத்தியாயம் ஆறு: "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சரீரம்"

*இந்தப் புத்தகத்தின் ஆறாவது தலைப்பானது "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சரீரம்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. ஞானஸ்நானம் பெற்றக்கொண்ட மூவாயிரம் பேரே சபையார் என்பதாக லூக்கா சித்தரித்தார்.*

*தேவனுடைய தனிச் சிறப்பான ஒரு இராஜ்யம் வரப் போவதாக தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தார்கள் (தானி. 2:44). வரப்போகிற மேசியாவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுகையில் யோவான் ஸ்நானனும் கூட, பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பதாக அறிவித்தார் (மத். 3:1, 2). தேவனால் அனுப்பப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்து கூட, தமது ஊழியத்தின் போது மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று மக்களை அழைத்தார் (மத். 4:17). கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு தாம் பரத்துக்கேறுவதற்கு முன்பு, நாற்பது நாளளவும், தமது சீஷர்களிடத்தில், வரப்போகிற இராஜ்யத்தைக் குறித்துப் பேசினார் (அப். 1:3). தமது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கூறிய நிறைவான வார்த்தைகளில் தமது பிதா வாக்குத்தத்தம் பண்ணினதைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களைக் காத்திருக்கும்படி கூறினார் (அப். 1:4). அவர் பரத்துக்கேறின பத்து நாட்களுக்குப் பிறகு, ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, நீண்ட நாட்களாகக் காத்திருந்த அந்தக் காலம் வந்தது. பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளல்ல (அப். 2:1-4), கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு சுவிசேஷத்தின் முதலாவது பிரசங்கம் (அப். 2:14-36) மற்றும் சுவிசேஷத்திற்கு மூவாயிரம் பேர் பதில்செயல் ஆகியவற்றுடன் சபையானது பிறந்தது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தபோது கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள், கிறிஸ்துவின் சபைக்குள்ளாக்கப்பட்டார்கள். அந்த நாள் தொடங்கி, இதுவரைக்கும் யாரேனும் ஒருவர் சுவிசேஷத்தைக் கேட்டு, கிறிஸ்துவின்மேல் விசுவாசமாகி, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன்*

என்று அறிக்கையிட்டு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று சந்தோஷத்துடன் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறபோதெல்லாம் அவர்-பெந்தெகொஸ்தே நாளன்று முதன் முறையாகக் கிறிஸ்து வினிடம் வந்து சேர்ந்த மூவாயிரம் பேருடன்- சேர்த்துக் கொள்ளப் படுகின்றார் (அப். 2:47).

பெந்தெகொஸ்தே நாள் முதல், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சபையானது ஒரு வாக்குத்தத்தமாகவோ அல்லது தீர்க்கதரிசனமாகவோ பேசப்படாமல், இருக்கின்ற ஒன்றாக, ஜீவனுள்ள உண்மை நிலையாகப் பேசப்படுகின்றது. அப். 2ன் முடிவுப் பகுதியில் லூக்கா, "... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப். 2:47) என்று கூறினார். அப். நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பேதுருவின் இரண்டாவது பிரசங்கத்தின் முடிவில், லூக்கா, "வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது'' (அப். 4:4) என்று எழுதினார். அனனியா, சப்பீராள் ஆகியோரின் மரணங்களைத் தொடர்ந்து (அப். 5:1-10) லூக்கா, "சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டா யிற்று" (அப். 5:11) என்று எழுதினார். ஸ்தேவானைக் கல்லெறிந்த தினால் ஒரு உபத்திரவம் உண்டானபோது (அப். 6:8-7:60), லூக்கா, "...அக்காலத்தில் எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்" (அப். 8:1) என்று கூறினார். லூக்காவின் கருத்துப்படி, தேவனுடைய தனிச்சிறப்புள்ள இராஜ்யமாகிய சபையானது வந்திருந்தது.

ஒரு மாபெரும் நற்செய்திப் பிரசங்கியாரான மார்ஷல் கீபிள் அவர்களிடத்தில் ஒருவர் ஒரு நாள் வந்து, அவருடைய இருதயத்தைச் சுட்டிக்காட்டி, "சகோதரர் கீபிள் அவர்களே, இதை நான் உணர விரும்புகின்றேன். இங்கே, இப்பொழுதே இதை நான் உணர விரும்புகின்றேன்" என்று சொல்லியதாகக் கூறப்படுகின்றது. சகோதரர் கீபிள் அவர்கள் இக்கட்டான சூழ்நிலையில் நிறுத்தப்படும்போது மறக்க முடியாத வகையில் பதில் கொடுக்கக் கூடிய அற்புதத் திறமை பெற்றவர். அவர் தமது வேதாகமத்தைச் சுட்டிக்காட்டி, "நல்லது, நான் இதைப் படிக்க விரும்புகிறேன். இப்போதே இங்கேயே நான் இதைப் படிக்க விரும்புகிறேன்'' என்று அவருக்குப் பதில் அளித்தார்.

உணர்வுகள் முக்கியமானவைகளே, ஆனால் நம்மை அவைகள் வழிநடத்த நாம் அனுமதிக்கக் கூடாது.தேவனுடைய வசனமாகிய வேதாகமமே நம்மை வழிநடத்த வேண்டும். அவருடைய வசனத்தை உண்மையாகவே ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகிய வற்றின் அடிப்படையில் நமது உணர்வுகள் அமையும்போது, புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள கலப்படமற்ற, தூய்மையான சந்தோஷம் நம்மிடத்தில் இருக்கும்.

## முடிவுரை

*கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது* என்ற இந்தப் புத்தகத்தை முடித்து விட்டு, நாம் வாசித்தது என்ன என்று எண்ணிப் பார்க்கத் தொடங்குகின்றோம். நமது செய்திப் பத்திரிகை கள் அல்லது உள்ளூர் மற்றும் தேசியத் தொலைக்காட்சிச் செய்திகள் ஆகியவற்றில் நாம் காண்பவைகளுக்கு மேலாக மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று நம்மில் உதயமாயிருக்கக் காணுகின் றோம். அப். நடபடிகள் என்ற ஏவப்பட்ட புத்தகத்தின் மூலமாக நாம், கடந்த காலத்தை மறைத்திருந்த திரையைப் பின்னுக்கிழுத்து விட்டு, உலகத்தின் வரலாற்றில் இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த் தெழுதல் என்பவைகளுக்கு அடுத்த நிலையில் இருக்கின்ற மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியை நாம் காண்கின்றோம். நீண்ட காலமாகக் காத்திருக்கப்பட்ட தேவனுடைய தனிச் சிறப்பு மிக்க இராஜ்யமாகிய சபை தொடங்கிய உண்மையான வரலாற்றை நாம் கண்டிருக் கின்றோம். இதன் தொடக்கத்தினால், மனிதகுல வரலாற்றின் இறுதி யுகமாகிய, கிறிஸ்தவ யுகம் அல்லது “கடைசி நாட்களின்” யுகம் அறிமுகப்படுத்தப்பட்டதை நாம் கவனித்திருக்கின்றோம்.

நாம் படித்துள்ள இந்தப் புத்தகத்தின் முக்கிய அம்சமான இன்னொரு புத்தகம் தொடர்கின்றது. அதை நாம், *கூறப்பட்டவை களிலே மாபெரும் வரலாற்றின் மூன்றாம் பாகம்* என்று அழைக்க முடியும். அது, இயேசு கட்டியெழுப்பிய சபையின் ஒரு அங்கமாக, நீங்கள் கிறிஸ்துவுக்குள் மனம் மாறுவதேயாகும். இந்த வரலாறு நம் ஒவ்வொருவருக்கும் மாறுபடக் கூடியதாக இருக்கும். நம்மில் அநேகருக்கு இந்த வரலாறு சுலபமாய் எழுதப்படக் கூடியதாக இருக்கும், ஆனால் சிலரது வாழ்க்கையில் இது இன்னமும் நடைபெறாதபடியால், இதை அவ்வளவு சுலபமாய் எழுதி விட

முடியாது. உங்களைப் பொறுத்தமட்டில் நிலைமை என்னவாக இருக்கின்றது? இந்த வரலாறு நடைபெற்றுள்ளதா? நீங்கள் புதிய ஏற்பாட்டின்படியான கிறிஸ்தவராகியிருக்கின்றீர்களா?

நீங்கள் புதிய ஏற்பாட்டின்படியான கிறிஸ்தவராகாதிருந்தால், அது எப்படி நடைபெற முடியும் என்பதை இப்போது அறிந்தவரா யிருக்கின்றீர்கள். சுவிசேஷ நற்செய்தியின் வசனத்தை நீங்கள் சந்தோஷ மாய் ஏற்றுக்கொள்வதன் மூலம், நீங்கள் அதற்குக் கீழ்ப்படிவதன் மூலம் அப். 2ல் கண்டிருக்கின்ற பரலோகத்தின் இராஜ்யமாகிய தேவனுடைய இராஜ்யத்திற்குள் நீங்கள் பிறக்க முடியும்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 313 ம் பக்கங்களில்)*

1. சபை நிலைநாட்டப்பட்டதை நாம், கூறப்பட்டவை களிலேயே மாபெரும் வரலாற்றிற்கு அடுத்ததாக இருக்கிறது என்று எவ்வகையில் கூற முடியும்?
2. பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள் என்பதற்கு என்ன ஆதாரத்தை உங்களால் கொடுக்க முடியும்?
3. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்றதற்கான தெய்வீகக் காரணங்களை விவாதித் தறியவும்.
4. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்றது, நமக்கு இந்நாட்களில் எதை அர்த்தப் படுத்துகின்றது?
5. பேதுரு தமது பிரசங்கத்தில் கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு முன்வைத்த ஆதாரத்தை விவாதித்தறியவும்.
6. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழாதிருந்தால் நாம் அவரை எவ்வகையிலாவது தேவனுடைய தெய்வீக குமாரன் என்று நினைத்திருக்க முடியுமா?
7. பாவத்தில் இருப்பதைக் காட்டிலும் மாபெரும் துன்பம் ஒன்றை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா?
8. இரட்சிப்பின் நிபந்தனைகளை பிரதான கட்டளையின் மூன்று

*வசனப்பகுதிகளும் (மத். 28:18-20; மாற். 16:15, 16; லூக். 24:46, 47) மாறுபட்ட விதத்தில் வலியுறுத்தல் செய்வதை விளக்குக.*

9. *அப். 22:16 ஆனது அப். 2:38ஐ எவ்விதம் ஆதரிக்கின்றது என்பதை விவாதித்தறியவும்.*

## வார்த்தை உதவிகள்

***மனமாற்றம்*** *- ஒருவரின் இருதயத்தில் மாற்றம் ஏற்பட்டு, அவர் கிறிஸ்தவர் ஆகுதல்.*

***அற்புதங்களின் காலம்*** *- அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் கைகளை வைத்து ஜெபிக்கப்பட்டவர்கள் ஆகியோர் அற்புதங்கள் செய்த காலம். இது, சபை தொடங்கிய சமயத்தில், அதன் குழந்தைப் பருவத்தில் இருந்த காலமாகும். இன்றும் தேவன் ஜெபத்திற்குப் பதில் தருகின்றார், ஆனால் கடைசி அப்போஸ்தலரின் மரணத்துடன் அற்புதங்களின் காலம் முடிவு பெற்றது (எபே. 4:11-13; 1 கொரி. 13:8-10).*

***நிக்கொதேமு*** *- இயேசுவிடம் இராக் காலத்தில் வந்த ஒரு போதகர். இயேசு அவருக்கு தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்விதம் என்று போதித்தார் (யோவா. 3).*

***வெளிப்படுத்துதல்*** *- பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப் பட்ட அல்லது அறியும்படி செய்யப்பட்ட சத்தியங்கள். வேதாகமமே மனிதனுக்கு தேவனுடைய வெளிப்படுத்துதலாயுள்ளது.*

# 12

# புதிய ஏற்பாட்டின் சபை

*இந்த உலகத்தில் வாழ்கின்றபோது முடிவுகள் எடுப்பது என்பது அவசியமான தேவையாய் இருக்கின்றது. நமது முடிவுகளில் பெரும் பாலானவை சிறியவையாக, அந்த நேரத்திற்குரியதாக, மற்றும் குறிப்பிட்டுக் கூறத் தேவையற்றவையாக இருக்கின்றன. மற்ற முடிவுகள், நாம் இந்த வாழ்க்கையில் தேவனுக்கு முன்பாக வாழும் வழியில் விளைவை ஏற்படுத்தி, நமது நித்திய அடைவிடத்தைத் தீர்மானிப்பதாக இருக்கும் அளவுக்கு மிகவும் முக்கியமானவைகளாக இருக்கின்றன. வாழ்க்கை மற்றும் நித்தியத்தின் மீது செல்வாக்கைச் செலுத்தும் இந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு முன்பு தீவிரமான சிந்தனையும் ஜெபம் நிறைந்த ஆராய்ச்சியும் தேவைப்படுகின்றன. புதிய ஏற்பாட்டின் சபையில் பிரவேசிக்கும் முடிவைக் காட்டிலும் சிறந்த முடிவாக வேறு எதனையும் கருத முடியாது. இந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டில் நாம் எடுக்கும் முடிவானது, தேவனுக்காக நமது அன்றாட வாழ்க்கை, நமது ஆவிக்குரிய ஒப்புத்தன்மை, நமது ஆராதனை, மற்றும் நமது ஆவிக்குரிய ஊழியம் ஆகியவற்றின் மீது செல்வாக்கைச் செலுத்தும். ஆகவே இந்தக் கேள்வியானது வேத வசனங்களின் தெளிவான உபதேசங்கள் மற்றும் தப்பெண்ணமற்ற வகையில் நமது தர்க்க அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின்படி பதில் அளிக்கப்படும் வரையில் ஆழ்ந்த சிந்தனையோடு கவனிக்கப்பட வேண்டும்.*

*நமது உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கை கொள்ளும் பண்பு ஆகியவற்றிற்கு வேண்டுகோள் விடுக்கக்கூடிய அநேக வித்தியாசப் பட்ட சபைகள் நமது உலகத்தில் நிறைந்துள்ளன. ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டாக வேண்டும். புதிய ஏற்பாட்டின் சபை எது? எப்படி*

நாம் முடிவு செய்வோம்?

தேவனைப் பிரியப்படுத்தும் சரியான தெரிவை முடிவு செய்யும்படியும், அதற்கான ஆதாரத்தைச் சிந்தித்துப் பார்க்கும் படியும் பொது அறிவுக்கேற்ற வழிகாட்டுதல்கள் நமக்குத் தொடர்ந்து துணைபுரிய வேண்டும். நாம் நேர்மையுடன் இந்த வழிகாட்டுதல் களைப் பின்பற்றினால் இந்த நாட்களிலும் இவ்வுலகத்தில் புதிய ஏற்பாட்டின் சபையை நம்மால் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

இந்த வழிகாட்டுதல்கள் யாவை?

## முதலாம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டின் சபை எவ்விதம் அடையாளப்படுத்தப்பட்டது?

புதிய ஏற்பாட்டின் சபையைப் பற்றிய முதலாவது கண் ணோட்டம் அப். 2ன் பிற்பகுதியில் காணப்படுகின்றது. சுவிசேஷப் புத்தகங்களில் இதைப் பற்றி இயேசுவாலும், அப்போஸ்தலர்களாலும் தரப்பட்ட தீர்க்கதரிசனங்களில் சபை பற்றிய உருவகத்தின் பதிவுகளானது (மத். 16:18; மாற். 9:1; அப். 1:4-8) நமக்குள் ஒரு எதிர் பார்ப்பையும், காத்திருத்தலையும் ஏற்படுத்தியிருக்கின்றன. பிறகு, அப். 2ல் சபையானது நிலைநாட்டப்படுகையில் பரிசுத்த ஆவியான வரால் சபையின் உயிருள்ள சித்தரிப்பு நமக்கு முன்பாக வைக்கப் பட்டுள்ளது.

சபையின் இந்தச் சித்தரிப்பு அதன் முக்கிய பண்புகளைக் காண நமக்கு உதவுகின்றது. உண்மை வாழ்க்கையில் இயேசு உண்டாக்கின சபை எப்படியிருக்கும் என்று நாம் ஆச்சரியப்படும்படி விட்டுவிடப் படவில்லை.

லூக்காவினால் அப். 2ல் தரப்பட்டுள்ள சபையின் முக்கியப் பண்புகளைக் கவனமாக ஆராய்ச்சி செய்யுங்கள்:

> அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந் நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்.
>
> எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர் களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து,

*சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொரு வனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சி யோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப். 2:42-47).*

*இந்தச் சித்தரிப்பில் சபையின் பண்புகளாக நாம் காணுகின்றவை யாவை?*

## உறுதிப்பாட்டில் பெலத்துடன் இருத்தல்

முதலாவது பண்பானது அப்போஸ்தலரின் உபதேசம் அல்லது போதனையில் நிலையான உறுதிப்பாட்டுடன் இருத்தலாகும். லூக்கா, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நி யத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என்று கூறினார் (அப். 2:42).

அப்போஸ்தலருடைய உபதேசத்தில் சபையானது உறுதியாய்த் தரித்திருந்த இந்த பண்பானது, அவர்களுடைய உபதேசத்தைச் சபையார் உண்மையிலேயே பின்பற்றியதை வெளிப்படுத்துவதா யிருக்கின்றது; அவர்கள் தங்களின் ஐக்கியம், ஆராதனைக்கு ஒன்று கூடுதல், ஊழியம் மற்றும் கொடுத்தல்; "அப்பம் பிட்குதல்" என்ற கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல்[1] மற்றும் ஜெபம் பண்ணுதல் ஆகியவற்றிலும் அப்போஸ்தலருடைய உபதேசத்தை உண்மை யிலேயே பின்பற்றினார்கள். கிறிஸ்துவே அவர்களின் தலைவராக இருந்தார், அப்போஸ்தலர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்ட அவருடைய வசனத்தைக் கனப்படுத்தியதன் மூலம் சபையில் அவரது தலைமைத்துவத்தை அவர்கள் அங்கீகரித்துணர்ந்தனர்.

கிறிஸ்துவை அவரது சபையாகப் பின்பற்றுதல் என்ற இந்த எளிமையைக் குழப்புகின்ற பிரிவுகளை நாம் கிறிஸ்தவ உலகத்தில் அனு மதிக்கக் கூடாது. சபை என்பது மனிதரால் உண்டாக்கப்பட்ட

அமைப்பல்ல. பரிசுத்த ஆவியானவரின் உபதேசத்தை இணக்கத்துடன் ஏற்றுக்கொண்டு, இவ்விதமாய் சுவிசேஷத்திற்குத் தங்களின் கீழ்ப்படி தலினாலே பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவின் சபைக்குள்ளாக இணைக்கப்பட்ட மக்களின் குழுவாகவே இது இருக்கின்றது. இவர்கள் கிறிஸ்துவுக்கே உரியவர்கள். இவர்கள் மனிதத் தலைமைத் துவம் எதையும் நோக்குவதில்லை, ஆனால் சரீரத்தின் தலையாகிய கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட அவரது வசனத்தின் மூலமாகவே வழிநடத்தப்படுகின்றார்கள். இவர்கள் கிறிஸ்துவுக்கு உண்மையா யிருத்தல் என்ற சொற்றொடரை, ஏவப்பட்ட அவருடைய வசனத்தில் தரித்திருத்தல் என்பதாகவே கண்ணோக்குகின்றார்கள். கிறிஸ்தவர் களின் ஆராதனை, கிறிஸ்துவின் கரங்களாக இருந்து இவ்வுலகத்தில் செய்யும் அவர்களின் ஊழியம், மற்றும் கிறிஸ்துவுக்கென்று அன்றாட வாழ்க்கை ஆகியவற்றில் வேதாகமமே கிறிஸ்தவர்களை வழி நடத்துகின்றது.

சபையைப் பற்றிய பரிசுத்த ஆவியானவரின் சித்தரிப்பைக் காணுகையில், நாம் உறுதிப்பாட்டில் பெலத்துடன் இருத்தல் என்ற பண்பைக் காணுகின்றோம்.

## பரிவிரக்கத்தில் சுயநலமின்மை

சபையின் இந்தத் தெய்வீகச் சித்தரிப்பில் நாம் காணத்தவறக் கூடாததாக இருக்கும் இன்னொரு பண்பு, சபையில் ஒருவருக் கொருவர் காண்பித்த சுயநலமற்ற பரிவிரக்கமாகும். வசனத்திற்கு உண்மையிலேயே கீழ்ப்படிதல் என்ற அவர்களுடைய பண்பானது, ஒருவருக்கொருவர் பரிவிரக்கமுள்ள அன்பு செலுத்துவதை அவர் களுக்குள் உண்டாக்கியது. லூக்கா, ‘‘காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்’’ (அப். 2:45) என்று கூறினார்.

யூதர்கள், ரோம சாம்ராஜ்யம் முழுவதிலுமிருந்து, பெந்தெ கொஸ்தே நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருந்தார்கள். இந்த பெந்தெகொஸ்தே நாள் சாதாரணமான ஒன்றாகவே இருக்கும் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்; ஆனால் அவர்கள் முற்றிலுமாக வியப்படையும்படி, அது அப்படியிருக்கவில்லை. தீர்க்கதரிசிகள் எதிர்நோக்கியிருந்த வரலாற்றுச் சிறப்புடைய நாளாக அது அமைந்திருந்தது. பேதுருவின் செய்தியைக் கேட்ட பிறகு, அநேக

யூதர்கள் கிறிஸ்தவர்களாக முடிவு செய்தனர் (அப். 2:41). கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் என்ற அவர்களின் முடிவு எல்லா வகையிலும் ஒரு மாற்றம் என்பதை அவர்களுக்கு அர்த்தப்படுத்தியது. அவர்கள் தாங்கள் அங்கம் வகிக்கும் சபையைப் பற்றி அப்போஸ் தலர்களால் போதிக்கப்படுவது என்ற ஒரு விஷயத்திற்காக இன்னமும் எருசலேமிலே தங்குவது தேவையாயிற்று. திடீரென்று இப்படி எருசலேமில் தங்கும்படியான முடிவெடுத்தது அவர்களில் அநேகருக்கு மிகுந்த சிரமமுள்ளதாயிருந்திருக்க வேண்டும், ஏனென்றால் இப்படித் தங்குவதென்று அவர்கள் முன் கூட்டியே திட்டமிட்டிருக்கவில்லை. அவர்களுக்குத் தங்க வீடு மற்றும் உணவு ஆகியவை தேவைப் பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சூழ் நிலையை எதிர்நோக்காதிருந்த மற்ற கிறிஸ்தவர்கள், தூர இடத்தி லிருந்து வந்த இந்த சகோதர சகோதரிகளின் துன்பத்திற்கு என்ன பதில்செயல் செய்தார்கள்? அவர்களின் பதில்செயலானது பரிவிரக் கமும் அன்பும் உள்ளதாகச் சித்தரிக்கப்படுகின்றது, இதற்கொப்பா னதைக் காண்பது மிகவும் அரிதாகும். இந்த சகோதர சகோதரிகளைப் பராமரிப்பதற்காகச் சிலர் வீடுகளையும் நிலத்தையும் விற்று விட்டார் கள். கிறிஸ்து தமது சபையில் அங்கம் வகிப்போரிடம் எப்பொழுதுமே எதிர்பார்க்கும் பண்பாகவே அவர்களின் பரிவிரக்கம் விளங்குகின்றது.

இவ்வாறு அவர்கள் பகிர்ந்து கொண்டதென்பது அவர்களின் சுயவிருப்பத்தின்படியே செய்தார்கள் என்பதே, விளக்க முடியாத, அழகுள்ள ஒரு சத்தியமாகும். அவர்களின் கொடுத்தலானது அப்போஸ்தலர்களால் வலியுறுத்தப்படவுமில்லை, கேட்டு பெறப்பட வுமில்லை (அப். 5:4). அது மென்மையான பரிவிரக்கமும் கிறிஸ்துவைப் போன்ற அன்பும் உள்ள அவர்களின் இருதயங்களிலிருந்து தானாகவே வெளிக் கிளம்பியது. கிறிஸ்து அவர்களுக்குள்ளாக ஒரு புதிய இயல்பை, சுய நலமற்ற பரிவிரக்கம் என்ற இயல்பை உண்டாக்கி யிருந்தார்.

அவர்கள் கொடுத்தது அல்லது பகிர்ந்து கொண்டது என்பது எல்லாரும் சமமாக வேண்டும் அல்லது எல்லாரும் சம அளவில் பொருட்களை உடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமானதாக இருக்கவில்லை. அது ஒரு சமுதாய வாழ்வு என்பதாக மட்டுப்படுத்தப் படவில்லை; அது பட்சமுள்ள அன்பாக இருந்தது. தேவைப்பட்டவர்களுக்கு அவர்கள் கொடுத்தார்கள். அவர்கள் தேவைகளையே திருப்திப்படுத்தினார்கள், பேராசைகளையல்ல.

ஒவ்வொரு அவசர விஷயமும் அவசியத்தை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் அறிந்தனர். மக்களுக்குத் தேவை ஏற்பட்ட போது, அந்தத் தேவைகளைச் சந்திப்பதற்கு மற்றவர்கள் அன்பினால் செயல் பட்டனர்-அது தியாகமுள்ள கொடுத்தல் என்று அழைக்கப்பட்டது.

பின்னொரு சமயத்தில் சபையைப் பற்றி லூக்கா, "நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவை களின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை" (அப். 4:34, 35) என்று கூறினார். மேலும் அவர், "ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னு டையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவா யிருந்தது" (அப். 4:32ஆ) என்றும் கூறினார்.

பரிவிரக்கம் என்பது கிறிஸ்துவின் சபையிலுள்ள ஒரு அடிப்படைக் குணாதிசயமாகும். அவரது வசனத்திற்கு உண்மையான கீழ்ப்படிதல் இல்லாத இடத்தில் அவரது சபை இருக்க முடியாது; கிறிஸ்துவின் இருதயத்தினுடைய வெளிப்பாடாகப் பரிவிரக்கம் சூழ்ந்து கொள்ளாத இடத்திலும் சபை இருக்க முடியாது. உண்மைக் கிறிஸ்தவர்கள் தங்கள் இருதயங்களில் வாசம் பண்ணுகின்ற தேவ னால் உண்டாக்கப்பட்ட, செயல்படுகின்ற சகோதர அன்பைப் பெற்றிருக்கின்றார்கள். யோவான், "ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடைய வனாயிருந்து, தன் சகோதரனுக்கு குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?" (1 யோவா. 3:17) என்று எழுதினார்.

சபையைப் பற்றிய பரிசுத்த ஆவியானவருடைய முதலாவது சித்தரிப்பில், சுயநலமற்ற பரிவிரக்கம் என்பது தெளிவாகவே குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக இருக்கின்றது.

## கிறிஸ்துவுக்குள் ஒருமித்தல்

இந்தச் சித்தரிப்பில் கிறிஸ்துவின் சபையினுடைய மூன்றாவது பண்பாக அதன் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. சுவிசேஷத்திற்கும் அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கும் இவர்கள் கீழ்ப்படிந்ததின் மூலம் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சபையாருக்கு சிந்தையில் ஒருமைப்பாட்டைக் கொடுத்திருந்தார். லூக்கா, "விசுவாசி

*களெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" (அப். 2:44) என்று கூறினார். மேலும் அவர், "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி" (அப். 2:46) என்றும் கூறினார்.*

*இயேசு கட்டிய சபையில் உள்ள இந்த அழகிய ஒருமைப் பாட்டை நாம் கூர்ந்து கவனிக்கையில், சபையின் இந்த முதலாவது சித்தரிப்பின் முக்கியத்துவத்தை நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்வோம். கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணத்தின் விளைவை இந்தச் சித்தரிப்பு நமக்குத் தருகின்றது. கிறிஸ்துவானவர் எப்படிப்பட்ட சபையை நிலைநாட்ட அல்லது உண்டாக்க வந்தார்? மாறுபட்ட பல பெயர்களைத் தரித்துக்கொண்டு, மாறுபட்ட மதக் கோட்பாடுகளின்படியாக வாழ்ந்து கொண்டு, ஒருவருக்கொருவர் ஐக்கியமற்ற பல்வேறு அமைப்புகள் கொண்ட ஒரு பெரிய நிறுவனத்தை அவர் நிலைநாட்டினாரா? அல்லது தாம் ஒருவரே தலையாக இருந்து ஆளக் கூடிய ஐக்கியமான ஒரே சரீரத்தை அவர் உண்டாக்கினாரா? ஒருவேளை புதிய ஏற்பாடு முழுவதிலேயும் நாம் பார்க்கையில் அப். 2ல் தான் கிறிஸ்து தமது சபை எப்படியிருக்க வேண்டும் என்று விரும்பியதும், இவ்வுலகில் அது எப்படி வாழ வேண்டுமென்ற அவரது விருப்பமும் தெளிவாக உருவகப் படுத்தப் பட்டுள்ளது. இந்தச் சித்தரிப்பானது சபையின் பண்பாக உள்ள ஒருமைப்பாடுள்ள சிந்தை மற்றும் வாழ்க்கையைத் தவறாமல் வெளிப் படுத்துகின்றது. இன்றைய நாட்களில் தமது சபையின் தன்மை பற்றிய கிறிஸ்துவின் விருப்பம் இதுவாகவே இருக்க வேண்டும். மார்க்க உலகத்தில் இன்று மேலோங்கியிருக்கும் பிரிவுகள் எல்லாம் மனிதன் தனது உலக ஞானத்தில் மூழ்கி, கிறிஸ்துவின் சபையை விட்டு விலகி, தனது சொந்தமாக உண்டாக்கிக்கொண்ட பிரிவுக் கூட்டங்களே ஆகும்.*

*கர்த்தருடைய சபையின் ஒருமைப்பாடு என்பதைத் திருமண உறவில் உண்டாகும் ஒருமைப்பாட்டைக் கொண்டு விளக்கப்படுத்த முடியும். திருமணத்தில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒன்றாகின்றார் கள் (எபே. 5:31). அவர்கள் திருமணம் முடிந்ததும் ஒரு புதிய குடும்பமாக மலருகின்றனர். அவர்கள் இருவரும் இப்பொழுது ஒருவருக்கொருவர் உரியவர்களாகின்றனர், ஒரு புதிய இயல்பைப்*

பெறுகின்றனர். சுயநல நோக்கங்கள் மற்றும் தனிப்பட்ட இலக்குகள் எல்லாம் மரிக்கின்றன; இந்தப் புதிய குடும்பத்திற்கான புதிய நோக்கங்களும், இலக்குகளும் உயிர் பெறுகின்றன. அவர்கள் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவுமுள்ளவர்களாய் ஐக்கியத்தோடு ஒன்று கூடி வாழ்ந்து, பராமரிப்பு, அன்பு மற்றும் தங்களின் வீட்டாருடைய எதிர்காலம் ஆகியவற்றிற்காக ஒன்றுகூடி உழைக்கின்றனர். இந்த ஒருமைப்பாட்டை அவர்கள் எவ்விதம் பெற்றனர்? திருமண சட்டங் களை நிறைவேற்றுவதிலும், திருமணத்தில் பிரவேசிப்பதிலும் அவர்கள் கொண்டிருந்த பொதுவான சம்மதித்தலே இதை அவர்களுக்குத் தந்தது. அவர்கள் இந்த ஒருமைப்பாட்டை எவ்விதம் பராமரிக்கின்றனர்? அவர்கள் ஒருவரையொருவர் நேசித்து, ஒருவர் மேலொருவர் அக்கறையாயிருந்து, ஒருவரையொருவர் மன்னித்து, தங்களின் திருமண வாக்குறுதிகளை மதித்து, திருமணம் என்ற ஆசீர்வாதமான நிலையையும் மதிப்பதாலேயே இதைப் பராமரிக் கின்றார்கள்.

சபையைப் பொறுத்தமட்டில் இது உண்மையாக இருப்ப தில்லையா? சபையின் ஒருமைப்பாட்டிற்குள் நாம் எவ்விதம் பிரவே சிக்கின்றோம்? நமது சொந்த சம்மதியினாலேயே நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு நமது வாழ்க்கையை அர்ப்பணித்து, அவரது சரீரமாகிய சபைக்குள் பிரவேசிக்கின்றோம். அந்த சரீரத்தில் நாம் பிரவேசிக்கையில், நாம் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவுடனும் சபையின் ஒவ்வொரு உறுப்பினருடனும் ஒருமைப்படுத்தப்படுகின் றோம். நாம் ஒரே இருதயம் மற்றும் ஒரே ஆத்துமாவுடன் அன்பு கூரவும், ஊழியம் செய்யவும், அவரது சரீரமாக வாழவும் தொடங்கு கின்றோம். இந்த ஒருமைப்பாட்டை நாம் எவ்விதம் பராமரிக் கின்றோம்? ஒருவரையொருவர் நேசித்து, மன்னித்து, ஆராதனை, ஊழியம் மற்றும் அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்துவின் வசனத்தைக் கனப்படுத்துவதன் மூலம் அதைப் பழுது படாமல் காத்துக் கொள்கின்றோம்.

ஒருமைப்பாடு என்பது கிறிஸ்துவின் சபையில் உள்ள மறுக்க முடியாத ஒரு பண்பாகும். கிறிஸ்துவின் உண்மையான சபை என்பது பிரிவினைகள் கொண்டதாக இருக்க முடியாது. இந்த ஒருமைப் பாடானது, நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும்போது பரிசுத்த ஆவியானவரால் நமக்குக் கொடுக்கப்படுகின்றது; நாம் அவரது சரீரமாக வாழுகையில் ஒன்று நாம் அதை பராமரிக்கின்றோம் அல்லது

நாம் அதைச் சேதப்படுத்துகின்றோம். கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினை என்பது ஒவ்வொரு கிறிஸ்தவராலும் நினைத்துக்கூடப் பார்க்க இயலாததாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய சித்தரிப்பின்படி, இந்த உலகத்தில் ஒருமைப்பாடு காணப்படும் ஒரே இடம் கிறிஸ்துவின் சரீரமேயாகும்.

## இந்நாட்களில் சபையை எவ்விதம் அடையாளப்படுத்த முடியும்?

### அதன் தொடக்கத்தைக் கவனியுங்கள்

புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தக் கூடிய முக்கியப் பண்புகளில் ஒன்று, அது தொடங்கப்பட்ட காலம் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபை தொடங்கிய காலக்கட்டத்திலிருந்து மாறுபட்ட வேறொரு காலகட்டத்தில் தொடங்கிய எந்த ஒரு பிரிவினை சபைக் கூட்டமும் புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க முடியாது என்பது தெளிவு.

இயேசு தமது சொந்த ஊழியத்தில் முக்கால் பாகத்தை நிறைவேற்றிய நிலையில் இருந்த சமயம், "நான் என் சபையைக் கட்டுவேன்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (மத். 16:18). அவர் தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளன்று தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் (அப். 2:41-47). இந்த பெந்தெகொஸ்தே நாள் முதல், புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகள் எல்லாவற்றிலும் சபையானது இருக்கின்ற ஒன்றாகவே பேசப்படுகின்றது (அப். 5:11; 7:38; 8:1, 3).

ஒருவேளை யாரேனும், "எனது சபையானது பழைய ஏற்பாட்டிலேயே தொடங்கப்பட்டது" என்று சொல்வார்களென்றால், அவரது சபை காலத்திற்கு மிகவும் முந்தியதாகின்றது. இராஜ்யத்தின் வருகையைப் பற்றிப் பழைய ஏற்பாடு முன்னுரைத்தது, ஆனால் சபை நிலை நாட்டப்பட்டதற்கான பதிவுகள் எதுவும் அதில் இல்லை. ஒரு வேளை ஒருவர், ''எனது சபை கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது'' என்று சொல்வாரேயானால், அவரது சபை, காலத்திற்கு மிகவும் பிந்தியதாகின்றது. இது புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க முடியாது. சபையானது எதிர்காலத்தில் ஒரு நாளில் நிலைநாட்டப்படும் என்ற கண்ணோட்டத்தில் புதிய ஏற்பாடு

முடிவடைவதில்லை. மாறாக ரோம சாம்ராஜ்யமானது தனது வல்லமையினால், உலக முழுவதிலும் சபை பரவுதலைத் தடை செய்யும் செயலுடன் அது முடிவடைகின்றது.

பொதுவாகப் பார்க்கும்போது, புரோட்டஸ்டெண்ட் சபைகள் பதினாறாம் நூற்றாண்டில், சீர்திருத்தும் காலத்தின்போதோ அல்லது பின்போ திடீரெனத் தோன்றின. இவ்வகையான நாமகரணக் கூட்டம் எதுவும் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. புதிய ஏற்பாட்டின் சபை நிலைநாட்டப்பட்டு அநேக நூற்றாண்டுகளுக்குப் பிறகு புதிய ஏற்பாட்டின் ஒழுங்கிலிருந்து விலகிச் செல்லும் அமைப்புகள் தோன்றலாயின, நாமகரணக் கூட்டங்கள் அமைக்கப்பட்டன. எந்த நாமகரணக் கூட்டமும் தொடங்கப்படுவதற்கு அநேக காலங்களுக்கு முன்பாகவே, மக்கள் கிறிஸ்தவர்களாகி, வாழ்ந்து, கிறிஸ்துவின் சரீரமாகவே ஆராதனை செய்ததையே புதிய ஏற்பாடு சித்தரிக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட சபையைப் பற்றி நீங்கள் கவனிக்கும்போது, “இது உண்மையில் எப்போது தொடங்கியது?’’ என்று கேளுங்கள். கர்த்தருடைய உயிர்த்தெழுலுக்குப் பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளுக்கு மாறுபாடான எந்தக் காலத்திலும் அது தோன்றியிருந்தால், அது புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க முடியாது.

## அதன் நோக்கத்தைக் கவனியுங்கள்

புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தும் இன்னொரு பண்பு, அதன் நோக்கம் அல்லது குறிக்கோள் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபையானது, புதிய ஏற்பாட்டின் சபையாகவே இருப்பதைத் தவிர வேறு எந்த இலக்கையும் பெற்றிருப்பதில்லை. அது புதிய ஏற்பாட்டின் சபையைப் போல இருப்பதற்கோ, புதிய ஏற்பாட்டின் சபையுடன் உறவு கொண்டதாக இருப்பதற்கோ, அல்லது புதிய ஏற்பாட்டின் சபைக்கு நெருங்கியதாக இருப்பதற்கோ முயற்சி செய்வதில்லை. அது புதிய ஏற்பாட்டின் சபையாகவே இருப்பதற்குத்தான் விரும்புகின்றது!

“புதிய ஏற்பாட்டின் சபை எது?” என்ற கேள்வியைக் கருத்தில் கொள்ளும்போது, ஒரு குறிப்பிட்ட சபையினிடம் நீங்கள், “இந்த உலகத்தில் இதன் குறிக்கோள் அல்லது நோக்கம் என்ன?’’ என்ற கேள்வியைக் கேட்கலாம். புதிய ஏற்பாட்டின் சபையானது இவ்வுலகத்தில் கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கின்றது. பவுல், “ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும்,

*எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:4, 5) என்று கூறினார். எந்த ஒரு சபையும் தான் இருக்கின்ற சமூகத்தில் கிறிஸ்துவின் சரீரமாய் இருப்பதை நாடவில்லையென்றால் அது புதிய ஏற்பாட்டின் சபையாக இருப்பதில்லை.*

*கிறிஸ்து தமது சீஷர்களாயிருக்கும்படி மக்களை அழைக்கையில், அவர்கள் சமயக் குழுவாக இருக்கும்படிக்கு அவர்களை அழைக்க வில்லை. தமது சீஷர்கள் இந்த உலகத்தில் தமது சரீரமாய் இருக்கும் படிக்கே அவர் அவர்களை அழைத்தார். இந்த சரீரமானது அவரது பெயரைத் தரித்து, அவருடைய நாமத்திலே ஒன்று கூடி ஆராதித்து, அவருடைய மகிமைக்காகவே இந்த உலகத்தில் அவருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும்.*

## *அதன் நடைமுறைகளைக் கவனியுங்கள்*

*புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தும் இன்னு மொரு பண்பு அதன் நடைமுறைகள் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபை என்று சொல்லிக் கொள்வது ஒரு விஷயமாக இருக்கையில், அந்த சபையானது அதன் நடை முறைகளில் அதன் அடையாளத்தை விளக்கப்படுத்த வேண்டியது முற்றிலும் இன்னொரு விஷயமாக இருக் கின்றது. எவரொருவரும் தன்னை புதிய ஏற்பாட்டின் சபையாராக உரிமைகோர முடியும், ஆனால் இந்த உரிமை கோரலுக்கு எப்பொழுதுமே நடைமுறையின் வழியாகவே நிரூபணம் கொடுக்க முடியும்.*

*புதிய ஏற்பாட்டின் சபையினுடைய நடைமுறைகள் புதிய ஏற்பாட்டில் எளிதில் காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதிக்க ஒன்று கூடி, கர்த்தருடைய மரணத்தின் நினைவாக அப்பம் பிட்டனர் (அப். 20:7; 1 கொரி. 11:20; எபி. 10:25). கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடித் தங்கள் இருதயங்களிலே கீர்த்தனம் பண்ணி, ஒருவருக்கொருவர் புத்தி சொல்லும்படியாக பாடல்கள் பாடலாம். ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்தியதாகக் குறிப்புகளோ அல்லது அதற்கான கட்டளையோ புதிய ஏற்பாட்டில் தரப்படவில்லை (எபே. 5:19; கொலோ. 3:16). தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்காகவும், ஏழைகளுக்கு உதவுவதற்காகவும் அவர்கள் தங்கள் வரவுக்குத் தக்கதாக*

வாரத்தின் முதல் நாள் தோறும் காணிக்கை கொடுத்தார்கள் (1 கொரி. 16:1, 2). அவர்கள் ஒன்றுகூடி ஜெபம் செய்து, ஏவப்பட்ட மனிதர்களால் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தைக் கவனித்தார்கள் (அப். 2:42). சொருபங்கள் அல்லது விக்கிரங்களை வணங்குவது, மெழுகுவர்த்திகள் அல்லது தூபவர்க்கங்களை ஆராதனையில் பயன்படுத்துவது போன்ற நடைமுறைகள் அங்கீ கரிக்கப்படவும் இல்லை, அவை புதிய ஏற்பாட்டின் சபையாருடைய நடைமுறையில் ஒரு பாகமாக இருக்கவும் இல்லை. புதிய ஏற்பாட்டின் படியான ஒவ்வொரு சபையும் அந்தந்த சபையிலேயே இருந்த கண்காணிகள் அல்லது மூப்பர்கள் மூலமாகவே ஒழுங்குபடுத்தப் பட்டன (1 தீமோ. 3:1-7) மற்றும் அவர்கள் அனைவருமே சபையின் ஒரே தலைவராக இயேசுவை மட்டுமே நோக்கினர். உதவிக்காரர்கள் (1 தீமோ. 3:8-11) மற்றும் சுவிசேஷகர்கள் (2 தீமோ. 4:1, 2) ஆகியோர் மூப்பர்களின் கண்காணிப்பின் கீழ் சபைக்கு ஊழியம் செய்தனர்.

புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்த, புதிய ஏற்பாட்டின் சபையினுடைய நடைமுறைப் பண்புகளை நாம் பட்டியலிட வேண்டும், பிறகு இந்தப் பட்டியலை நம்மைச் சுற்றி நாம் காணும் சபைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். புதிய ஏற்பாட்டின் முன் மாதிரியைப் பின்பற்றும் சபை ஒன்றை நாம் காணும் போது, அது உண்மையிலேயே அந்த முன்மாதிரிக்குப் பொருத்த மானதாய் இருக்கும் என்றால், நாம் கர்த்தருடைய சபையாகிய புதிய ஏற்பாட்டின் சபையைக் கண்டுவிட்டோம் என்று சொல்ல முடியும்.

## அதன் பெயர்களைக் கவனியுங்கள்

புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தும் இன்னொரு பண்பு அதன் பெயர் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபையை விளக்க வேதாகமத்தில் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் யாவும் அதை (சபையை) நாமகரணக் கூட்டங்களிலிருந்து தனிப்படுத்திவைப்பவை களாய் இருக்கின்றன.

புதிய ஏற்பாட்டில், புதிய ஏற்பாட்டின் சபையானது “கிறிஸ் துவின் சரீரம்” (எபே. 4:12), “தேவனுடைய சபை” (1 கொரி. 1:2), “கிறிஸ்துவின் சபையார்” (ரோமர் 16:16), “முதற் பேறானவர்களின் சபை” (எபி. 12:23), “பரலோக இராஜ்யம்” (மத். 16:19) மற்றும் “சபை” (எபே. 1:22) என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சொற் றொடர்கள் யாவும் சபையின் இயல்பையும், அடையாளத்தையும்

விளக்கப்படுத்துகின்றன. இவைகள் பெயர்கள் என்பதை விட விளக்கங்கள் என்பதே மிகவும் சரியானதாகும்.

புதிய ஏற்பாட்டில் காணப்படாத ஒரு சொற்றொடர் அல்லது பெயரால் அறியப்படும் ஒரு சபையை நீங்கள் கவனித்தால் என்னவாகும்? நிச்சயமாகவே அது ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதல்ல என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். முதலாவதாக, இது புதிய ஏற்பாட்டின் சபையாக இருந்தால், ஏன் புதிய ஏற்பாட்டிற்கு அந்நியமான ஒரு பெயரைத் தனக்கென்று பயன்படுத்த வேண்டும்? இரண்டாவதாக, இது புதிய ஏற்பாட்டின் சபையாக இருந்தால், புதிய ஏற்பாட்டின் சபைதான் என்பதைச் சுட்டிக்காட்ட புதிய ஏற்பாட்டின் சொற்றொடர் ஒன்றை ஏன் பயன்படுத்துவதில்லை? மூன்றாவதாக, புதிய ஏற்பாட்டின் சபையொன்று, புதிய ஏற்பாட்டிற்கு அந்நியமான ஒரு சொற்றொடரை உண்மையிலேயே சிந்திக்காமல் பயன்படுத்தக் கூடிய சாத்தியக் கூறு உண்டு. இதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் போது நிச்சயமாகவே அவர்கள் புதிய ஏற்பாட்டின் பெயர்களாக மாற்றிக் கொண்டு, அதன் மூலம் மற்றவர்கள் தங்களைப் புதிய ஏற்பாட்டின் சபையல்லாத வேறொரு சபை என்று தவறாகக் கருதாமல் இருப்பதில் சந்தோஷமடைவார்கள்.

ஒரு சபையானது, புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க விரும்பினால், அது புதிய ஏற்பாட்டின் சபையினுடைய பண்புகளை வளர்த்துக் கொண்டு, அது புதிய ஏற்பாட்டின் சபை என்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும் என்று விரும்புகின்றதாயிருக்கும், புதிய ஏற்பாட்டின் சபைக்கென்று புதிய ஏற்பாட்டில் கொடுக்கப் பட்டுள்ள பெயர்களை மட்டுமே அது தனக்கென்று நடைமுறையில் பயன்படுத்த வேண்டும்.

## முடிவுரை

புதிய ஏற்பாட்டின் சபையைப் பற்றிய பரிசுத்த ஆவியானவரின் சித்தரிப்பானது, கிறிஸ்துவின் சபையை மற்ற எல்லா மார்க்க அமைப்புகளில் இருந்தும் எல்லாக் காலத்திலும் தனிப்படுத்திக் காட்டக்கூடிய மூன்று குறிப்பிடத்தக்க பண்புகளை வெளிப்படுத்து கின்றது. முதலாவது, அவருடைய சபை என்பது, அவரது வசனத்திற்குக் கீழ்ப்படிந்து ஏவப்பட்ட அவரது வசனத்தில் உறுதியாய்த் தரித் திருக்கும் மக்களின் ஒரு குழுவாகும். இரண்டாவது, அவரது சபை

*யானது ஒவ்வொரு உறுப்பினர் மேலும் உள்ள பரிவிரக்கத்தினால், சபையில் தேவையில் உள்ள உறுப்பினர்கள்மேல் கொண்ட அன்பான அக்கறையினால், அவர்களைத் தங்கள் பொருட்கள் மற்றும் ஐசுவரியங்களை விட மேலான நிலையில் வைத்துப் போற்றுவது என்ற மாபெரும் அடையாளப் பண்பு கொண்டதாக இருக்கிறது. மூன்றாவது, சுவிசேஷத்தின் மூலமாகக் கிறிஸ்துவின் சபைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு நபரும் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவுடனும், மற்ற எல்லா உறுப்பினர்களுடனும் ஒன்றாக்கப் படுகின்றார், மற்றும் அந்த ஒருமைப்பாட்டைத் தமது அன்பினாலும், அன்றாடம் கிறிஸ்துவின் வார்த்தையைக் கடைப்பிடிப்பதாலும் பராமரிக்கின்றார். சபையானது ஒரே இருதயமும் வாழ்க்கையும் கொண்ட ஒரே குடும்பமாகச் சித்தரிக்கப்படுகின்றது.*

*இன்றைய நாட்களில் நாம் எவ்விதம் கிறிஸ்துவின் சபையாராய் இருக்க முடியும்? இதன் வழிமுறையை இரண்டு சொற்றொடர்கள் நமக்கு குறிப்பாய்த் தெரிவிக்கின்றன: "மறு பிரதியாயிருங்கள்" மற்றும் "ஒப்புக் கொடுங்கள்." கிறிஸ்துவைப் பின்பற்றுபவராவது என்பது பற்றி இப்பாடத்தில் காணப்படுபவைகளை அப்படியே மறுபிரதி எடுத்தது போல நாம் பின்பற்ற வேண்டும். பேதுருவும் மற்றவர்களும் பிரசங் கித்ததைக் கேட்ட இந்த மக்கள், "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினார்கள். பேதுரு அவர்களிடத்தில், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் ..." (அப். 2:38) என்று கூறினார். வசனத்தின் மூலம் அவர்களுக்குள் நாட்டப்பட்ட விசுவாசத்தினாலே அவர்கள் மனந்திரும்பி, தங்கள் பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள், அவர்களைக் கர்த்தர் தமது சபையிலே சேர்த்துக்கொண்டார். இதுவே கிறிஸ்து மக்களைத் தமக்குச் சொந்தமாக்கும் வழியாகும். இதே வழியை இன்றைய நாட்களில் ஒருவர் பின்பற்றும்போது, கிறிஸ்து அன்று அந்த மக்களுக்குச் செய்ததையே இவருக்கும் செய்வார். அவர்களிடம் அவர் அன்பு காட்டியது போலவே நம் ஒவ்வொருவரிடமும் அன்பு காட்டுகிறார்; அவர்களுக்காக மட்டுமல்ல நமக்காகவும் அவர் மரித்தார்.*

*நாம் கிறிஸ்துவின் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து, அவரது சபையாக வாழ்வதற்கு நம்மையே ஒப்புக் கொடுப்போம். அப். 2ன் சித்தரிப்பின் படி, கிறிஸ்துவின் வசனத்தைப் பின்பற்றிக் கொண்டு, கிறிஸ்துவின்*

இருதயத்துடன் வாழ்ந்து, பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்குள்ளாக அவரது சபைக்குக் கொடுத்துள்ள ஐக்கியத்தைப் பராமரிக்கச் செய்வதன் மூலமே இது நடத்தப் பெற வேண்டும்.

கிறிஸ்துவின் சபையானது எப்படியாகக் காணப்படுகிறது என்று இப்பொழுது நாம் அறிந்துள்ளபடியால் கிறிஸ்துவின் சபையாராகும் படி நாம் முடிவெடுப்போம்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 314 ம் பக்கங்களில்)*

1. *"அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந் தார்கள்" (அப். 2:42) என்ற சொற்றொடரை விவாதித்து அறியவும். இந்நாட்களில் நமக்கு இந்தச் சொற்றொடர் அர்த்தப்படுத்துவது என்ன?*
2. *எருசலேம் சபையில் இருந்த ஒருமைப்பாட்டின் மாதிரியை விளக்குக.*
3. *இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபை என்பது எவ்விதம் காணப்பட வேண்டியதாயுள்ளது?*
4. *புதிய ஏற்பாட்டின் சபை எது என்பதை முடிவு செய்வது மிகவும் மேலானதாகும். ஏன்?*
5. *அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளன்று புதிய ஏற்பாட்டின் சபை தொடங்கியது என்று காட்டும் வேத வசனங்களைப் பட்டியலிடவும்.*
6. *நாமகரணக் கூட்டங்கள் எப்பொழுது திடீரெனத் தோன்றின?*
7. *கிறிஸ்துவின் சரீரமாக உருவாகுவது யார்? தனிப்பட்ட கிறிஸ்தவர்களா அல்லது நாமகரணக் கூட்டங்களா? (1 கொரி. 12:24ஐக் காணவும்).*
8. *புதிய ஏற்பாட்டின் சபை பெயரிடப்பட்டிருந்தது போலவே அதே வழிமுறையில்தான் ஒரு சபை பெயரிடப்பட வேண்டும் என்பது ஏன்?*
9. *புதிய ஏற்பாட்டின் சபையினுடைய நடைமுறைகளை இன்றைய நாட்களில் சபைகள் பின்பற்ற வேண்டுமா?*

## வார்த்தை உதவிகள்

***அவருக்குள் நிலைத்திருத்தல்*** - *இயேசுவின் உபதேசங்களை நேசித்து, கற்றுணர்ந்து, கீழ்ப்படிதல் (யோவா. 8:30-32).*

***அப்பம் பிட்குதல்*** - *கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல் (அப். 2:42; 20:7ஐக் காணவும்).*

***உதவிக்காரர்கள்*** - *சபையில் ஊழியம் செய்யும்படியாகத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியுள்ள மனிதர்கள் (1 தீமோ. 3:8-13). இவர்கள் மூப்பர்களின் கீழாகப் பணியாற்றுகின்றனர் (பிலி. 1:1; அப். 20:28).*

***மூப்பர்கள்*** - *உள்ளூர் சபையைக் கண்காணிக்கும்படி நியமிக்கப் படுகின்ற பக்குவம் பெற்ற கிறிஸ்தவ மனிதர்கள் (1 தீமோ. 3:1-7).*

***கருவிகளாலான இசை*** - *கம்பி, காற்று மற்றும் வெண்கலம் இவற்றைப் பயன்படுத்தும் இசைக் கருவிகள், இசைச் சாவிப் பலகைகள் அல்லது மத்தளம் முதலிய மனிதனால் உண்டாக்கப்பட்ட இசைக் கருவிகளின் துணையுடன் பாடல்கள் பாடுதல். சபை ஆராதனையில் இவ்வித இசை பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்பெதுவும் புதிய ஏற்பாட்டில் கிடையாது. பொது ஆராதனையில் பாடல்களும் ஒரு பாகமாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (எபி. 2:12ஆ; எபே. 5:19; கொலோ. 3:16). தனிப்பட்ட பக்தி முயற்சிகளில் பாடல்கள் பாடுவதும் யாக்கோபு 5:13ல் ஊக்கப் படுத்தப்படுகின்றது.*

***புரோட்டஸ்டென்ட்*** - *புரோட்டஸ்டென்ட் சீர்த்திருத்தக் கொள்கைகளின் அடிப்படையில் விசுவாசமும், நடைமுறைகளும் கொண்டுள்ள, மனிதரால் உண்டாக்கப்பட்ட மார்க்கக் குழுக்களுக்குத் தரப்பட்ட பெயர். இந்த இயக்கத்தின் தலைவர்கள் கத்தோலிக்க நடைமுறைகளில் சிலவற்றை (போப் மற்றும் குருக்களின் அதிகாரத்தை அங்கீகரித்தல் போன்றவற்றை) "எதிர்த்து" நின்றனர். இந்த இயக்கமானது சில தவறுகளைப் புறக்கணித்திருக்கையில், புதிய ஏற்பாட்டின் சபையானது தேவனுடைய வசனத்தின் அடிப்படையிலேயே அமையப் பெற்றதாய் இருக்க வேண்டும்-மற்றவர்களின் நடைமுறைக்கான பதில்செயலாய் நமது நடைமுறைகள் அமையத் தேவையில்லை.*

---

[1]*இந்த வசனப்பகுதியில் கர்த்தருடைய பந்தி எத்தனை நாட்களுக் கொருமுறை ஆசரிக்கப்பட்டதென்று லூக்காவால் விவாதிக்கப்படவில்லை, ஆனால் அப். 20:7ல் அவர் இயேசு உயிர்த்தெழுந்த நாளாகிய வாரத்தின் முதல் நாள் தோறும் சபையாரால் கர்த்தருடைய பந்தி பங்கெடுக்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார்.*

# 13

# தேவனுடைய மக்களுக்கு விசேஷ வார்த்தைகள்

*வேதாகமத்தின் விளக்கத்தினுடைய அடிப்படையில் நீங்கள் எப்போதாவது பரலோகத்தைச் சித்தரிக்க முயற்சி செய்திருக்கின் றீர்களா? இது அநேகமாக நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மாறுபட்டதாகவே இருக்கும். நமது பரலோக வீடானது நிச்சய மாகவே நாம் கற்பனை செய்வதைக் காட்டிலும் மகா மேன்மையான தாகவும், அதை விளக்குவதற்கு நாம் பயன்படுத்தும் பூமிக்குரிய அடையாளங்களான பொன், கண்ணாடி மற்றும் முத்து ஆகியவை களைக் காட்டிலும் அதிகமான மகிமையுடையதாகவுமே இருக்கும்.*

*தேவனுடைய செய்தியாளர்கள் விளக்கப்படுத்திய ஒரு "இராஜ்யம்" மற்றும் ஒரு "சபை" என்பதைச் சித்தரிக்க முயற்சி செய்பவர்களுக்கும் இதே விஷயம் உண்மையாகவே இருக்கின்றது. இந்தச் சொற்றொடர்களானது வேதவசனங்களில் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு வார்த்தைகளைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் இல்லாமல், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை நாம் புரிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அநேகமாக இருக்கவே முடியாது.*

### "இராஜ்யம்" என்ற வார்த்தை

தேவனுடைய இராஜ்யமானது வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் ஒரு இராஜ்யமாகவே முன்னுரைக்கப்பட்டு,

வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டின் முற்பகுதியிலும் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டு (முன்னுரைக்கப்பட்டு), அப். 2லும் அதற்குப் பின்வரும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகளிலும் உண்மையில் இருப்பதாகவே முன் வைக்கப்படுகின்றது. இராஜ்யமானது தீர்க்கதரிசனத்தில் உருவகங்களாகவும், அடையாளங்களாகவும் சில சமயங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளதால், அதன் உண்மையில் இருக்கின்ற நிலையானது அதைப் பற்றி தீர்க்கதரிசிகளால் கொடுக்கப்பட்ட சித்தரிப்பைப் பார்க்கிலும் அதிக மகிமையுள்ளதாக இருக்கின்றது. தீர்க்கதரிசனத்தின் சித்தரிப்பு மிகவும் சரியானதாகவே இருந்தது, ஆனால் அதில் பயன்படுத்தப்பட்ட உருவக மொழிநடையினால் அது இரகசியத்தினால் மூடப்பட்டிருந்தது.

"இராஜ்யம்" என்ற வார்த்தையானது புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் கருத்தாழமுள்ளதாக இருக்கின்றது, ஆனாலும் அது புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் பற்றி நாம் விசேஷித்த ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றோம். தேவனுடைய இராஜ்யமானது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகவே புதிய ஏற்பாட்டில் முன்வைக்கப்படுகின்றது. வேதாகமத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள விதம் பற்றி முழுமையான புரிந்து கொள்ளுதல் இல்லாமல் இருந்தால் ஒருவர் கிறிஸ்துவின் சபையைப் புரிந்து கொள்ள முடியாமல் இழப்படைவார் (பிற்சேர்க்கை 4ஐக் காணவும்).

இந்த வார்த்தையை நாம் மூன்று கோணங்களில் பரிசோதிப்போம், இந்த மூன்று கோணங்களுமே கிறிஸ்து நிலைநாட்டிய சபையில் இதன் பயன்பாட்டுடன் தொடர்புடையதாகும்.

## இதன் அரசியல் ரீதியான பயன்பாடு

"இராஜ்யம்" என்ற வார்த்தையானது வேதாகமத்தில் முதலாவதாக அரசியல் ரீதியான வகையில் பயன்படுத்தப்படுகின்றது, இது ஒரு அரசாளுகையை, அதில் ஒரே ஒரு மேலான, ராஜரிகம் செலுத்துகின்ற, வல்லமையுள்ள அதிகாரமுடையவர் ஆளுகை செய்வதைக் குறிக்கின்றது.

"இராஜ்யம்" என்ற வார்த்தையின் அரசியல் ரீதியான பயன்பாடானது, இஸ்ரவேல் தேசத்துடன் யேகோவாவுக்கு உள்ள உறவு நிலை மூலமாகவும் விளக்கப்படுகின்றது. இஸ்ரவேலரின்

*வரலாற்றில் முதலாவதாக, தேவனே அவர்களுடைய அரசராக இருந்தார். அவர்களுடைய அரசாங்கத்தில் அவரே சர்வ அதிகாரமும் பெற்ற தலைவராகவும், அவர்களது மார்க்கத்தின் தலைவராகவும் இருந்தார். இந்தக் காலத்தில் இஸ்ரவேலரின் அரசாங்கமானது தேவனால் ஆட்சி செய்யப்பட்ட தேவ அரசாக இருந்தது. எகிப்தியர்களைத் தேவன் செங்கடலில் அழித்ததை மோசேயும், இஸ்ரவேல் புத்திரர்களும் பார்த்த பொழுது, "கர்த்தர் சதாகாலங் களாகிய என்றென்றைக்கும் ராஜரிகம் பண்ணுவார்" (யாத். 15:18) என்று பாடினார்கள். சீனாய் மலையின் முன்பு இஸ்ரவேலர்கள் பாளையமிறங்கியிருந்த போது, அந்த இனத்தவருக்குக் கர்த்தரால், "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன் படிக்கையைக் கைகொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னு டையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் ..." (யாத். 19:5, 6அ) என்று கூறப்பட்டுள்ளது. யேகோவா, இஸ்ரவேலர்களுக்கு அவர்கள் வாழ வேண்டியதற்கான சட்டங்களை யும், எல்லா நீதிகளையும் மற்றும் மார்க்க ரீதியான செயல்பாடுகளை யும் தமது நாமத்தினாலேயே செயல்படுத்தும்படியாகக் கொடுத்தார். அவர், இஸ்ரவேலர்களை அவர்களின் யுத்தங்களில் வழி நடத்தி, அவர்களின் வெற்றிக்கான மதிப்பைப் பெற்றுக் கொண்டார் (எண். 21:34). அவரே இஸ்ரவேலரின் அரசராக இருந்தார், இஸ்ரவேல் நாடானது அவரது அதிகாரத்தின் கீழ் அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தது.*

*சாமுவேலின் நாட்களில், இஸ்ரவேல் நாடானது தன்னைச் சுற்றியுள்ள நாடுகள் போல் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தினால் உந்தப்பட்டு, பூமிக்குரிய ஒரு அரசரைத் தனக்குக் கொடுக்கும்படியாக தேவனிடத்தில் கேட்டது. தேவன், மக்களின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டு, சவுலை அவர்களின் முதலாவது (பூமிக்குரிய) அரசராகக் கொடுத்தார். அரசர் என்ற சொற்றொடர் மிகக் கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும் வகையிலான தனி அதிகாரம் பெற்ற ஒரு அரசராக இஸ்ரவேலின் அரசர் இருக்க முடியாதிருந்தது. அவர் யேகோவா விற்குப் பொறுப்புள்ள ஒரு உதவி அதிகாரியாகவும், ஒரு ஊழியக்கார ராகவும் மட்டுமே இருக்க வேண்டியதாயிற்று. அவருடைய அதிகாரம், மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் வரையறை செய்யப்பட வேண்டியதாய் இருந்தது. அவர் யேகோவாவிற்கு ஒரு ஊழியக்கார*

ராக இருந்து, அவருக்கு பூமிக்குரிய ஒரு பிரதிநிதியாகவே ஊழியம் செய்ய வேண்டியிருந்தது. அவர் இஸ்ரவேலரை, விரோதிகளுக் கெதிராகத் தற்காக்கவும், இஸ்ரவேலரை நீதியில் வழி நடத்தவும், தேசத்தை ஒருமைப்பாட்டுடன் கட்டியெழுப்பவும் வேண்டியதாய் இருந்தது.

இராஜ்யம் என்பது அரசியல் ரீதியான, ராஜரீகம் செய்யும் ஒரு அரசரையும், ஆட்சி செய்யும் பகுதி ஒன்றையும், அதிகாரம் செலுத்தப் பட குடிமக்களையும், அரசர் தமது அதிகாரத்தைச் செலுத்துவதற்குச் சட்டங்களையும் கொண்டிருக்க வேண்டியதாகும். இராஜ்யங்கள் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ இருக்கக் கூடும்; அவைகள் இயல்பான பூமி என்ற ஆளுகைப் பகுதியையோ அல்லது ஒரு நாடோடி இனத்தையோ கொண்டவையாக இருக்கக் கூடும். ஒரு அரசரின் அதிகாரமும், அந்த அரசருக்கு குடிமக்களின் கீழ்ப்படிதலுமே "இராஜ்யம்" என்ற வார்த்தையின் முக்கிய கருத்தாக இருக்கின்றன.

## இதன் தீர்க்கதரிசனப் பயன்பாடு

''இராஜ்யம்'' என்ற வார்த்தையானது வேதவசனங்களில் தீர்க்கதரிசனப் பயன்பாடு ஒன்றையும் பெற்றிருக்கின்றது. அரசியல் ரீதியான இந்தச் சொற்றொடரானது, பரிசுத்த ஆவியானவரால், உலகத்தின் கடைசி யுகமாகிய கிறிஸ்துவின் யுகத்தில் தேவன் செய்வதற்கு நோக்கமாயிருந்த ஊழியத்தை முன்னுரைக்கப் பயன்படுத்தப்பட்டது.

"இராஜ்யம்" என்பது பற்றிய பழைய ஏற்பாட்டின் முக்கியமான தீர்க்கதரிசனமொன்று தானியேல் 2ல் காணப்படுகின்றது. தானியேல், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ... அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" (தானி. 2:44) என்று எழுதினார். தானியேலின் வெளிப்படுத்துதலானது, தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட இராஜ்யத்தைக் குறித்த முக்கியமான சத்தியங்களைப் போதித்தது. முதலாவதாக, அது பரலோகத்தின் தேவனால் ஏற்படுத்தப்படும் ஒரு விசேஷித்த இராஜ்யமாக அல்லது இராஜாவின் அதிகாரமாக இருக்கும். இரண்டாவதாக, அது நித்தியமான அல்லது முடிவில்லாத இராஜ்யமாக இருக்கும். மூன்றாவதாக, அது

*வல்லமையிலும், நீடித்து நிற்கும் தன்மையிலும், உலகத்தின் எல்லா இராஜ்யங்களுக்கும் மேலானதாக இருக்கும்.*

*மேலும், வரப்போகிற தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய தீர்க்கதரிசனமே யோவான் ஸ்நானனுடைய பிரசங்கத்தின் மையக் கருத்தாக இருந்தது (மத். 3:1, 2), இதுவே இயேசுவின் பிரசங்கம் மற்றும் போதனையின் மையக்கருத்தாகவும் இருந்தது (மத். 4:17). கிறிஸ்துவினால் பேசப்பட்ட சுவிசேஷம் இராஜ்யத்தின் சுவிசேஷ மாகவே இருந்தது (மத். 9:35). இயேசுவால் அனுப்பப்பட்ட பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும், எழுபது சீஷர்களும் (லூக். 10:1-20) பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கின்றது (மத். 10:7; லூக். 10:9) என்றே அறிவிக்க வேண்டியிருந்தது. உவமைகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டவைகள் இராஜ்யத்தைப் பற்றிய சத்தியங்களையே விரித்துரைத்தன. இயேசு தமது சீஷர்களுக்கு, இராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கும்படி போதித்தார் (மத். 6:10).*

*யோவானும், இயேசுவும் இராஜ்யத்தைப் பற்றி எவ்வளவு அடிக்கடி போதித்தார்கள் என்பதன் அடிப்படையில் அநேக உண்மைகள் கற்றுக் கொள்ளப்படலாம்: முதலாவது, தேவனுடைய திட்டத்தில், வரப்போகிற இராஜ்யமானது மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இரண்டாவது, வரப்போகிற இராஜ்யம் அருகில் இருந்து, "துவங்கவிருந்தது" அல்லது "சமீபமாயிருந்தது." மூன்றாவது, வரப்போகிற இராஜ்யமானது தானியேல் தீர்க்கதரி சனத்தின் தெளிவான நிறைவேற்றமாயிருந்தது. நான்காவது, இராஜ்யத் தின் வருகையானது மனிதனுடைய செயலாயிராமல், தேவனுடைய செயலாயிருந்தது. ஐந்தாவது, அந்த இராஜ்யம் வந்தபோது, தேவனு டைய நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற மக்களே அதில் பிரவேசிக்கக் கூடியதாய் இருந்தது (யோவா. 3:5).*

*அப். 2ல் இருந்து, இராஜ்யமானது உண்மையில் இருக்கும் ஒன்றாகவே பேசப்படுகின்றது. நிக்கொதேமுவிடம் இயேசு, "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 3:5) என்று கூறியிருந்தார். ஆனால் சமாரியாவில், பிலிப்பு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்ததை லூக்கா, "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும்*

ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 8:12) என்று எழுதினார். இராஜ்யம் இல்லாதிருந்தால், பிலிப்பு இந்தச் செய்தியைப் பிரசங்கித்திருக்க முடியாதே.

"இராஜ்யம்'' என்ற இந்த வார்த்தையானது, இந்த உலகத்தில் தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்த மக்களை தேவன் ஆவிக்குரிய ஒரு இராஜ்யத்தில் ஆளுவதைக் குறிப்பதே இதன் தீர்க்கதரிசனப் பயன்பாடு ஆகும். இது ஒரு ஆளுகையையும் ஒரு ஆளும் பகுதியையும்-ஆளுகை என்பது ஜீவன் மேல் தேவனுடைய ஆளுகையையும், ஆளும் பகுதி என்பது தேவனுடைய ஆளுகை வெளிப்படையாக இருக்கும் ஆவிக்குரிய கோளத்தையும்-குறிக் கின்றது. கிறிஸ்துவின் அரச அதிகாரம் "சபை" என்ற வார்த்தையிலும் உள்ளடங்கியிருக்கின்றது: சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்டு கிறிஸ்துவின் சித்தத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுப்பவர் எவரும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் கொண்டு வரப் படுகிறார்; அவர் சபையின் தலைவராகிய கிறிஸ்து இயேசுவுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்து வாழ்கின்றார்; அவர் தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யத் தில் வாழுகின்றார். மக்களின் இருதயங்களில் கிறிஸ்துவின் அரச அதிகாரமானது சபையை உருவாக்குகின்றது. இவ்விதமாக, "தேவனு டைய இராஜ்யம்'' மற்றும் "கிறிஸ்துவின் சபை'' ஆகியவை ஒரே அர்த்தம் தரும் விளக்கங்களாக இருக்கின்றன, இதை இயேசு மத். 16:18, 19ல் வெளிப்படுத்தினார்.

## இந்நாட்களில் இதன் பயன்பாடு

''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் அரசியல் பின்னணி, தீர்க்கதரிசனப் பயன்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் அதன் உண்மை நிலை ஆகியவைகள் இன்றைய நாளில் இந்த வார்த்தையின் நடைமுறைப் பயன்பாட்டை வேண்டி நிற்கின்றன.

முதலாவது, இது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். தானியேல் கூறிய இராஜ்யம் வந்திருக்கின்றது. அரச அதிகாரம் என்ற வகையில், ஆவிக்குரிய ஆளுகைப் பகுதியை உடையதான தேவனுடைய விசேஷித்த செயல்பாடானது இந்த உலகில் இப்போது இருக்கின்றது. தேவனுடைய சித்தத்திற்குத் தலை வணங்கியவர்கள் யாவரும் இந்த அரச அதிகாரத்தின் கீழ் வந்திருக்கின்றார்கள். வரப்போகின்ற தாயிருந்த தேவனுடைய இராஜ்யம் பற்றிய தீர்க்கதரிசனமானது

நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது, "இராஜ்யம்" என்ற வார்த்தையை நாம் இன்றைய நாளில் உண்மையான நிலைப்பாட்டின் வகையில் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய இராஜ்யமானது இனி வரப்போவதாயிருக்கிறதல்ல. கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தோடு கிறிஸ்துவின் சபைக்குள் வருகின்ற எல்லாரையும் அவர் இப்பொழுது ஆட்சி செய்கின்றார். ஒரு விதத்தில், "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்பது நம்முடைய ஜெபமாய் இராமல், "நீர் எனது வாழ்க்கையை முற்றிலுமாக ஆளும்படியாகவும், நான் உமது அரசில் இருக்கும்படியாகவும் உமது சித்தத்திற்கு நான் முழுமையாக என்னை ஒப்படைக்க உதவி செய்யும்" என்பதே நமது ஜெபமாக இருக்க வேண்டும்.

முன்றாவதாக, நாம் இந்த வார்த்தையை தேவனுடைய பரலோக அதிகாரத்தின் பூமிக்குரிய ஒரு பாகமாய்க் குறிப்பிடுவதில் பயன்படுத்த வேண்டும். தேவனால் விசேஷமாய்த் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாகிய சபையார் அவரது இராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியாக இருக்கின்றார்கள். இயேசுவும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் சபையை வந்திருக்கின்ற தேவனுடைய இராஜ்யமாக அல்லது கிறிஸ்துவின் இராஜ்யமாகக் காண்பித்திருக்கின்றார்கள். ஒரு இராஜாவுக்கு ஒப்புக் கொடுத்தலானது ஒரு குடியுரிமையை அல்லது ஒரு இராஜ்யத்தை உருவாக்குகின்றது. கீழ்ப்படிந்த விசுவாசிகளால் ஆன இந்த சமுதாயத்தை இயேசு தமது சபை என்று அழைத்தார் (மத். 16:18, 19).

நான்காவது, நாம் இந்த வார்த்தையை ஒரு ஆவிக்குரிய ஆளுகையின் சந்தர்ப்பப் பொருளில் காண வேண்டும். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆளுகையின் கீழ் இருக்கின்றார்கள், மற்றும் இவர்கள் வரப்போகின்ற நித்தியத்தில் தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர்களுடன் முழுமையான மற்றும் நெருங்கிய ஒரு உறவில் பிரவேசிப்பதை எதிர்பார்க்கின்றார்கள். சபை இப்பொழுது ஒரு இராஜ்யமாக இருக்கின்றது, ஆனாலும் இதன் உறுப்பினர்கள் வரப்போகின்ற ஒரு நித்திய இராஜ்யத்தை எதிர் நோக்கியிருக்கின்றார்கள். "இராஜ்யம்" என்ற வார்த்தை ஒரு எதிர்கால அர்த்தத்தையும் கொண்டிருக்கின்றது. கிறிஸ்து, ''என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை, ..." (மத். 7:21) என்று கூறினார். பவுல், ''கர்த்தர் எல்லாத் தீமையினின்றும்

என்னை இரட்சித்து, தம்முடைய பரம இராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதா காலங்களிலும் மகிமை உண்டா வதாக ஆமென்" (2 தீமோ. 4:18) என்று எழுதினார். பவுல் தேவனு டைய இராஜ்யத்திலே இருந்தார், ஆனால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதை அவர் எதிர் நோக்கியிருந்தார். அவர் இராஜ்யம் என்பதை, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் தீர்க்கதரிசனங் களுடைய நிறைவேற்றமாக, அது கிறிஸ்து கட்டிய சபையில் இன்றைய நாட்களில் உண்மை நிலைப்பாடாகவும், நித்தியத்திற்கான ஒரு வாக்குத்தத்தமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளதைப் பார்த்தார்.

புதிய ஏற்பாட்டை ஒருவர் படிக்கையில், "பரலோக இராஜ்யம்" அல்லது "தேவனுடைய இராஜ்யம்" என்று வரும் இடங்களில் அல்லது இராஜ்யத்தைக் குறிக்கும் வேறொரு சொற்றொடர் வரும் இடங் களில், ''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் பயன்பாடு குறைந்து கொண்டே வருவதை அவர் கவனிக்கின்றார். இராஜ்யம் பற்றிய குறிப்புகள் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் நாற்பத்தி ஒன்பது முறைகளும், மாற்கு சுவிசேஷத்தில் பதினைந்து முறைகளும், லூக்கா சுவிசேஷத்தில் முப்பத்தி ஒன்பது முறைகளும், யோவான் சுவிசேஷத் தில் ஐந்து முறைகளும், அப். நடபடிகளில் எட்டு முறைகளும், பவுலின் நிருபங்களில் பதினான்கு முறைகளும், பொது நிருபங்களில் இரண்டு முறைகளும், எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் இரண்டு முறைகளும், வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்று முறைகளும் இருக்கின்றன. ஆகவே, ''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் பயன்பாடு புதிய ஏற்பாட்டில் தொடர்ந்து ஆனால் இறங்குமுகமாய் இருக்கின்றது. (பிற்சேர்க்கை 4ஐப் பார்க்கவும்).

புதிய ஏற்பாட்டில் மத்தேயு ஒருவர் மட்டுமே ''பரலோக இராஜ்யம்'' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும் எழுத் தாளராவார். மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் "தேவனு டைய இராஜ்யம்" என்ற சொற்றொடரையே பயன்படுத்துகின்றனர். அப். நடபடிகள் புத்தகத்திற்கு வருகையில் ''இராஜ்யம்'' என்ற வார்த்தையின் பயன்பாடு குறைந்து கொண்டே வருவதையும், "சபை" என்ற வார்த்தையின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே வருவதையும் பார்க்கலாம். இது, "இராஜ்யம்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "சபை" என்ற வார்த்தையைப் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தியதுபோல் இருக்கின்றது.

## “சபை” என்ற வார்த்தை

‘‘சபை’’ என்ற வார்த்தைக்குப் புதிய ஏற்பாட்டின் முழுச் செய்தியுடன் உள்ள முக்கியத் தொடர்பின் காரணமாக அவ்வார்த்தை யுடன் மிகவும் விசேஷித்த ஒரு முக்கியக் கருத்து இணைந்திருக்கின்றது. ‘‘சபை’’ என்று தமிழிலும், “Church” என்று ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் 114 முறைகள் வருகின்றது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தைப் புரிந்து கொள்ளாமல், ஒருவர் இந்த உலகத்தின் இரட்சிப்பிற்கான கிறிஸ்துவின் வழியைப் புரிந்து கொள்ளலாம் என்று நம்ப முடியாது என்று கூறுவது அநேகமாக மிகவும் சரியானதேயாகும்.

### இதன் உலகப் பிரகாரமான பயன்பாடு

முதலாவதாக, இவ்வார்த்தையானது மார்க்க ரீதியான குறிப்பிட்ட அர்த்தம் எதுவுமின்றி, பொதுவான, அன்றாடம் பயன்படுத்துகின்ற வார்த்தையாக இருக்கின்றது.

இப்படிப்பட்ட பயன்பாட்டின் எடுத்துக்காட்டொன்று எபேசுவில் நடந்த கலகத்தின் தொடர்பாக அப். 19ல் மேம்போக்காகக் காணப்படுகின்றது. கிறிஸ்தவத்திற்கு அங்கு ஒரு தொந்தரவு உண்டாயிற்று. மக்கள் அருகில் இருந்த ஒரு அரங்க சாலைக்குள் பாய்ந்தோடினார்கள், அங்கு குழப்பம் நிறைந்திருந்தது. அவர்கள் கூடியிருந்தது பற்றி லூக்கா எழுத்தாளர், ‘‘கூட்டத்தில் அமளி யுண்டாகி, சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்; தாங்கள் கூடி வந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாதிருந்தது” (அப். 19:32) என்று கூறினார்.

இந்த வசனத்தில் கூட்டம் என்ற வார்த்தைக்கு *ekklesia* என்ற வார்த்தை லூக்காவினால் பயன்படுத்தப்பட்டது. இந்த வார்த்தை தமிழில் ‘‘சபை’’ என்றும் ஆங்கிலத்தில் “Church” என்றும் மொழி பெயர்க்கக் கூடியதாய் இருக்கின்றது. இறுதியாகப் பட்டணத்துச் சம்பிரதியானவன் பின்வருமாறு பேசினான்:

> நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக் குறித்து விசாரிக்க வேண்டியதானால், அது நியாய சங்கத்திலே தீர்க்கப்படும். இன்றைக்கு உண்டான கலகத்தைக் குறித்து நாம் உத்தரவு சொல்லுகிறதற்கு ஏதுவில்லாதபடியால், இந்தக்

> கலகத்தைக் குறித்து நாங்கள் விசாரிக்கப்படும்போது, குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாயிருப்போம் என்று சொல்லி (அப். 19:39, 40).

இதன் பின் லூக்கா கூடுதலாக, ‘‘பின்பு கூட்டத்தை அனுப்பி விட்டான்’’ (அப். 19:41) என்றார்.

ஒரு நகரக் கூட்டத்தைப் பற்றிய இந்த விபரத்தில் லூக்கா, ekklesia என்ற கிரேக்க வார்த்தையை மூன்று முறை பயன்படுத்தினார் (அப். 19:32, 39, 41). இதை ஒரு சாதாரணக் கூட்டம் என்ற அர்த்தத்திலேயே அவர் பயன்படுத்தினார், ஏனென்றால் வசனம் 32 மற்றும் 41ல் அவர் ekklesia என்று அழைக்கும் இந்தக் குழு வசனம் 30ல் ஒரு கும்பல் என்பதாகவே சித்தரிக்கப்பட்டது. அரங்க சாலையில் இருந்த கூட்டத்தார் அல்லது ekklesia என்ற சபையார், கூடிவரும்படியாக அழைக்கப்பட்டவர்கள் அல்ல; குழப்பம் மற்றும் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக அது தற்செயலாக ஏற்பட்டதாகும். வசனம் 39ல் சட்ட ரீதியான விஷயங்களை தீர்த்து வைக்கும் நியாய சங்கத்தையும் லூக்கா ekklesia (சபை) என்றே அழைத்தார்.

Ekklesia என்ற வார்த்தையை லூக்கா பயன்படுத்தியுள்ள விதத்தின் வெளிச்சத்தில், அந்த வார்த்தையின் உலகப் பிரகாரமான பயன் பாடானது எந்த வகையான ஒரு கூட்டத்தையும் குறிக்கின்றது என்று எண்ணுவதே சிறந்ததாகும். சிலவேளைகளில் ஒரு கூட்டமானது கூட்டப்படுகின்றது அல்லது கூடும்படி அழைக்கப்படுகின்றது, மற்றும் சிலவேளைகளில் தற்செயலாக ஒரு கூட்டம் கூடுகின்றது. இப்படிப் பட்ட கூட்டம் ஒவ்வொன்றையும் லூக்கா ekklesia என்ற அழைத்தார்.

இன்றைய நாட்களில் மொழி வல்லுநர்கள் சிலர், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட நாட்களில் ekklesia என்ற வார்த்தையின் உலகப் பிரகாரமான பயன்பாடானது, “அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்” என்ற அர்த்தத்தைக் காட்டிலும் ‘‘தற்செயலான கூட்டம்’’ என்ற அர்த்தத்தையே அதிகமாய்த் தந்ததாக நம்புகின்றார்கள். அப். 19ல் லூக்காவினால் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்ட விதமானது அவர்களின் முடிவுகளை உறுதி செய்கின்றது.

Ekklesia என்ற வார் த்தையை லூக்கா பயன்படுத்திய விதமானது, நமது கர்த்தர் அதை மார்க்க ரீதியான வகையில் பயன்படுத்தும் முன்னர் உலகத்தில் அது எப்படி ஒரு உலகப் பிரகாரமான வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டது என்ற ஆழ்ந்த அறிவை

*நமக்குத் தருகின்றது. இந்த வார்த்தையின் இப்பின்னணியானது, நமது கர்த்தர் இந்த ekklesia என்ற வார்த்தையைப் பயன்படுத்திய விதத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலை நல்ல முறையில் நாம் கட்டியெழுப்பிக் கொள்ள ஒரு அடிப்படையாக நமக்கு உதவும்.*

## இதன் மார்க்க ரீதியான பயன்பாடு

*Ekklesia என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மார்க்க ரீதியான பயன்பாடொன்றையும் பெற்றிருந்தது.*

*யூதப் பின்னணியில் இருந்து, கிறிஸ்தவம் என்ற கருத்தானது தேவனுடைய மக்கள் முன் நிற்கும் ஒரு கூட்டமாகும் என்பது பழைய ஏற்பாட்டில் தெளிவாக இருக்கின்றது. பழைய ஏற்பாட்டு வேதவசனங் களின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் எபிரெய மொழியில் qahal என்ற வார்த்தையானது கிரேக்க மொழியில் ekklesia என்ற வார்த்தையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, விசேஷமாக இஸ்ரவேல் "சபையார்" மார்க்க நோக்கங்களுக்காகக் கர்த்தருக்கு முன்பாகக் கூடும்போது அவர்களைக் குறிப்பதற்கு இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டது (உபா 18:16; 31:30; 1 இரா. 8:65; அப். 7:38).*

*"Synagogue" என்ற வார்த்தையும் கூட முதலாவது, ஒரு குறிப் பிட்ட நோக்கத்திற்காக கூடிவரும் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டது. பின்னாளில், இவ்வார்த்தையானது ஆராதனைக்காக ஒன்றுகூடிய கிறிஸ்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. யாக்கோபு தனது புத்தகத்தை வாசிக்கும் யூத கிறிஸ்தவர்களை மனதில் கொண்டு, sunagoge மற்றும் ekklesia ஆகிய இரண்டு வார்த்தைகளையும் பயன்படுத்தினார் என்பது உறுதியாய்த் தெரிகின்றது. அவர் sunagoge என்ற வார்த்தையை ஆராதிக்க ஒன்றுகூடும் கிறிஸ்தவர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினார் (யாக். 2:2), மற்றும் அவர் ekklesia என்ற வார்த்தையை ஒரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் கூடிவரும் சபையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினார் (யாக். 5:14).*

*இவ்விதமாக, நமது கர்த்தர், தமது இரட்சிப்பின் மூலமாக தேவனு டைய தனிச் சிறப்புள்ளவர்களாகும் மக்களைக் குறிப்பதற்கு ஒரு வார்த்தையைத் தேர்ந்தெடுத்தார், உலகப் பிரகாரமாக "கூட்டம்" என்று பொருள்படுகின்ற, ஆனால் பழைய ஏற்பாட்டுப் பயன் பாட்டின்படி "தேவனுடைய மக்களின் கூட்டம்" என்று பொருள் படுகின்ற "சபை" (மத். 16:18) என்ற வார்த்தையைத் தேர்ந்தெடுத்தார்.*

*நமது கர்த்தர் உலகப் பிரகாரமான ஒரு வார்த்தையை எடுத்து, அதற்கு மார்க்க ரீதியான விசேஷித்த அர்த்தம் ஒன்றைக் கொடுத்தார். இந்த வார்த்தையைத் தேர்ந்தெடுத்ததில் அவர் இதன் உலகப் பிரகாரமான மற்றும் மார்க்கரீதியான பின்னணிகளில் இருந்து கூடுதலாக தமது சொந்த அர்த்தங்களையும் சேர்த்தார். இயேசு கொடுத்தபடி, இந்த வார்த்தையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு உலக முழுவதிலுமிருந்து தேவனுடைய மக்களானவர்களை (அவர்கள் கூடி வருகையிலும், மற்ற சமயங்களிலும்) குறிக்கின்றது (அப். 8:3; எபே. 1:23).*

*Ekklesia என்ற வார்த்தையின் தொடர்பாக, புதிய ஏற்பாட்டில் ''வெளியே அழைக்கப்பட்டவர்கள்'' அல்லது ''பிரித்தெடுக்கப் பட்டவர்கள்'' என்ற கருத்தும் கொண்டு வரப்படுகின்றது. இந்த வார்த்தையின் பொதுவான பயன்பாட்டில் இந்தச் சிந்தனை இல்லாதிருந்தாலும், கிறிஸ்துவின் விசேஷித்த பயன்பாட்டில் இது ஒரு முக்கியமான பாகமாயிருக்கின்றது. இங்கு குறிக்கப்பட்டுள்ள மக்களின் இயல்பில் இக்கருத்தானது முன்னிருத்தப்படுகின்றது.*

*பெந்தெகொஸ்தே நாளன்று கூடியிருந்த மக்களிடத்தில் பேதுரு, ''வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப். 2:39) என்று சொன்னார். தெசலோனிக்கேயருக்குப் பவுல், "மேலும், தம்முடைய ராஜ்யத்துக்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டும்" (1 தெச. 2:11) என்று கூறினார். சுவிசேஷத்தின் மூலமாகவே தேவன் அவர்களை அழைத்திருந்தார். பவுல், "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2 தெச. 2:14) என்று கூறினார். இவ்விதமாக சுவிசேஷத்தின் மூலமாக தேவனிடத்தில் அழைக்கப்பட்ட மக்கள் "சபையார்" என்று அழைக்கப்பட்டனர் (1 கொரி. 1:1-3).*

*மேலும், கொலோசே பட்டணத்தில் இருந்த சபைக்குப் பவுல், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டா யிருக்கிறது" (கொலோ. 1:13, 14) என்று கூறினார். பேதுரு, "நீங்களோ,*

உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக் கும்படிக்கு ...” (1 பேது. 2:9அ) என்று கூறினார். மேலும் பேதுரு, “உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்'' (1 பேது. 1:15) என்றும் எழுதினார்.

இடம் மற்றும் காலம் என்ற வரையறை எதுவுமின்றி, கிறிஸ்துவின் யுகத்தில் தேவனுடைய மக்கள் அனைவரையும் குறிப்பிடுவதற்கு இயேசு, “சபை” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். பெந்தெ கொஸ்தே நாளன்று நிலைநாட்டப்பட்ட உள்ளூர் கிறிஸ்துவின் சபையில் இன்றைய நாட்களில் இருக்கும் கிறிஸ்தவர்கள் எவரும் உறுப்பினராய் இல்லாமல் போனாலும் கூட, எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கின்ற உண்மைக் கிறிஸ்தவர்கள் அனைவரும் கர்த்தர் அந்நாளில் நிலைநாட்டிய அதே சபையின் உறுப்பினர்களாகவே இருக்கின்றார்கள். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று, எருசலேமில் சபையானது எல்லாக் காலத்திற்குமாக நிலைநாட்டப்பட்டு விட்டது. ஆனாலும் அதற்கு ஒரே பிறந்த தேதிதான் உண்டு. மறுபடியும் மறுபடியும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் அல்லது விசுவாச விலக்கத்தின் காலங்களுக்குப் பிறகும் அது பிறக்கவில்லை.

## இதன் நடைமுறைப் பயன்பாடு

இயேசுவாலும், பரிசுத்த ஆவியானவராலும் ''சபை'' என்ற வார்த்தைக்குக் கொடுக்கப்பட்ட அர்த்தமானது, புதிய ஏற்பாட்டில் நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் எதிர்ப்பார்ப்போம். அவ்வாறே நடந்துள்ளது.

ஏவப்பட்ட எழுத்தாளர்கள் ''சபை'' என்ற வார்த்தையை நடைமுறைப் பயன்பாட்டில், நான்கு வழிகளில் பயன்படுத்தி யுள்ளனர். முதலாவது, ஒரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் கூடிவரும் தேவனுடைய மக்களாகிய உள்ளூர் சபையைக் குறிப்பதற்கு இதைப் பயன்படுத்தியுள்ளனர். பவுல், கொரிந்துவில் உள்ள “தேவனு டைய சபைக்கும்'' கிறிஸ்து இயேசுவினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்கும் என்று எழுதினார் (1 கொரி. 1:2). பிலிப்பியில் இருந்த சபையார், ''பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக் குள்ளான பரிசுத்தவான்கள்” (பிலி. 1:1) என்று குறிப்பிடப்பட்டனர்.

*தெசலோனிக்கேயில் இருந்த பரிசுத்தவான்கள், "தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக் கேயர் சபை" (1 தெச. 1:1) என்று குறிப்பிடப்பட்டனர். ஒரு குறிப் பிட்ட பகுதியில் இருந்த எல்லாக் கிறிஸ்தவர்களும் அந்த இடத்தின் "சபையார்" என்று அழைக்கப்பட்டனர். உலகளாவிய சபையின் ஒரு வெளிப்பாடாகவே கிறிஸ்தவர்களைக் கொண்ட உள்ளூர் சபை விளங்குகின்றது. ஒருவர், கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராகும் போது, அவர் வாழ்கின்ற இடத்தில் இருக்கும் கிறிஸ்தவர்களின் அமைப்பில் அவர் ஒரு உறுப்பாகின்றார்.*

*இரண்டாவது, ''சபை'' என்ற வார்த்தையை, ஏவப்பட்ட எழுத்தாளர்கள், ஒரு பரந்த பகுதியில் கூடிவரும் உள்ளூர் சபைகளைப் பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தினார்கள். லூக்கா, "அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத் தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (அப். 9:31) என்று எழுதினார். சில வேளைகளில் இப்பெரும் பகுதியில் உள்ள சபை, "சபைகள்" என்று பன்மைச் சொல்லில் குறிப்பிடப்பட்டன. பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில், "கலாத்தியா நாட்டி லுள்ள சபைகளுக்கு" (கலா. 1:2) என்று எழுதினார். இந்தியாவில் உள்ள சபை அல்லது இந்தியாவில் உள்ள சபைகள் என்பது ''சபை'' என்ற வார்த்தையின் வேத ரீதியான பயன்பாடாகவே இருக்கின்றது.*

*மூன்றாவதாக, "சபை" என்ற வார்த்தையைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், சபையானது எவ்விதமாய் அமைக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்பிக்கப் பயன்படுத்தினார்கள். சபைகளில் உள்ள மக்களைப் பற்றிக் கூற அவர்கள் இந்த வார்த்தையைப் பயன்படுத்தி னார்கள். ரோமர் 16ல் பவுல் தமது வாழ்த்துதலில் "புறஜாதியாரில் உண்டான சபைகளை"க் குறிப்பிட்டார்: "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதி யாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டிலே கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள் ..." (ரோமர் 16:3-5).*

*நான்காவது, ''சபை'' என்ற வார்த்தையை ஏவப்பட்ட இந்த எழுத்தாளர்கள், ஆராதனைக்குக் கூடிவருகின்ற ஒரு உள்ளூர்*

சபையைக் குறிப்பிடப் பயன்படுத்தினார்கள். ஆராதனைக்குக் கூடி வராத சமயத்திலும் சபையானது இருக்கின்றது, ஆனால் "சபை" என்ற வார்த்தையானது ஒரு குறிப்பிட்ட பகுதியில் கூடிவரும் சபையைக் குறிப்பதற்கென்று விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டது. கொரிந் தியர்கள் ஒன்றுகூடி வருதலைப் பவுல், சபை என்று குறிப்பிட்டார் (1 கொரி. 11:18). சபைகளில் பெண்கள் பேசாதிருக்க வேண்டும் என்று அவர் கூறினார்: "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது (1 கொரி. 14:34). இவ்வசனப் பகுதியில் அவர் ஆராதிக்கக்கூடும் சபையையே குறிப்பிடுகிறார் என்பது தெளிவு.

சபையை ஒருவர் எந்த வழியில் குறிப்பிட்டாலும், அவர், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரப்பட்டவர்களைப் பற்றியே பேசுகின்றார். கிறிஸ்தவராகும் ஒருவர், இந்த உலகத்திலிருந்தும், இருளிலிருந்தும் வெளியே அழைக்கப்பட்டு, கிறிஸ்துவும், புதிய ஏற்பாட்டின் ஏவப்பட்ட எழுத்தாளர்களும் "சபை" என்று அழைத்த சரீரத்திற்குள் தேவனுடைய கிருபையினால் வைக்கப்படுகின்றார்கள்.

## முடிவுரை

தேவன் தமது மக்களைக் குறிப்பதற்குத் தேர்ந்தெடுத்த வார்த்தைக ளைப் பற்றிய இந்தச் சுருக்கமான படிப்பானது நாம் அவரது இராஜ்யமாகிய சபையில் பிரவேசிக்கும்படிக்கு நமக்கு உறுதியாகவே அறைகூவல் விடுக்கின்றன. தேவன் இந்த உலகப் பிரகாரமான வார்த்தைகளை எடுத்து, அவைகளுக்குக் கூடுதலான அர்த்தங்கள் கொடுத்து, அவரது கிருபையின் சுவிசேஷத்தின் மூலமாக இரட்சிப் புக்கு அழைக்கப்பட்ட மக்களுக்கு அவைகளை நடைமுறைப் படுத்தினார். இவ்விதமாக, இவ்வார்த்தைகள் தேவனுடைய அதிகாரத் திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களைக் குறிக்கின்றன. பிதாக்களின் காலம் மற்றும் மோசேயின் காலம் ஆகிய நீண்ட வருடங்களில் தேவன் தமது விசேஷித்த மக்களுக்காகத் திட்டமிட்டார். தமது செய்தியாளர்களை முன்னுரைக்கும்படி அவர் ஏவிய எல்லாவற்றையும் அவர் நிறைவேற்றி யிருக்கின்றார். இப்பொழுது அவருடைய இராஜ்யத்தில் பிரவேசித்து,

*சபையில் சேர்க்கப்படுவது என்பது உங்களைப் பொறுத்ததேயாகும்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 315 ம் பக்கங்களில்)*

1. *ஒரு அரசர் மற்றும் இராஜ்யம் என்ற முறையில் இஸ்ரவேலருடனான தேவனின் உறவைப் பற்றி விவாதித்து அறியவும்.*
2. *இஸ்ரவேலரின் முதல் அரசரான சவுல், தேவனுடைய இராஜ்யமாகிய இஸ்ரவேலின்மேல் கொண்டிருந்த பொறுப்புக்கள் என்ன?*
3. *வரப்போகிறதாயிருந்த இராஜ்யத்தைப் பற்றிய தானியேலின் தீர்க்கதரிசனத்திலிருந்து என்னென்ன பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்? (தானி. 2:44ஐக் காணவும்).*
4. *புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தையின் பயன்பாடு இறங்கு முகமாக இருப்பதைக் கவனியுங்கள். இது எதனை அர்த்தப்படுத்துகிறது?*
5. *இன்றைய நாட்களில் தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கும் வேளையிலேயே, ஒருவர் எவ்விதம் நித்திய இராஜ்யத்தை எதிர்நோக்கியிருக்க முடியும் என்பதை விளக்குக (2 தீமோ. 4:18ஐக் காணவும்).*
6. *"சபை" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் எத்தனை முறை வருகின்றது? இந்த வார்த்தையைப் பற்றிய குறிப்பிடத்தக்க விளக்கமாகத் தரப்படுவது என்ன?*
7. *புதிய ஏற்பாட்டில் பிரதிபலித்துள்ளபடி, "சபை" என்ற வார்த்தையின் உலகப் பிரகாரமான எளிய பயன்பாடு பற்றி விளக்கம் தரவும். அவ்விதமாய் பயன்பட்டுள்ள வசனம் ஒன்றையும் குறிப்பிடவும்.*
8. *"சபை" என்ற வார்த்தையானது உலகப் பிரகாரமான வகையில் எப்பொழுதுமே மார்க்க ரீதியான ஒரு கூட்டத்தைக் குறிப்பிடு கின்றதா? அது எப்பொழுதுமே, ஒரு விசேஷ நோக்கத்திற்காக ஒன்றுகூடும்படி "அழைக்கப்பட்டவர்களின்" கூட்டத்தைக் குறிப்பிடுகின்றதா?*

## வார்த்தை உதவிகள்

***கிறிஸ்துவின் மணவாட்டி*** *- சபை. சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவானது, மனைவியிடம் கணவனுக்குள்ள உறவோடு ஒப்பிடப்படுகின்றது. (எபே. 5:22-29க் காணவும்).*

***உவமைகள்*** *- ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கப்படுத்துவதற்கு, இயேசு அடிக்கடி அன்றாட வாழ்க்கையிலிருந்து கதைகளைப் பயன்படுத்தினார் (மத். 13:34).*

***பிதாக்களின் யுகம்*** *- வேதாகம வரலாற்றில் தெளிவான மூன்று யுகங்களில் ஒன்று. தேவன், குடும்பத் தலைவர்களுடன் நேரடியாகப் பேசிய யுகம் பிதாக்களின் யுகம் ஆகும். இதற்கு அடுத்து, இஸ்ரவேலின் குமாரர்கள், மோசேக்குத் தரப்பட்ட (பத்துக் கட்டளைகள் உள்ளிட்ட) பிரமாணத்தைப் பின்பற்றியபோது இது மோசேயின் யுகம் என்னப் பட்டது. இயேசுவின் சிலுவை மரணத்தின்போது இந்த யுகம் முடிவடைந்தது. இறுதியான யுகம் கிறிஸ்துவின் யுகம் ஆகும். இந்த யுகத்தில், இரட்சிக்கப்பட்ட அனைவரும் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள், மற்றும் புதிய ஏற்பாடு மட்டுமே உபதேசத் திற்கும் ஆராதனைக்கும் ஒரே அளவீடாக இருக்கின்றது. இயேசுவின் இரண்டாம் வருகை மட்டும் இந்த யுகம் நீடித்திருக்கும்.*

***தீர்க்கதரிசனம்*** *- தீர்க்கதரிசி கூறிய ஏவப்பட்ட வசனங்கள், தேவனுடைய சித்தமாகக் கண்ணோக்கப்பட்டன; சில வேளைகளில், தெய்வீக ஏவுதலினால் எதிர்காலத்தைப் பற்றி முன்னுரைக்கப்பட்டது.*

***சாமுவேல்*** *- பழைய ஏற்பாட்டின் ஒரு மாபெரும் தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் நியாயாதிபதி.*

***அரசர்*** *- மாபெரும் வல்லமையுள்ள ஒரு அரசர் அல்லது மற்ற அதிகாரி. 1தீமோ. 6:14, 15ல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்" என்று கூறப்படுகின்றார்.*

## புதிய ஏற்பாட்டு சபை

| | |
|---|---|
| தோற்றுவித்தவர்: கிறிஸ்து *மத். 16:18* | எங்கே: எருசலேம் *ஏசா. 2:3; அப். 2:5, 47* — எப்பொழுது: கி.பி. 33 *அப். 2* — தலைவர்: கிறிஸ்து *எபே. 1:23* |
| **அமைப்பு முறை** *பிலி. 1:1* | *மூப்பர்கள்: தீத்து 1:5; 1 பேது. 5:1-3; அப். 20:28; 1 தீமோ. 3:1-7; உதவிக்காரர்கள்: அப். 6:1-6; 1 தீமோ. 3:8-13; உறுப்பினர்கள்: அப். 2:41-47; கொலோ. 1:13; 1 கொரி. 1:2.* |
| **சபைக்குப் பெயர்கள்** *எபே. 3:14* | *சபை: கொலோ. 1:18, 24; கிறிஸ்துவின் சரீரம்: எபே. 1:22, 23; இராஜ்யம்: அப். 8:12; கிறிஸ்துவின் சபையார்: ரோமர் 16:16; தேவனுடைய சபை: 1 கொரி. 1:2; அப். 20:28; தேவனுடைய வீட்டார்: எபே. 2:19; 1 தீமோ. 3:15; கர்த்தருடைய சீஷர்கள்: அப். 9:1; தேவனுடைய ஆலயம்: 1 கொரி. 3:16; முதற்பேறானவர்களின் சபை: எபி. 12:23* |
| **கிறிஸ்தவர்களுக்குப் பெயர்கள்** *எபே. 3:14* | *சீஷர்கள்: அப். 11:26; பரிசுத்தவான்கள்: 1 கொரி. 1:2; பிலி. 1:1; தேவனுடைய பிள்ளைகள்: கலா. 3:26; 1 யோவா. 2:1; சகோதரர்கள்: லூக். 8:21; கலா. 6:1; கிறிஸ்தவர்கள்: அப். 11:26; 26:28; 1 பேது. 4:16* |
| **சமயக்கோட்பாடு** | *இயேசு கிறிஸ்து: மத். 16:16-18; அப். 8:37* |
| **விசுவாச சட்டமும் நடைமுறையும்: தேவனுடைய வசனம்** | *சகல அதிகாரமும்: மத். 28:18-20; ரோமர் 1:16; எபி. 4:12; சபை அரசாங்கம்: 2 தீமோ. 3:16, 17; 2 பேது. 1:3; இராஜ்யத்தின் விதை: மத். 13:3; லூக். 8:11; ஆவியின் பட்டயம்: எபே. 6:17* |
| **ஆராதனை** | *பாடுதல்: கொலோ. 3:16; ஜெபம்: 1 தெச. 5:17; போதித்தல்: அப். 20:7; கர்த்தருடைய பந்தி: அப். 20:7; 1 கொரி. 11:23; காணிக்கை கொடுத்தல்: 1 கொரி. 16:1, 2* |
| **ஊழியம்** | *ஆத்துமாக்களை இரட்சித்தல்: மத். 28:18-20; யோவா. 6:45; எபே. 3:10; 1 தீமோ.4:16* |
| **எச்சரிக்கை** | *சத்தியத்தில் நிலைத்தல்: கலா. 1:6-8; மத். 15:9, 13; 2 கொரி. 11:3; வெளி. 22:18, 19; 2 யோவா. 9* |

# 14

# சபைக்கான தெய்வீகப் பெயர்கள்

*புதிய ஏற்பாட்டைக் கவனத்துடன் படிக்கும்போது, சபையானது ஒரு விசேஷித்த உயிர்ப் பொருளாகப் படைக்கப்பட்டது என்பது வெளியாகின்றது. ஆகவே, அது ஏவப்பட்ட எழுத்தாளர்களால் விசேஷித்த வழிகளில் குறிப்பிடப்பட்டது. இந்தக் குறிப்புரைகளை மூன்று குழுக்களாகப் பிரிக்க முடியும். அதன் பணிகள், உரிமைத்துவம் மற்றும் உறவுமுறை ஆகியவைகளுக்குக் குறிப்பிட்ட அர்த்தத்துடன் அவைகள் பயன்படுத்தப்படுகின்றன. தெய்வீக வழி நடத்துதலால் அவைகள் கொடுக்கப்பட்டன, மற்றும் தெய்வீக நோக்கங்களை நிறைவேற்றுகின்றன.*

*சபையைக் குறிப்பிடுவதற்குப் பரிசுத்த ஆவியானவரால் பயன் படுத்தப்பட்ட சொற்றொடர்கள் வெறும் விளக்கங்கள் என்று எண்ணப்படக் கூடாது.[1] புதிய ஏற்பாடானது, கிறிஸ்துவை உண்மையுடன் பின்பற்றுபவர்களை அவரது "சபை", அவரது "சரீரம்" மற்றும் அவரது "இராஜ்யம்" என்று அழைக்கின்றது. இந்தத் தெய்வீகப் பெயர்கள்[2] கர்த்தர் நிலைநாட்டிய சபையை அடையாளப்படுத்தி, அதன் சிறப்பியல்பைக் கூறி விளக்கப்படுத்துகின்றன. இவைகளை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்.*

## பணியின் பெயர்கள்

*புதிய ஏற்பாட்டில் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள சில பெயர் கள், சபையானது ஒரு சரீரமாக, உயிருள்ளதாக இருந்து, நிறைவேற்றும் பணி(வேலை)யுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. கர்த்த ருடைய சபையின் நோக்கம், அமைப்பு மற்றும் செயல்பாடு ஆகியவற்றை இந்தப் பெயர்கள் முக்கியத்துவப்படுத்துகின்றன.*

*கிறிஸ்து நிலைநாட்டியது எளிய வகையில் "சபை" (கொலோ. 1:18, 24) என்று குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சொற்றொடர், "கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாய் ஆன மக்களின் கூட்டம்'' என்று அர்த்தம் தருகின்றது. இந்த மக்கள், ஒரு கூட்டம் என்ற வகையில் (1 கொரி. 11:18), ஒரு உள்ளூர் வகையில் (1 கொரி. 1:2), ஒரு பெரிய பகுதியின் வகையில் (1 கொரி. 16:1) மற்றும் உலகளாவிய வகையில் (எபே. 5:23) குறிக்கப்படுகின்றார்கள். கிறிஸ்து நிலைநாட்டியதன்-அவரது இரத்தத்தினால் மீட்கப்பட்டு, அவருக்காக வாழ்ந்து, தேவனை ஆராதித்து, அவரது ஊழியத்தைச் செய்யும் மக்களின் குழு ஒன்றின்-அடிப்படை அர்த்தத்தை இந்தப் பெயர் அறிவிக்கின்றது.*

*சபையின் தனிப்பட்ட உறுப்பினர்கள் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர், ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவைப் போல் இருப்பதற்கு முயற்சி செய்கின்றார்கள். (''கிறிஸ்தவர்'' என்ற வார்த்தையானது "கிறிஸ்துவைப் போலாகுதல்" அல்லது "கிறிஸ்து வைப் பின்பற்றுதல்" என்ற அர்த்தம் தருகின்றது.) அந்தியோகியாவில் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதன் முதலாகக் கொடுக்கப்பட்டது (அப். 11:26). இந்தப் பெயர் கொடுக்கப்பட்ட சூழ் நிலைகள் தெளிவாகக் காணப்படுவதில்லை, ஆனால் அதை, தேவனே தமது மக்களுக்காகத் தேர்ந்தெடுத்தார் என்பதை நாம் உறுதியாய்க் கூற முடியும். ஒரு பெயர் என்ற வகையில் இது, புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள் காணப்படுகின்றது (அப். 11:26; 26:28; 1 பேது. 4:16).*

*சபையின் உறுப்பினர்களைப் ''பரிசுத்தவான்கள்'' என்றும்* வேதாகமம் குறிப்பிடுகின்றது. இவர்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட மக்களாயிருக்கின்றார்கள். எபேசியருக்கு எழுதும்போது பவுல், "தேவனுடைய சித்தத்தினாலே *இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது" (எபே. 1:1) என்று கூறினார்.* King James வேதாகம

*மொழிபெயர்ப்பில் தீத்து 2:14ல் ''தனிவகைப்பட்ட ஜனங்கள்'' என்றுள்ளது. இப்புத்தகத்தின் பின்பகுதியில் உள்ள புதிய ஏற்பாட்டில் "தமக்குரிய சொந்த ஜனங்கள்" என்று கூறப்படுகின்றது. "பரிசுத்தம்" அல்லது "புனிதம்" என்பதன் அடிப்படை அர்த்தமானது, "தேவனுக் காகப் பிரித்தெடுத்து வைக்கப்பட்டது" என்பதாகும். தேவனுடைய சபை என்பது "தேவனுக்குச் சொந்தமான மக்கள்", பரிசுத்தமான மக்கள், தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட மக்கள் என்றுள்ளது. கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான ஒரு அழைப்பினாலே அழைக்கப் பட்டிருக்கின்றார்கள் (2 தீமோ. 1:9); அவர்கள் பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாய் வாழ வேண்டும் (2 பேது. 3:11); அவர்கள் கடைசி நாளிலே அவருக்கு முன்பாக ''பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும்'' நிற்க வேண்டியிருக்கின்றது (கொலோ. 1:21ஆ).*

*வேதாகமத்தின் சில மொழிபெயர்ப்புகளில் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களின் தலைப்புக்களில் ''பரிசுத்த'' என்றும், வெளிப்படுத்தின விசேஷமானது ''பரிசுத்த யோவானுக்கு தெய்வீக வெளிப்படுத்துதல்'' என்று தலைப்பிடப் பட்டும் காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டின் இந்தப் புத்தகங் களுக்கு இந்தத் தலைப்புகள் தேவனிடத்திலிருந்தல்ல, மனிதனிடத் திலிருந்தே வந்தன. கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் "பரிசுத்தவான்" என்றுதான் புதிய ஏற்பாடு பெயரிடுகின்றது. சபை கூட "பரிசுத்தவான்களின் சபை" என்றே குறிப்பிடப்படுகின்றது (1 கொரி. 14:33). மக்கள் கிறிஸ்தவர்களாகும்போது அவர்கள் தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுகின்றார்கள்.*

*மேலும், சபையானது கிறிஸ்துவின் ''சரீரம்'' என்று குறிப்பிடப்படுகின்றது (எபே. 1:22, 23). இந்தச் சொற்றொடர் சில வேளைகளில், சபையானது அதன் பணிகளில் எத்தன்மையுடையது என்பதை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது (1 கொரி. 12:12-27) மற்றும் சில வேளைகளில் சபையின் உண்மை நிலை என்ன என்பதை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. "கிறிஸ்துவின் சரீரம்'' என்ற சொற்றொடரானது ஒரு பெயராகப் பயன்படுத்தப்படும்போது, சபையின் பணிகளையும் உறவு முறை யையும் வலியுறுத்துகின்றது: சபை என்பது பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் இருக்கின்றது, அது ஒரு சரீரத்திற்கும், அதன் தலைக்கும் உள்ள தொடர்புபோல் கிறிஸ்துவுடன் தொடர்புபடுத்தப்*

படுகின்றது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய இந்தச் சரீரத்தில், தனித்தனிக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும், அதன் அவயவங்களாயிருந்து செயல்பட வேண்டுமென்றும், சரீரத்தின் ஒரு பாகமாய் இருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. கொரிந்துவில் இருந்த சபைக்குப் பவுல், "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களா யுமிருக்கிறீர்கள்" என்று எழுதினார் (1 கொரி. 12:27).

சபையானது "இராஜ்யம்" என்றும் குறிப்பிடப்படுகின்றது (அப். 8:12). சில வேளைகளில் "பரலோக ராஜ்யம்" (மத். 16:18, 19) என்ற விளக்கமும், சில வேளைகளில் "தேவனுடைய ராஜ்யம்" (யோவா. 3:3) என்ற விளக்கமும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த இரண்டு சொற்றொடர்களுமே ஆளுகைப் பகுதியின் ஆவிக்குரிய இயல்பையும் சபை/இராஜ்யத்தின் அதிகாரத்தையும் பிரதிபலிக்கின்றன (யோவா. 18:36). இந்த பூமியில் தேவனுடைய அதிகாரத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களால் ஆன குழுவே சபை என்னப்படுகின்றது. கிறிஸ்து அரசராக இருந்து இப்பொழுது தமது இராஜ்யமாகிய சபையில் அரசாண்டு கொண்டிருக்கின்றார் (1 கொரி. 15:24, 25). சபைக்கு தெய்வீகமான ஒரு தலைவர் அல்லது ஒரு அரசர் இருக்கின்றார், மற்றும் சபையானது தெய்வீக அதிகாரத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது. பூமியில் வாழ்ந்தாலும், இயேசு அரசரின் அதிகாரத்திற்கு சபையின் உறுப்பினர்கள் தலை வணங்கி, அவரது ஆவிக்குரிய இராஜ்யத்தின் "குடிமக்களாக" அவர்கள் வாழ்கின்றார்கள் (பிலி. 3:20).

தேவனுடைய இராஜ்யத்தின் பாகமாய் இருக்கின்றவர்கள், பரலோக இராஜ்யத்தின் ''குடிமக்கள்'' என்றும் விவரிக்கப் படுகின்றார்கள் (மத். 16:18, 19). பவுல், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" (பிலி. 3:20) என்று கூறினார். மேலும் அவர், "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்" (எபே. 2:19, 20) என்றும் எழுதினார். கிறிஸ்து நமது அரசாயிருக்கிறார் (1 கொரி. 15:24, 25). கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் வாழ்பவர்கள் மட்டுமே அவரது இராஜ்யத்தில்

இருக்கின்றார்கள் (மத். 7:21).

கிறிஸ்தவர்கள், பழைய ஏற்பாட்டில் தானியேல் கூறிய நித்திய இராஜ்யத்தின் குடிமக்களாயிருக்கின்றார்கள் (தானி. 2:44). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இதை ''அசைவில்லாத'' இராஜ்யம் என்று விளக்கினார்: ''ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம், ...'' (எபி. 12:28). இன்றிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நீங்கள் எங்கு இருப்பீர்கள் என்று அடுத்த முறை உங்களையே கேட்டுக் கொள்ளும் பொழுது, நீங்கள் கிறிஸ்தவராய் இருந்தால் உங்களுக்கு நீங்களே, "நான் நித்திய இராஜ்யத்தில் இருப்பேன்!" என்று கூறிக் கொள்ள முடியும். தேவனுடைய இராஜ்யம் இன்று இருந்து, நாளை இல்லாமல் போய் விடுவதில்லை - அது நித்தியமானது.

## உரிமைத்துவத்தின் பெயர்கள்

சபையானது தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் உரிமைத்துவ உறவுடையதாய் இருக்கின்றது என்பது, புதிய ஏற்பாட்டில் மூன்று வழிகளில் குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சொற்றொடர்கள், உரிமைத்துவம் மற்றும் தலைமைத்துவத்தைக் குறிப்பிடுகின்றன.

முதலாவது, சபை என்பது ''கிறிஸ்துவின் சபை'' என்று குறிப்பிடப்படுகின்றது. பவுல், ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்தின் முடிவில், அகாயாவில் இருந்த சபையாரின் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்: "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16ஆ). இந்தப் பெயரானது சபையின் உரிமைத்துவத்தையும். அடையாளத்தையும் குறித்துக் காட்டுகின்றது. சபையை கிறிஸ்து நிலைநாட்டி, விலைக்கு வாங்கி, உரிமையாக்கி, அவரே அதன் தலைவராயிருப்பதால், அது கிறிஸ்துவின் சபையாக இருக்கின்றது. கிறிஸ்துவுக்குள் ஒருவர் மனமாற்றப்படும்போது அவர் கிறிஸ்துவினுடையவராகின்றார் (1 கொரி. 6:20). அவர் கிறிஸ்தவர் என்று அழைக்கப்படுமளவுக்கு கிறிஸ்துவின் முழுமையாக அடையாளப் படுத்தப்பட்டு, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராகின்றார் (அப். 11:26; 26:28; 1 பேது. 4:16). கிறிஸ்துவைப் பின்பற்றும் விசேஷித்த குழுவானது, கிறிஸ்துவே அதன் உரிமையாளர், மற்றும் அவர் அதன் ஒரு பாகமாயிருக்கின்றார் என்று காண்பிப்பதற்காகக் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகின்றது.

*இரண்டாவது, சபை என்பது, "தேவனுடைய சபை" என்று குறிப்பிடப்படுகின்றது (1 கொரி. 1:2). சபையானது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிடப்படுகிறதென்றால், அது தேவனுடைய சபை என்றும் குறிப்பிடப்படுமென்று நாம் எதிர்பார்க்கலாம், ஏனென்றால் தாமும், தமது பிதாவும் ஒன்றாக இருப்பதாக இயேசு கூறினார் (யோவா. 10:30). உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவன் சபையைத் திட்டமிட்டார் (எபே. 3:10, 11). சபைக்காக ஆயத்தம் பண்ணும்படியாகவும் (மத். 16:18) அதை கிறிஸ்து தமது இரத்தத்தினால் கிரயம் கொள்ளும்படியாகவுமே (அப். 20:28) அவர் கிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பினார்.தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு சிலுவையில் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினதுபோல (2 கொரி. 5:18) கிறிஸ்து சபையைத் தோற்றுவித்து, கிரயம் கொள்ளுகையிலும் தேவன் அவருடன் இருந்தார்.*

*மூன்றாவது, சபையின் உறுப்பினர்கள் "அடிமைகள்" அல்லது "ஊழியக்காரர்கள்" என்று விளக்கப்படுகின்றனர். கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் யாவரும் ஊழியக்காரர்களாய் இருக்கின்றார்கள். புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ரோமராஜ்யத்தில் அடிமை/எஜமானர் உறவு முறை என்பது சமூகத்தின் ஒரு பாகமாக இருந்தது. அடிமையொருவர் தமது எஜமானரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார். அவருக்கு (அடிமைக்கு) எந்த வித உரிமையும், உடைமையும் இல்லாதிருந்தது. அந்த அடிமை தனக்குத்தானேகூட சொந்தமானவராய் இருந்ததில்லை. கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக் கொடுத்தலுக்கும், அவருடைய வசனத்தின் கீழ் வாழ்வதற்கும் இந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டதில் வியப்பேதும் இல்லை. பவுல், "நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா. 1:10ஆ; பிலி. 1:1ஐக் காணவும்) என்று எழுதினார். மேலும் அவர், "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2 கொரி. 10:5) என்றும் கூறினார்.*

*கிறிஸ்தவர்கள்-கிறிஸ்துவைத் தங்கள் எஜமானர் என்று உரிமைகோருகின்றவர்கள் - தங்கள் சொந்த வாழ்க்கைக்குத் தாங்களே எஜமானர்களாய் இருக்க முடியாது. தங்கள் சொந்த விருப்பங்களை*

*அவர்கள் "சிலுவையிலறைய" வேண்டும். அதாவது, பாவம் நிறைந்த தங்கள் சொந்த விருப்பங்களை அவர்கள் அழித்துப் போட்டு, தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளை முதல் இடத்தில் வைக்க வேண்டும். பவுல், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவை யிலறையுண்டிருக்கின்றேன்" (கலா. 6:14) என்று கூறினார். மேலும் அவர், "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப் பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" (கலா. 6:17) என்றும் கூறினார்.*

## உறவு முறையின் பெயர்கள்

*புதிய ஏற்பாட்டில் சபையைக் குறிப்பிடும் அநேக வழிகள், உறவு முறையின் கருத்தை வலியுறுத்துகின்றன. கர்த்தருடைய சபையில் உறுப்பினராயிருப்பது பல்வித உறவுமுறைகளில் ஈடுபடுத்துவதால், இது எதிர்பார்க்க வேண்டியதாகவே இருக்கின்றது.*

*ஏற்கனவே குறிப்பிடப்பட்ட அடிமை/எஜமானர் மற்றும் சரீரம்/ தலை உறவுமுறைகளுடன், "கிறிஸ்தவர்" என்ற வார்த்தையானது சபை உறுப்பினர்கள் தங்களின் கர்த்தருடன் கொண்டுள்ள அழகிய உறவுமுறையை விளக்கப்படுத்துகின்றது. அவர்கள் அவரைப் பின்பற்று பவர்கள், அவர்கள் அவருக்காக வாழ்கின்றார்கள். அவரது பெயரைத் தரித்துக் கொள்கின்றார்கள். அப்போஸ்தலராகிய பவுல் தாம் கிறிஸ்தவரான பிறகு தமது மார்க்கரீதியான வாழ்க்கையை, "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி. 1:21) என்ற புகழ் பெற்ற வார்த்தைகளில் விளக்குகின்றார். பவுலின் வாழ்வில் கிறிஸ்து முதலானவராக மட்டும் இருக்கவில்லை-கிறிஸ்துவே அவரது வாழ்வாக இருந்தார்! பவுலின் வாழ்க்கையின் மொத்தமும், மூலப் பொருளும் கிறிஸ்துவே. அவர் உண்மையிலேயே ஒரு கிறிஸ்தவராயிருந்தார்.*

*புதிய ஏற்பாடானது சபையை "தேவனுடைய குடும்பம்" என்றும் விளக்கப்படுத்துகின்றது. கிறிஸ்தவர்களை "தேவனுடைய வீட்டார்" (எபே. 2:19) என்று பவுல் கூறினார். "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுது*

*கிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் ... இருக்கிறது" (1 தீமோ. 3:15) என்று அவர் தீமோத்தேயுவுக்கு எழுதினார். ஒருவர் கிறிஸ்துவுக்கென்று மனம் மாறும்பொழுது, தேவன் அந்த நபரைத் தமது பிள்ளையாக சுவீகரித்து, குடும்பத்தின் சிறப்புரிமைகளைக் கொடுத்து, கிறிஸ்துடன் கூட நித்திய ஜீவனை சுதந்தரிக்க அவரை வாரிசாக ஆக்கிக் கொள்கின்றார் (ரோமர் 8:15-17; எபே. 1:6). கிறிஸ்தவர்கள், தாங்கள் ஜெபிப்பதற்கென்று பரலோகத்தின் பிதாவானவரைப் பெற்றிருக்கின்றார்கள், அத்துடன் அன்பு செய்யும் ஒரு இரட்சகரை-மூத்த சகோதரரான இயேசு-அவர் மூலமாக ஜெபிக்கப் பெற்றிருக்கின்றார்கள். சகோதர சகோதரிகளான அவர்கள் ஒருவரையொருவர் நேசித்து, ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகின்றார்கள் (அப். 2:44).*

*சபையின் உறுப்பினர்கள், "தேவனுடன் பிள்ளைகள்" என்று குறிப்பிடப்படுகின்றார்கள். அவர்கள் தேவனுடைய விசேஷித்த உறவொன்றைப் பெற்றிருக்கின்றார்கள்; அவர் அவர்களின் பிதாவாக வும், அவர்கள் அவரின் பிள்ளைகளாகவும் இருக்கின்றார்கள். விசுவாசி கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது, அவர்கள் தேவனு டைய "புத்திரர்களாக" சுவீகரிக்கப்படுகின்றார்கள் (எபே. 1:6). அவருடைய பிள்ளைகள் என்ற முறையில், கிறிஸ்தவர்கள் நித்திய சுதந்திரத்தைப் பெறுகின்றார்கள் (எபே. 1:12), மற்றும் தேவனுடைய பூமிக்குரிய குடும்பத்தின் பெலத்தையும் ஆதரவையும் பெறுகின்றார்கள் (1 தீமோ. 3:15; எபே. 2:19-22). ஆவிக்குரிய இந்தப் பரலோகக் குடும்பத்தில், தேவன் பிதாவாக இருக்கின்றார் (மத். 6:9), இயேசு மூத்த சகோதரராக இருக்கின்றார் (ரோமர் 8:17), மற்றும் எல்லாக் கிறிஸ்தவர்களும் சகோதர சகோதரிகளாய் இருக்கின்றார்கள் (2 பேது. 3:15; 1 யோவா. 2:8-11).*

*தேவன் தமது பிள்ளைகள்மேல் விசேஷித்த அன்பு காட்டுகின்றார் (1 யோவா. 3:1). அவர் அவர்களைச் சாத்தானிடத்திலிருந்து பாதுகாத்து, அவர்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்று கின்றார். பூமிக்குரிய தகப்பனே தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, வல்லமையுள்ள தேவனின்-பரலோகத்தில் இருக்கிற சற்குணரான பிதாவின்-பிள்ளைகள், தாங்கள் கேட்பதற்கும் அதிகமான அழகிய ஈவுகளை அவரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று இயேசு போதித்தார் (மத். 7:11ஐக் காணவும்).*

ஆதி சபையின் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் சகோதரராகக் கருதியதோடு, சிநேகிதர்களாகவும் கருதினார்கள் (2 பேது. 3:15; 3 யோவா. 14), அவர்கள் அழகிய நட்புறவில் ஒன்று கூடி நிற்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மிகவும் உயர்ந்த வகையான நண்பர்களாய் இருக்கின் றார்கள்.

யோவான் தமது மூன்றாவது நிருபத்தை "உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர் பேராக வாழ்த்துவாயாக" (3 யோவா. 14) என்று எழுதி முடித்தார். அவர் தம்மைச் சுற்றியிருந்த கிறிஸ்தவர்களை "சிநேகிதர்கள்" என்று அழைத்தார். அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளும் கிறிஸ்தவர்களையும் அவர் ''சிநேகிதர்கள்'' என்று அழைத்தார். இயேசு தம்முடைய சீஷர்களைச் சிநேகிதர்கள் என்று அழைத்தார், இயேசுவின் முன்னுதாரணத்தின்படியே யோவான் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார் என்பதில் சந்தேகமில்லை. இயேசு தமது சீஷர்களுக்குப் பின்வருமாறு கூறியிருந்தார்:

> ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன் (யோவா. 15:13-15).

''ஒவ்வொருவரும் விட்டுச் சென்றுவிடும் வேளையிலும் உங்களோடு இருப்பவரே உங்கள் நண்பர்" என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கின்றார். இயேசு இவ்வகையான நண்பராகவே இருக்கின்றார். வேறு ஒருவரும் நமக்கு உதவ முடியாமல் போனபோது, அவர் தமது உயிரை, நமக்காகக் கையளித்தார். கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் இவ்வகையான நண்பராகவே இருக்க வேண்டும் (1 யோவா. 3:16). கிறிஸ்தவர்கள் "நண்பர்களாய்" இருக்கின்றார்கள்.

முதல் நூற்றாண்டின் சபையார், "கர்த்தருடைய சீஷர்கள்" (அப். 9:1) அல்லது ''சீஷர்கள்'' (அப். 9:26; 11:26) என்று அடிக்கடிக் குறிப்பிடப்பட்டார்கள். "சீஷன்" என்ற வார்த்தை, கற்றுக் கொள்பவர் அல்லது பின்பற்றுபவர் என்று பொருள்படுகின்றது; இது, கிறிஸ்தவருக்கும் கர்த்தருக்கும் உள்ள தொடர்ந்த உறவு முறையைக் குறிக்கின்றது. ஒரு சீஷர் என்பவர் தமக்கு மேலான ஒருவருக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தவராக, தம்மை விடப் பெரியவரிடமிருந்து கற்று அறிந்தவராக, அறிவுரைகள் மற்றும் பின்பற்றுதல் மூலமாக தம்மைவிடப் பெரியவரிடமிருந்து தொடர்ந்து கற்றுக் கொள்பவராக இருக்கின்றார். அவர் கேட்பவராக மட்டுமல்ல, கற்பவராகவும், தொடர்ந்து கற்றுக் கொள்பவராகவும் இருக்கின்றார். அவரது கர்த்தர் அவருடைய எஜமானராகவும், போதகராகவும் இருக்கின்றார் (யோவா. 13:13).

சுவிசேஷப் புத்தகங்களில் விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள "சீஷன்" என்ற வார்த்தை அவைகளில் 238 முறைகள் வருகின்றது. இது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் 28 முறைகள் வருகின்றது, நிருபங்களிலோ அல்லது வெளிப்படுத்தின விசேஷம் புத்த கத்திலோ இந்த வார்த்தை காணப்படுவதில்லை. சுவிசேஷப் புத்தகங்களிலிருந்து அப். நடபடிகள் புத்தகத்திற்கும், அப். நடபடிகள் புத்தகத்திலிருந்து நிருபங்களுக்கும் கடந்து செல்லுகையில் இந்தச் சிறப்புச் சொல்லில் தெளிவாய்க் காணப்படும் மாற்றமானது, ஒருவேளை, கிறிஸ்துவின் இப்பூமிக்குரிய வாழ்க்கையின் போது, அவரைப் பின்பற்றியவர்கள் "சீஷர்கள்" என்று குறிப்பிடப்பட்டதன் காரணமாக இருக்கலாம். இதன் பிறகு, நடபடிகள் புத்தகத்தில், நிருபங்களில் மற்றும் வெளி. புத்தகத்தில் அவர்களின் பரிசுத்தமான அழைப்பைக் குறிப்பிடுவதற்காக அவர்கள் ''பரிசுத்தவான்கள்'' என்றோ அல்லது அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவு முறையைக் குறிப்பிடுவதற்காக "சகோதரர்கள்" என்றோ அழைக்கப் பட்டார்கள்.

கிறிஸ்து, தாம் பரத்துக்கேறுவதற்கு முன்பு, தமது அப்போஸ்தலர் களுக்குக் கொடுத்த பிரதான கட்டளையில், ''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ,

*உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:19, 20) என்றார். புதிய ஏற்பாட்டின் பிற்பகுதியில் "சீஷன்" என்ற வார்த்தை அடிக்கடிக் காணப்படாத போதிலும், அவர் மேற்சொன்ன வழியில் அவ்வார்த்தைக்கு ஒரு தொடர்ச்சியான பயன்பாட்டைக் கொடுத்தார்.*

*சீஷர் என்பவர் வசனத்தை வாழ்க்கையில் நிறைவேற்றுபவராக இருக்கின்றார். யாக்கோபு, "...நீங்கள் திருவசனத்தைக் கேட்கிறவர் களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக். 1:22) என்று கூறினார். சீஷர் என்பவர் மாணவருக்கும் மேலானவராக இருக்கின்றார்; அவர் கிறிஸ்துவைப் போலவே இருந்து, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராக இருக்கின்றார்.*

*இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து, புதிய ஏற்பாட்டின் சபையானது "தேவனுடைய ஆலயம்" என்று அழைக்கப்படுகின்றது. கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், நீங்கள் தேவனு டைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரி. 3:16) என்று கூறினார். கிறிஸ்தவர்களின் கூட்டமாகிய சபையானது தேவன் வாசம் பண்ணும் இடமாக அமைகின்றது. இன்றைய நாட்களில் தேவனுடைய வாசஸ்தலமானது உயிருள்ளதாக, சபையாக இருக்கின்றது. இவ்விதமாக கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப்படுகின்றார்கள், ஏனென்றால் பரிசுத்த ஊழியத்தைச் செய்யும்படியாகவும், தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைத் தரும்படியாகவும் அவர்கள் சுவிசேஷத்தினால் பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் (1 கொரி. 1:2).*

*புதிய ஏற்பாடானது ஒரு வசனப்பகுதியில் சபையை, "முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை" (எபி. 12:23) என்று குறிப்பிடுகின்றது. சபையானது எதிர் காலத்தில் ஒரு தனிச்சிறப்பான உறவுமுறையினால் நிலைநிற்கின்றது, ஏனென்றால் சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் "பரலோகத்தில் பேரெழுதப் படுகின்றார்." கிறிஸ்து கொடுத்துள்ள நித்திய நம்பிக்கையின் காரண மாக, கிறிஸ்தவர்களின் எதிர்காலமானது பயம் நிறைந்ததாகவோ கலக்கம் உள்ளதாகவோ இருப்பதில்லை. இந்த உறவுமுறைப் பெயர்களானது, சபை என்றால் என்ன என்பதைப் பற்றியும், சபையார் எவ்விதம் வாழ வேண்டும் என்பதும் பற்றியும் ஆழ்ந்த அறிவைத் தருகின்றன. அவைகள், கிறிஸ்தவர்கள் இந்தப் பூமியில் எவ்விதம் வாழ*

வேண்டுமென்றும், இரட்சிக்கப்பட்டவர்கள் எதிர்காலத்தில் தேவனுடன் எவ்விதத்தில் இருப்பார்கள் என்றும் கூறுகின்றன.

## முடிவுரை

ஆபிராம் என்ற பெயர் அவருக்கு இனியும் பொருந்தாது என்பதால் தேவன் ஆபிராமின் பெயரை ஆபிரகாம் என்று மாற்றினார். ஆபிராம் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவார் என்று கூறப்பட்டது (ஆதி. 17:5). ஆபிராம் என்றால் "உயர்வான தகப்பன்" என்று அர்த்தம். ஆபிராம் என்பது அர்த்தமுள்ள ஒரு பெயராகவே இருந்தது, ஆனால் அது ஆபிரகாமின் எதிர்காலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. ஆபிரகாம் என்றால் "திரளான ஜாதிகளின் தகப்பன்" என்று அர்த்தம், ஒரு நாட்டின் மக்களுக்கே தகப்பனான ஒரு மனிதருக்கு இதுவே சரியான பெயராகும். தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த இந்தப் பெயரானது தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் சில விஷயங்களை அர்த்தப்படுத்தியது. அது போலவே, சபைக்குத் தேவன் கொடுத்துள்ள பெயர்கள் தேவனுக்குச் சில விஷயங்களை அர்த்தப்படுத்துகின்றன, அவைகள் நமக்கு இன்னும் அதிகமாக அர்த்தப்பட வேண்டும்.

புதிய ஏற்பாட்டின் சபையைக் குறிப்பிட முறையான வழிகள் இருக்கின்றன, அவைகள் பயன்படுத்தப்பட வேண்டும். வேதாகமத்தில் காணப்படாத பெயர்களைப் பயன்படுத்துகையில், நாம் சபையை அடையாளம் காண்பதில் குழப்பமடைகின்றோம். மக்கள் குழுவொன்று புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க வேண்டும் என்று தேடினால், புதிய ஏற்பாட்டின் சபையென்று அறியப்பட வேண்டும் என்று விரும்பினால், சபைக்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களையே அவர்கள் பயன்படுத்த வேண்டும். புதிய ஏற்பாட்டின் சபையாக இல்லாத ஒரு சபை தன்னை புதிய ஏற்பாட்டின் சபை என்று அழைத்துக் கொள்ளக்கூடும்; ஆனால் அது உண்மையிலேயே புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க வேண்டுமென்றால், புதிய ஏற்பாட்டின் முறையான மொழியை அது பயன்படுத்த வேண்டும்.

இன்றைய நாட்களில் தேவனுடைய சபையாக இருப்பதற்கு ஒப்புக் கொடுத்தலானது, உறுப்பினர்கள் தங்களைப் பெயரிட்டு விளக்கப்படுத்துவதன் மூலமாகக் கூடக் காண்பிக்கப்பட வேண்டும். தேவன் தமது சபைக்குப் பயன்படுத்திய பெயர்களையே பயன்படுத்துவது என்பது, தேவன் விரும்பியபடி இருக்கவும் செய்யவும் முயற்சி

*செய்யும் கிறிஸ்தவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு ஆரம்ப நடவடிக்கையாக இருக்கும். தேவன் சபையை அழைத்தபடியே கிறிஸ்தவர்கள் தங்களை அழைத்துக் கொள்ளும்போது, அவர்கள் தங்களைச் சரியான பாதையில் அழைத்துக் கொண்டு, தேவன் விரும்பும்படியே வாழ்பவர்களாய் இருக்கின்றார்கள் (பிற்சேர்க்கை 3ஐக் காணவும்).*

## பாட வினாக்கள்

*(விடைகள் 316 ம் பக்கங்களில்)*

1. *"இராஜ்யம்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் சபையுடன் தொடர்புள்ள வகையில் எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றது?*
2. *பவுல், சபையை "கிறிஸ்துவின் சபை" என்று குறிப்பிடுவது ஏன்? சபையின் உரிமைத்துவத்தைக் குறிப்பிடும் மற்ற பெயர்கள் யாவை?*
3. *சபைக்குப் பெயர்களாகப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளவைகளையே நாம் பயன்படுத்த வேண்டும் என்பது ஏன்?*
4. *வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போலவே நாமும் சபையைப் பற்றிக் குறிப்பிடும்போது நிறைவேற்றப்படுவது என்ன?*
5. *சபையானது "தேவனுடைய குடும்பம்" என்று அழைக்கப்படுவது ஏன்?*
6. *"கிறிஸ்தவர்" என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தம் என்ன? கிறிஸ்தவராக வாழ்க்கையில் ஒருவர் எவ்விதம் வாழ்கின்றார்?*
7. *கிறிஸ்தவரான நிலையில் தமது வாழ்வைப் பற்றிப் பவுல் பிலி. 1:21ல் எவ்விதம் விளக்கப்படுத்துகின்றார்?*
8. *"தேவனுடைய பிள்ளை" யாக இருப்பது என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது? தேவனோடு உள்ள இந்த உறவின் தன்மையைத் தருக.*
9. *புதிய ஏற்பாட்டில் "சீஷன்" என்ற வார்த்தை எத்தனை முறை காணப்படுகின்றது?*
10. *சீஷனின் தன்மைகளைத் தருக.*
11. *"பரிசுத்தவான்" என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தத்தைத் தருக. ஒரு நபர் எப்பொழுது "பரிசுத்தவான்" ஆகின்றார்? பரிசுத்தவானின் தன்மைகள் என்ன?*

*[1]புதிய ஏற்பாட்டில் அடிக்கடி சபையைப் பற்றிய விளக்கம் தரப்படுகின்றது, எடுத்துக்காட்டாக, அது ஒரு ஆட்டு மந்தையாகவும் (யோவா. 10:1), ஒரு திராட்சத் தோட்டமாகவும் (மத். 20:1), அல்லது ஒரு விலையுயர்ந்த முத்தாகவும் (மத். 13:45, 46) விளக்கமளிக்கப்படுகின்றது. இது போன்ற உருவகங்கள் சபையைப் பற்றி நாம் சிறந்த முறையில் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன; ஆனால் இவைகள் விளக்கங்களாக மட்டுமே உள்ளன, சபையை அடையாளப்படுத்தும் வழிகள் அல்ல. [2]"பெயர்கள்" என்பவை சபையைக் குறிப்பதற்கான வேதாகமத்தின் வழிமுறைகள் ஆகும்.*

# 15

# கிறிஸ்து, சபையின் தலைவர்

ஒரு கடைக்குள்ளாக ஓடி வந்த சிறு பையன்களைப் பற்றிய பழைய கதையொன்று கூறப்படுகின்றது. அவர்கள் சில பொருட்களை வாங்கிக் கொண்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். அவர்கள் கண்காணாமல் மறைந்த சில நிமிடங்களில், இன்னொரு பையன் ஓடி வந்தான். அவன் கடையின் குமாஸ்தாவிடம், "பையன்கள் கூட்டமாக இங்கு வந்ததைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டான். அந்தக் குமாஸ்தா, "ஆம், அவர்கள் இங்கிருந்து போய் பதினைந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அவர்கள் மிகவும் அவசரத்தில் இருந்தார்கள்" என்று கூறினார். அதற்கு அந்தப் பையன், ''எந்த வழியாய் அவர்கள் போனார்கள்? நான் அவர்களின் தலைவன்" என்று சொன்னான்!

நாம் மிகவும் அடிக்கடிப் பார்க்கக் கூடிய தலைமைத்துவத்தின் எடுத்துக்காட்டாக இந்தப் பையன் இருக்கின்றான்-அது முன்னிருந்து வழிநடத்தக்கூடிய தலைமைத்துவமாய் இராமல், பின்னால் இருந்து கொண்டு, பின்பற்றுபவர்கள் எங்கே போய் விட்டார்கள் என்று திகைக்கக் கூடிய தலைமைத்துவமாய் இருக்கின்றது! மனிதனுடைய தலைமைத்துவத்தின் வலுவின்மையும், தவறுகளுமே அதன் இடர்ப் பாடாக இருக்கின்றது. மனிதத் தலைமைத்துவமானது ஏதாவது ஒரு சமயத்தில் ஊக்கக் குறைவைக் கொண்டுவந்து விடுகின்றது. மனிதர்கள் எப்பொழுதுமே மனிதர்களாகவே இருக்கப் போகின்றார்கள்.

சில சமயங்களில் சபையும் கூட இவ்விதமான குறைவுபட்ட

தலைமைத்துவத்தைப் பெற்றிருக்கின்றதா? பரலோகத்திற்குச் செல்லும்படியாகக் கட்டப்பட்ட இந்தக் கப்பலானது மனித பலவீனங்களும் தோல்விகளும் கொண்ட ஒரு கப்பல் தலைவரைப் பெற்றிருக்கின்றதா? சபையானது பூமியிலிருந்து, அதன் நித்திய கரையான, என்றென்றும் உள்ள மாபெரும் இடத்தை நோக்கிப் பயணம் செல்லுகையில், அதன் உறுப்பினர்கள், உடைந்து போன திசைகாட்டும் கருவியையே சார்ந்திருக்க வேண்டுமா?

சபையின் தலைவர் இயேசு கிறிஸ்துவே என்று உறுதி செய்யும் ஏவப்பட்ட வசனங்களினால் இவ்விதப் பயங்கள் நீக்கப்படுகின்றன. பவுல், "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே. 5:23-25) என்று எழுதினார். கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, அதற்காக மரித்ததால், அவரே சபைக்குத் தலைவராயிருக்கின்றார். தமது மாபெரும் தியாகத்தினால், கிறிஸ்து சபைக்குத் தலைமையேற்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றார். "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்" என்ற சொற்றொடரானது உங்கள் சிந்தனையில் ஆழமாகப் பதியட்டும். கிறிஸ்துவை சபையின் தலைவராகப் பார்ப்பதென்பது, கிறிஸ்துவின் சபை உறுப்பினர்களுக்கு உறுதிப்பாடு தருகின்றது, ஏனென்றால் அது அவர்களுக்கு அவர்கள் பெறும் தவறற்ற வழிகாட்டுதலை நினைவூட்டுகின்றது. கிறிஸ்தவ ரல்லாதவர்கள் சபைக்குள் பிரவேசிக்கக்கூட இது காரணமாய் இருக்க வேண்டும் - அதன் மூலம் அவர்களும் கிறிஸ்துவின் வழுவாத தலைமைத்துவத்தின் கீழ் வரலாம்.

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கும் வழிகளைக் கவனிப்பதன் மூலம் நாம், "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்" என்பதன் மறு உறுதிப்பாட்டுக் கருத்தை ஆழமாய்ச் சிந்திப்போம்.

## அதிகாரத்தில் அவர் தலையாயிருக்கின்றார்

முதலாவதாக, அதிகாரத்தில் கிறிஸ்து சபையின் தலையா யிருக்கின்றார். அவர் கர்த்தராக இருக்கின்றார், அவர் தமது பிரமாணத் தின்படியே வழி நடத்துகின்றார்.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்குச் சென்ற பிறகு, பரலோகத்தின் உன்னதமான இடத்தில், அவர் தேவனுடைய வலதுபுறத்தில் அமர்த்தப்பட்டார், "எல்லாத் துரைத் தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா

நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக" (எபே. 1:20). தேவன், "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, … சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22, 23). பவுல் கொலோசெயருக்கு, "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வரா யிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறு மானவர். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் … அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:18-20) என்று கூறும் பொழுது இதே சத்தியத்தையே வலியுறுத்தினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரின்படி, தேவன் இந்தக் கடைசி நாட்களில் அல்லது கிறிஸ்துவின் யுகத்தில் தமது குமாரன் மூலமாகவே நம்மிடத்தில் பேசுகின்றார் (எபி. 1:1, 2). அவர் இயேசுவை மேலாக உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு அருளிச் செய்து, "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், … இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், … (பிலி. 2:10, 11). கிறிஸ்துவானவர் சபையின் தலைவராக அல்லது இராஜ்யத்தின் அரசராக காலங்களின் முடிவு வரை ஆளுகை செய்வா ரென்றும், பின்பு அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தை யும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிற வருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (1 கொரி. 15:24) என்றும் வேதவசனங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன.

இயேசுவின் சபையானது அவரது அதிகாரம் மற்றும் தலைமைத் துவத்தின் கீழ் வாழ்கின்றது. "எனது" என்பது முன் நிறுத்தப்படும் காலத்திலும் கூட, கிறிஸ்துவின் சபையார் தங்களின் சொந்த வழியை வற்புறுத்த முடியாது. அவர்கள், "நான் முதலில்" என்று சொல்லிக் கொண்டே, அதே சமயம் இயேசுவைக் கர்த்தர் என்று ஒப்புக் கொள்ளவும் முடியாது. கிறிஸ்தவர் மேற்கொள்ளும் ஒவ்வொரு முடிவும், கிறிஸ்துவினுடைய கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படிவதினால் வழி நடத்தப்படும் ஆவிக்குரிய முடிவாகவே இருக்கின்றது.

## எடுத்துக்காட்டில் அவர் தலைவராக இருக்கின்றார்

இரண்டாவதாக, எடுத்துக்காட்டில் கிறிஸ்து சபையின் தலைவராக இருக்கின்றார். தேவனுக்குக் கீழ்ப்படிவதில் அவர் ஒரு முழுமையான முன்மாதிரியாக இருக்கின்றார். தமது பாவமற்ற

வாழ்க்கையின் மூலம் அவர் தலைமை ஏற்று நடத்துகின்றார்.

கிறிஸ்து பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லையென்று பேதுரு கூறினார். அவர் வையப்படும் போது பதில் வையவில்லை. பாடுபடும் போது அவர் பயமுறுத்த வில்லை (1 பேது. 2:22-23).

கிறிஸ்துவானவர் தவறு செய்தமைக்காக மன்னிப்புக் கேட்க வேண்டிய தேவையே ஏற்பட்டதில்லை. ஒரு வார்த்தை கூட அவர் தவறாகப் பேசி அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படியான சூழ்நிலை எப்பொழுதுமே எழுந்ததில்லை. பாவச் சிந்தனை எதையும் அவரது இருதயமானது அறிந்ததில்லை. அவரது விரோதிகள் அவரது வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தும் கூட ஒரு பாவத்தையும் அவர்களால் காண முடியாமல் போயிற்று.

நாம் இதைப் போன்ற வாழ்க்கை-உண்மையான, பரிசுத்தமான மற்றும் மதிப்புமிக்க வாழ்க்கை-வாழ வேண்டுமென்றுதான் அவர் விரும்புகின்றார் (பிலி. 4:8). யாக்கோபு, "... தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகின்றான்" (யாக். 1:13, 14) என்று எழுதினார். கிறிஸ்து நமது எதிராளியல்ல, ஆனால் மத். 4:3ல் "சோதனைக்காரன்" என்று அழைக்கப்படும் பிசாசானவனே நமது விரோதியாய் இருக்கின்றான். அவன் கர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் (1 பேது. 5:8). அவன் நமது பலவீனங் களிலிருந்து அனுகூலமடைய ஆயத்தமாயிருக்கின்றான்.

கிறிஸ்துவும் நமது பலவீனங்களை அறிந்திருக்கின்றார்; அவர் நமது போராட்டங்களைப் புரிந்து கொள்கின்றார். அவரும் கூட இந்தச் சோதனைக்காரனை எதிர்கொள்ள வேண்டியிருந்தது, ஆனாலும் அவர் பாவம் செய்யவில்லை (எபி. 4:15). அவர் நமக்கு முன்பாகச் சோதனைகளை வைப்பதில்லை; மாறாக பாவத்திலிருந்து தப்பித்துக் கொள்ளக் கூடிய வழியை அவர் நமக்கு கொடுத்து, நம்மால் தாங்க முடியாத சோதனைகளில் அவர் நம்மைப் பாதுகாக்கின்றார். (1 கொரி. 10:13).

சபையின் தலைவரானவர், தாம் அதிகாரத்தில் முழுமையுள்ள வராய் இருப்பது போலவே, பண்பிலும் முழுமையுள்ளவராய் இருக்கின்றார். அவரது சபையானது அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவரது வாழ்க்கையைப் போலவே வாழ வேண்டிய

தாய் இருக்கின்றது. 1 யோவா. 2:6ல், "அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" என்று கூறப்படுகின்றது. சபைக்கு இயேசு கொடுக்கின்ற தனிச் சிறப்புள்ள தலைமைத்துவத்தின் காரணமாகவே பவுல், "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்று கிறவர்களாயிருங்கள்'' (1 கொரி. 11:1) என்று மற்றவர்களுக்குக் கட்டளையிட முடிந்தது.

ஒரு கண்ணோட்டத்தில், கிறிஸ்து நமது முழு நிறைவான இரட்சகரானார். தேவனுக்கு முன்பாகப் பரிபூரணமான வாழ்வை வாழ்ந்ததால், அவர் நமது இரட்சகராவதற்குப் பூரணமான தகுதியுள்ளவராகி, பாவத்திற்கு ஈடுசெய்ய (கிரயம் கொடுக்க) தமது பாவமற்ற ஜீவனை தேவனுக்கு அளிக்க முடிந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''அவர் குமாரனாயிருந்தும், பட்டபாடு களினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி. 5:8, 9) என்று காரணம் காட்டினார்.

நத்தானியேல் ஹாவ்த்தோர்ன் எழுதிய "மாபெரும் கல்முகம்" என்ற கதையானது நாம் எதை நோக்குகின்றோமோ அதாகவே ஆகின்றோம் என்பதையும், நாம் எதைப் பாராட்டுகின்றோமோ அது போலவே செய்கின்றோம் என்பதையும் நமக்கு நினைவுபடுத்து கின்றது. மலையின் ஓரத்தில் செதுக்கப்பட்டு இருந்த கருணைத் தோற்றமுள்ள ஒரு முகமானது துன்புறுத்தப்பட்ட மக்கள் வாழ்ந்த கிராமம் இருந்த ஒரு சமவெளியை நோக்கியிருந்தது. அந்த மாபெரும் கல்முகத்திற்கு ஒப்பான முகமுடைய ஒருவர் ஒரு நாளிலே தங்களை விடுவிக்க வருவார் என்று அந்தச் சமூகத்தினர் நம்பியிருந்தார்கள். அந்தக் கிராமத்துப் பையன் ஒருவன் அந்தக் கல்முகத்தைப் பற்றி ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் தொடர்ந்து சிந்தித்தான். காலங்கள் கடந்த போது, அந்தக் கல்முகத்தையே நோக்கியதாலும், அதைப் பாராட்டியதாலும், அந்த இளைஞன் அம்முகத்தைப் போன்றவனாக மாறினான், அவனைத் தங்கள் விடுதலையாளனாக அந்தச் சமுதாயம் விரைவிலேயே அடையாளம் கண்டுகொண்டது.

நாம் பற்றிக்கொள்ளும் சத்தியத்தைப் போலவே நாமும் ஆகி விடுகின்றோம் என்பது சபையைப் பொறுத்தமட்டில் விசேஷித்த உண்மையாக இருக்கின்றது. பவுல், "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக்

*கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18) என்று கூறினார்.*

*கிறிஸ்துவின் சபையானது எப்படி வாழ்வது என்பதற்கு ஒரு முன்மாதிரியாக அவருடைய வாழ்க்கையைப் பார்க்கின்றது. எடுத்துக்காட்டில் அவர் நமது தலையாக இருக்கின்றார். அதன் உறுப்பினர்கள் அவரைப் பார்ப்பதோடு மட்டுமல்லாது, அவரில் பார்க்கின்றார்கள் (எபி. 12:2). அவர் தமது முழுமையான வாழ்க்கையினால் சபையை என்றென்றும் வழி நடத்துகின்றார்.*

## அன்பில் அவர் தலையாயிருக்கின்றார்

*மூன்றாவதாக, அன்பில் கிறிஸ்து சபையின் தலையாயிருக்கின்றார். அவர் தமது ஆச்சரியமான அன்பினால் தமது மக்களை வழி நடத்தி, கட்டளையிடுகின்றார்.*

*தமது மரணத்திற்கு முந்திய இரவில் இயேசு தமது சீஷர்களிடம்,* "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" *என்றார் (யோவா. 13:34, 35). மேலும் அவர் அவர்களிடத்தில்,* "*நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல* நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" *(யோவா. 15:12) என்றும் கூறினார்.*

*கிறிஸ்து தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில் காட்டிய இந்த அன்பானது அவர்களை மூன்று வழிகளில் முன் நடத்துகின்றது. முதலாவது, இது அவர்கள் அவரில் அன்புகூர, காரணமாகின்றது. யோவான்,* "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" *(1 யோவா. 4:19) என்று கூறினார். இரண்டாவது, அவரது அன்பானது கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் அன்புகூர காரணமாகின்றது. யோவான்,* "அவர் நம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" *(1 யோவா. 3:16) என்று எழுதினார்.*

மூன்றாவது, அவரது அன்பானது, அவரைப் பின்பற்றுபவர்கள் அவருடைய சித்தத்தைச் செய்யக் காரணமாயிருக்கின்றது. கிறிஸ்து, ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' (யோவா. 14:15) என்று கூறினார்.

கிறிஸ்து பூமியில் ஊழியம் செய்ததுபோது அதைக் கவனித்த தூதர்கள் பயபக்தியாயிருந்திருக்க வேண்டும். அவர் சிலுவையில் மரணமடைவதற்கு முந்திய நாளிலே, அவர் ஒரு பாத்திரத்தையும் துண்டையும் எடுத்துக் கொண்டு, அன்பினாலும் தாழ்மையினாலும் நிறைந்தவராய்த் தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவினார்! இராஜாதி இராஜாவானவர், அன்பின் ஊழியத்தில் தமது சீஷர்களுக்கு முன்பாக முழந்தாள் படியிட்டார். கிறிஸ்து மனிதராக ஆனதோடு மட்டுமல்லாது, மனிதர்களுக்கு அவர் ஒரு ஊழியக்காரராகவுமானார். அவர் மனுஷ ரூபமெடுத்து ஒரு அடிமை ஊழியக்காரனுடைய வாழ்க்கையை வாழ்ந்தார் (பிலி. 2:7).

இந்த முக்கியமான காட்சியைப் பின்வரும் வார்த்தைகளுடன் யோவான் அறிமுகப்படுத்தினார்: ''தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து'' (யோவா. 13:3). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், கிறிஸ்து தமது அதிகாரம், நிலை, எதிர்காலம் ஆகியவற்றை விசேஷமாக உணர்ந்திருந்த ஒருவேளையில், தமக்குள்ள யாவற்றையும் விட்டுக் கொடுத்து (தம்மையே தாழ்த்தி) தாம் வாழ்ந்திருந்த வாழ்க்கைக்கு இசைந்த, அடிமையின் ஊழியம் செய்ய அவர் தம்மை ஒப்புக் கொடுத்தார். அவர் தமது உயர்ந்த நிலையையும் பலத்தையும், தமது வல்லமையையும், தமது நிலையையும் அங்கு காட்டவில்லை. அன்பினால், அவர் தமது சீஷர்களுக்குத் தாழ்மையின் பாடத்தைக் கற்றுக்கொடுக்க அதை உபயோகித்தார்.

சபையின் தலை என்ற முறையில், அவரது வல்லமை மற்றும் அதிகாரத்துடன் அவர் அன்பினால் ஊழியம் செய்கின்றார்! தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவிய போது அவர் கர்த்தர் என்ற தமது நிலையை விட்டுவிடவில்லை; கர்த்தர் என்ற தமது நிலையை அவர், அவர்களுக்கு ஊழியம் செய்யவும், அவர்களுக்குள் ஊழியத்தின் உற்சாகத்தைக் கட்டி எழுப்பவும் பயன்படுத்தினார். அவர் அவர்களிடத்தில், ''நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.

*ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவா. 13:13-15) என்று கூறினார்.*

*அன்பு என்றால் என்ன என்பதையும் உண்மையான அன்பை எவ்விதம் வெளிப்படுத்துவது என்பதையும் இயேசு முடியக் கூடியதிலேயே மிக உயர்ந்த வழியில் சித்திரித்துக் காண்பித்தார். அவர் தமது அன்பினால் தமது சபையை வழிநடத்திச் செல்லுகின்றார். கிறிஸ்தவர்கள் அவருடைய அன்பின் சூழ்நிலையில் வாழ்ந்து, அந்தச் சூழ்நிலையைச் சுவாசித்து, அதற்குப் பதில்செயல் செய்கின்ற படியினால் அவர்கள் அவருக்கு ஒப்பாக மறுரூபப்படுகின்றார்கள். யோவான், "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவா. 4:7, 8) என்று கூறியதில் வியப்பேதும் இல்லை.*

## முடிவுரை

*கிறிஸ்துவானவர், அதிகாரத்திலும், எடுத்துக்காட்டிலும், அன்பிலும் மற்றும் ஊழியத்திலும் நிச்சயமாகவே சபைக்குத் தலையாயிருக்கின்றார். அவர் தமது கர்த்தத்துவம், தமது பரிபூரண மான வாழ்வு, மற்றும் தமது வற்புறுத்தும் அன்பு ஆகியவற்றின் மூலமாகத் தமது சபையை வழி நடத்துகின்றார்.*

*எந்த ஒரு நிறுவனம் அல்லது அமைப்பின் தலைவருமே, தனது நம்பிக்கை, அங்கீகாரம் மற்றும் பலம் ஆகியவற்றை அவர் வழிநடத்திச் செல்லும் நிறுவனம் அல்லது அமைப்பிற்கு கொடுக்க வேண்டும். கிறிஸ்துவுக்கும் சபைக்கும் கூட இது நிச்சயமாகவே உண்மையாகும். தேவனுடைய தெய்வீக குமாரனாகிய கிறிஸ்து, அவருடைய தலைமைத்துவத்தினாலும் வழி நடத்துதலினாலும், அவருடைய குற்றமற்ற பரிபூரணத்தையும் அளவற்ற ஞானத்தையும், இணையற்ற நேர்மையையும் மற்றும் மகா பெரிய பலத்தையும் சபைக்குக் கொடுக்கிறார்.*

*கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவால் தோற்றுவிக்கப்பட்டது,*

*கிறிஸ்துவால் வழிநடத்தப்படுகின்றது, கிறிஸ்துவின் பெயரை அணிந்து கொள்ளுகின்றது. கிறிஸ்து தமக்கு உரிமையாக இருக்கின்ற எல்லாவற்றையும் சபைக்குக் கொடுத்திருக்கின்றார்; கிறிஸ்துவுக்கு உள்ள எதிர்காலம் யாவும் சபைக்கும் இருக்கின்றது. அவர் தமது சபையை இன்றைய நாட்களில் தாங்கி நடத்துவதாகவும், அதன் எதிர்காலத்திற்காக அதைப் பரிசுத்தப்படுத்துவதாகவும் வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார். "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:27).*

*கிறிஸ்து சபையை உருவாக்கி, தமது அன்பையும் இரட்சிப்பையும் அதற்குக் கொடுத்து, தமது நித்திய மகிமையின் வாக்குத்தத்தத்தினால் சபைக்கு முடி சூட்டியிருக்கின்றாரென்றால், யாராவது அவரது சபையின் உறுப்பினராக விருப்பமில்லாமல் இருப்பார்களா?*

*கிறிஸ்துவினால் வழிநடத்தப்படும் சபையில் நீங்கள் ஒரு பாகமாக இருக்கின்றீர்களா?*

## பாட வினாக்கள்

*(விடைகள் 318 ம் பக்கங்களில்)*

1. *உண்மையிலேயே வழிநடத்தாத தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டுகள் தரவும்?*
2. *இயேசு அதிகாரத்தில் சபைக்குத் தலையாயிருப்பது எவ்விதம்? இயேசு சகல அதிகாரமும் பெற்றிருக்கிறார் என்று போதிக்கும் வசனப்பகுதி எது?*
3. *கிறிஸ்து சபையின் தலைவராக எவ்வளவு காலம் ஆளுகை செய்ய வேண்டியிருக்கின்றது? (1 கொரி. 15:23-25ஐக் காணவும்).*
4. *இயேசு நமது பரிபூரணமான இரட்சகரானது எவ்விதம்? (எபி. 5:8, 9ஐக் காணவும்).*
5. *கிறிஸ்துவை நோக்கி மனம் மாறுதல் ஒரு சமயத்தில் நடக்கும் நிகழ்ச்சியாகும், ஆனால் அவரது சாயலுக்கொப்பாக மறுரூபமடைதல் என்பது நாளடைவில் நடக்கும் செயல் பாடாகும். மறுரூபமடையும் செயல்பாடு பற்றி விவாதித்து அறியவும் (2 கொரி. 3:18ஐக் காணவும்).*

6. கிறிஸ்து தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவிய நிகழ்ச்சியானது அன்றாடம் நாம் கிறிஸ்துவுக்காக வாழ்வது பற்றிப் போதிப்பது என்ன?
7. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் "ஒவ்வொருவரும் மற்றவருடைய பாதங்களைக் கழுவுவது" எவ்விதம்?

# 16

# சபையில் பிரவேசித்தல்

நல்ல உடையைப் போன்ற சில விஷயங்கள் விலை உயர்ந்தவைகளாக இருந்தாலும் உண்மையில் அவைகள் மதிப்புடையவைகளாக இருப்பதில்லை; சூரிய வெளிச்சம் அல்லது மழையைப் போன்ற சில விஷயங்கள் விலையற்றவைகளாக இருந்த போதிலும் அவைகள் மதிப்புடையவைகளாக இருக்கின்றன; சில விஷயங்கள் மிகவும் அதிகமான விலையுள்ளவையாகவும் அதே சமயத்தில் மிகவும் மதிப்புள்ளவைகளாகவும் இருக்கின்றன-கிறிஸ்துவின் சபையானது இவ்வகையைச் சேர்ந்ததாகவே இருக்கின்றது.

சபையின் விலைமதிப்பில்லாத தன்மையைப் பற்றி புதிய ஏற்பாடு சந்தேகத்திற்கிடமின்றி விளக்குகின்றது. குறைந்தது மூன்று வழிகளில் அதன் மதிப்பானது கொடுக்கப்படுகின்றது: முதலாவது, *அதன் தெய்வீகத் தொடக்கத்தில்* நாம் மதிப்பைக் காணுகின்றோம். பரலோகத்தின் நித்திய ஆலோசனையில் அது திட்டமிடப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது (எபே. 3:10, 11), மற்றும் இயேசு இந்த பூமியில் நிறைவேற்றிய ஊழியத்தின் மூலமாக அது ஆயத்தம் பண்ணப்பட்டது (மத். 4:17). அது ஒரு தெய்வீக முன்தீர்மானமேயாகும், தவறாகப்பட்ட பின் தீர்மானமல்ல. இரண்டாவது, *அதன் விலையேறிய கிரயத்தில்* அதன் மதிப்பை நாம் காணுகின்றோம். அது கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்டதாக பவுலின் மூலம் நமக்கு கூறப்பட்டுள்ளது (அப். 20:28). சபையை நிலைப்படுத்துவதே கிறிஸ்துவினுடைய மரணத்தின் முடிவான நோக்கமாகும். கொள்ளும் கிரயமானது மதிப்பைச் சுட்டிக்காட்டுமென்றால், கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்ட சபையானது உலக அமைப்புகள் எல்லாவற்றிலும் மிகவும் அதிக மதிப்புடையதாகும். மூன்றாவது, அதன் மேல்

*வைக்கப்பட்டுள்ள மாபெரும் மதிப்பீட்டில் அதன் மதிப்பை நாம் காணுகின்றோம். மற்ற எல்லாத் தேடுதல்களைக் காட்டிலும் முன்னதாக நாம் பரலோக ராஜ்யத்தைத் தேட வேண்டும் என்று கிறிஸ்து நம்மை வற்புறுத்தினார். அவர், "மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான்" (மத். 13:45, 46) என்று கூறினார். அவர் சபையை ஒரு விலையுயர்ந்த முத்தோடு ஒப்பிடுவதுமின்றி, அதை எல்லா முத்துக்களிலும் அதிக விலை உயர்ந்த முத்தோடு ஒப்பிட்டார்!*

*புதிய ஏற்பாட்டின் சபையைப் பொருட்படுத்தாமல் விடுவ தென்பது தவறுகளில் எல்லாம் பெரிய தவறாக இருக்கும் என்பதை, சபையின் மகாபெரிய மதிப்பானது நமக்குத் தெரியப்படுத்துகின்றது. கர்த்தருடைய சபையைத் தேடி அதில் பிரவேசிக்காதிருந்தால், கோடீஸ்வரரும் கூட அநாதையைப் போலவே இருக்கிறார். சபைக்குப் புறம்பே இருக்கும் மாபெரும் மனிதர்கூட மிகவும் சிறிய மனிதராய் இருக்கிறார்.*

*சபையின் இந்த தவறாக அளவிட முடியாத மதிப்பின் வெளிச்சத்தில், பகுத்தறிவானது, "சபைக்குள் பிரவேசிப்பது எப்படி?" என்று நேர்மையாக நாம் கேட்கும்படி கட்டளையிடுகின்றது. கவனிப்பதற்கு இதைக்காட்டிலும் பெரிய கேள்வி ஒருவேளை இருக்க முடியாது. இந்தக் கேள்விக்குப் புதிய ஏற்பாடு கூறும் பதில்களைக் கண்டுபிடிக்க நம்மை நாமே ஒப்படைப்போம்.*

## பதில் அறிவிக்கப்பட்டது

*கிறிஸ்து இப்பூமியில் தமது ஊழியத்தை நிறைவேற்றிப் பரலோகம் சென்ற பிறகு அவரது சீஷர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் கிறிஸ்து திட்டவட்டமாயிருந்தார். புதிய ஏற்பாட்டில் அவருடைய இந்தக் கட்டளை பற்றி ஏறக்குறைய முழுமையான மூன்று வசனக் குறிப்புகள் இருக்கின்றன (மத். 28:18-20; மாற். 16:15, 16; லூக். 24:46, 47). இவ்வசனப் பகுதிகளின் முக்கியத்துவத்தை இலேசாக எடை போட்டு விட முடியாது. அவைகள் கிறிஸ்தவ யுகம் முழுவதிற்குமான கிறிஸ்துவின் வழி நடத்துதல்களை அவரது சீஷர்களுக்குக் கொடுக்கின்றன.*

*முதலாவது, கிறிஸ்து தமது சீஷர்களுக்கு, "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15) என்றபோது, உலகளாவிய கட்டளையாக அதைக் கொடுத்தார். இரண்டாவதாக, சுவிசேஷமானது பிரசங்கிக்கப்படுகையில் இரட்சிப்பு அளிக்கப்படுவதற்கான நிபந்தனைகளை அவர் குறிப்பிட்டார். அவர் தமது சீஷர்கள் என்ன செய்ய வேண்டும்- "போய்" - என்பதைக் கூறினார், மற்றும் அவர்கள் என்ன சொல்ல வேண்டும் - "சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" - என்பதையும் கூறினார். "போய்" மற்றும் "சுவிசேஷம்" என்ற வார்த்தைகளில் அவர், அவர்களின் எதிர்கால ஊழியத்தைச் சுருக்கிக் கூறினார்.*

*மாற்குவின் சுவிசேஷத்தின்படி ஒருமுறை கிறிஸ்து இந்தக் கட்டளையைக் கொடுத்து விசுவாசத்தின் நிபந்தனையை வலியுறுத்தினார். அவர், "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற். 16:15, 16) என்று கூறினார். பிரதான கட்டளையின் இந்தப் பதிவின்படி, ஞானஸ்நானம் என்பது ஒரு நிபந்தனையாகவே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் விசுவாசம் இங்கு வலியுறுத்தப்படுவதாகக் காணப்படுகின்றது.*

*லூக்காவின் சுவிசேஷத்தின்படி, இன்னொருமுறை கிறிஸ்து இந்தக் கட்டளையைக் கொடுக்கையில் மனந்திரும்புதலை வற்புறுத்தியதாக உள்ளது. அவர், "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் பாவமன்னிப்புக்கான[1] மனந்திரும்புதலானது எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக். 24:46, 47) என்று சொன்னார். பாவத்திலிருந்து தேவனிடத்திற்குத் திரும்புகின்ற மனந்திரும்புதலானது கிறிஸ்துவின் யுகத்தில் பிரசங்கிக்கப்படும் சுவிசேஷத்தின் முக்கிய கருத்தாக இருக்க வேண்டியதாயிற்று.*

*கிறிஸ்து இந்தக் கட்டளையை கலிலேயாவில் ஒரு மலையின் மேல் கொடுத்ததாக, அதில் அவர் ஞானஸ்நானத்தை வலியுறுத்தியதாக மத்தேயு சித்தரித்தார். அவர், ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,*

*நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத். 28:18-20).*

*ஆகவே, இரட்சிப்பானது விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் என்ற மூன்று நிபந்தனைகளின் பேரிலேயே தரப்பட முடியுமென்பதும், இவை ஒவ்வொன்றும் நமது மீட்பரால் விதிக்கப்பட்ட பிரதான கட்டளை பற்றிய தனித்தனியான மூன்று வசனக் குறிப்புகளில் வலியுறுத்தப்பட்டதென்றும் காணுகின்றோம்.*

*இந்த மூன்று நிபந்தனைகளும் தெளிவானவைகளாகவும், சுலபமாய் உணரக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு கர்த்தருடைய திட்டத்தில் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளாமல் இருக்கின்ற எவரும் இயேசுவின் கட்டளையை கருத்தாழத்துடன் கவனிக்க முடியாது. கர்த்தருடைய இராஜ்யம் அல்லது சபைக்குள் பிரவேசிப்பதற்கான சூழ்நிலைகள் அல்லது நிபந்தனைகள் இவைகளில் நிலைநிறுத்தப் படுகின்றன. இவைகள் கிறிஸ்துவின் யுகம் முழுவதிலும் ஆளுகை செய்ய வேண்டியதாயுள்ளது.*

## பதில் விரிவாக்கப்பட்டது

*இரட்சிப்புக்கான நிபந்தனைகள் புதிய ஏற்பாட்டில் தவறாகப் புரிந்து கொள்ளாத வகையில் தரப்பட்டுள்ளதோடு மாத்திரமல்ல, அவைகள் அப்போஸ்தலருடைய நடபடிகளில் தெளிவாக விவரிக்கப் பட்டுள்ளன.*

*எடுத்துக்காட்டாக, அந்தப் புத்தகமானது சபை நிலை நாட்டப் படுதல் என்ற சிலிர்ப்பு மிக்க வரலாற்றுடன் தொடங்குகின்றது. அப். 2ல் பேதுருவின் பிரசங்கத்தினால் இருதயத்தில் குத்தப்பட்ட திரளான கூட்டத்தார், ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கதறினார்கள். இயேசுவில் கொண்டிருந்த விசுவாசமே அவர்களை இவ்விதமாகக் கதறும்படி தூண்டியது. அவர்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் படியாகப் பேதுரு கட்டளையிட்டார் (அப். 2:38). அந்த நாளில் மூவாயிரம் பேர் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் (அப். 2:41). இதற்கு ஏற்ற வகையில், அப். 2:47ஆ-வில் "இரட்சிக்கப்படுகிறவர்*

களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" என்று கூறப்படுகின்றது. அவர்கள் சேர்க்கப்பட்ட அக்குழுவானது பின்னாளில் சபை என்று குறிப்பிடப்படுகின்றது (அப். 5:11). நமது கர்த்தர், தமது நிறைவான கட்டளையில், நம்பிக்கை (விசுவாசம்), மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய நிபந்தனைகளின் பேரிலேயே இரட்சிப்பானது அறிவிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார். பெந்தெகொஸ்தேயன்று சபைக்குள் பிரவேசித்தவர்கள் இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவேற்றினார்கள்.

அப். 8ல் இன்னொரு எடுத்துக்காட்டு காணப்படுகின்றது. அப். 8ன் பிற்பகுதியில், பிலிப்பென்பவர் பிரசங்கிக்கும்படியாகத் தெற்கு முகமாய்ச் செல்லும்படி தூதன் ஒருவர் கூறினார் (அப். 8:26). ஒரு குறிப்பிட்ட சந்தியில், எத்தியோப்பிய மந்திரி ஒருவர் இரதத்தில் பயணம் செய்வதைப் பிலிப்பு பார்த்தார் (அப். 8:27, 28). இந்த மனிதர் மிகவும் தேவபக்தியுள்ளவராய் இருந்தார், ஆனால் இன்னும் கிறிஸ்தவராகவில்லை. பிலிப்பு அந்த இரதத்தினருகில் சென்று அவருடன் சேர்ந்துகொள்ளும்படியாக அவருக்கு பரிசுத்த ஆவியானவர் அறிவுறுத்தினார் (அப். 8:29). அவர் அவ்விதமே ஓடிப் போய்ச் சேர்ந்தபோது, அந்த எத்தியோப்பிய மந்திரி ஏசாயாவின் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்ததையும், அதன் அர்த்தம் அவருக்கு விளங்காதிருந்ததையும் கண்டுபிடித்தார் (அப். 8:31). பிலிப்பு, அவர் வாசித்துக் கொண்டிருந்த வேதவசனத்திலிருந்து தொடங்கி, அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவின் வரலாற்றை விவரித்துக் கூறினார் (அப். 8:35), அப்போது அவர் கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து நமது பாவங்களுக்காக மரித்தது பற்றிய எல்லா வற்றையும் சந்தேகத்திற்கிடமின்றி கூறியிருப்பார்.

கிறிஸ்துவைப் பற்றிப் பேசிக்கொண்டே அவர்கள் இவ்விதமாய்ப் பயணம் செய்கையில், தண்ணீருள்ள ஒரு இடத்திற்கு வந்தார்கள். அந்த எத்தியோப்பிய மந்திரி, தாம் ஞானஸ்நானப்படுத்தப்படுவது ஏற்றது என்று விசுவாசித்தபடியால்[2] "நான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள முடியுமா?" என்று கேட்டார். அவர்கள் இரதத்தை நிறுத்தி, தண்ணீருக்குள் சென்றார்கள், பிலிப்பு அந்த எத்தியோப்பிய மந்திரியை முழுக்காட்டினார் (அப். 8:38). எத்தியோப்பிய மந்திரி தமது ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து, சந்தோஷத்தோடே தம் வழியில் போனார்.

நமது கர்த்தர் தமது நிறைவான கட்டளையில் இரட்சிப்புக்கு

விதித்திருந்த நிபந்தனைகள் மீண்டும் ஒருமுறை பின்பற்றப்பட்டன. பிலிப்புவினால் செய்யப்பட்ட பிரசங்கத்தின் விளைவாக (அப். 8:35, 36) கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தல் என்பது உண்மை நிலையானது. அந்த எத்தியோப்பிய மந்திரி தேவபக்தியுள்ள மனிதராயிருந்து, தேவனுடைய சித்தத்தின்படி செய்வதற்கு உண்மையாகவே முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆகவே, பிலிப்பு கொண்டு வந்த கிறிஸ்து வைப் பற்றிய செய்தியை அவர் ஏற்றுக்கொண்டதே அவரது மனந் திரும்புதலுக்கு ஆதாரமாக உள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் வேறு எந்த இடத்தைக் காட்டிலும், இந்த இடத்தில் ஞானஸ்நானம் என்பது மிகவும் தெளிவாகச் சித்தரிக்கப் படுகின்றது. பிலிப்புவும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீருக்குள் சென்றார்கள், பிலிப்பு அவரை (மந்திரியை) முழுக்காட்டினார். ("அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மனமாற்றத்திற்கான எடுத்துக்காட்டுகள்" என்ற அட்டவணையைப் பார்க்கவும்.)

நீங்கள் ஒரு அரசாங்கத்தின் கீழ் வாழ்ந்து, அந்த அரசரை உங்கள் சொந்த நண்பராக அறிந்திருப்பது பற்றிக் கற்பனை செய்து பாருங்கள். ஒருநாள், அந்த அரசருடன் பேசிக் கொண்டிருக்கும்போது, பிற்பாடு அவரை நீங்கள் பார்க்கும்படி வந்தால், அவர் நீங்கள் செலுத்த வேண்டிய வரிகளை எல்லாம் இரத்து செய்து விடுவதாக உங்களுக்குக் கூறப்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் மகிழ்ச்சி யுடன் இந்தச் செய்தியைப் பெற்றுக் கொண்டு, ஒரு மாத காலத்தில் மறுபடியும் அவரைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொள்கின்றீர்கள். அந்த அரசரை மறுபடியும் சந்திக்கச் செல்லும் போது, உங்கள் வரிகள் இரத்து செய்யப்படுவது பற்றி எதிர்பார்த்து நீங்கள் செல்வது உறுதி. நீங்கள் அரண்மனை சென்று சேர்ந்த பொழுது, அரசர் இன்னொரு நாட்டிற்குப் பயணம் சென்றுள்ளார் என்று உங்களுக்குக் கூறப்படுகின்றது. நீங்கள் அரசரைத் திரும்பி வந்து பார்த்தால் உங்களது வரிகள் இரத்து செய்யப்படும் என்று அரசர் கூறியதாக அரண்மனை வாயிற்காவலனிடம் சொல்லுகின்றீர்கள். அதற்கு அந்த வாயிற்காவலன், "அரசர் உங்களுக்கு விசேஷித்த ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்" என்று கூறுகின்றான். பன்னிரெண்டு நிர்வாகிகள் இருக்கும் அறையொன்றிக்குள் உங்களை அழைத்துச் செல்கிறான். அவர்களிடம் சென்று நீங்கள் உங்களைப் பற்றிச் சொல்லுகின்றீர்கள். அதற்கு அவர்கள், "அரசர் இங்கிருந்த வேளையில், அவர் கூறும் ஒரு வார்த்தையினாலே உங்கள் வரிகளை இரத்து

செய்வதற்கு அதிகாரமுள்ளவராயிருந்தார், ஆனால் அந்த அரசர் இப்போது சென்றிருக்கின்றார். வரிகளை இரத்து செய்வதற்குக் குறிப்பிட்ட நிபந்தனைகளை அவர் விட்டுச் சென்றுள்ளார். நீங்கள் இப்போது அந்த நிபந்தனைகளின்படி நடக்க வேண்டும். முதலாவது நீங்கள் உங்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்லுங்கள்; இரண்டாவது, உங்கள் நிலைபற்றி ஒரு கடிதம் எழுதுங்கள்; மூன்றாவது, உங்கள் குடும்பத்தின் உறுப்பினர்கள் பெயர்களைப் பட்டியலிடுங்கள். நான்காவது, அந்தக் கடிதத்தில் மூன்று சாட்சிகளின் முன்னிலையில் நீங்கள் கையெழுத்திடுங்கள். இந்த நிபந்தனைகளை நீங்கள் நிறைவேற்றும்பொழுது உங்கள் வரிகள் இரத்து செய்யப்படும்."

மேற்சொன்ன கதையை, கிறிஸ்து உண்மையிலேயே செய்துள்ள வற்றோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் இங்கு இருந்தபோது ஒரு வார்த்தையினாலேயே பாவங்களை அடிக்கடி மன்னித்தார். எடுத்துக்காட்டாக, சிலுவையில் அவர் கள்ளனை மன்னித்தார் (லூக். 23:43). ஆயினும் கிறிஸ்து இந்தப் பூமியிலிருந்து திரும்பவும் பரலோகத் திற்குச் செல்ல ஆயத்தமான பொழுது, கிறிஸ்துவின் யுகத்தில் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பானது மக்களுக்கு எந்த நிபந்தனை களின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நிய மித்தார். அத்துடன், அவரது கட்டளையானது உலக முடிவு வரை யிலும் அமுலில் இருக்க வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார் (மத். 28:20). இப்பொழுது அந்த அரசர் சென்றிருக் கின்றார், மன்னிப்பிற்கான அவரது நிபந்தனைகள் அமுலில் இருக்கின்றன.

## பதில் நடைமுறைப்படுத்தப்பட்டது

சபைக்குள் பிரவேசிப்பதற்கான இந்த நிபந்தனைகள் நம் ஒவ்வொருவராலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கிறிஸ்து வின் நிறைவான கட்டளை மாற்றப்பட்டிருக்கப்படவில்லை. அது கொடுக்கப்பட்ட நாளில் இருந்தபடியே இன்றும் இருக்கின்றது. பேதுருவின் முதல் பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்கு இரட்சிக்கப் படுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த அதே நிபந்தனைகள்தான் இன்று நமக்கும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. சபைக்குள் பிரவேசிப்பதற்கு நிபந்தனைகளைக் கிறிஸ்து நியமித்து, அவைகளை நிறைவேற்று கின்றவர்களை அவரே சபையில் சேர்த்துக் கொள்ளுகின்றார்.

மனிதரின் விவாதங்கள் அல்லது அறிவுரைகள் எதுவும், அவரது இறுதி உயில் அல்லது உடன்படிக்கையை மாற்றுவதில்லை. அரசர் சென்றிருக்கின்றார், கிறிஸ்துவின் யுகத்திற்கென்று அவர் நியமித்துள்ள நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

சபைக்குள் பிரவேசிப்பதற்கு அவர் நியமித்திருக்கும் நிபந்தனை களைப் பொறுத்தமட்டில் நீங்கள் எங்கு நிலை நிற்கின்றீர்கள்? நீங்கள் நம்புகின்றீர்களா? தேவனுடைய வசனமே விசுவாசத்தின் மூலப்பிறப் பிடமாய் இருக்கின்றது (ரோமர் 10:17). மனிதரின் ஞானம், கற்றுக் கொள்ளுதல் அல்லது சாதனைகள் ஆகியவை விசுவாசத்தை உண்டாக்க முடியாது. நீங்கள் தேவனை நம்புகின்றீர்களா? அவரு டைய குமாரனாகிய கிறிஸ்துவே மனுக்குலத்தின் இரட்சகர் என்பதை நீங்கள் நம்புகின்றீர்களா?

நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருக்கின்றீர் களா? (அப். 17:30, 31) பாவத்திலிருந்து நீங்கள் ஜீவனுள்ள தேவனிடத் தில் திரும்பியிருக்கின்றீர்களா? என்ன நேர்ந்தாலும், எங்கு வழி நடந்தாலும் தேவனுடைய சித்தத்திற்கு உங்கள் இருதயத்தை ஒப்புக்கொடுத்திருக்கின்றீர்களா?

இயேசுவை தேவனுடைய குமாரனென்றும், கர்த்தரென்றும் நீங்கள் வெளியரங்கமாக அறிக்கையிட்டிருக்கின்றீர்களா? (ரோமர் 10:10). உங்கள் வாயினாலே நீங்கள் இயேசுவே இரட்சகர் மற்றும் கர்த்தர் என்று அறிக்கை செய்திருக்கின்றீர்களா?

நீங்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்டிருக்கின்றீர்களா? பிரதான கட்டளையின்படி முழுகுதலே ஞானஸ்நானமாகும் (ரோமர் 6:4). இயேசுவுக்குள்ளாக (ரோமர் 6:3; கலா. 3:27), இது பாவமன்னிப்புக் கென்று (அப். 2:38; 22:16) பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்திலே (மத். 28:19, 20) பெற்றுக்கொள்ள வேண்டியதாகும். நீங்கள் புதிய ஏற்பாட்டு முன்மாதிரியின்படியான ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கின்றீர்களா?

இன்றைய நாட்களில் ஒருவர், கிறிஸ்து தமது நிறைவான கட்டளையில் நியமித்துள்ள நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கும் போது, நமது உண்மையுள்ள கர்த்தரும் இரட்சகருமானவர் தமது சபை அல்லது இராஜ்யத்தில் அவரைச் சேர்த்துக் கொள்ளுகிறார் என்று நம்புவது நியாயமானதல்லவா? கர்த்தருடைய நிபந்தனைகளைத் தவிர்த்து விளக்கம் தர ஒருவராலும் முடியாது. இவைகளுக்குப் பதிலாக ஏதொன்றையுமோ அல்லது இவைகளைக் களங்கப்

படுத்துகின்ற ஏதொன்றையுமோ நாம் அனுமதிக்க முடியாது. கிறிஸ்து வுக்கு உண்மையாகவே ஒப்புக்கொடுத்தல் என்பது கீழ்ப்படிதலே தவிர வேறொன்றும் இல்லை.

## முடிவுரை

நீங்கள் புதிய ஏற்பாட்டின் சபையில் பிரவேசித்திருக்கின்றீர்களா? இன்று நீங்கள் அதில் பிரவேசிக்க விரும்புகின்றீர்களா?

புதிய ஏற்பாட்டின் சபையில் பிரவேசிப்பதற்கான கர்த்தருடைய நிபந்தனைகளை உண்மையாகவே நிறைவேற்றுகின்ற எவரும் அதில் பிரவேசிக்க முடியும் என்பதே நமக்கு மாபெரும் மேன்மையான செய்தி என்பது உறுதியாகும். எல்லா நாட்டவர்களும், எல்லா இனத்தவர்களும் மற்றும் எல்லா மக்களும் அவருடைய இராஜ்யத்தில் பிரவேசித்து கிறிஸ்துவோடு ஒன்றாயிருக்க முடியும் (எபே. 2:14).

தொடக்கத்திலேயே அஸ்திபாரம் உண்மையானதுதான் என்று நாம் நிச்சயித்துக் கொள்வதே ஞானமுள்ள செயல் ஆகும். இரட்சிப் பிற்கான கர்த்தருடைய நிபந்தனைகளை நீங்கள் நிறைவேற்றா மலிருந்தால், அவைகளை உடனே முழுமையாக நிறைவேற்றுங்கள். அவருடைய இராஜ்யத்தில் பிரவேசித்து, இப்பொழுது முதல் அவரது இராஜ்யத்தின் பிரஜையாக அவரது இராஜ்யத்தில் மட்டுமே வாழ்க்கை நடத்துங்கள்.

கர்த்தருடைய சபைக்குள் நீங்கள் பிரவேசிக்காமலிருந்தால், உங்களைப் பொறுத்தமட்டில் அது உண்மையில் மதிப்புடைய தாயிருக்காது.

## பாட வினாக்கள்

*(விடைகள் 318 ம் பக்கங்களில்)*

1. கர்த்தருடைய சபையின் ஒப்பிடப்பட முடியாத மதிப்பைப் பற்றி விளக்குக.
2. பிரதான கட்டளையின் நிபந்தனைகள் இன்றைய கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துகின்றனவா?
3. சிலுவையில் இருந்த கள்ளன் இரட்சிக்கப்பட்டதுபோல இன்றைக்கு நாம் இரட்சிப்படைய முடியாது-ஏன்?
4. இன்றைய நாட்களில் ஒருவர் எவ்விதத்தில் சபையின்

*உறுப்பினராக முடியும்?*

5. *இரட்சிக்கப்பட்டவர்களை மனிதர்கள் சபையில் சேர்த்துக் கொள்கின்றார்களா?*
6. *நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்தவராவதற்கு செய்யப்பட்டவைகளை ஒருவர் செய்தால், நடபடிகள் புத்தகத்தில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த வர்களுக்குச் செய்ததை தேவன் இவருக்கும் செய்ய மாட்டார் என்று நம்புவதற்குக் காரணம் ஏதாவது உண்டா?*
7. *ஒருவர், தாம் கிறிஸ்துவின் சபையில் இருப்பதை எவ்விதம் உறுதி செய்து கொள்ள முடியும்?*
8. *இரட்சிப்புக்கான கர்த்தருடைய நிபந்தனைகள் களங்கப் படுத்தப்படும்போது, பெரும்சேதம் எதுவும் செய்யப்படுகின்றதா?*

## வார்த்தை உதவிகள்

***இயேசுவின் இறுதி உயில் மற்றும் உடன்படிக்கை*** *- புதிய ஏற்பாடு (எபி. 9:15-17).*

***தனிவகைப்பட்ட*** *- மாறுபட்ட; பிரித்து வைக்கப்பட்ட. 1 பேது. 2:9ல் கிறிஸ்தவர்களைப் பற்றி, "நீங்களோ, உங்களை அந்தகாரத் தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத் தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப் பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று கூறப்படுகின்றது.*

---

*[1]சில கையெழுத்துப் பிரதிகளில் இவ்விடத்தில் "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்" என்றுள்ளது. தமிழ் மொழிபெயர்ப்பிலும் இப்படியே உள்ளது. [2]நடபடிகளின் நம்பத்தக்க அநேக கையெழுத்துப் பிரதிகளில் அப். 8:37 வசனம் காணப்படுவதில்லை. இது, இந்த வசனமானது புதிய ஏற்பாட்டின் மூலப்பிரதியில் கிடையாது என்ற முடிவுக்கு வழி நடத்துகின்றது. ஆயினும், பிலிப்புவால் இதில் கூறப்படும் வழிநடத்துகின்ற கூற்றானது இந்தச் சூழ்நிலையில் மிகவும் இயல்பாக எழுகின்ற சிந்தனையென்று ஏற்றுக்*

கொள்ளப்படுதல் அவசியமாகின்றது. எத்தியோப்பி மந்திரி, கிறிஸ்துவைப் பற்றியோ அல்லது தீர்க்கதரிசி யாரைக் குறித்து எழுதினார் என்பதையோ அறியாதிருந்தார். கிறிஸ்துவைப் பற்றிய உரையாடலுக்குப் பின்பே அந்த மந்திரி, தாம் ஞானஸ்நானம் பெற விரும்பினார். ஆகவே, ''நீர் உம் இருதயத்தில் விசுவாசித்தால் தடையில்லை'' என்ற கூற்றானது ஞானஸ் நானத்திற்கான முன் தயாரிப்பிலிருந்து எடுத்துப் போடப்பட முடியாத தாகவே இருக்கின்றது, அது மிகவும் தகுதியானதாகவே இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்வதானது விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகவும், விசுவாசிக்க வேண்டும் என்ற பிரதான கட்டளையிலிருந்து வளர்ந்த ஒரு நிபந்தனையாகவும் இருக்கின்றது.

**அப். நட. புத்தகத்தில் மனமாற்றத்திற்கான எடுத்துக்காட்டுகள்**

| கேள்விப்படுதல் | விசுவாசித்தல் | மனந்திரும்புதல் | அறிக்கையிடுதல் | ஞானஸ்நானம் பெறுதல் | இரட்சிக்கப்படுதல் |
|---|---|---|---|---|---|
| **யூதர்கள்** ***அப். 2*** | "அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி" *(வ. 37)* | "மனந்திரும்பி" *(வ. 38)* | | "ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" *(வ. 38)*; "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 41)* | "பாவமன்னிப்புக்கென்று" *(வ. 38)* |
| **சமாரியர்கள்** ***அப்.8*** | "அவர்கள் விசுவாசித்த போது" *(வ. 12)* | | | "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 12)* | |
| **எத்தியோப்பிய மந்திரி** ***அப். 8*** | ("நீர்... விசுவாசித்தால்") *(வ. 37)* | | ["இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்"] *(வ. 37)* | "ஞானஸ்நானம் பெற" *(வ. 36)*; "பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்" *(வ. 38)* | "சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" *(வ. 39)* |
| **சவுல்** ***அப். 9; 22, 26*** | | உபவாசித்து ஜெபித்தல் *(9:9, 11)* | "ஆண்டவரே" *(9:5)* | "ஞானஸ்நானம் பெற்றான்" *(9:18)*; ஞானஸ்நானம் பெற்று" *(22:16)* | "உன் பாவங்கள் போகக் கழுவப்படு" *(22:16)* |
| **கொர்நேலியு** ***அப். 10, 11*** | "அவரை விசுவாசிக்கிறவன்" *(10:43)* | "ஜீவக் கேதுவான மனந்திரும்புதல்" *(11:18)* | | "ஞானஸ்நானம்" *(10:47)* "ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்" *(10:48)* | "பாவமன்னிப்பை" *(10:43)* |
| **லீதியாள்** ***அப். 16*** | | | | "ஞானஸ்நானம் பெற்ற பின்பு" *(வ. 15)* | |
| **சிறைச் சாலைக்காரன்** ***அப். 16*** | "கர்த்தராகிய இயேசுவை விசுவாசி" *(வ. 31)*; "விசுவாச முள்ளவனாகி" *(வ. 34)* | "அவர்களுடைய காயங்களைக் கழுவினான்" *(வ. 33)* | | "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 33)* | "நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" *(வ. 31)*; "மனமகிழ்ச்சி யாயிருந்தான்" *(வ. 34)* |
| **கொரிந்தியர்கள்** ***அப். 18*** | "விசுவாசித்து" *(வ. 8)* | | | "ஞானஸ்நானம் பெற்றார்கள்" *(வ. 8)* | |

# 17

# சபையின் ஒருமைப்பாடு

*சுவிசேஷ ஊழியரான* T.B. *லேரி மோர் அவர்களின் கிறிஸ்துவைப் போன்ற ஆவியானது, அவரை அறிந்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. அவர் கிறிஸ்துவின் சபையினுடைய குடும்ப ஒருமைப்பாட்டை சங். 133:1 வசனத்துடன் விளக்கினார்: "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது!" சில விஷயங்கள் நல்லவைகளாயிருந்தும் இனிமையானவைகளா யிருப்பதில்லை. புற்றுநோயால் வளர்ந்த பகுதியை நீக்குவதற்குச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை உயிர்காக்கக் கூடியதாகையால் நல்லதேயாகும், ஆனால் அது நோயாளிக்கு இனிமையானதாக இருப்பதில்லை. சில விஷயங்கள் இனிமையானவைகளாயிருந்தாலும் நல்லவைகளாக இருப்பதில்லை. விசேஷ நிகழ்ச்சிகளின் போது கேளிக்கைகள் இனிமையானதாகவும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன, ஆனால் தொடர்ந்து கேளிக்கைகளில் ஈடுபடுவதென்பது மிகவும் மோசமானதாகும். இந்த உலகத்தில் நாம் மிகச் சில விஷயங்களே நல்லவை மற்றும் இனிமையானவைகளாக இருப்பதாகக் காண்கின்றோம் என்று சகோதரர் லேரி மோர் அவர்கள் உற்றுக்கவனித்திருக்கின்றார். சில விஷயங்கள் மட்டுமே உண்மையி லேயே நமக்குப் பயனுள்ளவைகளாகவும், அதே வேளைகளில் மகிழ்ச்சியான அனுபவத்தைத் தருவதாகவும் அவர் கண்டறிந்துள்ளார். கிறிஸ்துவுடனான ஒருமைப்பாட்டில் சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணும்போது இந்தப் பண்புகள் காணப்படுவதாக அவர் காட்டினார்.*[1] *இவருடன் யார் ஒத்துப் போகாதிருக்க முடியும்?*

புதிய ஏற்பாட்டின்படி, கிறிஸ்துவில் ஒருமைப்பாட்டுடன் இருப்பதென்பது நமக்கு நல்லது மற்றும் இனிமையானது என்பது

*மட்டுமல்லாமல், மிக முக்கியமாக அது, தேவனுக்கு முன்பாக நல்லதாகவும், அவரைப் பிரியப்படுத்துவதாகவும் இருக்கின்றது. இந்த உலகத்தின் மகா இருளாகிய ஒரு நேரத்தில் பிரமாணமற்றவர்களிடம் காட்டிக் கொடுக்கப்படுவதற்குச் சற்று முன்னர், இயேசுவானவர் எதிர்காலத்தில் தம்மை விசுவாசிக்கப் போகின்றவர்களின் ஒருமைப் பாட்டிற்காக ஜெபித்தார். அவர் தமது பிதாவினிடத்தில், "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னி லேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவா. 17:20, 21) என்று ஜெபித்தார்.*

*நாளைக்கு உங்களைத் தூக்கிலிடப் போவதாக நியமிக்கப் பட்டிருந்தால், இன்றிரவு நீங்கள் ஜெபம் பண்ண முழங்காலில் இருக்கும் வேளையில் எதற்கென்று நீங்கள் ஜெபிப்பீர்கள்? சிறிய, முக்கியமில்லாத திட்டங்களுக்காக நீங்கள் ஜெபிப்பீர்களா? இந்த உலகத்தில் உங்களுக்கு மிகவும் பிரியமான மற்றும் மிகவும் முக்கிய மான நம்பிக்கைகளுக்காக நீங்கள் ஜெபிக்க மாட்டீர்களா? இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய இரவில் செய்த ஜெபத்தை நாம் படிக்கையில், அவர் ஒருமைப்பாட்டை எவ்வளவாய் மதித்தார் என்று நாம் காண்பதில்லையா? விசுவாசிகளுக்குள் ஒருமைப்பாடு என்பது இயேசுவின் இருதயத்திற்கு மிகவும் பிரியமானதாகவும், மிகவும் முக்கியமானதாகவும் இருந்திருக்க வேண்டும், இல்லை யென்றால் அவர் தமது மரணத்திற்கு முந்திய இரவில் அதற்காக ஜெபம் செய்திருக்கமாட்டார்.*

*பரிதாபமான வகையில் பிரிந்திருந்த கொரிந்து பட்டணத்தின் சபைக்கு, பலவீனங்கள் மற்றும் பிரச்சனைகளினால் பாதிக்கப் பட்டிருந்த அந்த சபைக்குப் பவுல் நிருபத்தை எழுதும் போது, ஒருமைப்பாட்டிற்கான வல்லமை மிக்க அழைப்பை முதலாவது அவர் எழுதினார்: "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம் முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக் குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரி. 1:10). கி.பி. 54-56ல் பவுல்,*

கொரிந்தியர்களுக்கு இதை எழுதியபோது, நாமகரணக் கூட்டங்கள் இருந்திருக்கவில்லை. கர்த்தருடைய சபை மட்டுமே இருந்தது, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் பவுல், கொரிந்துவில் இருந்த தேவனுடைய சபையாருக்கு, ஒருமைப்பாட்டுடன் இருக்கும்படி கூறினார். அவர் ஒருமைப்பாட்டிற்காக வேண்டுகோள் விடுத்ததோடு, அதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

சபையின் ஒருமைப்பாட்டைப் பற்றி நாம் இன்னும் அதிகமான விபரங்களைப் பார்ப்போம். ஏற்கனவே மேற்கோள் காட்டப்பட்ட இரண்டு வசனப்பகுதிகளும், கிறிஸ்துவின் சபையானது ஒரு அழகான ஒருமைப்பாட்டை உடையதாய் இருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகின்றன, ஆனால் எந்த வகையான ஒருமைப்பாட்டை அது பெற்றிருக்க வேண்டும்? அந்த ஒருமைப்பாட்டின் இயல்பு என்ன? கிறிஸ்து ஜெபித்த ஒருமைப்பாட்டைப் புரிந்து கொள்வதென்பது, சபையைப் பற்றி நாம் இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்வதற்கு உதவி செய்யவேண்டும்.

## சரீரத்தின் ஒரு பாகமாவதில் ஒருமைப்பாடு

முதலாவதாக, கிறிஸ்துவின் சரீரமானது ஒரே மக்களைக் கொண்டதாயிருப்பதற்காகத் தேவனால் கொடுக்கப்பட்ட ஒருமைப்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு நாம் முயற்சி செய்வோம். இயல்பானதும், கிறிஸ்துவுக்குள் இருப்பதில் அடிப்படையானதுமான ஒருமைப்பாட்டைப் பற்றிப் புதிய ஏற்பாடு பேசுகின்றது. ஒருவர் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும்போது தேவனுடைய கிருபையினால் அவருக்கு இந்த ஒருமைப்பாடு கிடைக்கின்றது. கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையாகவே உறுப்பினராகும் எவரும் இந்த ஒருமைப்பாட்டைப் பெறுகின்றார்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் இருந்த உலகமானது இரு பெரிய சமுதாயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது: யூதர்கள் மற்றும் புறஜாதியார். இந்நாட்களில் இரு இனங்களுக்கிடையே இருக்கும் பிரிவு எவ்வளவு பெரியதாய் இருக்கின்றதோ, அதே அளவுக்கு, அந்த இரண்டு குழுக்களுக்கிடையேயும் பிரிவினை இருந்தது. ஆயினும், யூதர்களும் புறஜாதியாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகியிருந்ததைப் பவுல் உறுதிப்படுத்தினார்:

*அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி ... (எபே. 2:14).*

*...இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினால் இருதிறத் தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே. 2:15, 16).*

*யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை: நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்களே (கலா. 3:28).*

கிறிஸ்து தமது சிலுவை மரணத்தினால், கிறிஸ்துவுக்குள் வருகின்ற எல்லா மக்களையும் அவர்களின் பின்னணி அல்லது இனம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு ஒன்றாக்குகின்றார். யூதர் மற்றும் புறஜாதியார் என்ற இரண்டு தனித்தனி இனங்களையும் ஒரு புதிய இனமாக மறுபடி சிருஷ்டித்து, அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். கிறிஸ்து யூதர்களைப் புறஜாதியாராகவோ அல்லது புறஜாதியாரை யூதர்களாகவோ ஆக்கவில்லை. அவர் புறஜாதிகளை யூதர்கள் பெற்றிருந்த சிலாக்கியத்திற்கு உயர்த்தவில்லை; அல்லது புறஜாதியாரின் கீழான நிலையினிடத்திற்கு யூதர்களை அவர் கொண்டு வரவில்லை. அவர் யூதர்களையும் புறஜாதிகளையும் அவ்விரு இனத்தாராலும் பெற்றிருக்கப்பட்ட சிலாக்கியங்கள் அல்லது நிலைமைகளுக்கும் மேலான பரலோகத்தின் நிலைமைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். யூதன், தான் யூதனென்பதையும், புறஜாதியான், தான் புறஜாதி என்பதையும் மறக்க வேண்டியதாயிருந்தது.

இன்றைய நாட்களிலும் சபையில் இதே விஷயம் உண்மையாக இருக்கின்றது. ஒவ்வொரு நபரும் தாம் கிறிஸ்துவுக்குள் எப்படியிருக்கின்றோம் என்பதையே நினைக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் கிறிஸ்துவே கர்த்தரும் இரட்சகருமாயிருக்கின்றார். இந்தத் தெய்வீக ஒருமைப்பாட்டில், நாடு, இனம், சமூகம் மற்றும் குடும்பம் ஆகியவற்றைச் சார்ந்த எல்லா வேறுபாடுகளும் நீக்கப்படுகின்றன.

கிறிஸ்துவின் மூலமாக மக்கள் தேவனோடு ஒப்புரவாக்கப்-

அல்லது மறுபடியும் ஒன்றாகக் கொண்டுவரப்-படுகின்றார்கள் (கொலோ. 1:20). பிறகு, இந்த ஒப்புரவாக்குதலின் மூலமாக, கிறிஸ் தவர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றுகூட்டப்பட்டு "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்" (எபே. 2:22). இரண்டு பேர் ஒருவருக்கொருவர் ஒருமைப்படுத்தப் படுவதற்கு முன்னால், அவர்கள் தேவனோடு ஒருமைப்படுத்தப்பட வேண்டும்.

வரலாற்றில் இப்படிப்பட்ட மக்களைப் பற்றிய எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. உதாரணமாக, நார்மன்கள் மற்றும் சாக்ஸன்கள் என்ற இரு இனத்தவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் வெறுப்பும் பொறாமையும் தொடர்ந்து இருந்து வந்தன. ஆனால் சில நூற்றாண்டுகள் கடந்தபோது, அவைகளினூடே, இந்த மக்கள் ஒன்று கலந்து, திருமணங்கள் செய்து கொண்டு இரு இனங்களும் ஒன்றாகவே ஆகுமளவுக்கு இரண்டறக் கலந்துவிட்டார்கள். இவ்விதமாக, தனித்தனி நாடு, தனித்தனி சமூகங்கள் என்பது இல்லாமல் போய் விட்டது. அவர்களுக்குள் பிரிவினை இல்லாது போய் விட்டதால் யுத்தங்களும் முடிவுக்கு வந்தன. இந்த இரண்டு சமூகங்களும் ஒன்று கலந்ததன் விளைவாக ஒருவரையொருவர் நேசித்து, மதிக்கின்ற ஒரு புதிய சமூகம் உண்டாயிற்று.[2]

இதே போன்ற ஒரு வழியிலேயே மனிதரின் எல்லாப் பிரிவுகளும், தடைகளும் கிறிஸ்துவுக்குள்ளாக முறிக்கப்பட்டன; தேவனுடைய ஆச்சரியமான கிருபையினாலே மக்களுக்கான ஒரே சரீரம் உருவாக்கப் பட்டுள்ளது. அவருடைய சரீரத்தில் மக்கள் யூதர் அல்லது கிரேக்க ரென்றோ, அடிமை அல்லது சுயாதீனரென்றோ, பணக்காரர் அல்லது ஏழை மனிதரென்றோ, ஆண் அல்லது பெண் என்றோ, வெள்ளையர் அல்லது கறுப்பர் என்றோ பார்ப்பதில்லை. "எல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்" (கலா. 3:28ஆ) என்று மட்டுமே கிறிஸ்தவர்கள் பார்க்கின்றார்கள்.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒருமைப்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு, முதலாவதாக நாம் அவரது சரீரத்தில் பிரவேசிக்கும் போது கிறிஸ்தவர்களுக்கு தரப்படும் ஒருமைப்பாட்டைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும் புதிய கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் இப்பொழுது அவரது சரீரத்தில் இருக்கும் மற்ற உறுப்பினர்களுடன் ஒன்றாகின்றார்கள் என்று கூறுவது

தகுதியானதும் அவசியமானதும்கூட ஆகும். சபையானது இந்த சத்தியத்தைச் சிந்தித்துப் பார்த்து, இதற்கு ஒப்பச்செயல்பட வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் தகுதிகள், தடைகள், பிரிவுகள் மற்றும் இனங்கள் போன்ற எவையும் பொருட்படுத்தப்படவில்லை. எல்லா உறுப்பினர்களும், கிறிஸ்துவோடும், ஒவ்வொருவரும் மற்றவரோடும் ஒன்றாகின்றார்கள்.

## போதனையில் ஒருமைப்பாடு

இரண்டாவதாக, கிறிஸ்துவுக்குள் போதனையில் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. மக்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும் போது, அவர்களுக்கு ஆவியானவரால் ஒருமைப்பாடு தரப்படுகின்றது, ஆனால் இந்த ஒருமைப்பாடானது ஒவ்வொரு உறுப்பினரும் வேத வசனங்களுக்குக் கீழ்ப்படிவதினாலேயே பராமரிக்கப்படுகின்றது.

போதனை மற்றும் விசுவாசம் என்ற ஐக்கியம் ஒன்றினால் கிறிஸ்தவர்கள் ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கின்றார்கள். கிறிஸ்துவின் சரீரம் என்பது, தேவனைப் பற்றிய நிரூபிக்கப்பட்டிராத நம்பிக்கைகளும், வாழ்க்கையைப் பற்றிய சுயமான யூகங்களும் கொண்ட மக்களின் கூட்டமல்ல. அவருடைய சரீரத்தின் உறுப்பினர்கள் சத்தியத்தைப் பற்றிய தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டினால் ஒருமைப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

கிறிஸ்துவின் சபையில் ஒருமைப்பாட்டைப் பற்றிப் பவுல் விவாதிக்கையில், அவர் கிறிஸ்தவர்களைச் சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதில் ஜாக்கிரதையாயிருக்கும்படி வற்புறுத்துகின்றார். கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க அடிப்படையான உபதேசத்தை அமைக்கின்ற ஏழு “ஒன்று” களை அவர் குறிப்பிட்டார். அவர், “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்” (எபே. 4:4-6) என்று கூறினார். இதில் பவுல் குறிப்பிடும் சரீரம், கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையே ஆகும் (எபே. 1:22, 23). ஆவி என்பது வேதவசனங்களின் வெளிப்பாடுகளை நமக்குக் கொடுத்தவரும், தேவத்துவத்தின் மூன்றாம்

நபருமாகிய பரிசுத்த ஆவியானவரே ஆவார். ஒரே நம்பிக்கை என்பது, சுவிசேஷத்தின் மூலமாக ஒவ்வொரு கிறிஸ்தவரின் இருதயத்திலும் வைக்கப்பட்ட நித்தியமான நம்பிக்கையே ஆகும் (கொலோ. 1:22). ஒரே கர்த்தர் என்பவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனும், நமது பாவங்களுக்காக மரித்து, நம்மை நீதிமான்களாக்குவதற்காக உயிர்த்தவருமாயிருக்கின்ற கிறிஸ்துவே ஆவார். ஒரே விசுவாசம் என்பது கிறிஸ்துவிலும், வேதவசனங்களின் சாட்சியத்திலிருந்து வரும் அவரது வார்த்தையிலும் கொள்ளுகின்ற விசுவாசமேயாகும் (ரோமர் 10:17). ஒரே ஞானஸ்நானம் என்பது பிரதான கட்டளையில் கிறிஸ்து கட்டளையிட்டதும், கிறிஸ்துவின் யுகம் முடியுமட்டும் அமுலில் இருக்க வேண்டியதுமான ஞானஸ்நானமேயாகும் (மத். 28:19, 20). ஒரே தேவன் என்பவர், பூமியை உண்டாக்கி, அதற்குத் தேவையான வற்றைக் கொடுக்கின்றவரும், உண்மையான உயிருள்ள ஒரே தேவனு மாகிய நித்திய தேவனேயாவார். இந்த ஏழு "ஒன்று" களைப் பற்றி R.C. பெல் அவர்கள், "மாற்ற முடியாத, இறுதியான இந்த உண்மைகளை ஒன்று ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது உதறித் தள்ள வேண்டும். வேறு எவ்விதமான பதில்செயலும் செய்ய முடியாது; இவைகளில் ஒன்றையாவது மறுக்கின்ற எவரும் தம்மைக் கிறிஸ்தவர் என்று கூறிக் கொள்ளத் தகுதியற்றவராகின்றார்" என்று கூறினார்.[3]

கூட்டுறவு (Union) என்பது வேறு, ஒருமைப்பாடு (Unity) என்பது வேறு. கூட்டுறவு என்பதை வலிமையினால் ஏற்படுத்த முடியும், ஆனால் ஒருமைப்பாடு என்பது தேவபக்தியினால் மட்டுமே நிலைநாட்டப்பட முடியும். இரண்டு மனிதர்களைக் கயிற்றினால் கட்டி வைத்துக் கூட்டுறவை உண்டாக்க முடியும், ஆனால் விசுவாசம் மற்றும் அன்பினால் இரண்டு இருதயங்களும் ஒன்று சேர்ந்துக் கட்டப்படும்போது மட்டுமே ஒருமைப்பாடு ஏற்பட முடியும். பிளவுபட்ட சிந்தையும், விருப்பங்களும் உள்ள மனிதர்கள் ஒருவகையான கூட்டுறவை அனுபவிக்க முடியும், ஆனால் ஒரே விதமான சத்தியங்களைப் பேசுவதன் மூலமும், ஒரே சிந்தனையும் ஒரே முடிவும் கொண்டவர்களாய் இருப்பதன் மூலமும், ஒன்றாக வாசம்பண்ணும் மக்கள் மட்டுமே ஒருமைப்பாட்டை அனுபவிக்க முடியும்.

1 கொரி. 1:10ல் பவுல் ஒருமைப்பாட்டிற்கான வேண்டுகோளை விடுத்ததோடு, தான் வேண்டிக் கேட்டுக்கொண்ட ஒருமைப்பாடு எத்தன்மையுடையது என்பதையும் மிகச் சரியாகக் கூறினார்-

பிரிவினைகளில்லாமல் ஏக யோசனையும் ஏக சிந்தனையும் உள்ள, ஒத்துப் போகும் ஒருமைப்பாட்டையே அவர் வலியுறுத்தினார். கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதால் மட்டுமே இத்தகைய ஒருமைப்பாட்டைக் கொண்டு வர முடியும். அப். 2ல் சபையானது நிலைநாட்டப்பட்ட நாளில், ஏவப்பட்ட மனிதர்களால் கூறப்பட்ட ஆவியானவரின் செய்திக்கு ஒவ்வொருவரும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். இந்த ஒப்புக் கொடுத்தலானது தேவனுடைய செய்தியில் பகிர்ந்து கொள்ளப்பட்ட விசுவாசத்தின் அடிப்படையில் ஒருமைப்பாட்டை விளைவித்தது: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் ... உறுதியாய்த் தரித்திருந்தார்கள் ... விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" (அப். 2:42-44). பிலிப்பியில் இருந்த சகோதரர்களுக்குப் பவுல், "... நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக'' (பிலி. 3:16) என்று எழுதினார்.

## அன்றாட வாழ்க்கையில் ஒருமைப்பாடு

மூன்றாவதாக, கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப்பாடானது, அன்றாட வாழ்க்கையில் காணப்பட வேண்டியதாயிருக்கின்றது. மக்கள் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும் பொழுது ஆவியானவரால் தரப்பட்ட ஒருமைப்பாடானது ஒவ்வொரு உறுப்பினரும் வேத வசனத்தின் எளிய போதனைக்குக் கீழ்ப்படிவதால் மட்டுமல்லாது, கிறிஸ்துவுக்குள் ஒரே சிந்தையாயிருந்து நடைமுறை வாழ்வினைப் பின்பற்றி, ஒன்றாக இருப்பதில் தங்களின் பொது அறிவைப் பயன்படுத்தும் அணுகுமுறையாலும் பாதுகாக்கப்பட வேண்டியதாய் இருக்கின்றது.

அன்பு மற்றும் இணக்கம் ஆகியவற்றுடன் ஒருமித்து வாழும்படி பிலிப்பியில் இருந்த சகோதரர்களைப் பவுல் உற்சாகப்படுத்தினார். அவர், "நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்'' (பிலி. 2:2) என்று கூறினார். மேலும் அவர், "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகின்றேன்'' (பிலி. 4:2) என்றும் கூறினார். கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வேதாக

மத்தின் போதனைகளின்படி வாழ வேண்டும் என்பதை இந்த வசனங்கள் அவசியமானதாக வற்புறுத்துகின்றன. ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காகக் கிறிஸ்தவர்கள் சில நேரங்களில் தங்கள் கருத்துக்கள் மற்றும் விருப்பங்களை தங்களுக்குள்ளாகவே வைத்துக் கொள்ள வேண்டியதாயிருக்கின்றது.

எந்த ஒரு சகோதரரும்/சகோதரியும் தங்களது மனச்சாட்சிக்கு விரோதமான செயலைச் செய்யும்படி சபை எப்பொழுதுமே வற்புறுத்துவதில்லை. பவுல் பின்வருமாறு கூறினார்:

> *இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள் (ரோமர் 14:13).*

> *அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக் கடவன். கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்: உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என் மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிற படியே நடந்தார் (ரோமர் 15:1-3).*

நடைமுறை ஒருமைப்பாட்டில் கொடுக்கல் வாங்கல் அவசியமாயிருக்கின்றது. சுயநலமுள்ள மனிதன் மற்றவர்களுடன் ஒருமைப்பாட்டில் இருப்பதை என்றுமே அறியமாட்டான். அவன் எப்பொழுதுமே தனது சுயநலத் தேவைகளால் நான்கு புறமும் சூழப்பட்டுள்ள ஒரு சிறிய இராஜ்யத்திற்குள் வாழ்பவனாயிருப்பான். மற்றவர்களுடன் உண்மையான ஐக்கியத்தைக் கொண்டிருப்பதற்காக அவன் அந்த இராஜ்யத்தை விட்டு வெளிவரவும் முடியாது, உண்மையான ஐக்கியம் கொள்ளும்படி மற்ற எவரும் அதற்குள் பிரவேசிக்கவும் முடியாது.

இந்த நடைமுறை ஒருமைப்பாட்டை கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனது சகோதரர் அல்லது சகோதரியைப் பற்றி அன்புடனும் கிருபையுடனும் எண்ணிப் பார்க்க

ஜாக்கிரதையுடன் முயற்சி செய்வதன் மூலம் வளர்க்கின்றார். கிறிஸ்தவர் தமது சொந்தக் கருத்து மற்றும் விருப்பங்களை மிகக் குறைவாகவே வற்புறுத்த வேண்டியதாயிருக்கின்றது. அவர் தமது சுயநலம் அல்லது வெறுமையான இறுமாப்பினால் எதையும் செய்யாமல், தாழ்மையான சிந்தையுடன், தம்மைக் காட்டிலும் மற்றவர்களை மிகவும் முக்கியமானவராகக் கருத வேண்டும் (பிலி. 2:3). அவர் தமது சொந்த விருப்பங்களைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது; மற்றவர்களுடைய விருப்பங்களை அவர் கண்ணோக்க வேண்டும் (பிலி. 2:4). இப்படி வாழும்போது அவர் கிறிஸ்துவின் சிந்தையைத் தனிச் சிறப்பான முறையில் வெளிக்காண்பிக்கிறவராய் இருக்கின்றார் (பிலி. 2:5-8).

## முடிவுரை

ஆகவே, கிறிஸ்துவின் சரீரமானது அதன் ஒருமைப்பாட்டினால் அறியப்பட வேண்டியதாய் இருக்கின்றது. இந்த ஒருமைப்பாடானது மூன்று வகையான இயல்புடையதாக இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் ஒரே சரீரம் என்ற வகையில் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றார்கள். ஒரே உபதேசத்தை விசுவாசிப்பவர்கள் என்ற வகையில் அவர்கள் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றார்கள் மற்றும் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் ஒருவரைப்பற்றி யொருவர் சிந்திப்பதன் மூலமும் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றார்கள். புதுக் கிறிஸ்தவர்கள் அவரது சரீரத்தில் பிரவேசிக்கையில் தேவனுடைய கிருபையினால் ஒருமைப் பாடு வருகின்றது. அந்த சரீரம் வேதவசனங்களின் போதனைக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுப்பதின் மூலம் இந்த ஒருமைப் பாடு பாதுகாக்கப்பட்டு, அனுபவிக்கப்படுகின்றது. சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் தமது சக கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் அக்கறை கொள்வதால், இந்த ஒருமைப்பாடு மகிழ்ச்சி யுடன் அநுபவிக்கப்படுகின்றது.

தேவன் தமது உலகத்தில் இருக்கும் கலகலக்கும் கருத்து வேறு பாடுகள் எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் இணக்கமுள்ளதாக்கும் படிக்குத் தேடி விரும்புகின்றார்: “சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத் திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்

*கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:19, 20). கிறிஸ்து தமது சுவிசேஷத்தின் மூலமாக அவரது சரீரத்தில் இந்த ஒருமைப்பாட்டிற்கு நம்மை அழைக்கின்றார். தேவன் இதற்குத் திட்டமிட்டார் (எபே. 3:6), கிறிஸ்து இதற்காக ஜெபித்து, இதற்கேற்ற சாத்தியக் கூறுகளை அளித்திருக்கின்றார் (யோவா. 17:21; எபே. 2:16), பவுல் இதற்காக வேண்டுகோள் விடுத்தார் (1 கொரி. 1:10), மற்றும் ஆவியானவர் இதை உண்டாக்குகின்றார் (எபே. 4:1-6).*

*இந்த ஒருமைப்பாட்டைப் பெற்று அதன்படி வாழ்வதன் மூலம் இதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா?*

## பாட வினாக்கள்

*(விடைகள் 319 ம் பக்கங்களில்)*

1. *கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாட்டுடன் இருப்பது எந்த வழியில் இன்பமும் நன்மையுமாயிருக்கின்றது?*
2. *கிறிஸ்து சிலுவையிலறையப்படுவதற்கு முந்திய இரவில் அவரது சபைக்காக அவருடைய விசேஷித்த ஜெபம் என்ன? (யோவா. 17:21-24ஐக் காணவும்).*
3. *1 கொரி. 1:10ல் ஒருமைப்பாட்டிற்கான பவுலின் வேண்டு கோளை விவாதித்து அறியவும்.*
4. *கிறிஸ்துவின் சபையானது ஒரு சரீரம் என்ற வகையில் பெற்றுள்ள ஒருமைப்பாட்டைப் பற்றி விளக்குக.*
5. *சபைக்குள் பிரவேசிப்பவருக்கு சபையின் ஒருமைப்பாடு எப்பொழுது கொடுக்கப்படுகின்றது?*
6. *போதனையில் சபையின் ஒருமைப்பாட்டைப் பற்றி விவரிக்கவும். ஒரு சரீரம் என்ற வகையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும், போதனையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?*
7. *ஒருமைப்பாடும், கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத் தலும் எவ்விதத்தில் தொடர்ப்புபடுத்தப்படுகின்றன?*
8. *போதனையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும், அன்றாட வாழ்க்கையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?*
9. *சபையின் நடைமுறை ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க சில வேளைகளில் கிறிஸ்தவர்கள் மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகள் யாவை?*

## வார்த்தை உதவிகள்

***மனச்சாட்சி*** *- மனிதர்களுக்குள் காணப்படும் ஒழுக்கம் பற்றிய உள்ளரங்கமான சாட்சி; சில வேளைகளில் இது நமக்கு நல்லது மற்றும் கெட்டது எது என்பதை உள்ளான குரலாகக் கூறுவதாக எண்ணப் படுகின்றது. மனச்சாட்சியானது தேவனுடைய வசனத்தினால் போதிக்கப்பட வேண்டியதாய் இருக்கின்றது.*

***எயோதியாள் மற்றும் சிந்திகேயாள்*** *- தங்களுக்குள் வழக்காடிக் கொண்டிருந்த இரண்டு கிறிஸ்தவப் பெண்மணிகள் (பிலி. 4:2). அவர்கள் ஒருவருக்கொருவர் சமாதானமாயிருக்கும்படியாகப் பவுல் வேண்டுகோள் விடுத்தார்.*

---

[1]T.B. Larimore, “Unity,” in *Biographies and Sermons,* ed., F.D. Srygley (n.p., n.d.; reprint, Nashville: Gospel Advocate, 1961), 35-36. [2]R.C. Bell, *Studies in Ephesians* (Austin, Tex: Firm Foundation Publishing House, 1971), 25. [3]Ibid., 24.

# 18

# நித்திய வெகுமதியும் நித்திய தண்டனையும்

“நித்தியம்” என்ற ஒருபோதும் முடிந்திராத இருப்பு என்பது நமது சிந்தைகளினால் புரிந்துகொள்ள மிகவும் கடினமான கருத்துக்களில் ஒன்றாகும். நமது இயல்பான அண்டத்தில் நாம் காணக்கூடிய மற்றும் தொடக்கூடியவைகள் எல்லாம் ஒரு தொடக்கத்தைக் கொண்டுள்ளன மற்றும் அவைகள் எல்லாம் ஒரு முடிவையும் பெறும்; ஆகையால், நித்தியத்தின் கருத்தைப் புரிந்து கொள்வது நம்மை மூழ்கடிக்கக் கூடியதாக இருக்க முடியும். நித்தியம் என்பது நமது அனுபவத்திற்குப் புறம்பே இருப்பதால், நமது மனங்களினால் அதைப் புரிந்து கொள்ளுவதென்பது ஏறக்குறைய முடியாததாகவே இருக்கின்றது.

நமது இந்தச் சிறிய வாழ்க்கையில் நாம் செய்தவைகள் நித்தியத் திற்கும் தேவனோடு இருப்பதை ஈட்ட முடியாது என்றாலும், தேவன் பரலோகத்தின் ஆச்சரியங்களை நமக்குத் தருவார் என்பதில் நாம் ஒத்துப் போகலாம். அதே வேளையில் நமது இந்தச் சிறு வாழ்க்கையில் நாம் செய்துள்ளவை, நித்திய தண்டனையைப் பெறுமளவுக்கு அவ்வளவு மோசமானவைகள் அல்ல என்பதால் நரகத்தின் பயங்கரங் களை நாம் மறுக்கலாம். அநீதி செய்பவர்கள் அவருடைய பழி வாங்கு தலுக்கு ஏற்றவர்களாயிருப்பதை விடவும் அதிகமாகவே, நீதிமான்கள் தேவனுடைய கிருபையைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களா கின்றார்கள் என்று நாம் எண்ணலாம்.

சிலர், தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்று

*டன் நித்திய தண்டனையானது ஒத்திசைய முடியாது என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கலாம். எனவே, தேவன் அன்பாகவும், தயாளமாகவும், சகிப்புத் தன்மையுள்ளவராகவுமே இருக்கிறார் (1 தீமோ. 1:2; 1 யோவா. 4:8) என்று அவர்கள் வேதாகமத்திலிருந்து விளக்கம் தரத் தேடிக் கொண்டிருக்கலாம். அவர்கள் தேவனுடைய மறுபக்கத்தைப் பாராமல் விட்டுவிடுகின்றார்கள்: அவர் கோபம் மற்றும் பழிவாங்குதலின் தேவனாகவும் இருக்கின்றார்.*[1] *அவர் அக்கிரமத்தை வெறுத்து (எபி. 1:9), கண்டிப்பைக் காண்பித்து (ரோமர் 11:22), பட்சிக்கிற அக்கினியாயிருக்கின்றார் (எபி. 12:29). நாம், "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்" (ரோமர் 11:22) என்று படிக்கின்றோம். எபிரெயர் 10:31, "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" என்று கூறுகின்றது.*

*தேவனுடைய தயவானது புதிய ஏற்பாட்டில் பேதுருவுடன் அவர் நடந்து கொண்ட முறையில் சித்தரிக்கப்படுகின்றது (லூக். 22:31, 32), பவுலுடனும் (1 தீமோ. 1:15, 16) மற்றவர்களுடனும் அவர் நடந்து கொண்ட முறையிலும் இது சித்தரிக்கப்படுகின்றது. அனனியா, சப்பீராள் ஆகியோரின் மரணத்திலும் (அப். 5:1-10), ஏரோதின் மரணத்திலும் (அப். 12:20-23) அவரது உக்கிர கோபம் காணப்படுகின்றது. இந்த மக்கள் செய்த பாவங்களினிமித்தம் தேவன் இவர்களை மரணமடையும்படி அடித்தார்.*

*கீழ்ப்படியாமையுள்ளவர்களிடத்தில் தேவன் நடந்து கொள்ளும் முறையானது, அவர் கடுமையான தண்டனை தரக் கூடியவர் என்று காண்பிக்கின்றது. தேவனை அன்புள்ள தேவன் என்று மட்டும் பார்க்கின்றவர்கள், பாவத்தின்மேலும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்மேலும் அவர் காட்டுகின்ற கடுமையான கோபத்தைக் காணத் தவறுகின்றார்கள்.*

## தண்டனையின் ஒரு முன்கண்ணோட்டம்

*வாழ்க்கையில் இன்பங்கள் ஒருபோதும் முடிவடையாது என்று நாம் விரும்புகையில், உபத்திரவமானது உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். நமக்கு ஏற்புடையதல்லா*

தவைகளை நாம் சகித்துக் கொள்ளும்படி செய்வதின் மூலம் தவறுகளுக்கான சரியான தண்டனையானது நிறைவேற்றப்பட முடியும். தேவன் சொல்லுவதை அவர் செய்வார் என்பது புண் படுத்துவதாயிருக்குமென்றால், அப்படிப்பட்டவைகள் எதிர்பார்க்கப் பட வேண்டும். பாவம் நிறைந்த மனிதரை தேவன் வேறு எந்த வழியில் தண்டிக்க முடியும்?

## தண்டனை என்பது என்ன விதமாயிருக்கும்?

நாம் ஏற்கனவே முடிவு செய்துள்ளபடி, காலங்களின் முடிவில் துன்மார்க்கருக்குக் கிடைக்கும் தண்டனையானது என்றென்றும் நீடித்திருக்கும் என்று வேதாகமம் போதிக்கின்றது. ''நித்திய தண்டனை" எப்படியிருக்கும் என்று நாமாக எதுவும் கற்பனை செய்து கொண்டிருக்க முடியாது (மத். 25:46).

*நீர்மூலமாக்குதல்?* ஒருவர்கூட என்றென்றுமாகத் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று சிலர் போதிக்கின்றார்கள். அவர்கள், "நித்திய தண்டனை" என்பது கீழ்ப்படியாதவர்கள் நீர்மூலமாக்கப்படுவதே என்றும், இங்கிருந்து அவர்கள் கடந்து செல்லுவதே என்றென்றைக்கு மான தண்டனை என்றும் அர்த்தப்படுவதாகக் கூறுகின்றார்கள். இந்த உபதேசத்தை அவர்கள் துன்மார்க்கர் அழிக்கப்படுதல் அல்லது துன்மார்க்கர் நித்திய அழிவை அடைதல் பற்றிப் போதிக்கும் வசனங்களின் அடிப்படையில் கூறுகின்றார்கள் (மத். 10:28).

மத். 10:28ல் "அழிக்க" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள apollumi என்ற கிரேக்க வார்த்தையானது, ''மடிந்து'' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத். 8:25) மற்றும் அது "காணா மற்போனது" (லூக். 15:4, 6) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மத். 9:17ல் இயேசு குறிப்பிடும் இரசத் துருத்திகள், கிழிந்துபோகும் என்றுதான் கூறப்படுகின்றது, நீர்மூலமாக்கப்படுவதாகக் கூறப்பட வில்லை; மற்றும் ஆடு, காசு, குமாரன் ஆகியோர் காணாமற் போனதாகவே (apollumi) நாம் காண்கின்றோம் (லூக். 15:6, 9, 24). இயேசு "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" வந்தார் (லூக். 19:10), மற்றும் அவர், "என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" (மத். 10:39) என்று வாக்குத்தத்தம் பண்ணினார். நீர்மூலமாக்கப்பட்டதைக் கண்டு பிடிக்கவோ அல்லது இரட்சிக்கவோ முடியாது. முடிவான சந்தர்ப்பப் பொருள் ஒவ்வொன்றிலும், apollumi என்ற வார்த்தையானது "காணாமற்போனது", "கிழிந்துபோனது",

‘‘கெட்டுப்போனது’’, அல்லது ‘‘அழிவுக்குள்ளானது’’ என்றுதான் அர்த்தமாகின்றதே தவிர, “நீர்மூலமாக்கப்பட்டது” என்று அர்த்தப் படுத்தவே முடியாது.

துன்மார்க்கர் நித்தியத்திற்கும் தொடர்ந்து தண்டிக்கப்படுவார் கள்: “அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; இரவும் பகலும் இளைப்பாறுதலிராது” (வெளி. 14:11). பிசாசு, மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை யைப் பற்றிய விளக்கத்திலும் வெளி. 20:10ல் இதே விதமான விபரம் காணப்படுகின்றது, அவர்கள் அக்கினிக் கடலில் தள்ளப்பட்டதாக இதற்கு முன்பு வெளி. 19:20லும் கூறப்பட்டது. அக்கினிக் கடலானது தன்னில் தூக்கியெறியப்பட்டவர்களை நிர்மூலமாக்கியிருக்கு மென்றால், முன்னதாகவே அதில் வீசப்பட்ட மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியும், பிசாசு அங்கு வீசப்படுவதற்கு முந்திய ஆயிரமாண்டு காலத்தில் அங்கு எரித்து முடிக்கப்பட்டிருப்பார்களே (வெளி. 20:2, 3). அப்படி நடக்காமல், அவர்கள் அந்த அக்கினிக்கடலிலே “இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்’’ (வெளி. 20:10) என்றுதான் நாம் படிக்கின்றோம்.

புதிய உடன்படிக்கையின் கீழ் வரும் தேவனுடைய கிருபையைப் புறக்கணிப்பவர்கள், மோசேயின் பிரமாணத்தைப் புறக்கணித்த இஸ்ரவேலர்மேல் நியமிக்கப்பட்ட தண்டனையைக் காட்டிலும் அதிக மோசமான தண்டனைக்குப் பாத்திரவான்களாயிருக்கின்றார்கள் (எபி. 10:28, 29). மோசேயின் பிரமாணத்தை மீறியவர்களுக்குத் தரப்பட்ட மிக மோசமான தண்டனை மரணமாக இருந்தபடியினால், மரணத்தைக் காட்டிலும் மிகவும் மோசமான தண்டனையே இவர்களுக்குக் கிடைக்கும். நரகமே அந்தத் தண்டனையாகும்.

உண்மையான தண்டனை? நரகம் (கிரேக்க மொழியில்: gehenna[2]) என்ற வார்த்தை இயேசுவால் மட்டுமே குறிப்பிடப்பட்ட ஒரு இடமாகும்,[3] இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு யாக். 3:6ல் உள்ள குறிப்பாகும். மரித்தவர்கள் இருக்கக் கூடிய இடைப்பட்ட இடமாகிய பாதாளத்திற்கும், துன்மார்க்கர் தண்டிக்கப்படும் இடமாகிய நரகத்திற்கும் இடையில் இருக்கும் தெளிவான வேறுபாடு கவனிக்கப் பட வேண்டும்.

Gehenna என்ற வார்த்தையானது முதன்முதலாக, எருசலேமுக்குத் தென்பகுதியில் உள்ளதும், இன்னோனின் குமாரர்களுக்குச் சொந்தமாயிருந்ததுமான மலையிடைச்சந்துப் பகுதியொன்றைக்

குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. விக்கிரக ஆராதனை செய்வோர் அந்த இடத்தில் தங்களது பிள்ளைகளை தீக்கடக்கப் பண்ணி அவர்களை விக்கிரகங்களுக்கென்று தகன பலியிட்டிருந்ததால் அந்த இடம் கர்த்தருக்கு அருவருப்பானதாகவும், வெறுப்புக்குரியதாகவும் இருந்தது.[4] இவ்விதமாக, இயேசுவின் நாட்களில் அந்த இடமானது எருசலேமின் குப்பைகளைக் கொட்டும் இடமாக இருந்தது. அது துர்நாற்றமுடையதாகவும், புழுக்கள் தொற்றியதாகவும், தொடர்ந்து எரியும் நெருப்பினால் புகைந்து கொண்டிருப்பதாகவும் இருந்தது. துன்மார்க்கர் தண்டிக்கப்படும் இடத்தைப் பற்றி விளக்கத் தகுதியுடைய ஒரு வார்த்தையாக gehenna என்ற வார்த்தையானது இயேசுவால் பயன்படுத்தப்பட்டது.

கெஹன்னாவின் அக்கினியை, சூளையின் அக்கினியென்பதாக இயேசு குறிப்பிட்டார் (மத். 13:42, 50). இந்த அக்கினியானது நித்தியமானதாகவும், என்றென்றும் அணைக்கப்படக்கூடாததுமாய் இருந்தது (மத். 3:12; 18:8; 25:41; மாற். 9:48[5]). மேலும் அவர் அந்தப் "புழு" சாகாமல் இருக்கும் என்றும் கூறினார். இறந்த சடலத்தை புழுக்கள் தின்று, அக்கினியானது பட்சித்த பிறகு தின்பதற்கு ஒன்றுமில்லாமையால் புழுக்கள் இறக்க நேரிடும். அக்கினி மற்றும் புழுக்கள் என்பதை நேரடியாக அர்த்தம் கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பியிருக்கா விட்டாலும் கூட, தண்டனையின் முடிவற்ற இயல்பைச் சுட்டிக் காட்டுவதற்காக அவர் அந்தச் சொற்றொடர் களைப் பயன்படுத்தினார்.

அக்கினியானது சொல்லுக்குச் சொல் நேரான அர்த்தமுடைய தல்லவென்றால், இயேசு "அக்கினி" என்ற வார்த்தையை ஏன் திரும்பத்திரும்பப் பயன்படுத்தினார்? இதற்கு மாறான விதத்தில் ஆத்துமாக்களுக்குக் கிடைக்கும் தண்டனையை அவர் வேறு எந்த வகையான இயல்பான சொற்றொடர்களால், நாம் புரிந்து கொள்ளும்படியாக விளக்கியிருக்க முடியும்? பரலோகத்தைப் பற்றிக் கூட, அதன் அழகைப் பற்றிக் கூறுவதற்கு இயல்பான சொற்றொ டர்களே பயன்பட்டுள்ளது. இயேசு, நரகத்தின் பயங்கரத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாக இயல்பான சொற்றொடர் களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

நரகத்தில் என்ன விதமான தண்டனை அனுபவிக்கப்படும்? கீழ்ப்படியாதவர்கள் எதை எதிர்பார்க்கக் கூடும்?

(1) நரகத்திற்கு அனுப்பப்படுகிறவர்களிடத்தில் "அகன்று

*போங்கள்'' என்று கூறப்படும் (மத். 7:23; 25:41; லூக். 13:27 ஆகியவற்றைக் காணவும்). அவர்கள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப் படுவார்கள்.*

*(2) நரகத்தில் இருப்பவர்கள் தேவனுடைய சந்நிதானத்திலிருந்து நீங்கலாகித் தண்டிக்கப்படுவார்கள் (2 தெச. 1:10). இது, தேவன் அவர்களைக் காண்பதில்லை, கேட்பதில்லை அல்லது அவர்களுக்கு உதவி செய்வதில்லை என்று சுட்டிக்காட்டுகிறது.*

*(3) பிசாசும், அவனுடைய தூதர்களும், துன்மார்க்க வாழ்க்கை வாழ்ந்த ஒவ்வொருவரும் நரகத்தில் இருப்பார்கள் (மத். 25:41).*

*(4) அக்கினியாலும், கந்தகத்தாலும் வாதிக்கும் இடமாக நரகம் இருக்கும் (வெளி. 14:10; 20:10; 21:8 ஆகியவற்றைக் காணவும்).*

*(5) நரகத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து அழிக்கப்பட வேண்டியதாய் இருக்கின்றது (2 தெச. 1:10).*

*(6) அவர்கள் தேவனுடைய நித்திய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் (1 கொரி. 6:9; கலா. 5:21).*

*(7) அவர்கள் தேவனுடைய உக்கிர கோபத்தினால் உபத்திரவப் படுவார்கள் (மத். 3:7; ரோமர் 2:5; 5:9; எபே. 5:6; கொலோ. 3:6ஐக் காணவும்). அது கலப்பில்லாமல் வார்க்கப்படும் (வெளி. 14:10).*

*(8) அவர்கள் புறம்பான காரிருளில் தள்ளப்படுவார்கள் (மத். 8:12; 22:13; 25:30; 2 பேது. 2:17; யூதா 13 ஆகியவற்றைக் காணவும்).*

*(9) அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் (மாற். 16:16; யோவா. 5:29; 2 தெச. 2:12; 2 பேது. 2:3).*

*(10) அவர்கள் அழிவின் நிலையில் இருப்பார்கள் (கலா. 6:8).*

*(11) அவர்கள், தேவனுடைய பழி வாங்குதலினால் உபத்திரவப் படுவார்கள் (ரோமர் 12:19).*

*தண்டிக்கப்படுபவர்களின் பதில்செயலானது விளக்கப்படுத்த முடியாததாக இருக்கும்; அவர்கள் உபத்திரவத்தையும் கடுந்துயரத்தை யும் அனுபவிப்பார்கள் (ரோமர் 2:9). அவர்கள் அழுது கொண்டும், தங்களின் பற்களைக் கடித்துக் கொண்டும் இருப்பார்களென்று இயேசு கூறினார். இது கடுமையான வலியை விளக்கப்படுத்துகின்றது (மத். 8:12; 13:42, 50; 22:13; 24:51; 25:30; லூக். 13:28).*

*நரகத்தைப் பற்றிக் கூறப்படுபவை யாவும் பயங்கரமான மோசமாயிருக்கின்றது; நல்லது ஒன்றுகூடக் கூறப்படவில்லை. அங்கு போகின்றவர்கள் யாவரும், துன்மார்க்கமாய் வாழ்ந்த எல்லாரோடும், பிசாசு மற்றும் அவனது தூதர்களோடும் கூடச் சேர்ந்திருக்க வேண்டும்*

*(மத். 25:41)!* அவர்கள் தேவனோடோ அல்லது நீதிமான்களோடோ ஒருபோதும் இருப்பதில்லை. அவர்கள் என்றென்றைக்கும் அந்தகாரத் திலேயே வாழ்ந்திருப்பார்கள். வெளிச்சமாயிருக்கின்ற தேவன் அங்கு இருக்க மாட்டார். சூரியன், வான்பொருட்கள், நட்சத்திரங்கள் மற்றும் இவை போன்ற நமது அண்டத்தின் ஒளி கொடுக்கும் பொருள் வேறு எதுவும் கூட அங்கிருக்க மாட்டாது. தேவனும், இந்த வெளிச்சங் களும் இல்லாதபோது காரிருள் மட்டுமே அங்கிருக்கும்.

## யார் நரகத்திற்குப் போவார்கள்?

யார் தண்டிக்கப்படுவார்கள் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. பவுல் "அவர்களை முரட்டாட்டமும், மனந்திரும்பாத இருதயங்களும் உள்ளவர்களென்று விளக்கப்படுத்தினார், அவர்கள், சுயநல நோக்கத்தோடு, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிகின்றவர்களாய்" *(ரோமர் 2:5, 8, 9)* இருக்கின்றார்கள் மற்றும் பொல்லாங்கு செய்கின்றவர்களாயிருக்கின்றார்கள். மேலும் அவர்களுக்குள், "தேவனை அறியாதவர்களும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களும்" *(2 தெச. 1:7)* இருப்பார்கள் என்றும் அவர் எழுதினார். பரலோகத் திற்குப் போகாதவர்களின் பட்டியலைப் பவுல் கொடுத்தார், அதன் அர்த்தம், அவர்கள் எல்லாரும் நரகத்திற்குப் போவார்கள் என்பதே யாகும் *(1 கொரி. 6:9; கலா. 5:21; எபே. 5:5 ஆகியவற்றைக் காணவும்).* அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையினால், நரகமே அவர்களின் நித்தியமான தங்கும் இடமாயிருக்கும்.

புதிய ஏற்பாடானது பயத்தைப் பற்றிப் பேசுவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. பவுல், "ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்க தென்று அறிந்து, மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம் ..." *(2 கொரி. 5:11)* என்று எழுதினார். இதே எண்ணக் கோர்வையில் பேதுரு, "அன்றியும், பட்சபாதமில்லாமல் நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசி களாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்" *(1 பேது. 1:17)* என்று எழுதினார். இயேசு, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" *(மத். 10:28)* என்று கூறினார். மேலும் பவுல், "ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே,

நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலி. 2:12) என்றும் எழுதினார்.

"பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" (1 யோவா. 4:18) மற்றும், பூரண அன்பானது நம்மைக் கீழ்ப்படிதலுள்ளவர்களாகக் காத்துக்கொள்ளும் (யோவா. 14:15, 21; 1 யோவா. 5:3). நாம் அன்பையும், தெய்வ பயத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தேவன்மேல் நாம் கொண்டுள்ள அன்பானது அவருக்கு ஊழியம் செய்யும்படியாக நம்மை அவரிடத்தில் கிட்டிச் சேர்க்க வேண்டும், நாம் தேவனிடத்தில் வைக்கும் பயமானது அவருடைய சித்தத்தைச் செய்யப் போதுமான கனத்தை அவருக்கு நாம் செலுத்தும்படிச் செய்ய வேண்டும் (1 பேது. 1:17).

கூறப்பட்டுள்ள கூற்றுக்கள் யாவையும் நாம் நரகத்திற்குப் போக விரும்பாதிருக்கும்படி நம்மை ஏற்றுக்கொள்ளப் பண்ண போதியவைகளாய் இருக்க வேண்டும். நரகம் என்பது நமக்காக நியமிக்கப் பட்டிருக்கவில்லை, ஆனால் பிசாசுக்கும் அவன் தூதர்களுக்குமே அது நியமிக்கப்பட்டிருக்கின்றது. உலகத்தின் வரலாற்றில் அவன் உண்டாக்கியிருக்கின்ற இடர்ப்பாடுகளின் காரணமாக, தேவனால் வடிவமைக்கப்பட்ட அக்கினியான நரகத்திற்கு அவன் என்றென்றைக்கும் பாத்திரவானாய் இருக்கின்றான். ஆயினும், இதை நாம் கூறினால், தேவனுக்குக் கீழ்ப்படியாமல், பிசாசைப் பின்பற்றுகின்ற யாவரும் தங்களின் பாவங்களுக்கு இலேசான கடிந்து கொள்ளுதலைப் பார்க்கிலும் அதிகமான தண்டனை பெறப் பாத்திரவான்களாய் இருக்கின்றார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

நரகத்தின் தண்டனையிலிருந்து தப்பிப்பதும், பரலோகத்தை அடைவதுமே நமது மாபெரும் நோக்கமாய் இருக்க வேண்டும். நரகத்தில் மிகச் சிறந்த இடம் ஒன்று இருக்குமென்றால், அந்த நரகத்தின் மிகச் சிறந்த இடத்தைப் பார்க்கிலும், பரலோகத்தின் மிகத் தாழ்வான இடம் இருக்குமென்றால், பரலோகத்தின் அந்த மிகத் தாழ்வான இடமே உயர்வாக மதிக்கத் தகுந்ததாகும். தேவன் விரும்புகிறபடி வாழ்ந்து, மற்றவர்களும் பரலோகம் செல்லும்படி உதவி செய்வதன் மூலம் நாம், நரகத்தின் பயங்கரங்களைத் தவிர்க்க முடியும்.

## பரலோகத்தின் ஒரு முன்கண்ணோட்டம்

*"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (மத். 5:12; லூக். 6:23) என்பது இயேசு செய்த ஊக்கமூட்டும் ஒரு வாக்குத்தத்தமாகும். கிறிஸ்தவர்களாயிருக்கின்ற நமக்கு, இந்த உலக வாழ்க்கையை விட அதிக மகிமையான வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை (எபே. 4:4) உண்டு, கிறிஸ்தவர்களாய் இருப்பது தகுதியானதே என்பதை உறுதிப்படுத்தும் ஒரு ஆசீர்வாதமாக இது இருக்கின்றது. வேறு எந்த மக்களும், பரலோகத்தைப் பற்றி இவ்வளவு அதிகமான பாடல்களைப் பெற்றிருக்கவில்லை, அல்லது எதிர்கால இல்லத்தைப் பற்றி அவர்கள் இவ்வளவு அதிகமாய்ப் பாடிக் கொண்டிருக்கவுமில்லை. மற்றவர்களை வருத்தத்திலும், நம்பிக்கையற்ற நிலையிலும் ஆழ்த்துகின்ற சோதனைகளும் பாரங்களும் நம்மால் சந்தோஷத்துடன் சுமக்கப்படுவதற்கு, நமது பரலோகத்தின் எதிர்பார்ப்பே காரணமாய் இருக்கின்றது (1 தெச. 4:13).*

*இயேசு, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவா. 10:10) என்று கூறினார். பரிபூரண வாழ்க்கை என்பது பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கையாக இருப்பதில்லை. பவுல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12) என்று எழுதினார். பவுல் சகித்துக் கொண்ட உபத்திரவங்கள், அவரை, "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" (1 கொரி. 15:19) என்று எழுத வைத்தது. கிறிஸ்துவுக்கான அவரது போராட்டங்களைப் பற்றி அவர், "நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடினதாலே எனக்குப் பிரயோஜனமென்ன? மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?" (1 கொரி. 15:32; ஏசா. 22:13ஐக் காணவும்).*

*இதைப் பற்றி நாம் மிகவும் எதிர்நோக்குவதற்கான கருத்துக்களைப் புதிய ஏற்பாடு தருகின்றது. இரட்சிக்கப்பட்டவர்களின் நித்திய இல்லம் என்ற வகையில் பரலோகமானது வேதவசனங்களில் அடிக்கடி அல்லது விபரமாக விளக்கப்பட்டிருக்காவிட்டாலும், பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் அநேக முறைகள் குறிப்பாகத் தெரிவிக்கப்படுகின்றன.*

*பரலோகத்தில் ஒரு இல்லிடம் இருக்கின்றது என்ற கிறிஸ்தவ நம்பிக்கையானது நமக்குள் மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றது (ரோமர் 12:12). பழைய ஏற்பாட்டின்கீழ் இருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டதைக் காட்டிலும் (எபி. 8:6; 10:34) இது மேலான ஒரு வாக்குத்தத்தமாயிருக்கின்றது. தேவன் அவர்களுடன் செய்திருந்த உடன்படிக்கையை அவர்கள் காத்துக்கொண்டால் கானான் நாட்டிலே நீண்ட ஆயுளுடன், நிறைந்த செல்வங்களுடன் வாழ்வார்கள் என்று அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தார்கள் (உபா. 4:13; 5:33). நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருப்பது, பழைய நிலைக்கு மறுபடியும் கொண்டு வரப்படுகின்ற, பூமிக்குரிய ஒரு இடமாக இருக்குமென்றால், புதிய ஏற்பாட்டின் கீழ் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டுள்ள, நமது நம்பிக்கைக்கு ஆதாரமாயிருக்கின்றவைகள், தேவன் இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் செய்த நாட்டைக் காட்டிலும் அதிகம் சிறந்ததாக இருக்க முடியாது (உபா 28:1-14). இருப்பினும், நமது நம்பிக்கையானது, வளமான வாழ்வுடன் கூடிய ஒரு மனையிடம் மற்றும் பூமியில் நீடித்த ஆயுள் ஆகியவற்றைக் கொண்டதாயிராமல், பரலோகத்தில் என்றென்றும் இருக்கின்ற ஒரு இடமாகவே உள்ளது (1 பேது. 1:4, 5). இந்த பூமியிலே நாம் எவ்வளவு நீண்ட நாட்கள் வாழ்ந்தாலும், இங்கு தேவனுடைய ஆசீர்வாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவித்தாலும், சரீர வாழ்க்கை என்பது தற்காலிகமானதாகவே இருக்கின்றது. புறம்பான மனுஷன் நாளுக்கு நாள் அழிந்து கொண்டிருக்கின்றான் (2 கொரி. 4:16); ஒருநாளில் நாம் எல்லாருமே மரிப்போம் (எபி. 9:27). அதன் பிறகு நாம் இந்த பூமியில் வாழ்வு எதையும் அனுபவிக்கப் போவதில்லை-வேறு ஒரு மனிதப் பிறவியாகவோ அல்லது வேறு எவ்வித உயிரினமாகவோ நாம் ஆகப் போவதில்லை. இந்த வாழ்க்கைக்கு அப்பால், நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, நாம் ஊழியம் செய்திருக்கும் தேவனுடன் பரலோகத்திலோ (மத். 25:34) அல்லது அவருக்கு ஊழியம் செய்ய மறுத்தவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கின்ற நித்திய அக்கினியிலோ (மத். 25:41) நமது வாழ்வு தொடரும்.*

### பரலோகம் எப்படியிருக்கும்?

*வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி பரலோகத்தை நாம் புரிந்து கொள்வதற்கு, "பரலோகம்" என்ற வார்த்தையானது மூன்று வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளதை நாம் உணர்ந்து கொள்ள*

*வேண்டும் (2 கொரி. 12:2-4): (1) மேகங்கள் இருக்கின்ற வானமும் (உபா. 11:11), பறவைகள் பறக்கின்ற இடமுமாக (சங். 79:2; ஆகாயம்) இது குறிப்பிடப்படுகின்றது. (2) நட்சத்திரங்களும் மற்ற ஆகாயப் பொருட்களும் இருக்கின்ற ஆகாய விரிவு (ஆதி. 1:14-18; உபா. 1:10; வானம்) மற்றும் (3) தேவன் வாசம்பண்ணுமிடம், பூமியில் மீட்கப் பட்டவர்கள் யாவரும் இங்கு என்றென்றும் வாழ்வார்கள் (1 பேது. 1:5; பரலோகம்). இந்தக் கடைசிக் குறிப்புதான் இப்பாடத்தில் கவனிக்கப் பட வேண்டியதாக இருக்கின்றது.*

*"பரலோக இராஜ்யம்" என்ற சொற்றொடரானது (1) தேவனு டைய நித்திய இராஜ்யம் (மத். 13:43), (2) இரட்சிக்கப் படுகிறவர் களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கின்ற இராஜ்யம் (மத். 25:34) மற்றும் (3) சமீபத்திலிருக்கிறது என்று கிறிஸ்து பிரசங்கித்ததும், மற்றவர்களைப் பிரசங்கிக்க அனுப்பியதுமான இராஜ்யம், என்று குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இராஜ்யமானது, "பரலோக இராஜ்யம்" (மத். 4:17); "தேவனுடைய இராஜ்யம்" (மாற். 1:15); "என் இராஜ்யம்" (லூக். 22:30) மற்றும் "தமது அன்பின் குமாரனு டைய இராஜ்யம்" (கொலோ. 1:13) என்றெல்லாம் குறிப்பிடப்பட்டது. இந்தச் சொற்றொடர்களின் ஊடாகச் செல்லும் நூல் போன்ற இணைப்பானது இவைகளின் அர்த்தத்தை ஒருங்கிணைக்கின்றது, ஏனென்றால் இவை ஒவ்வொன்றுமே பரலோகத்தின் ஆளுகையைக் குறிப்பிடுகின்றது. கிறிஸ்துவின் விசேஷித்த ஆளுகையானது சமீபத்தில் இருந்ததாக அவரால் பிரசங்கிக்கப்பட்டது (மத். 4:17), அவர் பரத்துக்கேறினவுடன் தொடங்கி (எபே. 1:19-23), அவர் மறுபடியும் வரும் வரைக்கும் இருப்பதாயுள்ளது (1 கொரி. 15:24). இரட்சிக்கப் பட்டவர்களின் நித்திய வெகுமதியாக அவர்கள் இந்த இராஜ்யத்தில் பிரவேசிப்பதை இப்பாடம் வலியுறுத்தும் (மத். 25:34). ஒவ்வொரு வசனப்பகுதியிலும் இந்தச் சொற்றொடரின் எந்தப் பயன்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை சந்தர்ப்பப் பொருளே தீர்மானிக்க முடியும்.*

*பரலோகம் என்பது தொட்டுணரத்தக்க, இயல்பான உருவள வற்றதால், அதை விளக்கப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட இயல்பான சொற்றொடர்கள் யாவையும் அதன் ஆவிக்குரிய பகுதி யினைக் குறிப்பாலுணர்த்துபவை என்பதை நாம் உணர வேண்டும். இந்தப் பகுதியைப்பற்றிப் பவுல், "மேலும் காணப்படுகிறவைகளை யல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ...காணப்*

படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப் படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரி. 4:17, 18) என்று எழுதினார். தேவன் பரலோகத்தை பூமிக்குரிய சொற்றொடர்களால் விளக்கப்படுத்தி னாலும், அது சரீரப் பிரகாரமானது என்று எண்ணப்படக் கூடாது.

இந்த பூமியானது ஒரு ஆவிக்குரிய குடியிருப்பாக புதுப்பிக்கப் படவோ அல்லது மாற்றப்படவோ போவதில்லை. அப்படியிருந்தால், சிங்காசனத்தில் உட்கார்ந்து கொண்டு, "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி. 21:5) என்று கூறியவரைப் பற்றி கவலைப் படத் தேவையில்லை. அது போலவே, "பின்பு, நான் புதிய வானத்தை யும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின ..." (வெளி. 21:1) என்ற கூற்றையும் சொல்லுக்குச் சொல் பொருள் கொள்ளத் தேவையில்லாது போகும்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்கான புதிய எருசலேமானது பூமியில் அறியப்பட்டவைகளிலேயே விலை உயர்ந்த பொருட்களால் ஆனதாக விவரிக்கப்படுகின்றது (வெளி. 21:11-21). இப்படிப்பட்ட விளக்க மானது மிகவும் மரியாதைக்குரியதாகவும், மனித கற்பனைக்கு அப்பாற் பட்டதாகவும் இருக்கின்றது. அழியக் கூடியவர்களாகிய நாம் இந்த உருவகத்தைப் பெற வேண்டுமென்று தேவன் விரும்பினார். நாம் அவரது இராஜ்யத்தில் மகிமைப்படுத்தப்படும்போது நாம் அனைவரும் பயபக்தியுடனிருப்போம் (1 தெச. 2:11; எபி. 2:10), அதன் மேன்மை யான மகிமையைப் பெற்றிருப்போம் (ரோமர் 8:18), மற்றும் அந்த மகிமையில் பங்கேற்பவர்களாய் இருப்போம் (1 பேது. 5:1). அவர் "தமது பரிசுத்தவான்களில் மகிமைப்படுவார்" (2 தெச. 1:9). இது ஒரு கடந்து போகும் பகுதியல்ல ஆனால் பரலோகத்தின் குடிமக்களாகிய நமக்கு, "அதிக நித்தியமான கனமகிமையை" (2 கொரி. 4:17)த் தருகின் றது. பூமியோடு ஒப்பிடுகையில், இது "அதிக மேன்மையும் நிலை யுள்ளதுமான சுதந்திரமாய்" (எபி. 10:34), "மேன்மையான பரமதேச மாய்" (எபி. 11:16) இருக்கின்றது.

தேவனோடும், இயேசுவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் (வெளி. 21:3), வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்ட ஆச்சரியமான மக்க ளோடும் கூட நித்தியத்திற்கும் நாம் பரலோகத்தில் ஐக்கியப் பட்டிருப் போம் என்பதே பரலோகத்தின் மிகவும் ஆச்சரியப்படத் தக்க பண்பா கும். பரலோகத்தில் நாம் பெறப்போகும் ஐக்கியத்துடன், இந்தப் பூமியில் இருக்கின்ற எந்த ஐக்கியமும் ஒப்பிடப்பட முடியாததாகும்.

பரலோகத்தின் மகிமையையும், நாம் அனுபவிக்கப் போகும்

ஐக்கியத்தையும் நாம் ஒரு கணம் கண்ணோக்கினால், நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணத்தையும் அதைப் பற்றிக் கனவு காணவும், அதை நோக்கி ஊழியம் செய்யவும், அதற்காகத் திட்டமிடவுமே உள்ளக் கிளர்ச்சியுடன் செயல்பட்டு, அங்கு போக விரும்புகின்றவர்களாயிருப்போம். பவுல், "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்ல என்று எண்ணுகிறேன்" (ரோமர் 8:18) என்று எழுதினார்.

## பரலோகத்தில் என்ன இருக்கும்?

பரலோகத்தை நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாக அடையாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பூமியில் நமக்குத் தேவைப்படும் பொருட்களான சூரியன், சந்திரன் அல்லது விளக்கு முதலியவை பரலோகத்தில் இருக்காது; இரவு என்பதே அங்கு இருக்காது, ஏனெனில் ஆட்டுக் குட்டியானவரே (இயேசு) அங்கு வெளிச்சமாய் இருப்பார் (வெளி. 21:23, 25; 22:5). தேவனிடத்தில் செல்வதற்கு நாம் ஏற்கனவே வழியைப் பெற்றுள்ளோம் என்பது, ஒரு ஆலயம் தேவைப்படாது என்று அர்த்தப்படுத்துகின்றது, ஏனென்றால், தேவனும் ஆட்டுக்குட்டியானவருமே ஆலயமாயிருப்பார்கள் (வெளி. 21:22).

நமக்கு சரீரப் பிரகாரமான உணவு தேவைப்படாது, ஏனெனில் ஜீவ நதியின் தண்ணீரினாலும், ஜீவ விருட்சத்தின் கனியினாலும் வாழ்க்கை தாங்கி நிறுத்தப்படும் (வெளி. 22:1, 2). நாம் தேவனை விட்டு விலகாமலிருப்போம், ஏனென்றால், "அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து, அவர்களுடைய தேவனாயிருப்பார்" (வெளி. 21:3). தேவன் மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனம் அங்கிருக்கும், அதனால் அங்கு ஒரு சாபமுமிராது (வெளி. 22:3). நமது புதிய வாசஸ்தலத்தில் நீதி மட்டுமே இருக்கும் (2 பேது. 3:13).

## நாம் எப்படி இருப்போம்?

நமது இயல்பான சரீரங்கள், ஆவிக்குரிய சரீரங்களாக மாற்றப்படும் (1 கொரி. 15:44, 52-54). இயல்பான சரீரங்கள் நாம் பிரவேசிக்கும் ஆவிக்குரிய உருவளவிற்குத் தகுதியற்றவைகளாகும்,

ஏனென்றால், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது" (1 கொரி. 15:50). தேவன் ஆவியாயிருப்பதால் (யோவா. 4:24) தேவனுடைய ஆவிக்குரிய ஆளுகைப் பகுதி அவருக்கு இயல்பானதாகும், தூதர்களும் ஆவிகளாயிருப்பதால் (எபி. 1:14) அவர்களுக்கும் இது இயல்பானதாகும். அந்த உருவளவில் இருக்கும் சரீரத்தைப் பற்றி நம்மால் புரிந்து கொள்ள முடியாது, ஆனால், "அவர் வெளிப்படும்போது, நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்" (1 யோவா. 3:2) என்று நமக்கு உறுதியளிக்கப் பட்டுள்ளது. நாம் தேவனைப் பார்ப்பதற்கு அவரது உருவளவில் பிரவேசிக்க வேண்டும், ஏனென்றால் மாம்சப் பிரகாரமானவர்கள் தேவனைத் தரிசிக்க முடியாது (1 தீமோ. 6:16). இயேசு, "எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3:21). இது நடைபெறும் போது, நாம் "அவரது முகத்தைத் தரிசிப்போம்" (வெளி. 22:4), இந்த முகமானது நமது இயல்பான சரீரத்திலிருந்து பார்க்கப்பட்டால் நம்மால் உயிர் வாழக் கூடாமல் போய்விடும் (யாத். 33:20).

நாம் மறுரூபப்படுத்தப்படும்போது, பரலோகவாசிகளின் மகிமையைப் பெறுவோம். நாம் "கிறிஸ்துவுடனே கூட மகிமைப் படுத்தப்பட்டு" (ரோமர் 8:17), மகிமை, கனம் மற்றும் சமாதானத்தில் பிரவேசிப்போம் (ரோமர் 2:7, 10). நமது புதிய நிலையில் நாம், "ராஜ்யத்தில் சூரியனைப் போலப் பிரகாசிப்போம்" (மத். 13:43). "மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்ளுவோம்" (1 கொரி. 15:49).

நாம் நித்தியவாசிகளாக, "நித்திய ஜீவனைப்" பெற்று, என் றென்றும் மரிக்க முடியாதவர்களாயிருப்போம் (லூக். 20:36; வெளி. 21:4). "நித்திய ஜீவனை" என்பது நமக்கு உடைமையாக்கப்படுகின்ற[7] அல்லது இயேசுவை விசுவாசித்து அவருக்கு ஊழியம் செய்வதால் நாம் வெகுமதியாகப் பெறுகின்ற[8] வாழ்க்கையின் தரத்தையும் அதன் நீடித்த தன்மையையும் அர்த்தப்படுத்துகின்றது.

## நாம் என்ன செய்து கொண்டிருப்போம்?

பரலோகத்தில் நாம் என்ன செய்து கொண்டிருப்போம் என்பதை,

ஒருவேளை நல்ல காரணத்திற்காகவே, தேவன் நமக்கு முழுமையாக விளக்கப்படுத்தவில்லை. நாம் சரீரப்பிரகாரமாக இருப்பதால் ஆவிக்குரிய ஜீவிகள் செய்வது மிகவும் ஊக்கமுள்ளதாயிருக்கும் என்பதை நாம் கவனித்திருக்கவில்லை. சரீரப்பிரகாரமான விஷயங்களின் அடிப்படையிலேயே நமது சந்தோஷம் இருப்பதால், பரலோகத்தின் ஆவிக்குரிய செயல்பாடுகள் பற்றி ஊக்கமடைவதில் நாம் இடர்பாடு அடையக் கூடும்.

பரலோகத்தில் நாம் சந்தோஷத்தை மட்டுமே அறிந்திருப்போம், ஏனென்றால், தேவன், ''அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின" (வெளி. 21:4). இந்த வாழ்க்கையின் சரீரப் பிரகாரமான விஷயங்கள் உண்டாக்கிய வருத்தங்கள் அல்லது சாபங்கள் ஆகியவை இனி இருக்காது (வெளி. 22:3). இரட்சிக்கப்பட்டவர்கள் நமது எஜமானுடைய "சந்தோஷத்திற்குள்" பிரவேசிப்பார்கள் (மத். 25:21, 23). நாம் இந்த வாழ்க்கையின் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவோம் (வெளி. 14:13; எபி. 4:8-11).

நித்தியம் முழுவதிலும் நாம் களிகூர்ந்திருப்போம், ஏனென்றால் நாம் பிதாவோடும் (வெளி. 21:3), இயேசுவோடும் (யோவா. 12:26[9]), தூதர்களோடும் (லூக். 9:26) மற்றும் இரட்சிக்கப்பட்டவர்களோடும் (மத். 13:43) இருப்போம். நாம் இயேசுவுக்கு சந்தோஷமாக ஊழியம் செய்துகொண்டு (வெளி. 22:4) அவருடன் என்றென்றும் அரசாண்டு கொண்டிருப்போம் (2 தீமோ. 2:12; வெளி. 22:5). பரிசுத்தவான்களில் அவர் மகிமைப்படுவார் (2 தெச. 1:9). இது இயேசுவால் இரட்சிக்கப்பட்டவர்களினால் இயேசு மிகவும் அதிகமான கனமும், மகிமையும் அடைவார் என்பதையே அர்த்தப்படுத்துவதாய் இருக்க வேண்டும் (பிலி. 2:10, 11). அன்பு, ஐக்கியம் மற்றும் சந்தோஷம் ஆகியவை உள்ள ஆச்சரியமான இடமாகப் பரலோகம் இருக்கும்.

## யாரெல்லாம் பரலோகத்திற்குச் செல்வார்கள்?

பரலோகத்தின் மகிமைகள், தகுதிகள் அடிப்படையில் கொடுக்கப்படாமல், கிருபையின் அடிப்படையிலேயே கொடுக்கப்படுகின்றன (2 தெச. 2:16). நமது நற்செயல்களினால் பரலோகத்தைப் பெற்றுக் கொள்வதாக நாம் பெருமை பாராட்ட முடியாது (எபே. 2:8, 9; தீத்து 3:5). நாம், ''நாங்கள் செய்ய வேண்டிய கடமையை மாத்திரம்

*செய்தோம்" என்று மட்டுமே கூறுவோம் (லூக். 17:10).*

*பரலோகம் நமக்கு ஒரு சுதந்தரமாகக் கொடுக்கப்படும்.*[10] *ஒரு சுதந்திரம் என்பது ஈட்டப்படுவதல்ல; அது ஒரு ஈவு ஆகும். தேவனுடைய பிள்ளைகளே சுதந்தரவாளிகளாய் இருக்கின்றார்கள் (ரோமர் 8:16, 17; கலா. 3:6, 7, 29). தண்ணீரினாலும், ஆவியினாலும் பிறப்பதால் (யோவா. 3:5), நாம் தேவனால் பிறக்கின்றோம் (யோவா. 1:12, 13). இவ்விதமாகவே விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தினாலே நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், பரலோகத்தின் சுதந்திரராகவும் ஆகின்றோம் (கலா. 3:26, 27).*

*தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து, ஒழுக்கமற்ற வாழ்க்கை நடத்துகின்றவர்கள் (1 கொரி. 6:9, 10; கலா. 5:19-21) பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படவில்லை, அவர்கள் தீட்டானவர்களாகவே இருக்கின்றார்கள், அவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள் (வெளி. 21:27; 2 பேது. 3:13, 14). இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டவர்களே பரலோகத்தில் பிரவேசிப்பவர்களாயிருக்கின்றார்கள் (எபே. 5:25, 27; கொலோ. 1:19-22).*

## முடிவுரை

*தேவன் என்றென்றும் தண்டிப்பார் என்ற நினைவும், அவருக்கு கீழ்ப்படியாமல் இருக்கின்றவர்களின் நிலையும் மிகவும் பயங்கரமானது, ஆனால் அவரது வசனத்தில் உபதேசம் இருக்கின்றது. நீதிமான்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் போலவே, அநீதிமான்களுக்குக் கிடைக்கும் தண்டனையும் நித்தியமானதாக இருக்கும். இந்த உறுதியான விஷயமானது, நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தேவனைப் பிரியப்படுத்தத் தேடும்படிக்கு நம்மை ஊக்குவிக்க வேண்டும். நாம் பரலோகத்தில் தேவனோடு நித்தியத்திற்கும் இருப்பதை ஆதாயம் செய்து, பிசாசு மற்றும் அவன் தூதர்களின் நித்திய அக்கினியைத் தவிர்ப்போமென்றால், ஒவ்வொரு முயற்சியும், ஒவ்வொரு துன்பமும், ஊழியத்தின் ஒவ்வொரு நிமிடமும் தகுதியுள்ளதாயிருக்கும்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 320 ம் பக்கங்களில்)*

1. *சிலர், தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றுடன் நித்திய தண்டனை என்பது இணக்க முள்ளதாக இருக்க முடியாது என்று முடிவு செய்கின்றார்கள். ஏன் இந்த முடிவு தவறானதாகும்?*
2. *கீழ்ப்படியாதவர்கள் நிர்மூலமாக்கப்படுவார்கள் என்ற கண்ணோட்டமானது ஏன் தவறான உபதேசமாயிருக்கின்றது?*
3. *நரகத்தில் என்ன வகையான தண்டனை எதிர்பார்க்க முடியும்?*
4. *தண்டிக்கப்படுபவர்களைப் பற்றிப் பவுல் எவ்விதம் விளக்குகின்றார்?*
5. *நமது மாபெரும் நோக்கமாக இருக்க வேண்டியது என்ன?*
6. *பழைய பிரமாணத்தின் கீழிருந்தவர்களுக்குத் தரப்பட்டதைக் காட்டிலும், பரலோகத்திற்கான கிறிஸ்தவ நம்பிக்கை எவ்விதம் சிறந்த வாக்குத்தத்தமாக இருக்கின்றது?*
7. *"பரலோகம்" என்ற வார்த்தை எந்த மூன்று வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது?*
8. *பூமியில் நமக்குத் தேவைப்படுகின்றவைகள் பரலோகத்தில் இருக்காது என்பது ஏன்?*
9. *யாரெல்லாம் பரலோகத்திற்குச் செல்வார்கள்?*

---

[1]ரோமர் *1:18; 2:8; 3:5; 12:19;* எபே. *5:6;* கொலோ. *3:6; 2* தெச. *1:7* ஆகியவற்றைப் படிக்கவும். [2]*Ge* என்றால் "பள்ளதாக்கு" என்றும் *Hinnon* என்றால் அந்தப் பள்ளத்தாக்கின் உரிமையாளர் என்றும் பொருள்படும் இரண்டு எபிரெயச் சொற்களின் கூட்டுருவான சொல்லினுடைய கிரேக்க மொழியின் எழுத்துருவாக்கமே *gehenna* ஆகும். [3]மத். *5:22, 29, 30; 10:28; 18:9; 23:15, 33;* மாற். *9:43, 45, 47;* லூக். *12:5;* யாக். *3:6* ஆகியவற்றையும் காணவும். [4]*2* இரா. *23:10*ஐக் காணவும்; *2* நாளா. *28:3; 33:6;* எரே. *7:31, 32; 19:6* ஆகியவற்றையும் காணவும். [5]மாற். *9:43;* லூக். *3:17* ஆகியவற்றைக் காணவும். [6]"பூரண" என்ற மொழிபெயர்க்கப்பட்டுள்ள *telios* என்ற கிரேக்க வார்த்தை "பக்குவப்பட்ட" என்ற அர்த்தத்தைத் தருகின்றது. [7]யோவா. *3:36; 5:24; 6:47, 54; 1* யோவா. *5:11, 13* ஆகியவற்றைக் காணவும். [8]மத். *19:29;* மாற். *10:30;* லூக். *18:30;* யோவா. *10:28;* ரோமர் *2:7; 6:22; 1* தீமோ. *6:12.* [9]யோவா. *14:3;*

*17:24; 2 கொரி. 5:6-8; பிலி. 1:23; கொலோ. 3:4; 1 தெச. 4:17 ஆகியவற்றைக் காணவும். [10]அப். 20:32ஐக் காணவும்; 26:18; எபே. 1:11, 14, 18; 5:5; கொலோ. 1:12; 3:24; எபி. 9:15; 1 பேது. 1:4 ஆகியவைகளையும் காணவும்.*

# 19

# மனந்திரும்புதல்

*சில வேளைகளில், நமது ஆவிக்குரிய மதிப்பீடுகளைத் தீர்மானிப் பதற்கு, நாம் இருக்கும் சூழ்நிலைகளை நாம் அனுமதிக்கின்றோம். லூக்கா 16ல் ஐசுவரியவான், லாசரு ஆகியோரைப் பற்றிக் கூறும் மறக்க முடியாத ஒரு காட்சியானது, இது எவ்விதம் உண்மை என்பதை விளக்குகின்றது. ஐசுவரியவான் இந்த வாழ்க்கையில் மற்றவர்களைப் பற்றிய எண்ணமில்லாமலும், உறுதியாகவே, தனது ஆவிக்குரிய தேவைகளைப் பற்றிய எண்ணம் கூட இல்லாமலும் இருந்தான். தனது சொந்தமான சுயநல விருப்பங்கள் மற்றும் நோக்கங்களால் ஆன சிறு உலகத்துடனேயே அவனது அக்கறைகள் எல்லாம் வரையறைப் பட்டிருந்தன. மரணத்தின்போது, அவன் தனது செயல்களின் விளைவு களை எதிர்நோக்கி நித்தியத்திற்குச் சென்றான். அவன் ஆடம்பரத் திலிருந்து, ஆவிக்குரிய உலகத்தில் வேதனையுள்ள இடத்திற்குச் சென்றான். லூக். 16:23ல் இது பாதாளம் என்று அழைக்கப்படுகின்றது.*

*மரணத்திற்குப் பிறகு, அவனது முன்னுரிமைகள் முற்றிலுமாக மாறுபட்டன. மற்ற எல்லா முக்கியத்துவங்களும் மங்கின. அவனிடம் இரண்டு குறிப்பிடத்தக்க எண்ணங்கள் மேலோங்கின: முதலாவது (ஒருவேளை முதல்முறையாக) அவன் தனது ஆத்துமாவைப் பற்றிக் கவலைப்பட்டான். அவன் இரக்கம் மற்றும் கிருபைக்காக மன்றா டினான். அப்பொழுது அவன்: "தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப் பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்" (லூக். 16:24) என்று இயேசு கூறினார்.*

*இரண்டாவது, அவன் தனது சகோதரர்களின் ஆவிக்குரிய நிலை*

*பற்றிக் கவலையுடன் குரல் எழுப்பினான். இது அவன் தனது வாழ்க்கையிலே முதன் முறையாக தனது சகோதரர்களின்மேல் ஆவிக்குரிய அன்பை வார்த்தைகளில் வெளியிட்டதாக இருந்திருக்கும். சில கணங்கள் வேதனையானது அவனுடைய இருதயத்தில் ஊழிய வாஞ்சையைக் கொடுத்தது. அவன் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தான்:*

> *அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே. எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான் (லூக். 16:27, 28).*

*அவன் சகோதரர்கள், மற்ற ஒவ்வொருவரையும் போலவே நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங்களையும் படிக்க வேண்டும் என்று அவனுக்குக் கூறப்பட்டபோது, அவன், ''அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத் திற்குப் போனால், மனந்திரும்புவார்கள்'' (லூக். 16:30) என்று வேண்டுகோள் விடுத்தான். ''மனந்திரும்புதல்'' என்ற வார்த்தை அப்பொழுதுதான் முதன்முறையாக அவனால் பேசப்பட்டிருந்ததோ? மரணமானது அவனது சிந்தனைகளையும் ஆர்வங்களையும் திசை திருப்பியிருந்தது! அவனுடைய சகோதரர்களுக்கு மறுரூபமாக்கும் மனந்திரும்புதல் தேவை என்பதை அவன் அறிந்தான்!*

*வாழ்க்கையின் மிகப்பெரிய விஷயம் மனந்திரும்புதலே என்பதைக் காலமும் நித்தியமும் நமக்கு உணர்த்தும்! மரணமானது நம்மை வலிவுடன் தாக்கும் வரையிலும் நாம் இந்த உணர்வடை தலுக்குக் காத்திருக்க வேண்டாமே! இயேசு, "நீங்கள் மனந்திரும்பாற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக். 13:3, 5) என்று கூறினார். பவுல், அத்தேனே பட்டணத்தாருக்கு அறிவித்த அறிவிப்பில், மனந்திரும்பும் கட்டளைக்கு எதிராக உள்ள எல்லா ஆட்சேபனைகளையும் புறம்பே தள்ளினார்: ''அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார் இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப். 17:30). தேவனுக்கு முன்பாக, மனித*

*குலத்தில் இருப்பவர்கள் பின்வரும் இரண்டு சாலைகளில் ஏதாவ தொன்றில் பயணம் செய்கின்றார்கள்: மனந்திரும்புதலின் வழி அல்லது கலகத்தின் வழி. இயேசுவின் வருகையை தேவன் தாமதப்படுத்து வதற்கான ஒரே காரணம்-மனிதர்கள் மனந்திரும்புவதற்கு இன்னும் அதிக காலத்தை அனுமதிப்பதற்காகவே: "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமத மாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவரா யிருக்கிறார்" (2 பேது. 3:9). ஒவ்வொரு மனிதரும் மனந்திரும்பு கின்றாரா இல்லையா என்பதிலேயே அவரது நித்திய அடைவிடம் ஊசலாடுகின்றது: "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளி. 21:8).*

*புதிய ஏற்பாட்டின் மனந்திரும்புதலுக்கான அழைப்பிற்குப் பதில் கொடுத்திருக்கின்றவர்களால் அமையப் பெற்றுள்ளதே சபையாகும். கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி அநியாயத்தை விட்டு விலகியிருக்கின்றவர்கள் ஆவார்கள் (2 தீமோ. 2:19). கிறிஸ்துவுக்குள் மனம் மாறியதன் மூலம் அவர்கள் இருளின் அதிகாரத் தினின்று விடுதலையாகி, தேவனுடைய குமாரனின் இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் (கொலோ. 1:13). அவர்கள் தேவனு டைய பிள்ளைகளாக வாழ்வதற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து, அறியாமை மற்றும் கீழ்ப்படியாமையில் முன்பு வாழ்ந்திருந்த இச்சைகளுக்குத் திரும்பிப் போக மறுக்கின்றார்கள் (1 பேது. 1:14). தங்களை அழைத்தவரைப் போல் இருப்பதே அவர்களின் விருப்பமா யிருக்கின்றது. தங்களின் எல்லா நடக்கைகளிலும் அவரைப் போலிருப் பதற்கு அவர்கள் கடும் முயற்சியை மேற்கொண்டு, கர்த்தருடைய விருப்பத்தைத் தங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் ஒப்புக் கொண்டு இருக்கின்றார்கள்: "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள்" (1 பேது. 1:16).*

*ஆகையால், கிறிஸ்தவராயிருப்பதற்கு, கர்த்தரின் சபையில் உறுப்பினராயிருப்பதற்கு முயற்சிக்கின்ற எவரொருவருக்கும், மனந்திரும்புதல் என்பது மூலைக்கல் போன்ற வார்த்தையாகவும், பிரதான நடக்கையாகவும் இருக்கின்றது. இந்த வார்த்தையின்*

அடிப்படை அர்த்தம் மற்றும் மறைமுகமான அர்த்தம் ஆகியவற்றில் சபையின் இயல்பு பிரதிபலிக்கின்றது. தேவன் தமது சபைக்கு அழைக்கும் மக்களின் விசேஷத் தகுதியாக மனந்திரும்புதல் விளங்குகின்றது: சபையானது, மனந்திரும்புகின்றவர்களைக் கொண்டதாக இருக்கின்றது. கொர்நேலியுவின் வீட்டில் புறஜாதியார் ஞானஸ்நானப்படுத்தப்பட்டதைப் பற்றி எருசலேமில் யூத கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு விளக்கமளித்தபோது, யூத சகோதரர்கள், "அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார்" (அப். 11:18) என்று பதில் கூறினார்கள். உண்மையான ஜீவனின் கதவானது, உண்மையாக மனந்திரும்புகின்றதினாலேயே திறக்கப்படுகின்றது என்பது அவர்களுக்குத் தெளிவாய் இருந்தது, நமக்கும் இது தெளிவாய் இருக்க வேண்டும்.

மனந்திரும்புதல் என்றால் என்ன? அது என்ன, அது எதை அர்த்தப்படுத்துகின்றது என்பது பற்றி தவறு எதுவும் இல்லாதபடிக்கு இந்த வார்த்தையை இன்னும் சற்று விளக்கமாக வர்ணிப்போம். இதை விளக்கப்படுத்துவதற்கு நாம் சவுலின் மனமாற்றப் பின்னணியைப் பயன்படுத்துவோம்.

## பாவத்திலிருந்து திரும்புதல்

முதலாவதாக, மனந்திரும்புதல் என்பது பாவத்திலிருந்து திரும்பி, துன்மார்க்கத்திலிருந்து திசை மாறுவதாக இருக்கின்றது.

மனந்திரும்புதல் என்பது, தனிப்பட்ட முன்னேற்றத்தைக் காட்டிலும் மேலானதாக, ஒருவர் தமது வாழ்க்கையைக் கட்டுப் பாட்டுடன் கொண்டு செல்வதைக் காட்டிலும் மேலானதாக இருக்கின்றது. தேவனுக்குப் புறம்பாயிருக்கின்ற எல்லாவற்றையும் கை விடுவதற்கான ஆழமான ஒரு முடிவாக இது இருக்கின்றது. இந்த முடிவே, புதிய பிறப்பு (யோவா. 3:3) என்று இயேசு அழைக்கும் செய லுக்கு மாறுபாடுகளைப் பங்களிப்பதாக இருக்கின்றது.

மனந்திரும்புதல் என்பது, ஒருவர் தாம் செய்துள்ள பாவங் களுக்காக வருந்துவது மட்டுமல்ல. பாவமானது ஒருவரைச் சங்கடத்தில் ஆழ்த்தும்போது அல்லது பாவத்திற்காக ஒரு தண்டத்தைச் செலுத்தும் போது ஒருவர் வருத்தப்படக் கூடும். யூதாஸ் தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக வருந்தினான், ஆனால் அவன்

மனந்திரும்பவில்லை (மத். 27:3). கிறிஸ்துவை மறுதலித்த பேதுரு (மத். 26:34, 69-75) மனந்திரும்பினார்; யூதாஸ் வெறுமனே மனஸ்தாபப் பட்டான். ஒருவர் தாம் பாவம் செய்து விட்டதாக ஆழ்ந்து வருத்தப்பட்டும், மனந்திரும்பாமலே போகக் கூடும்.

மனந்திரும்புதல் என்பது பாவத்தை உணருதல் மட்டுமல்ல. பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு, தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்த யூதர்களின் பாவங்களைச் சுட்டிக் காட்டினார். அவரது வார்த்தைகள் அவர்களுடைய இருதயங்களுக்கு உணர்த்துதலைக் கொண்டு வந்தது, அவர்கள் “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” (அப். 2:37) என்று கதறினார்கள். ஆயினும், அவர்களின் உணர்த்தலைப் பேதுரு மனந்திரும்புதல் என்று கருதவில்லை; ஏனென்றால் அவர்களின் கேள்விக்கான தமது பதிலில் பேதுரு, “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” (அப். 2:38) என்று கூறினார்.

மனந்திரும்புதல் என்பது தேவனுக்கேற்ற துக்கம் மட்டுமல்ல. பாவங்களுக்காக, தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலுக்கு முன்னானதாகவும், மனந்திரும்புதலை உண்டாக்குவதாகவும் இருக்கின்றது. பவுல்,

> தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது (2 கொரி. 7:10) என்று எழுதினார்.

தேவனுக்கேற்ற துக்கம் என்பது மனந்திரும்பும் செயல் முறையின் ஒரு பாகமாக இருக்கின்றதே தவிர, அதுவே மனந்திரும்புதலாகி விடாது.

வாழ்க்கையின் ஒரு மறுசீரமைப்பே மனந்திரும்புதல் என்று கூட விளக்கப்படுத்த முடியாது. மாறாக மனந்திரும்புதலானது வாழ்க்கை யில் ஒரு மறுசீரமைப்பை உண்டாக்குவதாக இருக்கின்றது. மனந் திரும்புதலானது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை விளைவிக்கவில்லை யென்றால், அது உண்மையான மனந்திரும்புதலாகி விடாது. யோவான்ஸ்நானன் தன்னிடத்தில் வந்த மக்களை, “மனந்திரும்புதலுக் கேற்ற கனிகளைக் கொடுங்கள்” (மத். 3:8) என்று வற்புறுத்தினார். உண்மையான மனந்திரும்புதல் என்பது மனந்திரும்புதலுக்கேற்ற கனி

*களுக்கு, ஒரு மாறுதலுள்ள வாழ்வுக்கு முந்தியதாக இருக்கின்றது.*

*மனந்திரும்புதல் என்பது பாவத்தைப் பற்றிய ஒருவரது சித்தத்தில் செய்யப்பட வேண்டிய தீர்மானமுள்ள ஒரு மாற்றமாகும். இது அறிவுடைமை, உணர்வுகள் மற்றும் மனசாட்சி ஆகியவை ஈடுபடக் கூடியதாகும். பாவத்தைப் பற்றிய இந்த மனநிலையானது ஒரு நபர், தாம் வாழும் வழிகளை விட்டுவிடக் கூடிய வகையில் மனித ஆளுமைத் தன்மையில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஞானஸ்நானத்தில், ஒருவர் தமது பாவத்திற்கென்று மரித்து மூழ்கடிக்கப்பட்டு, தனது பழைய சுபாவத்தைச் சிலுவையிலறைந்து, அவரது பாவ சரீரமானது அழிக்கப்படும்படியாகச் செய்ய முடியும் (ரோமர் 6:6).*

*மனந்திரும்புதலின் இந்த அர்த்தமானது சவுலின் மனமாற்றத்தில் காணப்பட முடியும். தர்சுப் பட்டணத்தானாகிய சவுல் ஒரு பரிசேயராகவும், எபிரெயரில் பிறந்த ஒரு எபிரெயராகவும் இருந்தார் (பிலி. 3:5), அவர் மோசேயின் பிரமாணத்தின்படிக் குற்றஞ் சாட்டப் படாதவராயிருந்தார் (பிலி. 3:6). வேறு வார்த்தைகளில் சொல்லு வதென்றால், அவர் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறி விட்டதாக அவருக்கெதிராகச் சட்ட ரீதியான குற்றச்சாட்டெதுவும் கொண்டு வரப்பட முடியாதிருந்தது. பரிசேயர்-யூத மார்க்கத்திலேயே மிக உயர்ந்த நிலையில் இருந்த யூதர் - என்ற வகையில், சவுல், இயேசு ஒரு எத்தர் என்றும், யூத மார்க்கத்தை அழிக்க விரும்பினார் என்றும் நம்பினார். சவுல், இந்த இயேசுவை அழிக்கும் உபத்திரவத்துடனான கடுஞ்சினத்துடன் எதிர்க்க வேண்டும் என்று நினைத்தார். இயேசுவைப் பின்பற்றியவர்கள் எவரொருவரையும், சவுல் சந்தேகத்திற்கிடமின்றி தமது எதிரி என்றே கருதினார். மனமிரக்கமற்ற வலிமையுடனும், தீவிரமான தீர்மானத்துடனும் அவர், கிறிஸ்துவின் சபையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரச் செயல்பட்டார்.*

*சபையைத் துன்பப்படுத்துவதில் அவர் முனைப்புடன் செயல் பட்டுக் கொண்டிருந்தபோது, பிரதான ஆசாரியரின் ஆதரவை நாடினார் (அப். 9:1, 2). அவர் விரும்பியபடியான அதிகாரம் கிடைத்தபோது, தனது திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தமஸ்குப் பட்டணம் நோக்கிச் சென்றார். அவர் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில், மத்தியான வேளையிலே, சூரிய வெளிச்சத்தைக் காட்டிலும் பிரகாசமான ஒளியிலே, கர்த்தராகிய இயேசு அவருக்குத் தரிசனமானார். கர்த்தருடைய பிரசன்னத்தின் வெளிச்சத்தினால்*

கண்களை இழந்த சவுல், தரையில் விழுந்தார். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவருடன் பேசுகின்றார் என்ற சத்தியத்தைப் பூமியை அசைக்கும் உறுதிப்பாடுடன் அவர் உணர்ந்துபோது, ஆழ்ந்த மனவருத்தம் மற்றும் பச்சாதாபத்துடன் சவுல், "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 22:10) என்று கேட்டார். அவர் தமஸ்குவுக்குச் செல்லும்படியும், என்ன செய்ய வேண்டும் என்பது அங்கு அவருக்குச் சொல்லப்படும் என்றும் கூறப்பட்டது (அப். 9:6). அவர் அங்கு சென்ற பொழுது அனனியா வினால் பதிலானது கொண்டு வரப்படும் வரையிலும் மூன்று நாட்கள் உபவாசித்து, ஜெபம் செய்து கொண்டு காத்திருந்தார்.

சவுல் மனந்திரும்பினார். அவர் தமது வாழ்க்கையின் வழிமுறைபற்றிய தமது சித்தத்தில் தீர்மானமுள்ள ஒரு மாற்றத்தை மேற்கொண்டார். அவரது வாழ்க்கையானது யூத மார்க்கத்திற்கும், கிறிஸ்துவின் சபையாரை உபத்திரவப்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப் பட்டிருந்தது; தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் அவர் மனந் திரும்பிய போது, அவரது வாழ்வானது முற்றிலும் புதிய திசை யொன்றை நோக்கியது. அவர் தமது பழைய வாழ்விலிருந்து மாறி தமது ஆளுமைத் தன்மை, அறிவுடைமை, உணர்வுகள், மற்றும் மனசாட்சி ஆகியவற்றில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படுத்தும் சித்தமுடைய வரானார். பின்னாளில் அவர், "எனக்கு லாபமாயிருந்தவைகளெவை களோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" (பிலி. 3:7) என்று கூறினார்.

சவுலைப் போன்றே, கிறிஸ்தவர்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பியவர்களாய் இருக்கின்றார்கள். தேவனுடைய மக்களின் வாழ்க்கை முறையானது பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றை யும் விட்டு விலகுவதாக இருக்கின்றது (1 தெச. 5:22), அது பிரபஞ்சத் திற்கு ஒத்த வேஷம் தரியாததாக (ரோமர் 12:2), தீமையை நன்மையினாலே வெல்லுகிறதாக (ரோமர் 12:21) மற்றும் நல்நடக்கையினாலே தங்களுக்கெதிராக எழுப்பப்படும் எல்லா விதமான பொய்க் குற்றச்சாட்டுகளையும் அமைதிப்படுத்துவதாக (1 பேது. 2:12) இருக்கின்றது.

## பாவத்திலிருந்து கிறிஸ்துவிடம் திரும்புதல்

இரண்டாவதாக, மனந்திரும்புதல் என்பது கிறிஸ்துவிடம் திரும்புவதாக இருக்கின்றது. இது தீமைக்கெதிரான பதில்செயலாக

மட்டும் இருந்துவிடாமல், கிறிஸ்துவுக்கு நேர்மறையான பதில்செயலாகவும் இருக்கின்றது.

தெசலோனிக்கேயர்கள் "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதால்" *(1 தெச. 1:9)* பவுல் அவர்களைப் பாராட்டினார். ஒருவர் பாவத்திலிருந்து மனந்திரும்பியிருந்தாலும், அவர் தேவனிடத்திற்குத் திரும்பாதவராயிருந்தால், புதிய ஏற்பாட்டில் இந்தச் சொற்றொடருக்குத் தரப்படும் முழுமையான விளக்கத்தின்படி, அவர் மனந்திரும்பாதவராகவே இருக்கின்றார்.

புதிய ஏற்பாடானது அதன் போதனையில் கிறிஸ்துவை உயர்த்துவதையே முக்கியமான கருத்தாகக் கொண்டுள்ளது. ஏவப்பட்ட எல்லா மனிதர்களும் இதே வகையாகவே பிரசங்கித்தார்கள் என்பதற்கு சமாரியாவில் பிலிப்புவின் பிரசங்கத்தைப் பற்றிய லூக்காவின் விளக்கம் ஒரு எடுத்துக்காட்டாகவே இருக்கின்றது: "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்" *(அப். 8:5)*. இவ்வகையான பிரசங்கத்திற்கு பதில்செயல் செய்யும் மக்கள் தங்கள் பாவங்களைக் கைவிட்டு விட்டு, சுவிசேஷச் செய்திக்கு இணங்குவதன் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். எபேசுவில் பவுல் பிரசங்கித்த பிறகு, மனந்திரும்புதலின் இவ்விரண்டு பகுதிகளும் வெளிப்படையாய்க் காணப்பட்டன.

> *அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காரராயிருந்த அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்குமுன்பாகச் சுட்டெரித்தார்கள் (அப். 19:17ஆ-19அ).*

என்று லூக்கா, கூறினார். மனந்திரும்பிய எபேசியர்கள் கிறிஸ்துவை ஒப்புக் கொண்டு, தங்கள் பாவச் செயல்களைக் கைவிட்டார்கள்.

சவுலின் மனந்திரும்புதலானது பாவத்திலிருந்து திரும்புவதாகவும், கிறிஸ்துவை நோக்கித் திரும்புவதாகவும் இருந்தது. அவர் தமஸ்குவை நோக்கிப் பயணம் செல்லுகையில், கிறிஸ்தவர்களைத் துன்புறத்தும் வழியில் இருந்தார். மோசேயின் பிரமாணத்தின் கீழ் இருந்த அவர்

ஒழுக்க ரீதியான மற்றும் சடங்காச்சார ரீதியான குற்றங்களிலிருந்து விடுதலையானவராகவே இருந்தார். எந்த வகையிலும் அவர் துன்மார்க்கமான ஊதாரியைப் போலிருந்ததில்லை. ஆகவே அவரது மனந்திரும்புதலானது, தேவனைப் பிரியப்படுத்துவதற்கான அவரது முக்கிய விருப்பத்தை எந்த வகையிலும் பாதிக்கவில்லை; அவர் தம் இளவயதிலிருந்தே இந்த விருப்பத்தால் உந்தப்பட்டவராகவும், மோசேயின் பிரமாணத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியவராகவும் இருந்தார். ஆயினும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது என்ற அவரது செயல் பயங்கரமான பாவமாயிருந்தது. தொடர்ந்து, தேவனுக்கு முன்பாக அவர் மனந்திரும்பியதானது, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, கிறிஸ்துவைக் கண்டனம் செய்வதே தேவனுக்கு உகுந்த ஊழியம் என்ற அவரது முந்தைய நம்பிக்கையைப் புறக்கணித்தல் என்ற விளைவை ஏற்படுத்தியது. அதோடு கூட, கிறிஸ்துவினிடத்திற்குத் திரும்புதலும், அவருடைய சித்தத்திற்குத் தாழ்மையுடன் அடிபணிவதும், அவரைக் கர்த்தர் என்று ஒப்புக் கொள்வதும் தேவையாயிருந்தது.

பவுல் தமது மனந்திரும்புதலைப் பற்றிப் பிலி. 3:8-11ல் தாமே கீழ்க் கண்டவாறு விளக்கப்படுத்தினார்:

> ...என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிர மாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிற வனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை யையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரி லிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.

*ஆகையால், சவுல் பாவத்திலிருந்து கிறிஸ்துவிடம் திரும்பினார். மனந்திரும்புதல் என்பது அவரைப் பொறுத்தமட்டில் எதிர் மறையானதாகவும், நேர்மறையானதாகவும் இருந்தது, ஜீவனுக்கான முந்தைய வழியிலிருந்து திரும்பி, கிறிஸ்துவுக்குள் சிறந்த புதிய ஜீவனை நோக்கித் திரும்புவதாயிருந்தது.*

*மனம் வருந்திய மக்களைக் கொண்ட கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்த வாழ்க்கை வாழ்கின்றது. அதன் உறுப்பினர்கள் கிறிஸ்துவோடு ஒன்றாகின்றார்கள். மனந்திரும்புதலின் மூலமாகக் கிறிஸ்தவர், பரிசுத்தமும் நீதியுமுள்ள ஒரு வாழ்விற்குள் பிரவேசித்திருக்கின்றார். அவர் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றார், அவருடைய மனந்திரும்புதலின் விளைவாகப் புதிய ஜீவன் உண்டாயிருக்கின்றது, அவர் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கின்றார் (கலா. 2:20). மனம் வருந்திய வகையில் தேவனுடைய மக்களான கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொண்டு, கிறிஸ்துவோடு ஒருமைப்பாட்டில் வாழ்ந்து, ஆராதனையில் கிறிஸ்துவை உயர்த்தி, மரணத்தில் அல்லது அவரது மறுவருகையில் அவருடன் இன்னும் முழுமையாக இணைவதை எதிர்பார்த்து நீதியில் நிலைநிற்கப் பிரயாசப்படுகின்றார்கள்.*

## பாவத்திலிருந்து ஜீவனுக்காகக் கிறிஸ்துவினிடத்தில் திரும்புதல்

*மூன்றாவதாக, மனந்திரும்புதல் என்பது, பாவத்திலிருந்து ஜீவனுக்காகக் கிறிஸ்துவினிடத்தில் திரும்புவதாய் இருக்கின்றது. இயேசு எவரொருவரையும் மார்க்கரீதியாக சற்று காலம் இருப்பதற்கோ அல்லது துன்மார்க்கத்தில் இருந்து ஒரு குறுகிய காலம் ஓய்ந்திருப்பதற்கோ அழைப்பதில்லை. அவர் முழுமையான ஒப்புக் கொடுத்தலைக் கேட்டார், அதை அவர் தண்ணீரிலும் ஆவியிலும் பிறத்தல் என்றும், மேலிருந்து வரும் பிறப்பு என்றும் குறிப்பிட்டார் (யோவா. 3:5). பவுல் இதனை ஆவிக்குரிய விருத்தசேதனம் என்று ஒப்பிட்டுக் கூறுமளவுக்கு இந்த மறுரூபமானது முற்றானதாகவும், நீடித்ததாகவும் இருக்கின்றது, இது தேவனுடைய கிரியையினால் மாம்ச இச்சைகளை முற்றிலும் நீக்கி விடுதலாக இருக்கின்றது:*

> அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்திற்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள் (கொலோ. 2:11).

மனமாற்றம் என்பது, அருவருப்பான, அழுக்கான, கிழிந்து போன ஆடைகளை மறுபடியும் பயன்படுத்துகின்ற எண்ணமேயில்லாமல் ஒருவர் புறம்பே வீசிவிடுவதைப் போல, பழைய சுபாவத்தைப் புறம்பே தள்ளி விட்டு, புதிய சுபாவத்தை அணிந்து கொள்ளுதலாகும் என்று பவுல் கூறினார் (எபே. 4:24; கொலோ. 3:10).தேவன் நம்மைப் பாவம் மற்றும் மரணத்திலிருந்து தூக்கியெடுத்து, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டபோது நமக்கு கிறிஸ்துவுக்குள் ஜீவனைக் கொடுக்கின்றார் (கொலோ. 2:13).

மனந்திரும்புதல் என்பது தொடர்ந்த ஒப்புக் கொடுத்தலை உள்ளடக்கியதாயிருக்கின்றது. தேவனுக்கான நமது பதில்செயலில், சரீரத்தில் கிரியைகளை நாம் மரணமடையச் செய்ய வேண்டியதா யிருக்கின்றது. அது முதல், கிறிஸ்தவர்களாயிருக்கின்ற நாம் அந்தக் கிரியைகள் மறுபடியும் மேற்கொள்ளப்படாமல் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பவுல், ''ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவை களைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள்" (கொலோ. 3:5) என்று கூறினார். மேலும் அவர்,

> இப்பொழுதோ, கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு (கொலோ. 3:8, 9).

என்றும் கூறினார். பவுல் ஒரே சமயத்தில் ஒரு விஷயத்தைப் புறம்பே தள்ளுவதை, மரணத்தின் கருத்தை மற்றும் தொடர்ந்து புறம்பே தள்ளிக் கொண்டிருப்பதை, ஒரு தொடர்ச்சியான மனந்திரும்புதலைப் பற்றி எழுதினார்.

சவுலின் மனமாற்றத்தில் காண்பதைக் காட்டிலும் அதிக விளக்கமுள்ள விவரிப்பை நாம் வேறு எதில் காண முடியும்? "தேவன்

தம்மிடத்தில் முழுமையாய் மனமாறியவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை நாம் இன்னும் கண்டிருக்கவில்லை" என்று யாரோ ஒருவர் கூறினார். நாம் அதைக் கண்டிருக்கவில்லையென்றாலும், சவுலின் வாழ்க்கையில் அதற்கு நெருங்கிய நிலைக்கு நாம் வந்திருக் கின்றோம். சவுலின் மனமாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட நல்ல முடிவானது இந்த உலகில் இரண்டாயிரம் ஆண்டுகளாக உணரப் பட்டிருக்கின்றது. கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்ற அவரது முடிவானது இறுதியானதாகவும் மாற்றப்பட முடியாததாகவும் இருந்தது. அவர் தமது வாழ்வைச் சிலுவையினடியில் வைத்து, கிறிஸ்து அவ்வாழ்வில் செய்ய முடியும் ஊழியத்திற்கும் நன்மைக்கும் தம்மை ஒப்புக் கொடுத்தார்.

மகா அலெக்சாண்டர் ஒரு மாபெரும் யுத்தத்திற்காகத் தனது படைகளைக் கடற்கரையருகில் கொண்டுவந்த போது, தாங்கள் வந்திறங்கிய கப்பல்களை உடனே தீக்கிரையாக்கும்படி கட்டளை யிட்டதாகக் கூறப்படுகின்றது. பின்வாங்குவதற்கான சாத்தியக் கூறு எதுவும் இருக்கக் கூடாது என்பதில் அலெக்சாண்டர் மிகவும் கவனமா யிருந்தார். அவரும் அவருடைய மனிதர்களும் திரும்பிப் போகக் கூடாதிருந்தது. அவர்களின் எதிர்காலம் யாவும் அவர்களுக்குப் பின்னால் அல்ல, அவர்களுக்கு முன்னாலேயே இருந்தது. சவுலுக்கும் இது போலவே இருந்தது. பின்வாங்குவதற்கான வாய்ப்புக்கள் அல்லது சாத்தியக் கூறுகள் எதையும் அவர் தமது இருதயத்தில் இடமளிக்க வில்லை.

தேவனுடைய மக்களான சபையானது, ஒரு ஒப்புக்கொடுத்தலை மேற்கொண்டுள்ளது-மறுரூபமாகுதல், மரணத்திலிருந்து ஜீவனுக்குத் திரும்புதல் என்று பெயரிடுமளவுக்கு அது பலமுள்ளதாயிருக்கின்றது (1 யோவா. 3:14). அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஜீவனுக்கென்று புதிய மனிதனைத் தரித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது ஒரே சமயத்தில், கிறிஸ்துவுக்கென்று மனமாறுகையில் நடப்பதாகும், ஆனால் இருதயத்தை சுத்திகரிப்பது என்பது அவர்களுக்குத் தொடர்ந்து நிறைவேற்றும் கடமையாக இருக்கின்றது (ரோமர் 6:2). பழைய மனிதன் மரணத்திற்குள்ளாக்கப் பட்டிருக்கின்றான், ஆனால் அவன் உயிர்த்தெழுவதற்கு வாய்ப்பு எதுவும் கொடுக்கப்பட்டால் அவன் மறுபடியும் உயிரோடு வருவதற்கு முயற்சி செய்வான் (ரோமர் 6:12, 13). கிறிஸ்தவர் மதியீனமாக நடந்து கொள்ளாமல் ஞானத்தோடு நடந்து கொள்வதற்கு மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

*(எபே. 5:17). அவர், கனியற்ற அந்தக்காரக் கிரியைகளுக்கு உடன் படாமல், அவைகளைக் கடிந்து கொள்ள வேண்டும் (எபே. 5:11). அவர் மரித்திருக்கிறார், அவரது ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோ. 3:3). கிறிஸ்தவர் தம்மை மரித்தோ ரிலிருந்து பிழைத்திருக்கிறவராக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, தமது சரீரத்தை நீதிக்கென்று ஒப்புக்கொடுக்கின்றார் (ரோமர் 6:13).*

## முடிவுரை

*தேவனுக்கு முன்பாகக் கணக்கொப்புவிக்க வேண்டியவர்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி, மனந்திரும்புதலுக்கேற்ற வாழ்க்கை வாழ வேண்டியுள்ளது. மனந்திரும்புதல் என்பது சித்தத்தில் ஏற்படும் ஆழ்ந்த மாற்றமாக, பாவத்திலிருந்து ஜீவனுக்காகக் கிறிஸ்துவிடம் திரும்புவதாக இருக்கின்றது. அது பாவத்தை உணருதல், தேவனுக் கேற்ற துக்கம் மற்றும் தேவனுடைய நற்தன்மை ஆகியவற்றால் கொண்டு வரப்படுவதாக இருக்கின்றது. இது மறுரூபமாகி, கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கும் ஜீவனையுடைய ஒரு புதிய மனுஷனாவதைக் கொண்டு வருகின்றது.*

*சபை என்பது இவ்விதமான புதிய மனிதர்களின் சமுதாயமாக இருக்கின்றது. அவர்கள் முழு நிறைவானவர்களல்ல, ஆனால் பரிசுத்தம், தேவபக்தி மற்றும் நீதி ஆகியவற்றில் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள் ஆவார்கள். கர்த்தருடைய ஊழியத்தில் கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பதே அவர்களின் வாழ்வு முழுவதிற்கு மான உறுதிப்பாடாக இருக்கின்றது.*

*மனந்திரும்புதலுக்காகத் தரப்படும் மூன்று ஊக்குவிப்புகளை வேதவசனங்களில் சுலபமாக அடையாளப்படுத்த முடியும். முதலா வது, தேவ தயவுதான் மனந்திரும்புதலுக்கு வழி நடத்துகின்றது என்று பவுல் கூறினார்: "அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ?" (ரோமர் 2:4). இரண்டாவது, வெகுமதியின் வாக்குத்தத்தத்தைப் பேதுரு குறிப்பிட்டார்: "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத் திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப் பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு*

*நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" (அப். 3:19, 20). மூன்றாவது, தண்டனையின் பயங்கரம் பற்றி யோவான் குறிப்பிட்டார்:*

> *அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந் தரத்தில் வந்து: "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கின்றது என்று பிரசங்கம் பண்ணினான் ... இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (மத். 3:1-10).*

*மனந்திரும்புதல் மட்டுமே தேவனைப் பிரியப்படுத்துவதாய் இல்லாமல், மனந்திரும்புதலானது நமக்குள் கீழ்ப்படிதலின் ஆவியை உண்டாக்குகின்றது. இப்படிப் பட்ட ஒரு ஆவியானது கிறிஸ்துவுக்குள் வருவதற்குத் தேவன் நியமித்துள்ள கட்டளைகள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படியும்படி நம்மை வற்புறுத்துகின்றது. இது ஒருவரது வாழ்க்கையைத் தேவனுடைய சித்தத்தை நோக்கித் திறந்து வைக்கின்றது.*

*பிரதான கட்டளையானது நமது இரட்சகரின் கடைசி வார்த்தைகளல்ல, மாறாக ஆசியாவின் ஏழு சபைகளை மனந்திரும்பும்படி அழைத்த அவரது அழைப்பே அவரின் கடைசி வார்த்தைகளாகும் என்று கூறப்படுகின்றது (வெளி. 1-3). நீங்கள் இன்னமும் மனந்திரும்பி, வருந்துகின்ற மக்களாகத் தேவனிடம் வரவில்லையென்றால், அதைக்காட்டிலும் பெரிய தேவை வேறெதுவும் உங்களுக்கு இல்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால், கிறிஸ்துவுக்குள் புதிய நபர் என்ற வகையில், நீங்கள் மேற்கொண்ட உறுதிப்பாட்டின்படியாகவே வாழ வேண்டியது உங்கள் கடமையாகும்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 322 ம் பக்கங்களில்)*

1. *ஐசுவரியவானின் சிந்தனையை மரணமானது எவ்விதம் மாற்றியது?*
2. *கிறிஸ்தவர்களாகும்படி விரும்பித் தேடும் யாவருக்கும் "மனந்திரும்புதல்" என்பது மூலைக்கல் போன்ற வார்த்தையாகவும், பிரதான நடக்கையாகவும் இருப்பது ஏன்?*

3. *ஒருவர் தாம் பாவம் செய்ததாக வருந்துவதைக் காட்டிலும், மனந்திரும்புதல் என்பது மேலானது ஏன்?*
4. *மனந்திரும்புதலானது,தேவனுக்கேற்ற துக்கம் மட்டுமே அல்ல என்பது ஏனென்று விளக்கவும்.*
5. *சவுலின் மனமாற்றத்தில் மனந்திரும்புதல் எவ்விதம் காணப்படுகின்றது?*
6. *பவுல் தெசலோனிக்கேயரைப் பாராட்டியது ஏன்?*
7. *பாவத்தை அறிக்கையிடுதலைக் காட்டிலும் மனந்திரும்புதல் மேலானது, ஏன்?*
8. *வேதவசனத்தில், மனந்திரும்புதலுக்கான மூன்று ஊக்குவிப்புகள் யாவை?*

## வேதாகமத்தை மேலும் படிப்பதற்கு ஒரு வழிகாட்டி

***யார் மனந்திரும்ப வேண்டும்?*** *- 2 பேது. 3:9; அப். 17:30, 31; லூக். 13:3.*

***மனந்திரும்புதலுக்கான புதிய ஏற்பாட்டின் எடுத்துக்காட்டுகள்*** *- ஊதாரி மகன் (லூக். 15:11-24); சகேயு (லூக். 19:2-8).*

***மனந்திரும்புதலின் கிரயம்*** *- மத். 10:34-39; லூக். 12:51-53.*

***மனமாற்றத்தின் எடுத்துக்காட்டுகள்*** *- அப். 2:36-47; 8:5, 6, 12, 18-22, 26-39; 9:1-18; 10:1-48; 16:13-15, 25-34; 19:1-5.*

***கிறிஸ்தவச் செல்வாக்கு*** *- மத். 5:13-16; 1 கொரி. 15:33.*

***எல்லா மக்களுக்காகவும் இயேசு தமது இரத்தத்தைச் சிந்தினார்*** *- கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கு இரட்சிப்பானது அளிக்கப்படுகின்றது (எபி. 9:11-14); காளைகள், வெள்ளாட்டுக்கடாக்கள் இவைகளின் இரத்தமானது பாவங்களை நிவிர்த்தி செய்யப் போதுமானவையா யிருக்கவில்லை (எபி. 10:4); அவருடைய இரத்தமே நம்மை மீட்டிருக் கின்றது (1 பேது. 1:18, 19); இயேசுவானவர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் (எபி. 2:9).*

***நாம் சிலுவையைப் பார்க்கும்போது பின்வருவனவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றோம்*** - *நமக்கு ஒரு இரட்சகர் தேவை (ரோமர் 3:23, 24; 5:12) தேவன் நம்மில் எவ்வளவாய் அன்பு கூர்ந்தார் (யோவா. 3:16); மக்கள் பாவிகளாகயிருந்த போதிலும் கிறிஸ்து அவர்களில் அன்பு கூருகிறார் (ரோமர் 5:8, 9); இரட்சிப்பானது தேவனிடத்திலிருந்து வந்த ஈவாக இருக்கின்றது (எபே. 2:8-10).*

***இயேசுவின் சிலுவை மரணமானது, ஞானஸ்நானத்தின் மூலம் நாம் அவரது இரத்தத்தைச் சந்திக்கும்போது நம்மை இரட்சிக்கின்றது*** - *நாம் ஞானஸ்நானத்திலே அவரோடு கூட அடக்கம் பண்ணப்படுகின்றோம் (ரோமர் 6:3, 4); ஞானஸ்நானம் இரட்சிக்கின்றது (1 பேது. 3:21).*

***நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த பிறகு எவ்விதத்தில் ஒரு கிறிஸ்தவராக வாழ முடியும்?***

1. *ஆவிக்குரிய வளர்ச்சியில் மாபெரும் உறுதிப்பாட்டுடன் இருத்தல். வளருவதற்கான ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்ளுதல் (2 பேது. 1:1-10). வளரத் திட்டமிடுதல் (பிலி. 3:7-15).*
2. *வேதாகமத்தைப் படித்தல்-வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதித்தல் (2 தீமோ. 2:15). அறிவில் வளருதல் (2 பேது. 3:18). வேதவசனங்களை அன்றாடம் படித்தல் (அப். 17:11). வசனத்தைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிதல் (யாக். 1:21-25).*
3. *உங்கள் வாழ்வில் கிறிஸ்தவ கிருபைகளைக் கூட்டி வழங்குதல். விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகியவற்றைக் கூட்டி வழங்குதல் (2 பேது. 1:5-7).*
4. *ஜெபிப்பதை ஒழுங்கான வழக்கமாக்கிக் கொள்ளுதல். ஞானத்திற்காக ஜெபித்தல் (யாக். 1:5, 6). இடைவிடாமல் ஜெபித்தல் (1 தெச. 5:17).*
5. *ஆராதிப்பதை (முடிந்தால் மற்ற கிறிஸ்தவர்களுடன் இணைந்து ஆராதிப்பதை) ஒழுங்கான வழக்கமாக்கிக் கொள்ளுதல். சபை கூடிவருதலை விட்டுவிடாதிருத்தல் (எபி. 10:25). உங்கள் பகுதியில் சபையில்லையென்றால், நீங்கள் உங்கள்*

வீட்டிலேயே சபையொன்றைத் தொடங்கலாம். ஆவியிலும் உண்மையிலும் தொழுது கொள்ளுதல் (யோவா. 4:24).

6. *இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குக் கூறுதல்.* உங்களால் முடிந்த அளவு ஒவ்வொருவரிடத்திலும் போதியுங்கள் (மத். 28:18-20; மாற். 16:15, 16). இந்தப் புத்தகத்தை உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டு, அவர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு உதவுங்கள்.
7. *நற்செயல்கள் செய்தல்.* இயேசுவால் இரட்சிக்கப்பட்டவர்கள் நற்செயல்கள் செய்வதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றார்கள் (எபே. 2:10).

# 20

# இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?

*இவ்வுலகமானது பெரியதாகவும், பல பாகங்களை உடையதாகவும் இருந்தாலும், தெய்வீக வசனங்களின்படி, இது நித்தியத்தில் நாம் வாழப் போகின்ற வாழ்வுக்கு நம்மை ஆயத்தம் செய்துகொள்ளும் இடமாகவே உள்ளது. ஆகவே, இங்கு வாழ்வது என்பது ஒரு சுருக்கமான ஆரம்பமாகவே உள்ளது. ஒவ்வொரு மனிதரும் ஒரு உயிருள்ள ஆத்துமாவாக இருக்கிறார், அவர் இவ்வுலகத்திற்கு அப்பால் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ என்றென்றும் வாழ்வதற்குச் சென்றடைய வேண்டியவராய் இருக்கிறார். நமக்கு என்றென்றைக்குமான ஒரு வாழ்வு அல்லது என்றென்றைக்குமான ஒரு அழிவு உண்டென்று புதிய ஏற்பாடு விளக்குகின்றது (மத். 25:46). இனிவரும் வாழ்வில் நித்திய ஜீவனுக்கும் நித்திய மரணத்துக்கும் இடையில் தங்குவதற்கென்று நமக்கு இடம் ஒன்றும் இல்லை. மரணத்தின்போது அல்லது இயேசுவின் மறுவருகையின்போது நமது அடைவிடமானது என்றென்றைக்குமாக முத்திரையிடப்படுகின்றது. நித்திய உலகத்திற்குள் பிரவேசித்த பிறகு, தேவனுடனான நமது உறவு நிலையை மாற்றிக் கொள்வதற்கு இரண்டாவது வாய்ப்புகள் எதுவும் இருக்காது. என்ன ஒரு தெளிவான சிந்தனை! இயேசுவைக் குறித்து நாம் என்ன செய்கிறோம் என்பது நித்தியத்துடன் தொடர்புள்ளதாய் இருக்கிறது. நீங்கள் ஒரு கிறிஸ்தவராகி, உங்கள் வாழ்வை நீங்கள் கிறிஸ்துவுக்காக வாழ்ந்து, அதன் மூலம் இப்பொழுது ஒரு பரிபூரணமான வாழ்வையும் (யோவா. 10:10) மற்றும்,*

*வரப்போகும் உலகத்தில் நித்திய வாழ்வையும் (1 யோவா. 2:25) பெற்றுக் கொள்ளும்படி உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.*

*"சபையின்" உண்மையான உறுப்பினராவது எப்படி என்ற இப் பாடத்தின் நிறைவுப்பகுதியை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள், வேதவசனங்களின் மூலம் இக்கருத்து உங்களுக்கு முன் வைக்கப் பட்டுள்ளது. இவ்வுலகத்திற்கு வந்து, தமது வாழ்வு, போதனைகள் மற்றும் அன்பினால், தேவனையும், அவரது சித்தம் என்ன என்பதையும் விளக்கப்படுத்திய - தேவனுடைய குமாரனாகிய - இயேசு கிறிஸ்துவுக்கு நீங்கள் சுருக்கமாக அறிமுகப்படுத்தப்பட்டீர்கள். அவர் நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்து, அவரது இரட்சிப்பின் நற்செய்திக்குக் கீழ்ப்படிகிற யாவரும்,தேவனுடைய பிள்ளைகளாகி வாழ, வழி வகுத்தார். மேலும் நீங்கள், அவரது வாழ்வு மற்றும் மரணத்தின் விளைவாக, ஆரம்பமாகி, தொடர்ந்து இருந்து கொண்டி ருக்கும் சபையின் இயல்பு பற்றியும் கவனமாகப் படித்திருக்கிறீர்கள். ஒருவர் சபையில் எவ்விதம் பிரவேசித்து, இவ்வுலகில் அச்சபையாராக எவ்விதம் வாழ்கிறார் என்பதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் ஒரு பெரிய கேள்விக்கு, நீங்கள் இதுவரை சிந்தித்ததிலேயே மிக வினயமான கேள்விக்கு வந்து சேர்ந்திருக் கிறீர்கள்: "இயேசுவைக் குறித்து நான் என்ன செய்வேன்?"*

*நீங்கள் கிறிஸ்தவராகும்படி உங்கள் இருதயத்தில் நிர்ணயம் செய்து கொண்டு, எஞ்சியிருக்கும் உங்கள் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவை உண்மையுடன் பின்பற்ற வேண்டும் என்பதே எல்லா கிறிஸ்தவர்களின் உண்மையான ஜெபமாகவும், ஊக்கமான நம்பிக்கை யாகவும் உள்ளது. நீங்கள் இப்பாடத்தைப் படிக்கையில், ஏற்கனவே உங்களுக்குள்ளாகவே, "நான் ஒரு கிறிஸ்தவனாக விரும்புகின்றேன்" என்று கூறியிருக்கலாம். "ஒரு கிறிஸ்தவராவது பற்றி எனக்குச் சில கேள்விகள் உண்டு, அவற்றிற்கு விடை அளிக்கப்படும்போது நான் கிறிஸ்தவராவேன்" என்று நீங்கள் எண்ணியிருக்கலாம்.*

*நீங்கள் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தால், இந்நூலின் எஞ்சியுள்ள இப்பகுதியைக் கவனமாகப் படியுங்கள். இது சில விடை களை அளிக்கும். மேலும் இது, நீங்கள் ஒரு கிறிஸ்தவராகி, கிறிஸ்த வராக வாழ்வதற்குரிய உங்கள் விருப்பத்தை நிறைவேற்றத் தேவை யான செயல்பாடுகள் சிலவற்றைப் படிப்படியாகப் பட்டியலிட்டு விளக்கமும் அளிக்கும்.*

## படி ஒன்று: இரட்சிப்பு

*முதலாவது படி கிறிஸ்தவராகுதல் எனப்படுகிறது. இவ்வுலகத்தின் எந்தப் பகுதியிலும் உள்ள எவர் ஒருவரும் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு (யோவா. 8:24), மனந்திரும்பி (அல்லது அவரது பாவங்களி லிருந்து திரும்பி, அப். 17:30), இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை யிட்டு (ரோமர் 10:10) மற்றும் பாவங்களின் மன்னிப்பிற்காகக் கிறிஸ்து வுக்குள் ஞானஸ்நானம் பெற்றால் (அப். 2:38) ஒரு கிறிஸ்தவராக முடியும்.*

*நீங்கள் கேட்கக் கூடிய சில கேள்விகளுக்கு நாங்கள் இங்கு பதில் அளிக்கின்றோம்:*

### "குழந்தைகளைப் பற்றி என்ன கூறப்படுகிறது?"

*புதிய ஏற்பாடானது, பிறந்த குழந்தைகள் அல்லது சிறு குழந்தைகளின் ஞானஸ்நானத்தைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடு வதில்லை. அவர்கள் கர்த்தருக்கு முன் பாவமற்றவர்களாய், ஒன்றுமறி யாதவர்களாய், பாதுகாப்புடன் இருப்பதால் அவர்களை ஞானஸ் நானப்படுத்தத் தேவையில்லை. அவர்கள் நன்மை தீமை இன்னதென்று அறியாதிருப்பதால் தேவனுடைய பார்வையில் அவர்கள், கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை. கர்த்தர், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்த பிறகு (மற்ற எல்லா மக்களைப் போல) அவர்கள் கர்த்தருடைய இரட்சிப்பின் வழிக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களாக வேண்டும். ஆயினும் அவர்கள் ஒன்றுமறியாத நிலையில் இருக்கையில், அவர்கள் பாவம் எதுவும் செய்யாதிருப்பதால், தேவனுக்கு முன்பாகப் பாதுகாப்பான நிலையிலேயே இருக்கின்றனர். புரிந்துகொள்ளும்படித் தேடும் அவர்களின் இருதயங்களுடனும், தங்களை வழி நடத்துபவர்கள்மேல் உள்ள முழு நம்பிக்கையுடனும் உள்ள அவர்களின் நிலை, உறுதியான நம்பிக்கை மற்றும் போதனையை ஏற்றுக்கொள்ளும் தன்மை ஆகியவை யாவும், வயது முதிர்ந்தவர்களால் பின்பற்றப்பட வேண்டியவைகளாய் இருக்கின்றன (மத். 18:3). குழந்தைகளைப் பற்றி இயேசு, "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையதாயிருக் கிறது" என்று கூறினார் (மத். 19:14ஆ).*

*இரட்சிப்பின் வழியைப் புரிந்துகொண்ட, தேவனுக்கு முன்பாக பாவம் செய்திருப்பதை அறிந்த, இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்தவராக வேண்டும் என்று அறிந்த இளைஞர் அல்லது முதிய வயதுள்ள*

நிலையில் இருக்கும் நீங்கள் இப்பொழுது கர்த்தருடைய இரட்சிப்பின் திட்டத்திற்குக் கீழ்ப்படிவது தேவையாய் உள்ளது.

### "நான் என்ன செய்ய வேண்டும்?"

நமது பாடங்களில், கிறிஸ்தவராவது எப்படியென்று நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இயேசு, தேவனுடைய குமாரன் என்பது பற்றிய வேதவசனங்களின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களை, ஏற்றுக் கொள்வதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவராக முடியும். உலகின் ஒரே மிகச் சரியான நூலாகிய வேதாகமமானது, இயேசு யார் என்றும், அவர் என்ன செய்வதற்காக இவ்வுலகிற்கு வந்தார் என்றும் உங்களுக்குக் கூறியுள்ளது. இச்செய்தியை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களிலிருந்து உங்களை இரட்சிப்பதற்காகச் சிலுவையில் மரிக்கவும், நீங்கள் தேவனுடைய பிள்ளையாவதற்குச் சாத்தியக் கூற்றை உங்களுக்குத் தரவுமே உலகிற்கு வந்தார் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.

மேலும் நீங்கள், "நான் எனது பாவங்களிலிருந்து திரும்பியிருக்கிறேனா?" என்று உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் இவ்வுலகில் என்றுமே முழுமையானவராய் இருப்பதில்லை, ஆனால், மனந்திரும்புதலின் மூலம் பாவத்தை உங்கள் வாழ்விலிருந்து எடுத்துப் போட்டு விட்டு, இப்பொழுது முதல் கர்த்தருடைய வார்த்தையை உண்மையாகவே பின்பற்றுவதற்குத் தீர்மானம் செய்ய வேண்டும். உங்களின் உண்மையான மனந்திரும்புதலைத் தொடர்ந்து, இயேசு உங்கள் கர்த்தராயிருப்பார், நீங்கள் வாழும் வாழ்க்கையில் வேத வசனங்கள் உங்கள் வழிகாட்டியாய் இருக்கும்.

அடுத்ததாக, உங்கள் பாவங்களின் மன்னிப்பிற்காக உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்த ஒருவரை நீங்கள் காண வேண்டும். உங்கள் சமூகத்தில் கிறிஸ்துவின் சபை ஒன்று இருக்கலாம். அப்படியிருந்தால் அச்சபையின் உறுப்பினர் ஒருவரைக் கண்டு, உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தக்கூடிய ஒரு கிறிஸ்தவரை அறிமுகப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள். நீங்கள் அவ்விதம் ஒரு கிறிஸ்தவரிடம் அறிமுகப்படுத்தப்படும்போது, மற்றவர்களுக்குமுன் நீங்கள் கிறிஸ்துவை அறிக்கையிட விரும்புவதாகவும், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக நீங்கள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குள் ஞானஸ்நானப்படுத்தப்பட விரும்புவ

தாகவும் அவரிடம் கூறுங்கள். இதில் உங்களுக்கு உதவுவதில் அவர் மகிழ்ச்சியடைவார்.

### "கிறிஸ்துவின் சபையை நான் எவ்விதம் கண்டறிய முடியும்?"

மார்க்கத்தில் குழப்பம் மிகுந்த இந்நாட்களில் நீங்கள், கர்த்தருடைய சபைக்குள் பிரவேசித்து, தொடர்ந்து கர்த்தருடைய சபையாகவே இருக்கும் ஒரு கூட்டத்தாருடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பலாம். அவர்கள் தங்களை எப்படிக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர் என்பது இதை நீங்கள் கூறக்கூடிய ஒரு வழியாகும். அவர்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட எந்தப் பெயரையும் தரித்துக் கொள்வதில்லை. அவர்கள் தங்களைக் கிறிஸ்துவின் சபையார் என்றும், வேதவசனங்களில் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள மற்ற பெயர்களாலும் மட்டுமே அழைத்துக் கொள்வார்கள். சபைக்கு, வேதாகமத்தில் குறிப்பிடப்படாத ஒரு பெயரைத் தங்களுக்கு அவர்கள் அளித்துக் கொண்டிருந்தால், அவர்கள் நாமகரணக் கூட்டத்தின் ஒருபகுதி என்பதற்கு அதுவே ஒரு அடையாளமாகும், ஆகையால் அவர்கள் கர்த்தருடைய சபையிலிருந்து பிரிந்துபோன மற்றும் மாறுபட்டவர்களாகின்றனர்.

ஒரு குழுவினர் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவர்கள்தானா என்று காண்பதற்கு இன்னொரு வழி, அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றுகிறார்களா என்று பரிசீலனை செய்வதேயாகும். அவர்களின் இலக்குகள் மற்றும் நோக்கங்களைத் தீர்மானிக்க நீங்கள் கேட்கக் கூடிய சில கேள்விகள் இங்கே தரப்படுகின்றன:

நீங்கள் புதிய ஏற்பாட்டின் சபையாராக மட்டுமே இருக்கமுயற்சி செய்கின்றீர்களா?

அன்பு, இரக்கம், ஒருமைப்பாடு, சாந்தம், மற்றும் சமுதாயத்தினருக்கு ஊழியம் ஆகியவை நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா?

நீங்கள் ஞாயிறன்று ஆராதனைக்குக் கூடிவரும்போது, அந்த ஆராதனை ஊழிய முறைமை எவ்விதம் நடக்கின்றது?

நீங்கள், அப். 20:7ன்படி வாரத்தின் முதல்நாள்தோறும் (ஒவ்வொரு ஞாயிறும்) கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கிறீர்களா?

*நீங்கள் புதிய ஏற்பாட்டு எடுத்துக்காட்டின்படி இசைக் கருவிகள் இல்லாமல் பாடல்கள் பாடுகின்றீர்களா?*

*நீங்கள் இயேசுவின் நாமத்தினால் ஜெபம் செய்கின்றீர்களா?*

*வேதாகமம் ஒன்றை மட்டுமே உங்கள் சட்ட நூலாகவும், வழிகாட்டியாகவும் நீங்கள் படிக்கின்றீர்களா?*

*ஒவ்வொரு ஞாயிறுதோறும் உங்கள் வரவுக்குத் தக்கதாக நீங்கள் காணிக்கை கொடுக்கின்றீர்களா? (1 கொரி. 16:1, 2).*

*நீங்கள் சபை என்ற முறையில் எவ்வித அமைப்பைப் பெற்றிருக்கின்றீர்கள்? ஊழியர்கள், போதகர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் என்பதைக் காட்டிலும் அதிகமான வேறு அமைப்புகள் பெற்றிருக்கின்றீர்களா?*[1]

*உங்களுக்கு இப்பூமியில் தலைமையிடம் எதுவும் உள்ளதா, அல்லது கிறிஸ்துவை மட்டுமே உங்கள் தலைவராகப் பார்க்கின்றீர்களா?*[2]

*இவ்வுலகத்தில் உங்களின் ஊழியம் என்ன?: நமது கர்த்தரின் பிரதான கட்டளையை நிறைவேற்றத் தேடுகிறீர்களா? (மத். 28:19, 20)?*

அவர்கள் யாரென்று நீங்கள் அறியத்தேடுவதால், இக்கேள்விகளைக் கேட்பதே ஞானமுள்ள ஒரு செயலாகும். நீங்கள் கர்த்தருடைய சபையின் உறுப்பினராக விரும்புகிறீர்கள், ஒரு நாமகரணக் கூட்டத்தின் உறுப்பினராக நீங்கள் விரும்பவில்லை.

நீங்கள் கிறிஸ்துவின் சபை ஒன்றைக் காண முடியவில்லையென்றால், நீங்களே ஒன்றை நிலைநாட்ட வேண்டும். நீங்கள் அதை எவ்விதம் செய்யலாம் என்பது இங்கு தரப்பட்டுள்ளது. உண்மையான தேவனுக்கு ஊழியம் செய்வதில் உற்சாகமுள்ள ஒரு மனிதரைக் கண்டறியுங்கள். அவர் தமது வேதாகமத்தைப் படிக்கையில் இந்நூலையும் வாசிக்கும்படி கூறுங்கள். பிறகு அவரிடம், அவர் உங்களுடன் இணைந்து ஒரு கிறிஸ்தவராகி, உங்கள் சமுதாயத்தில் கர்த்தருடைய சபையாராயிருக்க விருப்பமா என்று கேளுங்கள். அவர் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினால், நீங்கள் ஒருவரையொருவர் ஞானஸ்நானப்படுத்தலாம். நீங்கள் அருகில் உள்ள (முழுக்காட்டப்

போதுமான தண்ணீர் உள்ள) நீரோடை, குளம் அல்லது குட்டை ஆகிய ஏதேனும் ஓரிடத்திற்குச் செல்லலாம்.

நீங்கள் அவரை ஞானஸ்நானப்படுத்தும்போது, வேத வசனங்களின் மூன்று கட்டளைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். முதலாவதாக நீங்கள் அவரிடம் பின்வரும் கேள்வியைக் கேளுங்கள்: "இயேசு கிறிஸ்துவை, தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" இக்கட்டளையை ரோமர் 10:10ல் நாம் காணுகின்றோம். அவர், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று, தாம் விசுவாசிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, நீங்கள் அந்த மனிதரை, பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவின் சரீரத்தில்-சபையில் - ஞானஸ்நானப் படுத்துகிறீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஆகவே, அங்கு கூடியிருப்பவர்களின் நன்மைக்காகவும், என்ன நடக்கிறது என்பதையும் அவருக்கு நினைவூட்டுவதற்காகவும், அவரை ஞானஸ் நானப்படுத்துமுன், என்ன நடக்கிறது என்பதை உரத்த குரலில் விளக்குங்கள். இதை நீங்கள் கூறும் விதத்திற்கு இங்கே ஒரு எடுத்துக் காட்டு தரப்படுகின்றது (இது மத். 28:19, 20; ரோமர் 6:3; அப். 2:38; மற்றும் மாற். 16:16 ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும்).

> பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, புதிய ஏற்பாட்டின் சபையாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குள், கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவின் இரத்தத்தின் மூலம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக நான் உங்களை ஞானஸ்நானப் படுத்துகிறேன்.

மூன்றாவதாக, நீங்கள் அவரை ஞானஸ்நானப்படுத்துகையில், அவரை முழுவதுமாக முழுக்காட்டுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படுதலாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (ரோமர் 6:4). ஞானஸ்நானப்படுத்துதல் எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு சில விளக்கப்படங்கள் தரப்படுகின்றன:



*குறைவான ஆழமுடைய தண்ணீரில், ஞானஸ்நானம் பெறுபவர் கால்களை நீட்டி அமர்ந்து கொண்டு, தாம் முழுவதுமாக நீருக்குள் அடக்கம் செய்யப்படும் வகையில் பின்புறமாக சாயலாம்.*



*ஆழமான நீர் உள்ள ஞானஸ்நானத் தொட்டி அல்லது நீர் நிலையில், ஞானஸ்நானம் பெறுபவர் நின்றபடியே, தாம் முழுவதும் நீருக்குள் முழக்கப்படும் படியாகப் பின்புறமாக சாய்ந்து கொள்ளலாம்.*

நீங்கள் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபின், அதே முறையில் அவர் உங்களை ஞானஸ்நானப்படுத்தும்படி செய்யுங்கள். அவர் உங்களிடம் அதே கேள்வியைக் கேட்க வேண்டும், மற்றும் அவர் ஏன் உங்களை ஞானஸ்நானப்படுத்துகிறார் என்பதைத் தெளிவாகக் கூற வேண்டும். நீங்கள் அவரை ஞானஸ்நானப்படுத்துகையில் நடந்தவாறே, இப்போதும் நடக்க வேண்டும்.

நீங்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்ட பிறகு, நீங்கள் ஒரு கிறிஸ்தவராக, கர்த்தருடைய சபையில் ஒரு உறுப்பினராக ஆகின்றீர்கள். கடந்த காலத்தில் கர்த்தருடைய சபை உங்கள் சமுதாயத்தில் இல்லாதிருந்தாலும், இப்பொழுது அது இருக்கிறது-ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவின் சபையாராய் இருக்கின்றீர்கள்! நீங்கள் கிறிஸ்தவரானதால், நீங்கள் வாழும் இடத்தில் சபையை நிலை நாட்டியிருக்கின்றீர்கள்.

## படி இரண்டு: கிறிஸ்தவராக வாழுதல்

தொடர்ந்து, என்றுமே நிற்காத-கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதே நீங்கள் எடுத்து வைக்கும் இரண்டாவது படியாக உள்ளது. இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவர், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக வாழவே விரும்புவீர்கள். ("மூப்பர்கள் எப்படியிருக்க வேண்டும்,

எல்லா கிறிஸ்தவர்களும் எப்படி இருக்க வேண்டும்'' என்ற தலைப்புள்ள அட்டவணையைப் பார்க்கவும்.)

ஒரு கிறிஸ்தவர் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துகின்றார்? கிறிஸ்தவர் என்ற பெயரில் மறைமுகமாய்க் காணப்படும் வழியில் அவர் வாழ்கிறார் என்பதே அவருடைய வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும் சிறந்த வழியாகும்: அவர் ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்து வாழ்ந்த முறையிலேயே அவர் வாழ்கின்றார் (பிலி. 1:21). கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவே வாழ்க்கையாய் இருக்கின்றார்.

## வேதவசனங்களை ஆராய்தல்

கிறிஸ்துவைப் பின்பற்றும் எவரொருவரும், பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தல் என்ற முக்கியமான தனிப் பண்பு கொண்டிருப்பார். இயேசு, ஒவ்வொரு வழியிலும் முழுமையான வராகவே இருந்தார், ஆனால் அவரது வாழ்வில் காணப்பட்ட, விசுவாசத்துடன் பிதாவுக்குக் கீழ்ப்படிதல் என்ற பண்பானது நானும் நீங்களும் பின்பற்றும்படி அமைத்துக் கொள்ளக் கூடியதாகும். ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனுடைய சித்தத்திற்காக வேதவசனங்களை ஆராய்ந்து பார்த்து, அதன் பிறகு அவரது சித்தத் திற்கு தாழ்மையுடன், பயத்துடன் மற்றும் அன்புடன் கீழ்ப்படிவ தேயாகும். ஒரு கிறிஸ்தவர் என்பவர் தேவனுடைய வசனத்துடன் நெருங்கியிருக்கிறார். தினமும் அவர் அதைப் படித்து, அதிலிருந்து கற்றுக் கொண்டவைகளை நடைமுறைப்படுத்த முயற்சி செய்கின்றார்.

## இயேசுவைப் போல வாழ்க்கை நடத்த முயற்சி செய்தல்

இயேசுவுக்காக வாழ்வதில், "பொன் விதி", இரக்கம் மற்றும் ஜெபம் ஆகிய மூன்று கொள்கைகளும்கூட நம்மை வழி நடத்த வேண்டும். இயேசுவைப்போல நாம் இருப்பதற்கு, "நான் எப்படி நடத்தப்பட விரும்புகின்றேன்?" என்ற வினாவை நாம் எப்பொழுதும் கேட்டுக் கொள்வது ஒரு நல்ல வழியாகும். நாம் எப்படி நடத்தப்பட விரும்புகின்றோமோ, அவ்வழியிலேயே மற்றவர்களை நாம் நடத்துவது என்பதே "பொன் விதி"யை (மத். 7:12)ப் பின்பற்றுதல் ஆகும். கிறிஸ்துவின் வாழ்க்கை முறை இவ்வழியிலேயே அமைந்திருந்தது, இவ்வுலகத்தில் வாழ மிகச் சிறந்த வழியும் இதுவே ஆகும்.

இயேசு இரக்கமுள்ள மனிதராயிருந்தார். "இரக்கம்'' என்றால்

மற்றவர்களுடன் அவர்களது உணர்வுகளை “உணருதல்” என்று பொருள்படும். ஏழைகள், தேவையில் இருப்போர், மற்றும் தனிமைப்பட்டவர்கள் ஆகியோருடன் இயேசு அன்பாகவே இருந்தார். அவரது இருதயம் அவர்களுக்காகச் சென்றது. அவர் அவர்களுக்கு ஊழியம் செய்தார். ஆகவே, ஒரு கிறிஸ்தவர் மற்றவர் களைப் பற்றி அக்கறையுள்ளவராகவும், தன்னால் முடிந்த அளவு அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் தமது அன்பைத் தொடர்ந்து வெளிப்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் *(மத். 9:36).*

இயேசுவானவர், தேவனுடைய குமாரனாயிருந்தும், அவர் அடிக்கடி தனியாகவும், வெளிப்படையாகவும், சிறுகுழுக்களுடனும்- பிதாவினிடத்தில் ஜெபம் செய்தார். ஒரு கிறிஸ்தவரும் தேவனிடத்தில் தொடர்ந்து ஜெபிக்கிறார்.

நீங்கள் இப்பொழுது கிறிஸ்தவராயிருப்பதால், தேவன் உங்கள் பிதாவாய் இருக்கிறார். அவர் உங்களைத் தமக்குச் சொந்தமானவர் என்று உரிமை பாராட்டுகின்றார். விசுவாசமுள்ள இருதயத்துடன் தொடர்ந்து அவரிடத்தில் ஜெபியுங்கள். உங்கள் வாழ்வில் அவரது சித்தம் செய்யப்படும்படிக் கேளுங்கள், இயேசுவின் நாமத்தினாலே அவரிடத்தில் ஜெபியுங்கள். நீங்கள் தேவனிடத்தில் எவ்விதம் ஜெபிக்கக் கூடும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு இங்குள்ளது:

*தேவனை அழைத்தல்:* அன்பான தகப்பனே,
*அவரைத் துதித்தல்:* உமது நாமம் பரிசுத்தப்படுவதாக.
*அவருக்கு நன்றி செலுத்துதல்:* நீர் எங்களுக்கு அளித்துள்ள.. (சிலவற்றைக் குறிப்பிடலாம்) ஆசீர்வாதங்களுக்காக, நீர் தயாளமுள்ளவராய் இருப்பதற்காக நன்றி.
*அவரிடத்தில் வேண்டுதல்:* இதோ இவைகளே எங்களால் கூற முடிந்த அளவுக்கு எங்கள் தேவைகளாய் உள்ளன. இவைகள் உமது சித்தத்திற்கு ஏற்றவைகளா யிருந்தால் இவைகளை எங்களுக்குத் தாரும்.
*அவரிடத்தில் வேண்டுதல்:* நாங்கள் மற்றவர்களை மன்னிப்பது போல, எங்கள் பாவங்களை மன்னியும். தீமையிலிருந்து எங்களை விடுவியும்.
*அவரைத் துதித்தல்:* எல்லா மகிமையும் உம்முடைய வைகளே.
*முடிவு:* இயேசுவின் நாமத்தில் உம்மிடம் ஜெபிக்கிறோம். ஆமென்.

கர்த்தர் தமது சீஷர்களுக்குக் கற்பித்த மாதிரி ஜெபத்திலிருந்து மேற்கண்ட ஜெபத்தின் அமைப்பு எடுக்கப்பட்டிருப்பதை (மத். 6:9-13) நீங்கள் அநேகமாக அடையாளம் கண்டிருப்பீர்கள். அவரது மாதிரி ஜெபத்தின் சில பகுதிகள் நமக்குப் பொருந்தாதவையாகும் (எடுத்துக் காட்டாக, ராஜ்யம் வரும்படி அவர் ஜெபிக்கக் கற்பித்தது நமக்குப் பொருந்தாது. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாள் அன்று அவரது ராஜ்யம் வந்துவிட்டது), ஆனாலும் அந்த ஜெபத்தின் பெரும்பகுதி, நமக்கும் பொருந்துவதாய் உள்ளது. இங்கு தரப்பட்டுள்ள மாதிரி ஒரு எடுத்துக்காட்டாகவே உள்ளது என்பதை நினைவில் வையுங்கள், ஒருவர் தமது சொந்த எண்ணங்களை தேவனிடம் வெளிப்படுத்துவதற்குப் பின்பற்றக்கூடிய ஒரு மாதிரியாகவே இந்த ஜெபம் இங்கு தரப்பட்டுள்ளது.

நீங்கள் எப்பொழுதும் முழுமையாய் இருக்க முடியாது என்ற சத்தியத்தை இங்கு வலியுறுத்துகின்றோம். மனிதர்கள் முழுமையானவர் களாயிருக்க முடியாது, ஆனால் அவரது சித்தத்தை செய்வதற்கு நமது இருதயங்களை நாம் ஒப்புக் கொடுக்க முடியும். நாம் தவறி விழும்போது, எழுந்து நின்று, நம்மைத் துடைத்துக் கொண்டு, மனந்திரும்பி, தேவனி டத்தில் நம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, மறுபடியும் அவரது சித்தத்தைச் செய்வதற்கு நாம் தயாராக முடியும். நாம் அவரது சித்தத்தைச் செய்யக் கடும் முயற்சி எடுக்கின்றோம் என்பதே முக்கியமான விஷயம் ஆகும். முழுமையினால் அல்ல மாறாக, விசுவாசத் தினாலேயே நாம் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப் படுகிறோம் (எபே. 2:8). விசுவாசம் கொண்டிருத்தல் என்றால்,தேவனு டைய சித்தத்தைச் செய்யும்படி நேர்மையுடன் தேடுதல் என்று பொருள்படும்.

மற்றவர்களைத் துக்கப்படுத்துதல் போன்ற விஷயங்களினால் நாம் தவறி விடுகின்றபோது, அவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, நாம் அதற்காக வருந்தி, எதிர்காலத்தில் நாம் நல்லவை செய்யவே முற்படுவோம் என்று அவர்களுக்கு உறுதியளிக்க வேண்டும் (யாக். 5:16). நாம் செய்த பாவமானது சபை முழுவதையும் துன்பப் படுத்தியிருந்தால், நாம் சபையாருக்கு முன்பாக வந்து நின்று, மன்னிக்கும்படி கேட்டு, கிறிஸ்துவுக்குள் நமது சகோதர, சகோதரி களை நமக்காக ஜெபம் செய்யும்படி வேண்டிக் கொள்ள முடியும் (யாக். 5:16). தேவன் நம்மை மன்னிப்பார், சபையும் நம்மை மன்னிக்கும்.

நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பிரவேசித்ததும், ஆரம்ப கட்டமாக நீங்கள் வேதவசனங்களில், கிறிஸ்துவின் வாழ்வைக் கூறும் பகுதிகளான மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோரின் நற்செய்தி நூல்களைப் படிக்க விரும்பலாம். இதை வாசிப்பதும், கற்றுக் கொள்வதும், இயேசு இவ்வுலகத்தில் எவ்விதம் வாழ்ந்தார் என்பதை உங்களுக்குப் புரிய வைக்கும். அவரைப்பற்றி நீங்கள் கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விஷயமும் அவரை இன்னும் நெருங்கிப் பின்பற்ற உங்களுக்கு உதவும்.

## படி மூன்று: தேவனை ஆராதித்தல்

கிறிஸ்தவராக இருக்க நீங்கள் எடுத்து வைக்க வேண்டிய மூன்றாவது படி, தேவனை, தவறாது முறையாக ஆராதனை செய்வதே ஆகும். உங்கள் அருகாமையில் கிறிஸ்துவின் சபை இருந்தால், அவர்களுடன் இணைந்து, ஞாயிறு ஆராதனையிலும், நியமிக்கப்படும் மற்ற ஜெபவேளைகளிலும் தேவனை ஆராதிக்க நீங்கள் விரும்புவீர்கள். ஒவ்வொரு ஞாயிறு அன்றும் அவர்கள் பாடல்கள் பாடி, ஜெபித்து, தேவனுடைய வார்த்தையைக் கற்று, கர்த்தருடைய பந்தியில் பங்கேற்று, தேவன் அவர்களை ஆசீர்வதித்தமைக்குத் தக்கதாகக் காணிக்கை கொடுக்கும்படி அவர்கள் கூடுவார்கள். அவர்களுடன் இந்த ஆராதனையின் எல்லா வெளிப்பாடுகளிலும் நீங்கள் பங்கேற்க வேண்டும்.

உங்கள் சமுதாயத்தில் கிறிஸ்துவின் சபையொன்று கூடுவதில்லையென்றால், உங்கள் வீட்டிலோ, ஏதாவதொரு வாடகைக் கட்டிடத்திலோ அல்லது ஒரு மரத்தடியிலோ நீங்கள் முறையான, விசுவாசமுள்ள ஆராதனையைத் தொடங்கலாம். காலப்போக்கில், ஆராதனை செய்வதற்கென்று ஒரு இடத்தில் கட்டிடம் கட்டிக் கொள்ளலாம். இயேசுவின் நாமத்தினால் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகின்ற எவ்விடத்திலும் வசனத்தின்படியான ஆராதனை நடைபெற முடியும் என்று புதிய ஏற்பாடு கூறுகின்றது (மத். 18:20).

### சபையாகக் கூடுதல்

புதிய ஏற்பாட்டில், ஆதிக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் அதாவது ஞாயிற்றுக்கிழமையில் கூடி வந்தனர். இது, கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுந்த நாள் ஆகும். முதல் கிறிஸ்தவர்கள் இவ்விதமாக ஞாயிற்றுக் கிழமையில் கூடிவந்த போது, இயேசு தமது

*மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் நினைவாக ஏற்படுத்திய பந்தியில் அவர்கள் பங்கேற்றனர். அவர்கள் ஒவ்வொரு ஞாயிறன்றும் இப்பந்தியில் கலந்து கொண்டனர் என்பது தெளிவாகக் காணப்படுகிறது. இது கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட "கர்த்தருடைய பந்தியாகும்" (1 கொரி. 11:20, 21), எபி. 10:25; 1 கொரி. 11:22; 16:1, 2; மற்றும் அப். 20:7 ஆகியவற்றைக் கவனமாய்ப் படியுங்கள்.*

## கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடித்தல்

*கிறிஸ்து, கர்த்தருடைய பந்தியை உண்டாக்கியபோது, அவர் இரண்டு பொருட்களைப் பயன்படுத்தினார்; திராட்ச இரசமும், புளிப்பில்லாத அப்பமும். இவ்விருந்தைக் கைக்கொள்ளும்படி நமது கர்த்தர் கூறியபோது, அவர் தமது சீஷர்களுடன் பஸ்கா உணவை உண்டு கொண்டிருந்தார். பஸ்கா உணவில் புளிப்பில்லாத அப்பமும், (ஒரு வகை திராட்சையிலிருந்து பிழிந்த இரசமாகிய) திராட்ச இரசமும் தண்ணீரும் கலக்கப்பட்ட கலவையான பானமும் அடங்கியிருந்தன. இயேசு தமது சரீரமானது தமது சீஷர்களுக்காக ஒப்புக் கொடுக்கப்படுவதின் நினைவாக அப்பத்தைப் புசிக்கும்படி சீஷர்களுக்குக் கூறினார். அவர் தமது இரத்தம் அவர்களுக்காகச் சிந்தப்படுவதை நினைவு கூறும் வகையில், திராட்ச ரசத்தில் பானம் பண்ணும்படி அவர்களுக்குக் கூறினார்.*

*நீங்கள், நமது கர்த்தருடைய அறிவுரைகளையும், நடபடிகள் நூலில் கிறிஸ்தவர்களின் முன்னுதாரணத்தையும் பின்பற்ற விரும்புவீர்கள், உங்களில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் யாவரும், ஒவ்வொரு ஞாயிறுதோறும் ஆராதனைக்காகக் கூடி வர வேண்டும். நீங்கள் பாடி, ஜெபம் செய்து, தேவனுடைய வசனத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆராதனையின் ஒரு கட்டத்தில் இயேசு உங்களுக்குக் கையளித்துள்ள இந்தப் பந்தியிலும், நீங்கள் பங்கேற்க வேண்டும். புளிப்பில்லாத அப்பத்தை ஒரு தட்டில் வைத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கும் அந்த அப்பத்திற்காகவும், கிறிஸ்துவின் மாபெரும் தியாகத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். பிறகு, இயேசுவின் சரீரத்தை நினைவு கூர்ந்து, பங்கேற்க விரும்பும் கிறிஸ்தவர்களிடத்தில் அந்த அப்பத்தைக் கொடுங்கள்.*

*கர்த்தருடைய பந்திக்கான அப்பத்தைத் தயாரிப்பதற்குச் சில*

பொருட்களே தேவைப்படுகின்றன: மாவு, தண்ணீர், உப்பு மற்றும் எண்ணெய் ஆகியவை. புளிக்கச் செய்யும் பொருள் அல்லது யீஸ்ட்டு போன்றவை சேர்க்கப்படுவதில்லை. உங்கள் கையளவுள்ள இரு அப்பங்களைச் செய்வதற்கான சமையல் குறிப்பு கீழே தரப்படுகிறது:

தேவையான பொருட்கள்:
கோதுமை அல்லது பார்லிமாவு-1 கப்,
தண்ணீர்-ஒரு தேக்கரண்டியளவு,
எண்ணெய்-3 தேக்கரண்டியளவு,
உப்பு-தேவையான அளவு.

செய்முறை:
மேற்கூறிய பொருட்கள் யாவற்றையும் ஒன்றாகக் கலந்து பிசைந்து கொள்ளவும். பிறகு மாவை மெலிதான வட்ட அப்பங்களாகத் தட்டி எடுத்து மிதமான சூடுள்ள அடுப்பின் மீதுள்ள தோசைக் கல்லில் பத்து நிமிடங்களுக்கு இதை வேக வைக்கவும். நன்றாக வேகவைக்கப்பட்ட அப்பம் தீய்ந்து போகாது. மாவானது முறுகலான அப்பமாகும் வரைக்கும் நெருப்பிலும் வாட்டப்படலாம்.

இரண்டாவதாக, திராட்ச இரசம் நிறைந்த கிண்ணம் அல்லது கிண்ணங்களை எடுத்துக் கொள்ளுங்கள், அந்தக் கிண்ணத்திற்காகவும், நமது பாவமன்னிப்பிற்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் மதிப்புமிக்க இரத்தத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபியுங்கள். ஜெபத்திற்குப் பிறகு, அவர்கள் யாவரும் இயேசுவின் இரத்தம் நமக்காகச் சிந்தப்பட்டதை நினைவுகூர்ந்து அருந்தும் வகையில் இக்கிண்ணங்களை அவர்களிடத்தில் கையளியுங்கள்.

இயேசு இந்தப் பந்தியைக் கட்டளையிட்டபோது, திராட்சப் பழ இரசத்தையே அவர் பயன்படுத்தினார். திராட்ச இரசம் உலகெங்கும் பரவலாகக் கிடைக்கின்றது; ஆயினும், உங்கள் பகுதியில் அது கிடைக்காதிருந்தால், திராட்சப் பழங்களைப் பிழிந்தெடுத்து ஒரு பாத்திரத்தில் வைக்கலாம். திராட்சப்பழம் கிடைக்கும் காலங்களில் இந்த முறையில் இரசம் செய்து பக்குவப்படுத்தி வைத்துக் கொண்டால் அதை ஆண்டு முழுவதும் பயன்படுத்தலாம். உலர்ந்த திராட்சப் பழங்களை தண்ணீரில் வேக வைத்தும் திராட்ச இரசத்தைப் பெறலாம். வேக வைத்து பிறகு, அச்சாற்றிலிருந்து பழத்தோல்களை அகற்றிய பின், அந்த ரசமானது கர்த்தருடைய பந்திக்கு வைக்கப்படலாம்.

## சேர்த்து வைத்தல் அல்லது கொடுத்தல்

கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுப்பதற்காக ஒவ்வொரு கிறிஸ்தவரும் "சேர்த்து வைக்க" வேண்டியது அவசியமாகும். சபை ஆராதனை கூடி வரும் வேளையில், தக்கதொரு தருணத்தில், புதிய ஏற்பாட்டு போதனையின்படி, ஒவ்வொரு கிறிஸ்தவரும், தாம் பெற்றுக் கொண்டதற்குத் தக்கதாகக் காணிக்கை கொடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் (1 கொரி. 16:1, 2). ஒரு தட்டு அல்லது வேறு விதமான சேகரிக்கும் உபகரணம் சபையாரிடத்தில் எடுத்துச் செல்லப்பட்டு காணிக்கை கொடுக்க உதவி செய்யப்படலாம். அல்லது ஓரிடத்தில் பெட்டியொன்று வைக்கப்பட்டு, கிறிஸ்தவர்கள் தங்கள் காணிக்கைகளை அவ்விடத்தில் வந்து செலுத்தலாம். இது ஆராதனையின் ஒரு வெளிப்பாடு என்பதையும், பயபக்தியோடும், மன மகிழ்ச்சியோடும் இது செய்யப்பட வேண்டும் என்பதையும் நினைவில் வையுங்கள். இவ்வாறு கொடுக்கப்படும் காணிக்கைகள், சபையின் ஊழியத்திற்கென்று பயன்படுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, மற்றவர்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், ஏழைகளுக்கு உதவவும், வேதபாட வகுப்பிற்கு வேதாகமங்கள் வாங்கவும், சபையின் ஊழியத்துடன் இசைவாயுள்ள வேறு எந்த பணியாவது செய்யப் படவும், சேகரித்த இந்தக் காணிக்கைப் பணத்தைப் பயன்படுத்தலாம். காணிக்கைப் பணத்தை எவ்வழியில் செலவிடுவது என்பதை தனிநபர் அல்ல மாறாக சபையார் கூடித் தீர்மானம் செய்ய வேண்டும்.

ஆராதனை ஊழியத்தின் திட்டத்திற்கு இங்கு ஒரு எடுத்துக்காட்டு தரப்படுகின்றது:

ஜெபம்
பாடல் அல்லது பாடல்கள்
வேதவசனங்கள் சிலவற்றின் மீது ஒரு கலந்துரையாடல் அல்லது போதிக்கக்கூடிய போதகர் அல்லது பிரசங்கியார் இருந்தால் ஒரு பிரசங்கம்
பாடல்
கர்த்தருடைய பந்தியைப் பற்றிய வேதவசனப்பகுதி ஒன்றை வாசித்தல்
கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல்
பாடல்
வரவுக்குத் தக்காற் போன்று காணிக்கை கொடுத்தல்

பாடல்
ஜெபம்

ஆராதனை எவ்விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், மேற்கண்ட செயல்கள் அனைத்தும் அதில் இருக்க வேண்டும்.

### சபையின் கூட்டங்கள் நடத்துதல்.

உள்ளூர் சபையானது தனது பணிகளை "நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்வதற்காக" (1 கொரி. 14:40) அவ்வப்போது அந்த சபையின் ஆண்கள் ஒன்றுகூடி முடிவெடுக்க வேண்டியது தேவையாகின்றது. மூப்பர்கள் இல்லாத நிலையில் இது விசேஷமாக தேவையாகின்றது. தேவனுக்கு சட்டம் ஏற்படுத்துவதற்காக அல்ல, ஆனால் உள்ளூர் சபையானது தனது ஆராதனையையும் மற்ற பணிகளையும் கிறிஸ்துவுக்கு ஏற்ற வழியில் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதே இக்கூட்டங்களின் நோக்கமாகும். ஆராதனை நேரம், அது நடக்கும் இடம், ஆராதனை ஊழியத்தை நிறைவேற்றுவதில் ஒவ்வொருவரின் பங்கு, நற்பணிகளுக்குத் திட்டமிடுதல், மற்ற ஆவிக்குரிய விஷயங்களைக் கலந்துரையாடுதல் ஆகியவை இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படுகின்றன. இக்கூட்டத்தில் கலந்து கொள்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் போன்ற நடக்கையுள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியமாகும் (எபே. 4:1-3). "ஒவ்வொருவரும் தாம் நினைப்பதைக் கூற உரிமை பெற்றுள்ளனர், ஆனால் ஒருவரும் தமது வழிதான் செயல்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை அற்றவர்களாய் உள்ளனர்" என்று யாரோ ஒருவர் ஒருமுறை கூறினார். இது ஒரு நல்ல கொள்கையாகும்.

சபையின் விஷயங்கள் பற்றிய கலந்துரையாடலில், ஒவ்வொரு முடிவைப் பற்றியும் பின்கண்ட வினாக்கள் கேட்கப்பட வேண்டும்:

- இது வேத வசனத்தின்படியானதா?
- இது தேவனை மகிமைப்படுத்துமா?
- இது நல்லொழுக்கத்தைப் போதிக்குமா?
- இது செயல்படுமா?

இக்கூட்டம் நடக்க வேண்டிய கால இடைவெளி மற்றும் நேரம் ஆகியவை பற்றி இக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் மனிதர்கள் ஒப்புக் கொண்டிருக்க வேண்டும். அநேக மனிதர்கள் கூடக் கூடிய நேரம் ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தப் பொறுப்பை மாற்றி மாற்றிக் கொடுப்பது ஞானமுள்ளதாகும். இது ஒரு பொறுப்புதானே தவிர, அதிகாரமுள்ள பதவியல்ல, இது அக்கூட்டத்தை நல்ல முறையில் நடத்திச் செல்ல உதவுகின்ற வழியாகும். இதில் எடுக்கப்படும் முடிவுகள் அங்குள்ள மனிதர்களின் இசைவைப் பெற்றிருக்க வேண்டும். முடிவுகளைப் பற்றிய பதிவுகளை யாரேனும் ஒருவர் செய்ய வேண்டும். ஒரு கூட்டமானது பின்வருமாறு நடத்தப் பெறலாம்:

*ஜெபம்*
*பழைய முடிவுகள் - கடந்த கூட்டங்களில்*
*விடப்பட்டவை பற்றிய கலந்துரையாடல்;*
*கொடுக்கப்பட்ட பொறுப்புகளின் நிறைவேற்றம்*
*மற்றும் வளர்ச்சி பற்றிய அறிக்கைகள்*
*புதிய முடிவுகள் - தேவைகளைப் பற்றிய ஆராய்வு,*
*எதிர்காலத் திட்டங்கள், பொறுப்புகளை*
*ஒப்படைத்தல், மற்றும் ஆவிக்குரிய கருத்துக்களில்*
*அக்கறை*
*ஜெபம்*

## தேவனை தினமும் ஆராதித்தல்

தேவனை உங்கள் இருதயத்திலும், உங்கள் சரீரப்பிரகாரமான குடும்பத்தாரோடும் நீங்கள் தினமும் ஆராதிக்க விரும்புவீர்கள். ஒவ்வொரு உணவு வேளையிலும், தேவனிடத்தில் ஜெபித்து, உண்பதற்கு முன் அந்த உணவை உங்களுக்கு அளித்தமைக்காக அவருக்கு நன்றி கூறுங்கள். உங்கள் குடும்பம் முழுவதும் இணைந்து, அவரிடத்தில் உங்கள் தேவைகளை முன் வைத்து, அவர் உங்களுக்குச் செய்துள்ளவற்றிற்காக அவருக்கு நன்றி கூறித் துதியுங்கள்.

ஞாயிறு தவிர மற்ற நாட்களிலும் கூட நீங்கள் தேவனை ஆராதிக்க விரும்புவீர்கள். நீங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் எப்போதுமே, கர்த்தருடைய பந்தியில் பங்கேற்று, காணிக்கை கொடுத்தல் உள்ளிட்ட ஆராதனை முறையில் பங்கேற்பீர்கள். இதைத் தவிர, வேதபாடம், ஜெபம் மற்றும் பாடல்கள் பாடுதல் ஆகியவற்றிற்காக மற்ற நாட்களில்

*சக கிறிஸ்தவர்களுடன் ஒன்றுகூட விரும்பலாம். கிறிஸ்தவர்கள் அடிக்கடி இவ்விதம் சேர்ந்து ஆராதிக்கவும், கர்த்தருக்குள் ஒருவரை யொருவர் ஊக்கப்படுத்தவும் கூடுவது முக்கியமானதாகும்.*

*கர்த்தருடைய ஊழியர் என்ற முறையில், அவரது வசனத்தை தினமும் வாசித்து, அதன் மூலம் அவர் உங்களுடன் பேசுவதற்கு நீங்கள் இடம் தர வேண்டும். அதே போல் உங்கள் ஜெபங்களின் மூலம் நீங்கள் அவருடன் தினமும் பேச முடியும்.*

## படி நான்கு: நற்செயல்கள் செய்தல்

*கர்த்தருக்கு ஊழியம் செய்வதே நீங்கள் எடுத்து வைக்க வேண்டிய நான்காவது படியாகும். நீங்கள் இப்பொழுது கிறிஸ்துவைப் பின்பற்று கிறவராகிய ஒரு கிறிஸ்தவராய் இருக்கிறீர்கள், எனவே அவர் வாழ்ந்த வழியிலேயே நீங்களும் வாழுங்கள். அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார் என்று நமக்குக் கூறப்படுகிறது (அப். 10:38).*

### நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்

*கிறிஸ்தவர்கள் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல், சுவிசேஷப் பணி செய்ய வேண்டும். இயேசு தாம் பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்று முன்பு "உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள்..." (மாற். 16:15) என்று நமக்குக் கூறினார். கிறிஸ்து, நற்செய்தியை உருவாக்குவதற்காகவே மரித்தார்; அது ஒவ்வொரு நபருக்கும் பிரசங்கிக்கப்படும்படி நாம் கவனிக்க வேண்டும். நீங்கள் நற்செய்தி ஊழியம் செய்யக் கூடிய ஒருவழி, மற்றவர்கள் இந்த நூலைப்படித்துப் பார்க்கும்படி கூறுவதே ஆகும். அவர்கள் கிறிஸ்தவர்களாகும்படி அவர்களை ஊக்கப்படுத்துங்கள். மற்றவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்த, நம்மால் இயன்ற அனைத்தையும் நாம் செய்வோம்.*

### மற்றவர்களை பக்திவிருத்தியடையச் செய்தல்.

*கிறிஸ்தவர்களின் மற்றொரு பணி, மற்றவர்களை பக்திவிருத்திய டையச் செய்தல் ஆகும். "edify" என்ற ஆங்கில வார்த்தை கட்டி எழுப்புதல் என்று பொருள்படுகின்றது. உங்களது உள்ளூர் சபை பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாய் நிலைநிற்கும் போது, தயவு செய்து இன்றைக்கான*

*சத்தியம் உலகளாவிய ஊழியப் பள்ளிக்கு எழுதுங்கள் (முகவரி இந்த நூலின் கடைசிப் பக்கத்தில் தரப்பட்டுள்ளது), நீங்கள் வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள உதவும் சில நூல்களை நாங்கள் உங்களுக்கு அனுப்பி வைப்போம். கிறிஸ்துவைப் பற்றிய நமது அறிவிலே வளர்ந்து, அவரது வழியில் தொடர்ந்து சென்று, மற்றவர்களும் நம்மோடு வளரும்படி நாம் தொடர்ந்து ஊக்கப்படுத்துவோம்.*

## மற்றவர்களுக்கு உதவுதல்

*தர்ம காரியங்களில் ஈடுபடவும் நீங்கள் விரும்புவீர்கள். ''ஏழைகளுக்கு உதவ நான் என்ன செய்ய முடியும்?'' என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். தேவையில் உள்ளவர்கள் மீது அக்கறை கொள்ளாமல் இருந்தால் நீங்கள் கிறிஸ்துவைப் போலாக முடியாது (மத். 25:31-46).*

*கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய சில நல்ல செயல்கள் இங்கு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது:*

*மற்றவர்களுக்கு நற்செய்தியைப் போதித்தல்*
*நோயாளிகளுக்கு சேவை செய்தல்*
*தேவனைப் பற்றி குழந்தைகள் கற்றுக்கொள்ள உதவுதல்*
*பசியுற்றோருக்கு உணவளித்தல்*
*விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் உதவுதல்*
*சிறையில் இருப்போரைச் சந்தித்தல்*
*உபசரிப்பை நடைமுறைப்படுத்துதல்*
*கிறிஸ்தவ ஏடுகளை விநியோகித்தல்*
*ஆராதனை கூட்டங்களுக்கு மற்றவர்களை அழைத்தல்*
*மற்றவர்களுக்காக ஜெபித்தல்*
*படிக்க இயலாதவர்களுக்கு வேதாகமத்தைப் படித்துக் காண்பித்தல்*

*இயேசு, ஊழியம் செய்யவே இவ்வுலகிற்கு வந்தார். அவர் ஊழியம் கொள்வதற்கு அல்ல, மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வுமே வந்தார் (மாற். 10:45). இயேசுவைப் போல மற்றவர்களுக்காக மரிப்பது என்பது நம்மால் முடியாது; ஆனால் மற்றவர்களுக்கு நற்செய்தியைப் போதித்தல், அவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர உதவி*

செய்தல், அவர்கள் துன்பப்படுகையில் அவர்களுக்கு இரக்கம் காட்டுதல் போன்ற செயல்களின் மூலம் நாம் மற்றவர்களுக்காக வாழ முடியும்.

## முடிவுரை

அப். 8ல் எத்தியோப்பிய மந்திரியின் வரலாற்றை நீங்கள் படித்திருக் கிறீர்களா? இல்லையென்றால் இதைப் படிப்பதைச் சற்று நிறுத்திவிட்டு, அவருடைய வரலாற்றை எடுத்துப் படியுங்கள். நற்செய்தியைப் போதிக்கும்படி பிலிப்பு அவரிடத்தில் அனுப்பப்பட்டார். அந்த எத்தியோப்பிய மனிதர் நற்செய்தியைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர் ஆனார்.

பிலிப்பு ஒரு ஏவப்பட்ட மனிதராயிருந்தார். நீங்கள் வாசிக்கும் இந்த நூல் (இதன் கடைசிப் பகுதியாகிய புதிய ஏற்பாடு தவிர) ஏவப்பட்டது அல்ல. ஆயினும், இப்பக்கங்களில், கிறிஸ்து கொண்டு வந்த இரட்சிப்பைப் பற்றியும், அவர் நிலைநாட்டிய சபையைப் பற்றியும் புதிய ஏற்பாடு போதிப்பவைகளை நீங்கள் வாசித் திருக்கிறீர்கள். இவ்விதமாக இந்தப் பக்கங்கள் யாவும் உங்களுக்கு, ஏவப்பட்ட நூலாகிய வேதாகமத்தையே சுட்டிக்காட்டுகின்றன. நீங்கள் இங்கு வாசித்தவைகளை வேத வசனங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுது புதிய ஏற்பாடு போதிப்பதையே நாங்கள் உங்களுக்குப் போதிக்க முயற்சி செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

எத்தியோப்பிய மனிதர் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் ஒரு வாய்ப்பளித்தார். அது ஒரு நீண்ட, ஆராய்ச்சி மிக்க படிப்பாக இருக்க வில்லை; ஆனால் கிறிஸ்தவராவது எப்படி, கிறிஸ்தவராக வாழ்வது எப்படி என்று அவர் அறிந்து கொள்ளப் போதுமானதாக இருந்தது. அதே விதமான போதனையை உங்களுக்கு அளிக்கவே நாங்கள் முயற்சி செய்திருக்கிறோம். இப்பொழுது வாய்ப்பு உங்களுடையதாயிருக்கிறது. இந்த வாய்ப்பை நீங்கள் முழுமையாக, நிறைவாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடத்தில் இருந்து மனமார்ந்த விடை பெறுகிறோம். தேவன் தமது குமாரன் மூலமாக அளித்துள்ள நற்செய்திக்கு நீங்கள் கீழ்ப்படியும்படி அவர் தமது ஐசுவரியமுள்ள ஆசீர் வாதங்களை உங்கள் மேல் பொழிவாராக. ஒருவேளை இங்கில்லாவிடினும், பரலோகத்தில் உங்களைச் சந்திக்க ஆவலாய் இருக்கிறோம்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 323 ம் பக்கங்களில்)*

1. “இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?” என்ற கேள்வியானது நித்திய நோக்கமுடையதாக இருப்பது ஏன்?
2. பிறந்த குழந்தைகள் அல்லது சிறுபிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது தேவையா? தேவையில்லையா? ஏன்?
3. ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?
4. கிறிஸ்துவின் சபையை நீங்கள் கண்டறிய உதவும் சில வினாக்கள் யாவை?
5. ஞானஸ்நானம் என்றால் தண்ணீரில் அடக்கம் செய்யப்படுதல் என்று போதிக்கும் வேதவசனப்பகுதி எது?
6. ஒரு கிறிஸ்தவரின் வாழ்வைக் சுருக்கமாகக் கூறச் சிறந்த வழி எது?
7. கிறிஸ்தவர் ஒருவர், தேவனுடைய வசனத்துடன் ஏன் நெருங்கியிருப்பார்?
8. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் தேவனை ஆராதிக்க சபையார் கூடி வருவார்கள். எவ்விதமான ஆராதனை வெளிப்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும்?
9. இயேசு, கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தியபோது பயன்படுத்திய இரண்டு பொருட்கள் யாவை?
10. ஒரு கிறிஸ்தவராகி, கிறிஸ்தவராக வாழ நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நான்கு படிகள் யாவை?

## வார்த்தை உதவிகள்

**வேதவசனங்கள்** - பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் கொண்ட வேதாகமம். பழைய ஏற்பாடானது யூதர்களின் சட்ட நூலாக இருந்து, புதிய ஏற்பாட்டுக்கு வழியை ஏற்படுத்தியது (கலா. 3:24), இப்புதிய ஏற்பாடு இந்நாட்களில் அனைவரும் பின்பற்ற வேண்டியதாய் உள்ளது. தேவன் இவ்வுலகத்தைப் படைத்த வரலாற்றின் சுருக்கம், அவர் தேர்ந்து கொண்ட இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்ட சட்டங்கள், ஏவப்பட்ட கவிதை நூல்கள், மற்றும் தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாகக் கொடுத்த போதனைகள் ஆகியவை அடங்கியுள்ளன.

[1]புதிய ஏற்பாட்டு சபைகளின் அமைப்புகள் மிகவும் எளிமையான தாகவும், அடிப்படையானதாகவும் இருந்தன. முதலாவது போதிக்கிறவர் களும், கற்பிக்கிறவர்களும், தேவனுடைய வசனத்தைப் போதித்து, கற்பித்து வந்தார்கள். இரண்டாவதாக, ஆவிக்குரிய வளர்ச்சியில் முதிர்ந்த ஒவ்வொரு உள்ளூர் சபைகளிலும், ஒன்றுக்கும் மேற்பட்ட மூப்பர்கள் (கண்காணிகள், மேய்ப்பர்கள், போதகர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள்) அந்தந்த உள்ளூர் சபையை கண்காணிக்கவும், வழி நடத்தவும் செய்தார்கள். மூன்றாவ தாக, ஒவ்வொரு உள்ளூர் சபையிலும், மூப்பர்களின் கண்காணிப்பில், உதவிக்காரர்கள் சபையில் ஊழியம் செய்து வந்தார்கள். [2]புதிய ஏற்பாடு, சபைக்கு ஒரே ஒரு தலையையே பெயரிடுகிறது: கிறிஸ்து. அவருடைய சபைக்கு பூமியில் தலைமையிடம் எதுவுமே கிடையாது. ஒவ்வொரு உள்ளூர் சபையும், கிறிஸ்துவின் தலைமைத்துவத்தை மாத்திரமே பின்பற்றுகின்றன.

# பிற்சேர்க்கை 1

# பாட வினாக்களுக்கான விடைகள்

### சர்வ வல்ல தேவன் இருக்கின்றாரா?

*(பாடம் 1 க்கான வினாக்கள் பக்கம் 15 ல் காணப்படுகின்றன)*

1. எவர் ஒருவரும் கேட்கக் கூடிய ஆழ்ந்த அறிவுள்ள கேள்வி: "தேவன் இருக்கின்றாரா?" என்பதே ஆகும்.
2. "தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்வி ஆழ்ந்த அறிவுள்ளதாகும், ஏனென்றால் இக்கேள்விக்கு நாம் அளிக்கும் விடையானது, வாழ்வைப் பற்றிய நமது மற்ற கேள்விகளின் பதில்கள் யாவற்றின் மீதும் விளைவு ஏற்படுத்தக் கூடியதாய் உள்ளது.
3. தேவன் இருக்கின்றார் என்ற உறுதியான கூற்றைக் கொண்டு வேதாகமம் தொடங்குகின்றது.
4. இந்த உலகத்தின் ஆதாரமே, தேவன் இருக்கின்றார் என்று நாம் நம்பும்படி நம்மை வற்புறுத்தும் முதலாவது ஆதாரம் ஆகும். பூமியும், இந்த அண்டம் முழுவதுமே தேவன் இருக்கின்றார் என்பதை சொல் திறமையுடன் அறிவிக்கின்றன.
5. மனிதன் இருப்பது தேவனால் இல்லையென்றால், (1) வாழ்வின் தொடக்கம்; (2) இயற்கையின் விதிகள் இருப்பது மற்றும் (3) குடும்பம் இருப்பது ஆகியவற்றை நாம் விளக்கிக் கூற முடியாது.

## வேதாகமம், தேவனுடைய வார்த்தை

*(பாடம் 2 க்கான வினாக்கள் பக்கம் 31 ல் காணப்படுகின்றன)*

1. தேவ ஆவியினால் "அருளப்பட்டிருக்கிறது" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடர், "தேவனால் சுவாசிக்கப்பட்டது" என்ற மூலப் பொருளுடையதாய் இருக்கின்றது. உலக எழுத்தாளர்கள் பலவகையான தூண்டுதல்களினால் "ஏவப்படுவதாக" க் கூறுப்படுகின்றது, ஆனால் தேவனே வேதாகமத்தின் மூலமாக இருந்து ஏவுதல் கொடுத்தார் என்பதை வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது.
2. வேதாகமத்தை அழிப்பதற்கு டயோக்கிளேஷியன் செய்த முயற்சியில் அவன் தோல்வியடைந்தான். உண்மையில், நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்த இன்னொரு ரோமச் சக்கரவர்த்தி புதிய ஏற்பாட்டை மறுபடியும் உற்பத்தியாக்க விரும்பியதாக அறிவித்தபோது இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவனிடத்தில் ஐம்பது பிரதிகள் தரப்பட்டன.
3. சுகாதாரத்தைப் பற்றியோ அல்லது நலவாழ்வு நடைமுறைகள் பற்றியோ எதுவும் அறியாத நிலையில் இந்த உலகம் இருந்த சமயத்தில் எழுதப்பட்ட மோசேயின் புத்தகங்களில் தற்காலக் கருத்துக்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. விஞ்ஞானிகள் கிருமிகளைக் கண்டு பிடிப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே, லேவியராகமம் 13:45ல் நோய் பரவாமல் தடுப்பதற்கு உதவக் கூடிய அறிவுரைகள் தரப்பட்டுள்ளன.
4. இலக்கியத்தால் அறியப்பட்ட ஒவ்வொரு பாடக் கருத்தையும் வேதாகமம் உள்ளடக்கியுள்ள அதே வேளையில், நாற்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால இடை வெளியில் எழுதப்பட்டிருந்தாலும், அது ஒரு முழுமையான ஒருமைப்பாட்டையும் விளக்கப்படுத்துகின்றது.
5. வேதாகமத்தின் மையக் கருத்து இயேசு கிறிஸ்து என்ற ஒரு மனிதரின் வரலாறு ஆகும்.
6. வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும், வேதாகமமானது மனிதகுலத்தில் அதிக செல்வாக்குப் பெற்றதாக இருக்கின்றது. இது வரலாற்றின் ஓட்டத்தை மாற்றியிருக்கின்றது, சக்கர வர்த்திகளை ஏற்படுத்தியிருக்கின்றது, இதன் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு ஆசீர்வாதங்களையும்,

வெற்றியையும் கொண்டு வந்திருக்கின்றது.

7. வேதாகமத்தை வாசிப்பவர்களுக்கு அது (வேதாகமம்) அவர்களின் நித்தியத்தைப் பற்றிய நம்பிக்கைக்கு உறுதி அளிக்கின்றது, அவர்களின் அன்புக்குரியவர்கள் இறக்கும்போது அவர்களுக்கு ஆறுதல் தருகின்றது.
8. தேவனுடைய வார்த்தையில் அதன் பழங்காலத் தன்மை, அதன் நவீனத் தன்மை, அதன் பல்வகைப்படுத்தும் தன்மை, அதன் ஒன்றாக்கும் தன்மை, அதன் மையக் கருத்து, அதன் செல்வாக்கு, அதன் ஆறுதல் என்ற ஏழு அதிசயங்கள் உள்ளடங்கியுள்ளன.

## பிதாவாகிய தேவன் யார்?

*(பாடம் 3 க்கான வினாக்கள் பக்கம் 50 ல் காணப்படுகின்றன)*

1. உண்மையான உயிருள்ள தேவனாக இருப்பவர் ஒருவரே. அவரே இந்த உலகத்தைப் படைத்தவர், அவர் ஒருவரே நித்தியமானவரும், எல்லா வல்லமையும் நிறைந்தவரும், எல்லாம் அறிந்தவரும், எங்கும் இருப்பவருமாக உள்ளார்.
2. தேவத்துவத்தைப் பற்றிய கருத்தானது பழைய ஏற்பாட்டில், ஆதி. 1:26; ஆதி. 3:22; ஆதி. 11:7; மற்றும் ஏசா. 6:8 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றது.
3. இயேசுவின் ஞானஸ்நானம், மனிதனின் இரட்சிப்புக்கான ஊழியம், ஜெபம் மற்றும் ஞானஸ்நானத்திற்கான பிரதான கட்டளை ஆகியவற்றில் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் இணைந்து செயல்படும் நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.
4. மனிதன், இயேசு கிறிஸ்துவின் வழியாக மட்டுமே தேவனிடத்தில் வர முடியும். இவர் ஒருவரே, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள அதிகாரம் பெற்ற மத்தியஸ்தர் ஆவார்.
5. யோவா. 14:6 மற்றும் 1 தீமோ. 2:5 ஆகிய வசனங்கள், தூதர்கள், பரிசுத்தவான்கள் அல்லது (உயிருள்ள அல்லது இறந்து போன) மற்ற மனிதர்கள் மூலமாக தேவனை அணுக முடியாதென்று போதிக்கின்றன. இயேசு கிறிஸ்து ஒருவரே பிதாவினிடத்தில் சென்றடைய ஒரே வழியாக இருக்கின்றார்.
6. இயேசு கிறிஸ்து மனித குலத்துடன் கொண்டுள்ள உறவைப் பிரதிப்பலிப்பதற்கு “மனுஷ குமாரன்” என்றும், அவர் தேவனு

*டன் கொண்டுள்ள உறவைப் பிரதிப்பலிப்பதற்கு “தேவ குமாரன்” என்று அழைக்கப்படுகிறார்.*

7. *வேதாகமத்தில் தேவனைப் பற்றிய பின்வரும் உண்மைகள் போதிக்கப்பட்டுள்ளன: (1) பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோர் இருக்கின்றனர். (2) இந்த மூவரும் மகிமையுள்ள ஒரு தேவத்துவத்தை ஏற்படுத்துகின்றனர். (3) அவர்கள் ஒன்றிணைந்து, ஒன்றாகவே இருக்கின்றனர். (4) அவர்கள் நித்தியமானவர்களாகவும், தனிச் சிறப்புள்ளவர்களாகவும், படைக்கப்பட்டவைகளிலிருந்து வித்தியாசமானவர்களாகவும் இருக்கின்றனர். (5) அவர்கள் ஒரே சித்தம் மற்றும் ஒரே நோக்கம் உள்ளவர்கள் ஆவார்கள்.*
8. *தேவன் எல்லாவற்றையும் படைத்தார் என்ற உண்மையின் மீது நிலை கொண்டிருக்கும் சத்தியங்கள்: (1) அவர் ஒருவரே எல்லா உண்மை நிலைகளுக்கும் பின்னணியில் இருக்கின்றார். (2) அவர் நித்தியமானவர். (3) அவர் எல்லாம் வல்லவர். (4) அவர் எல்லாம் அறிந்தவர். (5) அவர் எங்கும் இருக்கின்றார். (6) அவர் ஒருவரே உண்மையான, உயிருள்ள தேவன்.*
9. *கொலோ. 1:16, 17ல், தேவன் அவருக்குள் எல்லாவற்றையும் நிலை நிற்கச் செய்து இவ்வுலகில் தொடர்ந்து செயலாற்றுகிறார் என்று நமக்குக் கூறப்படுகிறது. தர்க்க வாதமும், உற்று நோக்கலும் கூட, ஒரு சர்வ வல்லமையுள்ள கரமானது இயற்கை விதிகளுடன் இப்பூமியை பராமரிப்பதை நமக்குக் கூறுகின்றன. அவர் தொடர்ந்து பூமிக்கும் அதன் மக்களுக்கும் காற்று, தண்ணீர் மற்றும் சூரிய வெளிச்சம் ஆகியவற்றைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.*
10. *இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரவிருக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பானது தனிப்பட்டதாகவும், குறிப்பிட்டதாகவும், உலகளாவியதாகவும் இருக்கும்.*

## இயேசு,தேவனுடைய குமாரன்

*(பாடம் 4 க்கான வினாக்கள் பக்கம் 59 ல் காணப்படுகின்றன)*

1. *இயேசு கிறிஸ்து, தேவனுடைய குமாரன் என்ற சத்தியமே கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியில் இருக்கின்றது.*

2. இயேசுவின் பிறப்பானது அவரது வம்சா வழியினரைப் பற்றிய சில குறிப்புக்களுடன் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டது. அவரது பிறப்பிடம் மற்றும் அவரது பிறப்பின் இயல்பு ஆகியவை முன்னுரைக்கப்பட்டன. அவர் எகிப்துக்கு எடுத்துக் கொண்டு செல்லப்படுவது பற்றியும், அவரது பிறப்பின் போது நடந்த மாபெரும் படுகொலைகள் பற்றியும் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள். கலிலேயாவில் அவரது வாழ்க்கை பற்றியும், எருசலேமில் அவர் ஜெயத்துடன் பிரவேசித்தது பற்றியும், அவருக்கு முன்னோடியைப் பற்றியும், மற்றும் அவருடைய ஊழியம் பற்றியும் தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்டன. அவருடைய ஊழியம், உவமைகளிலான அவரது போதனை, புறஜாதிகள் நடுவில் அவரது ஊழியம், மற்றும் யூத அதிகாரிகளால் அவர் புறக்கணிக்கப்படுதல் ஆகிய அனைத்தும் முன்னுரைக்கப்பட்டன. இயேசு காட்டிக் கொடுக்கப்படுதல் மற்றும் அவருடைய மரணம் ஆகியவை தீர்க்கதரிசனத்தில் மாபெரும் விபரங்களுடன் சித்தரிக்கப்பட்டுள்ளன. மரிக்கும் போது அவர் கூறிய வார்த்தைகளும், அவரது அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவையும் முன்னதாகவே பதிவு செய்யப்பட்டிருந்தன.
3. இயேசுவின் வாழ்க்கை பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமானது இயேசு தெய்வீகமானவர் என்பதையும், வேதாகமத்தை எழுதிய மனிதர்கள் ஏவுதல் பெற்றவர்கள் என்பதையும் காண்பிக்கின்றது.
4. இயேசு, தாம் ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பே இருந்ததாகவும், உலகம் தோன்றுவதற்கு முன்பே தாம் பிதாவினிடத்தில் இருந்ததாகவும் கூறினார்.அவர் தாம் வானத்திலிருந்து வந்ததாகவும், பூமியின்மேல் சகல அதிகாரமும் தமக்கு உண்டு என்றும் போதித்தார்.
5. இயேசு, தாம் உலகத்திற்கு வெளிச்சமாய் இருப்பதாகக் கூறினார்; பிறகு பார்வையற்ற ஒருவரை பார்வையடையும்படி செய்தார். அவர் தம்மை ஜீவ அப்பம் என்று கூறிக் கொண்டார்; ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்தார். தாமே உயிர்த்தெழுதலும் ஜீவனும் என்று அவர் கூறிக் கொண்டார்; மரித்த லாசருவை உயிரோடே எழுப்பினார்.
6. பிலாத்துவின் மனைவி, ஏரோது, சிலுவையிலறையப்பட்ட

*கள்ளன் மற்றும் யூதாஸினால் கூட இயேசுவின் நற்பண்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.*

7. கர்த்தருடைய நாள், கர்த்தருடைய பந்தி, ஞானஸ்நானம் மற்றும் நமது நாட்காட்டியில் தேதியைக் கணக்கிடும் முறை ஆகிய இவை யாவும் நமது உலகத்தின் மீது இன்றும் இயேசுவால் உண்டாகும் விளைவுகளுக்கு ஆதாரங்கள் ஆகும்.

## பரிசுத்த ஆவியானவர் யார்?

*(பாடம் 5 க்கான வினாக்கள் பக்கம் 70 ல் காணப்படுகின்றன)*

1. "என்ன?" என்பதல்ல மாறாக "யார்?" என்பதே கேள்வியாகும். ஏனென்றால், பரிசுத்த ஆவி என்பவர் இருக்கிறவராக, ஆளுமைத் தன்மை கொண்ட ஒரு தெய்வீக நபராக இருக்கின்றார்.
2. பரிசுத்த ஆவியானவர் கருத்துக்களை மதிப்பிடும் பண்பும், சிந்தையும், சித்தமும், அறிவும் மற்றும் உணர்வுகளும் உள்ளவராக இருப்பதால் இவர் வெறும் சக்தியாக மட்டுமல்ல ஒரு நபராகவும் இருக்கிறார் என்று காண்கிறோம்.
3. வல்லமைகளை அல்லது சக்திகளைத் தவறாக நடத்துகின்ற செயலானது, "துக்கப்படுத்துதல்," "நிந்தித்தல்" அல்லது அவித்துப் "போடுதல்" போன்ற வார்த்தைகளால் விளக்கப்படுவது வழக்கமல்ல - கவிதை அல்லது உருவக நடையில் மட்டுமே இவ்வாறு கையாளப்படும். இங்குள்ள வசனங்கள் கவிதை நடையிலோ அல்லது உருவக நடையிலோ உள்ள மொழி நடையில் இல்லை என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. ஒருவர் பரிசுத்த ஆவியை "துக்கப்படுத்தவோ" அல்லது "நிந்திக்கவோ" முடியும் என்றால், பரிசுத்த ஆவி ஒரு நபராகவே இருக்க வேண்டும்.
4. நித்தியமாய் இருத்தல், எல்லாம் அறிதல், எல்லா வல்லமையும் பெற்றிருத்தல், மற்றும் எங்கும் நிறைந்திருத்தல் ஆகிய பண்புகளைப் பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும் குமாரனோடும் பகிர்ந்து கொள்ளுகின்றார். பிதா மற்றும் குமாரனைப் போல் ஆவியானவரும் படைக்கும் வல்லமை பெற்றிருக்கின்றார்.

## தேவன் மனிதரானார்

*(பாடம் 6 க்கான வினாக்கள் பக்கம் 81 ல் காணப்படுகின்றன)*

1. புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் - நற்செய்திப் புத்தகங்கள் - தேவன் எவ்விதம் மனிதரானார் என்பதை வெளிப் படுத்துகின்றன.
2. இயேசுவின் பிறப்பு அவரது தொடக்கம் அல்ல. உலகம் உண்டாவதற்கு முன்பே அவர் பிதாவின் மகிமையில் இருந்தார்.
3. யோவா. 1:1-5 பின்வரும் நான்கு சத்தியங்களைப் போதிக் கின்றன: (1) இயேசு படைக்கப்பட்டவரல்ல. (2) தேவன் இந்த உலகத்தை இயேசுவின் மூலமாகவே படைத்தார். (3) இயேசு உயிர் வாழ்பவர்களுக்காக ஜீவனைக் கொடுக்கிறார். (4) இயேசு வாழ்வு மற்றும் மரணத்திற்குக் கர்த்தராய் இருக்கின்றார்.
4. இயேசு (1) பரலோகத்தை விடுதல். (2) மனிதராகுதல் . (3) மனிதர்களுக்கு ஊழியம் செய்தல். மற்றும் (4) மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தல் ஆகிய நான்கு படிகளில் கீழே இறங்கி வந்தார்.
5. தேவன் மனிதரானார் என்பதே கிறிஸ்தவத்தின் மையமான சத்தியம் ஆகும்.
6. இயேசு ஒரு கன்னிப் பெண்ணிடம் பிறந்தார் என்பதே தனிச் சிறப்பான அம்சம் ஆகும்.
7. (1) இயேசு தேவனாக இருந்தார், இருக்கின்றார். (2) இயேசு ஒரு மனிதரானார். (3) இயேசு இந்த பூமியில் தேவ - மனிதராக வாழ்ந்தார் என்ற இந்த மூன்று சத்தியங்களையும் நாம் எப்போதுமே மறக்கக் கூடாது.
8. இயேசு தேவனாக இருந்தார்: அவர் ஒரு மனிதரானது என்பது, ஒரு மனிதன் ஒரு எறும்பாக ஆவதைக் காட்டிலும் மிகப் பெரிய தாழ்மையுள்ள செயலாகும்.

## இயேசுவை நாம் எவ்விதம் கண்ணோக்குகின்றோம்

*(பாடம் 7 க்கான வினாக்கள் பக்கம் 97 ல் காணப்படுகின்றன)*

1. "இரட்சகர்" என்ற வார்த்தை, மற்றவர்களை மிகவும் அபாயமான நிலையிலிருந்து காப்பாற்றும் ஒருவரைக் குறிக்கின்றது.

2. நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிப்பதால் இயேசு ஒரு தனிச் சிறப்புள்ள இரட்சகராக இருக்கின்றார். அவர் நமது ஆவிக்குரிய இரட்சகராயிருக்கின்றார்.
3. “கிறிஸ்து” என்றால் “அபிஷேகம் பண்ணப்பட்டவர் அல்லது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்” என்று அர்த்தமாகும்.
4. இயேசுவின் ஞானஸ்நானத்தின் பொழுது தேவன் அவரைத் தமது குமாரன் என்று அறிவித்தபடியினால், நாம், இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிகின்றோம். நமக்கு மூன்று சாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளதாக அப்போஸ்தலனாகிய யோவான் கூறினார்: ஆவி, ஜலம் மற்றும் இரத்தம்.
5. பரிசுத்த ஆவி, ஜலம் மற்றும் இரத்தம் என்று பேசுகையில், அப்போஸ்தலரானவர், இயேசுவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகையில் ஆவியானவர் அவர் மீது இறங்கி வந்தார். இரத்தம் என்பது அவரது மரணத்தின்போது நடந்த நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றது.
6. இயேசுவை கர்த்தரென்றும் கிறிஸ்து என்றும் ஏற்றுக்கொள்ளும்படிக்குத் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில் பேதுரு அறைகூவல் விடுத்தார் (அப். 2:36).
7. இயேசு கர்த்தராக இருக்கும் பட்சத்தில் (அவர் அப்படியே இருக்கின்றார்), நாம் அவரது உபதேசத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, நமது வாழ்க்கையில் அவருக்கே முதலிடம் தர வேண்டும்.

## இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?

*(பாடம் 8 க்கான வினாக்கள் பக்கம் 109 ல் காணப்படுகின்றன)*

1. கர்த்தர் இந்த பூமிக்கு வந்ததுதான் மனித வரலாற்றிலேயே மாபெரும் நிகழ்ச்சியாகும். சிலுவையில் மரணமடைவதற்காக அவர் வந்ததைப் பொறுத்தே நமது இரட்சிப்பு இருக்கின்றது.
2. இயேசு முற்றிலும் மனிதராகவும் முற்றிலும் தெய்வீக மானவராகவும் இருந்தார்.
3. இயேசு முற்றிலும் தெய்வீகமானவராகவும் முற்றிலும் மனித ராகவும் இருந்தார்.
4. நமது கர்த்தர்-தமது ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்

*மூலமாக-தமது சபை என்று தாம் அழைக்கும் ஒரு மக்கள் கூட்டத்தை அழைத்துக்கொள்ள வந்தார்.*

5. *இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பயிற்சி அளித்தார், ஆனால் அவர் சென்ற பிறகு அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்காகவே அவர் அவர்களுக்குப் பயிற்சியளித்தார் என்பது உறுதி (யோவா. 14:19).*
6. *கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருப்பது என்பதன் மூலம் கிறிஸ்துவின் வாழ்வுக்கு நாம் பதில்செயல் செய்ய வேண்டும் என்பதை நிருபங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.*
7. *இல்லை, அவரது சபையாராய் இல்லாமல் நாம் இயேசுவின் வாழ்வுக்குப் பதில்செயல் செய்ய முடியாது.*
8. *இயேசுவின் சபையாராக நாம் வாழாமல், அவர் நமக்கென்று வைத்துள்ள ஊழியத்தை நம்மால் நிறைவேற்ற முடியாது.*

## சிலுவையும் சபையும்

*(பாடம் 9 க்கான வினாக்கள் பக்கம் 124 ல் காணப்படுகின்றன)*

1. *தேவனுடைய குமாரன், மனிதர்களுக்காக சிலுவையில் தமது ஜீவனைப் பலியாகத் தந்ததுதான் வேதாகம வரலாற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியாகும்.*
2. *பாவங்களுக்கான ஒரு தெய்வீக பலியும், அப்படிப் பலியானவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததும் கிறிஸ்தவத்தில் மட்டுமே மையக் கருத்தாக இருக்கின்றது.*
3. *சபையில்லாத கிறிஸ்தவம் இருக்க முடியாது; ஏனென்றால் உடல் இல்லாத தலை ஒன்று செயல்பட முடியாது, அதுபோலவே தலையில்லாத உடல் ஒன்றும் செயல்பட முடியாது.*
4. *சிலுவையானது, (1) சபையை உண்டாக்குகின்றது. (2) சபையை சுத்திகரிக்கின்றது. (3) சபையை வற்புறுத்துகின்றது அல்லது இயங்கச் செய்கின்றது.*
5. *கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தினாலும் (ரோமர் 10:10), பாவத்திலிருந்து மனந்திரும்புவதாலும் (அப். 11:18), கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதினாலும் (ரோமர் 10:10), மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப்படுவதினாலும் (கலா. 3:27),*

கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஒருவர் பிரவேசிக்க முடியும்.

6. பாவமன்னிப்பு மற்றும் ஜீவன் ஆகியவைகளைப் பெற்றுக் கொள்ளும்படியாக இயேசு நம்மை அழைக்கின்றார்.
7. இயேசுவின் சரீரமே சபையாக இருக்கின்றது.

## “சபை” என்றால் என்ன?

*(பாடம் 10 க்கான வினாக்கள் பக்கம் 136 ல் காணப்படுகின்றன)*

1. பரிசுத்த ஆவியானவரால் வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளது பற்றிப் புரிந்துகொள்ளுதல் முடிவெடுக்க உதவுவதாக உள்ளது. வார்த்தையுடைய அர்த்தங்கள், விளக்கங்கள் மற்றும் எண்ண உருவாக்கங்கள் ஆகியவை இயேசு மற்றும் அப்போஸ்தலர்களால் பயன்படுத்தப்பட்ட விதம் பற்றிப் புரிந்துகொள்ள நாம் வேதாகம உலகத்தைக் கற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (பிற்சேர்க்கை 3ஐப் பார்க்கவும்).
2. “சபை” என்ற வார்த்தையானது, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட மக்களின் அமைப்பைக் குறிக்கின்றது. “சபை” என்ற இந்த சரீரமானது ஓரிடத்தில் கூடிவரும் உள்ளூர் கிறிஸ்தவக் குழுவாக இருக்கின்றது. மேலும், உலக முழுவதிலும் இரட்சிக்கப்பட்டவர் களையும் இந்த வார்த்தையானது குறிப்பிட முடியும்.
3. சபை என்பது தேவனுடைய ஆலயமாகும் என்ற உண்மை யானது,தேவன் தமது மக்களிடத்தில் வாசம் பண்ணுகின்றார் என்று அர்த்தப்படுத்துகின்றது. இந்தக் காரணத்தினால்தான், தேவன் வாசம் பண்ணுகின்ற மக்களாக நாம் வாழ்ந்து, ஊழியம் செய்து அவரை ஆராதிக்க வேண்டும் எனப்படுகின்றது.
4. கிறிஸ்தவர்கள், “சபை” என்ற உயிருள்ள கட்டிடமாக அமைகின்றார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவரும் நிலையான வளர்ச்சி பெறுபவராய் இருக்க வேண்டும்.
5. கணவன், மனைவிக்குத் தலையாய் இருப்பது போலவே, கிறிஸ்துவும் சபைக்குத் தலையாயிருக்கின்றார். கணவன், மனைவியில் அன்பு கூருவது போலவே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூருகின்றார்.
6. விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும்

*ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் கிறிஸ்துவின் சபைக்குள் ஒருவர் பிரவேசிக்கின்றார். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு நபரையும் தேவன் தமது சபையில் சேர்த்துக் கொள்கின்றார்; மனிதர் இதைச் செய்வதில்லை.*

7. *சபையானது கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்கின்றது, அவரது ஆராதனைக்காக ஒன்று கூடுகின்றது, மற்றும் உலகத்தில் அவரது ஊழியத்தைச் செய்கின்றது. கிறிஸ்துவின் பரிசுத்த ஆவி யானவர் கிறிஸ்தவர்களில் வாசம் பண்ணுகின்றார்.*

## கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது

*(பாடம் 11 க்கான வினாக்கள் பக்கம் 162 ல் காணப்படுகின்றன)*

1. *சபையானது, பிரதான கட்டளையின் (மத். 28:20) நிறைவேற்றமாகவும், பூமியில் கிறிஸ்துவின் சரீரமாகவும் இருக்கின்றது.*
2. *அப். 2:1ல் "அவர்கள்" என்றுள்ள பிரதிப் பெயர்ச் சொல்லானது அப். 1:26ல் இருந்த "பதினோரு அப்போஸ்தலர்களை" யே குறிக்கின்றது. பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களைத் தவிர வேறு எவரும் பரிசுத்த ஆவி யானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதாக வேதாகமத்தில் எந்தப் பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை.*
3. *தேவனுடைய செய்தியை வெளிப்படுத்தவும், அந்தச் செய்தி தேவனிடத்திலிருந்தே வந்தது என்பதை உறுதிப்படுத்தவும், மற்ற கிறிஸ்தவர்களுக்கு அற்புத வரங்களைக் கொடுக்கவும் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டனர்.*
4. *அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்ற நிகழ்ச்சியானது, ஏவப்பட்ட மனிதர்களாலேயே புதிய ஏற்பாடு நமக்குக் கொடுக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றது.*
5. *கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு ஆதாரமாக அவரது அற்புதங்கள், அவரது உயிர்த்தெழுதல், தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம், சாட்சியங்களின் ஆதாரம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தது ஆகியவற்றைப் பற்றி பேதுரு பேசினார்.*

6. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இன்றியமையாததாக உள்ளது. கிறிஸ்து உயிர்த் தெழாதிருந்தால் அவர் தேவனுடைய தெய்வீகமான குமாரன் என்று எண்ணப்பட்டிருக்க முடியாது.
7. பாவத்தில் இழந்துபோன நிலையில் இருப்பதைக் காட்டிலும் மாபெரும் துன்பம் வேறெதுவும் இல்லை.
8. இரட்சிப்பின் நிபந்தனைகளைப் பொறுத்தமட்டில், மாற். 16:15, 16 விசுவாசத்தை வலியுறுத்துகின்றது; லூக். 24:46, 47 மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் மற்றும் மத். 28:18-20 ஞானஸ்நானத்தையும் வலியுறுத்துகின்றன.
9. அப். 22:16 வசனப்பகுதியானது அப். 2:38 வசனப் பகுதியுடன் தொடர்புடைய வகையில், பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள ஞானஸ்நானம் அவசியம் என்று நிரூபிக்கின்றது.

## புதிய ஏற்பாட்டின் சபை

*(பாடம் 12 க்கான வினாக்கள் பக்கம் 178 ல் காணப்படுகின்றன)*

1. "அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித் திருந்தார்கள்" என்பது ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் போதித்திருந்ததை உண்மையாய்ப் பின்பற்றியதை அர்த்தப்படுத்துகின்றது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்திற்கு இதே போன்ற உறுதியான ஈடுபாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.
2. எருசலேமில் இருந்த சபையார் சிந்தை, இருதயம் மற்றும் உபதேசம் (போதனை) ஆகியவற்றில் ஒருமைப்பாட்டைப் பகிர்ந்து கொண்டனர்.
3. இன்றைய நாட்களில் சபையானது பரிவிரக்கம் என்ற அடையாளத்தினால், தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படித லுடன் இருக்க வேண்டும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவோடும், சபையின் மற்ற எல்லா உறுப்பினர்களோடும் ஒன்றாக்கப்படுகின்றார். கிறிஸ்தவர்கள் ஒரே இருதயமும் ஒரே வாழ்க்கையும் உள்ள ஒரு குடும்பமாக இருக்கின்றார்கள்.
4. புதிய ஏற்பாட்டின் சபை எது என்பதைப் பற்றிய நமது

முடிவானது தேவனுக்கான நமது அன்றாட வாழ்க்கை, நமது ஆவிக்குரிய அடையாளம், நமது ஆராதனை மற்றும் நமது ஆவிக்குரிய ஊழியம் ஆகியவற்றில் செல்வாக்கைச் செலுத்துகின்றது.

5. அப். 2:41-47; 5:11; 7:38 மற்றும் 8:1, 3 ஆகியவை புதிய ஏற்பாட்டின் சபையானது பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கியதைக் காட்டுகின்றன.
6. கத்தோலிக்க சபையானது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அப்போஸ்தலருடைய உபதேசத்திலிருந்து வழி விலகிச் சென்றவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. மற்ற நாமகரணக் கூட்டங்கள் பதினாறாம் நூற்றாண்டில் திடீரெனத் தோன்ற ஆரம்பித்தன.
7. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தில் அமையப் பெறுகின்றார்கள்.
8. புதிய ஏற்பாட்டில் காணப்படாத பெயர் எதுவும் ஒரு குழுவைப் புதிய ஏற்பாட்டின் சபையாக அடையாளப் படுத்துவதில்லை.
9. ஆம், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், தேவனுடைய கட்டளையின்படி நிலைநாட்டப்பெற்ற புதிய ஏற்பாட்டின் சபையினுடைய அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

## தேவனுடைய மக்களுக்கு விசேஷ வார்த்தைகள்

*(பாடம் 13 க்கான வினாக்கள் பக்கம் 195 ல் காணப்படுகின்றன)*

1. தேவன் இஸ்ரவேலர்களின் அரசராக இருந்து, அவர்களின் அரசாங்கம் மற்றும் அவர்களின் மார்க்கம் ஆகியவற்றுக்குத் தலைவராக இருந்தார். இஸ்ரவேல் ஒரு தேவ அரசாக (தேவனால் ஆளப்பட்ட தேசமாக) இருந்தது.
2. சவுல் அரசர், யேகோவாவின் ஊழியராக இருக்க வேண்டியிருந்தது. அவருடைய அதிகாரமானது மோசேயின் பிரமாணத்தினால் வரையறை செய்யப்பட்டிருந்தது.
3. தானியேல் தீர்க்கதரிசனத்தின்படி, வரப்போகிறதாயிருந்த அரசு விசேஷித்ததாகும். அது மற்ற எல்லா அரசுகளின் இயல்புகளைக் காட்டிலும் மேலான இயல்பு கொண்ட நித்திய அரசாகும்.
4. பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதல் மூலமாக, “இராஜ்யம்”

என்ற வார்த்தைக்குப் பதிலாக படிப்படியாக “சபை” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் இருதயங்களில் கிறிஸ்துவின் அரச ஆளுகையானது சபையை எவ்விதம் உருவாக்கியது என்பதை இந்த வார்த்தை காண்பிக்கின்றது.

5. பவுல் தேவனுடைய ராஜ்யத்தில் இருந்தார், ஆனாலும் அவர் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதை எதிர்நோக்கியிருந்தார். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இப்பொழுது கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆளுகையின் கீழ் இருக்கின்றார்கள், ஆனால் தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடன் நித்தியத்தில் முழுமையான மற்றும் நெருங்கிய உறவில் பிரவேசிப்பார்கள்.
6. “சபை” என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 114 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்த முக்கியமான வார்த்தையின் பயன்பாட்டைப் புரிந்து கொள்ளாமல் நாம் கிறிஸ்துவினுடைய இரட்சிப்பின் வழியைப் புரிந்து கொள்ள முடியாது (பிற்சேர்க்கை 3ஐக் காணவும்).
7. அப். 19:25ல் உள்ளது போல, “சபை” (கூடிவரச் செய்து) என்ற வார்த்தையானது பொதுவாக ஒரு கூட்டத்தைக் குறிப்பதாக இருக்கின்றது.
8. புதிய ஏற்பாட்டில் “சபை” என்ற வார்த்தை வருகின்ற எல்லா இடங்களிலுமே அது மார்க்க ரீதியான அல்லது “வெளியே அழைக்கப்பட்ட” கூட்டத்தைக் குறிப்பதாக இல்லை (சில இடங்களில் இது சாதாரண கூட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது).

## சபைக்கான தெய்வீகப் பெயர்கள்

*(பாடம் 14 க்கான வினாக்கள் பக்கம் 210 ல் காணப்படுகின்றன)*

1. இயேசு அரசராக (தலையாக) இருக்கின்றார், சபையின் உறுப்பினர்கள் அவருடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் குடிமக்களாய் இருக்கின்றார்கள்.
2. கிறிஸ்து, சபையைத் தோற்றுவித்து, அதைக் கிரயம் கொண்டு, அதை உரிமையாக்கி, அதன் தலையாக விளங்குகின்றார். சபையானது “தேவனுடைய சபை” என்றும் கண்ணோக்கப்படலாம்.

3. தேவனால் சபைக்கென்று குறிப்பிட்ட பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன, அவைகள் தெய்வீக நோக்கமொன்றை நிறைவேற்றுவதால், நாம் அவற்றையே பயன்படுத்த வேண்டும்.
4. வேதாகமத்தின்படியாகவே நாம் சபையைக் குறிப்பிடும்போது, தேவன் விரும்பியபடி ஆகக்கூடிய சரியான பாதையில் நம்மை நாம் நிலைநிறுத்திக் கொள்ளுகின்றோம்.
5. கிறிஸ்தவர்கள் தேவனுடைய குடும்பத்தாராய் இருக்கின் றார்கள். அவர்களின் மனமாற்றத்தின் போது, தேவன் அவர்களைத் தமது பிள்ளைகளாகச் சுவீகரித்துக் கொள்ளுகின்றார்; கிறிஸ்துவுடன் அவர்கள் நித்திய ராஜ்யத்தின் சுதந்திரராகும் குடும்ப உரிமைப் பேற்றை அவர்களுக்குக் கொடுக்கின்றார்.
6. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் எப்படி வாழ வேண்டும் என்று போதித்தபடி வாழ முயற்சி செய்து, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் "கிறிஸ்தவர்" என்னப்படுகின்றார்.
7. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று பவுல் கூறினார்.
8. மனமாற்றத்தில் ஒருவர் தேவனுடைய பிள்ளையாக சுவீகரிக்கப்படுகின்றார். அவர் அல்லது அவள் ஒரு நித்திய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளுவதோடு,தேவனுடைய பூமிக்குரிய குடும்பத்தின் பெலத்தையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. தேவன் பிதாவாக இருக்கின்றார், இயேசு மூத்த சகோதரராக இருக்கின்றார், எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாய் இருக்கின்றார்கள்.
9. புதிய ஏற்பாட்டில் "சீஷன்" என்ற வார்த்தை 238 முறைகள் வருகின்றது.
10. சீஷன் என்பவர் தம்மைக் காட்டிலும் பெரியவருக்குத் தம்மை ஒப்புக் கொடுத்து, பெரியவரிடமிருந்து தொடர்ந்து கற்றுக் கொள்பவராயிருக்கின்றார். அவர் கேட்பவராக, கற்பவராக, தொடர்ந்து கற்றுக் கொள்பவராக இருக்கின்றார்.
11. "பரிசுத்தவான்கள்" தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட வர்கள். ஒருவர் கிறிஸ்தவராகும்போது, "பரிசுத்தவானாக", தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவராக ஆகின்றார். பரிசுத்தவான் என்பவர் பரிசுத்த அழைப்பினால் அழைக்கப்பட்டு, பரிசுத்த நடக்கையுடன் வாழ்ந்து, கடைசி

*நாளில் தேவனுக்கு முன்பாக "பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், கண்டிக்கப்படாதவராயும்" இருப்பதற்கு நாடுகின்றார் (கொலோ. 1:21ஐக் காணவும்).*

## கிறிஸ்து, சபையின் தலைவர்

*(பாடம் 15 க்கான வினாக்கள் பக்கம் 220 ல் காணப்படுகின்றன)*

1. *முன்னால் நின்று வழிநடத்தாத எந்தத் தலைமைத்துவமும் உண்மையான தலைமைத்துவம் அல்ல.*
2. *இயேசு தமது பிரமாணத்தினால் சபையை வழிநடத்துகின்றார். (எபே. 1:20, 23; கொலோ. 1:18, 19ஐக் காணவும்).*
3. *காலங்களின் முடிவு வரையிலும் கிறிஸ்து சபையின் தலைவராக இருந்து ஆளுகை செய்வார்.*
4. *பரிபூரணமான வாழ்க்கையினாலும், பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் தன்மையினாலும் இயேசு நமது பரிபூரணமான இரட்சகரானார்.*
5. *நாம் எதை நோக்குகின்றோமோ அதாகவே நாம் ஆகின்றோம். கிறிஸ்தவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்குக் கிறிஸ்துவின் வாழ்வையே முன் மாதிரியாக நோக்குகின்றார்கள். அவர் தமது பரிபூரணமான வாழ்க்கையினால் அவர்களை என்றென்றும் வழி நடத்துகின்றார்.*
6. *தாழ்மை மற்றும் ஊழியத்தில் கிறிஸ்துவின் எடுத்துக்காட்டை நாம் பின்பற்ற வேண்டும்.*
7. *எந்த வகையில் எல்லாம் தேவையாய் இருக்கிறதோ, அந்த வழியில் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்து கொள்வதினால் கிறிஸ்தவர்கள் "ஒருவர் பாதங்களை ஒருவர் கழுவுகின்றார்கள்."*

## சபையில் பிரவேசித்தல்

*(பாடம் 16 க்கான வினாக்கள் பக்கம் 230 ல் காணப்படுகின்றன)*

1. *கர்த்தருடைய சபையின் விலையற்ற மதிப்பானது, அதன் தெய்வீகத் தொடக்கம், அதன் மதிப்புயர்ந்த விலைக் கிரயம், மற்றும் அதன் மீது வைக்கப்பட்டுள்ள மாபெரும் மதிப்பீடு ஆகியவற்றால் காண்பிக்கப்படுகின்றது.*
2. *ஆம், பிரதான கட்டளையின் நிபந்தனைகள் இன்றும் நம்மைக்*

கட்டுப்படுத்துகின்றன. உலகத்தின் முடிவு வரையிலும் இவை அமுலில் இருக்கும் (மத். 28:18-20).

3. சிலுவையிலிருந்த கள்ளனைப்போல நாம் இரட்சிக்கப்பட முடியாது, ஏனென்றால் அந்தக் கள்ளன் பழைய பிரமாணத்தின் கீழ் மரித்தான். கிறிஸ்து நமக்காக மரித்திருப்பதால், நாம் இப்பொழுது அவருடைய பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.
4. இன்றைய நாட்களில் ஒருவர் கிறிஸ்துவின் சபை உறுப்பினராக வேண்டுமென்றால், அவர் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 2:38, 47).
5. இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தருடைய சபையில் மனிதர்கள் சேர்ப்பதில்லை; தேவன் மட்டுமே அதைச் செய்கின்றார்.
6. கிறிஸ்தவராவதற்கு நடபடிகள் புத்தகத்தில் செய்யப் பட்டவைகளை இன்று ஒருவர் செய்யும்போது, நடபடிகள் புத்தகத்தில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந் தவர்களுக்குச் செய்ததை தேவன் இவருக்கும் செய்வார்.
7. அப். 2ல் மக்கள் செய்த விதமாகவே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதினால் ஒருவர், தாம் கிறிஸ்துவின் சபையில் இருப்பதை உறுதி செய்து கொள்ள முடியும். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவைகளாதலால், அவர் இதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்.
8. ஆம், இரட்சிப்புக்கான கர்த்தருடைய நிபந்தனைகள் களங்கப்படுத்தப்படும்போது, பெரும் சேதம் செய்யப் படுகின்றது. அந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் கர்த்தருடைய திட்டத்தில் அவைகளின் முக்கியத்துவத்தைக் காணுதல் ஆகியவற்றைச் செய்யாமல் ஒருவரும் இயேசுவின் கட்டளையை வினயமாய்க் கைக்கொள்ள முடியாது.

## சபையின் ஒருமைப்பாடு

*(பாடம் 17 க்கான வினாக்கள் பக்கம் 244 ல் காணப்படுகின்றன)*

1. ஒருமைப்பாடானது கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தை மேம்படுத்துவதால் அது இனிமையானது. கிறிஸ்து ஒருமைப்

பாட்டிற்காக ஜெபித்ததால் அது நல்லது.

2. கிறிஸ்து தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, விசுவாசிகளின் ஒருமைப்பாட்டிற்காக ஜெபித்தார்.
3. ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே பவுல் வேண்டுகோள் விடுத்தார்.
4. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடும், ஒருவர் ஒருவரோடும் குடும்ப உறுப்பினர்கள் போல ஒன்றாயிருக்கின்றார்கள்.
5. கிறிஸ்துவுக்குள் ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது, அவர்/அவள் மற்ற கிறிஸ்தவர்களுடன் ஒன்றாகின்றார்/ள்.
6. போதனையிலும் விசுவாசத்திலும் சபை ஒருமையுடைய தாகின்றது. கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும் ஒவ்வொரு வருக்கும் பரிசுத்த ஆவியானவரால் ஒருமைப்பாடு கொடுக்கப் படுகின்றது, ஆனால் வேதவசனங்களின் போதனைகளுக்குக் கீழ்ப்படிவதினாலேயே ஒவ்வொரு கிறிஸ்தவரும் அந்த ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முடியும்.
7. கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தலே ஒருமைப் பாட்டை உண்டாக்குகின்றது.
8. ஒவ்வொரு கிறிஸ்தவரும் வேதாகமத்தின் போதனைக்குத் தம்மை ஒப்புக் கொடுக்கும்போதுதான் போதனையில் ஒருமைப்பாடு வருகின்றது, அன்றாட வாழ்க்கையில் ஒருமைப்பாடு என்பது ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளுகிறதினால் வருகின்றது. சபைக்கு இவ்விரண்டுமே தேவைப்படுகின்றன.
9. ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்வதற்கு, கிறிஸ்தவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளின்மேல் அன்புடனும் கிருபையுடனும் கவனிப்பு மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருமே தங்கள் சொந்தக் கருத்து மற்றும் விருப்பங்களை மதிப்பிடாமல், சுயநலத்திற்காக எதையும் செய்யாமல் இருக்க வேண்டும்.

## நித்திய வெகுமதியும் நித்திய தண்டனையும்

*(பாடம் 18 க்கான வினாக்கள் பக்கம் 262 ல் காணப்படுகின்றன)*

1. தேவன் அன்புள்ளவராய், இரக்கமுள்ளவராய், சகிப்புத்

தன்மையுள்ளவராய் இருக்கும் அதே வேளையில், கோபமுள்ள வராகவும், பழிவாங்குபவராகவும் இருக்கின்றார். தேவன் இருவகைப்பட்டவராகவும், கண்டிப்புள்ளவராகவும் இருக்கின்றார்.

2. துன்மார்க்கர் முடிவின்றி, நித்திய காலத்திற்கும் தண்டிக்கப் படுவார்கள். வெளி. 14:11ல் அவர்களின் வாதையானது "சதா காலங்களிலும்" இருக்கும் என்று கூறப்படுகின்றது.
3. நரகத்திற்கு அனுப்படுகின்றவர்கள் தேவனை விட்டுப் பிரிக்கப்பட்டு, பிசாசு மற்றும் அவன் தூதர்களுடன், அக்கினி மற்றும் கந்தகத்தினால் வாதிக்கப்பட்டு, புறம்பான இருளில் தேவனுடைய பழிவாங்குதலினால் உபத்திரவப்படுவார்கள்.
4. கடினமும், மனந்திரும்பாத இருதயங்களும் உள்ளவர்களாகி, தேவனை அறியாமல், சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் இருக்கின்ற மக்கள் என்று தண்டிக்கப்படுவர்களைப் பற்றி பவுல் விவரித்தார்.
5. பரலோகத்தை அடைந்து, நரகத்தின் பயங்கரங்களுக்குத் தப்பிப்பதே நமது மாபெரும் நோக்கமாக இருக்க வேண்டும்.
6. பழைய பிரமாணத்தின் கீழ் இருந்தவர்களுக்கு நீண்ட ஆயுள் மற்றும் வளமான செல்வத்துடன் கானான் நாடு வாக்களிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கோ பரலோகத்தில் என்றென்றுமான ஒரு இடம் வாக்களிக்கப்பட்டிருக்கின்றது.
7. "பரலோகம்" என்ற வார்த்தை மூன்று மாறுபட்ட பகுதிகளைக் குறிப்பிடுகின்றது: (1) மேகங்கள் உள்ள மற்றும் பறவைகள் பறக்கின்ற வானம்; (2) நட்சத்திரங்கள் மற்றும் வான் பொருட்கள் நிறைந்துள்ள ஆகாயம்; மற்றும் (3) தேவன் வாசம் பண்ணும் இடம்.
8. தேவன் நமது வெளிச்சமாக இருப்பதால், சூரியன், சந்திரன் அல்லது ஒரு விளக்கு ஆகியவை நமக்கிருக்காது. ஜீவவிருட்சத்தை நாம் பெறுவதால், சரீரப் பிரகாரமான உணவு நமக்குத் தேவைப்படாது.
9. தேவனுடைய சித்தத்தின்படி செய்கின்றவர்களே பரலோகத் திற்குச் செல்வார்கள்.

## மனந்திரும்புதல்
## பாட வினாக்களுக்கான பதில்கள்

*(பாடம் 19 க்கான வினாக்கள் பக்கம் 277 ல் காணப்படுகின்றன)*

1. *ஐசுவரியவானின் மரணத்திற்குப் பின்பு, அவனது முன்னுரிமைகள் மாறின. அவன் தனது ஆத்துமாவின் நிலைபற்றியும், தனது சகோதரர்களின் ஆவிக்குரிய நிலை பற்றியும் கவலைப்படத் தொடங்கினான்.*
2. *"மனந்திரும்புதல்" என்பது மூலைக்கல் போன்ற வார்த்தையாகும், ஏனென்றால் மனந்திரும்பியவர்கள் மட்டுமே கிறிஸ்தவர்களாக முடியும். உண்மையில், நித்திய ஜீவனுக்கான கதவானது உண்மையாக மனந்திரும்பியவர்களுக்கே திறக்கப்பட்டதாய் இருக்கின்றது.*
3. *யூதாஸின் மனஸ்தாபமானது (மத். 27:3), மனந்திரும்புதல் என்பது மனஸ்தாபத்தைவிட மேலானது என்பதை விளக்கப் படுத்துகின்றது. யூதாஸ், தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக மனஸ்தாபப்பட்டான், ஆனால் அவன் மனந்திரும்பவில்லை.*
4. *தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலுக்கு முந்தியதாகவும், மனந்திரும்புதலை உண்டாக்குகிறதாகவும் இருக்கின்றது. தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலின் செயல்முறைப் பாகங்களில் ஒன்றாக இருக்கின்றது, என்றாலும் அதுவே மனந்திரும்புதலாகி விடாது.*
5. *சவுல் தனது சித்தத்தில், தீர்மானமானமாற்றத்தை மேற் கொண்டது அவரது மனந்திரும்புதலைத் தெளிவாகக் காட்டியது. அவர் கிறிஸ்துவின் சபையாரைத் துன்பப் படுத்துவதை நிறுத்தி விட்டு, தமது வாழ்க்கை முழுவதையும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தார்.*
6. *தெசலோனிக்கேயர்கள், "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்காக விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதற்காக" (1 தெச. 1:9) பவுல் அவர்களைப் பாராட்டினார். அவர்கள் பாவத்திலிருந்து திரும்பினதில்மட்டுமல்ல, தேவனிடத்திற்கும் திரும்பித் தங்கள் மனந்திரும்புதலை விளக்கப்படுத்தினார்கள்.*
7. *மனந்திரும்புதல் என்பது பாவத்தை அறிக்கையிடுவதைக்*

காட்டிலும் மேலானதாக, பாவத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவி னிடத்தில் திரும்புவதாக இருக்க வேண்டும். சிலர், தங்கள் பாவங்களை வேறொரு நபரிடம் அறிக்கையிடுவதே மனந்திரும்புதல் என்று எண்ணுகின்றார்கள். நமது பாவங்களை ஒப்புக் கொள்வது முக்கியமானதேயாகும் (யாக். 5:16), ஆனால் பாவப் பழக்கங்களைக் கைவிடுவது அதைவிட முக்கியமானதாகும்.

8. தேவனுடைய நற்தன்மை, வெகுமதியின் வாக்குத்தத்தம், தண்டனையின் பயங்கரம் ஆகியவையே மனந்திரும்புதலுக் கான வசனரீதியான மூன்று ஊக்குவிப்புகள் ஆகும்.

## இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?

*(பாடம் 20 க்கான வினாக்கள் பக்கம் 301 ல் காணப்படுகின்றன)*

1. பரலோகத்தின் ஒரே வழியாக இயேசு இருப்பதால், நாம் அவருக்கு அளிக்கும் பதில்தான், நித்தியத்தை நாம் எங்கு கழிப்போம் என்பதைத் தீர்மானம் செய்கிறது.
2. பாவம் என்னதென்று புரியாத நிலையில் இருப்பதால் பிறந்த குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியது தேவையில்லை.
3. பாவங்களுக்கு மன்னிப்புப்பெறுவதற்கு அல்லது பாவத் திலிருந்து மீட்கப்படுவதற்கு ஞானஸ்நானம் தேவை.
4. புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளம் காணப் பின்வரும் வினாக்களைக் கேளுங்கள்: "அவர்கள் புதிய ஏற்பாட்டின் சபையாராக மட்டுமே இருக்க முயற்சி செய்கின்றார்களா?"; "ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கின்றார்களா?"; "இசைக் கருவிகளின் துணையின்றி அவர்கள் பாடுகின்றார்களா?"; "இயேசுவின் நாமத்தில் அவர்கள் ஜெபிக்கிறார்களா?"; "ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் அவர்கள் தங்கள் வருமானத்திலிருந்து காணிக்கை கொடுக்கின்றார்களா?"; "அவர்களின் அமைப்பு முறை எவ்விதம் உள்ளது?"; "அவர்களுக்கு இப்பூமிக்குரிய தலைமையிடம் எதுவும் உள்ளதா?"; "அவர்களின் ஊழியம் என்ன?"
5. ரோமர் 6:4 ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் செய்யப்படுதல் என்று போதிக்கிறது.

6. கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராய் இருக்கிறார் என்பதே, கிறிஸ்தவரின் வாழ்வைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும் சிறந்த வழியாகும்.
7. கிறிஸ்து, தேவனுக்கு விசுவாசத்துடன் கீழ்ப்படிந்தது போலவே கிறிஸ்தவரும் இருப்பதற்காகவே, ஒரு கிறிஸ்தவர் தேவனுடைய வார்த்தையுடன் நெருங்கியிருக்கிறார்.
8. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அல்லது கர்த்தருடைய நாளிலும் கிறிஸ்தவர்கள் ஆராதனைக்கு ஒன்றுகூடும்போது, பாடல்கள், ஜெபம்,தேவனுடைய வசனத்தைக் கற்றுக் கொள்ளுதல், கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றல், தங்கள் பணத்தைக் காணிக்கை கொடுத்தல் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றனர்.
9. இயேசு, கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தியபோது, புளிப்பில்லாத அப்பம் மற்றும் திராட்ச இரசம் ஆகிய இரண்டு பொருட்களைப் பயன்படுத்தினார்.
10. ஒரு கிறிஸ்தவராகி, கிறிஸ்தவராக வாழ வேண்டுமென்றால் நீங்கள் (1) கிறிஸ்துவினிடத்தில் வருதல், (2) அவருக்காக வாழத் தொடங்குதல், (3) மற்ற கிறிஸ்தவர்களுடன் தவறாமல் ஆராதித்தல், மற்றும் (4) மற்றவர்களுக்கு பணி செய்யத் தொடங்குதல் என்ற நான்கு படிகளை மேற்கொள்ள வேண்டும்.

# பிற்சேர்க்கை 2

# சத்திய வசனத்தைச் சரியாகக் கையாள கற்றலில் உதவிகள்

> *"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதை யாயிரு" (2 தீமோ. 2:15).*

*சத்திய வசனத்தை(வேதாகமத்தை)ச் சரியாக கையாளுவது மிகவும் முக்கியமானதாகும். இதன்பொருள், மற்றவைகளுடன் கூட, பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் உள்ள வேறு பாட்டைப் புரிந்து கொள்வது என்பதாகும். பழைய ஏற்பாடு நிழல், புதிய ஏற்பாடு நிஜம் (எபி. 10:1). பழைய ஏற்பாடு "சிலுவையில் அறையப்பட்டுள்ளது", புதிய ஏற்பாடே இப்பொழுது நம்மை ஆவிக்குரிய முறையில் கட்டுப்படுத்துகின்றது (கொலோ. 2:14). தேவன் தமது வாக்குத்தத்தங்களை எவ்விதம் எப்போதும் காத்துக் கொள்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளதால் பழைய ஏற்பாடு மதிப்புமிக்கதாகும் (1 கொரி. 10:6). பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன, அவைகள் புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட்டன. (அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணையைப் படிக்கவும்.)*

**சத்திய வசனத்தைச் சரியாகக் கையாளுதல் (2 தீமோ. 2:15)**

| *பழைய ஏற்பாடு* | *புதிய ஏற்பாடு* |
|---|---|
| **ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்கள்** *(ஆதி. 3:15; 12:3)* | **நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தங்கள்** |
| *1. இராஜ்யம் நிலைநாட்டப் படுதல் (தானி. 2:44)* | *மாற். 9:1; அப். 1:8; 2:1-4; லூக். 22:29, 30; 1 கொரி. 11:23* |
| *2. கர்த்தருடைய வீடு கட்டப் படுதல் (ஏசா. 2:2, 3)* | *எபி. 10:21; 1 தீமோ. 3:15* |
| *"கடைசி நாட்களில்" நடக்கும்* | *அப். 2:16-17; எபி. 1:1, 2* |
| *எருசலேமில் துவங்கும்* | *லூக். 24:46, 47; அப். 1:4-8* |
| *எல்லா நாட்டவரும் அனுமதிக்கப்படுவார்கள்.* | *அப். 2:9; ரோமர் 1:16* |
| *3. கிறிஸ்து இராஜாவா யிருப்பார் (எரே. 23:5, 6)* | *மத். 28:18; அப். 2:29-33* |
| *4. புதிய உடன்படிக்கை கட்டுப் படுத்தும் (எரே. 31:31)* | *மத். 16:18, 19; அப். 2:36-38; எபி. 9:15-17* |
| *5. பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல் (யோவே. 2:28)* | *அப். 2:16-21* |

*சபையைப் பற்றிச் செய்யப்பட்ட எல்லா வாக்குத்தத்தங்களும் அப். 2ல் நிறைவேற்றப்பட்டன, இதில் ஒரு நாள் பெந்தெகொஸ்தே நாளன்று நடந்த நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*அப். 2க்கு* ***முன்னால்,*** *ராஜ்யத்தைப்பற்றி கூறும் ஒவ்வொரு வசனமும், அது* ***எதிர் காலத்தில்*** *வரப்போவதாகவே கூறுகின்றன (ஏசா. 2:2-4; மீகா 4:1, 2; தானி. 2:44; மத். 3:1, 2; 6:9, 10; 16:18; மாற். 9:1).*

*அப். 2: பெந்தெகொஸ்தே*

*அப். 2க்குப்* ***பிறகு*** *இராஜ்யத்தைப் பற்றிக்கூறும் ஒவ்வொரு வசனமும், அது* ***இருப்பதாகவே*** *கூறுகின்றன (அப். 2:47; கொலோ. 1:13, 14).*

# புதிதான உள்ளூர் சபை ஒன்றை வேதாகமத்தின்படியாக அமைப்பது எவ்விதம்

***சுய ஆளுகை பெற்ற ஒரு அமைப்பாக*** - *கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு உள்ளூர் சபையும் ஒரு தனிப்பட்ட, சுய ஆளுகையுள்ள அலகு ஆகும். எந்த ஒரு உள்ளூர் சபையும், இன்னொரு உள்ளூர் சபைக்கு மேலானதாக எப்பொழுதுமே இருப்பதில்லை. சபைகளின் கூட்டமைப்பு என்று ஒன்றும் இருப்பதில்லை, மற்றும் உள்ளூர் சபையைவிடப் பெரிதான வேறொரு அமைப்பு எதுவும் இல்லை.*

***கிறிஸ்துவின் சரீரமாக*** - *வேதாகமத்தில், சபையானது "கிறிஸ்துவின் சரீரம்" என்று அழைக்கப்படுகிறது. இவ்வுருவகக் கூற்றில் கிறிஸ்துவே "சரீரத்தின் தலையாக" இருப்பதை நாம் காணுகின்றோம் (கொலோ. 1:18; எபே. 1:22). இயல்பான உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு பணி இருப்பது போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும் உள்ளது. சபையின் எந்த ஒரு உறுப்பினரும், இன்னொரு உறுப்பினரைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராக இருப்பதில்லை. அனைவரும் தத்தமது இடத்தைப் பெற்று, முழு சரீரமாகிய சபையின் நலனில் தங்களது பங்கை நிறைவேற்றுகின்றனர்.*

***இயேசு ஒருவரே தலைவராக*** - *கிறிஸ்துவே "சபையின் தலைவராக" இருக்கிறார், அவர் சகல அதிகாரமும் பெற்றிருக்கிறார் (மத். 28:18). சபையின் அமைப்பை எவ்வழியிலும் மாற்றுவதற்கு எவரொருவரும் அனுமதிக்கப் படுவதில்லை, ஏனெனில் அவ்வாறு செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை.*

***மூப்பர்களின் வழி நடத்துதலின் கீழ் செயல்படுதல்*** - *ஒரு உள்ளூர் சபையானது எண்ணிக்கையிலும், ஆவிக்குரிய மனப்பக்குவத்திலும் வளர்ச்சியடையும்போது, அவ்வுள்ளூர் சபையிலிருந்து மனிதர்கள், மூப்பர்களாகப் பணிபுரிவதற்காக நியமிக்கப்பட வேண்டும். இம்மனிதர்கள் அவ்வுள்ளூர் சபையாராலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; அவர்கள் தாங்களாகவே சுயநியமனம் செய்து கொள்ள முடியாது. மூப்பர்கள், "மேய்ப்பர்கள்" என்றும் அழைக்கப்படுகின்றனர், அவர்கள் மந்தையைக் கண்காணிப்பவர்களாக ஊழியம் செய்கின்றனர் (1 பேது. 5:1-5). மூப்பர்களுக்கான தகுதிகள் 1 தீமோ. 3:1-8 மற்றும் தீத்து 1:5-8 ஆகிய வசனப்பகுதிகளில் காணப்படுகின்றன. மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்கள்*

*நியமிக்கப்படாமலேயே சபையானது நிலைநாட்டப்படலாம். முதலில், இவர்கள் இல்லாமலேயே சபையானது இருக்க வேண்டும், ஏனெனில் இப்பொறுப்பில் பணிபுரிய நியமிக்கப்படுகிறவர்கள் அநேக ஆண்டுகள் அனுபவத்தின் மூலம் இப்பணிக்கேற்ற தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

**பணிபுரிய நியமிக்கப்பட்ட உதவிக்காரர்களோடு** *- உள்ளூர் சபையில் பணிபுரிய, மனிதர்கள் உதவிக்காரர்களாகவும் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள், மூப்பர்களின் கீழ் பணிபுரிகின்றனர் (பிலி. 1:1; அப். 20:28). இவர்களுக்கான தகுதிகள் 1 தீமோ. 3:8-13ல் காணப்படுகின்றன.*

**கிறிஸ்தவ ஆண்**

*அநேக வழிகளில், கிறிஸ்தவப் பெண்களுக்கு உள்ள அதே பொறுப்புகளை கிறிஸ்தவ ஆண்களும் பெற்றிருக்கின்றனர். இரு சாராருமே சபை ஆராதனை முறைமைகளில் விசுவாசத்துடன் பங்கேற்க வேண்டும் (எபி. 10:25), தாராளமாய்க் கொடுக்க வேண்டும் (1 கொரி. 16:2), பரிசுத்தமான வாழ்க்கை நடத்த வேண்டும் (யாக். 1:27). நற்செய்திப் பணிபுரிய வேண்டும் (மத். 28:19, 20), வேதாகமத்தைப் படிக்க வேண்டும் (2 தீமோ. 2:15; அப். 17:11ஐக் காணவும்), மற்றும் ஆவிக்குரிய முறையில் வளர வேண்டும் (1 பேது. 2:2).*

## கிறிஸ்தவ மனிதர் செய்யக் கூடாதவை என்ன:

1. *அவர் தமது மனைவி மற்றும் பிள்ளைகளைத் தகாத முறையில் நடத்தக்கூடாது (எபே. 5:25-31; 1 பேது. 3:7; 1 தெச. 2:11, 12).*
2. *அவர் வன்முறையாளராய் இருக்கக் கூடாது (ரோமர் 12:18).*
3. *அவர் வேசித்தனம் செய்கிறவராய் இருக்கக் கூடாது (1 கொரி. 6:18, 19).*
4. *அவர் சுகபோகப் பிரியராய் இருக்கக் கூடாது (2 தீமோ. 3:4; தீத்து 3:3).*
5. *அவர் உணர்வற்றவராகவோ அல்லது மனஎழுச்சியற்றவராகவோ இருக்கக் கூடாது (லூக். 22:62; யோவா. 11:35; அப். 20:37).*

## கிறிஸ்தவ மனிதர் செய்ய வேண்டியவைகள் என்ன:

1. *அவர் கர்த்தருடைய சபையில் வழிநடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்பவராய் இருக்க வேண்டும் (1 தீமோ. 2:8-15; 1 கொரி. 14:33, 36).*
2. *அவர் தமது குடும்பத்தை அன்புடன் வழிநடத்துபவராக இருக்க வேண்டும் (எபே. 5:21-33; கொலோ. 3:18-21; 1 பேது. 3:1-6; 1 கொரி. 11:2-5).*
3. *அவர் தமது குடும்பத்தின் ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்பவராய் இருக்க வேண்டும் (1 தீமோ. 5:8).*
4. *அவர் தமது பிள்ளைகள் சரியான முறையில் வளர்க்கப் படுகிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்பவராய் இருக்க வேண்டும் (எபே. 6:4).*

**ஆண்களுக்கு புதிய ஏற்பாட்டின் "முன்னுதாரணப் பாத்திரங்கள்"**

1. *சபையின் வழிகாட்டிகளுக்குரிய தகுதிகளை எல்லாக் கிறிஸ்தவர்களும் அடைய முயற்சி செய்ய வேண்டும்.*
2. *அவர்கள் இயேசுவைப் போலவே ஊழியம் செய்யும் - முன்னோடிகளாய் இருக்க வேண்டும் (லூக். 22:27).*
3. *மனிதர்கள், பர்னபாவைப் போல தாராளமாய் நிதியுதவி அளிப்பவர்களாகவும், ஆறுதல் வார்த்தைகள் கூறுபவர்களாக வும் இருக்க வேண்டும் (அப். 4:36, 37).*
4. *மனிதர்கள், பிலேமோனைப் போல் சக கிறிஸ்தவர்களுக்குத் தங்கள் இல்லங்களில் தாராளமாய் இடமளிக்க வேண்டும் (பிலே. 2) மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து, சகோதரர்களுக்குச் சிறந்த செயல்களைச் செய்ய வேண்டும் (பிலே. 10, 20).*

## வேதவசனத்தின்படி, கிறிஸ்தவப் பெண்மணி செய்யக் கூடாதவைகள் என்ன:

1. *சபை கூடுமிடத்தில் சபையாரை வழிநடத்தும் பணி செய்வது பெண்ணுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது (1 கொரி. 14:34, 35; 14:19, 23, 26, 28ஐக் காண்க). பிரசங்கியார்களே சபையில் பேச வேண்டும், எனவே கிறிஸ்தவப் பெண்மணிகள் பிரசங்கியார்களாகப் பணிபுரிய முடியாது.*
2. *ஆண்கள்மேல் அதிகாரம் செலுத்துவது பெண்களுக்குத் தடை செய்யப் பட்டுள்ளது, பெண்கள் மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ பணிபுரிய முடியாது (1 தீமோ. 2:12; 3:2).*
3. *பெண்கள் தமது கணவரின் அதிகாரத்தை மறுப்பவர்களாய்க் காணப்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது (1 கொரி. 11).*

## வேதவசனத்தின்படி, கிறிஸ்தவப் பெண்மணி செய்யக் கூடியவைகள் என்ன

1. *ஆண்கள்மீது அதிகாரம் செலுத்தாத வகையில் உள்ள செயல் பாடுகளில், வழிநடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுச் செயல்படுவது பெண்களுக்குத் தடை செய்யப்படுவதில்லை.*
2. *மற்ற பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் போதிப்பது அவளுக்குத் தடை செய்யப்படவில்லை. சில சூழ்நிலைகளில் அவள் ஆண்களுக்குப் போதிக்கவோ அல்லது போதனையில் உதவி செய்யவோ அவளுக்குத் தடையில்லை (அப். 18:24-28; தீத்து 2:4-5).*
3. *தனி நபர்களைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தும் சொந்த ஊழியத்தைச் செய்வதற்கு அவளுக்குத் தடையில்லை.*
4. *வேதவசனத்தின்படியான எந்த ஒரு பணியையும் சபைக்கென்று நிறைவேற்றி, அதன்மூலம் ஊதியம் பெறுவதற்குக் கூட அவளுக்குத் தடை விதிக்கப்படவில்லை.*

**பெண்களுக்கு புதிய ஏற்பாட்டின் "முன்னுதாரணப் பாத்திரங்கள்"**

1. *இயேசுவுடன் கூடச் சென்று அவரது போதனைக்கு பொருளாதார முறையில் உதவி செய்த பெண்கள் (மத். 27:55; லூக். 8:1-3).*
2. *லாசருவின் சகோதரியாகிய மரியாள், இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, கர்த்தருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள் (லூக். 10:39, 42).*
3. *மகதலேனா மரியாள், இயேசுவுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்துப் பின்பற்றினாள், உயிர்த்தெழுந்த கர்த்தரைப்பற்றி மற்றவர்களுக்குக் கூற ஆவலுள்ளவளாயிருந்தாள் (யோவா. 20:1-18).*
4. *தொற்காள் அல்லது தபீத்தாள் என்பவள் "நற்கிரியைகளையும், தருமங்களையும்" மிகுதியாய்ச் செய்துவந்தாள் (அப். 9:36).*
5. *பெபேயாள் என்பவள் "சபையின் ஊழியக்காரியாக" இருந்து, பவுலுக்கு உதவியாய் செயல்பட்டாள் (ரோமர் 16:1-2).*
6. *பிரிஸ்கில்லாள் என்பவள் ஒரு உண்மையுள்ள மனைவியாகவும், அப்போஸ்தலரின் உடன் ஊழியக்காரியாகவும், ஒரு ஊழியக்காரியாகவும் செயல்பட்டாள். அவள் தனது கணவருடன் இணைந்து தனது சொந்த வீட்டிலே சபையை நடத்துவதில் உதவியாயிருந்தாள். (ரோமர் 16:3-5; அப். 18:1-3, 24-28 ஆகியவற்றைக் காண்க.)*

## மூப்பர்கள் எப்படியிருக்க வேண்டும், எல்லாக் கிறிஸ்தவர்களும் எப்படியிருக்க வேண்டும்

| மூப்பர்கள் | பண்புகள் | எல்லாக் கிறிஸ்தவர்கள் |
|---|---|---|
| *1 தீமோ. 3:2* | *நிந்திக்கப்படாதவர் (குற்றம் சாட்டப்படாதவர்)* | *1 தீமோ. 5:7; 6:13* |
| *1 தீமோ. 3:2* | *கட்டுப்பாடுள்ளவர் (ஜாக்கிரதையுள்ளவர்)* | *1 பேது. 1:13; 4:7; 5:8* |
| *1 தீமோ. 3:2* | *எச்சரிக்கை உணர்வுள்ளவர் (தெளிந்த புத்தியுள்ளவர்)* | *தீத்து 2:2, 5; ரோமர் 12:3* |
| *1 தீமோ. 3:2* | *உபசரிக்கும் தன்மையுள்ளவர்* | *ரோமர் 12:13; எபி. 13:2* |
| *1 தீமோ. 3:2* | *போதிப்பதில் வல்லவர்* | *எபி. 5:12* |
| *1 தீமோ. 3:3* | *மது அருந்தாதவர் (குடிகாரராயில்லாதவர்)* | *தீத்து 2:3; எபே. 5:18* |
| *1 தீமோ. 3:3* | *சாந்தமுள்ளவர் (பொறுமையுள்ளவர்)* | *பிலி. 4:5; கொலோ. 3:12, 13; தீத்து 3:2* |
| *1 தீமோ. 3:3* | *போராடாதவர் (சண்டை பண்ணாதவர், கலகம் செய்யாதவர்)* | *யாக். 4:2; 2 தீமோ. 2:24* |
| *1 தீமோ. 3:3* | *பண ஆசை இல்லாதவர்* | *1 தீமோ. 6:10; 2 தீமோ. 3:2* |

| மூப்பர்கள் | பண்புகள் | எல்லாக் கிறிஸ்தவர்கள் |
|---|---|---|
| *1 தீமோ. 3:4* | நல்லொழுக்கமும், கீழ்ப்படிதலுமுள்ள பிள்ளைகளையுடையவர் | *எபே. 6:1-4* |
| *1தீமோ. 3:7* | புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவர் | *1 பேது. 2:12-16* |
| *தீத்து 1:8* | நீதிமான் (நேர்மையுள்ளவர்) | *கொலோ. 4:1* |
| *தீத்து 1:8* | பக்தியுள்ளவர் (பரிசுத்தவான்) | *எபே. 4:24; 1 தீமோ. 2:8* |
| *தீத்து 1:8* | இச்சையடக்கம் உள்ளவர் (கட்டுப்பாடுள்ளவர்) | *கலா. 5:23* |

---

எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இருக்கத் தேவைப்படாத மூன்று பண்புகள் மூப்பர்களிடம் இருக்க வேண்டும். மூப்பர், "ஒரே மனைவியை உடைய புருஷராகவும்" "விசுவாசமுள்ள பிள்ளைகளை" உடையவராகவும், "புதிதாய் மனந்திரும்பினவராய்," இல்லாமல் (*1 தீமோ. 3:2, 6; தீத்து 1:6*) இருக்க வேண்டும். (திருமணம் முடித்த கிறிஸ்தவர் ஒரே கணவன்/மனைவியை உடையவராய் இருக்கும் அதே வேளையில், திருமணம் முடிக்காத ஆணும் அல்லது பெண்ணும் கூட கிறிஸ்தவராகலாம்).

# பிற்சேர்க்கை 3

# புதிய ஏற்பாட்டில் "சபை" மற்றும் "சபைகள்" என்ற வார்த்தைகள்

*புதிய ஏற்பாட்டு சபையின் இயல்பை நன்றாகப் புரிந்து கொள்வதற்கு, "சபை" மற்றும் "சபைகள்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சந்தர்ப்பங்களைப் பற்றிக் கவனமாகப் படித்து உணருங்கள். முதலாவதாக, "சபை" என்ற வார்த்தை ஒரு விசேஷ நோக்கத்திற்காகக் கூடிய உலகப் பிரகாரமான கூட்டத்தை அல்லது தற்செயலாகக் கூடிய கூட்டத்தைக் குறிப்பதாய் உள்ளது (அப். 19:32, 39, 41ஐக் காணவும்). இரண்டாவதாக, இவ்வார்த்தை, உலகளாவிய விதத்தில் தேவனுடைய மக்கள் அனைவரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 16:18ஐக் காணவும்). மூன்றாவதாக, இவ்வார்த்தை, ஒரு குறிப்பிட்ட இனத்தின் பின்னணியிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களை குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 16:4). நான்காவதாக, இவ்வார்த்தை ஒரு பொதுவான பகுதியில் உள்ள சபைகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (கலா. 1:2 மற்றும், அப். 9:31ஐக் காணவும்). ஐந்தாவதாக, இவ்வார்த்தை, ஒன்று கூடி ஆராதிக்கும் ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவக் குழுவைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 கொரி. 1:2*

*மற்றும் கொலோ. 4:16ஐக் காணவும்). ஆறாவதாக, இவ்வார்த்தை, ஆராதிப்பதற்கும், கற்றுக் கொள்வதற்கும் கூடிவரும் கிறிஸ்தவர்களின் கூட்டத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 கொரி. 11:18ஐக் காணவும்).*

*பரிசுத்த ஆவியானவர், புதிய ஏற்பாட்டில் ''சபை'' மற்றும் ''சபைகள்'' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளது பற்றிக் கவனமாகப் படியுங்கள். அடைப்புக் குறிகளுக்குள் உள்ள எண்கள் இவ்வார்த்தை அல்லது இதன் விளக்கம் எத்தனை முறை காணப் படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.*

## "சபை" (77)

***மத். (3)*** *- 16:18; 18:17 (இருமுறை)*

***அப். (19)*** *- 2:47 (*KJV *மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில் "சபை" என்றுள்ளது; ஆனால் கையெழுத்துப் பிரதிகளில் 2:47ல் இவ்வார்த்தை காணப்படுவதற்கான ஆதாரங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன); 5:11; 7:38 ("சபை" என்று இவ் விடத்தில் உள்ள சொல்* "ekklesia" [church] *என்பதிலிருந்து வந்ததாகும்); 8:1; 8:3; 11:22; 11:26; 12:1; 12:5; 13:1; 14:27; 15:3; 15:4; 15:22; 18:22; 19:32 (கூட்டம் என்ற வார்த்தை ekklesia* (church) *என்ற வார்த்தையிலிருந்து வந்ததாய் உள்ளது); 19:39 ("சங்கம்" என்ற வார்த்தை ekklesia* ["church"] *என்ற வார்த்தையிலிருந்து வந்ததாய் உள்ளது); 19:40, 41 ("கூட்டம் என்ற வார்த்தை ekklesia* ["church"]*என்ற வார்த்தையிலிருந்து வந்ததாய் உள்ளது); 20:17; 20:28.*

***ரோமர் (3)*** *- 16:1; 16:5; 16:23.*

***1 கொரி. (16)*** *- 1:2; 4:17; 6:4; 10:33; 11:18; 11:22; 12:28; 14:4; 14:5; 14:12; 14:19; 14:23; 14:28; 14:35; 15:9; 16:19.*

***2 கொரி. (1)*** *- 1:1.*

***கலா. (1)*** *- 1:13.*

***எபே. (9)*** *- 1:23; 3:10; 3:21; 5:23; 5:24; 5:25; 5:27; 5:29; 5:32.*

***பிலி. (2)*** *- 3:6; 4:15.*

***கொலோ. (4)*** *- 1:18; 1:24; 4:15; 4:16.*

***1 தெச. (1)*** *- 1:1.*

***2 தெச. (1)*** *- 1:1.*

***1 தீமோ. (3)*** *- 3:5; 3:15; 5:16.*
***பிலோ. (1)*** *- 2.*
***எபி. (2)*** *- 2:12; 12:23.*
***யாக். (1)*** *- 5:14.*
***3 யோவா. (3)*** *- 6; 9; 10.*
***வெளி. (7)*** *- 2:1; 2:8; 2:12; 2:18; 3:1; 3:7; 3:14.*

## "சபைகள்" (37)

***அப். (4)*** *- 9:31; 14:23; 15:41; 16:5.*
***ரோமர் (2)*** *- 16:4; 16:16.*
***1 கொரி. (6)*** *- 7:17; 11:16; 14:33; 14:34; 16:1; 16:19.*
***2 கொரி. (8)*** *- 8:1; 8:18; 8:19; 8:23; 8:24; 11:8; 11:28; 12:13.*
***கலா. (2)*** *- 1:2; 1:22.*
***1 தெச. (1)*** *- 2:14.*
***2 தெச. (1)*** *- 1:4.*
***வெளி. (13)*** *- 1:4; 1:11; 1:20 (இருமுறை); 2:7, 11, 17, 29; 3:6, 13, 22; 2:23; 22:16.*

# பிற்சேர்க்கை 4

# புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" மற்றும் "இராஜ்யங்கள்" என்ற வார்த்தைகள்

*புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தையின் அடிப்படைப் பொருள், "ஆட்சி செலுத்துதல், அதிகாரம் அல்லது ஆட்சி உரிமை" என்பதாகும். ஆகவே, தேவனுடைய இராஜ்யம் என்பது தேவன் ஆட்சி செலுத்துதல் அல்லது தேவனுடைய ஆட்சி உரிமை எனப் பொருள்படும்.*

*புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தை ஆறு வித்தியாசமான சந்தர்ப்பங்களில் காணப்படுகிறது. முதலாவதாக இவ்வார்த்தை, பூமிக்குரிய அரசியல் ஆட்சியைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 4:8ஐக் காணவும்). இரண்டாவதாக, இவ்வார்த்தை, இஸ்ரவேல் இராஜ்யத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 8:12ஐக் காணவும்). மூன்றாவதாக, இவ்வார்த்தை தேவனுடைய அதிகாரம் அல்லது ஆட்சியைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 12:28ஐக் காணவும்). நான்காவதாக, இவ்வார்த்தை, இந்நாட்களில் பூமியின் மீது தேவனுடைய விசேஷித்த ஆட்சியாகிய*

*சபையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 11:11; 16:19; யோவா. 3:5; கொலோ. 1:13 ஆகியவற்றைக் காணவும்). ஐந்தாவதாக. இவ்வார்த்தை, தேவனுடைய நித்திய இராஜ்யமாகிய பரலோகத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (லூக். 13:28ஐக் காணவும்). ஆறாவதாக, இவ்வார்த்தை, சாத்தானுடைய ஆளுகை வரம்பைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 12:26ஐக் காணவும்).*

*மத்தேயு, ''பரலோக இராஜ்யம்'' என்ற சொற்றொடரைப் பெருமளவு பயன்படுத்தினார். மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் ''தேவனுடைய இராஜ்யம்'' என்ற சொற்றொடரை தவறாமல் பயன்படுத்தினர். இவ்விரு சொற்றொடர்களும் ஒரே விதமான பொருளையே கொண்டுள்ளன என்பது தெளிவாய்த் தெரிகிறது.*

*பரிசுத்த ஆவியானவர், புதிய ஏற்பாட்டில் "இராஜ்யம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளது பற்றிக் கவனமாகப் படியுங்கள். அடைப்புக் குறிகளுக்குள் உள்ள எண்கள், இவ்வார்த்தை அல்லது இதன் விளக்கம் எத்தனை முறை காணப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.*

## "ஒரு இராஜ்யம்" (2)

***லூக்கா (1)** - 22:29, 30.*
***எபிரெயர் (1)** - 12:28.*

## "இராஜ்யம்" (11)

***மத்தேயு (4)** - 6:13 (இவ்வசனத்தின் கடைசி வாக்கியமானது, அதிக நம்பகமான கையெழுத்துப் பிரதிகளில் காணப்படவில்லை); மத்தேயு 8:12; 13:19; 13:38; 25:34.*
***மாற்கு (1)** - 11:10.*
***லூக்கா (1)** - 12:32.*
***அப். (2)** - 1:6; 20:25.*
***1 கொரி. (1)** - 15:24.*
***யாக். (1)** - 2:5.*
***வெளி. (1)** - 1:9.*

## "பரலோக இராஜ்யம்" (31)

*மத்தேயு (31) - 3:2; 4:17; 5:3; 5:10; 5:19 (இருமுறை); 5:20; 7:21; 8:11; 11:11; 11:12; 13:11; 13:24; 13:31; 13:33; 13:44; 13:45; 13:47; 13:52; 16:19; 18:1; 18:3; 18:4; 18:23; 19:12; 19:14; 19:23; 20:1; 22:2; 23:13; 25:1.*

## "இராஜ்யத்தின் சுவிசேஷம்" (3)

*மத்தேயு (3) - 4:23; 9:35; 24:14.*

## "தேவனுடைய இராஜ்யம்" (70)

*மத்தேயு (5) - 6:33; 12:28; 19:24; 21:31; 21:43.*

*மாற்கு (14) - 1:15; 4:11; 4:26; 4:30; 9:1; 9:47; 10:14; 10:15; 10:23; 10:24; 10:25; 12:34; 14:25; 15:43.*

*லூக்கா (33) - 4:43; 6:20; 7:28; 8:1; 8:10; 9:2; 9:11; 9:27; 9:60; 9:62; 10:9; 10:11; 11:20; 12:31; 13:18; 13:20; 13:28; 13:29; 14:15; 16:16; 17:20 (இருமுறை); 17:21; 18:16; 18:17; 18:24; 18:25; 18:29, 30; 19:11; 21:31; 22:16; 22:18; 23:50, 51.*

*யோவான் (2) - 3:3; 3:5.*

*அப். (6) - 1:3; 8:12; 14:22; 19:8; 28:23; 28:31.*

*ரோமர் (1) - 14:17.*

*1 கொரி. (4) - 4:20; 6:9; 6:10; 15:50.*

*கலா. (1) - 5:21.*

*கொலோ. (1) - 4:11.*

*1 தெச. (1) - 2:11.*

*2 தெச. (1) - 1:5.*

*வெளி. (1) - 12:10.*

## கிறிஸ்துவின் இராஜ்யம் (15)

*மத்தேயு (3) - 13:41; 16:28; 20:21.*

*லூக்கா (3) - 1:33; 22:30; 23:42.*

*யோவான் (3) - 18:36 (மும்முறை).*

*கொலோ. (1) - 1:13.*
*2 தீமோ. (2) - 4:1; 4:18.*
*எபிரெயர் (1) - 1:8.*
*2 பேது. (1) - 1:11.*
*வெளி. (1) - 11:15.*

## பிதாவின் இராஜ்யம் (4)

*மத்தேயு (3) - 6:10;  13:43; 26:29.*
*லூக்கா (1) - 11:2.*

## தேவன் மற்றும் கிறிஸ்துவின் இராஜ்யம் (1)

*எபேசியர் (1) - 5:5.*

## பூமிக்குரிய "இராஜ்யம்" அல்லது "இராஜ்யங்கள்" (20)

*மத்தேயு (4) - 4:8; 12:25; 24:7 (இருமுறை).*
*மாற்கு (5) - 3:24 (இருமுறை); 6:23; 13:8 (இருமுறை).*
*லூக்கா (6) - 4:5; 11:17; 19:12; 19:15; 21:10 (இருமுறை).*
*எபிரெயர் (1) - 11:33.*
*வெளி. (4) - 11:15; 17:12; 17:17; 17:18 (கிரேக்க வசனத்தில் இது "பூமியின் இராஜாக்கள்மேல் இராஜ்யபாரம்பண்ணுகிற" என்றுள்ளது).*

## சாத்தானின் இராஜ்யம் (3)

*மத்தேயு (1) - 12:26.*
*லூக்கா (1) - 11:18.*
*வெளி. (1) -16:10.*